

பவன ராணி

சாண்டில்யன்

2

பவன ராணி

சாண்டில்யன்

வானதி பதிப்பகம்

யவன ராணி

இரண்டாம் பாகம்

62. இளஞ்செழியன் மதிப்பு!

ஆறு மாதங்கள்! மனித சரித்திரத்தில் அந்தக் காலப் பகுதி கண்ணுக்குச் சிறிதும் புலப்படாத மிகச் சிறு புள்ளி.

ஆனால் தனி மனிதன் வாழ்வில் அது பெரும் பகுதி. அதுவும் வாழ்வின் சோதனைகளில் ஈடுபட்டுச் சுழலும் மனித இதயங்களுக்கு அது மாபெரும் யுகம்! அத்தகைய ஒரு யுகத்தையே தாண்டிக் கொண்டிருந்தாள் பூவழகி அந்த ஆறு மாதங்களில். எல்லைப்புற மாளிகையில் இளஞ்செழியனை நினைத்து அவளது கண்களிலிருந்து உருண்டோடி சாளரத்தை நனைத்த அந்த ஆறு கண்ணீர்த் துளிகளும் புறம்பே தெரிந்த சோகத் துளிகள்! அவற்றை மறைக்க அவள் எத்தனையோ முயன்றும் முடியாமற் போகவே அல்லியும் இன்பவல்லியும் அவற்றைக் காணவே செய்தனர். ஆனால் அடுத்த ஆறு மாதங்களில் அவள் இதயம் சிந்திய ரத்தத் துளிகளை யார் கண்டார்? மனிதர் யாரும் காணவில்லையென்பது நிச்சயம். ஆனால் ஆண்டவன் கண்டுதானிருக்க வேண்டும். இல்லாவிடில் அந்தக் கற்புக்கரசியின் புறக் கண்ணீரும் அகக் கண்ணீரும் எத்தனை கவசங்களாக மாறித் தமிழகத்திலிருந்து திடீரென மறைந்துவிட்ட இளஞ்செழியனைக் காத்து நின்றன!

அந்த ஆறு மாதங்களில் நிகழ்ந்த பல அற்புதங்களுக்கு ஹிப்பலாஸ் இளஞ்செழியனின் இணையற்ற புத்தி கூர்மையையும் வீரத்தையுமே காரணமாக நினைத்தான். அவன் நினைத்ததிலும் தவறவில்லை. புறக்கண்ணுக்கும் மனித சிந்தைக்கும் எட்டியதைத்தான் அவன் நினைத்தான். ஆனால்

மனித சிந்தைக்கும் அப்பாற்பட்ட ஒரு மாபெரும் சக்தி, கற்புக் கரசியின் கண்ணீரால் வகுக்கப்பட்ட இணையற்ற பெரும் கவசம் இளஞ்செழியனைக் காத்து நின்றதை அவன் எப்படி அறிவான்! அறிந்தாலும் அவன் எப்படி அதை ஒப்புக் கொள்ளமுடியும்? தன் கண்ணெதிரே இளஞ்செழியன் செய்த வீரச் செயல்களை மற்றொருவரின் செயல் என்று எப்படி ஊகிக்க முடியும்? இதில் மனித சக்தியோ, யுக்தியோ சம்பந்தப் படவில்லையென்று சொல்ல முடியாது. ஆனால் அது மட்டும் தான் காரியங்களைச் சாதிக்கிறது என்று நினைப்பதில்தான் பிசகு இருக்கிறது. அந்தப் பிசகை மட்டும் இளஞ்செழியன் செய்யவில்லை. எத்தனையோ போராடியும் பலனில்லாமல் கொள்ளைத் தலைவனிடம் சிக்கிக் கொண்ட இளஞ்செழியன் ஆண்டவனின் திருவிளையாடலைத்தான் எண்ண முற்பட்டான்.

இளஞ்செழியன் விதியென்று ஒன்று உண்டு என்பதை நம்பியவனல்ல. ஆனால் ஆண்டவன் ஒருவன் உண்டு என்பதை மட்டும் திடமாக நம்பினான். விதியென்ற பெயரால் மனிதர்கள் செய்யவேண்டிய கடமையைச் செய்யாது சோர்விழந்து கிடப்பதைத்தான் வெறுத்தானே தவிர, எல்லாம் மனித சக்தியால்தான் நடக்கிறது என்ற நாத்திக வழியில் வந்தவனல்ல. ஆத்திகத்தில் மனிதன் செயலுக்கு முக்கிய இடம் இருக்கிறது. முயற்சி அவசியம், அதைப் புறக்கணிப்பது கடமை தவறுவதாகும் என்ற கொள்கைகளில் வளர்ந்தவன். ஆகை யால் ஆண்டவன் நினைப்புடன் சுய முயற்சியிலும் என்றும் நம்பிக்கையுள்ளவன். அந்த நம்பிக்கையையோ, ஆண்டவ னிடம் உள்ள பற்றுதலையோ சிறிதும் விடாமலே கொள்ளைக் கப்பலில் பயணம் செய்த இளஞ்செழியன் ஆழ்ந்த யோசனையிலிருந்தான்.

கொள்ளைத் தலைவன் கப்பல் மிகப் பெரியதாகவும் ஒரு பக்கத்துக்குச் சுமார் முப்பது துடுப்புக்களை உடையதாக வும் இருந்ததால், கொள்ளைக்காரர்களுக்கு மட்டுமன்றி அடிமைக் கப்பலிலிருந்து பிடிக்கப்பட்டவர்களுக்கும் இடம்

மிகத் தாராளமாயிருந்தபடியால் யாரும் நெருக்கியடிக்காமல் மிகத் தாராளமாக உட்கார முடிந்ததையும், உட்கார்ந்தவர் களை அந்தந்த இடத்தில் பிணைத்துப் போடுவதற்காகப் பல இரும்பு வளையங்களும் சங்கிலிகளும் உள்ள தளைகள் ஏற்கெனவே கப்பலில் அமைக்கப்பட்டிருந்ததையும் கவனித்த இளஞ்செழியன், அந்தக் கப்பல் கிரேக்கர்களுடையதாயிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். அது கிரேக்கர்கள் கப்பலானால் கொள்ளைக்காரர்கள் கிரேக்கர்களிடமிருந்து அதைக் கைப்பற்றியிருக்கவேண்டுமென்றும், அப்படியானால் அது யவனர் இருக்குமிடம் போக முடியாதென்றும் முடிவுக்கு வந்தான். 'யவனர்கள் இருக்குமிடங்களுக்குப் போகவில்லை யென்றால் மரக்கலம் எதற்காக வடமேற்குத் திசையில் ஓடுகிறது? கொள்ளைக்காரனைப் பார்த்தால் அராபியனாகத் தெரிகிறது. ஒருவேளை இன்னும் மூன்று நாள் பயணத்துக்குப் பிறகு திசையைத் திருப்பிக் கொள்வானா?' என்றும் தன்னைத் தானே கேட்டுக்கொண்டான். தவிர, கொள்ளைக்காரர்கள் தலைவன் தன்னைப் பிடித்ததும், தன் பெயரைக் கேட்டதும், பிறகு தன்னால் இருபதினாயிரம் பொற்காசுகள் கிடைக்குமென்று மற்றவர்கள் முன்னிலையில் கூறியதையும், சிறை பிடித்த பின்பும் தனக்கு மட்டும் ஓரளவு சுதந்திரமளித்திருந்ததையும் எண்ணிப் பார்த்து, அவற்றுக் கெல்லாம் ஏதும் காரணம் தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்தான் சோழர் படையின் உபதலைவன்.

இப்படிப் பலவிதமாக யோசித்து, சுதந்திரம் ஓரளவு இருந்தபோதிலும் அடிமைகளோடு அடிமையாய் உட்கார்ந்தி ருந்த இளஞ்செழியனை நோக்கி மரக்கலத்தின் கீழ்ப்பகுதியி லிருந்து வந்த ஹிப்பலாஸ், "அப்பாடா!" என்று ஆயாசத் துடன் அவன் பக்கத்தில் உட்கார்ந்தான். ஹிப்பலாஸை ஏறிட்டு நோக்கிய இளஞ்செழியன், தங்களிருவரும் சிறைப் பட்ட அந்த முதல் மூன்று நாட்களில் ஹிப்பலாஸுக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கியமான நிலைமையை நினைத்துப்

பெருமூச்செறிந்தான். இளஞ்செழியன் ஒருவனைத் தவிர அடிமைக் கப்பலிலிருந்து பிடிபட்ட மற்ற எல்லோருக்கும் பலவித அலுவல்களைக் கொடுத்திருந்த கொள்ளைத் தலைவன் கூடிய வரையில் கடுமையாக வேலை வாங்கினான். ஹிப்பலாஸின் உயரத்தையும் உடல் உறுதியையும் கவனித்த கொள்ளைத் தலைவன், அவனைத் துடுப்புத் தள்ளும் பணிக்கு நியமித்திருந்தானாகையால் ஹிப்பலாஸின் உரமான கைகள் அந்த மூன்று நாட்களில் பெரும் சோர்வை அடைந்திருந்தன. மிகவும் சோர்வு ஏற்பட்டு மனிதன் மயக்கமுறும் நிலைக்கு வந்த பிறகு இருமுறை அவன் முகத்தில் தண்ணீர் அடித்து அதிலும் பயனில்லாத சமயத்திலேயே ஓய்வு என்பது அளிக்கப்பட்டதால், குற்றுயிரும் குலையுயிருமாகவே தளத்துக்கு வந்த ஹிப்பலாஸ் ஆயாசப் பெருமூச்சு விட்டதன்றி இளஞ்செழியனுக்கெதிரில் படுக்கவும் செய்தான். அப்படி அவன் படுத்தபோதும் இளஞ்செழியன் அவனைக் கவனிக்காமல் ஏதோ யோசனையில் ஆழ்ந்து கிடப்பதைக் கண்ட ஹிப்பலாஸ், "என்ன யோசிக்கிறீர்கள்?" என்று ஆயாசப் பெருமூச்சுக்கிடையில் சற்று எரிச்சலுடன் வினவவும் செய்தான்.

"இந்த மரக்கலத்தையும் இது போகும் திசையையும் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன் ஹிப்பலாஸ்" என்றான் இளஞ்செழியன்.

"இதில் நினைப்பதற்கு என்ன இருக்கிறது படைத் தலைவரே!" என்று மீண்டும் கேட்டான் ஹிப்பலாஸ்.

ஹிப்பலாஸில் வார்த்தைகளைக் கேட்ட இளஞ்செழியன் இதழ்களில் இளநகை படர்ந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அது பெருநகையாகவும் ஒலித்தது. அத்தனை அபாய நிலையிலும் சோழர் படை உபதலைவன் நகைப்பதைக் கண்டு ஓரளவு வெகுண்ட ஹிப்பலாஸ், "நகைப்பதற்கு என்ன இருக்கிறது படைத் தலைவரே?" என்று வினவினான்.

"நீ அழைக்கும் முறையில் இருக்கிறது ஹிப்பலாஸ்."

"நான் அழைக்கும் முறையில் தவறென்ன இருக்கிறது?"

"என்னைப் படைத்தலைவரே என்று அழைக்கிறாயே?"

"ஆமாம். அழைக்கிறேன்."

"படை எங்கே இருக்கிறது?" இதைச் சுட்டிக் காட்டி மீண்டும் சிரித்தான் இளஞ்செழியன். ஹிப்பலாஸ் நகைக்கவில்லை. ஏன் புன்சிரிப்புகூடக் கொள்ளவில்லை. மெள்ள எழுந்து உட்கார்ந்து இளஞ்செழியனை நோக்கிவிட்டுச் சொன்னான், 'ஹிப்பலாஸ் என்று ஒருவன் இன்னுமிருக்கிறான் பிரபு!" என்று.

"தனி மரம் தோப்பாகுமா ஹிப்பலாஸ்? தனி மனிதன் படையாக முடியுமா?" என்று கேட்டான் இளஞ்செழியன். ஹிப்பலாஸின் பேச்சின் பொருளைக் கிரகித்துக் கொண்டு.

ஹிப்பலாஸ் சுற்றிலும் பரந்து கிடந்த கடற்பரப்பைப் பார்த்தான். பிறகு இளஞ்செழியனை நோக்கி, "பிரபு! இதோ இந்த அகண்ட நீர்ப்பரப்பின் சாட்சியாகச் சொல்கிறேன். ஹிப்பலாஸ் ஒருவன் இருக்கும் வரையில் நீங்கள் படைத் தலைவர்தான். தவிர நான் தமிழகம் திரும்பினாலும் திரும்பாவிட்டாலும் நீங்கள் தமிழகம் திரும்புவது நிச்சயம். மீண்டும் நமது படைகளுக்குத் தலைவராவதும் நிச்சயம்" என்றான்.

அதுவரை ஏதேதோ யோசனையில் ஆழ்ந்து கிடந்ததால் சலித்துக் கிடந்த இளஞ்செழியன் புத்தி, 'நீங்கள் தமிழகம் திரும்புவது நிச்சயம்' என்று ஹிப்பலாஸ் சொன்ன மாத்திரத்தில் யோசனைத் தூக்கத்திலிருந்து முழு விழிப்பு விழித்தது. அந்த விழிப்பினால் ஏற்பட்ட மகிழ்ச்சி, குரலிலும் தொனிக்கக் கேட்டான் இளஞ்செழியன், "ஹிப்பலாஸ்! இதென்ன ஊகமா, அல்லது விதியில் கிரேக்கர்களுக்கு உள்ள நம்பிக்கையா?" என்று.

"ஊகமுமில்லை, விதியிலுள்ள நம்பிக்கையுமில்லை. நான் அறிந்த உண்மை" என்றான் ஹிப்பலாஸ்.

"எப்படியறிந்தாய் அந்த உண்மையை ஹிப்பலாஸ்? யாரிடமிருந்து அறிந்தாய்? இந்த மரக்கலத்தில் உனக்குச்

செய்தி சொல்பவர் யார்?" என்று கேட்டு, கண்களை நாலா பக்கத்திலும் ஓட்டினான் இளஞ்செழியன்.

கப்பலின் பக்கப் பலகைகளிலும் இரு முகப்புகளிலும் ஆயுதபாணிகளான கொள்ளைக்காரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் அடிமைகள். அப்படி இப்படி நகர்ந்தாலோ, கூட்டம் கூடிப் பேசினாலோ அடக்குவதற்காகப் பெரும் தோற்கசைகளைக் கையில் பிடித்துக் கொண்டு அப்படியும் இப்படியும் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கசைகளுக்கு அஞ்சிய அடிமைக் கும்பல் ஆங்காங்கு தனித்துத் தனித்துச் செயலற்றுக் கிடந்தது. இவற்றையெல்லாம் துருவிப்பார்த்துப் புன்னகை கொண்ட இளஞ்செழியனைப் பார்த்த ஹிப்பலாஸ் மிகவும் மெதுவான குரலில், "இப்பொழுது எதையும் கேட்காதீர்கள். இரவில் சொல்கிறேன்" என்று கூறிவிட்டுத் தளத்தின் பலகையில் நன்றாக மல்லாந்து படுத்துவிட்டான். இளஞ்செழியன் தான் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திருந்து மெள்ள நடந்து கப்பல் ஓடிக் கொண்டிருந்த திசையிலிருந்து முகப்புக்குச் சென்றான்.

அப்பொழுது மாலை வேளை மறைந்து இரவு மெள்ள மெள்ள உட்புகுந்து கொண்டிருந்தது. கொள்ளைக்காரர்கள் கப்பலின் முக்கிய பகுதிகளில் பந்தங்களை ஏற்றினார்கள். கப்பல் தளத்தின் ஒரு கோடியிலிருந்த கொள்ளைத் தலைவனின் அறை முகப்பிலும் ஒரு பந்தத்தைக் கொளுத்தி வைத்தார்கள். இரவின் அந்தப் பயங்கரச் சூழ்நிலையிலும் இயற்கை மிக அழகாகத் திகழ்ந்ததைக் கவனித்தான் இளஞ்செழியன். தென்மேற்குப் பருவக் காற்றில் மிக வேகமாக எரித்திரியக் கடலின் பெரும் நீர்ப்பரப்பைக் கிழித்துச் சென்று கொண்டிருந்த அந்தக் கப்பலின் அமைதியிலும், அந்த அமைதியைக் கிழிக்க மெள்ள மெள்ள மரக்கலத்தின் பக்கப் பகுதிகளைத் தட்டிக்கொண்டிருந்த அலைகளின் மென்மையான சப்தத்திலும், வானத்தில் விரிந்து கிடந்த பெரிய கறுப்புக்

கம்பளியில் இறைந்து கிடந்த வைரக் குவியல்களிலும், இயற்கையின் இந்திர ஜாலத்தைக் கவனித்த இளஞ்செழியன் ஆண்டவனின் சிருஷ்டி விசித்திரத்தை எண்ணி எண்ணி வியந்தான். இப்படி இயற்கையழகைப் பருகிக்கொண்டு நின்ற இளஞ்செழியன் மனம் நள்ளிரவை நோக்கியே ஓடிக்கொண்டிருந்ததால் சிறிது அமைதியையும் இழந்து நின்றது. 'இரவில் ஹிப்பலாஸ் எதைச் சொல்லப் போகிறான்? என்ன அப்பேர்ப்பட்ட உண்மையைத் தெரிந்து கொண்டுவிட்டான்?' என்று திரும்பத் திரும்ப எண்ணியும் விடையேதும் கிடைக்காமற் போகவே கப்பலின் ஓர் ஓரமாகச் சென்று பலகையில் மல்லாந்து சாய்ந்துகொண்டு விண்மீன்களின் நிலையை ஆராய்ந்தான். இப்படி நீண்ட நேரம் ஆராய்ந்துகொண்டே காலத்தைக் கடத்தியவனுக்குக் கொள்ளைக்காரனொருவன் அந்த இடத்திலேயே மரத்தட்டில் சிறிது சோற்றையும் மானிறைச்சியும் கொண்டு வந்து கொடுக்கவே அதை உண்டு, தட்டை நீர் விட்டுக் கழுவி அவனிடம் கொடுத்த இளஞ்செழியன் மற்றவர்களைக் கொள்ளைக்காரர்கள் நடத்தும் முறையையும் கவனித்தான். அடிமைக் கப்பலிலிருந்து பிடிபட்ட மற்றவர்கள் கசையடி சப்தத்தால் எழுப்பப்படவே அவர்களுக்கெதிரே மரத் தட்டுக்கள் வெகு அலட்சியமாக வீசப்பட்டன. அவற்றில் சோறும், சரியாக வேகாத கறியும் எறியப்பட்டன. வயிற்றுக் கொடுமையால் அந்த உணவையும் அடிமைகள் ஆவலுடன் உண்பதைக் கவனித்த இளஞ்செழியன், 'எனக்குமட்டும் ஏன் இப்படித் தனி மரியாதை?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

இப்படிப் பல கேள்விகளாலும் பதில்களாலும் காலத்தை ஓட்டிய இளஞ்செழியன் நடுநிசி மெள்ள நெருங்கிவிட்டதை உணர்ந்தான். 'அதோ புஷ்பக் கொத்துப் போலிருக்கும் புஷ்ப நட்சத்திரத்தின் கூட்டம் இந்தப் பகுதிக்கு வந்துவிட்டது. ஹிப்பலாஸ் வரும் நேரமாகிவிட்டது' என்று நினைத்து உள்ளூர மகிழ்ச்சியடைந்த இளஞ்செழியன்

கப்பலை சுற்று முற்றும் நோக்கி அடிமைகள் எல்லோரும் உறங்கி விட்டதையும், கொள்ளைக்காரர்களில் சிலர்கூடத் தங்கள் காவலிடங்களிலேயே சாய்ந்து சொப்பன உலகத்துக்குச் சென்றுவிட்டதையும் கண்டு, கப்பலின் பக்கப் பலகையில் சாயந்து கொண்டான்.

கப்பலில் அரவம் அடியோடு அடங்கிவிட்டதால் எரித்திரியன் கடலில் சூழ்நிலை மிகப் பயங்கரமாகி விட்டது. ஏதோ 'ஹோ'வென்று பெரும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. சுழற்றியடித்த தென்மேற்குப் பருவக் காற்றுக் கூட இடையிடையே ஊதி ஊதிச் சப்தம் செய்து ஊழிக் காற்று ஏற்பட்டால் எப்படியிருக்கும் என்பதற்குச் சான்று காட்டியது. அந்த ஊதல் காற்றுக்கிடையே மிதந்து வருபவனைப்போல் ஓசைப்படாமல் வந்து இளஞ்செழியன் பக்கத்தில் நின்று கொண்ட ஹிப்பலாஸ், "பிரபு! திரும்பிக் கடலைக் குனிந்து பாருங்கள்" என்றான்.

அந்த எச்சரிக்கையின் காரணத்தைப் புரிந்துகொண்ட இளஞ்செழியன் ஹிப்பலாஸ் கூறியதுபோல் கடலின் பக்கம் திரும்பி, மரக்கலத்தின் பக்கப் பலகையில் மார்பை அழுத்திக் கொண்டு கடலைக் குனிந்து நோக்கினான். ஹிப்பலாஸும் படைத் தலைவனை நெருங்கி நின்று கடல் நீரை நோக்கிக் குனிந்து, "பிரபு! எனக்கு நள்ளிரவு வரை துடுப்புத் தள்ளும் பணி இருப்பது தங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று படைத் தலைவனுக்கு மட்டும் கேட்கும்படியாக மெல்ல வினவினான்.

"தெரியும் ஹிப்பலாஸ்" என்றான் இளஞ்செழியன், தெரிந்த விஷயத்தை ஹிப்பலாஸ் எதற்காக மீண்டும் வலியுறுத்துகிறான் என்பதை அறியாமல்.

"நேற்றும் பணியை முடித்துக் கொண்டு திரும்பினேன்..."

"உம்! சொல் ஹிப்பலாஸ்."

"வரும்பொழுது மரக்கலத் தலைவன் அறையில் இருவர் பேசும் சப்தம் கேட்டது."

"ஒட்டுக் கேட்டாயா?"

"ஆமாம்."

"என்ன பேசிக் கொண்டிருந்தார்கள்?"

"உங்களால் இருபதினாயிரம் பொற்காசுகள் தமிழ் நாட்டில்தான் கிடைக்கும் என்று கொள்ளைத் தலைவன் கூறினான். ஆனால் மற்றவன் ஒப்பவில்லை. யவனர்கள் அதைவிட அதிகப் பணம் கொடுப்பார்கள் என்றான் மற்றவன்."

"அந்த மற்றவன் யார்?"

"இந்த மரக்கலத்தின் உபதலைவன்."

"அதற்குத் தலைவன் என்ன சொன்னான்?"

"இவனை யவனர்கள் கால் காசுக்கு மதிக்க மாட்டார்கள். மிஞ்சிப்போய் நாமும் இவன் மதிப்பை உயர்த்திச் சொன்னால் ஐம்பது பொற்காசுகள்தான் கிடைக்கும் என்றான் கொள்ளைத் தலைவன்."

"அவ்வளவுதானா என் மதிப்பு வெளி நாட்டில்?"

"அப்படித்தான் கொள்ளைத் தலைவன் அபிப்பிராயப் படுகிறான்."

அத்தனை துன்பத்திலும் இளஞ்செழியன் மெல்ல நகைத்தான். அந்த நகைப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், இளஞ்செழியன் ஆத்திரத்தை உச்ச நிலைக்குக் கொண்டு போகவும், ஏன் கப்பல் சம்பந்தமாக அடுத்த சில தினங்களில் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளுக்கு அடிகோலுவதற்குமான ஒரு முக்கிய உண்மையை அடுத்த சொற்களில் எடுத்து வீசினான் ஹிப்பலாஸ். அந்தச் சொற்களைக் கேட்டதும் ஆத்திரத்தாலும், பிரமிப்பாலும் நிலைகுலைந்து போன இளஞ்செழியன் ஈட்டியிலும் கூரிய தன் விழிகளை ஹிப்பலாஸ்மீது திருப்பினான். "இது உண்மையா? அப்படியா சொன்னான் கொள்ளைத் தலைவன்? அப்படியானால் தமிழகத்தின் ஆபத்து அதிகரிக்கிறது!" என்று சுடு சொற்களை உதிர்த்த இளஞ்செழியன், "ஆகவே..." என்று ஏதோ சொல்ல முற்பட்டு வார்த்தைகளைப் பட்டென்று நிறுத்தி, ஹிப்பலாஸை மீண்டும் ஒருமுறை பார்த்தான். இளஞ்செழியன் கண்கள்

சிறிது மங்கியதையும் முகமும் மந்தப்பட்டுவிட்டதையும் கண்ட ஹிப்பலாஸ் படைத் தலைவன் சிந்தையிலே ஏதோ அபாயமான எண்ணங்கள் உருவாகின்றன என்ற முடிவுக்கு வந்தான். அந்த எண்ணங்கள் அப்பப்பா! எவ்வகை உரு வெடுத்தன! விளைவுகள்தான் எத்தனை விசித்திரம்! அடுத்த சில தினங்களில் ஹிப்பலாஸே ஆச்சரியப்பட்டுப் போனான். நிகழ்ச்சிகள் அத்தனை துரிதத்தில் நிறைவேறின.

63. கொள்ளைத் தலைவன் அறையில்...?

செங்கடல் கலப்பதன் காரணமாக எரித்திரியக் (சிவப்புக்) கடலென்று யவனர்களாலும், முத்துக்களும் மற்றும் விலைமதிக்க முடியாத ஆபரணக் கற்கள் கிடைத்து வந்ததன் விளைவாக ரத்னாகரமென்று பாரத நாட்டவராலும் அழைக்கப்பட்டு வந்த மேற்கு சமுத்திரத்தின் நடுவே ஓடிக் கொண்டிருந்த அந்தக் கொள்ளைக் கப்பலில், விவரிக்க முடியாத விபரீதக் காற்றுச் சப்தங்கள் மட்டுமே நிறைந்ததால் மிகப் பயங்கரமாகத் தெரிந்த அந்த நடு நிசியில், மரக் கலத்தின் பக்கப் பலகையில் சாயந்துகொண்டே ஹிப்பலாஸ் சொன்ன ரகசியத்தைக் கேட்டதும், ஆச்சரியமும் ஆத்திரமும் ஒருங்கே அடைந்த இளஞ்செழியன் மனம் மீண்டும் தமிழகத்தை நோக்கிக் கப்பலுக்கு நேர் எதிர்த் திக்கில் ஓட ஆரம்பிக்கவே, படைத் தலைவனிடமிருந்து உள்ளக் குமுறலைக் குறிக்கும் பெருமூச்சொன்று வெளிவந்தது. உள்ளத்தே அத்தனை குமுறல் இருந்ததால்தான் என்றும் தடைப்படாத அவன் நாவும் தடைப்பட்டு, சொல்ல முயன்ற சொற்களைச் சொல்லத் திராணியில்லாது, 'ஆகவே' என்ற ஒற்றைச் சொல்லுடன் நிறுத்திவிட்டது. நாவு தடைப்பட்டாலும் புத்தி தடைப்படாததன் விளைவாக படைத் தலைவன் புத்தி, 'இந்த ஆபத்திலிருந்து தமிழகத்தைக் காப்பது எப்படி?' என்ற நினைப்பில் நினைக்க ஆரம்பித்ததன்றி அதற்கான

மார்க்கங்களை வகுக்கவும் தொடங்கியது. இப்படித் தன் மனம் சொந்த நாட்டின் பக்கம் இழுபடத் தொடங்கியதும், 'நாமோ கொள்ளைக்காரனிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். அது மட்டுமா? பிற நாடு நோக்கியும் ஓடுகிறோம். இந்த நிலையில் தமிழகத்தைக் காக்கத் திட்டம் வகுக்கிறோமே. இது விந்தைதான்' என்று சில வினாடிகள் தன்னைத்தானே, உள்ளூரக் கேலி செய்துகொண்ட சோழர் படை உபதலைவன், 'தமிழகத்தைக் காக்கவேண்டியது முக்கியம். அதற்கு நான் அங்கு செல்ல வேண்டியதும் முக்கியம். அதற்காகத் திட்டங்களை வகுப்பதுதான் நியாயம். அதில் கஷ்டங்கள் எத்தனையிருந்தாலும் சமாளிக்க வேண்டியதும் என் கடமை' என்று தனக்குத் தானே கட்டளையும் இட்டுக் கொண்டதால் ஹிப்பலாஸ் சொன்ன செய்தியைப் பற்றி மீண்டும் விவாதிக்க வும் தொடங்கி, "அப்படியானால் ஹிப்பலாஸ், இந்தக் கொள்ளைத் தலைவனுக்கு டைபீரியஸை நன்றாகத் தெரியு மென்றா சொல்லுகிறாய். இது விந்தையாயில்லையா?" என்று கேட்டான்.

"இதில் விந்தை ஏதுமில்லை பிரபு! யவனர் கடற்படைத் தலைவனை அறியாதவர்கள் யவன நாட்டில் யாருமே இல்லை" என்று மெள்ளப் பதில் சொன்னான் ஹிப்பலாஸ்.

"யவன நாட்டில் எல்லோரும் அறிந்திருப்பது இயற்கை ஹிப்பலாஸ். ஆனால் இந்த எரித்திரியக் கடல் பிராந்தியத்தில் எகிப்து நாட்டிலுள்ள எல்லோருக்கும் எப்படித் தெரியும்? கொள்ளைத் தலைவனிடமிருப்பவர்கள் ஒன்று எகிப்தியர் அல்லது அராபியர். இவர்கள் டைபீரியஸை எப்படி அறிந்திருக்க முடியும்?" என்று சந்தேகத்துடன் மீண்டும் ஒரு கேள்வியைத் தொடுத்தான் படைத்தலைவன்.

"பிரபு! எகிப்தின் சரித்திரம் தெரியாததால் நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள். எகிப்தில் மூன்று பேரரசுகள் எழுந்திருக்கின்றன. முதலில் அங்கு எகிப்தியப் பேரரசு இருந்தது. பிறகு அலெக்ஸாண்டரின் யுகம் துவங்கியது.

அலெக்ஸாண்டரைப் பற்றித்தான் நீங்களும் கேள்விப் பட்டிருப்பீர்களே...'' என்று பழைய வரலாற்றில் புகுந்த ஹிப்பலாஸ் தீர்க்காலோசனையில் ஆழ்ந்தான்.

ஹிப்பலாஸின் பேச்சு இளஞ்செழியனுக்கும் விசித்திரமாயிருந்தது. 'நாமிருக்கும் நிலைக்கும் எப்பொழுதோ மாண்டுபோன அலெக்ஸாண்டருக்கும் என்ன சம்பந்தம்?' என்று உள்ளூர யோசித்துக் கொண்டானானாலும் அதை வெளிக்குக் காட்டாமல், "ஆமாம் ஹிப்பலாஸ்! அலெக்ஸாண்டர் என்ற யவன மன்னனைப் பற்றி பாரத நாடு முழுவதும் அறியும். பாரத நாட்டுக்கே அவன் படையெடுத்து வந்து வடநாட்டு மன்னன் ஒருவனையும் வெற்றி கொண்டான். அது பழங்கதை அல்லவா?" என்றான்.

ஹிப்பலாஸ், "ஆமாம்; பழங்கதைதான் பிரபு! ஆனால் பழங்கதைகள் எப்படிப் புது வாழ்வைப் பாதிக்கின்றன பாருங்கள். அலெக்ஸாண்டரின் காலத்திலேயே வலுத்த கிரேக்கர்களின் ஆதிக்கம் அவர் காலத்துக்குப் பின்பு இன்னும் வலுவடைந்தது. எகிப்தில் எகிப்தியர் ஆதிக்கம் குலைந்தது. லாகஸ் என்பவன் மகனான தாலமே என்பவன் அலெக்ஸாண்டர் பெயரால் அலெக்ஸாண்ட்ரியா என்ற பட்டணத்தை அமைத்து யவன அரசு ஒன்றையும் எகிப்தில் நிறுவினான். எகிப்தில் எகிப்தியர் அடிமைகளாயினர். கிரேக்கர்கள் பெரும் பட்டணங்களை நிறுவினார்கள். கிரேக்க ரதங்கள் எகிப்து முழுவதுமே பறக்கத் தொடங்கின. கிரேக்கர்கள் பெரும்பான்மையாக எகிப்தில் வாழத் தொடங்கினர். கிரேக்க சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே எகிப்து ஆயிற்று. அதன் விளைவாகத்தான் எகிப்துக்கும் தமிழகத்துக்கும் வர்த்தகம் ஏற்பட்டது," என்று சற்று நிறுத்தினான்.

"எகிப்து கிரேக்க நாட்டின் பகுதியானதற்கும் தமிழகத்துடன் வர்த்தகம் துவங்கியதற்கும் என்ன சம்பந்தம் ஹிப்பலாஸ்?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

"சம்பந்தம் நிரம்ப இருக்கிறது படைத் தலைவரே! எரித்திரியக் கடல் பிராந்தியத்தை ஆராய்ந்து யவனர் வர்த்தகத்தைக் கிழக்கு நாடுகள்வரை விஸ்தரிக்க முதன் முதலில் முயன்றவன் தாலமே என்ற யவன அரசன்தான். அன்று அவன் ஆரம்பித்து வைத்த பணியைத்தான் பிற்கால தாலமே வம்ச அரசர்கள் தொடர்ந்தார்கள். கிறிஸ்து அவதாரம் செய்வதற்கு முன்னூறு வருஷங்களுக்கு முன்பு நடந்த கதை இது. கிறிஸ்து பிறப்பதற்கு நூறு வருஷங்கள் முன்பாக க்ஷீணித்துவிட்ட தாலமேயின் பேரரசு கடைசி நாட்களிலும் தமிழகத்துக்குக் கப்பல் வழியைத் தேடியது. தேடி ஒரு பாதையையும் வகுத்தது. பிறகு எகிப்தில் கிரேக்கப் பேரரசு மறைந்து ரோமப் பேரரசு தலையெடுத்தது. இப்படி எகிப்து, கிரேக்க, ரோமப் பேரரசுகள் மாறி மாறி எழுந்து கிழக்கு நாட்டு வர்த்தகத்தில் சிரத்தை காட்டியதாலும், கிரேக்கப் பேரரசின் பிரதான முயற்சியாலும் கிரேக்க மாலுமியான ஹிப்பலாஸ் என்ற யவனனின் துணிகரச் செயலாலுமே இன்று தமிழகத்துக்கும் எகிப்துக்கும் எரித்திரியக் கடலில் கப்பல் பாதை வகுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் கிரேக்கர்களைப் பற்றிய விவரங்களை எரித்திரியக் கடற்பகுதிகளில் திரியும் அனைவரும் அறிந்திருக்கிறார்கள். ஆகவே மாபெரும் யவன கடற்படைத் தலைவனான டைபீரியஸைப் பற்றி அந்தக் கொள்ளைத் தலைவன் அறிந்திருப்பதில் வியப்பில்லை. உங்கள் அழிவில் டைபீரியஸுக்கு அக்கறையிருக்கிறது என்பதை அறிந்ததால், இவன் மீண்டும் உங்களைத் தமிழகம் கொண்டு செல்ல எண்ணுவதிலும் ஆச்சரியமில்லை. டைபீரியஸ் பணத்தை அள்ளி வீசக் கூடியவனென்பதை அனைவரும் அறிவார்கள்" என்று விளக்கினான் ஹிப்பலாஸ்.

"என் அழிவை டைபீரியஸ் நாடுகிறானென்பதை அத்தனை திட்டமாக இவன் அறிவானா?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

"கொள்ளைக் கப்பல்கள் தமிழகத்தின் மேற்குக் கரையிலுள்ள விஜய துர்க்கத்தில் தங்குவது உங்களுக்குத் தெரியுமல்லவா?"

"தெரியும். விஜய துர்க்கத்தைத்தான் யவனர்கள் பைஸாண்டியம் என்று அழைக்கிறார்கள். அங்கு இப்பொழுது யவனர்கள் வசிக்கிறார்கள்."

"அந்த ஊர் வரையில் சேரமன்னன் பறையறிவித்திருக்கிறானாம், உங்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இருபதினாயிரம் பொற்காசுகள் தருவதாக."

"அப்படியா சொன்னான் இந்தக் கொள்ளைத் தலைவன்?"

"ஆமாம் பிரபு! நான்தான் ஒட்டுக் கேட்டேனே. நீங்கள் சேர நாட்டின் சமண விஹாரத்திலிருந்து தப்பியதுமே இருங்கோவேள் உங்களை உறையூரில் சிறையெடுக்க முயன்றான். அதுவும் முடியாமற் போகவே உங்களைப் பிடித்துக் கொடுப்போருக்கு இருபதினாயிரம் பொற்காசுகள் அளிப்பதாகப் பறையறிவிக்கச் செய்திருக்கிறான். இதற்கு டைபீரியஸும் உடந்தையாயிருக்கிறான்."

"அப்படியா?"

"ஆமாம். தங்களை டைபீரியஸ் சிறைபிடித்து அனுப்பிய யவனர் கப்பல் மேற்குக் கரைக்கு வர ஒரு வாரம் ஆகுமென்பது டைபீரியஸுக்குத் தெரியும். ஒருவேளை நீங்கள் அந்தக் கப்பலிலிருந்து தப்பினாலும் தன் கையிலிருந்து தப்பக் கூடாது என்பதற்காகவே டைபீரியஸும் சேர மன்னனுக்குச் செய்தியனுப்பியிருக்கிறான். இருங்கோவேளின் வேண்டுகோளும் அத்துடன் சேர்ந்து கொண்டது."

இதைக் கேட்ட இளஞ்செழியன் மெல்ல ஹிப்பலாஸுக்கு மட்டும் கேட்கும்படி நகைத்து, "ஹிப்பலாஸ்! ஒரு தனி மனிதனைப் பிடிக்க எத்தனை அரசர்கள்? எத்தனை கொள்ளைக்காரர்கள்? உண்மையில் கொள்ளைத் தலைவன் நினைப்பதுபோல் என் மதிப்புக் குறையவில்லை. உயர்ந்து தானிருக்கிறது" என்றான்.

படைத் தலைவனிடமிருந்து எழுந்த ஏளனச் சிரிப்பையும் வார்த்தைகளையும் கவனித்த ஹிப்பலாஸ் அத்தனை ஆபத்தான சூழ்நிலையிலும் ஹாஸ்ய

உணர்ச்சியைக் காட்டும் படைத்தலைவனுக்குத் தான் எவ்விதத்திலும் சளைக்கக்கூடாது என்று, "கொள்ளைக்காரனுக்கு உங்கள் மதிப்பு தெரியாதே தவிர அடிமை வர்த்தகனுக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டு வைத்தான்.

"அடிமை வர்த்தகனுக்கா?" ஆச்சரியத்துடன் வினவினான் படைத்தலைவன்.

"ஆம் படைத் தலைவரே! உங்கள் உடல் வாளிப்பையும் அழகையும் பார்த்தால் யவன நாட்டு அழகிகள் உங்களை நல்ல விலை கொடுத்து வாங்கிக் கொள்வார்கள் என்று அடிமை வர்த்தகன் சொல்லவில்லையா?" என்று கேட்டு வறண்ட குரலில் சிறிது சிரிப்பையும் உதிரவிட்டான் ஹிப்பலாஸ்.

தன்னைப் பற்றிப் பலர் பலவிதமாகப் போட்ட மதிப்பை எண்ணிய இளஞ்செழியனும் இளநகை பூத்தானானாலும் திரும்பப் பழைய கதைக்கே திரும்பி, "ஹிப்பலாஸ்! என் பெயர் தமிழகத்தின் மேற்குத் துறைமுகங்களில் நன்றாகப் பிரபல்யமாக்கப்பட்டிருக்கிறது. நானிருக்கும்வரை புகாரில் யவனர் அரசை நிறுவ முடியாது என்று நினைக்கும் டைபீரியஸ் என்னை யவனர் கப்பலில் ஏற்றினான். விஷம் வைத்துக் கொல்ல யவன மருத்துவனை ஏவினான். அதற்கும் தப்பினால் எப்படியும் என்னை ஒழித்துவிட வேண்டுமென்ற உறுதியுடன் சேரமானைக் கொண்டு மரக்கலம் தங்கும் துறைமுகங்களில் பறையும் அறிவித்திருக்கிறான். கொள்ளைத் தலைவன் பேச்சிலிருந்து, பறையறிவித்துள்ள விஷயம் மட்டுமல்ல! அதில் டைபீரியஸுக்குள்ள அக்கறையும் தெளிவாகிறது. இருங்கோவேளும் சேரமானும்கூட டைபீரியஸ் சொற்படி கேட்கிறார்கள் என்பதும் புலனாகிறது. புகாரில் யவனர் பிடி வலுப்பட்டிருக்கும். நான் சீக்கிரம் நாடு திரும்ப வேண்டும் ஹிப்பலாஸ்! என் நாடு வெளி நாட்டார் பிடியில் அகப்பட்டுத் தத்தளிக்கிறது. அந்தப் பிடி இறுகு முன்பு நான் திரும்பியே ஆகவேண்டும். இல்லையேல் என் இதயம் வெடித்துவிடும்" என்று உணர்ச்சி ததும்பும் குரலில் பேசிய

இளஞ்செழியன் நீண்ட நேரம் மௌனம் சாதித்தான். பிறகு எதையோ நினைத்துக் கொண்டு, "ஹிப்பலாஸ்" என்று அழைத்தான்.

"என்ன படைத் தலைவரே!"

"இந்தக் கப்பலுக்கு முப்பது துடுப்புகள் இருக்கின்றன. பார்வைக்கு கிரேக்கர் கப்பல்போல் இருக்கிறது."

"ஆம் பிரபு. இது கிரேக்கர் கப்பல்தான். இந்தக் கொள்ளைக்காரன் பிடித்திருக்கிறான்."

"இதை இவன் எப்படி எகிப்தில் யவனர் இருக்கு மிடத்தில் கொண்டு செல்வான்?"

இந்தக் கேள்விக்குச் சுருக்கமாகப் பதில் சொல்ல இயலாது போகவே சற்று விவரித்தே பதில் சொன்னான் ஹிப்பலாஸ். "பிரபு! எகிப்தின் நிலையை இப்பொழுதானே விளக்கினேன். மூன்று பேரரசுகள் எழுந்து தாழ்ந்த நாடு எகிப்து. அங்கு இப்பொழுது எகிப்தியர், கிரேக்கர், ரோமர் அனைவரும் இருக்கிறார்கள். முதன் முதலாக எகிப்தில் கிரேக்க அரசை நிறுவிய தாலமேயின் பெயரால் நிர் மாணிக்கப்பட்ட தாலமே என்ற துறைமுகப் பட்டினத்திலும், அதற்கு மேலுள்ள பெரினிஸ் என்ற துறைமுகப் பட்டினத்தி லும், அதற்குக் கீழே மூவாயிரம் *ஸ்டேடியா அளவிலுள்ள அடுலீஸ் என்ற துறைமுகப் பட்டினத்திலும், ரோமரும் கிரேக்கரும் கொண்ட யவனர்கள் பெருவாரியாக வசிக்கிறார் கள். அந்தப் பட்டினங்களுக்கு இந்த மரக்கலம் போக முடியாது. கொள்ளைக்காரர்கள் நம்மை எகிப்தில் செங்கடல் ஓரமாக உள்ள கார்டாபி வளைகுடா முனையில் உள்ள திருடர்களிடம் விற்று விடுவார்கள். -சே சே, நம்மை என்று சொல்கிறேனே, நீங்கள்தான் தமிழகம் போகப் போகிறீர் களே-என்னை விற்றுவிடுவார்கள். திருடர்கள் எங்களை

* ஸ்டேடியா என்பது ரோமர்கள் நீட்டலளவை. பெரிப் ரூப்ஸ்படி பத்து ஸ்டேடியா ஒரு ஆங்கில மைல். திரு. சோமசுந்தர தேசிகர் எழுதிய 'பெரிப்ரூஸி'ல் காணப்படும் விவரம்.

எகிப்து வர்த்தகரிடம் விற்பார்கள். அவர்கள் எங்களை அடுலீஸ், தாலமே முதலிய பட்டினங்களுக்குக் கொண்டு போய் சேரிகளில் ஏலம் போடுவார்கள்..." என்று சொல்லிக் கொண்டே போனவனை, "இரு இரு ஹிப்பலாஸ்" என்று நிறுத்திய இளஞ்செழியன், "கார்டாபி முனைக்குச் செல்ல எத்தனை நாளாகும்?" என்று வினவினான்.

எதற்காக அதைக் கேட்கிறான் படைத் தலைவன் என்பதை அறியாமல் சிறிது குழம்பிய ஹிப்பலாஸ் "காற்று இப்படியே இருந்தால் இன்னும் பதினைந்து நாட்களாகும்" என்றான்.

"பதினைந்து நாட்கள் இருக்கின்றன... நல்லது... நல்லது" என்று சொல்லிக் கொண்டே இளஞ்செழியன், "ஹிப்பலாஸ்! இந்த மரக்கலத்தில் அடிமைக் கப்பலிலிருந்து பெறப்பட்ட அடிமை வர்த்தகர்கள் எத்தனை பேரிருக்கிறார்கள்?" என்று வினவினான்.

"திடசாலிகள் ஐம்பது பேர். அத்தனை பேரும் இரும்புத் தளைகளில் பிணைப்பட்டுக் கிடக்கிறார்கள்" என்றான் ஹிப்பலாஸ்.

"கொள்ளைக்காரர்கள் எத்தனை பேர்?"

"சுமார் இருநூறு பேர்."

"கீழே துடுப்புத் தள்ளும் அடிமைகள்?"

"ஏற்கெனவே இருப்பவர் இருபது பேர். இப்பொழுது நாங்கள் பத்துப்பேர். மொத்தம் முப்பத்து."

இளஞ்செழியன் நீண்டநேரம் ஏதோ யோசித்தான். அவன் கண்கள் மயக்கமுற்றவைபோல் காணப்பட்டன. முகமும் புகாரில் மங்குவதுபோல் சிறிது மங்கியது. மீண்டும் சில வினாடிகளில் சுயநிலை அடைந்த இளஞ்செழியன், "இரு, இதோ வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கொள்ளைத் தலைவன் அறையை நோக்கி விடுவிடுவென்று நடந்தான். "வேண்டாம் படைத் தலைவரே! வேண்டாம். அந்த முயற்சி வேண்டாம்! நாமெல்லோரும் கொல்லப்படுவோம்" என்று ஹிப்பலாஸ் கூவியதைக் காதில் சிறிதும் வாங்கிக்கொள்ளா

மலே கொள்ளைத் தலைவன் அறையை வேகமாக அடைந்த படைத்தலைவன், அறைக் கதவை நிதானமாகத் திறந்து உள்ளே நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான். அடுத்த வினாடி கொள்ளைத் தலைவன் அறையில் ஏதோ சத்தம் கேட்டதையும் அறை விளக்கு பட்டென்று அணைந்து விட்டதையும் கண்ட ஹிப்பலாஸ் அச்சத்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான். அணைந்த விளக்கு மீண்டும் ஏற்றப்படவே இல்லை. அறைக்குள் முதலில் எழுந்த சத்தமும் மெள்ள மெள்ள அடங்கிவிட்டது. ஹிப்பலாஸின் திகில் உச்சஸ்தாயிக்குப் போய்க்கொண்டிருந்தது.

64. லட்சியச் சிலையும் கப்பலின் திசையும்

மரக்கலத்தின் பக்கப் பகுதிகளின் ஓரமாகச் செருகப் பெற்றிருந்த பந்தங்கள் சுற்றிலுமுள்ள நீர்ப்பரப்பில் சுமார் இரண்டடி தூரத்திற்கு வீசிய வெளிச்சத்தையும், விண்மீன்கள் கடல் முழுவதுமே தெளித்துவிட்ட சொற்ப ஒளியையும் தவிர வேறெவ்வித வெளிச்சமுமில்லாததால் கன்னங்கரேலென்று பயங்கரமாகக் கறுத்துக் கிடந்த அந்த இரவில் அடிமைக் கப்பலிலிருந்து பிடிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி, பெருவாரியான கொள்ளைக்காரர்களும் உறங்கிவிட்டதால், கடல் நீரில் துழாவி எழுந்த துடுப்புகளின் சரேல் சரேலென்ற சத்தத்தையும், கடற்காற்றின் 'ஊ' என்ற ஊதல் சத்தத்தையும் தவிர வேறு ஒலி எதுவுமே கேட்காத அந்த நள்ளிரவில் எகிப்து நாட்டின் கார்டாபி முனைக்குச் செல்ல நாட்கள் பதினைந்து ஆகும் என்று தான் சொன்னதும் ஏதோ யோசித்துவிட்டு, தான் என்ன தடுத்தும் காதில் வாங்கிக் கொள்ளாமல் கொள்ளைத் தலைவன் அறையை நோக்கிப் படைத்தலைவன் விடுவிடு என்று நடக்கத் தொடங்கிய உடனேயே திகிலடைந்தான் ஹிப்பலாஸ்.

அந்த அறை விளக்கு அணைந்ததையும் முதலில் ஏற்பட்ட சப்தம் அடங்கிவிட்டதையும் கண்டதும் பெரும் கிலிக்கு உள்ளானான். டைபீரியஸுக்கு உதவியாயிருப்பவன் இருங்கோவேள் மட்டுந்தான். மற்றவர்களுக்குச் சோழர்களிடம் என்ன வெறுப்பும் விரோதமுமாயிருந்த போதிலும் தமிழகத்தில் யவன அரசு ஏற்பட சம்மதிக்க மாட்டார்கள் என்று அன்றுவரை நம்பியிருந்த படைத் தலைவனுக்கு, 'சேரமானும் பாண்டியனும்கூட டைபீரியஸுக்கு எல்லாக் காரியங்களிலும் உடந்தைதான். சேரனே உங்களைப் பிடிக்க மேற்குக் கடற்கரைத் துறைமுகத்தில் பறையறிவித்திருக்கிறான்' என்பதை, தான் உணர்த்தியதும் படைத் தலைவன் உணர்ச்சிகள் பெரும் கொந்தளிப்படைந்து விட்டதையும், முகத்தில் அபாயச் சாயை படரத் தொடங்கிவிட்டதையும் கண்டதுமே படைத் தலைவன் ஏதோ விபரீத வேலைகளில் இறங்கப் போகிறான் எனத் தீர்மானித்த ஹிப்பலாஸ், படைத் தலைவன் கொள்ளைத் தலைவன் அறையை நோக்கிச் செல்ல முயன்றதும், திகிலடைந்ததிலோ, அறைச் சம்பவங்களைத் தூரத்தேயிருந்து ஊகித்ததால் அவன் திகில் உச்ச ஸ்தாயிக்குச் சென்றதிலோ வியப்பேதும் இல்லையல்லவா? கொள்ளையர் மரக்கலத்திலிருந்த சூழ்நிலையில், படைத் தலைவனுக்கிருந்த உணர்ச்சி வேகத்தில் அவன் எதையும் செய்துவிடக்கூடும் என்று ஹிப்பலாஸ் நம்பியதிலும் தவறென்ன இருக்கிறது?

கொள்ளைத் தலைவன் அறைக்கு விடுவிடு என்று படைத் தலைவன் செல்ல முயன்றதுமே, ஆபத்தான மார்க்கத்தில் அவன் பிரவேசிக்கிறானென்பதை உணர்ந்த ஹிப்பலாஸ் அவனைத் தடுக்க முயன்றான். அது முடியாமற் போகவே, 'கொள்ளைத் தலைவன் அறைக்கு இந்த நள்ளிரவில் படைத் தலைவன் போய் என்ன செய்யமுடியும்?' என்று நினைக்கத் தொடங்கியவன் அதற்குமேல் யோசிப்பதற்கும் ஒரு விநாடி பயந்தான். பிறகு, 'கொள்ளைத் தலைவனைக் கொல்லவா போகிறார் படைத்தலைவர்! கொன்றுவிட்டால் மற்றக் கொள்ளைக்காரர்கள் அவரை வெட்டிப் போட்டு

விடுவார்களே' என்றும் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு பெரும் வேதனையையும் அடைந்த ஹிப்பலாஸ் கொள்ளைத் தலைவன் அறையில் ஏதோ சத்தம் கேட்டு அடங்கி விளக்கும் அணைந்துவிடவே, 'சரி, காரியம் முடிந்துவிட்டது' என்று முடிவுக்கு வந்தான். 'ஆனால் யார் காரியம் முடிந்துவிட்டது? ஒருவேளை கொள்ளைத் தலைவன் விழித்திருந்து படைத் தலைவனைக் கொன்றிருந்தால்?' என்று யோசித்த ஹிப்பலாஸின் உணர்ச்சிகள் அவனையே சித்திரவதை செய்யத் தொடங்கின. அவன் உணர்ச்சிகள் சலித்துத் தத்தளித்துபோலவே கொள்ளைத் தலைவன் அறை வாசலிலிருந்த தீப்பந்தமும் காற்றில் பெரிதும் சலனப்பட்டுக் கொண்டிருந்தது.

மேலும் காத்துக் கொண்டிருப்பது உசிதமில்லை யென்றும், கொள்ளைத் தலைவன் அறையில் நடந்தது என்ன வென்பதை அறிய வேண்டுமென்றும் தீர்மானித்த ஹிப்பலாஸ், கப்பலின் முனைப் பகுதிகளை ஒரு முறை தன் கண்களால் ஆராய்ந்தான். கப்பலைக் காவல் புரிய நியமிக்கப் பட்ட நாலைந்து கொள்ளைக்காரரையும் சுக்கான் பிடிப்ப வனையும், தவிர வேறு யாரும் விழித்துக் கொண்டிருக்க வில்லை யென்பதையும், கீழே துடுப்புத் தள்ளுபவர்களுக்கோ, அவர்களைக் கசையாலடித்து வேலை வாங்குபவனுக்கோ மரக்கலத்தில் தளம் தெரியாததால் அவர்கள் விழித்துக் கொண்டிருந்தாலும் மேல் தளத்தில் நடப்பதை அறிய முடியாதென்பதையும், தளத்தில் விழித்துக் கொண்டிருந்த கொள்ளைக்காரர்கூட மரக்கலத்தின் முனைகளில் நின்று மதுவை அருந்தி விளையாடிக் கொண்டிருந்ததையும் கண்ட ஹிப்பலாஸ், கொள்ளைத் தலைவன் அறையை நோக்கி மிகுந்த எச்சரிக்கையுடன் நடக்கத் துவங்கினான்.

அவன் நாலடி எடுத்து வைத்ததும் சற்றே அதிர்ச்சி யடைந்து சட்டென்று நின்ற இடத்திலேயே ஒரு விநாடி நின்றதன்றி, மறு விநாடி இரண்டடிகள் பின்பக்கமும் எடுத்து

வைத்து, கொள்ளைத் தலைவன் அறையை நோக்கினான். அறைக் கதவு மீண்டும் திறக்கப்பட்டு மிகுந்த எச்சரிக்கை யுடன் இளஞ்செழியன் வெளியே தலை நீட்டியதை, கொள்ளைத் தலைவன் அறையில் வெளிப்புறப் பந்தம் வீசிய வெளிச்சத்தின்மூலம் பார்த்த ஹிப்பலாஸ் பெரிதும் வியப் படைந்து நின்றதல்லாமல், இளஞ்செழியன், மறுபடியும் உள்ளே சென்று எதையோ எட்டிப் பார்த்துவிட்டுத் தலையை யும் இருமுறை ஆட்டிவிட்டு, மெள்ள தானிருந்த இடத்தை நோக்கி வருவதைக் கண்டதும், பழைய இடத்துக்கு நகர்ந்து மரக்கலத்தின் பக்கப்பலகையில் சாய்ந்து கடலின் அலைகள் இருக்குமிடமாகத் திரும்பிக்கொண்டான். இளஞ்செழியனும் பழையபடி வந்து அவனுக்குப் பக்கத்தில் சாய்ந்து நின்றான். படைத்தலைவன் நிலையைக் கண்டு ஹிப்பலாஸே ஆச்சரியப் பட்டுப் போனான்.

தன்னிடமிருந்து கொள்ளைத் தலைவன் அறையை நோக்கிச் சென்ற இளஞ்செழியன் வேறு, திரும்பி வந்த இளஞ் செழியன் வேறு என்பதை உணர்ந்து கொள்ள யவனான ஹிப்பலாஸுக்கு அதிக நேரம் பிடிக்காததால் அவன் பெரிதும் பிரமிப்புக் கொள்ளலானான். சென்ற இளஞ் செழியன் கொந்தளிக்கும் உணர்ச்சிகளை உள்ளவன். 'என் இதயம் வெடித்துவிடும்' என்று நாட்டை நினைத்துக் கதறியவன். திரும்பி வந்த இளஞ்செழியனோ சாந்தமே உருவானவன். அவன் கடையிதழ்களில் சிறிது புன் சிரிப்பும் உருவெடுத்திருந்தது. தன் பக்கத்தில் அவன் மீண்டும் வந்து நின்றபோது அவன் மூச்சு மிக நிதானமாகவும், படபடப் பில்லாமலும் வந்து கொண்டிருந்ததைக் கண்ட ஹிப்பலாஸ் சிறிது வெறுப்புக் கொண்டான். இத்தகைய ஒரு அலுவலைச் செய்திருக்கும் படைத் தலைவன், இத்தனை நிதானமாக, எந்தக் குற்றத்தையும் தான் செய்யாதது போல நின்றிருந்ததைக் கண்ட ஹிப்பலாஸ் சொல்லவொண்ணா வியப்பும், ஓரளவு வெறுப்பும் அடைந்து, "பணி முடிந்து விட்டதல்லவா?" என்று வினவினான்.

இளஞ்செழியன் உடனே பதில் சொல்லவில்லை. சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, "முடிந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும் ஹிப்பலாஸ்" என்று கூறினான்.

ஹிப்பலாஸ் குழப்பம் நிறைந்த விழிகளை இளஞ் செழியன்மீது திருப்பி விட்டுக் கேட்டான், "படைத் தலைவரே! தங்களிடம் நான் எத்தனை வருஷங்களாக இருக்கிறேன்!" என்று.

அந்தக் கேள்வியின் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாததால் ஹிப்பலாஸை ஏறெடுத்து நோக்கிய இளஞ் செழியன், "ஏன் கேட்கிறாய் ஹிப்பலாஸ்? யவன நாட்டி லிருந்து வந்தது முதல் என்னிடத்தில்தான் பணி புரிகிறாய். வருஷங்கள் பல ஆயின" என்றான்.

"இத்தனை வருஷங்கள் பழகியும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை நான்'' என்று ஹிப்பலாஸ் வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னான்.

"என்னைப் புரிந்து கொள்ளவில்லையா?" ஏதும் புரியாத தால் வியப்புடனேயே வினவினான் படைத்தலைவன்.

ஹிப்பலாஸ் மரக்கலத்தின் பக்கப் பகுதியில் சாய்வதை விட்டு நன்றாக நிமிர்ந்து திரும்பி, படைத் தலைவனையும் திரும்பச் செய்து நேருக்கு நேர் அவனை ஒரு வினாடி நோக்கினான். "என் லட்சியச் சிலை இன்று உடைந்து விட்டது படைத் தலைவரே" என்று தழுதழுத்த குரலில் கூவினான்.

"விளக்கமாகச் சொல் ஹிப்பலாஸ்." கட்டளையாக எழுந்தது இளஞ்செழியன் குரல்.

பதில் சொன்ன ஹிப்பலாஸின் குரலிலும் அன்றுவரை இளஞ்செழியன் கேட்டறியாத கடுமை இருந்தது. "விளக்கத்திற்கு ஏதுமில்லை படைத்தலைவரே. என் படைத் தலைவர் லட்சிய வீரன் என்று மனப்பால் குடித்திருந்தேன்; அத்தகைய வீரனிடம் பணிபுரிவதைக் கௌரவமாகக் கருதினேன். என் சகோதர யவனர்களிடமிருந்தும் அதற்காகப் பிரிந்தேன். அன்னப் பறவை ஆபரணத்துடன் அந்த வீரன் யவன நாட்டுப் பேரழகியும், யவன அரச குலமங்கையுமான

ஒருத்தியைத் தூக்கி வந்து புகாரின் மாளிகையில் படுக்க வைத்த அன்றிரவில், அந்த ஆபரணத்தை உடையவளுக்குச் செலுத்த வேண்டிய கடமையினின்றும் பிறழ்ந்து அந்த வீரன் பக்கத்தில் நின்றதல்லாமல் யவனராஜ குடும்பத்துக்கெதிராக வாளையும் உருவினேன். ஏன்? ஒரு லட்சிய வீரன் உருவம் என் இதயத்தில் குடி கொண்டிருந்தது..." என்று சொன்னான் ஹிப்பலாஸ்.

அவன் சொல்வதன் பொருளைப் படைத் தலைவன் புரிந்து கொண்டானானாலும் எதற்காக அவற்றைச் சொல்கிறான் என்பதை அறிய முடியாததால், "இப்பொழுது அந்த உருவத்துக்கு என்ன வந்துவிட்டது?'' என்று வினவினான்.

''உருவம் விகாரப்பட்டுவிட்டது. அதன் கைகள் ரத்தத்தில் தோய்ந்துவிட்டன'' என்று பதில் கூறினான் ஹிப்பலாஸ்.

ஹிப்பலாஸின் எண்ணங்கள் மெள்ள மெள்ளப் புரிய ஆரம்பிக்கவே இளஞ்செழியன் முகத்தில் விவரிக்க முடியாத பல உணர்ச்சிகள் மாறி மாறி எழுந்து மறைந்தன. "ஹிப்பலாஸ்!" என்று அவன் அழைத்தபோது அந்தக் குரலில் துன்பமும் பூராவாகப் பிரதிபலித்தது.

"ஹூம்?" ஒற்றை ஒலியில் கேட்டான் ஹிப்பலாஸ்.

"நான் கொள்ளைத் தலைவனைக் கொலை செய்து விட்டேனென்று நினைக்கிறாயா!" வியப்பும் வேதனையும் நிறைந்த குரலில் எழுந்தது இளஞ்செழியனின் அடுத்த கேள்வி.

"வேறென்ன செய்தீர்கள் பிரபு? கொள்ளைத் தலைவன் அறைக்குச் சென்றதற்கு வேறு காரணம்கூட இருக்கிறதா?" ஹிப்பலாஸின் பேச்சில் இகழ்ச்சி ஒலித்தது.

"ஹிப்பலாஸ்! இத்தனை நாள் பழகிய பிறகும் உன் படைத் தலைவனை நீ உணர்ந்த லட்சணம் இதுதானா?" படைத் தலைவன் பதிலில் துக்கம் துள்ளி விளையாடியது.

"படைத் தலைவர்..." என்று ஏதோ சொல்லப்போன ஹிப்பலாஸை இடை மறித்த இளஞ்செழியன் வெறுப்பின்

சாயை பூரணமாகத் தொனித்த குரலில் கூறினான்: "உறக்கத்திலிருந்த கொள்ளைக்காரர் தலைவனைக் குத்திக் கொன்று விட்டார். ரத்தம் தோய்ந்த கைகளுடன், ஏன் அதை விடக் குற்றக் கறைபடிந்த மனத்துடன் திரும்பி வந்திருக்கிறார் என்று முடிவு செய்துவிட்டாய்."

"வேறெந்த முடிவுக்கு வரமுடியும் படைத் தலைவரே? தமிழகத்தின் கதியைப்பற்றி நீங்கள் பட்ட வேதனை, உங்கள் முகத்தில் ஏற்பட்ட அந்த அபாயக் குறிகள், உங்கள் கண்களில் சில வேளைகளில் சூழும் மயக்கம், நீங்கள் கொள்ளைத் தலைவன் அறையை நோக்கிச் சென்ற வேகம் பிறகு..."

"பிறகு?"

"கொள்ளைத் தலைவன் அறையில் விளக்கு அணைந்த சத்தம் கேட்டது. பிறகு சத்தமும் அடங்கியது. இவற்றுக்கெல்லாம் காரணம்..."

"கொலை என்பது உன் முடிவு. நேர்முகமான போரில் தவிர வேறு எந்தச் சமயத்திலும் கத்தியை உருவாதவனென்று தமிழகம் முழுதும் பெயர் வாங்கிய இளஞ்செழியனை, இரவில், அதுவும் உறங்கும் ஒருவனைக் கொல்லும் கேவலமான மனிதனாக்கி விட்டாய். முதுகில் அம்பு பட்டுத் திரும்பி வந்தால், பிள்ளையாயிருந்தாலும் வீட்டுக் கதவடைக்கும் பெண்மணிகள் உறையும் தமிழ் நாட்டில் பிறந்த ஒருவன், உறங்கும் அப்பாவியைக் கொல்லக் கூடும் என்ற நினைப்புக்கே பரிசு கொடுக்கலாம்! அதுவும் உன் படைத் தலைவனை அத்தனை இதயமற்றவனாக, பண்பற்றவனாக, கொடியவனவாக, கேவலமான ஒரு மனிதனாக நினைத்தாயே ஹிப்பலாஸ், அதற்கு உனக்கு எதையும் கொடுக்கலாம்..." என்று சொல்லிக் கொண்டே போன இளஞ்செழியன் உணர்ச்சிப் பெருக்கால் ஒரு விநாடி பேச்சை நிறுத்திவிட்டு, சாந்தத்தை வரவழைத்துக் கொண்டு திடமான குரலில் சொன்னான்: "என் மேல் தவறில்லை ஹிப்பலாஸ். நாமிருக்கும் நிர்க்கதியான நிலையில், நாட்டை விட்டு நெடுந்தூரம் வந்து நடுக்கடலில் திண்டாடும் இந்த அபாய நேரத்தில் கார்

டாபி முனை வந்ததும் நாம் அடிமைகளாக விற்கப்படலாம் என்ற எண்ணம் நிரம்பியுள்ள சூழ்நிலையில் யாவரும் எதையும் செய்யலாம், ஆனால் நான் செய்ய மாட்டேன் ஹிப்பலாஸ்! அத்தகைய ஈன வழியில் தப்புவதைவிட வாழ் நாள் முழுதும் யவன நாட்டில் அடிமையாகக் காலங்கழிப்பேன். உன் இதயத்தில் நீ இருப்பதாகச் சொல்லும் லட்சியச் சிலை மாண்டு போகலாம், தூக்கி எறியப்படலாம், ஆனால் அழியாது. கறை படிந்த கையில் வாளேந்தி நான் தமிழகத்துக்காகக் கூடப் போரிட இஷ்டப்படவில்லை. ஆகவே கவலைப்படாதே. கொலை எதுவும் நடக்கவில்லை. தவிர கொலை செய்வதும் முட்டாள்தனம் ஹிப்பலாஸ். கொள்ளைத் தலைவனைக் கொலை செய்தால் உப தலைவன் தலைவனாவான். தவிர மற்றக் கொள்ளைக்காரர்கள் தலைவன் கொலைக்குப் பழியும் வாங்குவார்கள். கொலையல்ல என் வழி, அது இருங்கோவேளின் வழி, இளஞ்செழியன் வழியல்ல."

இளஞ்செழியன் கூறிய உறுதியான சொற்களால் மீண்டும் மனச்சாந்தியடைந்த ஹிப்பலாஸ், "அப்படியானால் அந்த அறையில் விளக்கு அணைந்தது, அங்கு ஏற்பட்ட சத்தம்..." என்று இழுத்தான். "போகப் போக நீயே தெரிந்து கொள்வாய். வா, போய் அடிமைகளோடு அடிமைகளாகப் படுப்போம்" என்று கூறிவிட்டு, தளைகளில் அகப்பட்டு உறங்கிக் கிடந்த அடிமைகளிருந்த இடத்திற்குச் சென்று படுத்தான் இளஞ்செழியன். அவன் பக்கத்தில் மல்லாந்து படுத்த ஹிப்பலாஸுக்குத் தூக்கம் வரவில்லை. "கொள்ளைத் தலைவன் அறையில் கொலை நடக்கவில்லை என்றால் என்ன நடந்தது?" என்று மீண்டும் மீண்டும் தன்னைத்தானே கேட்டுக் கொண்டு விடையேதும் கிடைக்காததால் மனத்தைப் பலவிதமாகப் புரட்டிக் கொண்டான்.

என்ன புரட்டிக்கொண்டும் விடை கிடைக்கவில்லை. அன்றும் கிடைக்கவில்லை. மறுநாளும் கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு பல நாட்களும் கிடைக்கவில்லை. ஆனால் மறு

நாள் முதல் கொள்ளைக்காரர் மரக்கலத்தில் பல விசித்திரச் சம்பவங்கள் ஏற்படத் தொடங்கின. ஒவ்வொரு நாளும் இளஞ்செழியன் நிலைமை பல வழிகளிலும் முன்னேற்றமடைந்து கொண்டே போயிற்று. கொள்ளைக்காரர் தலைவன் அடிக்கடி இளஞ்செழியனைத் தனது அறைக்குக் கூப்பிட்டனுப்பினான். பல சமயங்களில் கொள்ளைத்தலைவன் அறையிலேயே இளஞ்செழியனுக்கும் உணவு பரிமாறப்பட்டது. மாலை வேளைகளில் மஞ்சள் வெயில் வீசும் சமயத்தில் கொள்ளைத்தலைவனும் இளஞ்செழியனும் ஒன்றாக மரக்கலத்தின் முனைப்பில் நின்று நீண்ட நேரம் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பார்கள். சில சமயங்களில் இருவரும் தலைவன் அறையில் சதுரங்கம் ஆடுவார்கள். அடுத்த பத்து நாட்களில் இளஞ்செழியனுக்கும் கொள்ளைத் தலைவனுக்கும் நட்பு வளர்ந்துகொண்டே போவதை ஹிப்பலாஸ் மட்டுமல்ல, கொள்ளைக்காரர்களும் கண்டு காரணம் புரியாமல் விழித்தார்கள். ஆனால் தலைவன் ஆணைக்கும் கொடுமைக்கும் அஞ்சி இளஞ்செழியனைத் தலைவனைப் போலவே பாராட்ட ஆரம்பித்தார்கள். கொள்ளைக்காரர் தலைவனிடமிருந்து அந்தப் பத்து நாட்களில் மரக்கலம் ஓட்டும் கலை நுட்பங்கள் பலவற்றையும் இளஞ்செழியன் அறிந்து கொண்டான். பாய்களை விரிப்பது, திரும்பக் கட்டுவது, சுக்கான் பிடிப்பது, திசையறிந்து மரக்கலத்தைத் திருப்புவது முதலிய பல அலுவல்களைச் செய்ய இளஞ்செழியனையே ஏவிய கொள்ளைத் தலைவன், தரைப் படைத் தலைவனுக்கு மரக்கலக் கலையையும் நன்றாக ஓதுவித்தான். இப்படி மெள்ள மெள்ளப் பயிற்சியடைந்த இளஞ்செழியன் நாள் செல்லச் செல்ல ஹிப்பலாஸுடன் பேசுவதையும் நிறுத்திக் கொண்டான்! இளஞ்செழியன் விபரீதப் போக்கைக் கவனித்த ஹிப்பலாஸ் சொல்லவொண்ணா எரிச்சலும் குழப்பமும் கொண்டு, 'இதென்ன விசித்திரம்! படைத் தலைவருக்கும் கொள்ளைத் தலைவனுக்கும் திடீரென இந்த நட்பு எப்படி ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது?' என்று பலமுறை தன்னையே

கேட்டுக் கொண்டான். விடை ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் தான் சொன்ன பதினைந்து நாட்கள் சென்றும் கொள்ளை மரக்கலம் மட்டும் கார்டாபி வளைகுடாவின் அருகில்கூட வராததைக் கண்ட ஹிப்பலாஸின் மனத்தில் பெரும் சந்தேகம் உதயமாகத் தொடங்கியது. அந்தச் சந்தேகம் அவனுக்கு மட்டுமல்ல, கொள்ளைக் கப்பலில் இருந்த மற்றக் கொள்ளைக்காரர்களுக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி ஏற்பட்டதால் கொள்ளைத் தலைவன் உறங்கிய பின்னர் ஒரு நாளிரவில் கொள்ளைத்தலைவர்கள் ரகசியமாகக் கூடி ஏதேதோ பேசிக் கொண்டார்கள். பிறகு கப்பல் ஓட்டத்தைக் கவனித்தார்கள். கவனித்ததும் பெரும் திகிலும், கோபமும் கொண்டார்கள்! கப்பல் கார்டாபி முனைக்காகச் செல்லவில்லை, வேறு திசையில் ஓடிக் கொண்டிருந்தது. கப்பலின் முகப்புக்கு நேரே வானத்தில் துருவ நட்சத்திரம் பெரிதாகச் சுடர்விட்டுக் கொண்டிருந்தது.

65. தித்திக்கும் திட்டம்

கொள்ளை மரக்கலத்தின் தலைவனுக்கும் அடிமையாகப் பிடிக்கப்பட்ட சோழர் படை உபதலைவனுக்கும் மிகக் குறுகிய காலத்தில் ஏற்பட்ட அந்தரங்க உறவைக் கண்டு முதலில் வியப்பும் பிறகு சந்தேகமும் கொண்ட மற்றக் கொள்ளைக்காரர்கள், நாட்கள் பதினைந்து ஆகியும் கார்டாபி முனை கண்ணுக்குக்கூடத் தெரியாததைக் கண்டு இரவில் ரகசியமாகக் கூடி ஆலோசித்த சமயத்தில், மரக்கலத்தின் நேர் எதிரில் விண்ணில் சுடர்விட்ட துருவ நட்சத்திரத்தைப் பார்த்ததும் எல்லை மீறிய அச்சமும் கோபமும் ஒருங்கே அடைந்தார்களாதலால், தங்கள் இஷ்ட விரோதமாகக் கப்பல் திசைதிரும்பி ஓடுவதன் காரணத்தை அறிய விரும்பியவர்களாய் முகங்களில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, மரக்கலத்தின் நடுப்பகுதியைத் தாண்டி, சாந்தமே உருவாய்ச் சுக்கானைப் பிடித்து நின்றுகொண்டிருந்த இளஞ்செழியனை

நோக்கிக் கூட்டமாக நடந்தார்கள். சுக்கானைப் பிடித்துக் கப்பலின் திசையை நிர்ணயித்து ஓட்டிக்கொண்டிருந்த இளஞ்செழியன், கப்பலின் கோடியிலிருந்தே எதிர்முனையில் கொள்ளைக்காரர்கள் கூடிப் பேசியதையும், அவர்களில் ஓரிருவர் ஆகாயத்தைச் சுட்டிக் காட்டிக் கைகளை ஆட்டியதையும், அவர்கள் தன்னை நோக்கி நகருமுன்பாகவே கவனித்து விட்டானாகையால் அபாயப் புயல் உருவாகி விட்டது என்று தீர்மானித்துக்கொண்டான். தங்களுக்குத் தெரியாமலே கப்பல் திசை மாற்றப்பட்டதற்குச் சரியான காரணம் தெரிவிக்காவிட்டால், எந்தப் பஞ்சமா பாதகத்துக்கும் அஞ்சாத அந்தக் கொள்ளைக்காரர்கள் தன்னை அந்த இடத்திலேயே வெட்டிப் போடுவார்கள் என்பதையும் இளஞ்செழியன் சந்தேகமறப் புரிந்து கொண்டானானாலும் அதைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காதவன்போல முகத்தில் பெரும் பொய் அமைதியைப் புலப்படுத்திக்கொண்டு, கடமையில் கண்ணும் கருத்துமுள்ள அடிமைபோல சுக்கானைப் பலமாகப் பிடித்து நின்றான்.

இரவின் இருளில் பெரும் பிசாசுகளைப்போல மரக்கலத்தின் இடைப் பகுதியைக் கடந்து இளஞ்செழியனை நோக்கிவந்த கொள்ளைக்காரர்கள், தூங்கும் அடிமைகளைக் கூட எழுப்பாமலும், சந்தடி ஏதும் செய்யாமலும் மரக்கலத்தில் நடந்து சுக்கானிருந்த இடத்தை அணுகியதும் இளஞ்செழியன் முன்பாக ஏதும்பேசாமல் குரூரம்சொட்டிய தங்கள் கண்களால் அவனை உற்றுப் பார்த்துக்கொண்டு சில வினாடிகள் நின்றார்கள். சில வினாடிகளே நீடித்து அந்த இடைக் காலத்தின் அமைதி, உண்மையில் பின்னால் எழ இருக்கும் புயலுக்கு அடையாளம் என்பதை உணர்ந்து கொண்ட இளஞ்செழியன் அவர்களை நோக்கிப் புன்முறுவல் செய்து, "ஏன் நிற்கிறீர்கள்? இப்படிப் பக்கப் பலகையில் சாய்ந்து கொள்ளலாமே" என்று தனக்கு அக்கம்பக்கத்திலிருந்த இடத்தைக் காட்டினான்.

அவன் முகத்தில் தெரிந்த சாந்தம், இதழ்களில் எழுந்த புன்முறுவல், தங்களைச் சாய்ந்துகொள்ளும்படி இடங் காட்டிய நிதானம், இவற்றைக் கண்டதால், 'கப்பல் திசை மாறியதற்கு இவன் பொறுப்பாளியோ இல்லையோ?' என்று நினைத்துச் சற்றுக் குழப்பமடைந்த கொள்ளைக்காரர்கள் தங்களுடன் வந்த கப்பல் உபதலைவனை நோக்கினார்கள். கப்பல்களை வளைத்துப் பிடிப்பதிலோ கொள்ளையடிப்பதிலோ சற்றும் சளைக்காதவனும், அச்சமென்பதையே அறியாதவனுமான கொள்ளை மரக்கல உபதலைவன்கூட அந்தச் சில வினாடிகளில் சிறிது அச்சமே அடைந்தான். 'ஒரு வேளை இவன் செயலுக்குக் காரணம் நமது தலைவனாயிருந்தால் நமது கதி அதோகதியாகி விடுமே' என்ற நினைப்பாலும், ஈவிரக்கமற்று, தங்கள் கண்களுக்கெதிரிலேயே தன்னை எதிர்ப்பவர்களைக் குத்திக் கொன்று கடலில் எறிந்திருப்பதைப் பலமுறை பார்த்திருந்ததாலும், எதையும் கேட்கப் பயந்து ஒரு வினாடி மற்ற கொள்ளைக்காரர்களை அவனும் திரும்பிப் பார்த்தான். எப்படி முதலில் கேள்வியைத் தொடுப்பதென்றே தெரியாமல் தவித்துக்கொண்டு குழம்பிய கொள்ளைக்காரர்களை நோக்கிய இளஞ்செழியன், அந்தக் குழப்பத்தின் காரணத்தையும் ஊகித்துக் கொண்டானாகையால், அவர்களுக்குக் கொள்ளைத் தலைவனிடமிருந்த கிலியை நினைத்து உள்ளூர மெல்ல நகைத்ததன்றி, அந்தக் கிலியே தனக்கு அந்தச் சமயத்தில் பெரும் பாதுகாப்பு என்பதையும் உணர்ந்து கொண்டு சற்றுத் தைரியத்துடன், "பக்கப் பலகையில் இடம் நிரம்ப இருக்கின்றதே, அப்பொழுதே கூறினேனே சாய்ந்து கொள்ளலாம்" என மீண்டும் அழைப்பு விடுத்தான்.

இரண்டாம் முறையாக அவன் விடுத்த அழைப்பு, கப்பலைத் திசை மாற்றிய பின்பும் அவனுக்கிருந்த துணிவு, இரண்டினாலும் உள்ளே எழுந்த அச்சத்தை உதறிவிட்ட கொள்ளை மரக்கலத்தின் உபதலைவன், "பக்கப் பலகையில் நாங்கள் சாய்ந்துகொள்ள வரவில்லை. இளைப்பாறவும்

நோக்கமில்லை" என்று கூறி, மீதியிருந்த கொள்ளைக்காரர்களை நோக்கி, "என்ன?" என்று ஒரு கேள்வியையும் வீசினான். "ஆம் ஆம். நாங்கள் அதற்கு வரவில்லை, அதற்கு வரவில்லை" என்ற மற்றக் கொள்ளைக்காரர்கள் தங்கள் உபதலைவனை ஆதரிக்கும் முறையில் முணுமுணுத்தார்கள்.

"அப்படியானால் வேறு அலுவல் ஏதாவது இருக்க வேண்டும்" என்று சொன்ன இளஞ்செழியன், உபதலைவனையும் நோக்கி மற்றக் கொள்ளைக்காரர்கள் மீதும் ஒருமுறை தன் கண்களைச் சுழலவிட்டான். விரோதமான பயங்கரக் கண்கள் இரண்டு அவனை எரித்துவிடுவதுபோல் பார்த்தன. மாமிசத் தசைகளைத் தின்றதாலும் அரபு யவன நாட்டு மது வர்க்கங்களை அருந்தியதாலும் பருத்துக் கிடந்த உதடுகள் ஆத்திரத்தில் அவனை நோக்கித் துடித்தன. அப்படித் துடிக்கும் உதடுகளின் மூலம் கடும் சொற்களை உதிர்க்க முற்பட்ட கொள்ளைக்காரர் உபதலைவன், "கப்பல் ஏன் இன்னும் கார்டாபி முனையை அடையவில்லை?" என்று வினவினான்.

இளஞ்செழியன் கண்கள் மிதமிஞ்சிய வியப்பால் மலர்ந்ததல்லாமல், அந்த வியப்பு சொற்களிலும் பிரதிபலிக்கக் கேட்டான், "கார்டாபி முனையா...அது எங்கிருக்கிறது?" என்று.

"எங்கிருக்கிறதென்று உனக்குத் தெரியாதா?" என்று உபதலைவன் குரலில் ஆத்திரமும் கோபமும் கலந்து தாண்டவமாடியது.

ஏதும் புரியாததுபோல் விழித்தான் சோழர் படையின் உபதலைவன். "கார்டாபி முனை ஒன்று உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அது இருக்குமிடம் எனக்கெப்படித் தெரியும்? நான் என்ன கடற் கொள்ளைக்காரனா? எரித்திரியக் கடலில் பயணம் செய்திருக்கிறேனா? தமிழகத்தைவிட்டு நான் வெளியே சென்றதேயில்லையே இந்தப் பயணமும் உங்கள் தயவினால்தானே நடக்கிறது?" என்று சிறிது வருத்தமும் குரலில் தொனிக்கக் கூறினான்.

இந்தப் பதில் கொள்ளைக்காரர்களைப் பெரிதும் குழப்பவே, அவர்கள் மீண்டும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். மற்றவர்களுக்குள் எழுந்த சந்தேகத்தைச் சற்று, வாய்விட்டே ஒரு கொள்ளைக்காரன் சொன்னான், "ஆமாம், இவனுக்கு எப்படி இந்தத் தூரதேசங்கள் தெரியும்!" என்று.

"அது மட்டுமல்ல, கப்பலை ஓட்டவும் நீங்கள்தானே சொல்லிக் கொடுத்தீர்கள்? பாய்மரம் கட்டுவது, அவிழ்ப்பது, சுக்கான் பிடிப்பது அத்தனையும் உங்களால்தானே பயின்றேன்..." என்று அவர்களுக்குத் தான் கடமைப் பட்டிருப்பதையும், தனக்காக எதுவுமே தெரியாதென்றும் பாசாங்கு செய்யத் தொடங்கிய இளஞ்செழியனை, கொள்ளைக்காரர் உபதலைவன் மீண்டும் மடக்கி, "அதனால்தான் கப்பலைத் திசை மாற்றி ஓட்டுகிறாயா?" என்று கோபம் கொந்தளித் தெழுந்த குரலில் அதட்டினான்.

"கப்பல் திசை மாறிப் போகிறதா?" குழப்பம் மிகுந்தவன் போல் கேட்டான் இளஞ்செழியன்.

"அதோ பார்...அது என்ன தெரியுமா?" என்று வட திசையைச் சுட்டி விண்ணில் கையை உயர்த்திக் கேட்டான் கொள்ளையர் உபதலைவன்.

"தெரியாமலென்ன? எங்கள் நாட்டில் துருவ நட்சத்திரம் என்று சொல்வார்கள்?" என்றான் படைத் தலைவன்.

"கடற் பிரயாணிகளும் கப்பலோட்டிகளும் இதை வடதிசை நட்சத்திரம் என்று சொல்வார்கள்" என்று சற்றுக் கடுமையாகச் சொன்னான் கொள்ளையர் உபதலைவன்.

"ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு சம்பிரதாயம்" என்று ஒப்புக்கொண்டான் இளஞ்செழியன்.

"சம்பிரதாயத்தைப்பற்றி நான் குறிப்பிட வரவில்லை."

"வேறு எதைக் குறிப்பிட விரும்புகிறீர்கள்?"

"கப்பல் போகும் திசையைப்பற்றிப் பேசுகிறேன். இப்பொழுது இந்தக் கப்பல் வடக்கு திசையில் போகிறது. கப்பலின் முனை அதோ உங்கள் துருவ நட்சத்திரத்துக்கு

நேராக இருகிறது. வடதிசையிற் செல்ல வேண்டுமானால் மாலுமிகள் அந்த நட்சத்திரத்தை அடையாளம் வைத்துத் தான் மரக்கலத்தைச் செலுத்துவார்கள்."

"புரிகிறது, புரிகிறது."

"என்ன புரிகிறது உனக்கு?" அதட்டலுடன் எழுந்தது கொள்ளையர் உபதலைவன் கேள்வி.

"கப்பல் வடதிசையில் போகிறது என்று புரிகிறது." சாவதானமாகப் பதில் சொல்லிய இளஞ்செழியன், மீண்டும் ஏதோ பெரும் குழப்பமடைந்தவன் போல் அவர்கள்மீது தன் பார்வையைச் செலுத்தி, "ஆமாம், இதைச் சொல்ல ஏன் இத்தனை பேர்? எதற்காக இத்தனை கோபம்?" என்று வினவினான்.

"தமிழா! நீ உண்மையில் ஏதும் அறியாதவனா அல்லது அறிந்துதான் இதைச் செய்பவனா என்பது எங்களுக்குப் புரியவில்லை. இந்தக் குற்றத்தை நீ அறிந்து செய்தாலும் அறியாமல் செய்தாலும் உன் உடலைக் குத்திக் கிழித்து எறிவதைத் தவிர எங்களுக்கு வேறெதுவும் வழியில்லை. இந்த மரக்கலம் கார்டாபி முனைக்குச் செல்ல வடமேற்கில் சென்றிருக்கவேண்டும். சென்றிருந்தால் இத்தனை நாள் முனையை நாம் அடைந்திருப்போம். ஆனால் சுக்கான் பிடிக்கும் நீ துருவ நட்சத்திரத்துக்கு நேர் எதிரில், அதாவது நேர் வடக்கில் கப்பலைச் செலுத்தியிருக்கிறாய். இன்று வரையில் நாங்களும் இதைக் கவனிக்கவில்லை. மரக்கலம் இப்படியே போனால் என்ன ஆகும் தெரியுமா?" என்று படபடப்புடன் பேசினான் கொள்ளையர் உபதலைவன்.

"என்ன ஆகும்?" என்று ஏதும் புரியாத குழந்தை போல் கேட்டான் இளஞ்செழியன்.

"கார்டாபி முனைக்குச் செல்லமாட்டோம். அதற்குப் பதிலாகப் பறவைத் தீவுக்குச் செல்வோம்" என்று கூறிய கொள்ளையர் உபதலைவன், அந்தத் தீவை நினைக்கவும் அஞ்சியவன்போல் பாதியிலேயே வார்த்தையை

நிறுத்தினான். அவன் உடல்கூட ஒருமுறை அச்சத்தால் ஆடியது.

*"பறவைத் தீவா! அது எங்கிருக்கிறது?" என்று சந்தேகம் கேட்டான் இளஞ்செழியன்.

"கானாவுக்குக் கீழே" கொள்ளையர் உபதலைவன் பதில் கடுமையுடன் எழுந்தது.

"கானாவா?" இளஞ்செழியன் சொற்களில் குழப்பம் பெரிதும் தெரிந்தது.

"ஆம். அரபு நாட்டுத் துறைமுகம். கப்பல்கள் சிறிது திசை மாறினாலும் பாறைகளில் மோதி சுக்குநூறாகக் கூடிய பயங்கரப் பிரதேசம். அப்படிக் கப்பல் உடைந்து தப்புபவர்களைப் பிடிக்க சாம்பிராணி நாட்டு மன்னன் இலி-ஆஸு தன் வீரர்களை அரபு எல்லை பூராவும் காவல் வைத்திருக்கிறான். அவர்களிடம் பிடிபட்டால் நாம் ஆயுள் பூராவும் அடிமைகள். மன்னன் பொல்லாதவன், அதைவிடப் பொல்லாதது பெரும் பாறைகள் நிறைந்த அரபுநாட்டுக் கடற்பகுதி. அதைவிட மோசம் பறவைத் தீவு. பறவைத் தீவை அணுகும்போதே ஏராளமான பலதரப்பட்ட பறவைகள் மரக்கலத்தை நோக்கி வரும். அவற்றில் பெரும் கழுகுகளும் உண்டு. ஆயிரக்கணக்கான கழுகுகள் ஏககாலத்தில் இந்த மரக்கலத்தில் பாய்ந்து மனிதர்களின் முகங்களையும், கண்களையும் கைகளையும் கொத்தினால் எப்படியிருக்கும்?"

* பறவைத் தீவு, கானா, இந்த இடங்களைப் பற்றிய குறிப்புகள் சரித்திர ஆதாரம் உடையவை. பிலடெல்பியா கமர்ஷியல் மியூஸியத்தின் காப்பிரைட் பதிப்பான பெரிப்ளஸின் 32, 117 ஆகிய பக்கங்களில் காணலாம். பிராங்க் இன்ஸென்ஸ் நாடு சாம்பிராணி நிறைந்தது. ஆகவே, பண்டைக்காலத் தமிழர் அதை சாம்பிராணி நாடு என்று அழைத்தார்கள். அதன் மன்னன் இலி-ஆஸு என்பவன். இலி-ஆஸு என்பதற்கு, "என் கடவுளே சக்தியுள்ளவர்" என்று பொருள். இந்த மன்னன் மிகக் கொடியவன் என்று பெரிப்ளஸ் வரலாறு கூறுகிறது.

இதைச் சொல்லிப் பேச்சைச் சற்றே நிறுத்தினான் கொள்ளையர் உபதலைவன். அந்த விவரங்கள் எதுவுமே சோழர் படை உபதலைவனுக்குப் புதிதல்லவென்றாலும், முதன் முதலாக அவற்றைக் கேட்பதுபோல் பாசாங்கு செய்ததன்றி, அவற்றைக் கேட்டு நடுங்குவது போலும் நடித்தான் இளஞ்செழியன். தமிழகத்துக்கு வரும் யவன, அரபு, எகிப்திய வர்த்தகர்களிடமிருந்து எரித்திரியக் கடற் பகுதியின் விவரங்கள் பலவற்றையும் அறிந்திருந்த இளஞ்செழியன் காரணமாகவே பறவைத் தீவுக்காகக் கப்பலின் திசையை மாற்றியிருந்தான். அதை எப்படியும் கொள்ளைக்காரர்கள் அறிவார்கள், அறிந்ததும் பேராபத்து இருக்கிறது என்பது அவன் உணராத விஷயமல்ல. இத்தகைய அபாயங்களை முன்னமே படைத்தலைவன் எதிர்பார்த்திருந்தானாகையால் அதைச் சமாளிக்கும் வழியையும் நிர்ணயித்திருந்தான். ஆகவே சற்றும் தயக்கமின்றியே உபதலைவனுக்குப் பதில் சொன்னான். "நீங்கள் சொல்வதைக் கேட்கவே பயங்கரமாயிருக்கிறதே. அப்படியானால் எதற்காக இந்த மரக்கலத்தின் தலைவர் துருவ நட்சத்திரத்தைப் பார்த்துச் சுக்கானைப் பிடிக்கச் சொன்னார்? அவருக்கு ஒருவேளை இந்த விஷயம் தெரியாதோ?" என்று கேட்ட இளஞ்செழியன் கிலி பிடித்தவன் போல் கொள்ளையர் உபதலைவனை நோக்கவும் செய்தான்.

அவன் பேச்சு கொள்ளைக்காரர்களிடையே சற்று சலசலப்பையும் அச்சத்தையும் விளைவித்தது. வடதிசையில் மரக்கலத்தைச் செலுத்தச் சொன்னவன் தங்கள் தலைவன் என்பதை அறிந்ததால் பெரிதும் பீதியடைந்த கொள்ளையர் உபதலைவன் "இதை ஏன் முன்பே சொல்லவில்லை!" என்று சீறினான்.

"தலைவர் உத்தரவு." இளஞ்செழியன் பதில் பரம அடக்கத்துடன் வெளிவந்தது.

"எங்களிடம் மறைக்கச் சொன்னாரா தலைவர்? இருக்காது, ஒருகாலும் இருக்காது" என்று குரலை உயர்த்திக் கூவினான் கொள்ளையர் உபதலைவன்.

"இருக்காது இருக்காது" என்று மற்ற கொள்ளைக்காரர்களும் கூவினார்கள். "எல்லாம் இவன் தந்திரம்" என்றான் மற்றொரு கொள்ளைக்காரன். "ஏதோ சொல்லித் தலைவரை ஏமாற்றியிருக்கிறான்" என்று கூவினான் இன்னொருவன். அடுத்த வினாடி கொள்ளைக்காரர்கள் கூச்சல் அதிகரிக்கவே கீழே துடுப்பு அறையில் அடிமைகளை வேவு பார்த்துக்கொண்டிருந்த கொள்ளைக்காரர்களும் தளத்துக்கு ஓடி வந்தார்கள். தளம் கொள்ளையரின் நாலாவிதக் கூச்சலால் அமளிப்பட்டது. சுக்கானைப் பிடித்து நின்ற இளஞ்செழியனை அத்தனை கொள்ளைக்காரர்களும் சூழ்ந்து கொண்டார்கள். "கொல்லுங்கள் அவனை...கொல்லுங்கள் அவனை" என்ற கூக்குரல் எங்கும் பரவியது. தங்களுக்கும் தலைவனுக்கும் இடையே முளைத்த அந்தத் தமிழனை ஒழித்துவிட உறுதிகொண்ட கொள்ளையர் முகங்களைக் கண்ட கொள்ளையர் உப தலைவன் தன் கத்தியை இடையிலிருந்து உருவினான். ஆனால் தமிழன் திட்டம் மிகச் சாமர்த்தியமாக வகுக்கப்பட்டிருந்ததையும், காரணமாகவே கொள்ளையரைக் கூச்சலிடும் நிலைக்கு அந்தத் தமிழன் தூண்டிவிட்டதும் யாருக்குத் தெரியும்? அந்தக் கூச்சல் மற்றொரு கூச்சலையும் இழுத்துவரும் என்பதைக் கொள்ளைக்காரர்கள்தான் கண்டார்களா என்ன? ஆகவே, "என்ன இங்கே கூச்சல்?" என்று பயங்கரமாக எழுந்த ஒரு குரல் அந்தச் சூழ்நிலையின் தன்மையை அடியோடு மாற்றவே, கொள்ளைக்காரர் அச்சத்துடன் பின்புறம் திரும்பினார்கள். அவர்களுக்கு நேர் பின்புறத்தில் இளஞ்செழியனுக்கு நேர் எதிரில் கனல்கக்கும் விழிகளுடனும் துடிக்கும் பெரும் மீசையுடனும் ஆறரை அடி உயரத்துக்கு மிகப் பயங்கரமாக நின்று கொண்டிருந்தான் கொள்ளையர் தலைவன். அவனைக் கண்டதுமே புலியைக் கண்ட ஆட்டுக்குட்டிகள் போல் சிதறமுற்பட்ட கொள்ளையர்களை, "என்ன இங்கே கூச்சல்?" என்று இரண்டாம் முறை அவன் உக்கிரக்குரலில் எழுப்பிய கேள்வி இருந்த இடத்திலேயே நிலைக்கச் செய்தது.

தன்னைக் கண்டு பிரமித்துக் கிலி பிடித்து நின்ற கொள்ளையர்களை நோக்கி மிக நிதானமாக நடந்து வந்த அவர்கள் தலைவனின் பெரும் கோவை விழிகள் கப்பலின் தளத்தையே ஒரு கணம் அளவெடுத்தன. அடுத்த கணம் அவர்கள் அருகாமையில் வந்த தலைவன், இளஞ்செழியன் அருகே உருவிய கத்தியுடன் நின்றுகொண்டிருந்த உப தலைவனை நோக்கி, "எதற்கு அந்தக் கத்தி?" என்றான்.

"இவனைக் கொல்ல" என்று துணிவை வரவழைத்துக் கொண்டு கூறினான் உபதலைவன்.

"இந்தக் கப்பலில் தண்டனை விதிக்கும் உரிமை உனக்கா, எனக்கா?" தலைவன் கேள்வி மிகப் பயங்கரமாக எழுந்தது.

"தங்களுக்குத்தான்."

"அப்படியானால் சுக்கான் பிடிப்பவனை ஏன் கொல்ல முயன்றாய்? இவர்களை எதற்காகத் திரட்டி இங்கு கொண்டு வந்திருக்கிறாய்?"

"எங்கள் எல்லோருக்கும் சந்தேகம் வந்தது."

"யார்மேல் சந்தேகம்?"

"இந்தத் தமிழன்மேல்."

"ஏன்?"

"கப்பல் பறவைத் தீவை நோக்கி ஓடுகிறது."

"ஓடினால் என்ன?"

"எல்லோரும் அழிக்கப்படுவோம்."

இந்தப் பதிலைக் கேட்டதும் கொள்ளைத் தலைவன் ஒரு முறை தன் பயங்கர மீசையைத் தடவிக்கொண்டான். பிறகு தன் உபதலைவனை நோக்கிக் கேட்டான், "பறவைத் தீவுக்குப் போக வேண்டாம். வேறெங்கு போக வேண்டும் என்பது உன் விருப்பம்?" என்று

"கார்டாபி முனைக்கு.." இதைச் சொல்லி மென்று விழுங்கினான் உபதலைவன்.

கொள்ளைத்தலைவன் தன் துணைவர்களை நோக்கி விழிகளை உருட்டினான். "உங்கள் உபதலைவன் நம்முடன் வர இஷ்டப்படவில்லை. கார்டாபி முனைக்குச் செல்ல விரும்புகிறான். அங்கு அனுப்பி விடுங்கள்" என்று உத்தர விட்டு மேற்கொண்டு ஏதும் பேசாமல் இரண்டடி தன் அறையை நோக்கி எடுத்து வைத்து, மறுபடியும் கொள்ளைக் காரர்களை நோக்கித் திரும்பி, "கப்பல் ஏன் திசை மாறி விட்டது என்பதை அறிய வேண்டுமானால் என் அறைக்கு வாருங்கள். நாம் போகுமிடத்தில் எத்தனை லாபமிருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன்" என்று கூறிவிட்டு, விடுவிடு என்று தன் அறையை நோக்கி நடந்தான்.

தலைவன் பேச்சு கொள்ளைக்காரர்களிடை அத்தனை நம்பிக்கை ஊட்டுமென்று இளஞ்செழியன் கனவில்கூட நினைக்கவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் பயங்கர அலுவல்கள் நிகழ்ந்தன. "பிடி! பிடி அவனை!" என்று ஓட முற்பட்ட உபதலைவனை நெருங்கினார்கள் கொள்ளைக் காரர்கள். "கார்டாபி முனைக்குப் போ. இந்தப் பக்கத்திலிருக் கிறது" என்று சிலர் கூவினார்கள். "மன்னித்து விடுங்கள் மன்னித்து விடுங்கள்" என்று கூவிக்கொண்டே ஓடிய உப தலைவன், கொள்ளையர் தலைவன் காலில் விழுந்து காலையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

காலைப் பிடித்துக்கொண்ட உபதலைவனை ஒரு வினாடிதான் பார்த்தான் கொள்ளையர் தலைவன். அடுத்த வினாடி காலை உதறி அவனைத் தூரத் தள்ளினான். "இந்தக் கப்பலில் தலைவனுக்கு எதிராக இரவில் சதி செய்பவர் களுக்கு இடமில்லை" என்று கூறிவிட்டு நடந்தான். கத்திக் கதறிய உபதலைவனை, தயை தாட்சண்யமின்றிக் கடலில் எடுத்து எறிந்தார்கள் கொள்ளைக்காரர்கள். கடலில் தத்தளித்த அவனை எட்டிப் பார்த்த கொள்ளைக்காரர் சிலர், "கார்டாபி முனை அந்தப் பக்கமிருக்கிறது. போ போ" என்று கூச்சலிட்டு நகைத்தனர்.

பணம் ஒன்றையே பிரதானமாக நினைத்து, கணச் சித்தம் கணப் பித்தமாக மாறக்கூடிய மனோநிலை வாய்ந்த கொள்ளைக்காரர்களை நினைத்து உள்ளூர நகைத்துக் கொண்ட இளஞ்செழியன் மறுநாள் கொள்ளையர் தலைவன் மற்றக் கொள்ளைக்காரர்களைத் தன் அறையில் அழைத்து, கப்பல் திசை மாறியதன் காரணத்தை விவரித்தபோது, கூடவே இருந்து ஐம்பதினாயிரம் பொற்காசுகளுக்குக் குறையாமல் சம்பாதிக்க வகுக்கப்பட்ட திட்டத்தை விவரித்தான்.

திட்டம் கேட்பதற்குத் தித்தித்தது. ஆனால் அதிலிருந்த ஆபத்துக்களை நினைத்துக் கொள்ளையர்கள் கலங்கினர். "பறவைத் தீவைக் கடந்து கானா துறைமுகத்தில் இறங்கி, சாம்பிராணிப் பொதிகளைக் கைப்பற்றினால் லாபம் பெரிது தான். ஆனால் பறவைத் தீவைக் கடப்பது எப்படி? அதற்கு அப்பாலுள்ள ஜலசந்தியில் சதாவீசும் சூறாவளியில் மரக்கலம் எப்படிச் செல்லும்? அப்படியே சென்றாலும் கானாவிலுள்ள இலி-ஆஸு அரசன் வீரர்களிடம் சிக்கினால் நிரந்தர அடிமை வாழ்வு கிடைக்குமே! அதிலிருந்து தப்புவது எப்படி?"

இந்தக் கேள்விகளால் கலங்கிய கொள்ளையர்களுக்கு நம்பிக்கை யூட்டவும், அவர்கள் ஆபத்தை மறந்து களிவெறி கொள்ளவும் வழிகாட்ட முற்பட்ட சோழர் படையின் உப தலைவன் சொன்னான்: "மரக்கலத்தைப் பறவைத் தீவுக்கு மேற்கே செலுத்தி அரபு நாட்டு ஓரமாகச் சென்றால் கழுகு களிடமிருந்து தப்பலாமென்று தலைவர் சொல்கிறார். பாய் மரங்களை அவிழ்த்துவிட்டு, துடுப்புகளை மாத்திரம் கொண்டு மரக்கலத்தை நகர்த்தினால் கானாவை அடைவது எளிது என்பது தலைவர் கருத்து. அங்கு சென்ற பின் தரையி லுள்ள படையைச் சமாளிப்பது என் பொறுப்பு. நாளை முதல் இங்குள்ள அடிமைகளுக்கு நான் தரைப் போர் முறையைச் சொல்லிக் கொடுக்கிறேன். நீங்கள் துறைமுகத்தில் கப்பலைக் கவனித்துக் கொள்ளுங்கள். தரையில் இறங்கிச் சென்று

சாம்பிராணிப் பொதிகளைக் கொள்ளையடிப்பதை நான் கவனித்துக் கொள்கிறேன்."

திட்டம் கொள்ளைக்காரர்களுக்கு ஓரளவு திருப்தியை அளித்ததால், அவர்கள் அன்று முதல் இளஞ்செழியனைக் கப்பலின் உபதலைவனாகவே பாவித்தார்கள். மறு நாள் முதல் அடிமைகளின் தளைகளை நீக்கி அவர்களுக்குத் தரையில் போரிடும் முறைகளைச் சொல்லிக்கொடுத்தான். சோழர் படை உபதலைவன். இத்தனை ஏற்பாட்டிலும் கலந்து கொள்ளாமல் ஹிப்பலாஸ்மட்டும் தனித்துநின்றான். படைத் தலைவன் போக்கு அவனுக்கு ஒருபுறம் திகிலையும் ஒருபுறம் குழப்பத்தையும் விளைவித்தது. கானா துறை முகத்தில் பேராபத்து இருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான். அந்த ஆபத்து உருவெடுத்தபோது திருப்பம் அத்தனை வேகமாகவும் பிரமிக்கத்தக்க வகையிலும் ஏற்படுமென்று இளஞ்செழியனுடன் வருஷக் கணக்கில் பழகிய ஹிப்ப லாஸினாலேயே ஊகிக்க முடியவில்லை. அடுத்த எட்டாவது நாள் மரக்கலம் அரபு நாட்டுக் கடற்கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தூரத்தே கானா துறைமுகத்தின் பெரும் பந்தங்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன. கலங்கரை விளக்கத்தின் பெரிய ஜ்வாலையும் வரும் மரக்கலத்தை விழுங்கத் தயாராயிருக்கும் கொள்ளிவாய்ப் பிசாசுபோல் தெரிந்தது.

"துறைமுகம் நெருங்குகிறது. மரக்கலத்தின் பந்தங்களை அவிழுங்கள்" என்று உத்தரவிட்டான் இளஞ்செழியன். துடுப்புக்கள் மட்டும் துழாவ பாய்மரம் கட்டப்படாமல் நிசப்தத்துடன் கானா துறைமுகத்தை நோக்கி மரக்கலம் ஊர்ந்து சென்றது.

66. ஆபத்தும் சம்பத்தும்

கொள்ளையர் மரக்கலத்தின் பெரும் பந்தங்களும் விளக்குகளும் அணைக்கப்பட்ட பின்பு, மரக்கலத் தலைவன்

அறையிலிருந்த ஒரு விளக்கின்மீதும் துணியைப் போட்டு, மறைக்கச் செய்த இளஞ்செழியன், தலைவனைத் தளத்துக்கு அழைத்துச் சென்று தூரத்தே தெரிந்த துறைமுகத்தின் கலங்கரை விளக்கத்தைச் சுட்டிக் காட்டி, "அது இன்னும் எத்தனை தூரம் இருக்கிறது?'' என்று வினவினான். கொள்ளையர் தலைவன் தன் பயங்கர விழிகளை முதலில் மரக்கலத்தின் பக்கப் பகுதிகளில் செலுத்திவிட்டு மீண்டும் கலங்கரை விளக்கத்தை நோக்கினான். பிறகு தூரத்திலிருந்து வந்த காற்றைத் தன் அகன்ற நாசிகளால் சிறிது நேரம் சுவாசித்துவிட்டுச் சொன்னான், "இன்னும் இருபது ஸ்டேடியாக்கள் இருக்கின்றன" என்று.

கொள்ளைத் தலைவன் கண்கள் கப்பலின் அக்கம் பக்கத்தில் சஞ்சரித்ததாலும், அவன் நாசி காற்றை மோப்பம் பிடித்ததிலும் ஏதோ அர்த்தமிருக்க வேண்டுமென்று நினைத்த இளஞ்செழியன், "இன்னும் இருபது ஸ்டேடியாக்களா! அப்படியானால் மூன்றாம் ஜாம இறுதியில்தான் மரக்கலம் துறைமுகத்தை அடைய முடியும்" என்று கூறி ஏதோ சந்தேகம் கேட்பவன்போல் தலைவனை நோக்கித் தன் கண்களையும் திருப்பினான்.

இளஞ்செழியன் சொற்களைக் கேட்ட கொள்ளையர் தலைவன் சற்றுப் பயங்கரமாகவே நகைத்துவிட்டு, "மூன்றாம் ஜாம இறுதியிலா! நான்காம் ஜாம இறுதியில் அடைந்தாலே ஆச்சரியம். இத்தனை நாள் நாம் பயணம் செய்தது ஒரு பெரிய விஷயமல்ல. இந்த இருபது ஸ்டேடியாக்களைக் கடப்பதுதான் மிகவும் கஷ்டம். கப்பல் சுக்கு நூறாக உடையாமல் துறை முகத்தை அடைய என்ன செய்யப் போகிறாய்? தமிழர்கள் தான் தந்திரசாலிகளாயிற்றே. அந்தத் தந்திரத்தைக் கொஞ்சம் அராபியப் பாறைகளிடம் உபயோகித்துப் பார்'' என்று கூறிவிட்டு மறுபடியும் வாய்விட்டுச் சிரித்தான்.

கொள்ளைத் தலைவன் மனோபாவத்தை அர்த்தம் செய்து கொள்வது மிகக் கடினமாயிருந்ததால் இளஞ்செழியன் ஏதும் புரியாமல், "எதற்காக இவன் நகைக்கிறான்? பாறை

களில் இந்த மரக்கலம் மோதினால் இவனுக்கு நஷ்ட மில்லையா? இல்லை, மற்றக் கொள்ளைக்காரர்கள்தான் அத்தகைய அபாய எல்லைக்குள் புகச் சம்மதிப்பார்களா?" என்று உள்ளுக்குள்ளேயே எண்ணமிட்டதன்றிச் சற்று வெளிப் படையாகவே பேசவும் முற்பட்டு, "தமிழர்களிடம் தந்திரம் உண்டு தலைவரே! ஆனால் நிலைமையை உள்ளபடியறிந்தால் தந்திரத்தைப் பயன்படுத்தலாம். ஆகையால் மரக்கலம் கானாவை அடைவதில் என்ன ஆபத்துகள் இருக்கின்றன? புரியும்படியாகச் சொல்லுங்கள்" என்றான்.

பதிலுக்குக் கொள்ளையர் தலைவன் மரக்கலத்தின் பக்கப் பகுதிகள் இரண்டையும் சுட்டிக்காட்டி, "முப்பது துடுப்புகள் துழாவியும் மரக்கலம் அசைகிறதா பார்" என்றான்.

இளஞ்செழியன் அப்பொழுதுதான் அந்த விந்தையைக் கவனித்தான். முப்பது துடுப்புகளும் அதிவேகத்துடன் துழாவியும் மரக்கலம் கடல் ஆமையைப்போல மூன்றடி முன்னால் சென்றால் இரண்டடி பின்னுக்குச் சென்று, மறு படியும் நிலையைச் சமாளித்து அரையடி முன் பக்கம் நகர்ந்தது. இதைப் பார்த்ததால் ஆச்சரியத்துக்கும் மரக்கலம் இருட்டு இருக்கும்போதே கானாவை அடையாவிட்டால் தன் திட்டம் சுக்குநூறாகி விடுமே என்ற நினைப்பால் பயத்துக்கும் இலக்காகிய இளஞ்செழியன், "ஆமாம், மரக்கலம் முன்னேற மிகவும் திண்டாடுகிறது" என்று ஒப்புக் கொண்டான்.

"காரணம் தெரியுமா?'' என்று வினவினான் கொள்ளையர் தலைவன்.

"தெரியவில்லை" என்று பதில் சொன்னான் சோழர் படை உபதலைவன்.

"தரைப்படையை நடத்துவதற்கும் கப்பலைச் செலுத்துவதற்கும் உள்ள வித்தியாசத்தைச் சோழர் படையின் உபதலைவன் அறியவில்லை போலிருக்கிறது. தரையில் படைகளை நடத்துவதில் ஒரு எதிரியைத்தான் சமாளிக்க வேண்டும். ஆனால் கடற்போரில் பல எதிரிகள் உண்டு. மரக்கலத்தை நம்மையும் மீறிக் காற்று, அலை இவை எது

எந்தப் பக்கம் திரும்பும் என்று சொல்ல முடியாது. கானாவை அடையுமுன்பு அராபியக் கடலில் குறுக்கிடுவதால் பெரும் நீர் வேகமும், பனைமரம் உயரம் கிளம்பும் அலைகளும் கப்பலை எதிர்க்கும். கொஞ்சம் கப்பல் நிலை திரும்பினாலும் அராபியக் கடற்கரையோரமாக உள்ள பெரும் மலைப் பாறைகளில் மோதி உடைந்துவிடும். இதை எப்படிச் சமாளிப்பாய்? எப்படிப் பொழுது விடியுமுன்பு கானாவை அடைய முடியும்?"

"பொழுது விடியுமுன்பு அடையாவிட்டால்...?" என்று சொல்லிய இளஞ்செழியன், விளைவு என்ன என்பதை முகத்தின் குறிப்பினாலேயே கொள்ளையர் தலைவனுக்கு உணர்த்தினான்.

"புரிகிறது தமிழா, புரிகிறது. பொழுது விடியுமுன்பு கானாவை அடையாவிட்டால் நாமனைவருமே இலி-ஆஸுவுக்கு அடிமைகளாவோம். பிறகு சாம்பிராணிக் காடுகளில் வேலை செய்யவும் சந்தர்ப்பம் கிடைக்கும். கசையடிகளுக்கும் குறைவேயிருக்காது" என்று கூறிய கொள்ளையர் தலைவன், "ஆனால் அஞ்சாதே. இந்த மரக்கலத்தை நீ எதிர்பார்ப்பதற்கு முன்பாகவே துறைமுகத்திலிருந்து ஐந்து ஸ்டேடியா அளவில் கொண்டுபோய் நிறுத்துகிறேன்'' என்று தைரியமும் சொன்னான்.

"ஏன் உங்களுக்கு மட்டும், அராபிய ஜலசந்தியும், நீர் வேகமும், பெரும் அலைகளும் மலைகளும் சொன்னபடி கேட்குமா?" என்று கேட்ட இளஞ்செழியன் குரலில் சற்று இகழ்ச்சியையும் காட்டினான்.

கொள்ளைத் தலைவன், 'கேட்கின்றனவா இல்லையா பார்" என்று கூறிவிட்டுக் கொள்ளையரில் சிலரை, "இங்கே வாருங்கள்" என்று கூவியழைத்தான். ஆங்காங்கு தளத்தில் நின்று கானாவின் கலங்கரை விளக்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பத்துப் பதினைந்து கொள்ளைக்காரர்கள், தங்கள் தலைவன் அழைப்பதைக் கேட்டதும் அவனிருந்த இடத்துக்கு ஓடி வந்தார்கள். அவர்களனைவரையும் தன் கண்களைச்

சுழற்றிப் பார்த்துச் சில வினாடிகள் மௌனமாயிருந்த கொள்ளையர் தலைவன், நிதானமும் சற்றே கடுமையும் நிறைந்த குரலில் கூறினான்: "இக்கப்பலிலுள்ள அடிமைகளுக்கு அராபிய ஜலசந்தியின் கொடுமைகள் புதியதாயிருக்கலாம். ஆனால் உங்களுக்குப் புதிதல்ல, இன்னும் சில நிமிடங்களில் பெரும் நீர் வேகம் நம்மைப் பின்னுக்கு இழுக்கும். பெரிய அலைகளும் எழும்பும். பின்னுக்கிழுக்கும் நீர் வேகத்தை அலைகளைக் கொண்டுதான் சமாளிக்கவேண்டும். அலைகள் பெரிதாக எழுந்தாலும் கரையில் சென்றுதான் மோதும். ஆகவே நீர்வேகம் பின்னுக்கு இழுக்கும்போது துடுப்புகளை வேகமாகத் துழாவி, கப்பலை இருந்த இடத்தில் நிற்க வையுங்கள். அலைகள் கிளம்பியதும் துடுப்புகள் துழாவ வேண்டாம். கப்பலை அலைகளின் வேகம் கரைக்குக் கொண்டு செல்லும்படி விடுங்கள். அதிலும் ஒரு அபாயமிருக்கிறது. அலைகள் கரையோரமாகக் கப்பலைக் கொண்டு சென்றால் பாறைகள் இருக்கின்றன. ஆகவே கூடியவரையில் சுக்கானை நமக்கு வலது புறமாகத் திருப்பிப் பிடித்துக் கப்பல் தென்மேற்குத் திசையில் செல்லட்டும். அப்பொழுதுதான் கப்பல் ஜலசந்தியின் நட்ட நடுவில் போகும்" என்று.

இப்படி விடுவிடு என்று உத்தரவுகளைப் பிறப்பித்த கொள்ளையர் தலைவன், அந்த உத்தரவுகள் சரியாக நிறைவேற்றப்படுகிறதாவெனக் கவனிக்க, கப்பலின் தளத்திலும் அடியிலிருந்த துடுப்புகள் அறையிலும் மாறி மாறி வேகமாக நடந்தான். எரித்திரியக் கடலின் ஒவ்வொரு பகுதியின் நுணுக்கத்தையும் அறிந்திருந்த அந்தக் கொள்ளையர் தலைவன் மிகச் சாமர்த்தியமாகத் தனது மரக் கலத்தை நடத்திச் சென்றான். அவன் கூறியதுபோல் அடுத்த சில நிமிடங்களுக்குள்ளாக மரக்கலத்தின் போக்கில் பயங்கர மாறுதல்கள் ஏற்பட்டன. திடீரென மரக்கலம் விர்ரென்று பல அடிகள் பின்னுக்குச் சென்றது. "உம், துடுப்புகளைத் தள்ளுங்கள். வேகம்! வேகம்! இன்னும் வேகம்" என்று பயங்கரமாக இரைந்தான் கொள்ளைத் தலைவன். அவன் கையிலிருந்த

கடுமையான சாட்டை வெகுவேகமாகத் துடுப்புத் தள்ளுபவர்களின் தோள்களில் இறங்கிச் சொடேல் சொடேலென சப்தித்தது. அதே சமயத்தில் பெரும் காற்று ஒன்றெழும்பவே மலையளவுக்கு அலைகளும் எழுந்தன. மரக்கலம் பல திசைகளில் இழுபட்டது. சில சமயங்களில் கவிழ்ந்து விடுவதுபோல் ஆடியது. 'என்ன பயங்கரச் சூறாவளி! என்ன பயங்கர அலைகள்!' என்று எண்ணிய இளஞ்செழியனை கப்பலின் ஓர் ஆட்டம் திடீரெனத் தூக்கி ஒரு மூலையில் வீசியது. கொள்ளைக்காரர்கள் அந்தப் பயங்கர இரவில், இருளில், அந்தச் சூறாவளியின் அலறலில், அலைகளின் எழுச்சியில், தாங்கள் எத்தனை சிறந்த மாலுமிகள் என்பதைக் காட்டிக் கொண்டார்கள். சுழன்று சுழன்றடித்த சூறாவளியில் தத்தளித்த மரக்கலத்துக்குள் பெரும் அலைகள் திடீரெனப் பிரளயவர்ஷம்போல் நீரை வீசியதால் தளத்திலிருந்த எல்லோரும் பரிபூரணமாக நனைந்து போனதன்றி, அடிமைகளும் கொள்ளைக்காரர்களும் சிதறிச் சிதறி விழுந்ததால், யார் அடிமை, யார் கொள்ளைக்காரன் என்ற வித்தியாசமின்றிக் கலந்தும் போனார்கள். இயற்கையின் அந்தக் கர்ஜனைக்கும் ஆத்திரத்துக்கும் முன்னால் அந்தச் செயற்கை எதிரிகள் ஒருவருக்கொருவர் பிடித்துச் சமாளித்து உதவியும் செய்து கொண்டார்கள்.

அந்தப் பயங்கர நிலையில் கொள்ளையர் தலைவன் நிர்ப்பயமாகத் தளத்தின் பல முனைகளுக்கும் சென்று கப்பலைச் செலுத்தும் முறைகளைச் சொல்லி உத்தரவுகளைக் கன வேகத்தில் பிறப்பித்தான். மிகச் சாமர்த்தியமாக நீர் வேகத்தில் கப்பலைத் துடுப்புகளால் நிலையாக நிற்கச் செய்தும், அலைகள் எழுந்த சமயங்களில் மேலெழுந்த கப்பலை அவற்றின் வேகத்தில் கலங்கரை விளக்கத்தை நோக்கி ஓடவிட்டும், சுக்கானைப் பிடித்துக் கரையின் மலைப் பகுதியைக் கப்பல் அணுகாமல் தடுத்தும் மிகச் சாமர்த்தியமாகக் கப்பலைச் செலுத்தினான் தலைவன். கொள்ளையர் மரக்கலம் இப்படித தத்தளித்தும் திடீரென நின்றும், இருந்தாற்

போலிருந்து திடீரெனக் கரையை நோக்கி வெகு வேகமாகப் பாய்ந்தும் சுமார் அரை ஜாமத்துக்கு மேல் சென்றது. அந்த அரை ஜாமத்தில் தளத்தில் வந்து தண்ணீரைக் கொட்டிய அலைகளால் பெரும் நரக வேதனையை அனுபவித்த அடிமைகள் கொள்ளைத் தலைவனின் உத்திரவுப்படி தளத்தில் தேங்கிய நீரை மரப்படிகளில் வாரி வாரி கடலுக்குள் கொட்டினார்கள். இப்படி ஆடி, அசைந்து, நடுங்கி, முக்கால் வாசிப் புரண்டு, நீரை உறிஞ்சி உமிழ்ந்து சென்ற அந்தக் கொள்ளையர் மரக்கலத்தின் போக்கு திடீரென சற்று சாந்தப்பட்டது. அலைகளின் உக்கிரமும் தணிந்தது. "யாரும் பேச வேண்டாம். எந்தச் சத்தமும் கூடாது" என்று உத்திரவிட்ட கொள்ளையர் தலைவன், கொள்ளைக்காரரில் ஒருவனை அழைத்து நங்கூரம் பாய்ச்ச உத்தரவிட்டான். வேகமாக முதலைக் கொழுப்புத் தடவியதால் நீர் ஒட்டாத பெரும் கயிறுகளில் பிணைக்கப்பட்ட இரும்புச் சலாகைகள் நீருக்குள் இறக்கி விடப்பட்டதும் திடப்பட்டுக் கப்பல் நின்றதும் தலைவன், இளஞ்செழியனையும் கொள்ளைக்காரர்களில் முக்கியஸ்தர்களையும் தன் அறைக்கு அருகில் வரவழைத்து, தளத்தின் மேல் நின்ற வண்ணம் கூறினான்: "சோழர் படைகளின் உப தலைவனான இந்தத் தமிழன் இந்தச் சாம்பிராணி நாட்டின் மர்மங்களை நன்றாக அறிந்திருக்கிறான். அவனை நன்றாக விசாரித்த பின்பே இந்தத் துணிகரத் திட்டத்துக்கு நான் ஒப்புக்கொண்டேன். திட்டம் வெற்றியடைந்து கானாவின் துறைமுகத்திலிருக்கும் சாம்பிராணிப் பொதிகளையும் பொக்கிஷத்தையும் நாம் கைப்பற்றினால், நம்மைவிடச் செல்வந்தர்கள் இந்த எரித்திரியக் கடற் பிராந்தியத்தில் யாருமே இருக்க மாட்டார்கள். அந்தச் செல்வத்தைக் கொண்டு அரேபியாவிலுள்ள யவன அழகிகளைக் கூட விலை கொடுத்து வாங்கலாம். பணத்தை மண்ணைப்போல் வாரி இறைக்கலாம். மது, பெண், ஆடை அத்தனை சுகத்தையும் எல்லையின்றி அடையலாம். ஆனால் திட்டம் தோல்வி

யடைந்தால் நீங்களும் நானும் இலி-ஆஸுவின் அடிமைகள். அங்கு கிடைப்பது என்னவென்று உங்களுக்குத் தெரியும்..."

இப்படிச் சொல்லிச் சற்றே பேச்சைத் தலைவன் நிறுத்தியதும் கொள்ளைக்காரர்கள் சற்று நேரம் மௌனம் சாதித்தார்கள். இலி-ஆஸுவின் பெயரைக் கேட்டதுமே நடுங்கிய ஒரு கொள்ளைக்காரன் மட்டும் வினவினான், "திட்டம் வெற்றியடையுமென்பது என்ன நிச்சயம்?" என்று.

"நிச்சயம் எதிலுமில்லை. இந்தக் கப்பல் இந்த இடத்துக்கு வருமென்பது சற்று முன்பு நிச்சயமாயிருந்ததா?"

"இல்லை."

"அப்படித்தான் இதுவும்."

"இந்தத் தமிழன் பேச்சைக் கேட்டு எதற்காக இந்த ஆபத்தில் இறங்கவேண்டும்?"

"பணம் இருப்பதால்?"

"அது மட்டுமல்ல" என்று இடையே சம்பாஷணையில் புகுந்தான் இளஞ்செழியன்.

"அதுமட்டுமல்லவென்றால் வேறு என்ன இருக்கிறது?" என்று ஒரு கொள்ளைக்காரன் சந்தேகத்துடன் கேட்டான்.

"நீங்கள் தப்புவதற்கு வழியுமிருக்கிறது" என்று இளஞ் செழியன் சுட்டிக் காட்டினான்.

"தப்புவதற்கு வழியா!" ஆச்சரியத்துடனும் ஓரளவு திருப்தியுடனும் எழுந்தன இரண்டு மூன்று குரல்கள்.

இளஞ்செழியன் தன் திட்டத்தைச் சற்று விளக்கியே சொல்லத் தொடங்கினான். "ஐந்து ஸ்டேடியாக்கள் தூரத்தி லேயே கப்பல் நின்றிருக்கிறது. துறைமுகத்துக்கும் நீங்கள் யாரும் வரப்போவதில்லை. நானும் மற்ற அடிமைகளுந் தான் செல்லப் போகிறோம். இலி-ஆஸுவின் காவலரிடம் நாங்கள் சிக்கிக் கொண்டால் உடனே நங்கூரத்தை எழுப்பிக் கொண்டு நீங்கள் ஜலசந்தியின் நீர் வேகத்தில் மரக்கலத்தைச் செலுத்தி விடலாம். சாம்பிராணித் தோட்டங்களில் நாங்கள் தான் கசை யடிப்பட்டு அடிமை வேலை செய்வோம்" என்று விளக்கிய

இளஞ்செழியனை நோக்கி மற்றொரு கொள்ளைக்காரன் கேட்டான்: "நீங்கள் துறைமுகக் காவலரிடம் அகப்பட்டுக் கொண்டீர்களா அல்லவா என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அதோ பார்!" என்று எதிரேயிருந்த துறைமுகத்தின் கலங்கரை விளக்கத்தையும் மற்ற விளக்குகளையும் பந்தங் களையும் காட்டிய இளஞ்செழியன், "கப்பலிலிருந்து இறங்கி நீந்திச் செல்லும் நாங்கள் எப்படியும் அந்த விளக்குகளுக்குள் நுழைந்துதானாக வேண்டும். அப்படி நுழைந்தால் காவற் காரர் எங்களை எதிர்ப்பதையும் பிடிப்பதையும் இங்கிருந்தே நீங்கள் காணலாம். வெளிச்சத்திலிருப்பது உங்களுக்குத் தெரியும். விளக்குகளை அணைத்துவிட்டு வெளிச்சத்துக்கு அப்பால் இருட்டில் நிற்கும் இந்த மரக்கலத்திலிருக்கும் உங்களை அங்கிருப்பவர்கள் பார்க்கமுடியாது. ஆகவே, நாங்கள் அகப்பட்டுவிட்டால் நீங்கள் கப்பலைச் செலுத்திக் கொண்டு போய்விடலாம். இல்லையேல் பொதி மூட்டை களை ஏற்ற என் அடையாளம் உங்களுக்குக் கிடைக்கும்" என்று விளக்கினான் இளஞ்செழியன்.

"என்ன அடையாளம்?" என்று கேட்டான் கொள்ளையர் தலைவன்.

"அதோ அந்தப் பாறையிலிருந்து இருமுறை பந்தத்தை அசைக்கின்றேன். உடனே நீங்கள் படகுகளை மிதக்கவிட்டுக் கொள்ளையர்களுடன் வாருங்கள்" என்று பதில் கூறிய இளஞ் செழியன், ஹிப்பலாஸை அழைத்துக் கொள்ளைக்காரர் எதிரில் கூறினான்: "ஹிப்பலாஸ்! மற்ற அடிமைகளில் திறனுடையவர்களாக ஐம்பது பேரைப் பொறுக்கிக் கொள். இங்கிருந்து நம் கானா துறைமுகத்தின் இடப்பக்கக் கரையில் இருளடித்த இடத்துக்கு நீந்திச் செல்ல வேண்டும். ஒவ்வொருவனும் ஒரு வாளை வாயில் கௌவிக் கொண்டும், ஒரு சிறு கட்டாரியை இடையில் செருகிக் கொண்டும் நீந்தட்டும். கரையை அடைந்ததும் நான் அந்தத் துறைமுக அதிகாரி இருக்கும் மாளிகைக்குள் நுழைய வழி கண்டு

பிடிக்கிறேன். அதிகாரியை நித்திரையில் பிடித்துவிட்டால் மற்றவர்களைக் கொல்வதும் ஏமாற்றுவதும் எளிது. இதில் ஆபத்து இருக்கிறது. ஆபத்தை வெற்றி கொண்டால் சம்பத்தும் இருக்கிறது. யவன நாட்டு அழகிகளை அடையலாம், ஆயுள் பூராவும் ஆசைப்பட்ட பொருளை வாங்கலாம். அடிமைத் தளையும் நீங்கும். நமது தலைவர் நமக்குச் சகல வசதிகளையும் அளிப்பார். இல்லையேல் உங்களைக் கொண்டு கார்டாபி முனையில் விற்பார். அரேபியாவில் அடிமைகளாகக் கசை யடிப்படலாம். அப்படிச் செய்யாமல் தலைவர் நமக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளிக்கிறார். உம், புறப்படுங்கள். தலைவரின் நல்லெண்ணத்துக்கும் அவர் கூட்டத்தில் நம்மையும் சேர்த்துக் கொள்ள அவர் ஒப்புக் கொண்டதற்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டவர்கள்."

ஹிப்பலாஸ் பதிலேதும் சொல்லத் தெரியாமல் விழித்தாலும், அந்தச் சமயத்தில் தனது நகைச்சுவையை மட்டும் விட்டுக் கொடுக்காமல், "இந்தக் கூட்டத்தில் சேரு வதற்குப் படைத் தலைவர் பாக்கியம் செய்திருக்க வேண்டும்" என்று கூறிவிட்டுப் படைத் தலைவன் உத்தரவுகளை நிறைவேற்றச் சென்றான். இளஞ்செழியன் ஹிப்பலாஸிடம் கூறிய மொழிகளால் பெரிதும் திருப்தியடைந்த தலைவன், இளஞ்செழியன் சொற்படி நடக்கும்படி கொள்ளைக்காரர் களுக்கு உத்தரவிட்டான். அதன் விளைவாக அவர்களின் ஆயுதங்களையும் வாங்கித் தன்னுடன் வரத் தயாரான ஐம்பது அடிமைகளுக்கு வழங்கிய இளஞ்செழியன் அவர்களிடம் மட்டும் திட்டத்தை முழுதும் விளக்காமல், நான் மட்டும் முன்னால், "நீந்திச் செல்கிறேன். நீங்கள் பின்னால் தொடர்ந்து வாருங்கள்" என்று கூறிவிட்டு, வாயில் கத்தியைக் கௌவிக் கொண்டு கப்பலின் நூலேணியில் இறங்கி நீருக்குள் அமிழ்ந்தான். கப்பலின் நாலா பக்கங்களிலும் தொங்க விடப்பட்ட பல ஏணிகள் மூலம் திடசாலிகளான மற்ற அடிமைகளும் ஹிப்பலாஸும் தண்ணீரில் இறங்கினார்கள்.

மூன்றாம் ஜாமம் பாதிக்குமேல் நகர்ந்து விட்டதால் கடற் காற்று, அலை இவற்றின் சப்தத்தைத் தவிர மற்றச் சப்தம்

எதுவுமே அந்தப் பிராந்தியத்தில் இல்லாததாலும் கானா பிரதேசத்தின் மலைகள் பெரும் பிசாசுகளைப் போல இருளில் காட்சியளித்ததாலும் உள்ளத்தை உலுக்கும் கிலி தரும் சூழ் நிலையே எங்கும் பரவிக் கிடந்தது. அந்தச் சூழ்நிலையில் எந்த வித சத்தமும் செய்யாமல் தமிழகத்தின் பரதவரைப் போல் கரையின் இருட்டடித்த இடப் பகுதியிலிருந்த மலைப் பிராந்தியத்தை நோக்கி நீந்திச் சென்ற இளஞ்செழியனைப் பின்பற்றி ஹிப்பலாஸ் சென்றான். அவனுக்குப் பின்னால் முதலில் அடிமை வர்த்தகனின் ஆட்களாயிருந்து பிறகு கொள்ளைக்காரன் அடிமைகளாகிவிட்ட ஐம்பது பேரும் நீந்திச் சென்றனர். இப்படிச் சுமார் இருபது நிமிஷங்களுக்கு மேல் நீந்திச் சென்ற பின் பெரும் பாறையொன்றைப் பிடித்துக் கொண்டு ஏறி, கானா துறைமுகத்தின் கரையில் காலை வைத்த இளஞ்செழியன், ஹிப்பலாஸ் கரைக்கு வரும் வரையில் காத்திருந்து, அவன் கரையை அடைந்ததும், "ஹிப்பலாஸ்! அந்த ஐம்பது பேரும் வருவதற்குள் இதைக் கேட்டுக் கொள்" என்று கூறி அவன் காதுக்குள் ஏதோ மந்திரம் ஓதுவது போல கூறினான்.

"இது நடக்குமா படைத் தலைவரே!" என்று அச்சத்துடன் வினவினான் ஹிப்பலாஸ்.

"நடக்க வேண்டும்" என்ற படைத் தலைவன் மேலும் கூறினான். "இது ஒரே வழிதான் இருக்கிறது ஹிப்பலாஸ், அப்படி ஒருவேளை நான் வெற்றியடையாமல் அகப்பட்டுக் கொண்டால் நீயும் இந்த ஐம்பது பேரும் இப்படி இந்த மலைப் பாதை வழியாக அடுத்துள்ள காடுகளில் ஒளிந்து கொள்ளுங் கள். இராக் காலங்களில் வரும் கப்பல்கள் ஏதாவதொன்று உங்களுக்குக் கிடைத்தால் நீங்கள் தப்பலாம். அப்படித் தப்ப வழியிருப்பதாக, தப்பி நமது ஊர் வந்த பல வர்த்தகர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். என்னைப் பற்றிக் கவலைப் படாதே. நான் ஒன்று இன்றிரவு கொல்லப்படுவேன்; அல்லது வெற்றியடைவேன். கொல்லப்பட்டால் நீ தமிழகம் சென்று பூவழகியிடம் தெரிவி, அவளைக் கடைசி வரையில் நான்

மறக்கவில்லையென்று..." என்று கூறி, சொந்த ஊரையும் தன் இதயத்தில் அழியா இடம் பெற்ற அந்தக் கற்புக் கன்னியையும் நினைத்துப் பெருமூச்சு விட்டான்.

பூவழகியை நினைத்ததும் உணர்ச்சி மிகுதியால் உள்ளம் நெகிழ்ந்த படைத் தலைவனைப் பார்த்த ஹிப்பலாஸ், "ஏன் தலைவரே; நாம் எல்லோருமே காடுகள் வழியாகத் தப்பி விட்டால் என்ன?" என்று வினவினான்.

"முடியாது ஹிப்பலாஸ்! இன்னும் சில வினாடிக்குள் நம்மில் யாராவது கலங்கரை விளக்கத்தின் வெளிச்சத்தில் தலை காட்டவில்லையென்றால் கொள்ளைத் தலைவன் சந்தேகப்படுவான். அவனுக்கும் இந்தக் காட்டு வழிகள் தெரியும். கரைக்கருகே நாளை இரவு அவன் மரக்கலம்தான் உலவும். தவிர நாம் தமிழகம் சீக்கிரம் திரும்ப வேண்டுமானால் வழி அதுவல்ல" என்ற இளஞ்செழியன், மற்ற அடிமைகளை அழைத்து வரும் பொறுப்பை ஹிப்பலாஸுக்கு அளித்து விட்டு, "ஹிப்பலாஸ்! நான் போகிறேன். நான் வரும்வரை அதோ அந்தப் பாறைகளுக்கிடையில் மற்றவர்களுடன் பதுங்கியிரு. இன்று நாம் வெற்றி கொண்டால்..." என்று வாசகத்தை முடிக்காமல் விட்டு, நனைந்த உடையுடனும் உருவிய வாளுனுடனும் தான் கண்டறியாத கானா துறைமுகத்தின் எல்லையை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

படைத் தலைவன் போவதைப் பார்த்துக்கொண்டே நின்ற ஹிப்பலாஸ் சோகப் பெருமூச்சு விட்டு, 'வெற்றி கொண்டால் விடுதலை, விடுதலை. இல்லையேல் சாவு சாவு. அதுவும் ஒருவித விடுதலைதான்' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். சற்று நேரத்திற்கெல்லாம் கரையை அடைந்த மற்ற அடிமைகளை அழைத்துக் கொண்டு இருளடைந்த மலைப் பாறைகள் வழியே சென்ற ஹிப்பலாஸ், கலங்கரை விளக்கத்தின் ஒளியில் படாமல் இருட்டடித்திருந்த மலைச் சரிவுக்கு வந்ததும் தன் துணைவர்களுடன் பதுங்கிக் கொண்டு துறைமுகத்தின் பெருவீடு இருந்த இடத்தைக் கவனித்தான். அதன் வாயிலில் காவலர் இருவர் நடமாடிக்

கொண்டிருந்தார்கள். அடுத்த சில நிமிஷங்களில் அவர்களை நோக்கி மிகச் சாவதானமாகச் சென்ற இளஞ்செழியன் உருவத்தைத் தூரத்திலிருந்தே பந்தங்களின் வெளிச்சத்தில் கண்ட ஹிப்பலாஸ் அடுத்த வினாடி என்ன நேரிடுமோ என்ற அச்சத்தால் திக்பிரமை பிடித்து நின்றான். அந்தத் திக் பிரமையை ஆயிரம் மடங்கு உயர்த்தும் சம்பவமொன்று கண்ணிமைக்கும் நேரத்தில் நிகழ்ந்தது.

67. இலி–ஆஸு

'இன்று கொல்லப்படுவேன், அல்லது வெற்றி யடைவேன், கொல்லப்பட்டால் பூவழகியிடம் சொல்' என்று உணர்ச்சி ததும்பக் கூறிவிட்டு, கானாவின் துறைமுகக் கோட்டைவாயிலை நோக்கி மிக அலட்சியமாக நடந்து சென்ற சோழர் படை உபதலைவனை நிழலடித்த மலைப் பாறைகளின் மறைவில் பதுங்கி நின்று பார்த்துக் கொண்டி ருந்த ஹிப்பலாஸின் இருதயம் பெரும் திகிலால் கனவேகத்தில் ஓடிக்கொண்டிருந்ததன்றி, அவன் புத்தியிலும் பலதரப்பட்ட எண்ணங்கள் எழுந்து ஊசலாடத் தொடங்கின. அலைகள் மோதிப் பாறைகளைக் கூழாங் கற்களாகவும் மணலாகவும் மாற்றிவிட்டதால் ஓரளவு படகுகள் கரையை அடைய வசதி ஏற்பட்டிருந்த அந்தக் கானா துறைமுகத்தின் கடற் பகுதியி லிருந்து கோட்டைப் பிராந்தியத்துக்குச் சென்ற வழி அதிக விசாலமாயிருந்தாலும், வீடுகள் நிறைந்த கோட்டைப் பகுதி மலையுச்சியிலிருந்தபடியாலும் கானா கோட்டைக்கு இயற்கையின் பாதுகாப்புப் பலமாயிருக்கிறதென்பதைக் கண்டுகொண்ட ஹிப்பலாஸ், 'இந்தக் கோட்டையிலிருப்பவர் களுக்குத் தெரியாமல் இதை அணுகுவதும் பெரும் கஷ்டமா யிற்றே. அப்படியிருக்க படைத் தலைவர் இதைக் கைப்பற்றி இதிலுள்ள சாம்பிராணியையும் எடுத்துக் கொள்ளலாமென உறுதி கூறியிருக்கிறாரே, இது எப்படி முடியும்?' என்று

தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். 'ஒருவேளை ஆண்டவன் கருணையால் திட்டம் நிறைவேறினால் நல்லது தான். நிறைவேறாவிட்டால் தமிழகம் தலைசிறந்த ஒரு படைத் தலைவரை இழக்கும். பூவழகி தன் இதயக் கடவுளை இழப்பாள். ஏன் யவன ராணியும் மனமுடைந்து போவாள். இத்தனைக்கும் காரணமான செய்தியைத் தமிழகத்துக்குக் கொண்டு செல்லும் பொறுப்பை என் தலையிலா சுமத்த வேண்டும் இவர்?' என்றும் எண்ணங்களை ஓடவிட்ட ஹிப்பலாஸ், கோட்டைப் பகுதியை மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு நின்றான்.

கோட்டையினுள்ளே வீடுகள் பல நிறைந்திருந்ததை விளக்குகளின் பிரகாசத்திலிருந்தே தெரிந்து கொண்ட ஹிப்பலாஸ், குறுகலான கோட்டை வாசலையும் அந்த வாசலைப் பாதுகாத்து நின்ற இரண்டே காவலரையும் கண்டு, 'காவல் ஏன் இத்தனை குறைவாயிருக்கிறது?' என்று முதலில் நினைத்தானானாலும் சற்று யோசித்தபின் உண்மை உதய மாகவே, 'ஆம் ஆம். இந்தக் குறுகிய வாயிலுக்கு இரண்டு காவலர்கள் போதும். கடற்கரையிலிருந்து கோட்டைக்குச் செல்லும் வழியும் குறுகல்தானே. அதுவும் கோட்டை வாயில் மலை உச்சியிலிருப்பதால் கடற்கரையிலிருந்து யார் வந்தாலும் தூரத்திலிருந்தே தெரியும். உடனே காவலர் எச்சரிக்கைக் குரல் கொடுத்தால் கோட்டைக்குள்ளிருக்கும் வீரர்கள் வெளியே வந்து வழியைப் பாதுகாக்கலாம்' என்று சொல்லிக் கொண்ட ஹிப்பலாஸ், மீண்டும் கோட்டைக்குச் செல்லும் வழியில் கண்களைச் செலுத்தியதும் திடீரெனத் திக்பிரமை கொண்டான். "அடடே! படைத் தலைவர் ஏன் இப்படித் தள்ளாடுகிறார்? அட கடவுளே! தொலைந்தது! திட்டம் தொலைந்தது! படைத் தலைவர் தொலைந்தார். அனைவரும் தொலைந்தோம்!" என்று நாக்குக் குழறக் கூவினான். நடந்தது அவன் பின்னா லிருந்து பார்த்த மற்ற ஐம்பது அடிமைகளும் மிதமிஞ்சிய பயத்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டனர்.

ஹிப்பலாஸை விட்டுச் சென்றதும் கோட்டை வாயிலை நோக்கி அலட்சிய நடைபோட்டுச் சென்ற இளஞ்செழியன், கோட்டை விளக்குகளின் வெளிச்சத்துக்குள் நுழைந்த மறு வினாடியில் கையிலிருந்த கத்தியை மெள்ளக் கீழிருந்த மணலில் துடைத்ததையும், பிறகு அதை ஊன்றிக் கொண்டு தள்ளாடித் தள்ளாடிக் கோட்டை வாயிலை நோக்கிச் சென்றதையும் கண்ட ஹிப்பலாஸ், ஐந்து ஸ்டேடியா தூரம் நீந்த நேர்ந்ததால் படைத் தலைவர் கைகால்கள் சளைத்து விட்டன என்று தீர்மானித்தான். அப்படித் தள்ளாடிச் சென்ற படைத் தலைவனைத் தூரத்திலிருந்தே விளக்கு வெளிச்சத்தில் கவனித்த காவலர் திடீரெனக் கோட்டையை நோக்கிக் குரல் கொடுத்ததையும், அதைக் கேட்டதும் மற்றும் பத்துக் காவலர் கோட்டைக்குள்ளிருந்து வந்துவிட்டதையும் கண்ட ஹிப்பலாஸ், அடுத்து என்ன நேரிடுமோ என்று அஞ்சிக் கொண்டிருக்கையிலேயே, கோட்டை வாயிலைத் தள்ளாடித் தள்ளாடி அடைந்த இளஞ்செழியன் கால்கள் அடியோடு துவண்டு விட்டதையும், அவன் உடலும் புயலில் அகப்பட்ட கொடிபோல் ஆடத் துவங்கிவிட்டதையும் பார்த்து ஆயாசப் பெருமூச்செறிந்தான். அடுத்த வினாடி அம்பினாலடிபட்ட பெரிய இராஜாளிபோல் இளஞ்செழியன் திடீரெனத் தரையில் சாய்ந்துவிட்டதையும், கானாவின் காவலர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டுவிட்டதையும் பார்த்த ஹிப்பலாஸும் மற்ற அடிமைகளும் படைத் தலைவன் கதி அதோகதியாகி விட்டதை உணர்ந்து கொண்டார்கள். விழுந்த படைத் தலைவனைச் சில வீரர்கள் தூக்கிக் கொண்டு கோட்டைக்குள் செல்வது கண்ணுக்குத் தெரிந்ததும் அடிமைகளிற் சிலர் திரும்பவும் நீரில் நீந்திச் சென்று கொள்ளை மரக்கலத்தை அடைந்துவிடத் தீர்மானித்தார்கள். அப்படித் தீர்மானித்து, கடல் நீரை நோக்கி நகர முற்பட்டவர்களை ஹிப்பலாஸின் ஆணைக்குரல் தடுத்தது.

"படைத் தலைவரிட்ட ஆணை உங்கள் காதில் விழ வில்லையா?" என்று கடுமையாகக் கேட்டான் ஹிப்பலாஸ்.

"தனிப்பட்ட ஆணை ஏதும் இல்லை. உங்கள் சொற்படி கேட்கத்தான் உத்தரவு" என்றான் அடிமைகளில் ஒருவன்.

"தாம் திரும்பி வரும்வரையில் இங்கேயே இருக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார் எனக்கு" என்றான் ஹிப்பலாஸ் கண்டிப்பான குரலில்.

"தாங்கள் இருப்பதைப்பற்றி எங்களுக்குச் சிறிதும் ஆட்சேபணையில்லை" என்றான் ஒரு அடிமை.

"தலைவர் திரும்பி வருவாரென்று தோன்றவில்லையே" என்றான் இன்னொரு அடிமை.

"நான் படைத் தலைவருடன் ஆயுள் முழுவதும் சேவை செய்தவன்" என்று கூறிய ஹிப்பலாஸ், எத்தனையோ அபாய நிலைமைகளைத் தலைவர் சமாளித்திருப்பதைப் பற்றியும் குறிப்பிட்டான்.

"இனித் தாங்கள் சேவை செய்ய அவசியமில்லை" என்றான் முதலில் பேசிய அடிமை.

"ஏன்?"

"ஆயுள் முழுவதும்தானே சேவை செய்வீர்கள்?"

"ஆமாம்."

"இன்றுடன் அவர் ஆயுள் முடிந்தது."

இதைக் கேட்டதும் மற்ற அடிமைகள் நகைத்தார்கள். "நகைப்பதற்கு இது சமயமல்ல" என்று கோபக் குரல் கொடுத்த ஹிப்பலாஸ் அவர்களை நோக்கித் திரும்பி, தன் கருவிழிகளை அவர்கள்மீது நாட்டினான்.

"ஆமாம்; அழுவதற்குத்தான் சமயம். படைத் தலைவர் போய்விட்டாரல்லவா?" என்று மறுபடியும் நகைத்த முதல் அடிமை ஹிப்பலாஸை நோக்கிச் சொன்னான். "நீங்களும் வாருங்கள் போகலாம். இனி இங்கு வேலை இல்லை."

"தலைவரைச் சந்திக்காமல் நான் வரமாட்டேன்." ஹிப்பலாஸ் பதில் திட்டமாக வெளிவந்தது.

"தலைவரைச் சந்திக்கும் இடம் இதுவல்ல" என்றான் அடிமை.

"வேறு எது?"

"ஒன்று விண்ணுலகம், இன்னொன்று இலி-ஆஸுவின் சாம்பிராணிக் காடு. இரண்டில் எதையும் அடைய நாங்கள் விரும்பவில்லை."

ஹிப்பலாஸின் பயங்கரத் தோற்றத்தையோ அதை விடப் பயங்கரமாக உருண்ட அவன் விழிகளையோ சிறிதும் லட்சியம் செய்யாமல் அந்த அடிமை பேசியதை மற்ற மரக்கல மாலுமிகள், "ஆம் ஆம். நாங்கள் விரும்பவில்லை" என்று ஆமோதித்தார்கள். சிலர், "வாருங்கள் போகலாம்," என்று பாறைகளிலிருந்து இறங்கவும் முற்பட்டார்கள். ஹிப்பலாஸ் சரேலென்று மேற்பாறையிலிருந்து கீழிருந்த பாறைமீது குதித்து, தன் வாளை உருவிக் கொண்டு அவர்களை மறித்து நின்றான். "உங்களில் எவனாவது ஒருவன் நீருக்குள் இறங்க முற்பட்டாலும் சரி அவன் பிணமாகத்தான் மிதக்க முடியும். என் படைத் தலைவர் என்ன செய்ய வேண்டுமென்பதைத் திட்டமாகக் கூறியிருக்கிறார். ஒன்று அவர் வரும் வரையில் நாம் காத்திருக்க வேண்டும். அல்லது அவரைத் தூக்கிச் சென்ற பிறகு கோட்டையில் ஏதாவது நிகழ்ந்து கானாவின் வீரர்கள் வெளியே தோன்றும் வரையில் இங்கிருக்க வேண்டும். உங்களுக்கு அவர் வந்தாலும் விடுதலை, வராவிட்டாலும் விடுதலை. வராவிட்டாலும் உங்களை இங்கிருந்தே காடுகள் பக்கமாகத் தப்பும்படி உத்தரவிட்டிருக்கிறார். ஆகவே தற் சமயம் இங்கிருந்து யாரும் நகருவதை நான் அனுமதிக்க மாட்டேன்" என்று கூறியதன்றி, "இந்த இடத்தில் நாம் பேசினாலோ அல்லது நீங்கள் என் வாளுடன் உங்கள் வாள்களை மோதினாலோ கானாவின் வீரர்கள் கண்டு கொள்வார்கள். பிறகு நாம் கண்டிப்பாய் அழிக்கப்படுவோம். அப்படி அழிக்கப்படாமல் கொள்ளை மரக்கலத்தை அடைந்தால் அங்குள்ள மரக்கலத் தலைவன் உங்களனைவரையும் கொல்லத் தயங்கமாட்டான். நீங்கள் இங்கு சத்தத்தைக் கிளப்பி, கானாவின் காவலரை எழுப்பியதற்கே அவன் உங்களை ஒழித்து விடுவான். தவிர படைத் தலைவரின்

திட்டத்தை உடைத்ததற்கும் உங்களைப் பொறுப்பாளியாக்கு வான். அவன் சீற்றம் எத்தன்மையது என்பதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை."

ஹிப்பலாஸ் நின்ற தோரணையைக் கண்டோ கையில் உருவிப் பிடிக்கப்பட்ட அவன் வாளைக் கண்டோ அடிமைகள் பயப்படவில்லை என்றாலும், அவன் பேச்சில் விளங்கிய பயங்கர விளைவுகள் அவர்கள் உள்ளத்தை ஒரு கலக்குக் கலக்கவே செய்தன. ஆகவே அவர்கள் சில வினாடிகள் ஏதோ முணுமுணுத்தனர். பிறகு மௌனமாக மலைப் பாறைகளில் சென்று மீண்டும் பதுங்கிப் படுத்துக் கொண்டார்கள். ஹிப்பலாஸும் அதற்கு மேல் ஏதும் பேசாமல் பழையபடி மலைப் பாறைக்குச் சென்று பதுங்கிக் கொண்டான். வினாடிகள் நிமிடமாயின. நிமிடங்கள் மெல்ல மெல்ல ஜாமத்தின் பகுதிகளை ஓட்டிக் கொண்டிருந்தன. மலைப் பாறை மறைவிலிருந்து நூற்றிரண்டு கண்கள் கானாவின் துறைமுக வாயிலில் பதிந்து கிடந்தன. அந்தக் கண்களைத் தாங்கிய ஐம்பத்தொன்று தேகங்களிலிருந்த இதயங்கள் படபடத்துக் கொண்டிருந்தன. எந்த நிமிடத்திலும் எதுவும் நேரலாமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அந்த ஐம்பத்தொரு பேர் மட்டுமல்ல கொள்ளை மரக்கலத்திலிருந்து கொள்ளையர் தலைவனும் அவன் சகாக்களும் கூட கானாவின் கோட்டை வாயிலையே நோக்கிக் கொண்டிருந்தனர். கரையை நோக்கி விரைவதற்காக மரக்கலத்திலிருந்து இறக்கப்பட்ட சிறு படகுகளும் நீரில் ஆடிக்கொண்டு நின்றன.

நாழிகைக் கணக்கில் அமைதியே கானா துறைமுகத்தின் பிராந்தியத்தில் நிலவிக் கிடந்தது. கோட்டைக் காவலர் இருமுறை மாற்றப்பட்டும்கூட எந்தவித நிகழ்ச்சியும் ஏற்படவில்லை. மூன்றாம் ஜாமம் முடிவதற்கு அடையாளமாக அவசியமான விளக்குகளைத் தவிர மற்ற பந்தங்கள் கோட்டைப் பிராந்தியத்தில் அணைக்கப்பட்டதால் இருள் அந்தப் பிராந்தியத்தில் நன்றாகக் கவிந்து கொண்டது. கோட்டைக்குள்ளிருந்த விடுதிகளின் விளக்குகளும் மெள்ள

மெள்ள அணைந்ததைக் கண்ட அடிமைகளும் கொள்ளைக்காரர்களும், 'சரி, இரவுக் கேளிக்கைகளுக்குப் பின்பு வழக்கம் போல் ஊர் அடங்குகிறது' என்று தீர்மானித்தனர். 'இளஞ்செழியன் தப்பி ஏதாவது செய்வதானால் அதற்கான சமயம் நெருங்கிவிட்டது' என்பதை ஹிப்பலாஸ்கூட உணர்ந்ததால், என்ன நேரிடுமோ என்ற திகிலுடன் கோட்டை வாயிலைப் பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் கோட்டைக் காவலர் கண்களில் படாமல் இளஞ்செழியன் கோட்டையிலிருந்து பதுங்கிப் பதுங்கி வெளிவந்ததையும் முதலிலிருந்த தள்ளாட்டம் அவனிடம் சற்றும் இல்லாததையும் கவனித்த ஹிப்பலாஸ் மட்டுமன்றி அடிமைகள்கூடச் சொல்லவொண்ணா வியப்பை எய்தினர். பதுங்கிப் பதுங்கி மலைப்பாறை ஓரமாகச் சென்ற இளஞ்செழியன் ஒரு பெரும் பாறைமேல் நின்றதையும், பிறகு குனிந்து நெருப்புக் கற்களைத் தட்டித் தீயுண்டாக்கி ஒரு பந்தத்தைக் கொளுத்தி இருமுறை கப்பலை நோக்கி ஆட்டியதையும் கண்ட ஹிப்பலாஸின் ஆச்சரியம் எல்லை கடந்தது. ஆச்சரியம் எல்லை கடந்தாலும் ஆச்சரியத்தில் திளைப்பதற்கு அது சமயமல்லவென்று தீர்மானித்த ஹிப்பலாஸ் சொந்த உணர்ச்சிகளை ஒதுக்கித் தள்ளி, சண்டைக்குத் தயாரானதன்றி மற்ற அடிமைகளையும் வாட்களை உருவிக்கொள்ள உத்தரவிட்டான். அதே விநாடியில் விடு விடு என்று நூலேணிகள் மூலம் கப்பலிலிருந்து படகுகளில் குதித்த கொள்ளைக்காரர்கள் படகுகளை வெகுவேகமாகச் செலுத்திக்கொண்டு கரையை நோக்கி விரைந்தனர்.

காரிருளில் கனவேகமாக வந்து கரையை அடைந்த படகுகளிலிருந்த கொள்ளைக்காரர்கள் தரையில் குதித்து, பாறைகளிலிருந்த தளைகளில் படகுகளைப் பிணைத்ததும், வாட்களை, உருவிக்கொண்டு தொலைவிலிருந்த இளஞ்செழியன் பந்தத்தை ஆட்டிச் சுட்டிக் காட்டிய வழியில் சிறிதும் சத்தமின்றிக் கோட்டைப் பகுதியின் நாலா பக்கங்களிலும் படர்ந்து பாறைகளில் தாவியும் சமவெளியில் குனிந்து குனிந்து ஓடியும் கோட்டைவாயிலை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

பாறையிலிருந்த இளஞ்செழியன் திடீரெனப் பந்தத்தை அணைத்துவிட்டு ஹிப்பலாஸ் இருக்குமிடம் ஓடிவந்து, "ஹிப்பலாஸ்! பேசாமல் என் பின்னால் வா, மற்றவர்களையும் வரச் சொல்" என்று கூறி நேராகக் கோட்டை வழியில் செல்லாமல் பக்கப் பகுதிகளிலிருந்து கரடுமுரடான பாதை வழியாகக்கோட்டையை அடைய முயன்றான்.

கொள்ளைத் தலைவனைப் பின்பற்றிச் சென்ற கொள்ளைக்காரர்களும், இளஞ்செழியனைப் பின்பற்றிச் சென்ற அடிமைகளும் இரு பிரிவாகக் கோட்டை வாயிலை அடைந்ததும், ஹிப்பலாஸையும் அடிமைகளையும் ஏன், கொள்ளைக்காரர்களையும் திகைக்க வைக்கும்படியான மற்றொரு நிகழ்ச்சிநடந்தது. அணைந்த கோட்டை விளக்குகள் வெகுதுரிதமாக ஏற்றப்பட்டதால் திடீரென எரிந்தன. கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில் கோட்டை வாயில் கதவுகள் திறக்கப்பட்டு நூற்றுக்கணக்கான வீரர்கள் கைகளில் பந்தங்களுடனும் உருவிய வாட்களுடனும் வெளியே பாய்ந்து வந்தனர். "திட்டம் குலைந்துவிட்டது. படகுகளுக்குச் செல்லுங்கள்" என்று கூவிய கொள்ளைத் தலைவன் பேச்சைக் கேட்ட அவன் வீரர்கள் படகுகளை அடையத் திரும்பி ஓட முற்பட்டார்கள். ஆனால் படகுகள் பிணைக்கப்பட்டிருந்த இடத்தில் திடீரென பந்தங்கள் ஒளிர்விட்டன. இலி-ஆஸுவின் கவசமணிந்த வீரர்களில் பலர் நீர்க் கரையை யாரும் அணுக முடியாமல் தடுத்து நின்றதைக் கண்டதும், 'மோசம் போய்விட்டோம்' என்று தீர்மானித்த கொள்ளையர் போரிட்டுத் தப்ப முயன்றார்கள். கோட்டை வீரர்கள் ஏற்பாடு கனகச்சிதமாக இருந்ததால் சண்டை துவங்கிய சில நிமிடங்களுக்குள்ளாகக் கொள்ளைக்காரர்கள் பலர் மாண்டனர். மற்றவர் சிறைப்பட்டனர். ஹிப்பலாஸையும் இளஞ்செழியனையும் தவிர மற்றக் கொள்ளைக்காரர்களையும் அடிமைகளையும் சிறைபிடித்துத் தள்ளிக்கொண்டு சென்ற கோட்டைக் காவலரின் தலைவன் போகும்போது இளஞ்செழியனை நோக்கி, "மன்னர் தங்களை மீண்டும்

பார்க்க விரும்புகிறார். சீக்கிரம் செல்லுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றதைக் காதில் வாங்கிக் கொண்ட கொள்ளையர் தலைவனுக்கு அப்பொழுதுதான் ஏதோ பலமான சதி நடந்திருக்கிறது என்பது புலனாயிற்று. அதன் விளைவாகத் தன்னை எரித்து விடுவதுபோல் பார்த்த கொள்ளைத் தலைவனை நோக்கி, "அஞ்சவேண்டாம். நாம் மீண்டும் சந்திப்போம். மன்னர் இலி-ஆஸு கருணைக் கடல்" என்றும் கூறி நகைத்தான் இளஞ்செழியன்.

கோட்டைக் காவலர் தலைவன் பேசிய பேச்சு, அவன் இளஞ்செழியனிடம் நடந்துகொண்ட விந்தையான முறை இவற்றைக் கண்டு ஏதும் புரியாமல் நின்ற ஹிப்பலாஸைப் பார்த்துச் சிரித்த இளஞ்செழியன், "வா ஹிப்பலாஸ்! மன்னர் காத்திருக்கிறார்" என்றான்.

"எந்த மன்னர்?" ஏதும் புரியாமல் வினவினான் ஹிப்பலாஸ்.

"இங்கிருப்பவர் ஒரே மன்னர்தான்?" என்றான் இளஞ்செழியன்.

"ஆமாம். இலி-ஆஸுதான் இங்கு மன்னர்."

"பின் ஏன் சந்தேகம்?"

"அவரையா சந்திக்கப் போகிறீர்கள்?"

"ஆமாம்."

"உங்களுக்குப் பைத்தியம் ஏதாவது உண்டா?"

"இல்லை."

"அப்படியானால் வாருங்கள். இப்பொழுதே ஓடி மலைக்காடுகள் வழியாகத் தப்பி விடுவோம்."

"மலைக் காடுகள் வழியாகப் போவானேன். கோட்டைக்கு இதோ நேர் வழி இருக்கிறது."

இதைக் கேட்ட ஹிப்பலாஸ் சொன்னான்: "பிரபு! இங்கு நடந்துள்ள விஷயங்கள் விசித்திரமாயிருக்கின்றன. எப்படியோ கொள்ளைக்காரர்களை மோசம் செய்து விட்டீர்கள். ஆனால் இலி-ஆஸு கொள்ளைத் தலைவனல்ல. மிகவும் தந்திரசாலி. பயங்கரமான மனிதனென்று கேள்வி.

அவன் வார்த்தையை நம்புவது பிசகென்றுகூட யவனநாட்டில் சொல்வார்கள். காவலர் போய்விட்டார்கள். வீணாகச் சிங்கத்தின் வாயில் தலையை நுழைக்கவேண்டாம்."

இளஞ்செழியன் தன் கையை ஹிப்பலாஸின் தோளில் ஆதரவாக வைத்துக்கொண்டு, "ஹிப்பலாஸ்! அடிமை வர்த்தகர்களிடமிருந்து தப்பினோம். இப்பொழுது கொள்ளைக்காரர்களிடமிருந்து தப்பியிருக்கிறோம். முதன் முதலில் டைபீரியஸின் விஷத் துளிகளிலிருந்து தப்பினேன். பின் உன் உதவியால் சுறாக்களிடமிருந்து மீண்டேன். இத்தனையிலும் ஏதோ மனித சக்தியை மீறிய ஒரு சக்திதான் நமக்குத் துணை நின்றிருக்கின்றது. அந்தச் சக்தி இனி ஏன் கை விடுமென்று நினைக்கிறாய்? தவிர எந்தக் கொடியவனிடமும் ஒரு நல்லகுணமிருக்கும். இலி-ஆஸுவிடமும் ஒரு நல்ல குண மிருக்கிறதென்று நினைக்கிறேன். அப்படியில்லாவிட்டால் அவனை ஏமாற்றவும் வழி இருக்கிறது" என்றான்.

"என்ன வழி படைத் தலைவரே?" என்று கேட்டான் ஹிப்பலாஸ்.

"பணத்தின் வழி" என்று கூறினான் இளஞ்செழியன்.

"பணத்தின் வழியா!"

"ஆம். மேற்கு நாடுகளில் பணத்தாசை அதிகமாயிருக் கிறது. இல்லாவிட்டால் யவனர், எகிப்தியர், அராபியர் இவர்கள் தமிழகம் தேடி ஏன் வருகிறார்கள்? கடலின் கொந்தளிப்பையும் ஆகாயத்தின் சூறாவளியையும் எதிர்த்து கிழக்கு நோக்கி ஏன் ஓடுகிறார்கள்? பணப் பித்துதான் காரணம் ஹிப்பலாஸ். அந்தப் பணப்பித்து நமக்குப் பெரும் பாதுகாப்பு. ஒன்றுக்கும் பயப்படாதே, வா" என்று கூறிய இளஞ்செழியன் ஹிப்பலாஸை அழைத்துக் கொண்டு கோட்டைக்குள் நுழைந்தான். கோட்டை வாயிலைத் தாண்டியதுமே அவர்களை எதிர்கொண்ட காவலனொரு வன் அருகேயிருந்த பெரு மாளிகையொன்றுக்கு அவர்களை அழைத்துச் சென்றான். மாளிகையில் பந்தங்கள் பிரமாதமாக எரிந்து கொண்டிருந்தன. உள்ளிருந்து பாடலும் ஆடலும்

கூச்சலும் சிரிப்பொலியும் வந்துகொண்டிருந்தன. மாளிகை யின் பல கட்டுக் காவல்களைத் தாண்டி இளஞ்செழியனையும் ஹிப்பலாஸையும் அழைத்துச் சென்ற காவலன் மாளிகையின் பெருமண்டபக் கதவுகளை அடைந்ததும் அவர்களை வெளிப்புறத்தில் இருக்கச் செய்துவிட்டுத் தான் மட்டும் உள்ளே சென்றான். அவன் திரும்பி வருவதை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்த இளஞ்செழியன் வாழ்க்கையில், இன்னொரு திருப்பத்தை உண்டாக்கக் கூடிய சம்பவமொன்று திடீரென அந்தக் கதவுக்கருகில் நிகழ்ந்தது. இலி-ஆஸுவைப் பற்றிய நினைப்புக்களில் ஆழ்ந்திருந்த இளஞ்செழியன் கன்னத்தின்மீது திடீரென வந்து விழுந்தது ஒரு புஷ்பச் செண்டு. அது வந்த திக்கை நோக்கித் திரும்பிய இளஞ் செழியன் தூரத்திலிருந்த தூண் மறைவிலிருந்து ஒரு அழகிய பெண் தன்னை அருகில் வரும்படி சைகை செய்வதைக் கண்டான். ஆனால் இருந்த இடத்தைவிட்டு இளஞ்செழியன் நகராததைக் கண்ட அந்தப் பெண் ஒரு வினாடி யோசித்து விட்டுப் பிறகு கனவேகமாக மறைவிடத்தை விட்டு வெளியே வந்து இளஞ்செழியனை அணுகினாள். அவள் அழகிய கருவிழிகள் திருட்டுத்தனமாக ஒரு கணம் அப்புறமும், இப்புறமும் திரும்பின. மறுகணம் அவள் தன் அழகிய உதடுகளை இளஞ்செழியன் காதுக்கருகில் கொண்டு சென்று இப்புறமும் அப்புறமும் பார்த்தவாறு, "அதிகமாகப் பேச நேர மில்லை. மன்னர் உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்டால் அலீமா வேண்டுமென்று சொல்லுங்கள்" என்று கூறினாள். பிறகு விடு விடு எனத் தூண்களிருந்த பக்கம் சென்று மறைந்தாள்.

இந்த விந்தையை ஹிப்பலாஸும் கவனித்தான். ஏற்கெனவே அன்றிரவு நிகழ்ந்த சம்பவங்கள் அவன் மூளையைக் குழப்பியிருந்தன. திடீரென இலி-ஆஸுவின் மாளிகைக்கு வருவது, யாரோ ஒரு பெண் வந்து படைத் தலைவனிடம் பேசுவது, எல்லாம் சேர்ந்ததால் அவன் புத்தி பெரும் குழப்பத்திலிருந்தது. இந்தக் குழப்பத்தில் சில

நிமிடங்களை ஹிப்பலாஸ் செலவிட்டதும் மண்டபக் கதவைத் திறந்து கொண்டு வெளிவந்த காவலன் இளஞ்செழியனை அழைத்துக்கொண்டு அந்தக் கேளிக்கை மண்டபத்துக்குள் நுழைந்தான். அவனைத் தொடர்ந்து சென்ற ஹிப்பலாஸின் குழம்பிய மூளைக்கு அந்தக் கேளிக்கை மண்டபம் பெரும் சாந்தியை அளித்தது. சாந்தியை அளிக்காததும் ஒன்றிருந்தது. அதுதான் மண்டபத்தின் நட்டநடுவில் பெரிய ஆசன மொன்றில் வீற்றிருந்த இலி-ஆஸுவின் பயங்கர உருவம். அந்த உருவத்தைப் பார்த்ததும் பிரமை பிடித்தவன்போல் நின்ற ஹிப்பாஸை நோக்கி ரத்த ரேகைகள் நிரம்ப ஓடியதால் செக்கச் செவேலென்று சிவந்து கிடந்த இலி-ஆஸுவின் பெரு விழிகள் ஒரு முறை உருண்டன. அடுத்த வினாடி நகரத்தையே எழுப்பவல்ல இடிநகையொன்று மண்டபத்தைக் கிடுகிடுக்கச் செய்தது. தன் எதிரே நின்ற இருவரையும் நோக்கிப் பெரும் பிசாசுபோல் நகைத்தான் இலி-ஆஸு.

68. இதோ பரிசு!

கானா துறைமுகத்துப் பெருமாளிகையின் மணி மண்டபத்துக்குள் நுழைந்தபோதே அங்கு கண்ணுக்கெதிரே விரிந்த கேளிக்கை விலாச காட்சிகளைப் பார்த்துப் பெருமளவில் பிரமிப்பும் ஓரளவு சாந்தியையும் அடைந்த யவனான ஹிப்பலாஸின் மனம், மண்டபத்தின் நடுவே அரியணையில் அமர்ந்திருந்த ராட்சஸ உருவத்தைக் கண்டதும் சிறிது நடுக்கம் கொண்டதென்றால், அந்த ராக்ஷஸ உருவத்தின் பேய்ச் சிரிப்பு அந்த நடுக்கத்தை உச்ச நிலைக்குக் கொண்டு போயிற்று. இளஞ்செழியனைப் போலவே மன உறுதி வாய்ந்தவனும் எதற்கும் அஞ்சாதவனுமான ஹிப்பலாஸ் சாம்பிராணி நாட்டு மன்னான இலி-ஆஸுவின் பயங்கர சிட்சைகளைப் பற்றி அறியாதவனாக இருந்திருந்தால் அன்று இலி-ஆஸு நகைத்ததைப்போல் பதின்மடங்கு

அதிகமாக நகைத்திருந்தாலும் சற்றும் அஞ்சியிருக்க மாட்டான். தூக்கில் தொங்கலாடுவதானாலும், வாளால் வெட்டப்பட்டுத் தலையை இழப்பதானாலும், அச்சமென்பது லவலேசமும் இல்லாமல் உயிரிழக்கச் சித்தமாகும் திடமனம் வாய்ந்த ஹிப்பலாஸ், இலி-ஆஸுவின் பிரக்யாதிகளைப் பற்றி ஏற்கெனவே நன்றாக அறிந்திருந்தானாதலால், மகாவீரனான அவன் மனமும் தனக்காக மட்டுமன்றித் தன் தலைவனான இளஞ்செழியனுக்காகவும் பரிதாபப்பட்டதல்லாமல் நடுங்கவும் செய்தது. சாம்பிராணி நாட்டு மன்னன், தன் எல்லையில் துராக்கிருதமாகக் காலை வைப்பவர்களின் உயிரை வாங்குவதில்லையென்றும், அவயவங்களில் ஏதாவது ஒன்றைமட்டும் வாங்கி சாம்பிராணித் தோட்டங்களில் வேலைக்கு அனுப்பி விடுவானென்பதும் பிரசித்தமா யிருந்தது. அவனுடைய தோட்டங்களில், ஒரு காலை மட்டும் இழந்த நொண்டிகள் பலர் அடிமைத் தொழில் செய்து வந்தார்கள். மற்றும் பல அடிமைகள் இடது கையை மட்டும் இழந்தவர்கள். சாம்பிராணிப் பாலை இறக்க ஒரு கையும் ஒரு காலும் இருந்தால் போதுமென்ற கருத்துடனிருந்த இலி-ஆஸு, அங்கு அனுப்பப்படும் அடிமைகளில் யாராவது ஒருவன் அதிகமாகப் பேசினானென்றோ அல்லது சதித்தொழிலில் இறங்கினானென்றோ கேள்விப்பட்டால் அவன் நாக்கையும் துண்டித்து வந்தான். இப்படி நொண்டிகளும், முடங்களும், நாக்கிழந்ததால் ஊமையாகி விட்டவர்களும் கூட்டம் கூட்டமாக அடிமைத் தொழில் புரிந்து வந்த சாம்பிராணிக் காட்டைப்பற்றி நினைப்பதற்கே அக்கம் பக்க நாடுகளிலிருந்தவர்கள் அச்சப்பட்டு வந்தார் களென்றால் அந்த நாட்டு மன்னனைப்பற்றி நினைத்தால் எந்த மனோ நிலையோடு இருப்பார்கள்! நினைத்த மாத்திரத்திலேயே கதிகலங்கக்கூடிய பிரசித்தி வாய்ந்த அந்த மன்னனின் முன்னே நிற்பவர்களின் மனோநிலைதான் எப்படியிருக்கும். இதையெல்லாம் அறிந்தவனும் இளஞ் செழியனுடன் நின்றவனுமான ஹிப்பலாஸ், இலி-ஆஸுவின்

இடி நகையைக் கேட்டு இதய கிலி கொண்டதில் தவறு என்ன இருக்கமுடியும்?

அசுரச் சிரிப்புச் சிரித்த இலி-ஆஸுவின் பிரும்மாண்டமான உருவத்தை இதய கிலியுடன் ஏறெடுத்து நோக்கிய ஹிப்பலாஸ் எதையும் வினாடி நேரத்தில் ஆராய்ந்து விடக் கூடியவனும் தான் நினைத்த காரியத்தைச் சாதிக்கவல்லவனுமான பயங்கரமான ஒரு மனிதனிடம் தானும் படைத் தலைவனும் சிக்கிவிட்டதை உணர்ந்தான். ஆறரை அடிக்கு மேலாக உயர்ந்திருந்ததாலும் மூன்றடி சுற்றளவுக்குக் குறையாமலிருந்ததாலும் பெருந்தோற்றத்தைப் படைத்திருந்த இலி-ஆஸுவின் கையிலும் காலிலும் பெரும் சதைகள் மண்டி நன்றாக உரப்பட்டுக் கிடந்ததைப் பார்த்த ஹிப்பலாஸ் அந்தக் கைகால்களின் தாக்குதலுக்கு இலக்காகிறவனின் எலும்புகள் முறிய வினாடி நேரம் பிடிக்காதென்ற முடிவுக்கு வந்தான். அதிகமான புலால் உணவினாலும் பெருமளவில் மதுவை அருந்தி வந்ததாலும் இலி-ஆஸுவின் கன்னச் சதைகள் அவன் தட்டை மூக்கின் பக்கப்பகுதிகளிலும் குண்டு குண்டாகப் புடைத்து அவன் ரத்தவிழிகளுக்கும் அளவுக்கதிகமாக அடர்ந்திருந்த புருவங்களுக்கும் பயங்கரத் தோற்றத்தை அளித்ததையும் ஹிப்பலாஸ் கண்டு, "இனிமேல் விதியின் கரம்தான் நமக்கு உதவவேண்டும்'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

ஹிப்பலாஸ், இப்படித் தனது கண்களால் இலி-ஆஸுவை எடை போட்டுக் கொண்டிருந்த சில வினாடிகளில் சோழர் படையின் உபதலைவனான இளஞ்செழியன் அந்தக் கேளிக்கை மண்டபத்தின் சிறப்பையும் அங்கு சுற்றிலும் தெரிந்த காட்சியையும் கண்டு பிரமித்துக்கொண்டிருந்தான். 'இலி-ஆஸுவின் இந்தக் கேளிக்கை மண்டபத்தைப் பாராததினால்தான் வான்மீகி முனிவர் ராவணனுடைய அந்தப்புரத்தைப் பற்றி அத்தனை விமரிசையாக வர்ணித்திருக்கிறார் போலிருக்கிறது' என்று நினைத்த இளஞ்செழியன் கேளிக்கை மண்டபத்தின் பெரும் தூண்களுக்குத்

தங்கக் கவசங்கள் போடப்பட்டிருந்ததைப் பற்றியும் கூரையில் பிரமாதமான வண்ணச் சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்ததையும் பார்த்து, 'இதில் யவனர் வேலைப்பாடும் கலந்திருக்கிறது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். கொள்ளைக்காரர்கள் தலைவிதி மட்டுமன்றி, தன் தலைவிதியும் நிர்ணயிக்கப்படவிருக்கும் அந்தச் சமயத்திலும் கேளிக்கை மண்டபத்தின் உல்லாசச் சூழ்நிலை தன் மனத்தே ஓர் இன்பத் தென்றலை வீசியதை எண்ணிப் பார்த்த இளஞ்செழியன் மனித இதயத்தின் சபலத்தை நினைத்து வியந்தான். பல நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டதால் விதவிதமான எழில்களையுடைய பருவப் பெண்களால் நிரம்பிக் கிடந்த அந்தக் கேளிக்கை மண்டபம் பெரும் சொர்க்க லோகமாகவே காட்சியளித்தது. காலில் நீண்ட உறைகளையும் மார்பில் கச்சைகளையும் மட்டுமே அணிந்த அராபியப் பெண்கள் நால்வர் காலில் கச்சை கட்டி நின்றிருந்ததால் அவர்கள் அப்பொழுதுதான் நாட்டியத்தை நிறுத்தியிருக்கிறார்கள் என்று தீர்மானித்தான் இளஞ்செழியன். யவனநாட்டுப் பெண்கள் சிலரும் மற்றும் கொள்ளைக்காரர்களால் அவ்வப்பொழுது பிடிக்கப்பட்ட பெர்பரீய நாட்டு அழகிகள் சிலரும் நடனத்துக்குத் துணைபுரிய நரம்பு வாத்தியங்களையும் தாள வாத்தியங்களையும் வைத்துக் கொண்டிருந்ததையும் படைத் தலைவன் பார்த்ததன்றி, அந்த வாத்தியங்களில் தமிழகத்து மகர யாழும் சகோட யாழும் கூட இருப்பதைக் கண்டு சொந்த நாட்டுக் கலை அத்தனை தூரம் பரவியிருப்பதை நினைத்துப் பெருமிதம் அடைந்ததல்லாமல், 'தமிழகத்தின் கலை இங்கு பரவியிருக்கிறதேயொழியப் பண்பாடு பரவவில்லையே' என்று துக்கமும் அடைந்தான். இந்தப் பெண்களைத் தவிர நாலைந்து பெண்கள் இலி-ஆஸுவுக்கு அவ்வப்பொழுது மதுவை ஊட்ட, பொன் மதுக் குப்பிகளையும் மதுக் கிண்ணங்களையும் தாங்கியிருப்பதையும் கவனித்த இளஞ்செழியன், 'இலி-ஆஸு அதிகமாகக் குடித்து நிதானமிழந்திருந்தால்

என்ன செய்வது?' என்று சிந்தித்தான். அந்த சிந்தனைக்கு இலி-ஆஸுவின் பிசாசுச் சிரிப்பும் ஆதாரமாகவே நின்றது.

ஆனால் அத்தனை குடியிலும் இலி-ஆஸு சிறிதும் நிதானத்தை இழக்கவில்லையென்பதை அவனுடைய அடுத்த வார்த்தைகள் நிரூபித்தன. இரண்டு முறை பெரும் சிரிப்புச் சிரித்துவிட்டு, தனது விழிகளையும் எதிரே நின்ற இருவர் மீதும் இரண்டு வினாடிகள் ஓட்டிய இலி-ஆஸு கடைசியில் இளஞ் செழியன் மீது தன் கண்களை நிலைநாட்டி, "உன்னைப் பார்த்தால் தமிழனாகத்தான் தெரிகிறது" என்று தெரிவித்து, அது சரிதானா என்பதை அறியக் கேள்வி கேட்கும் முறையில் தன் புருவங்களையும் சற்றே உயர்த்தினான்.

இளஞ்செழியன் சிறிதும் அச்சமின்றித் தன் கண்களை உயர்த்தி இலி-ஆஸுவின் கண்களோடு அவற்றை ஒரு வினாடி இணைத்துவிட்டுச் சொன்னான், "ஆம், நான் தமிழன்தான்" என்று.

அந்தப் பதிலில் புதைந்து கிடந்த பெருமிதத்தை இலி-ஆஸு கவனிக்கத் தவறாததால் அவன் பெரும் உதடு களிடை புன்சிரிப்பு ஒன்று படர்ந்தது. அதைத் தொடர்ந்து, "பல தமிழர்களைப் பார்த்திருக்கிறேன். எல்லோரும் உன்னைப் போல்தான்" என்றான் இலி-ஆஸு.

இளஞ்செழியனும் இலி-ஆஸுவை நன்றாக ஏறெடுத்து நோக்கி, "என்னைப் போலவா? மன்னர் சொல்வது விளங்க வில்லையே?" என்றான்.

"இங்கு வர்த்தகத்துக்குத் தமிழர்கள் வருகிறார்கள்..." என்றான் இலி-ஆஸு.

"ஆம், வருகிறார்கள்."

"வர்த்தகத்தில் நிபுணர்கள்."

"மன்னரின் பாராட்டு தமிழகத்துக்குப் பெருமை தருகிறது."

"அதுமட்டுமல்ல, யவன நாட்டுப் பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள்."

"வர்த்தகமும் கொள்ளையும் ஒன்றென்பது மன்னர் கருத்துப் போலிருக்கிறது?"

இதைக் கேட்ட இலி-ஆஸு நகைத்து விட்டுத் தன்னருகே நின்ற இரண்டு அராபிய அழகிகளைப் பார்த்துச் சொன்னான், "பார்த்தீர்களா! தமிழர்கள் வியாபாரத்தில் மட்டுமல்ல, பேச்சிலும் கெட்டிக்காரர்கள். தவிர அவர்கள் நாட்டைப் பற்றிப் பேசினால் அவர்களுக்கு ஏற்படும் பெருமை சொல்ல முடியாது. இதோ இவனைப் பாருங்கள். தமிழகம் என்று சொல்லும் போது முகத்தில் எத்தனை பெருமைக்குறி" என்று.

"மன்னவா!" என்று இளஞ்செழியன் மெள்ள அழைத்தான்.

"என்ன தமிழா!"

"தங்கள் பெயர் இலி-ஆஸு என்று சொல்கிறார்கள்."

"ஆம்."

"தாங்கள் தெய்வத்தைப் போலவே தாய் நாட்டையும் நேசிக்கிறீர்களல்லவா?"

"சந்தேகமென்ன? இந்த நாட்டின் ஒரு பிடி மண்ணைத் தொட்டாலும் கையை வெட்டிவிடுவேன். ஒரு அவதூறு பேசினாலும் நாக்கை நறுக்கி விடுவேன்."

"தமிழகத்தில் இதையெல்லாம் செய்ய மாட்டோம். ஆனால் மன்னரைப் போலவே நாங்களும் நாட்டுப்பற்று உடையவர்கள். கொள்ளை, கொலை, சூது எதுவும் தமிழகத் தில் அனுமதிக்கப்படுவதில்லை. அதனால்தான்..."

"இங்கு கொள்ளையடிக்க வந்த அந்த நாய்களைப் பிடித்துக் கொடுத்தாய்" என்று சிலாகித்து மீண்டும் இடி நகை நகைத்த இலி-ஆஸு மேலும் இளஞ்செழியனை நோக்கி, "இலி-ஆஸு எப்படி ஒருவர் செய்த கெடுதலை மறப்ப தில்லையோ, அப்படியே ஒருவன் செய்த உதவியையும் மறப்ப

தில்லை. நீயும் அதோ உன்னுடன் வந்திருக்கும் யவனனும் இன்றிரவு இளைப்பாறுங்கள். இந்தப் பெண்களில் உங்களுக்கு வேண்டியவர்களைப் பணிவிடைக்கு அழைத்துச் செல்லுங்கள். நாளை பேசுவோம். இன்றிலிருந்து நீங்கள் இலி-ஆஸுவின் விருந்தினர். உலகத்திலுள்ள சிறந்த மது வகையறாக்கள் அனைத்தும் இருக்கின்றன. எவ்வளவு வேண்டுமானாலும் அருந்துங்கள்'' என்று கூறிவிட்டுப் பக்கத்திலுள்ள பெண்களில் இருவரை அழைத்து, "இவர்களைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று உத்தரவிட்டான்.

"பெண்கள் தேவையில்லை மன்னவா..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்த இளஞ்செழியனை சைகையினாலேயே தடுத்த இலி-ஆஸு, "பெண்களும் மதுவும் தேவையில்லையென்றால் மனிதன் பிறக்கவே தேவையில்லை. உம், போ" என்று கையை ஆட்டியவன், இளஞ்செழியன் நகரத் தொடங்கியதும் மீண்டும் அவனை, ''தமிழா! யாரும் எண்ணவும் முடியாத சிறந்த பரிசு ஒன்றை உனக்குத் தருகிறேன் போ" என்று காதோடு காதாக ஓதினான்.

காதுக்குள் சூறாவளியடிப்பது போல் இலி-ஆஸுவின் பெரு உதடுகள் புஸ் புஸ் என்று காற்றையும் விட்டுச் சொன்ன அந்தப் பரிசைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமலே நடன அழகிகளைத் தொடர்ந்து சென்ற இளஞ்செழியன், மாளிகையின் கோடியிலிருந்த ஒரு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அதே பெண்கள் ஹிப்பலாஸுக்கு அந்த அறையின் வெளியிலிருந்த மஞ்சத்தைச் சுட்டிக் காட்டி, "இங்கு உட்கார்" என்று அராபிய மொழியில் சொன்னார்கள். 'தமிழகத்திலிருந்து மேலை நாடுகளுக்கு வந்த வர்த்தகர்களிடமிருந்து தமிழைக் கற்றுக் கொச்சையாகப் பேசினாலும் கருத்துக்களைப் புரிய வைத்தான் இலி-ஆஸு. ஆனால் இந்தப் பெண்களுக்குத் தமிழ் அடியோடு தெரியாது போலிருக்கிறதே' என்று எண்ணிய இளஞ்செழியன் அவர்கள் சைகையிலிருந்து அவர்கள் அபிப்பிராயத்தைப் புரிந்து கொண்டானாகையால், "வேண்டாம். அவர் என்னுடன் அறையிலேயே தங்கட்டும்" என்று கையை ஹிப்பலாஸையும் அறையையும் மாறி மாறிச் சாடை காட்டி அறிவித்தான்.

இதைக் கண்ட அந்த அராபிய அழகிகள் இருவரும் கலகலவென நகைத்தார்கள். பிறகு இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். கடைசியாக, "முடியாது" என்பதற்கு அறிகுறியாகத் தலைகளை இருவரும் சேர்த்து ஆட்டினார்கள். அடுத்தபடி இளஞ்செழியனுக்கும் அந்த மங்கையருக்கும் சைகையிலேயே சம்பாஷணை தொடர்ந்தது.

"ஏன்?" என்று சாடை காட்டிக் கேட்டான் இளஞ்செழியன்.

"அவன் அடிமை" என்று சாடை காட்டினார்கள் அவர்கள்."

"அவன் அடிமையில்லை" என்று இளஞ்செழியன் உணர்த்த முயன்றான்.

"நாங்கள் நம்பவில்லை" என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்கள் அந்த மங்கையர்.

இந்த சாடை வேடிக்கையை வெறுப்புடன் கவனித்த ஹிப்பலாஸ், "பிரபு! நான் இங்கேயே படுத்துக் கொள்கிறேன். நீங்கள் உள்ளே படுத்துக் கொள்ளுங்கள். எதற்கு இவர்களோடு தொல்லை?" என்று கூறவே இளஞ்செழியன் அறைக்குள் நுழைந்தான். ஒரு சிற்றரசனுக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் அந்த அறையில் இருந்தன. அறையின் மூலையில் வைக்கப்பட்டிருந்த யவன நாட்டுப் பொன் விளக்குகள் இரண்டை அந்த அராபிய அழகிகள் இருவரும் ஏற்றினார்கள். பிரும்மாண்டமான அறை மத்தியிலிருந்த மஞ்சத்தில் பட்டு மெத்தையொன்று விரிந்து கிடந்தது. அதைத் தட்டி திண்டுகளையும் தலையணைகளையும் வைத்தாள் அழகிகளில் ஒருத்தி. இன்னொருத்தி அறைமூலையில் பந்தமொன்றைக் கொளுத்திச் சாம்பிராணியை அதன்மீது தூவினாள். பந்தத்தில் புகையெழுந்து தூபம் கமழத் தொடங்கியதும் மங்கையர் இருவரும் புது உடைகள் இரண்டை பக்கத்து

அறையிலிருந்து கொண்டு வந்து இளங்செழியனுக்கு ஒன்றையும் ஹிப்பலாஸுக்கு ஒன்றையும் கொடுத்தார்கள். ஹிப்பலாஸ் வெளித் தாழ்வாரத்தின் தூண்களிலிருந்த மூலைக்குச் சென்று தன் ஈர உடைகளைக் களைந்து வேறு உடை உடுத்திக் கொண்டிருந்தான். உடை கொடுத்ததும் ஹிப்பலாஸைச் சிறிதும் கவனிக்காத அந்த மங்கையர் இருவரும் இளஞ்செழியனுக்கு உடையணிவிக்கத் தொடங்கினார்கள். "வேண்டாம், வெளியே செல்லுங்கள்" என்று அவர்களை என்ன இறைஞ்சியும் அந்த மங்கையர் கேட்காமல் அவன் மேலங்கியை அவிழ்க்கத் தொடங்கியதும் இளஞ்செழியன் வெகுண்டு, "சே! சனியன்களா!" என்று சீறி இருவர் கழுத்தையும் பிடித்து உந்தி வாசற்படிக்கு வெளியில் தள்ளிக் கதவைச் சாத்திக் கொண்டு, ஈர உடைகளைக் களைந்து புத்துடை உடுத்துக் கதவை மீண்டும் திறந்தான். அப்பொழுதும் வெளியே நின்ற மங்கையர் அவனைப் பார்த்து நகைத்தனர். பிறகு அவனைப் பஞ்சணையில் படுத்துக் கொள்ளச் சொல்லிக் கால்களை வருடினர். வேறு வழியில்லாமல் அந்தப் பணிவிடைகளுக்கு ஆளான இளஞ்செழியன் கண்களை மூடி உறங்குவது போல் பாசாங்கு செய்தான். அவன் கண்களை மூடியதும் சற்று நேரம் அவன் முகத்தை ஊன்றிக் கவனித்த அந்த மங்கையர், அவன் தூங்கிவிட்டானென்று முடிவு செய்து கதவை மெள்ளச் சாத்திவிட்டு அறையைவிட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்ற சில நிமிடங்களுக்கெல்லாம் ஹிப்பலாஸ் உள்ளே ஓசைப்படாமல் வந்து, "பிரபு!" என்று மெள்ள அழைத்தான். அவன் அழைத்ததால் துணிவுடன் கண்ணை விழித்த இளஞ்செழியன், "என்ன ஹிப்பலாஸ்!" என்று வினவினான்.

ஹிப்பலாஸ் வழக்கம் போல் தன் நகைச்சுவையைக் காட்டத் தொடங்கி, "இங்கு தங்களுக்கு ஆண் துணை கிடைக்காது போலிருக்கிறதே?" என்றான்.

"நீ யார்? பெண்ணா?" என்று வினவினான் இளஞ்செழியன்.

"இல்லை, அதனால்தான் என்னை அறைக்கு வெளியே தள்ளிவிட்டார்கள்" என்று சொல்லிப் புன்முறுவல் கோட்டினான் ஹிப்பலாஸ்.

"சரி சரி; உறங்கு ஹிப்பலாஸ். விடிய இன்னும் அரை ஜாமம் கூட இல்லை. சற்றாவது தூங்குவோம்" என்றான் இளஞ்செழியன்.

"உறங்கவா?" ஹிப்பலாஸின் கேள்வியில் ஆச்சரியம் மண்டிக் கிடந்தது.

"ஆமாம்" திட்டமாகப் பதில் கூறினான் இளஞ்செழியன்.

"உறக்கம் பிடிக்குமா இப்போது?"

"ஏன் பிடிக்காது?"

"இருப்பது இலி-ஆஸுவின் மாளிகை."

"அதனாலென்ன?"

"நாளைக்கு நமது கதி என்னவென்று சொல்ல முடியாது."

"ஏன் முடியாது?"

"இலி-ஆஸு மிகவும் துஷ்டன்."

"ஆனால் எனது நண்பன்."

"உங்கள் நண்பனா?"

"ஆமாம்."

"எத்தனை நாளாக?"

"ஒரு ஜாம காலமாக?"

"எப்படி நண்பனானான்?"

"நான் செய்த உதவியால்."

"கொள்ளைக் கப்பலைப் பிடித்துக் கொடுத்ததாலா?"

"ஆமாம்."

"நீங்கள் எங்கு பிடித்துக் கொடுத்தீர்கள்? நீங்கள்தான் துறைமுகக் கோட்டை வாயிலுக்கெதிரில் தள்ளாடி மயக்கமாய் விழுந்தீர்களே. உங்களைக் காவலர் தூக்கிக் கொண்டு போனதை நானே பார்த்தேனே?"

ஹிப்பலாஸின் இந்த வார்த்தைகளைக் கேட்ட இளஞ்செழியன் மெல்ல நகைத்துவிட்டு நடந்ததை விவரிக்கத் தொடங்கினான். "ஹிப்பலாஸ்! இந்தக் கொள்ளைக்காரர் களிடமிருந்து சுலபத்தில் நாம் தப்ப முடியுமென்று நான் நினைத்திருந்தால் என்னைவிடப் பெரிய முட்டாள் உலகத்தில் இருக்க முடியாது. பணத்தாசையால் உயிரை வெறுத்து எரித்திரியக் கடல் பிராந்தியத்தில் கொள்ளை யடிப்பவர்களை, அந்தப் பணத்தாசையைக் காட்டியே தீர்த்துக் கட்ட வேண்டுமென்று முடிவு செயதேன். அந்த ஆசையைக் காட்டியே அவர்களைக் கானாவுக்கு அழைத்து வந்தேன். சாம்பிராணி நாட்டு மன்னன் குணத்தைப் பற்றி நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறேன். தனது நாட்டுச் சாம்பிராணியிடம் அவனுக்கு உயிர். அதைத் தொட யார் முயன்றாலும் அவர்களை ஒழித்துவிடத் தயங்கமாட்டான் என்பது பிரசித்தம். ஆகவே அவன் ஆட்களிடம் இந்தக் கொள்ளையரைக் காட்டிக் கொடுத்து அதன் மூலம் தப்பவே முடிவு செய்தேன். ஆனால் கோட்டைக்குள் நுழைவது எப்படி? போரிட்டா? முடியவே முடியாது. தூரத்தில் யராவது வருவதைக் கண்டால் ஈட்டி எறிந்து கோட்டைக் காவலர் கொன்றுவிடக் கூடும். ஆகவே மயக்கமடைந்தவன் போல் பாசாங்கு செய்தேன். தள்ளாடினேன். விழுந்தேன். மயக்கம் பல காரியங்களுக்கு நல்ல மருந்து ஹிப்பலாஸ்..." என்று சொல்லிச் சற்று நிதானித்தான் படைத்தலைவன்.

"பிறகு?" படைத்தலைவன் தந்திரத்தைக் கேட்டதால் ஆச்சரியம் பூரணமாகத் தொனித்த குரலில் வினவினான் ஹிப்பலாஸ்.

இளஞ்செழியன் மேலும் தொடர்ந்தான்: "பிறகு காவலர் விடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். எனக்குச் சிகிச்சை செய்தார்கள். நான் மெள்ளக் கண்விழித்து, 'அவசரம்! சாம்பிராணிக்குவியலுக்கு ஆபத்து. கோட்டைத் தலைவனை உடனே பார்க்க வேண்டும்' என்று அரையும் குறையுமாக உளறுவதைப் போல் பாசாங்கு செய்தேன்.

காவலர் ஓடினார்கள். தலைவன் வருவானென்று எதிர் பார்த்தேன். ஆனால் தலைவனுக்குப் பதில் இலி-ஆஸுவே வந்தான். இலி-ஆஸுவை நான் அங்கு எதிர்பார்க்கவில்லை. ஒரு மாத காலமாக இலி-ஆஸு இங்குதானிருக்கிறானென்று பின்பு தான் அறிந்தேன். அவன்தான் இலி-ஆஸு என்பதும் முதலில் எனக்குத் தெரியாது. அராபியர் இருவர் என்னை எழுப்பி, பலவந்தமாக என்னைத் தலை வணங்கச் செய்த பின்பு, 'மன்னரிடம் விஷயத்தைச் சொல்' என்று அதட்டிய பிறகு வந்தவன் யாரென்பதை உணர்ந்தேன். சுருக்கமாகச் சொல்லி முடித்தேன். கோபத்தால் இலி-ஆஸு இடிபோல் இரைந்தான். இரைய வேண்டிய அவசியமில்லையென்பதைத் தாழ்மையுடன் உணர்த்தி, கொள்ளைக்காரரைப் பிடித்துக் கொடுப்பது என் கடமையென்றும் ஒரு மன்னனிடம் சேவகம் செய்யும் ஊழியனான நான் இன்னொரு மன்னனுக்குத் துரோகம் செய்ய இஷ்டப்படாததாலேயே கப்பலிலிருந்து தப்பி வந்ததாகக் கூறினேன்."

"அதை நம்பினானா மன்னன்?" என்று கேட்டான் ஹிப்பலாஸ்.

"நம்பச் செய்தேன் ஹிப்பலாஸ். நான் சொன்னதைக் கேட்டதுமே கப்பலைக் கைப்பற்றக் படகுகளைத் தயார் செய்ய உத்தரவிட்டான் இலி-ஆஸு. அதைவிடச் சுலபவழி இருப்பதாயும், கொள்ளையரை நானே பந்தம் காட்டித் தரைக்கு வரவழைத்துவிட முடியுமென்பதையும் தெரிவித் தேன். இலி-ஆஸு கூரிய அறிவை உடையவன். நாலு வார்த்தைகள் நான் பேசுவதற்குள்ளாகவே திட்டத்தைப் புரிந்து கொண்டு என்னைப் பின்பற்றும்படி தன் வீரர்களுக்கு உத்தரவிட்டான். விளைவு உனக்கே தெரியும். கொள்ளை யர்கள், அவர்கள் பொக்கிஷம் இரண்டும் இலி-ஆஸுவிடம் சிக்கியிருக்கிறது" என்றான் இளஞ்செழியன்.

"அவை மட்டுமல்ல படைத்தலைவரே! நாமும் சிக்கி யிருக்கிறோம்" என்று குறிப்பிட்டான் ஹிப்பலாஸ்.

"உண்மைதான். இருப்பினும் இலி-ஆஸு நன்றியுடையவனாகத் தெரிகிறது. காலையில் பார்ப்போம். படுத்துக்கொள். கதவைச் சாத்திக்கொண்டு போ" என்றான் இளஞ்செழியன்.

ஹிப்பலாஸ் அறைக் கதவை மூடிக்கொண்டு வெளியே சென்று படுத்தான். அன்றிரவு நேர்ந்த பல நிகழ்ச்சிகளால் கண்ணை மூடினாலும் தூக்கம் வராததால் ஏதோ யோசனைகளில் ஆழ்ந்து கிடந்தான். அந்த யோசனைகளை மெள்ள தாழ்வாரத்தின் கோடியில் ஏற்பட்ட ஓர் அரவம் கலைத்தது. தலையிலிருந்து கால் முதல் முக்காடிட்ட ஓர் உருவம் ஓசைப் படாமல் நடந்து வந்து இளஞ்செழியன் படுத்திருந்த அறைக் கதவைத் திறந்தது. படுத்தபடியே அந்த உருவத்தின் வருகையைக் கவனித்த ஹிப்பலாஸ் மெள்ள எழுந்து அது யாரென்பதை ஆராய முயன்றான். ஆனால் அடுத்த வினாடி அந்த உருவம் அறைக்குள் நுழைந்து கதவையும் தாழிட்டுக் கொண்டது. சரசரவென்று எழுந்து ஹிப்பலாஸ் கதவண்டை சென்று அதைத் திறக்க முயன்றான். முடியவில்லை. உள்ளே ஏதாவது அரவம் கேட்கிறதா என்று காதைக் கதவிடம் வைத்து உற்றுக் கேட்டான். பேரரவம் ஏதுமில்லையென்றாலும் இருவர் பேசும் அரவம் கேட்கத்தான் செய்தது. அத்துடன் புதிதாக உள்ளே நுழைந்த உருவம், 'இதோ பரிசு பரிசு' என்று சொன்ன சொற்களும் ஹிப்பலாஸின் காதில் விழுந்தன. உள்ளே விபரீதம் ஏதோ நிகழ்கிறது என்பதை உணர்ந்த ஹிப்பலாஸ் அந்த விபரீதம் எதுவாயிருக்கக்கூடும் என்பதை அறிய முடியாமலும், தலைவனுக்கு எப்படி உதவலாம் என்பதை நிர்ணயிக்க முடியாமலும் பெரிதும் திணறினான்.

69. விதியின் அலைகள்

பொழுது புலரச் சில நாழிகைகளே இருந்தபடியால் எங்கும் இருள் அதிகமாகக் கவிந்து விட்ட அந்த நாலாம் ஜாம இடைப் பகுதியில் இலி-ஆஸுவின் பெரும் மாளிகைச் சிற்றறைக்குள் என்ன நடக்கிறதென்பதை அறிய முயன்று,

கதவுக்கருகில் காதை வைத்துக் கேட்டும் ஏதும் புரியாததால் உள்ளே ஏதோ பெரும் விபரீதம் நிகழ்கிறதென்று நினைத்துத் திணறிய ஹிப்பலாஸ், சற்று நேரத்திற்கெல்லாம் உட்புறத்தில் சிறிது பலமாகவே படைத்தலைவனின் குரல் கேட்டதாலும், உள்ளே சென்ற உருவத்தின் குரலும் சில வினாடிகளில் ஒலிக்கத் தொடங்கி அது பெண் குரலென்பதைத் தெளிவு படுத்தியதாலும், ஓரளவு கவலை நீங்கி மீண்டும் தன் மஞ்சத்திற்குச் சென்று நிம்மதியுடன் படுத்து உறங்க முயன்றான். ஆனால் உள்ளுக்குள்ளேயிருந்த இளஞ்செழியனுக்கு மட்டும் நிம்மதியோ உறக்கமோ எதுவும் சாத்தியமல்லாமல் போகவே அவன் மஞ்சத்திலிருந்து கீழிறங்கி அப்படியும் இப்படியும் தீவிர யோசனையுடன் நடக்கத் தொடங்கினான்.

இலி-ஆஸுவின் பணிப் பெண்கள் இருவரும் தன் காலை வருடி பலவந்தப் பணிவிடை புரிந்தபோது அந்தப் பணிவிடையிலிருந்து தப்பப் பொய்த் துயில் கொண்ட சோழர் படைத்தலைவன், அவர்கள் தன்னை நித்திரையைச் சோதித்து அறையைவிட்டு அகன்றதும் கண்களை விழித்துக் கொண்டு மஞ்சத்தில் படுத்த வண்ணமே பலப்பல யோசனைகளில் மனத்தை அலையவிட்டுக் கொண்டிருந்தானாகையால், மீண்டும் ஒரு முக்காடிட்ட உருவம் அறைக்குள் நுழைந்ததையும், அது கதவின் தாளைப் போட்டு விட்டதையும் கண்டதும் எந்த நிலைமையையும் சமாளிக்கச் சர்வசன்னத்தமாகவேயிருந்தான். ஆயினும் உள்ளே நுழைந்த உருவம் தனது முக்காட்டை நீக்கி மேலுடையைக் களைந்து அறையின் மூலையில் கொண்டு போய் வைத்ததும் சொல்லவொண்ணா சங்கடத்தையே அடைந்தான் இளஞ்செழியன். எந்த வீரனையும் எந்த அபாயத்தையும் துணிவுடன் சமாளிக்கவல்ல திறன் வாய்ந்த படைத்தலைவன் உள்ளே வந்த உருவம் களைந்த மேலாடையை அறை மூலையில் வைத்துவிட்டுத் தன் மஞ்சத்தை நோக்கி வரத் தொடங்கியதும் பெரும் பீதி அடைந்து மஞ்சத்திலிருந்து சரேலென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

அவன் அப்படித் தூக்கிவாரிப் போட்டு மஞ்சத்தில் உட்கார்ந்ததைக் கவனித்ததால் சற்றுப் புன்முறுவலை கொண்ட அலீமா, மயிலின் சாயலையும் தோற்கடிக்கும் அழகு நடைந்து அவனது மஞ்சத்தருகில் வந்து அவனுக்கு எதிரில் நாலடி தள்ளியே நின்று, "ஏன் அப்படிப் பயப்படு கிறீர்கள்?" என்று சுத்தமான தமிழில் கேட்டாள். அவள் பேசிய நல்ல தமிழைக் கேட்டதும் ஒரு வினாடி திகைத்த இளஞ் செழியன், மன்னனின் கேளிக்கை மண்டபத்துக்கு வெளியே அவள் தன் காதில், 'இலி-ஆஸு என்ன வேண்டுமென்று கேட்டால், என்னைப் பரிசாகக் கேளுங்கள். என் பெயர் அலீமா' என்று சொன்னதும் நல்ல தமிழில் தானென்பதை நினைத்துப் பார்த்து 'அதை எப்படி நான் கவனிக்காமல் விட்டேன்? ஆம் ஆம். அப்பொழுதிருந்த மனோநிலை எதுவுமே விளங்காத குழப்பமான விபரீதமான நிலை யல்லவா?' என்று தன்னைத்தானே கேள்வியும் கேட்டுச் சமாதானமும் சொல்லிக் கொண்டான்.

தான் கேட்ட கேள்விக்குப் பதில்கூடச் சொல்லாமல் படைத் தலைவன் தீவிர யோசனையில் ஆழ்ந்தவிட்டதைக் கண்ட அலீமா, "என்ன அப்படி யோசிக்கிறீர்கள்?" என்று மீண்டும் வினவினாள், இதழ்களைச் சற்று அகலமாகவே விரித்துப் புன்முறுவல் கோட்டி.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவள்மீது கண்களை ஓட்டிய இளஞ்செழியன் அவளுடைய எழிலின் சிறப்பைக் கண்டு பெரிதும் வியந்தான். அடர்த்தியாக மிகவும் கருமையாக, தரையில்கூட இடிக்கக்கூடிய முறையில் வெகு நீளமாக வளர்ந்திருந்த கூந்தலை இரு பிரிவாகப் பின்புறம் வகிர்ந்து பின்னி இரண்டு சுருட்டைகளாக அலீமா எடுத்துக் கட்டியிருந்தாளாகையால், அந்தச் சுருட்டைகளிரண்டும் அவள் தோள்கள் மீது தவழ்ந்து முன்புறத்தில் வந்து கழுத்துக்குச் சற்றுக் கீழே படுத்துக் கிடந்தன. அவள் காதுகளில் தொங்கிக் கொண்டிருந்த இரு பெரும் பொன் வளையங்கள் பொன்னையும் பழிக்கும் அவள் கன்னங்களின்

பக்கங்களில் அவள் தலையை அசைத்தபோதெல்லாம் ஆடி ஆடிக் கன்னக் கதுப்புக்களை வருடத் தொடங்கின. தீர்க்கமான அவள் நாசி, எழில் சொட்டும் அகன்ற பெரு விழிகள், விசாலமான நெற்றி, நன்றாக உயர்ந்திருந் தாலும் செழுமையின் விளைவாக அதிகமாக உயரம் தெரியாத உடலமைப்பு- எல்லாமே அவளை ஏதோ தேவலோக ரம்பைபோல் அடித்திருந்தன. இடையில் அவள் அராபியர்களைப் போல் இரண்டு சராய்களையே அணிந் திருந்தாளாதலால் உடலை ஒட்டிக் கிடந்த இயற்கை அழகுகள் கண்ணுக்கும் ஓரளவு புலப்படவே செய்தன. அரபு நாட்டு வழக்கப்படி அவள் மேல் கச்சையை மட்டுமே அணிந்திருந்தாளாதலால், அவள் அழகை அதிகமாக ஏறெடுத்துப் பார்க்கவும் வெட்கிய இளஞ்செழியன் தலையைக் குனிந்து கொண்டான். அவன் சங்கடத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், "நான் கேட்கிறேன், நீங்கள் பேசாமல் இருக்கிறீர்களே, பரிசைப் பெற்றுக் கொள்வதில் அவ்வளவு கஷ்டமா உங்களுக்கு?'' என்று சொல்லிக் கொண்டே மஞ்சத்தை நெருங்கினாள் அலீமா.

அவள் மஞ்சத்தை நோக்கி நடந்து வந்தபோது அவள் காலிலிருந்து சலங்கைகள் சப்தித்ததால் சற்று அதிர்ச்சி யடைந்து தலையைத் தூக்கிய இளஞ்செழியன் "பரிசா! எது பரிசு! என்ன பரிசு!" என்று திணறிக் கேட்டான்.

"இதோ பரிசு" என்று சற்று இரைந்தே அலீமா சொன்ன தால் அந்தச் சொற்கள் இளஞ்செழியனுக்கு மட்டுமல்ல, வெளியே ஒட்டுக் கேட்டு நின்ற, ஹிப்பலாஸின் காதிலும் தெளிவாக விழுந்தன. அவள் இரைந்து சொன்ன சொற்களால் அவள் அழகு விளைவித்த மயக்கத்திலிருந்தும் சங்கடத்தி லிருந்தும் சற்றே விடுபட்ட படைத்தலைவன், மஞ்சத்திலிருந்து கீழிறங்கி அறையில் அப்படியும் இப்படியும் உலாவிவிட்டுச் சற்று எட்ட நின்றே கேட்டான், "எங்கேயிருக்கிறது பரிசு?" என்று.

"உங்கள் கண் முன்பே இருக்கிறதே பரிசு!" என்று தன்னையே மீண்டும் இரு கைகளாலும் காட்டி, "நான் உங்கள்

அடிமை" என்று கூறும் பாணியில் தலையையும் தாழ்த்தி வணங்கினாள் அலீமா.

"நீயா பரிசு?" என்று வியப்புடன் வினவினான் இளஞ்செழியன்.

"ஆமாம்" என்ற அலீமா மெள்ள நகைத்துவிட்டு அவனை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தாள்.

இளஞ்செழியன் சங்கடம் வெளியிலிருந்த ஹிப்பலாஸின் திணறலைவிட ஆயிரம் மடங்கு அதிகப்பட்டதால் "இரு இரு. அங்கேயே இரு" என்று அச்சத்துடன் கூவினான்.

"அருகில் வரக்கூடாதா?" என்று கேட்டாள் அலீமா.

"வரக் கூடாது?" திட்டமாக வந்தது இளஞ்செழியன் பதில்.

அலீமாவின் ஆச்சரியமும் எல்லை மீறியதால் தன் அழகிய விழிகளை அவள் அகல விரித்தாள். "ஏன் வரக் கூடாது?" என்ற அவள் கேள்வியிலும் ஆச்சரியம் தொனித்தது.

"நீ பெண்" என்றான் இளஞ்செழியன்.

"அது இப்பொழுதுதான் புரிகிறதா?" என்று வேடிக்கையாகப் பேசினாள் அலீமா.

"முன்பே புரிந்துவிட்டது."

"அப்படியானால் ஏன் பயப்படுகிறீர்கள்?"

"அதனால்தான் பயப்படுகிறேன்."

"பெண்களைக் கண்டால் உங்களுக்குப் பயமா?"

"சில சந்தர்ப்பங்களில் பயம்தான்."

"இது...?"

"அப்படியொரு சந்தர்ப்பம்."

"சற்று விளக்கிச் சொல்லுங்கள்."

கடைசியாக அவள் கேட்டதும் கெஞ்சுவது போலிருந்தாலும், குரலிலும் நன்றாகக் குழைந்து இனிமை மண்டிக் கிடந்ததாலும் சற்றுச் சங்கடமே பட்ட இளஞ்செழியன் மெள்ளச் சமாளித்துக் கொண்டு அவளை ஏறெடுத்து நோக்கிவிட்டு, "அலீமா!" என்றழைத்தான்.

அவள் மெள்ள, "ஊ...ம்" கொட்டினாள்.

"என்னை யாரென்று உனக்குத் தெரியாது. நீ யாரென்றும் எனக்குத் தெரியாது. இருவரும் ஒரே அறையில் இருக்கிறோம். புரிகிறதா உனக்கு?" என்று கூறி மேலே ஏதும் சொல்லாமல் நிறுத்தினான்.

"புரிகிறது. ஆனால் நம்மிருவரையும் யாரும் தவறாக நினைக்க மாட்டார்கள்" என்றாள் அலீமா.

"ஏன்?"

"என்னை உங்களுக்குப் பரிசாக அளித்திருப்பவன் இலி-ஆஸு மன்னன். வேறு யாராவது இதைப்பற்றிப் பேசினால் மன்னன் அவர்கள் நாக்கைத் துண்டித்துச் சாம்பிராணிக் காட்டுக்கு அனுப்பிவிடுவான்."

"இங்கு எல்லோர் வாழ்வையும் நிர்ணயிப்பது மன்னன் தானா?"

"ஆம். தவிர, மன்னன் உங்கள் விஷயத்தில் தாராளமாக நடந்து கொண்டிருக்கிறான்."

"என்ன காரணம்?"

"இதுவரை யாருக்குமே கிடைக்காத அலீமாவையே உங்களுக்குப் பரிசாகக் கொடுத்திருக்கிறான். நாளைக் காலையில் இந்தச் செய்தி கானா பூராவும் பரவும். மக்கள் வியப்புக் கடலில் ஆழ்ந்து விடுவார்கள்."

"அத்தனை அபூர்வமா நீ?"

"ஆம். இலி-ஆஸுவின் மகள் என்றே எல்லோரும் கானாவில் என்னை அழைக்கிறார்கள். என்னருகே வரக்கூடத் துணிந்தவர் இதுவரை யாருமில்லை. என்னைப் பரிசாகக் கேட்கும்படி நானே உங்களைக் கேட்டேனல்லவா? ஆனால் அரபு நாட்டின் தெய்வசக்தி இலி-ஆஸுவின் சிந்தையில் புகுந்து, அவனாகவே என்னைப் பரிசாக அளிக்கும்படி தூண்டிவிட்டிருக்கிறது. இது உங்கள் அதிர்ஷ்டம்" என்றாள் அலீமா.

இளஞ்செழியன் யோசனையில் ஆழ்ந்தான். 'யாரும் எண்ணவும் முடியாத பரிசை உனக்குத் தருகிறேன்' என்று

இலி-ஆஸு தன்னிடம் காதோடு காதாகச் சொன்னதன் பொருள் அப்பொழுததான் சிறுகச் சிறுக அவனுக்குப் புலப் படலாயிற்று. கொள்ளைக் கப்பலைப் பிடித்துக் கொடுப்பதன் மூலம் இலி-ஆஸுவின் தயவைச் சம்பாதிக்கலாம், தான் செய்த உதவிக்கும் பரிசாகத் தாய்நாடு திரும்ப அனுமதி கேட்கலாம் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டியிருந்த இளஞ்செழியன், பரிசு ஒன்று பெண் உருவத்தில் வந்து சேர்ந்ததும், 'ஏதேது, இலி-ஆஸு நம்மை அரபு நாட்டை விட்டு அகல விடமாட்டான் போலிருக்கிறதே' என்று எண்ணி மனம் சோர்ந்தான். அந்தச் சோர்வின் விளைவாகப் பெருமூச் செறிந்துவிட்டு, ''என் அதிர்ஷ்டமா இது!'' என்றான் அலீமாவை நோக்கி.

அலீமாவின் அழகிய வதனத்தில் துயரச் சாயை படர்ந்தது. "ஏன், என்னைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்க வில்லையா?" என்று கேட்டாள் அவள்.

"பிடிக்கவில்லையென்று யார் சொன்னது?" எரிச்ச லுடன் வினவினான் இளஞ்செழியன்.

"பின் ஏன் என்னை வெறுக்கிறீர்கள்?" என்றாள் அலீமா.

"யார் வெறுத்தது?"

"அப்படியானால் விருப்பமா?"

"எதற்கு விருப்பம்?"

"இப்படி வாருங்கள் சொல்கிறேன்" என்று அவன் நின்ற இடத்தை இரண்டு எட்டில் அடைந்து, அவன் கையைப் பிடித்து இழுத்து மஞ்சத்தில் உட்கார வைத்து விட்டு, அவன் தோள்கள் இரண்டையும் தன் கைகளால் பிடித்துக் கொண்டு முகத்தில் தன் கூர் விழிகளை நாட்டி மெல்லச் சொன்னாள் அலீமா, "முட்டாள்தனமாக நடந்து கொள்ள வேண்டாம். இது இலி-ஆஸுவின் அரசாங்கம்!" என்று.

"இருந்தால் என்ன?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

''அவன் விருப்பத்துக்கு மாறாக நடப்பவர்களைச் சித்திரவதை செய்வது இலி-ஆஸுவின் வழக்கம்."

"அது தெரிந்ததுதானே?"

'தெரியாததும் ஒன்றிருக்கிறது."

"என்ன அது?"

"யோசித்துப் பாருங்கள். நீங்கள் தமிழர். உங்களை முன்பின் இலி-ஆஸுவுக்குத் தெரியாது. இந்தக் கானாவில் எனக்கும் இலி-ஆஸுவுக்கும் இன்னும் இரண்டு மூன்று பேருக்கும்தான் உங்கள் மொழி தெரியும். அந்த ஒரு சிலரில் மகளைப் போலவே என்னைப் பாவிக்கும் இலி-ஆஸு இந்த இரவில் உங்களிடம் என்னை ஏன் ஒப்புவிக்கிறான்?"

அலீமாவின் இந்தக் கேள்வியால் பெரு அதிர்ச்சி யடைந்த இளஞ்செழியன், "ஏன், விளங்கவில்லையே?" என்று குழப்பம் மிகுந்த குரலில் வினவினான்.

அலீமாவின் விழிகளில் சற்று அச்சமும் எழுந்தது. அவள் குரலில் சந்தேகம் பெரிதும் ஒலித்தது. ஏதோ ஆழ்ந்து யோசிப்பவள் போலவே பேசினாள் அலீமா. "இலி-ஆஸு வைப் போல் ஒரு பயங்கர மனிதன் உலகத்தில் கிடையாது. நரியைவிடத் தந்திரம் வாய்ந்தவன். இரவில் ஒரு கப்பல் வருகிறது. அதை ஒரு தமிழர் பிடித்துக் கொடுக்கிறார். அதற்காக அவருக்கு ராஜோபசாரம் நடக்கிறது. தன் மகளைப் போல வளர்த்து அராபியர்கள் அனைவரிடமிருந்தும் பாதுகாத்துவரும் ஒரு பெண்ணை அந்த வாலிபரிடம் அனுப்பி வைக்கிறான் என்றால் விசித்திரமில்லையா?" என்று கேட்டாள் அலீமா.

''விசித்திரம்தான்!'' என்று இளஞ்செழியனின் குரலுடன் சற்றுச் சந்தேகம் ஒலித்தது.

"திடீர் உதவி, திடீர் அன்பு, திடீர் பரிசு எல்லாம் கதைகளில் நிகழலாம். வாழ்க்கையில் நிகழ முடியாது. தமிழக வீரரே! அதுவும் இலி-ஆஸுவிடம் நிகழ முடியவே முடியாது. ஆனால் நிகழ்ந்திருக்கிறது."

"ஆம். நிகழ்ந்திருக்கிறது."

"ஆகவே அதற்குக் காரணங்கள் இருக்க வேண்டும். ஆழமான திட்டம் இருக்க வேண்டும். அரக்கரே அஞ்சும் கொடுமைகளை விளைவிக்கவல்ல இலி-ஆஸுவின் அறிவு

ஆழமானது. மனிதர்களை எடை போடுவதில் அவனுக்கிணை இந்தப் பிராந்தியத்தில் எவருமேயில்லையென்பது பிரசித்தம். யவனர்கள்கூட இலி-ஆஸுவின் அறிவைப் பெரிதும் வியக்கிறார்கள். நிமிட நேரத்தில் மனிதர்களையும், சம்பவங்களையும் எடை போட்டு, முடிவுகளையும் செய்யவல்ல இலி-ஆஸு என்னை ஏன் இத்தனை துரிதமாக உங்களுக்குப் பரிசாக அளித்திருக்கிறானென்றால் அதற்கு ஒரே காரணம் தான் இருக்க முடியும்" என்று கூறிய அலீமா தலையைக் கவிழ்ந்துக் கொண்டாள்.

"என்ன காரணம் அது அலீமா?" என்று வினவினான் இளஞ்செழியன் சந்தேகம் பூரணமாகக் குரலில் தொனிக்க.

"உங்களைக் கானாவிலேயே இருத்திக்கொள்ள இலி-ஆஸு முடிவு செய்திருக்க வேண்டும்" என்று பெரு வெடியை எடுத்து வீசிய அலீமா, தலையைத் தூக்கிப் படைத் தலைவனை ஏறெடுத்து நோக்கினாள்.

அந்தப் பதிலால் இளஞ்செழியன் இடிந்து போவானென்றோ, அதிர்ச்சியடைந்து கூவுவானென்றோ அலீமா எதிர்பார்த்ததால் ஏமாந்தே போனாள். ஆகவே அவள் இளஞ்செழியன் முகத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படாததைக் கண்டு வியப்பெய்தியதல்லாமல் தான் சொன்ன செய்தியின் பொருளைப் புரிந்து கொண்டானோ இல்லையோ என்ற எண்ணத்தால் மீண்டும் கேட்டாள், "நான் சொன்னதன் பொருள் உங்களுக்கு விளங்க வில்லையா?" என்று.

"நன்றாக விளங்கியிருக்கிறது."

"என்ன விளங்கியிருக்கிறது?"

"உன்னை எனக்கு மணம் செய்து கொடுத்துக் கானாவிலேயே இருத்திக் கொள்ள திட்டமிடுகிறான் மன்னன்."

"ஆம்! அதுதான் திட்டம். யவனர்களிடமிருந்து சிறை மீட்டு வந்து மகளைப் போல் நடத்தும் என்னைத் திறமை சாலியான வீரனுக்குத்தான் கொடுப்பேன் என்று இலி-ஆஸு

பல முறை சொல்லியிருக்கிறான். உங்களை அத்தனை சிறந்த வீரனாக மதிக்கிறான் இலி-ஆஸு."

"மிக்க மகிழ்ச்சி" என்று சற்று இகழ்ச்சியுடன் சொன்ன இளஞ்செழியன், "ஆமாம். நீ யவனர்களிடம் அடிமையாக இருந்தாயா?" என்று வினவினான்.

"ஆம். இருந்தேன். கொள்ளைக்காரர்களால் பிடிக்கப் பட்டு அடுலீஸ் நகரத்தின் அடிமைச் சந்தையில் விற்கப் பட்டேன். யவன நாட்டு அரச குடும்பத்தார் ஒருவரால் வாங்கப்பட்டேன். அவர்களால் அரசி போலவே நடத்தப் பட்டேன். அவர்கள் எனக்கு உங்கள் நாட்டு வர்த்தகர்களைக் கொண்டு உங்கள் மொழியையும் பழகிக் கொடுத்தார்கள்..." என்று சொல்லிக் கொண்டே போன அலீமாவை இடை மறித்த இளஞ்செழியன் திடீரென மஞ்சத்திலிருந்து கீழே குதித்து, "ஏன், ஏன் பழக்கிக் கொடுத்தார்கள்?" என்று கேட்டு, அவள் அழகிய தோள்கள் இரண்டும் கன்னிச் சிவக்க தன் இரு கைகளாலும் பிடித்தான்.

"உங்கள் நாட்டுக்கு என்னை அனுப்ப எண்ணினார்கள்" என்று அலீமா, இளஞ்செழியன் முரட்டுத்தனத் துக்குக் காரணம் தெரியாமல் விழித்தாள்.

"எதற்காக அனுப்ப எண்ணினார்கள்?" என்று மீண்டும் கேட்டான், விதியின் விசித்திரத்தை எண்ணி ஆச்சரியக் கடலில் ஆழ்ந்த இளஞ்செழியன்.

"அவர்கள் அரசகுமாரி தமிழகம் செல்வதாயிருந்தது. அவளுக்குத் தோழியாக என்னை அனுப்பத் திட்டமிட்டார்கள்."

"அத்தனை நம்பிக்கையா அவர்களுக்கு உன்னிடம்?"

"ஆம், யவன அரச குடும்பத்தார் மிகவும் நல்லவர்கள். அவர்கள் மகளுக்கும் எனக்கும் எந்தவித வித்தியாசமும் வைக்கவேயில்லை. இந்தச் சனியன் இலி-ஆஸு அடுலீஸில் ஒரு நாள் யவனர் கூட்டத்தில் என்னைக் கண்டு கவர்ந்து இங்கு கொண்டு வராதிருந்தால் இத்தனை நாள் உங்கள் நாட்டில் இருப்பேன்-சாதாரண அலீமாவாக அல்ல..."

"பின் எப்படி?"

"அந்த நாட்டு ராணியின் தோழியாக!" இதைச் சற்றுப் பெருமையுடனேயே சொன்னாள் அலீமா.

மனிதன் கண்ணுக்கோ கருத்துக்கோ புலப்படாத ஆண்டவனின் சக்திக் கயிறுகள் எப்படியெப்படியெல்லாம் மனிதப் பொம்மைகளை இயக்குகின்றன. எந்தெந்த இடங்களில் கொண்டு மோதுகின்றன என்பதை நினைத்த இளஞ்செழியன் அந்த அறையின் கூரைக்காகக் கண்களை உயர்த்தினான். அவன் அகக்கண்களும் உயர்ந்தன. 'என் வாழ்வில் யவன ராணி மட்டும்தான் மோதினாள் என்று நினைத்தேன். அவள் தோழியும் மோதுகிறாளே. ஒருத்தி கடற்கரையில் அலை ஓரத்தில் காலில் இடறினாள், உணர் விழந்த நிலையில். இன்னொருத்தி அதே கடலோரம் நூற்றுக் கணக்கான கரங்களுக்கப்பால் மோதுகிறாள், உணர்ச்சிகள் துடிக்கும் நிலையில், அங்கும் கடலலைதான், இங்கும் அதோ வெளியே கடலலைதான். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமாகத்தான் மோதுகின்றன. பூம்புகாரின் கரி மணலில் சலசலவென்று மோதும் அதே இன்ப அலைகள், கானாவின் கற்களில் எத்தனை கோபமாகப் படேல் படேலென்று மோதுகின்றன! ஒரேவித அலைகள்! விதவிதமான எழுச்சிகள், மோதல்கள்! இவை கடல் அலைகளா! இல்லை இல்லை, ஆண்டவன் என்னை எடுத்துப் பல இடங்களிலும் வீச உந்திய விதியின் அலைகள்! விதியா! சேச்சே! எனக்குத்தான் அதில் நம்பிக்கையே இல்லையே! ஹிப்பலாஸும் ராணியும் நம்பிய அந்த விதி உண்மையாக இருக்குமா!' என்று பலப்பல விதமாக நினைத்து உணர்ச்சிக் கடலில் ஆழ்ந்தான்.

அவன் எண்ணங்கள் எங்கெங்கோ ஓடுவதை அலீமா அவன் முக பாவத்திலிருந்தே உணர்ந்தாள். அவனுக்கு ஆறுதலளிக்க அவன் கன்னங்களைச் சற்றே வருடவும் செய்தாள். "என் சொல்படி அடுத்த சில நாட்கள் நடவுங்கள். உங்களுடைய ஆசையை நான் நிறைவேற்றி வைக்கிறேன்" என்றாள் அலீமா.

இளஞ்செழியனின் கூரிய விழிகள் அலீமாவின் முகத்தில் பதிந்தன. "என் ஆசை ஒன்றுதான் அலீமா" என்றான் அவன்.

"அந்த ஆசையைச் சொல்லுங்கள்" என்றாள் அலீமா.

"தாய்நாடு திரும்ப வேண்டும்" என்றாள் இளஞ்செழியன்.

"அந்த ஆசையை நான் நிறைவேற்றி வைக்கிறேன்" என்றாள் அலீமா.

"எப்படி?"

"பொறுத்துப் பாருங்கள். என்னிடம் நம்பிக்கை மட்டும் வையுங்கள். சொல்வதைக் கேளுங்கள். நான் இட்ட ஆணையை மீறாதீர்கள். இதோ கையிலடித்து உறுதிமொழி கூறுங்கள்."

இளஞ்செழியன் அவள் தாமரைக் கையிலடித்து அவள் கேட்டபடி உறுதி மொழி கூறினான். அந்த வினாடியிலிருந்து அவள் ஆணைகள் பிறக்கத் தொடங்கின. ஆனால் அவள் இட்ட முதல் ஆணையே இளஞ்செழியனைக் கதி கலங்கச் செய்தது. அடுத்து வந்த ஆணைகள் அவனைப் பெரும் விபரீத வலைகளில் சிக்க வைக்கத் தொடங்கின.

70. முதல் ஆணை

தான் இடும் ஆணைகளைப் பின்பற்றி நடப்பதானால் அவன் ஆசையை நிறைவேற்றித் தமிழகம் செல்ல வழி செய்வதாக அலீமா கூறிய உறுதி மொழியின் விளைவாக அவள் கையிலடித்துச் சத்தியம் செய்த இளஞ்செழியன், அவளிட்ட முதல் ஆணையைக் கேட்டதுமே திடுக்கிட்டுப் போய் பெரிதும் சங்கடத்துக்குள்ளானதல்லாமல் அவளுடைய மற்ற ஆணைகளும் அப்படித்தானிருக்குமோ என்ற சந்தேகத்தால் பெரிதும் கலங்கினான். 'என்னை மணந்து கொள்வதாக இலி-ஆஸுவுக்கு உறுதி கூறுங்கள்' என்று தான் ஆணையிட்டதுமே அந்தத் தமிழக வீரன் முகத்தின் ஏற்பட்ட

திகிலுடன் குழப்பத்தையும் கண்ட அலீமா மிக இன்பமாகக் கேலி நகை புரிந்தாள். அவள் உதிரவிட்ட அந்தச் சிரிப்பு அவன் உள்ளத்தே திகிலுடன் கலந்து கொழுந்துவிட்ட கோபாக்னியையும் கிளறிவிடவே, "இதில் சிரிப்புக்கு இடமில்லை அலீமா! வெறுப்புக்குத்தான் இடமிருக்கிறது" என்று கூறினான் இளஞ்செழியன் சொற்களில் கடுகடுப்புத் துள்ளி விளையாட.

"இலி-ஆஸுவின் வளர்ப்பு மகளை மணப்பதில் அத்தனை வெறுப்பா உங்களுக்கு?" என்று கேட்ட அலீமா மீண்டும் நகைத்தாள்.

"உன் சிரிப்பு எனக்கு வேப்பங்காயாக இருக்கிறது" என்று பதிலுரைத்த இளஞ்செழியன் அவளை விட்டு இரண்டடி விலகி நடந்தான்.

அவள் மட்டும் நின்ற இடத்தைவிட்டு விலகாமலே தலையை மட்டும் திருப்பித் தன் அழகிய விழிகளால் அவனை நோக்கிவிட்டுக் கேட்டாள், "வேப்பங்காயா! அது என்ன?" என்று.

"அது ஒரு மரத்தின் காய், கசக்கும்."

"என் சிரிப்பு கசக்கிறதா உங்களுக்கு?"

"சந்தேகமென்ன? உன் ஆணை, சிரிப்பு எல்லாமே அசந்தர்ப்பம். அசந்தர்ப்பமாயிருப்பது ருசிப்பது கஷ்டம்."

"நான் ஈச்சம் பழம் போல் இனிப்பவள் என்று என் வளர்ப்புத் தந்தை சொல்வார். இந்தச் சாம்பிராணி நாட்டில் எத்தனையோ வீரர்கள் என்னை அப்படித்தான் நினைக்கிறார்கள்."

"ஈச்சம் பழத்தைவிட இனிப்பானது இந்தப் பாலைவனத்தில் என்ன இருக்கும்?" என்று அலுத்துக் கொண்டான் இளஞ்செழியன்.

"ஓகோ! ஈச்சம் பழத்தைவிட அதிகம் இனிக்கும் பழங்கள் தமிழகத்தில் உண்டு போலிருக்கிறது!" என்று ஏதோ சந்தேகம் கேட்பவள் போல் கேட்டு இளஞ்செழியனை சில விநாடிகள் உற்று நோக்கினாள் அலீமா. பிறகு மஞ்சத்தை

அணுகி அதன் முகப்பில் தாராளமாக உட்கார்ந்து கொண்டாள்.

எழிலெல்லாம் எழுந்து நோக்க மஞ்சத்தில் அமர்ந்த அந்த அரபு மங்கையைச் சில விநாடிகள் பார்த்துக் கொண்டு மௌனமாக நின்ற இளஞ்செழியன் கடைசியில் "ஆம் ஆம்! தமிழகத்தில் இனிக்கும் பழங்கள் பல உண்டு. ஏன்! தமிழகத்தைப் பற்றி நினைத்தாலும் பேசினாலுங்கூட இனிக்கும்" என்றான்.

அவன் தமிழகத்தைப் பற்றி நாட்டுப் பற்றுடன் பேசிய பேச்சுக்களைப் புறக்கணித்த அலீமா பேச்சின் முதற் பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு, "தமிழகத்தில் பலப்பல இனிய பழங்களை நீங்கள் ருசி பார்த்திருப்பீர்கள்! அதனால்தான் இந்த ஈச்சம்பழத்தின் ஆணையை நிறைவேற்ற மறுக்கின்றீர்கள். காரணம் புரிகிறது" என்று கூறி விஷமமாகப் புன்முறுவல் செய்தாள்.

இளஞ்செழியனுக்கு அப்பொழுதிருந்த மனோ நிலைக்கும் நகைச்சுவைக்கும் தூரம் பெரிதுமிருந்ததால், அவன் முகத்தில் கவலைக் குறியே அதிகமாகப் படர்ந்து நின்றது. உள்ளத்திலோடிய எண்ணங்களை இலி-ஆஸுவின் வளர்ப்பு மகளுக்குத் தெளிவாக்கவும் அவள் ஆணையை நிறைவேற்றுவது அவ்வளவு எளிதல்ல என்பதைப் புரிய வைக்கவும் மஞ்சத்தில் அணுகி அவன் எதிரே நின்ற இளஞ்செழியன் நிதானமும் உறுதியும் நிறைந்த குரலில் சொன்னான்:

"அலீமா, என் கதையை முழுவதும் சொல்ல இப்பொழுது அவகாசமில்லை. அதற்குத் தேவையுமில்லை. இதைத் திட்டமாகத் தெரிந்து கொள். என் இதயத்தில் இப்பொழுது தமிழகத்தின் நலன் ஒன்றைத் தவிர வேறு எதற்கும் இடமில்லை. எங்கள் நாட்டில் அநீதிகள் பல நிகழ்ந்து விட்டன. மாற்றார் ஆதிக்கம் அங்கு நிலைப்பதற்கும் மார்க்கமேற்பட்டிருக்கிறது. தமிழகத்துக்குத் தளைகளை மாட்டப் புகாரின் யவனர்கள் திட்டங்களை உருவாக்கி

வருகிறார்கள். அந்தத் திட்டங்கள் உருவாக்கிப் பயனும் அளிக்க உதவி செய்யும் புல்லுருவிகளும் நாட்டில் ஏற்பட்டிருக்கிறார்கள். இத்தனை நாள் மாபெரும் தமிழ் மன்னர்கள் தங்கள் ரத்தத்தை ஊற்றி வளர்த்த தமிழ்ச் சுதந்திரப் பயிர் சாகாதிருக்கக் களையெடுக்க வேண்டும். தமிழர்கள் கைகள் அந்தப் பணியில் திடப்பட வேண்டும். அவற்றைப் வலுப்படுத்த நான் தமிழகம் செல்ல வேண்டும். அந்தப் பணி முடியும் வரையில் காதலுக்கோ திருமணத்துக்கோ இடமில்லை."

அவன் பேசுவதில் சற்றும் குறுக்கிடாமலே கேட்டுக் கொண்டிருந்த அலிமா கடைசியாக வினவினாள்: "அதற்குப் பிறகு...?"

இளஞ்செழியன் அவள் கண்களைப் பார்க்க முடியாமல் தரையில் தாழ்த்திக் கொண்டான். "அதற்குப் பிறகும் முடியாது அலீமா" என்றும் முணுமுணுத்தான் அவள் காதில் மெல்ல விழும்படியாக.

"அப்படியானால் உங்கள இதயத்தைச் சிலர் ஏற்கெனவே பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் இல்லையா?" என்று அலீமா வினவினாள்.

"சிலர் என்பது தமிழகத்தில் இல்லை அலீமா. அந்தப் புரம் வைத்து மறைவு கட்டி, பல பெண்களை உள்ளடைப்பது என்பதெல்லாம் தமிழர் பழக்கமல்ல. அரசர்களைத் தவிர மற்றவர்கள் ஒருத்திக்கு மேல் இரண்டாமவளை மணப்பதும் கிடையாது. அப்படி ஏதாவதிருந்தால் அது ஆபூர்வம்" என்றான் இளஞ்செழியன்.

"இங்கு அது சகஜம்" என்றாள் அலீமா.

"இலி-ஆஸுவின் கேளிக்கை மண்டபத்தைப் பார்த்ததுமே புரிந்து கொண்டேன்."

"அந்தந்த நாட்டிலிருக்கும்போது அந்தந்த நாட்டுப் பழக்கத்தைத்தானே பின்பற்ற வேண்டும்?"

"பழக்கத்தை மாற்றிக் கொள்வது அவ்வளவு எளிதல்ல. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்று எங்கள் நாட்டில் ஒரு பழமொழி உண்டு."

"அந்தப் பழமொழி உண்மைதான். சந்தேகமில்லை."

"ஒப்புக் கொள்கிறாயா?"

"ஒப்புக் கொள்கிறேன். ஏன் தெரியுமா?"

"ஏன்?"

"உங்கள் தொட்டில் பழக்கத்தை நாளைக் காலையில் நீங்கள் கடைப்பிடித்தால் நாளை மாலைக்குள் சுடுகாட்டுக்குப் போய் விடலாம்." இந்த வார்த்தைகளைச் சற்று அழுத்தியே சொன்ன அலீமா இளஞ்செழியன் கைகளைப் பிடித்து மஞ்சத்தில் அவனை உட்கார வைத்து விட்டுத் தான் எழுந்து தரையில் நின்று கொண்டாள். பிறகு அவன்மீது ஒரு வினாடி தன் அழகிய விழிகளை ஓட்டினாள். கடைசியாகக் கூறினாள் விழிகளை அவன் மீதிருந்து அகற்றாமலே, "என் கண்களைப் பாருங்கள்" என்று.

இளஞ்செழியன் அவள் கண்களை நன்றாக ஏறெடுத்துப் பார்த்துவிட்டு, "பார்த்தேன் அலீமா" என்றான்.

"கண்கள் மனத்தின் வாயில்கள் என்று இந்த நாட்டில் சொல்வார்கள்" என்றாள் அலீமா.

"உண்மைதான் அலீமா."

"வஞ்சகக் கண்களா இவை? நன்றாக உற்றுப் பார்த்துச் சொல்லுங்கள்."

"இல்லை அலீமா இல்லை. நிர்மலமான கண்கள். அவற்றில் வஞ்சகம் சிறிதும் இல்லை."

இதைக் கேட்டதால் சற்றுப் பெருமூச்செறிந்துவிட்டு "உங்கள் சொற்கள் என் இதயத்தில் அமுதம் போல் பாய்கின்றன. வீரரே! உங்களை நன்றாக நான் புரிந்து கொண்டுவிட்டேன். உங்கள் இதயத்தை வேறொரு பெண் பிடித்துக் கொண்டிருக்கிறாள். ஆகையால்தான் குழம்பிக் குழம்பி ஏதேதோ பேசுகிறீர்கள். ஆனால் அச்சப்படாதீர்கள். நான் எப்படியும் உங்களைக் காப்பாற்றித் தமிழகம் செல்ல ஏற்பாடு செய்கிறேன். ஆனால் நீங்கள் என்னை மணந்தாலும் மணக்க விட்டாலும் மணப்பதாக நாளை இலி-ஆஸுவிடம் உறுதி கூறிவிடுங்கள். இது விஷயத்தில் ஆணையிட்டதை மறக்கா

தீர்கள். உறுதி கூறினால் அதை நிறைவேற்ற வேண்டும் என்ற அவசியமில்லை..." என்று சொல்லிக் கொண்டே போன அலீமாவை இடைமறித்த இளஞ்செழியன், "தவறு அலீமா! தவறு. வார்த்தையை மீறும் வழக்கம் எனக்கில்லை" என்றான்.

அலீமாவின் குரல் திடமாக ஒலித்தது. "பெரிய நன்மைகளைச் செய்ய, சிறிது தவறு செய்வது சாத்திர சம்மதமென்று எனக்கும் யவன அரச குமாரிக்கும் தமிழ் மொழி பயிலுவித்த வணிகர் பல முறை சொல்லியிருக்கிறார். சில சமயங்களில் பொய் சொல்வதும் அநீதியாகாது என்றும் அவர் கூறியிருக்கிறார். உங்கள் நாட்டு சாத்திரமெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் என்னை மணக்க மறுத்தால் உங்கள் கதி என்னவாகுமென்பது எனக்குத் தெரியும். இறந்த பின்பு நீங்கள் உங்கள் நாட்டுக்கு என்ன உதவியைச் செய்ய முடியும்? ஆகவே நன்றாக யோசித்து நல்ல முடிவுக்கு வாருங்கள். நாளைக் காலையில் என்னைச் சந்தித்ததும் இலி-ஆஸு கேட்பான். இரவில் தமிழன் என்ன சொன்னான், எப்படி நடந்து கொண்டான் என்று. நான் மிக இன்பமாகப் பொழுதை ஓட்டியதாகச் சொல்வேன். நீங்களும் மறுக்காதீர்கள். உங்கள் இதயராணியை ஒருநாள் நீங்கள் சந்திக்க ஆசைப்பட்டால், கானாவின் இந்த ஏழை ராணியுடன் சிலநாட்கள் நீங்கள் சிரித்து விளையாடித்தான் ஆக வேண்டும். இலி-ஆஸுவின் கண்களிலும் கானா மக்களின் கண்களிலும் நாம் காதலராக நாடகம் ஆடுவதில் தவறில்லை. பலனுண்டு" என்றாள், அலீமா.

"என்ன பலன் அலீமா?"

"அரசரைப் போலவே நீங்கள் நடத்தப்படுவீர்கள். உங்கள் மீது எப்பொழுதும் வீரர்கள் ஒரு கண்ணை வைத்திருந்தாலும் உங்களுக்குப் பணிந்தே நடப்பார்கள். திருமணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இன்னும் ஒரு மாதம் வரை திருமணம் இருக்காது."

"ஏன் அலீமா?"

"சாம்பிராணிப் பாலை எடுக்கும் காலம் வந்துவிட்டது. அது முடிந்த பிறகுதான் நல்ல காரியங்கள் எதுவும் இந்த நாட்டில் நடக்கும். ஒரு மாதம் இடைவெளியிருக்கிறது. இந்த ஒரு மாதத்தில் நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால் இங்கிருந்து விடுதலையடைய முடியும்."

இளஞ்செழியன் ஆழ்ந்து யோசிக்கக் கண்களைச் சிறிது மூடினான். அவன் அகக்கண்ணில் அலீமாவின் தன்னலமற்ற தியாகம் பெரிதாக எழுந்து அவன் மனம் பூராவையும் சுற்றி வளைத்துக் கொண்டது. 'ஆனால் இத்தனை உதவியை அலீமா எனக்கு ஏன் செய்கிறாள்?' என்று தன்னைத்தானே ஒரு முறை கேட்டுக் கொண்டான்.

அவன் உள்ளத்தெழுந்த கேள்வியைக் கண்டறிந்து விட்டவள் போல் அலீமா பதில் சொன்னாள், "இத்தனை உதவியை நான் செய்ய முன்வருவது உங்களுக்கு வியப்பாயிருக்கலாம். ஆனால் அதற்குக் காரணமிருக்கிறது. நான் அரபுநாட்டில் பிறந்தேனே தவிர வளர்ந்ததெல்லாம் யவன நாட்டில், யவனரின் அடிமைப் பெண்ணாக யாருமே என்னைக் கருதவில்லை. அன்பையெல்லாம் என்மீது அள்ளிக் கொட்டினார்கள். எந்த அரச குமாரிக்கு என்னைத் தோழியாக எண்ணிப் பழக்கினார்களோ அந்த அரச குமாரியைத் தமிழகத்தின் யவன ராணியென்றே நாங்களும் அழைத்தோம். யவனராணி என்னைத் தோழிபோல் பாவிக்கவில்லை. சொந்த சகோதரிபோல் பாவித்தாள். அவளை விட்டுப் பிரியவே எனக்கு மனம் வரவில்லை. வேறொரு தமிழ்ப் பெண்ணை எண்ணி என்னைத்தான் வேப்பங்காயாக நினைத்தீர்கள். ஆனால் யவன ராணியை மட்டும் நீர் கண்டு விட்டால்..." என்று சொல்லிச் சற்றுப் பேச்சை நிறுத்தினான்.

இளஞ்செழியன் புன்முறுவல் செய்தான். ஆனால் பதிலேதும் சொல்லவில்லை. இந்தப் புன்முறுவலைத் தவறாக அர்த்தம் செய்து கொண்ட அலீமா உணர்ச்சியுடன் பேசினாள். "தமிழக வீரர் இப்பொழுது இகழ்ச்சி நகை புரியலாம். ஆனால் யவன ராணியின் மீது கண்கள் ஒரு

விநாடி நிலைத்தால் தெரியும். அந்த வசீகரக் கண்களின் காந்தத்தில் இழுபடாத வாள் வீரன் உலகத்தில் எவனுமிருக்க முடியாது. அவள் குழல் பத்தரை மாற்றுப் பசும்பொன்னைப் பழிக்கும். கண்கள் கடல் நீலத்தைக் கேலி செய்யும். வெண் கழுத்து சங்கின் வெண்மையைப் பழுப்பாகக் காட்டும். கன்னங்கள் வெட்கத்திலும் கோபத்திலும் எத்தனை சிவக்கும் தெரியுமா? ஒருவேளை இந்த நகரத்திலிருந்து தப்பி நாம் தமிழகம் சேர்ந்தால், ஆண்டவன் செயலால் ராணி அங்கிருந் தால் அவளை உங்களுக்குக் காட்டுகிறேன். அப்புறம் உங்கள் தமிழரசி உங்கள் இதயத்தைவிட்டுப் பறந்துவிடுவாள். அதுமட்டுமல்ல வீரரே! ஒருவேளை அவள் அரசை நிறுவி யிருந்தால் உங்களுக்கு நல்ல பதவியும் கிடைக்கும்" என்று அலீமா உறுதி கூறினாள்.

இளஞ்செழியன் முகத்தில் எத்தனை எத்தனையோ விவரிக்க இயலாத உணர்ச்சிகள் கலந்து தாண்டவமாடின. உள்ளத்தில் ஏதேதோ போராட்டங்கள் நிகழ்ந்து கொண் டிருந்தன. கிரேக்க சலவைக் கற்சிலைகளையும் பழிக்கும் யவன ராணியின் எழில் முகம் அவன் இதயத்தே எழுந்தது. அவள் நீலமணிக் கண்கள் அவனை நோக்கி நகைப்பதைப் போன்ற பிரமை ஏற்பட்டது. "உலகத்தில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் என்னை நீங்கள் மறக்க முடியாது படைத் தலைவரே! விதி நம் இருவரையும் பிணைத்திருக்கிறது" என்று அவள் மெல்லிய இதழ்கள் அசைந்து பேசுவது போலவும் தோன்றியது படைத்தலைவனுக்கு. எண்ணம் எத்தனை வேக முடையது! அது எத்தனை தூரத்தை எத்தனை விநாடிகளில் கடக்க முடிகிறது! படைத்தலைவன் இதயக் கண்களிலே அதோ அந்தப் பூம்புகாரே தோன்றுகிறது. அதோ கடற்கரை யில் கூத்திடும் பரதவரின் கூட்டம்! அதோ கேட்கிறதே சுங்கச் சாவடியில் விலை போட்டியிடும் வணிகரின் கூச்சல்! அதோ புரண்டுவருகிறது ஒரு பேரலை! அது காலில் தாக்கி விட்டதே! என்ன தட்டுப்படுகிறது காலில்! அப்பப்பா! இவள் யார்? கலங்கரை விளக்கமே, உன்னால் ஏன் இத்தனை விளக்கம்!

எதற்காக உன் நெருப்புச் சுடரொளியை இந்த பொற்பாவை மீது வீசி என் மனத்தை அலைக்கழிக்கிறாய்! சரி! சரி! மூர்ச்சையாகக் கிடக்கிறாள் இவள்! சரி, தூக்குகிறேன். அப்பப்பா! இந்த அழகியைத் தூக்கிக் கொண்டு எப்படிப் போவேன்! கையிலென்ன அன்னப் பறவையா! ஹிப்பலாஸ்! ஹிப்பலாஸ்!

இப்படி ஏதேதோ காட்சிகள், எண்ணங்கள் எழுந்து ஊசலாடியதால் கடைசியாக உச்சரித்த ஹிப்பாலாஸின் பெயரைச்சற்று இரைத்தே உச்சரித்தான் இளஞ்செழியன். "யாரது ஹிப்பலாஸ்?" என்று அலீமா கேட்ட கேள்வியே படைத்தலைவனை இந்த உலகத்துக்கு இழுத்தது. பூவழகிக்கு அடுத்தபடியாகத் தன் மனத்தை அத்தனை தூரம் ஆட் கொண்ட அந்த மாயச் சிலையின் சக்தி எத்தனையோ காதங் களுக்கு அப்பாலிருந்தாலும், தன்னை நிலை தடுமாறச் செய்வதை எண்ணி இளஞ்செழியன் மெள்ள சுய நிலையைப் பூரணமாக அடைந்து, "ஹிப்பலாஸா! அவன்தான் என் நண்பன்... உம்... வெளியே படுத்திருக்கிறான்'' என்று சமாளித்தான்.

பொழுது புலரும் சமயம் நெருங்கிவிட்டதை உணர்ந்த அலீமா அதற்குமேல் பேச்சை வளர்த்த விரும்பாமல், "தமிழக வீரரே! கடைசி முறையாகச் சொல்கிறேன். இலி-ஆஸுவின் பயங்கரப் பராமரிப்பில் தினசரி கைகால்கள் வெட்டப்பட்டு, நாக்கு துண்டிக்கப்பட்டு ஆட்கள் சாம்பிராணிக் காட்டுக்கு அனுப்பப்படும் இந்தக் கோரப் பிரதேசத்தில் இருக்க என்னால் முடியவில்லை. நான் வளர்ந்த சூழ்நிலை வேறு. என் மனப்போக்கும் வேறு. இன்னும் சில நாட்கள் நான் இங்கிருந்தால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். இங்கிருந்து தப்ப வழியைப் பல நாட்களாகப் பார்த்துக் கொண்டிருக் கிறேன். கிடைக்கவில்லை. கொள்ளைக்காரர்களைப் பிடித்துக் கொடுக்க நீங்கள் செய்த தந்திரம் இலி-ஆஸுவை நன்றி யுள்ளவனாகச் செய்திருக்கிறது. இதுதான் எனக்கும்

சந்தர்ப்பம், உங்களுக்கும் சந்தர்ப்பம். ஆகவே நான் சொல்வதைத் தெளிவாகக் கேட்டுக் கொள்ளுங்கள். நாளைக் காலை இலி-ஆஸு உங்களைக் கேட்பான். 'என் மகளை மணக்கிறாயா?' என்று, 'சரி' என்று சொல்லுங்கள். வேறு என்ன வேண்டுமென்றும் கேட்பான். நீங்கள் பிடித்துக் கொடுத்த கப்பலையும் பிடிக்கப்பட்ட சில அடிமைகளையும் கேளுங்கள்" என்று உத்தரவிடும் பாவனையில் திட்டமாகக் கூறினாள்.

"அடிமைகள் எதற்கு?" என்று கேட்டான் இளஞ் செழியன் ஆச்சரியத்துடன்.

"கப்பலை ஓட்ட உங்களுக்கு ஆட்கள் வேண்டாமா?"

"வேண்டும்."

"ஆட்கள் திடீரென ஆகாயத்திலிருந்து குதிப்பார்களா?"

"நான் பிடித்துக் கொடுத்த ஆட்களையே நான் கேட்டால் இலி-ஆஸு" சந்தேகப்பட மாட்டானா?"

"நீங்கள் பிடித்துக் கொடுத்த ஆட்களைக் கேட்க வேண்டாம். உங்கள் ஆட்களைக் கேளுங்கள்."

"எனக்கு ஆட்கள் ஏது?"

"ஏதோ ஐம்பது அறுபது வீரர்கள் உங்களுடன் கரைக்கு வந்ததாக இங்குள்ள படைத்தலைவன் இலி-ஆஸுவிடம் சொன்னானே?"

"அவர்கள் அடிமை வர்த்தகர்களல்லவா?"

"யாராயிருந்தாலும் பாதகமில்லை. துடுப்புகளைத் துழாவ, கப்பலைச் செலுத்த நமக்கு ஆட்கள் தேவை. மற்ற விஷயங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்."

"நீ என்ன பார்த்துக் கொள்ளமுடியும்?"

"கப்பலைத் தலைமை வகித்து நடத்துவேன்."

"என்ன?" இளஞ்செழியன் குரலில் ஆச்சரியம் பெரிதாகத் தொனித்தது.

"என்ன அப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்! நீல நதியில் எத்தனைக் கபபல்களைச் செலுத்தியிருக்கிறேன்? எனக்குத்

தெரியாத துறைமுகம் எகிப்து நாட்டில் கிடையாது வீரரே! மூஸல், பெரினிஸ், அடுலீஸ், எல்லா துறைமுகங்களிலும் எனக்குத் தெரிந்தவர்களிருக்கிறார்கள். சுமார் நான்கு வருடங்கள் யவனர் கடற்படைத் தலைவனான டைபீரியஸ் என்பவன், என்னையும் யவன ராணியையும் இந்தத் துறைமுகங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றிருக்கிறான். டைபீரியஸ் மகாவீரன். அவன்தான் ராணிக்குத் துணையாகச் செல்வதாயிருந்தது. கப்பல்களை நடத்துவதிலும் கப்பல் சண்டையிலும் அவனை வெல்ல யாராலும் முடியாது. எனக்கும் ராணிக்கும் அவனே கப்பலோட்டும் பயிற்சியளித் தான்" என்று விளக்கினாள் அலீமா.

எதிர்பாராத சக்திகள் பல தன் வாழ்வைச் சூழ்வதை அறிந்த இளஞ்செழியன் பலவாறு யோசித்தான். தன்னைச் சூழ்பவை யவன ராணியும் ஹிப்பலாஸும் நம்பும் விதியின் கயிறுகளாயிருந்தால் மதியாகிய வாளால் அவற்றைத் துண்டிக்கத் தீர்மானம் செய்தான். அத்துடன் கானாவை விட்டு நகருவதாயிருந்தால் அலீமாவின் உதவியைத் தவிர வேறு உதவி தனக்குக் கிடைப்பது கஷ்டமென்பதைப் புரிந்து கொண்ட இளஞ்செழியன் அவள் சொற்படி நடப்பதென்றும் உறுதி செய்து கொண்டான். ஆகவே மறுநாள் இலி-ஆஸு அவனை அழைத்துத் திருமண சம்மதம் கேட்டவுடன் தங்கு தடையில்லாமல் ஒப்புக் கொண்டான். இலி-ஆஸுவின் மகிழ்ச்சி எல்லை கடந்தது. இளஞ்செழியனைக் கிட்ட அழைத்து இறுக அணைத்துக் கொண்டு, "இனி இந்தக் கானாவே உன்னைச் சேர்ந்ததென்று நினைத்துக் கொள். எதையும் நீ இங்கு அடையலாம். எங்கும் உலாவலாம். உன் வார்த்தை இங்கு கட்டளை" என்று கூறினான்.

ஒரே நாளில் இத்தனை அன்பு, திருமணம், பதவி எல்லாம் கிடைப்பது நம்பமுடியாததாயிருந்தது இளஞ்செழிய னுக்கு. 'திடீரென எவனோ முன்பின் தெரியாதவன் வருகிறான். தான் தப்புவதற்காக ஒரு கப்பலைப் பிடித்துக்

கொடுக்கிறான். இதற்காக அவனுக்குப் பெண்ணையா கொடுத்து விடுவான் ஒரு மன்னன்? இலி-ஆஸு அப்படிப் பைத்தியம் பிடித்தவனாகவும் தெரியவில்லையே' என்று நினைத்த இளஞ்செழியன் மனத்தில் சந்தேக மேகங்கள் எழுந்து ஊசலாடின. ஏதோ ஆழ்ந்த கருத்துடனேயே இலி-ஆஸு தனக்கு ராஜோபசாரம் நடத்துகிறானென்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டான் சோழர் படையின் உபதலைவன். அவன் சந்தேகங்களுக்குத் தகுந்த ஆதாரம் அடுத்த சில நாட்களிலேயே கிடைத்ததும் தனக்கு எத்தனை பெரிய படுகுழியை இலி-ஆஸு தோண்டியிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டான் இளஞ்செழியன்.

71. பேரிகை ஒலியும் அலீமாவின் கிலியும்

கொள்ளைக்காரர்களிடமிருந்து எப்படியாவது தப்பித் தமிழகம் திரும்பவேண்டுமென்ற எண்ணத்தால் அவர்களுடைய பொன்னாசையைக் கிளறிவிட்டு, கப்பலின் திசையைத் திருப்பிக் கானாவுக்குக் கொண்டு வந்து அவர்களனைவரையும் இலி-ஆஸுவிடம் சிக்க வைத்த இளஞ்செழியன், கானாவை அடைந்த சில நாட்களுக்குள்ளாக இலி-ஆஸுவிடம் கொள்ளைக்காரர்களை விட ஒருபடி அதிகமாகத் தான் சிக்கியிருப்பதை உணர்ந்து, காட்டுத் தீக்குத் தப்பியவன் மடுவில் விழுந்த கதையாகத் தன் தந்திரம் பலனளித்து விட்டதை நினைத்துப் பெரிதும் மனம் கலங்கினான். கானாவுக்குத் தான் கப்பலைக் கொண்டு வந்த இரவில் இரண்டு ஜாமங்களுக்குள்ளாகத் தனக்கு ஏற்பட்ட சௌகரியங்களை நினைத்து ஆரம்பத்திலேயே சந்தேகப்பட்ட இளஞ்செழியனுக்கு இரண்டு நாட்கள் ஓடி மறைந்த வுடனேயே அந்தச் சந்தேகம் வலுப்பட்டு, இலி-ஆஸுவின் திடீர் அபிமானத்துக்கு ஆழ்ந்த காரணம் ஏதோ இருக்க வேண்டுமென்ற ஞானோதயமும் ஏற்பட்டது. அலீமா முதல் நள்ளிரவு சொன்னபடி மறுநாட் காலையில் அவன் காலைக்

கடன்களை முடித்துக் கொண்டதுமே இலி-ஆஸு அவனைத் தன் அந்தரங்க அறைக்குக் கூப்பிட்டனுப்பி, எதிரே பொற் கிண்ணங்களிலிருந்த பழ வகையறாக்களையும் எடுத்துக் கொள்ளப் பணித்ததன்றி, தனக்குப் பக்கத்தில் தன் ஆசனத்திலேயே சரிசமானமாக உட்காரவும் அனுமதித்தான். அப்படி அவன் உட்கார்ந்திருப்பதைக் காவலருக்கு அறிவிக்கும் நோக்கத்துடன் மாளிகைக் காவலர் தலைவனை வரவழைத்து, "நேற்றிரவு பிடிபட்டவர்களைச் சரியாகக் கவனித்துக் கொள். இன்னும் இரண்டு நாட்களில் அவர்களை விசாரிக்கிறேன். அதுவரை இந்த வீரனுடன் எனக்குச் சில அலுவல்கள் இருக்கின்றன" என்று உத்தரவிட்டுக் கடைசி வார்த்தைகளை உச்சரித்த சமயத்தில் படைத் தலைவன் முதுகையும் ஆசையாகத் தன் பெரும் கையினால் தட்டிக் கொடுத்தான். இலி-ஆஸுவுக்குச் சமானமாக இளஞ்செழியன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் ஆச்சரியக்குறி ஒரு வினாடி துளிர்த்ததானாலும், மன்னனிடமிருந்த மிதமிஞ்சிய அச்சத்தால் சட்டென்று ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டு உத்தரவுகளை மிகப் பணிவுடன் கேட்டுச் சிரம் தாழ்த்தி விட்டுச் சென்றான்.

காவலர் தலைவன் சென்றதும் இலி-ஆஸு இளஞ்செழியனை நோக்கி, "தமிழா! உன்னால் இருவித உதவிகளை நான் அடைந்திருக்கிறேன். அதற்கு என்ன கைம்மாறு செய்வதென்று எனக்கு விளங்கவில்லை" என்று சொல்லி மகிழ்ச்சி முகத்தில் பொங்கப் புன்முறுவல் செய்தான்.

இலி-ஆஸு எந்த இருவித உதவிகளைக் குறிப்பிடுகிறான் என்பது புரியாததால் இளஞ்செழியன் பணிவு நிரம்பிய குரலில், "இருவித உதவிகள் ஏது மன்னவா! செய்தது ஒரு பணி. அதை உதவி என்று சொல்வதும் பொருந்தாது" என்றான்.

இதைக் கேட்ட இலி-ஆஸு விஷமமாகச் சிரித்தான். அவன் சிரித்தபோது அவன் பெரும் கன்னக் கதுப்புகளில் பயங்கரமே இருந்ததைக் கவனித்த இளஞ்செழியன்

இலி-ஆஸுவின் குரூரம் எத்தனை தூரம் வேண்டுமானாலும் செல்ல வல்லது என்பதைப் புரிந்து கொண்டான். அடுத்துப் பேசிய இலி-ஆஸுவின் சொற்கள் மேலுக்கு சாந்தமாகவும் சந்துஷ்டி வாய்ந்ததாகவும் தோன்றிய போதிலும், ஏதோ ஆழமான உட்கருத்து அவற்றுக்குப் பின்னாலிருப்பதை இளஞ்செழியன் சந்தேகமற உணர்ந்து கொண்டான்.

சிரித்துக் கொண்டே சொன்னான் இலி-ஆஸு, "தமிழர் கெட்டிக்காரர்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன். தமிழ் வணிகர்களைப் பார்த்தும் இருக்கிறேன். ஆனால் உன்னைப் போன்ற ஒரு திறமைசாலியை நான் பார்த்ததில்லை. வீரன் மட்டுமல்ல. தந்திரசாலியுங்கூட. எண்ணிய காரியத்தைச் சாதிப்பதிலும் வல்லவன்" என்று.

"மன்னவர் இந்த ஏழையை அனாவசியமாகப் புகழ்கிறார்" என்று குழைந்தான் இளஞ்செழியன், இலி-ஆஸுவின் மன ஆழத்தை அளக்க எண்ணி.

"புகழவில்லை தமிழா! இலி-ஆஸு உண்மையைத்தான் பேசுகிறான்."

"மன்னர் சொல்வது என் சிற்றறிவுக்கு எட்டவில்லை."

"இதில் எந்த அறிவுக்கும் எட்டாதது எதுவுமே இல்லை. இருபெரு உதவிகளை எனக்குச் செயதிருக்கிறாய். ஆனால் எந்த உதவியையும் செய்யவில்லை என்று சாதிக்கிறாய், அத்தனை அடக்கம் எதற்கு? இலி-ஆஸுவைத் திருப்தி செய்ய மனம் கவர் வித்தையைக்கூடத் தமிழகத்தில் சொல்லிக் கொடுக்கிறார்கள் போலும்!" என்று பதில் சொன்ன இலி-ஆஸு தான் ஏதோ பெரிய மர்மத்தைக் கண்டுபிடித்து விட்டவன் போலும், யாரும் சொல்ல முடியாத ஹாஸ்யத்தைச் சொல்லிவிட்டது போலும் இடி இடியென ராட்சஸச் சிரிப்புச் சிரித்து அந்த அறையின் சுவர்களையே குலுங்க வைத்தான்.

இலி-ஆஸுவின் வார்த்தைகளையும் இடி நகையையும் கேட்டதும் உணர்ச்சிகள் பழைய நிலையைப் பூரணமாக அடைந்துவிடவே தனக்கும் இடைவெட்டாகப் பேசத்

தெரியுமென்பதைக் காட்ட முற்பட்ட படைத்தலைவன், "மன்னர் ஊகம் சரியல்ல. தமிழகத்தில் மனம் கவர் வித்தை யென்பது தனியாகக் கிடையாது. பண்பு என்பது ஒன்று உண்டு" என்று கூறிப் பண்பு என்ற சொல்லைச் சற்று அழுத்திச் சொன்னான்.

"பண்பா? அது என்ன அது?" என்று வினவினான் இலி-ஆஸு.

"தமிழர்களின் தனிச்செல்வம்."

"முத்து, பவளம் இவற்றைவிட விலை உயர்ந்ததா?"

"விலையுயர்ந்தது என்பதைவிட விலையற்றது என்று சொல்லலாம்."

"அப்படியானால் அந்தச் செல்வம் மிகக் குறைவாகத் தான் கிடைக்கும்."

"இல்லை, எங்கள் நாட்டில் அதிகம். மற்ற நாடுகளில் அத்தனை அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை."

இளஞ்செழியன் பேச்சில் ஏதோ விஷமமிருப்பதாகப் புரிந்து கொண்டதன் சாயை இலி-ஆஸுவின் முகத்தில் மெள்ளப் படர்ந்தது. அடுத்தபடி அவன் கேட்ட கேள்வி அவன் உண்மையை ஓரளவு புரிந்து கொண்டு விட்டானென் பதையும் உணர்த்தியது. "அந்தச் செல்வம் உன்னிடமும் இருக்கிறதா?" என்று கேட்டான் இலி-ஆஸு.

அதற்கு மேலும் இலி-ஆஸுவிடம் தன் சாமர்த் தியத்தைக் காட்டுவது ஆபத்தில் கொண்டுவிடும் என்பதைத் தெரிந்து கொண்ட இளஞ்செழியன், "அதை நானே சொல்வது தற்பெருமையாகும். தான் செய்த காரியங்களைப் பெரிதாக மதிக்காதிருத்தல், செய்த உதவியைப் பறைசாற்றாதிருத்தல், பிறர் மனம் புண்பட நடக்காதிருத்தல் இந்த மாதிரி சில மனித குணங்களின் தொகுப்பைத்தான் எங்கள் நாட்டிர் பண்பு என்கிறோம். முத்தையும் பவளத்தையும் வைர வைடூரியங் களையும் விட இந்தச் செல்வத்தைப் பெரிதாக மதிக்கிறோம்" என்று மெள்ள விளக்கினான்.

இதைக் கேட்ட இலி-ஆஸு மீண்டும் அசுரச் சிரிப்புச் சிரித்து, "தமிழா! நீ செய்கையில் மட்டுமல்ல, பேச்சிலும் வல்லவன். ஆனால் உன் பண்பு எத்தகையதானாலும் நீ செய்த உதவிகளை இலி-ஆஸுவிடம் மறைக்க வேண்டிய அவசிய மில்லை. கொள்ளைக் கப்பலை எந்தக் காரணத்தை முன்னிட்டுப் பிடித்துக் கொடுத்தாலும், பிடித்துக் கொடுத்தது பெரும் உதவி, அந்தக் கப்பலின் தலைவன் அறையிலிருந்த இரும்புப் பெட்டியில் லட்சக்கணக்கான பொற் காசுகள் பெறுமான நகைகளும், வைரங்களும் கிடைத்தன. அந்தக் கப்பலும் கிரேக்கர்கள் கப்பல். பக்கத்துக்கு முப்பது துடுப்புகள் துழாவக்கூடியது. சாம்பிராணிப் பொதிகளை அவர்களுக்கு வழங்குவதாக நீ ஆசை காட்டாவிட்டால் அந்த அயோக் கியர்கள் என்னிடம் அகப்படுவார்களா! நீ செய்த உதவியை எந்தப் பண்பை முன்னிட்டும் மறைக்க வேண்டியதில்லை. தவிர நீ செய்த இன்னொரு பெரும் உதவி என் மகள் சம்பந்தப் பட்டது. நான் அளித்த பரிசை நீ ஏற்றதற்கு என்றும் நான் கடமைப்பட்டவன்" என்று கூறியதன்றி, இளஞ்செழியனைக் கையைப் பிடித்து இழுத்து அணைத்து, "அலீமா உன் அன்பைக் கவர்ந்ததைச் சொன்னாள். திருமணத்தைப் பற்றிக் கவலைப்படாதே, இன்னும் ஒரே மாதம். அது வரைக்கும் அலீமாவைச் சந்திப்பதும் தவறல்ல. அலீமா என்ன, இந்தக் கானா, இங்குள்ள பொருள்கள் எல்லாமே உன்னுடையது" என்றும் தெரிவித்தான்.

இலி-ஆஸுவின் முகவாய்க்கட்டையின் நடுப்பகுதியி லிருந்த முரட்டுத் தாடி தன் கன்னத்திலும் உதடுகளிலும் உராய்ந்ததால் சற்று சங்கடப்பட்ட இளஞ்செழியன் மெள்ளத் தன்னை விடுவித்துக் கொண்டு, "அலீமாவை மணக்க முன் வந்ததை உதவியென்று எப்படிச் சொல்ல முடியும்? அப்படி யானால் இந்த மதுவை நான் அருந்துவதும், பழங்களைப் புசிப்பதும்கூட உதவிதான் மன்னருக்கு" என்றான்.

இதைக் கேட்ட இலி-ஆஸுவின் உள்ளம் குளிர்ந்தது. அது முகபாவத்திலும் தெரிந்தது. அந்தச் சமயத்தில் நன்றி

தெரிவிக்கும் முறையில் தன் சந்தேகத்தையும் தெரிவிக்க முயன்ற இளஞ்செழியன், "மன்னர் என்னைப் பார்த்து மூன்று ஜாமங்களே ஆகின்றன. அதற்குள் இத்தனை தூரம் என்னைக் கௌரவிப்பது அதிர்ஷ்டம்தான்" என்றான்.

இலி-ஆஸுவின் தடித்த உதடுகள் சற்று மடிந்தன. பிறகு சொற்களை உதிர்க்கத் தொடங்கிய போது அவற்றில் ஓர் உறுதியும் காணப்பட்டது. "தமிழா! உன் உள்ளத்தில் சந்தேகம் உருவெடுத்திருக்கிறது. நீ சந்தேகப்படுவதும் நியாயம்தான். சந்தேகத்தின் மூலகாரணம், நீ இலி-ஆஸுவைப் புரிந்து கொள்ளாததுதான். எந்த முடிவையும் கணநேரத்தில் செய்வது இலி-ஆஸுவின் பழக்கம். போர்க்களத்தில் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பதை எப்படிக் கண நேரத்தில் முடிவு செய்கிறேனோ அப்படித்தான் சாதாரண வாழ்க்கையிலும் நான் முடிவுகளைச் செய்கிறேன். உன் நாடு ஆயிரக்கணக்கான ஸ்டேடியாக்களுக்கு அப்பாலிருக்கிறது. கொள்ளையர்களால் பிடிக்கப்பட்டாய். ஆகவே வழக்கமாக கார்டாபிமுனை வர்த்தகர்களிடமோ, அல்லது அடுலீஸ் நகர அடிமைச் சந்தைக்கோ நீ போயிருக்க வேண்டும். அப்படிக் கின்றி வருகிறாய்-இங்கு இந்த கானா துறைமுகத்துக்கு! -யவனர்களும் கால் வைக்க நடுங்கும் இலி-ஆஸுவின் துறைமுக நகருக்கு!-வந்ததும் உன் நிலையை மாற்றி, உன் நிலையில் கொள்ளையரை வைத்து விடுகிறாய்! எனக்குத் தெரியும் தமிழா. இத்தனையும் சாதிக்க எத்தனை தந்திரமும் திறமையும் வேண்டுமென்று. உன்னை அன்றிரவு கண்ட வுடனேயே புரிந்து கொண்டேன். நீ சாதாரண மனிதனல்ல என்று, நீ கொள்ளையரைப் பிடிக்கச் சொன்ன வழிகளைக் கேட்டதும் முடிவுக்கு வந்தேன். அபாரமான புத்திக்கூர்மை யுள்ள, படைகளைக் கூட நிர்வகிக்கவல்ல மனிதன் நீ என்று. நீ தமிழகத்தில் படைகளை நடத்தும் தலைவனென்று சொன்னாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன். அத்தகைய மனிதன் கிடைத்த போது இலி-ஆஸு அவனைக் கை நழுவ

விட மாட்டான். உன்னைவிட நான் இஷ்டப்படவில்லை. எரித்திரியக் கடலில் கொள்ளையர் வலுத்து வருகிறார்கள். நாள் செல்லச் செல்ல கானாவுக்கும் சாம்பிராணிக் குவியல்களுக்கும் ஆபத்து நேரிடலாம். இங்கே துறைமுகத்தைக் காக்கச் சரியான தலைவன் வேண்டும், உன்னைப் போன்ற திறமைசாலி அதற்குத் தேவை. இலி-ஆஸுவின் இஷ்டப்படி நடந்து கொண்டால் இந்தத் துறைமுகப் படைகளுக்குத் தலைமைப் பதவியும் நீ அடையலாம்" என்றான் இலி-ஆஸு.

"மன்னரின் நம்பிக்கைக்கு நன்றி" என்றான் இளஞ்செழியன்.

"வேறெது வேண்டுமானாலும் கேள்" என்றான் இலி-ஆஸு.

"அந்தக் கொள்ளையர் கப்பலைக் கேட்டால் மன்னர் கொடுப்பாரா?" இளஞ்செழியன் சற்றுத் தயக்கத்துடன் கேட்டான்.

இலி-ஆஸு சற்றும் தயக்கமில்லாமலே சொன்னான், "தாராளமாக எடுத்துக் கொள். அதை நடத்த மாலுமிகள் வேண்டுமானாலும் தருகிறேன்" என்று.

"மன்னர் அவ்வளவு சிரமப்பட வேண்டியதில்லை. எனக்கு உதவி செய்த அடிமை வர்த்தகர்களைக் கொடுத்தால் போதும். அவர்களைக் காப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன்" என்றான் இளஞ்செழியன்.

"நீ வாக்குக் கொடுத்தால் என்ன? நான் கொடுத்தால் என்ன? அவர்களை விடுவித்துக் கப்பலைப் பழுது பார்க்கச் சொல்" என்று உடனே அந்த வரத்தையும் அளித்தான் இலி-ஆஸு.

அத்துடன் அன்றைய சந்திப்பு முடிந்தது. அந்தச் சந்திப்புக்குப் பிறகு கானாவின் மாளிகைக் கதவுகள் மட்டுமின்றிக் கோட்டைக் கதவுகளும் படைத் தலைவனுக்குத் திறந்தன. அன்று முழுவதும் இளஞ்செழியன் ஹிப்பலாஸை அழைத்துக் கொண்டு கானா நகரத்தைச் சுற்றினான். துறை

முகப் பகுதிக்குச் சென்று மலைப்பாறைகளையும் கடலில் அலைந்து அலைந்து நின்ற கொள்ளையர் மரக்கலத்தையும் கவனித்தான்.

கானா அப்படிப் பெரிய நகரமல்ல. சிறு நகரம்தான். சாம்பிராணி நாட்டுத் தலைநகரத்திலிருந்து இலி-ஆஸு கானாவுக்கு வருவது வருஷத்தில் சில மாதங்கள்தான் என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டான் இளஞ்செழியன். கானா நகரம் சிறியதாயிருந்தாலும் பலமான கோட்டை வசதிகளை உடையதென்பதும் அதிலிருந்து யாரும் வெளிச் செல்வதோ அதற்குள் நுழைவதோ அத்தனை எளிதல்லவென்பதும் படைத்தலைவன் ஆராய்ச்சிக் கண்களுக்குப் புலனாகியது. மலைப் பாறைகளில் கூட மேலும் கத்தியும் வில்லும் தாங்கிய அராபிய வீரர்கள் சதா காவலில் இருப்பதைக் கண்டான் இளஞ்செழியன். நகரத்தின் தென்முனையிலிருந்து கலங்கரை விளக்கத்தின் பக்கத்திலிருந்த மற்றொரு ஸ்தூபியில் கடலை ஆராயும் வீரர்கள் மாறி மாறிக் காவல் செய்வதையும் சோழர் படை உபதலைவன் கவனித்தான்.

இத்தகைய காவலிலிருந்து தப்புவது அத்தனை எளிதல்ல என்பதைப் புரிந்து கொண்ட இளஞ்செழியனுக்கு மற்றொரு விஷயமும் ஆச்சரியத்தைத் தந்தது. தான் கேட்ட மாத்திரத்தில் அடிமை வர்த்தகர்களையும், கொள்ளையரின் கிரேக்கக் கப்பலையும் தானம் செய்து விட்ட இலி-ஆஸுவின் நடவடிக்கை இளஞ்செழியனுக்குத் திருப்தியை அளிக்கவில்லை. அந்தத் தானத்தின் அடிப்படையில் இலி-ஆஸுவின் எச்சரிக்கையின் கண்ணோட்டமும் கலந்திருக்கின்றதென்பது மறுநாளே தெரிந்தது படைத்தலைவனுக்கு. தனக்கு மேலுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறதேயொழிய உண்மையில் இலி-ஆஸுவின் வீரர்கள் தன்னைக் கண்காணித்து வருவதை உணர்ந்தான் இளஞ்செழியன். அவன் சென்ற இடங்களுக்கெல்லாம் பணிவிடை புரியும் பாவனையில் இலி-ஆஸுவின் பணிப்பெண்கள் இருவராவது அவனைத் தொடர்ந்தனர்.

அவன் கடற்கரையோரம் சென்ற சமயங்களில் வீரர் இருவர் அவனுக்கு உதவி செய்ய விரைந்தனர். அடுத்த நாலைந்து தினங்களில் கானாவில் தான் எதைச் செய்தாலும் இலி-ஆஸுவின் கண்களில் படாமல் செய்ய முடியாதென்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்டான் படைத்தலைவன்.

அவனுக்குக் கிடைத்த உபசரணைகள் பல. மன்னன் கேளிக்கைக் கூடத்தில் மன்னனுக்குச் சரிசமானமாக அவனுக்கும் ஆசனம் போடப்பட்டது. யவன அடிமைப் பெண்கள் அரசனுக்கு அளித்த மதுவையே அவனுக்கும் அளித்தனர். அவன் பள்ளியறையும் அரசனுடைய அறைக்குச் சமானமாக ஜோடிக்கப்பட்டது. அலீமா அவன் அறைக்குத் பிரதி தினம் இரவில் வந்து அவனுக்கு வேண்டிய சகல சிசுருஷைகளையும் செய்து வந்தாள். ஆனால் அவன் கானாவிலிருந்து தப்பும் வழியை மட்டும் அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. கப்பலை அடிமை வர்த்தகர்கள் பழுது பார்த்து முடித்துப் பத்து நாட்களுக்குப் பிறகும் நிலைமை அப்படியே நீடித்தது. இளஞ்செழியன் நம்பிக்கைக்கூட மெள்ள நகர்ந்து கொண்டிருந்தது. அந்தப் பத்து நாட்களில் அலீமா எதையும் பேச மறுத்தாள். அவள் முகத்திலும் கவலை மண்டிக் கிடப்பதை இளஞ்செழியன் கவனித்தான். அந்தக் கவலை அவள் அழகிய உடலைக்கூட வதக்கியதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

பதினோராம் நாள் இரவும் நெருங்கியது. இளஞ்செழியன் பள்ளி அறையில் அலீமா கவலையே உருவாய், படைத்தலைவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். எங்கும் நிசப்தம் நிரம்பிக் கிடந்தது. ஏதோ எதிர்த்து வரும் அபாயத்தின் குறிபோல் கடல்கூட அலைகளின் இரைச்சலைப் பெரிதும் அடக்கிக் கொண்டிருந்தது. பஞ்சணையில் படுத்துக் கிடந்த வண்ணமே அலீமாவை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த இளஞ்செழியன், "அலீமா! உன் முகம் ஏன் களை இழந்து கிடக்கிறது? இங்கிருந்து தப்ப வழி ஏதும் தெரியவில்லையா?" என்று வினவினான்.

"வழி தெரிந்திருக்கிறது. ஆனால் இடையே ஒரு ஆபத்து அதைத் தடை செய்கிறது" என்றாள் அலீமா.

"என்ன ஆபத்து அலீமா?"

அலீமா பதில் சொல்லவில்லை. திடீரென்று பஞ்சணையில் நிமிர்ந்து உட்கார்ந்து எதையோ உற்றுக் கேட்டாள். பிறகு அறைச் சாளரத்தை நோக்கி நடந்து காதைச் சாளரத்தில் வைத்துக் கொண்டாள். கடற்காற்று அப்பொழுது மெல்ல அடித்துக் கொண்டிருந்தது. அந்தக் காற்றில் எங்கோ 'டம்! டம்! டம்!' என்று பேரிகை ஒலி ஒரே சீராகக் கேட்டது. அந்த சப்தம் இளஞ்செழியன் காதிலும் மெள்ள விழவே அவனும் பஞ்சணையிலிருந்து எழுந்து சாளரத்தருகே சென்று அந்த ஒலியை உற்றுக் கேட்டான். "அது என்ன சப்தம் அலீமா!" என்றும் விசாரித்தான்.

அலீமாவின் அழகிய உடல் நடுங்கியது. "இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்" என்று அவள் சொன்ன போது உதடுகளும் நடுங்கியதைக் கண்டான் இளஞ்செழியன்.

"ஏன் நடுங்குகிறாய் அலீமா! இலி-ஆஸுவின் வளர்ப்பு மகளான உன்னை யார் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

"வரும் ஆபத்து எனக்கல்ல. உங்களுக்கு!" என்றாள் அலீமா பயத்தின் உச்சத்தைக் கண்களில் காட்டி.

"எனக்கா ஆபத்து! என்ன ஆபத்து?"

"அதோ அந்தப் பேரிகை ஒலி எதைக் குறிக்கிறது தெரியுமா?"

"தெரியாது அலீமா!"

"இலி-ஆஸுவின் மதகுருவின் வருகையை அறிவிக்கிறது."

"அதனால் நமக்கென்ன?"

அலீமா தன் அழகிய விழிகளை அவன் கண்களோடு பல வினாடிகள் உறவாட விட்டாள். "மதகுரு ஏன் வருகிறார் தெரியுமா?" என்று கேட்டாள்.

"ஏன்?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

அலீமாவின் பதில் இடிபோல் இறங்கியது இளஞ் செழியன் தலையில். எத்தனை பெரிய படுகுழியில் தன்னைத் தள்ள இலி-ஆஸு முடிவு செய்திருக்கிறான் என்பதை அப்பொழுதே உணர்ந்து கொண்ட இளஞ்செழியன் பிரமை பிடித்து நின்றான். "உங்களை மதம் மாற்ற வருகிறார் இலி-ஆஸுவின் மதகுரு" என்று திகிலுடன் அலீமா உதிர்த்த சொற்கள் ஒவ்வொன்றும் அவன் மனத்தை ஆயிரம் ஆயிரம் சுத்திகளைக் கொண்டு சுக்கு நூறாக உடைக்கத் தொடங்கின.

72. ஆண்டவன் ஒருவன்!

தேய்பிறை மெள்ள மெள்ள முடிந்து இரண்டு மூன்று நாட்களில் அமாவாசை வர இருந்ததால், கானாவின் கடலலைகள் பெரிதும் சாந்தப்பட்டு, சத்தத்தை அடக்கிக் கொண்டிருந்ததாலும், சாதாரணமாகச் சுழன்றடிக்கும் மலைக் காற்று அன்றிரவில் தன் சொரூபத்தை அதிகமாகக் காட்டாமல் மெல்லவே வீசியதாலும், மதகுருவின் வருகையை எதிர்பார்த்ததாலோ என்னவோ, எபபொழுதும் உரத்து எச்சரிக்கைக் கூச்சலிடும் கடற்கரைக் காவலர் கூடத் தங்கள் குரலைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்ததாலும், இலி-ஆஸுவின் மாளிகைப் பிரதேசத்தில் குலை நடுக்கமெடுக்கக் கூடிய நிசப்தம் சூழ்ந்து கிடந்ததையும், அந்த நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு தூரத்தே எழுந்த பேரிகை ஒலி இன்னும் அதிகமான பயங்கரச் சூழ்நிலையைச் சிருஷ்டித்ததையும் கண்ட சமயத்திலும் சிறிதும் கவலைப்படாத இளஞ்செழியன் மதகுருவின் வருகைக்குக் காரணத்தைக் கேட்டதும் சிறிது மனத் தளர்ச்சியே அடைந்தானென்பதை அவன் முகபாவத்தி லிருந்தே கண்டு கொண்ட அலீமா, "ஆம், தமிழக வீரரே! அச்சத்துக்கு இடமிருக்கிறது. இடம் பெரிதுமிருக்கிறது" என்று அவனைப் பார்த்துக் கூறியதன்றி, அவனை அருகில் நெருங்கி அவன் கைகளிலொன்றோடு தன் அழகிய கையொன்றையும் பின்னிக் கொண்டாள்.

புஷ்ப மாலைபோல் தன் கையை வளைத்துத் தழுவிய அவள் கை கிலியால் மெல்ல நடுங்கியதையும் அந்த நடுக்கத்தைத் தடுக்கவும் கையைத் திடப்படுத்திக் கொள்ளவும் அவள் விரல்களும் தன் விரல்களோடு பின்னிக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டதையும் கவனித்த இளஞ்செழியன், "அச்சத்துக்கு இடமிருக்கத்தான் செய்கிறது அலீமா!" என்று சொல்லி சற்றுப் பெருமூச்சும் விட்டான். அவன் நாசியி லிருந்து வெளிப்பட்ட பெருமூச்சையும் அவன் சொற்களில் துளிர்த்த வெறுப்பு உணர்ச்சியையும் கண்ட அலீமா, "இலி-ஆஸு மிக கொடியவனென்று நான் முன்னமே சொல்ல வில்லையா? உங்களைப் போன்ற மாவீரர்களையும் அச்சுறுத் தும் செயல் வாய்ந்தவன் இந்த மன்னன்" என்று தன் கருத்தை வெளியிட்டாள்.

இளஞ்செழியனின் விழிகள் சாளரத்துக்கு வெளியே யிருந்த இருட்டில் எதையோ ஊடுருவிப் பார்த்தன. வெளியி லிருந்து இருட்டு உள்ளத்தையும் சூழ்ந்து வருவதுபோல் தோன்றியது படைத் தலைவனுக்கு. அந்த நிர்க்கதியான நிலையில் சிறிது கோபத்தையே அடைந்த படைத்தலைவன், "வீரர்கள் செய்யக்கூடிய எந்த அலுவலிலும் இலி-ஆஸு என்னை அச்சுறுத்த முடியாது அலீமா. ஆனால் இந்த மத மாற்றம்! சீச்சீ, நினைக்கவும் வெறுப்பாயிருக்கிறது" என்றான்.

"மதமாற்றத்தைப் பற்றிக்கூட நான் பயப்படவில்லை" என்றாள் அலீமா.

"நான் பயப்படுகிறேன் அலீமா" என்றான் படைத் தலைவன்.

"அதில் பயப்படுவதற்கு ஏதுமில்லை வீரரே! நான் இரண்டு மூன்று முறை மதம் மாறியிருக்கிறேன். இந்தப் பக்கங் களில் மதம் மாறுவது மிகவும் சகஜம்" என்று அலீமா கூறி இளஞ்செழியனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

"என்ன, இரண்டு மூன்று முறை மதம் மாறியிருக் கிறாயா!" என்று இளஞ்செழியன் ஆச்சரியத்துடன் வினவிய

தல்லாமல் அந்த ஆச்சரிய ரேகை முகத்திலும் படர அவளை நோக்கினான்.

"இதில் ஆச்சரியத்துக்கு என்ன இருக்கிறது? முதலில் நான் இந்த நாட்டைச் சேர்ந்தவள். இந்த நாட்டு மதப்படி வளர்க்கப்பட்டேன். பிறகு யவனர்களிடம் அடிமையானேன். அவர்கள் மதத்தில் என்னைச் சேர்த்துக் கொண்டார்கள். மறுபடியும் இலி-ஆஸு என்னை மீட்டான். மீண்டும் சொந்த மதம் திரும்பினேன்" என்றாள் அலீமா சர்வ சகஜமாக.

இந்த விசித்திரத்தைக் கேட்ட இளஞ்செழியன் பிரமித்துப் போனான். மதம் இஷ்டப்படி புறக்கணிக்கக்கூடிய அத்தனை அல்ப விஷயமா என்று நினைத்ததால், முதலில் உண்டான பிரமிப்பு இரட்டை மடங்காகவே, "மிகவும் விந்தையாயிருக்கிறது அலீமா, இங்குள்ள மனிதர்களின் பழக்கம்" என்றான் சோழர் படை உபதலைவன்.

'இதில் விந்தை என்ன?"

"மதத்தை அத்தனை அல்பமாக நினைக்கிறீர்களே!"

"யார் அல்பமாக நினைப்பது?"

"நீங்கள்தான்."

"நாங்கள் மதத்தை அல்பமாக நினைத்தால் அதற்கு மற்றவர்களை மாற்றுவானேன்?"

"மதத்திற்கு மாற்றுபவர்களைப் பற்றி நான் சொல்ல வில்லை. மதம் மாறுபவர்களைப் பற்றிச் சொல்லுகிறேன்."

"உங்கள் நாட்டில் மதமாற்றம் என்பது கிடையாதா, பல மதங்கள் இல்லையா?"

"உண்டு. ஆனால் மதமாற்ற முறைகள் வேறு, மதத் தத்துவங்களே வேறு."

"என்ன வித்தியாசம்?"

'மத மாற்றத்தில் கட்டாயம் இல்லை. மன்னனோ மற்றவரோ சிறைப்பட்டவர்களைத் தங்கள் மதத்திற்கு இழுக்க முயல்வதில்லை. எங்கள் நாட்டு வேதாந்தமே வேறு."

"என்ன வேதாந்தமோ?"

"மனிதனுடைய ஆத்மா உடலைத்தான் உடையைப் போல் உரித்து விடுகிறது என்பது எங்கள் வேதாந்தம். எப்படி உடைகளை மனிதன் தேவைக்குத் தகுந்தபடி களைந்து மாற்றிக் கொள்கிறானோ அப்படியே ஆத்மாவும் பாவ புண்ணியத்துக்குத் தகுந்தபடி உடல்களை மாற்றிக் கொண்டு ஜன்மாக்களை எடுக்கிறதென்பது பாரத நாட்டு வேதாந்தம். உடையைப் போல் மதங்களைப் பாவிக்க முடியாது. ஒரு மதத்தைக் களைந்து வேறு மதத்தை ஏற்க முடியாது."

"அப்படியானால் வேறு மதங்களை ஏற்பவர்களே உங்கள் நாட்டில் இல்லையா?"

"இருக்கிறார்கள். ஆனால் கட்டாயத்தினால் அவர்கள் மதம் மாறவில்லை. இஷ்டத்தினால் மாறினார்கள். எங்கள் நாட்டில் பல மகான்கள் பிறந்திருக்கிறார்கள். தங்கள் தத்துவங் களை எடுத்துப் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். அவற்றில் லயித்து, அந்தத் தத்துவ முறைகளில் தங்களுக்கு நற்பதவி கிடைக்கும் என்று நம்பிய மக்கள் மதம் மாறியிருக்கிறார்கள். ஆனால் எல்லாம் பழைய மறைகளின் வழிவந்த மதங்கள், பெருவாரியான கொள்கைகளில் அவற்றுக்குள் வித்தியாசம் கிடையாது. ஆகவே விரோதமும் கிடையாது. அன்பு மிகுதியால் ஆதி மதத்திலிருந்து சமண பௌத்த மதங்களை நாடியவர்களும் உண்டு. அவற்றிலிருந்து பழையபடி பழைய மதத்துக்குத் திரும்பியவர்களும் உண்டு. மதம் அவரவர் சொந்த விஷயம் என்று எங்கள் நாட்டில் கருதப்படுவதாலும் எல்லா மதங்களும் உயர்வானவை என்ற நம்பிக்கை உலாவுவ தாலும் யாரும் இன்னொருவரை மதம் மாற்ற முயன்றது கிடையாது."

"மத விஷயத்தில் கட்டாயமே கிடையாதா?" என்று அலீமா வியப்புடன் வினவினாள்.

"கிடையாது" என்றான் இளஞ்செழியன்.

"இங்கு கட்டாயம் உண்டு" என்று குறிப்பிட்டாள் அலீமா.

"மற்ற மதங்கள் உபயோகமற்றவை என்று நீங்கள் கருதுவதுதான் அதற்குக் காரணம்" என்று விளக்கினான் படைத்தலைவன்.

அலீமாவின் விரல்கள் அவன் விரல்களுடன் நன்றாக இணைந்தன. "உங்கள் நாடு மிகவும் நல்ல நாடாயிருக்க வேண்டும்" என்று கூறினாள் அலீமா.

"அதைவிடச் சிறந்த நாடு உலகில் கிடையாது" என்றான் இளஞ்செழியன்.

"அதன் பெருமையை அத்தனை தூரம் உணர்ந்திருக்கிறீர்கள்!" என்று கேலியாகச் சொன்னாள் அலீமா. அந்தக் கேலியில் மதகுருவின் வருகையால் ஏற்பட்ட அச்சத்தைக் கூடச் சிறிது மறந்தாள்.

"பாரத நாட்டின், அதுவும் எங்கள் தமிழகப் பிரிவின் உயர்வை எப்பொழுதும் உணர்ந்திருக்கிறேன் அலீமா! ஆனால் அது எத்தனை உயர்ந்தது என்பதை இந்தப் பகுதிக்கு வந்ததும்தான் சரியாகப் புரிந்து கொள்ள முடிகிறது. யாரும் இஷ்டப்படி வாழக்கூடிய சுதந்திரமான பாரதம் எங்கே, அவனவனுக்குச் சொந்தமான மத விஷயத்திலும் கட்டாயத்தைக் கையாளும் மேற்கு நாடுகள் எங்கே? பாரதம் உயர்ந்தது அலீமா! எத்தனையோ மதங்கள் பகையின்றி அக்கம் பக்கம் வாழ வகை செய்துள்ள பண்பின் சின்னமான பாரதம் எங்கே? இந்த மதம்தான் வாழலாம் இப்படித்தான் மனிதன் வாழலாம் என்று தனி மனிதன் சுயேச்சைக்கும் கரை கட்டும் மேற்கு நாடுகள் எங்கே?" என்று பேசிய இளஞ் செழியன் சட்டென்று அவள் கையை உதறிக் கொண்டு சில வினாடிகள் மௌனமாக நின்றான்.

தூரத்தே கேட்ட பேரிகை ஒலி வரவரப் பெரிதாகக் கேட்கத் தொடங்கியதையும் அந்தப் பேரிகை ஒலி விழுந்த தால் கானாவின் வீதிகளில் ஏற்பட்ட மக்கள் நடமாட்டத்தில் சத்தமும் அதிகரித்துவிட்டதையும், மௌனமாக நின்ற அந்தச் சில வினாடிகளில் கவனித்த படைத்தலைவன் அலீமாவை நோக்கி, "அலீமா! எங்கள் நாட்டில் வீரர்கள் உயிர்

போனாலும் மூன்று விஷயங்களைத் துறப்பதில்லை. தன் வாள், மனைவி, மதம், இம்மூன்றையும் யார் பறிக்க விரும்பி னாலும் அந்த வீரன் உயிரை உடலிலிருந்து விரட்டிய பின்பு தான் பறிக்க முடியும். ஆகையால் இலி-ஆஸு மத மாற்றத் திற்கு என்னை வற்புறுத்தினால் அவன் அரியணையில் அமர்ந்திருக்கும் போதே பிணமாகி விடுவான்" என்று உறுதி யுடன் கூறினான். இந்த வார்த்தைகளைத் திடமாக அவன் உதடுகள் உதிர்த்த போது அவற்றில் கடுமை கலந்த புன்சிரிப்பும் துளிர்விட்டதைக் கண்ட அலீமா படைத் தலைவன் உறுதியைக் கண்டு சற்றே அச்சப்பட்டாளாதலால், "அப்படி ஏதாவது நடந்தால் அடுத்த வினாடி நீங்கள் கண்ட துண்டமாய் வெட்டியெறியப்படுவீர்கள்" என்று தலையை நிமிராமல் கண்களைத் தரையில் ஓட்டிய வண்ணம் சொன்னாள்.

"அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை."

"இத்தனை நேரம் கவலைப்பட்டீர்களே?"

"நாட்டுக்குப் பணிசெய்ய உயிர் தேவை. அதற்குத்தான் கவலைப்பட்டேன்."

"அந்த நாட்டுப் பணிக்காக மதம் மாறினால் என்ன?"

"எந்தப் பணியும் அறவழியில் நடக்க வேண்டும். அது முடியாதென்றால் உயிரை வைத்திருப்பதிலும் பயனில்லை."

இதற்கு மேல் அலீமா பதிலேதும் பேசவில்லை. "போயும் போயும் மத மாற்றம் இத்தனை பெரிதாகப் போய் விட்டது" என்று சில வினாடிகள் மௌனமாயிருந்த பிறகு சொன்னாள்.

"என்னை இந்த மதத்தில் சேர்க்க மதகுரு வருகிறார் என்பதைச் சொன்ன போது நீயே நடுங்கினாயே!" என்றான் இளஞ்செழியன்.

"உங்களை இந்த நாட்டு மதத்தில் மாற்ற மட்டும் மதகுரு இங்கு வந்தால் நான் பயப்படமாட்டேன்" என்று சொல்லி அலீமா தயங்கினாள்.

"வேறு எதற்குப் பயப்படுகிறாய்?"

"இலி-ஆஸுவின் திட்டம் வேறு."

"என்ன திட்டம் அது?"

"உங்களை மதம் மாற்ற மதகுருவுடன் உங்களை தன் நாட்டுக்கு அனுப்பிவிட யோசிக்கிறான் மன்னன். இங்கிருந்து பல மலைகளுக்கு அப்புறம் பெரும் குகையிலிருக்கும் ஐஸிஸ் தேவியின் ஆலயத்தில் நீங்கள் சிக்கி விட்டால் உங்களை ஆண்டவன் கூடத் தப்புவிக்க முடியாது. அந்தக் குகை ஆலயத்தில் மதகுருக்களும், பழைய அரசர்களின் சவ அறைகளும் பணியாட்களும் இருக்கிறார்கள். அங்கு நீங்கள் ஒரு மாதம் சேவை செய்தால் இலி-ஆஸுவின் அந்தரங்க ஊழியர்களில் ஒருவராக ஏற்றுக் கொள்ளப்படுவீர்கள். பிறகுதான் உங்களைக் கானாவின் படைத் தலைவனாக இலி-ஆஸு நியமிப்பான். இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குள் உங்களுக்கு மத தீட்சைகள் நடக்கும். மதகுரு வின் முன்னிலையில் உங்கள் தலை மயிர் வாங்கப்படும்."

"என்ன! தலையை முழுக்க..." என்று மென்று விழுங்கினான் இளஞ்செழியன்.

"ஆம். வழித்தெடுத்து விடுவார்கள். ஐஸிஸின் ஆலயத்தில் வேலை செய்யும் பணி மக்களுக்கும் மதகுருமார் களுக்கும் வித்தியாசம் கிடையாது" என்றாள் அலீமா.

"எகிப்து பாரோ மன்னர்கள் ஆலய வழக்கமல்லவா இது?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

"ஆம். அதே மதம்தான் இங்குள்ள நாடுகளில் கையாளப் படுகிறது! எகிப்து நாட்டு மன்னர்களின் ஆதிக்கம் இங்கு ஓங்கிய காலத்திலிருந்து அதே கலாச்சாரமும் மதமும்தான் இங்கு பரவிக் கிடக்கின்றன" என்று விளக்கினாள் அலீமா. பிறகு, "உங்களுக்கு மதகுரு தீட்சை நடக்கும் போது உங்களை இரண்டு வீரர்கள் பிடித்துக் கொள்வார்கள். பல வீரர்கள் காவல் புரிவார்கள். உங்கள் கை, கால் எதுவுமே சுவாதீனத்திலிருக்காது" என்றும் உள்ள நிலையின் தீவிரத்தை வலியுறுத்தினான்.

"அதுவும் இந்நாட்டுப் பழக்கங்களில் ஒன்றோ?" என்று படைத்தலைவன் வினவினான்.

"ஆம்!" என்றாள் அலீமா.

இளஞ்செழியன் தீவிர சிந்தனையில் ஆழந்து அறையில் இங்குமங்குமாக நீண்டநேரம் உலாவினான். 'இலி-ஆஸுவின் தந்திர உள்ளத்தை எத்தனை அல்பமாக மதித்துவிட்டோம்' என்று நினைத்துத் தன்னைத்தானே நொந்து கொண்டான். 'கொள்ளையர் கப்பலைத் தன்னந்தனியாக யுக்தியால் பிடித்துக் கொடுத்ததால் என் திறமையை உணர்ந்து கொண்டான் இலி-ஆஸு. அப்படிப்பட்டவனைத் தமக்கு மீளா அடிமையாக்கிக் கொள்ள மதம் மாற்றி வளர்ப்பு மகளைக் கொடுத்து, மதகுருவின் ஆலயத்துக்கு அனுப்பி உணர்ச்சிகளைப் பணிய வைத்துப் பிறகு ஒரு பதவி அளிக்கத் திட்டமிட்டிருக்கிறான். மதகுரு ஆலயம் எங்கோ மலை களுக்குப் பின்னால் குகையில் இருக்கிறது. எதிரே கடலில் ஆடி நிற்கும் கப்பலும், உதவ அடிமை வர்த்தகர்களும், பலமாகக் கை கொடுக்க வீரனான ஹிப்பலாஸும் இருக்கும் நிலையிலேயே இலி-ஆஸுவிடமிருந்து தப்புவது பிரும்மப் பிரயத்தனம் போலிருக்கிறதே! மலைகளுக்குப் பின்னால் போய்விட்டால் அவ்வளவுதான்... ஆயுள் சமாதிதான்...' என்று எண்ணி எண்ணிப் பெரிதும் குழம்பிய இளஞ்செழியன் கடைசியாக ஏதோ ஒரு முடிவுக்கு வந்து "அலீமா!" என்று திடீரென்று அழைத்தான்.

"ஏன்?" தூக்கி வாரிப்போட்டுக் கொண்டு வினவினாள் அலீமா.

"மத மாற்றம் எப்பொழுது நடக்கும்?" என்று மீண்டும் ஒரு கேள்வி போட்டான் படைத் தலைவன்.

"இன்னும் இரண்டு மூன்று நாட்களில் நடக்கும்" என்றாள் அலீமா.

"இரண்டு மூன்று நாட்கள் எதற்கு?"

"சந்திரனே இல்லாத நாள் அப்பொழுதுதான் வருகிறது."

அவள் அமாவாசையைக் குறிக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட இளஞ்செழியன், "அலீமா! இந்த இரண்டு

மூன்று நாட்களுக்குள் நான் இங்கு சிறையில் கிடக்கும் அடிமை வர்த்தகர்களைப் பார்க்க முடியுமா?'' என்று கேட்டான்.

"நீங்கள் பார்ப்பது கஷ்டம்."

"ஏன்?"

"நீங்கள் மதம் மாறிய பிறகுதான் அவர்களை விடுவிக்க உத்தேசித்திருக்கிறான் மன்னன். சிறைச்சாலைப் பகுதிக்கு யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. தவிர நாளையிலிருந்து நீங்கள் மதகுருவின் பாதுகாப்பில் இருப்பீர்கள்."

"மதகுருவின் பாதுகாப்பிலா?"

"ஆம்."

"சரி சரி. அது கிடக்கட்டும். நீயாவது அவர்களைப் பார்க்க முடியுமா?"

"முடியும்."

"சரி, வெளியிலிருக்கும் ஹிப்பலாஸைக் கூப்பிடு."

அறைக் கதவைத் திறந்து கொண்டு ஹிப்பலாஸை அழைக்க அலீமா வெளியே சென்றதும் மஞ்சத்தின் பஞ்சணையில் உட்கார்ந்து கொண்ட படைத் தலைவன் கண்கள் ஏதோ ஒரு உலகத்துக்கு அவன் புத்தி சென்று விட்டதை வலியுறுத்தின. அறைக்குள் திரும்பி வந்த அலீமா படைத்தலைவன் கண்கள் மயக்க நிலையில் இருப்பதைக் கவனித்து அவன் பெரும் பீதிக்குள்ளாகியிருப்பதாக நினைத்தாள். ஆனால் ஹிப்பலாஸ் மட்டும் கணப்பொழுதில் புரிந்து கொண்டான். படைத்தலைவன் புத்தியில் ஏதோ பயங்கரத் திட்டமொன்று உருவாகிறதென்று. அந்த நினைப்பின் விளைவால் அலீமா படைத்தலைவனை நெருங்க முயன்றதையும் அவள் கையைப் பிடித்து நிறுத்திய ஹிப்பலாஸ், ஏதும் பேச அது சமயமல்லவென்பதைத் தன் பார்வையாலும் குறிப்பிட்டான் அவளுக்கு. அப்பொழுதும் ஏதும் புரியாததால் அவன் அவள் காதுக்கருகில் குனிந்து, "படைத் தலைவர் ஏதோ யோசிக்கிறார், பேச வேண்டாம்" என்று ரகசியமாகச் சொன்னான்.

அதைக் கேட்டதும் ஹிப்பலாஸைத் திரும்பி நோக்கிய அலீமாவின் விழிகளில் வியப்பு மிதமிஞ்சி நின்றது. "படைத் தலைவரா இவர்!..." என்று தட்டுத் தடுமாறிக் கேட்டாள் அலீமா.

"தமிழகத்தின் பெரும் படைத் தலைவர்களில் ஒருவர்" என்று விளக்கினான் ஹிப்பலாஸ்.

அலீமாவுக்கு அப்பொழுதுதான் மெள்ள மெள்ள உண்மை விளங்கலாயிற்று. பெரும் ஆபத்துக்களைச் சமாளிக்கக் கூடிய ஒருவர், கொள்ளையர் கண்களிலும், ஏன் இலி-ஆஸுவின் கண்களில்கூட ஓரளவு மண்ணைத் தூவக் கூடிய திறமை வாய்ந்த ஒருவர், சாதாரண மனிதராயிருக்க முடியாது என்று தான் நினைத்தது சரியாகி விட்டதை நினைத்து, பெரிதும் பூரிப்படைந்து விட்டாள். படைத் தலைவன் பேசிய சமயங்களிலெல்லாம், அவனிடம் காணப் பட்ட ஒரு கம்பீரம், அவன் நடையிலிருந்த ஒரு பெரும் தோரணை, பகல் வேளையில் அவன் சதா கோட்டைப் பகுதி களையும் மலைப் பிராந்தியங்களையும் வெறித்து வெறித்துப் பார்த்த காரணம், எல்லாமே அலீமாவுக்குப் பொருள் தந்தன. அவன் கண்கள் மங்கிக் கிடந்த அந்தச் சமயத்திலும், முகத்தின் ஒளியும் மயங்கிவிட்ட அந்தச் சில நிமிஷங்களிலும் முகத்தின் கம்பீரமோ கண்களின் அழகோ சிறிதும் குறைவு படாததை அலீமா கவனித்து உலகத்தின் பெரிய அறிவாளியொருவன் முன்னிலையில் தான் இருப்பதை உணர்ந்தாள். சில நிமிஷங்களுக்குப் பிறகு மௌனத்தை உதறிப் பேச முற்பட்ட படைத்தலைவனின் குரல் சர்வ சாதாரண நிலையை அடைந்து விட்டதைக் கவனித்த அலீமா உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதில், அவனுக்குள்ள திறமையைக் கண்டு பிரமித்தாள்.

சில நிமிடங்களிலேயே தான் அடுத்த இரண்டு மூன்று தினங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறையை நிர்ணயித்துக் கொண்ட இளஞ்செழியன் ஹிப்பலாஸை

நோக்கிக் கேட்டான்: "ஹிப்பலாஸ்! உனக்கு மதம் மாறிப் பழக்கமுண்டா?" என்று முகத்தில் புன்முறுவலைக் காட்டி.

"அந்தப் பாக்கியம் இதுவரை அடியவனுக்குக் கிட்டவில்லை" என்று நகைச்சுவையைக் காட்டினான் ஹிப்பலாஸ்.

"எனக்குக் கிடைத்திருக்கிறது" என்றான் இளஞ்செழியன்.

"படைத்தலைவர் எல்லா விஷயங்களிலும் பாக்கிய சாலி, மதம் கிடைக்கிறது. பதவி கிடைக்கிறது. தவிர..." என்று சொல்லி அலீமாவின் மீது கண்களை ஓட்டினான் ஹிப்பலாஸ்.

இளஞ்செழியன் மெள்ள நகைத்துவிட்டுச் சொன்னான், "உனக்கும் அந்தப் பாக்கியங்கள் கிடைக்க வேண்டும் ஹிப்பலாஸ்!" என்று.

"அத்தனைக்கு எனக்குத் தகுதி ஏது?"

"இருக்கிறது. இல்லையேல் நான் உண்டாக்கித் தருகிறேன்."

"எப்படி?"

"நாளை மதம் மாறும்படி இலி-ஆஸு என்னைக் கேட்கப்போகிறான்?"

"என்ன!" பாதி ஆச்சரியமும் பாதி திகிலும் கலந்த குரலில் கேட்டான் ஹிப்பலாஸ்.

"ஆமாம் ஹிப்பலாஸ்! என்னை மதம் மாற்ற இலி-ஆஸுவின் மதகுருவே வருகிறார். அதோ பேரிகை ஒலி கேட்கவில்லை உனக்கு?"

"ஆமாம், கேட்கிறது."

"அது மதகுரு வருவதைக் குறிக்கிறது?"

"அப்படியா?" இம்முறை ஹிப்பலாஸின் குரலில் நகைச்சுவைக்குப் பதில் வெறுப்பு மண்டிக் கிடந்தது.

"ஆம்! அப்படி அவரிடம் நான் மதம் மாற ஒப்புக் கொள்ளும் போது உன்னையும் மதம் மாற்றும்படி இலி-ஆஸுவைக் கேட்டுக் கொள்ளப் போகிறேன்."

"மதம் மாறுவதைவிட உயிரை விடுவேன்" என்று கூவினான் ஹிப்பலாஸ்.

"அதற்குக் கானாவில் சந்தர்ப்பங்கள் நிரம்ப இருக்கின்றன" என்று சுட்டிக் காட்டிய இளஞ்செழியன் சில நிமிட நேரங்களில் தான் வகுத்த பயங்கரத் திட்டத்தை மெள்ள மெள்ள, ஹிப்பலாஸுக்கும் அலீமாவுக்கும் விவரித்தான். அவன் விவரிக்க விவரிக்க அந்தத் திட்டத்திலிருந்த பேராபத்துக்களை நன்கு உணர்ந்த அலீமாவும் ஹிப்பலாஸும் உணர்ச்சிகளால் பல திசைகளில் அலைக்கழிக்கப் பட்டதல்லாமல் இறுதியில் மிதமிஞ்சிய கலவரமும் அடைந்து அடியோடு புத்தி குழம்பி நின்றார்கள். கடைசியாகப் பேச நா வந்தபோது, "மிகப் பயங்கரத் திட்டம்" என்று குழறினான் ஹிப்பலாஸ்.

"தோற்றால் நாம் சித்திரவதை செய்யப்படுவோம். இலி-ஆஸு நமது கால்களை வெட்டி, நாவைத் துண்டித்து உயிரை வைத்தே ஒவ்வொரு நிமிஷமும் கொல்லுவான்!" என்று கூறி நடுங்கினாள் அலீமா.

"ஆண்டவனிருக்கிறான்" என்று மிக மெதுவாக ஆனால் திடமாக வார்த்தைகளை உச்சரித்தான் படைத்தலைவன்.

"யார் ஆண்டவன், உங்கள் ஆண்டவனா, இலி-ஆஸுவின் ஆண்டவனா?" என்று நடுக்கத்துடன் கேட்டாள் அலீமா.

"இருப்பவன் ஒருவன். அறவழிக்கும் அன்புக்குமே துணை செய்பவன்." வேத மந்திரங்களை உதிர்ப்பது போல இந்த வார்த்தைகளை உதிர்த்தான் படைத்தலைவன். அந்த வார்த்தைகளைச் சொல்வதிலேயே அவன் உள்ளம் ஆனந்தமடைந்தது. முகத்திலும் தைரியப்பொலிவு துலங்கியது.

ஆனால் அலீமாவின் முகத்தில் ஈயாடவில்லை. 'என் தெய்வமே சக்தியுடையது என்று இலி-ஆஸு நம்புகிறான். இலி-ஆஸு என்ற பெயரின் பொருளே அதுதானே! இவர் திட்டமோ மிகப் பயங்கரம்! விளைவு என்ன ஆகுமோ? திட்டம் தோற்றுவிட்டால்...' என்று எண்ணிய அலீமா மேலும் ஏதும் பேச முடியாமல் திணறினாள். அவள் எண்ணங்கள்

மிகுந்த திகிலால் மேலே ஓடாமல் பாதியிலேயே அறுந்தன. ஆகவே சொற்களும் அறுந்தன. ஏதும் பேச இயலாமல் இளஞ் செழியன் முகத்தில் தன் விழிகளை நாட்டிக் கொண்டு பிரமை பிடித்தவள் போல் நின்றாள். பேரிகை ஒலி மிகப் பெரிதாகக் கேட்டது. பேரிகையை அடித்த பெரும் கழிகள் அவள் உள்ளத்தை அடித்தன. அவள் உள்ளமே கிழிந்த ஸ்திதிக்கு வந்து கொண்டிருந்தது.

73. மூன்றாம் நாள் இரவு

மத குருவின் வருகையாலும் அதையொட்டி, படைத் தலைவன் வகுத்த துணிகரத் திட்டத்தாலும் பீதியின் எல்லையை எட்டிவிட்ட அராபிய அழகி அலீமா, மறுநாள் முதல் இளஞ்செழியன் மேற்கொண்ட சர்வ சாதாரணமான நடைமுறைகளால் ஓரளவு வியப்படைந்தாலும், அந்த நடைமுறைகளுக்குப் பின்னால் பெரும் அபாயம் தொக்கி நிற்பதை உணர்ந்து கொண்டிருந்தாளாதலால் அவள் நெஞ்சம் ஒவ்வொரு வினாடியும் பயத்தால் வெடித்துவிடும் நிலையிலேயே இருந்தது. பல வருடங்கள் படைத் தலைவ னுடன் பழகி அவன் இணையற்ற நெஞ்சத் துணிவை அறிந் திருந்த ஹிப்பலாஸ் கூட இளஞ்செழியன் செல்லும் பாதை எந்த வினாடியிலும் வழுக்கக் கூடியதென்பதையும், அப்படி வழுக்கினால் அவன் வாழ்வு மட்டுமின்றி அலீமாவின் வாழ்க்கையும் அடியோடு முடிந்து போகாவிட்டாலும் முடிந்து போவதைவிட மிகக் கோரமான பாதையில் வீழ்த்தப்பட்டுச் சின்னாபின்னப்படும் என்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டிருந்தானாகையால், அப்படி ஏதாவது விபரீதம் நேரிடுமாகில் மதகுருவையோ இலி-ஆஸுவையோ தீர்த்துக் கட்டிவிடுவதென்ற முடிவுக்கு வந்து, அதற்குச் சன்னத்தமாகத் தனது கச்சை மறைவில் கூரிய சிறுவாள் ஒன்றை மறைத்து வைத்துக் கொண்டே உலாவினான். படைத் தலைவனிடம் உள்ள அன்பினால்

துடித்துக் கொண்டிருந்த அந்த இருவருக்கும், அத்தனை ஆபத்திலும் மறுநாள் பூராவும் இளஞ்செழியன் நடந்து கொண்ட விதம் பேராச்சரியத்தை விளைவித்தது.

மறுநாள் காலையிலேயே மதகுரு கானா நகருக்கு வந்து விட்ட விஷயம் இளஞ்செழியனுக்கு அரசனுடைய காவலர் மூலம் முறைப்படி அறிவிக்கப்பட்டதன்றி, மதகுரு அவனை உச்சி வேளைக்குக் காண்பார் என்ற விவரமும் திட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. தமிழகத்து வீரனைச் சர்வ வல்லமை யுள்ள இலி-ஆஸு மன்னரே மதகுருவிடம் அறிமுகப்படுத்தி வைப்பார் என்பதையும், மதகுருவின் சன்னிதானத்துக்குச் செல்லும் போது இளஞ்செழியன் அணிய வேண்டிய உடைகள் சில நாழிகைகளில் அனுப்பப்படும் என்பதையும் உணர்த்திவிட்டுக் காவலர் சென்றதும் மாளிகைப் பணிப் பெண்கள் இருவர் வந்து படைத்தலைவன் நீராடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்தார்கள். படைத்தலைவனும் மிகுந்த நிம்மதியுடன் நீராடி ஆடைகளை அணியவும் தயாரானான். ஏராளமான வாசனைப் பொடிகள் போட்டுக் கலக்கி விட்டதால் நீராட்ட அறை பூராவும் கமகமவென்று நறுமணம் சூழ்ந்ததாலும் நீரும் சூடு செய்யப்பட்டு இதமாக இருந்ததாலும் சுகமாகக் குளித்துக் களித்துக் கொண்டிருந்த இளஞ்செழியனைப் பார்த்த ஹிப்பலாஸ், "ஏது, படைத்தலைவர் நீராட்டத்தைப் பார்த்தால் இன்றே மதம் மாறிவிடுவார் போலிருக்கிறது" என்று வெறுப்புடன் கூறினான்.

தண்ணீரைத் தலைமேல் இரு பணிப் பெண்கள் அபிஷேகம் செய்ய, ஏதோ மகுடாபிஷேகத்துக்குத் தயாராகும் மன்னனைப்போல் உட்கார்ந்து சுக நீராட்டம் நடத்திக் கொண்டிருந்த இளஞ்செழியன், "ஆமாம் ஹிப்பலாஸ்! எந்தக் காரியத்தை நாம் மேற்கொள்வதானாலும் அதில் அலட்சியம் கூடாது. எதையும் தேகத்துக்கு ஆரோக்கியம் உண்டாகும் வகையில் திறம்பட நடத்திக் கொள்வதுதான் உசிதம். மதம் மாறினாலும் சரியாக மாற வேண்டும். மாறாமல் தண்டனை

அடைந்து சீரழிவதாயிருந்தாலும் அதிலும் பெரும் தோரணையைக் காட்ட வேண்டும். கெடும் சமயத்திலும் நாம் மேன் மக்கள் என்பதைப் பிறருக்கு உணர்த்த வேண்டும். இது தமிழகத்தின் பண்பு. இன்று மதகுரு என்னைச் சந்திக்கும் போது இலி-ஆஸுவுக்கு அடுத்தபடி இந்தக் கானாவையே ஆளும் தகுதி எனக்கு உண்டென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்" என்று கூறி நகைத்தான்.

அவன் சிரிப்பு ஹிப்பலாஸுக்கு வேப்பங்காயாக இருந்தது. இருவரும் தமிழில் பேசியதால் அந்த மொழி என்னவென்பதையே அறியாத பணிப் பெண்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து ஏதும் புரியவில்லை என்பதற்காகப் புன்சிரிப்புக் கொண்டனர். இளஞ்செழியன் அவர்கள் செய்த சைத்தியோபசாரங்களுடன் நீராட்டத்தை முடித்துக் கொண்டதும் உடல் துவட்டித் தன் அறைக்குச் சென்ற போது அவன் அணிய வேண்டிய உடைகளுடன் அலீமாவே அங்கு காத்திருந்தாள். அந்த உடைகளைக் கண்டதும் ஆச்சரியத்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான் படைத்தலைவன். ஏராளமான பொற் சரிகைகள் மட்டுமின்றி, விலை உயர்ந்த கற்களும் வைத்துத் தைக்கப்பட்டிருந்த அராபிய மேலங்கியைக் கண்ட இளஞ் செழியன், அந்த ஒரு அங்கியே இரண்டாயிரம் பொற்காசுகள் பெறக் கூடியதென்பதைப் புரிந்து கொண்டானாகையால் அலீமாவை நோக்கி, "இதையா நான் அணிய வேண்டும் அலீமா?" என்று வினவினான் உள்ளே எழுந்த வியப்பு குரலிலும் ஒலிக்க.

"ஆம்" என்று தலையைத் தாழ்த்திய வண்ணமே பதில் சொன்ன அலீமாவின் குரல் வறண்டு கிடந்தது. அதில் இயற்கையாகக் காணப்படும் குழைவு இல்லை. இன்பமும் இல்லை.

அவள் உள்ளம் பெருத்த துன்பத்தால் பீடிக்கப் பட்டிருப்பதை மட்டுமின்றி அதன் காரணத்தையும் அறிந்து கொண்ட இளஞ்செழியன், "அலீமா!" என்று மெள்ள அழைத்தான்.

"ஏன்?" அந்தப் பதிலிலும் துன்பம் அலை மோதியது.

"அந்தக் கதவைச் சாத்து" என்றான் படைத்தலைவன்.

'அவசியமில்லை" என்றாள் அலீமா.

"யாராவது வந்தால்...?"

"பாதகமில்லை. நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல் லுங்கள். இந்த மாளிகையில் நம் சிலர் நீங்கலாக யாருக்கும் உங்கள் மொழி தெரியாது. தெரிந்த இன்னும் சிலர் வர்த்த கர்கள், மாளிகைக்கு வரமாட்டார்கள்."

இந்த உறுதியால் தைரியம் கொண்ட இளஞ்செழியன், "இந்த ஆடை விலை உயர்ந்தது அலீமா!" என்றான்.

"ஆமாம், அரசன் இம்மாதிரிதான் ஆடை அணிவான்" என்று உணர்த்தினாள் அலீமா.

"அத்தகைய ஆடையை மற்றவர் அணியலாமா?"

"அரசர் கட்டளையிருந்தால் கானாவில் எதையும் செய்யலாம்..."

"இதை நான் அணிய வேண்டும் என்பது மன்னர் கட்டளையா?"

"ஆம். தனக்கு சமமாக உங்களை நடத்த இலி-ஆஸு திட்டமிட்டிருக்கிறான். இந்த ஆடையை நீங்கள் அணிந்து கொண்டால் போதும். அரசருக்கு நடக்கும் சகல மரியாதை களும் உங்களுக்கும் நடக்கும். நீங்கள் எங்கு சென்றாலும் முன்னால் இரண்டு காவலரும் பின்னால் இரண்டு காவலரும் உருவிய வாட்களுடன் வருவார்கள். அரசருக்கும் அப்படித் தான்..." என்று நிறுத்திய அலீமாவின் கண்களைக் காண, தரையை நோக்கித் தாழ்ந்திருந்த அவள் முகத்தைத் தன் இடது கையால் மெள்ளத் தூக்கினான் இளஞ்செழியன். அந்த அராபிய அழகியின் அரவிந்த விழிகள் கதையனைத்தையும், கணப்பொழுதில் உணர்த்தின. அவற்றிலிருந்த பயம், 'உங்களுக்கு இலி-ஆஸு காட்டும் ஒவ்வொரு மரியாதையிலும் அர்த்தமிருக்கிறது. அவை ஒவ்வொன்றும் உங்கள் கைகளுக்குப் போடப்படும் தளை, மறவாதீர்கள்' என்று தெளிவாகக் கூறியது. அவள் பயத்தைப் போக்கவும் அவளுக்கு ஓரளவு

துணிவை ஊட்டவும், அவள் பூங்கன்னத்தைத் தன் இரு கைகளாலும் பிடித்துத் தடவிக் கொடுத்த படைத் தலைவன் சொன்னான், "புரிகிறது அலீமா! காவலர் இன்றி நான் எங்கும் செல்ல முடியாது. இந்த விலை உயர்ந்த ஆடையே எனக்குச் சிறை என்று சொல்கிறாய். உண்மைதான். இலி-ஆஸுவின் நிலையில் நானிருந்தால் நானும் இதைத்தான் செய்வேன். ஆனால் இதற்கெல்லாம் கலங்காதே. நான் சொன்னது போல் நடந்து கொள். இலி-ஆஸுவின் முன்னிலையிலும் மதகுரு வின் முன்னிலையிலும் நான் நடந்து கொள்ளும் விதத்தைப் பற்றி எந்தவித உணர்ச்சியையும் முகத்தில் காட்டாதே. இலி-ஆஸுவின் கண்கள் எதையும் வினாடியில் கவனிக்கும் ஆற்றலுள்ளவை. ஆகவே எச்சரிக்கையுடன் நடந்து கொள். எதற்கும் துணிவைக் கைவிடாதே. எந்த வினாடியிலும் உன்னைப் பாதுகாக்கத் தமிழகத்தின் படைத்தலைவன் கரமொன்று உனக்குப் பின்னால் வாளேந்தி நிற்கிறதென்பதை மனத்தில் வைத்துக் கொள். அந்த நினைப்பு உனக்குத் துணிவை அளிக்கட்டும். பெருத்த அபாயத்தில் சிக்கும் போது மிதமிஞ்சிய துணிவு தேவை. விளைவை அப்போது எண்ணிப் பயனில்லை. வேலையை மட்டுமே எண்ண வேண்டும்."

அவன் வார்த்தைகள் அலீமாவுக்கு அப்படிப் பெரும் தைரியத்தை ஊட்டவில்லையென்றாலும் அதைரியத்தை ஓரளவு துடைக்கவே செய்தது. ராஜரீக உடைகளை அணிந்து குறுவாளை அவன் இடையில் செருகிக் கொண்டதும் அவனது கம்பீரத் தோற்றத்தையும் திடீரென அவன் உதடுகளில் தவழத் தொடங்கிய புன்னகையையும் கண்ட அலீமா சில நிமிடங்கள் மனச் சாந்தியையும் அடைந்தாள். அவன் ஆடைகளை அணிந்து முடித்துக் கொண்ட சில நாழிகைகளில் ஹிப்பலாஸும் அவனைத் தொடர ஆயத்தமானான். இளஞ்செழியன் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயமும் நெருங்கவே அவனை மதகுருவின் சன்னிதானத்திற்கு அழைத்துச் செல்லக் காவலர் இருவர் வந்து சேர்ந்தனர். மாளிகை வாயில் வரைக்கும் அந்தக்

காவலர் இருவர் வந்தார்களேயொழிய வாயிலில் அவனுக்குக் காவல் புரியப் பத்துப் பதினைந்து வீரர்கள் புரவிகளுடன் காத்திருந்தனர். அலீமா முகத்தில் ஈயாடாமல் நிற்பதைக் கண்டு, "சிரி அலீமா! சந்தேகத்துக்கு இடம் கொடாதே" என்று இளஞ்செழியன் கூறவே, அலீமா கஷ்டப்பட்டுப் புன்முறுவ லொன்றைக் காட்டினாள்.

தனக்காக ஏற்பட்ட புரவியில் ஏறிக் கொண்டதும் இளஞ்செழியன் காவலரை நோக்கி அலீமாமைக் காட்டி, 'அவளும் வரட்டும்' என்பதைக் குறிப்பால் உணர்த்தினான். அவன் சொல்வதற்கு எந்தத் தடையும் சொல்லாத காவலர் அவளுக்கு மட்டுமன்றி ஹிப்பலாஸுக்கும் புரவிகளை அளித்து அம் மூவரையுமே மதகுரு இருந்த இடத்துக்கு அழைத்துச் சென்றனர். வழி நெடுக நின்ற கானாவின் காவல் வீரர் மன்னருக்கு வணக்கம் செலுத்துவது போலவே இளஞ்செழியனுக்கும் வணக்கம் செலுத்தினர். வர்த்தகக் கூட்டத்தினரும் சாதாரண மக்களும் அவனை மரியாதை யுடனும் பயத்துடனும் பார்த்தனர். இலி-ஆஸுவின் உடையைப் போன்ற ஒரு உடையே மக்களிடம் இத்தனை கிலியை உண்டாக்குமென்றால் மன்னன் மகத்துவம் எத்தனை சிறப்பாயிருக்க வேண்டும் என்பதை நினைத்த இளஞ் செழியன் சற்றே புன்முறுவல் கொண்டதன்றி, 'இந்த மன்னனின் குரு எப்படியிருப்பான்?' என்றும் எண்ணிப் பார்த்தான். அந்த எண்ணத்துடன் சென்று குருவின் மாளிகையை அடைந்து குருவைப் பார்த்ததும் இலி-ஆஸு, அவன் குரு-இருவரில் யார் மிகக் கொடியவர் என்பதை அறிய முடியாமல் திணறினான் தமிழகத்தின் படைத்தலைவன்.

இலி-ஆஸுவின் மாளிகைப் பிரதேசத்தைவிட பன்மடங்கு அதிகக் கெடுபிடி குரு மாளிகைப் பிரதேசத்தில் இருந்தது. குருவின் மாளிகை, மலைப்பாறையொன்றின் உச்சியில் கட்டப்பட்டிருந்தல்லாமல் அதன் ஒரே வழி கடற்கரைப் பக்கமே இருந்ததையும், அந்த வழியிலிருந்த முதல் வாயிலுக்குப் பின்னால் பல கட்டுகளும் வாயிற்படிகளுமிருந்த

தையும் கவனித்த இளஞ்செழியன், குருவின் கடைக் கண்ணோக்குக்கு இலக்காகாமல் யாரும் அந்த மாளிகையிலிருந்து வெளியேற முடியாது என்பதையும் முடிவு செய்து கொண்டான். ஆனால் அந்த மாளிகைக்குப் பக்கத்தில் வேறு விடுதிகள் இல்லாததால் தன் திட்டம் நிறைவேற அந்த இடம் சர்வ சௌகரியமானதென்பதையும் தீர்மானித்துக் கொண்ட படைத்தலைவன் குருவைச் சந்திப்பதில் அக்கறை காட்டினான். ஆனால் இலி-ஆஸுவின் மத குருவை அணுகுவது அத்தனை எளிதாயில்லை. முதல் வாயிலிலேயே அனைவரும் இறங்க வேண்டியதாயிற்று. அடுத்த வாயிலில் அவர்கள் ஆயுதங்களைக் காவலர் வாங்கி ஒருபுறம் வைத்தார்கள். இளஞ்செழியன் இடையிலிருந்த குறுவாளை மிக அலட்சியமாக எடுத்த காவலனொருவன், அதைப் பக்கத்திலிருந்த மற்றொரு காவலனிடம் கொடுத்து எட்ட ஒரு இடத்தைக் காட்டி அங்கு வைக்கும்படி உத்தரவிட்டான். அந்த இடத்தில் மற்றொரு பெரிய வாள் மட்டுமேயிருந்தது. அது இலி-ஆஸுவின் வாள் என்பதையும், தனக்கு ராஜமரியாதை நடப்பதால் தன் குறுவாள் மற்றக்காலவர் வாட்களுடன் சேர்க்கப் படாமல் தனித்து மன்னன் வாளுடன் வைக்கப்பட்டதென்பதையும் பின்னால் புரிந்து கொண்டான் இளஞ்செழியன். காவலர் யாரும் அனுமதிக்கப் படாததால் இளஞ்செழியன், ஹிப்பலாஸ், அலீமா மூவர் மட்டுமே மூன்றாவது வாயிலுக்குச் சென்றனர். மூன்றாவது வாயிலில் இலி-ஆஸுவே இளஞ்செழியனை எதிர்கொண்டான். ஆனால் மூன்றாவது வாயிலின் கதவுகள் உடனே திறக்கப்படவில்லை. மன்னன் உட்பட எல்லோரும் சிறிது நேரம் காத்திருந்த பின்னரே அந்த வாயிலின் பெரும் கதவுகள் திறக்கப்பட்டன.

இலி-ஆஸு தலை தாழ்த்தி, தன் பெரிய உடலைக் குறுக்கிக் கொண்டு அப்படியே மற்றவர்களையும் வரச் செய்த தன்றி, உள்ளே நுழைந்த பின்பு குரு உத்திரவிடும் வரையில் யாரும் தலையைத் தூக்க வேண்டாமென்றும் கண்டிப்பான

உத்தரவிட்டான். இப்படி தலை கவிழ்ந்த நிலையில் இருபதடி தூரம் சென்றதும் இலி-ஆஸு மண்டியிட்டு உட்கார்ந்தான். இளஞ்செழியனும் மற்ற இருவரும் அவன் வழியையே பின்பற்றினர். பிறகு கடுமையான குரல் ஒன்று இரண்டொரு வார்த்தைகளை உதிர்க்கவே, இலி ஆஸு தலையை நிமிர்த்தும்படி கூறவே, அவன் உத்தரவுப் படி தலை தூக்கிய இளஞ்செழியன் கண்ணெதிரே எழுந்த காட்சியைக் கண்டதும் ஆச்சரியக் கடலில் மூழ்கினான்!

இலி-ஆஸுவின் கேளிக்கை மண்டபத்தைவிடச் சிறப்பு வாய்ந்த மண்டபமொன்றில் தானிருப்பதையும், நாலா புறமும் சூழ்ந்து கிடந்த சாம்பிராணிப் புகையின் நறுமணம் அந்த மண்டபம் பூராவையும் ஆட்கொண்டு விட்டதையும் உணர்ந்த இளஞ்செழியன், மண்டபத்தின் எல்லா இடங்களிலும் செல்வத்தின் சிறப்பு மண்டிக் கிடப்பதைக் கண்டான். அந்த மண்டபத்தின் தூண்களின் உச்சிகளனைத்தும் தங்கத் தகடுகளால் மூடப்பட்டிருந்ததால் தூரத்தே பகலிலும் எரிந்த இரண்டு பந்தங்களின் வெளிச்சத்தில் அவை பளபளத்ததையும் பார்த்த படைத்தலைவன், மதகுருவுக்கும் எளிய வாழ்க்கைக்கும் எந்தவித சம்பந்தமும் இருக்க முடியாதென்பதையும் புரிந்து கொண்டான். அவன் அபிப்பிராயத்தை மதகுரு உட்கார்ந்திருந்த மஞ்சம்கூட வலியுறுத்தியது.

விலை உயர்ந்த கம்பளங்கள் விரிக்கப்பட்ட மஞ்சத்தில் கால்கள்கூடத் தங்கத்தாலும் வெள்ளியாலும் மறைக்கப் பட்டிருந்தன. வழவழத்த அந்தக் கம்பளங்களின் மேல் ஒரு கால்மீது இன்னொரு காலைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்த குருவின் மார்பில் தொங்கிய பெரும் சங்கிலியும் பதக்கமும் விலை உயர்ந்தவை என்பதை ஊகிக்க இளஞ்செழியனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. மதகுரு இருந்த சூழ்நிலையே படைத் தலைவனைக் கவர்ந்தது. அதைவிட அவனை அதிகமாகக் கவர்ந்தன மதகுருவின் ஆஜானுபாகுவான சரீரமும், மிகக் கூரிய கண்களும், தலையைத் தூக்கி சூழ்நிலையைக் கவனித்துக் குருவின் மீது

கண்களை நாட்டிய மறு வினாடியில் இலி-ஆஸுவைவிடப் பன்மடங்கு அறிவும், குரூர சிந்தனையுமுள்ள மனிதனைத் தான் சமாளிக்க வேண்டிய அவசியம் நேரிட்டு விட்டதை உணர்ந்தான் படைத்தலைவன். மருந்துக்குக்கூட மயிரில்லாமல் நன்றாக வழித்துவிடப் பட்டதால் பளபளத்த மண்டைக்குக் கீழே வெளேரென்று விரிந்த மதகுருவின் அகலமான நெற்றியில் வளைந்து கிடந்த புருவங்களுக்குக் கீழே சிறியனவாய் ஆனால் மிகப் பளபளப்பாய்த் தெரிந்த இரு காந்தக் கண்களில் யாரையும் அலசும் சக்தியிருப்பதை இளஞ்செழியன் கவனித்தானாகையால், அது முதல் மிகுந்த எச்சரிகையுடன் நடந்து கொண்டான். மதகுரு இடுப்பில் மட்டும் சிறிது ஆடையை அணிந்திருந்ததால் அவர் உடலின் உறுதியையும் நீண்ட கைகளின் வலிமையையும் கவனித்த இளஞ்செழியன், தனிக்குத் தனியாகச் சண்டையிலிறங்கினாலும் மதகுருவை முறியடிப்பது எளிதல்லவென்பதைப் புரிந்து கொண்டானாகையால் அவன் பன்மடங்கு அதிக எசசரிக்கையடைந்தான். உள்ளத்தே எழுந்த உணர்ச்சிகளை அடுத்த இரண்டு நாளும் அவன் லவலேசமும் முகத்தில் காட்டாததாலேயே அவன் மதகுருவின் நம்பிக்கைக்கு ஓரளவு பாத்திரமாக முடிந்தது.

தலையைத் தூக்கிய பின்பும் சிறிது நேரம் மௌனமாகவேயிருந்த இலி-ஆஸு மதகுரு பேச அனுமதித்த பின்பே பேசத் துவங்கி, சுருக்கமாகச் சில வார்த்தைகளில் படைத்தலைவன் கானாவை அடைந்த விவரங்களை எடுத்துரைத்தான். மதகுரு மருந்துக்குக்கூட ஒரு வார்த்தை பதில் சொல்லாமல் மன்னன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். மன்னன் பேச்சை முடித்ததும் இளஞ்செழியனைத் தன் சிறு விழிகளால் ஒருமுறை ஆராய்ந்துவிட்டு அவனை நோக்கி ஏதோ கேட்டார். அவர் கேட்டது என்னவென்று இளஞ்செழியனுக்குப் புரியாததால் இலி-ஆஸு மன்னன் அலீமாவைச் சுட்டிக் காட்டி ஏதோ சில வார்த்தைகள் சொன்னான். மதகுரு தலையசைக்கவே அலீமா

அவர் சொல்வதைத் தமிழில் மொழி பெயர்த்து இளஞ்செழியனுக்கும் இளஞ்செழியன் சொன்னதை அராபியர் மொழியில் மொழி பெயர்த்து மதகுருவுக்கும் சொன்னாள். மதகுரு எத்தனை புத்தி கூர்மையுடையவரென்பதை முதல் கேள்விலேயே புரிந்து கொண்ட இளஞ்செழியன், அதிக சிரமப்பட்டே உணர்ச்சிகளை வெளிக்குக் காட்டாமல் அடக்கிக் கொண்டான்.

வழுக்கைத் தலையை ஒருமுறை ஆட்டிவிட்டுக் கேட்டார் மதகுரு, "கொள்ளையரிடம் அகப்படு முன்பு உன் நாட்டில் உன் அலுவல் என்ன?" என்று.

"போர் செய்தல்" என்றான் இளஞ்செழியன்.

"உங்கள் நாட்டில் எப்போதும் போர் நடக்குமா?"

"நடக்காது."

"நடக்காத காலங்களில் என்ன செய்வாய்?"

"வீரர்களுக்குப் பயிற்சியளிப்பேன்."

மதகுரு மெல்ல நகைத்தார். அவர் நகைத்தற்குக் காரணம் முதலில் இலி-ஆஸுவுக்கோ, இளஞ்செழியனுக்கோ புரியவில்லை. அவர் அடுத்துச் சொன்ன வார்த்தைகளால் தன் எச்சரிக்கை எப்படி ஒரே வினாடியில் காற்றில் பறந்து விட்டது என்பதைப் புரிந்துகொண்டு திணறினான் இளஞ்செழியன்.

"நினைத்தேன் அப்பொழுது. உன்னைப் பார்க்கையில் சாதாரணப் படை வீரனாகத் தெரியவில்லை. படைத் தலைவனுக்குள்ள தோரணை உன்னிடமிருக்கிறது" என்றார் மதகுரு.

இதைக் கேட்ட இலி-ஆஸுவின் கண்கள் பக்கவாட்டில் திரும்பி, சந்தேகத்துடன் தன்னைக் கவனித்ததைப் பார்த்தாலும், பார்க்காதது போலவே நடித்த இளஞ்செழியன் மதகுருவை நோக்கி, "மதகுரு நன்றாக எடை போட்டிருக்கிறார். நான் படைத் தலைவனல்ல. ஒரு சிறு பிரிவின் தலைவன். என்னிடம் இருப்பவர் இருபது வீரர்கள். அவர்களில் இவன் ஒருவன்'' என்று கூறி, சாட்சிக்கு ஹிப்பலாஸைச் சுட்டிக் காட்டினான்.

ஹிப்பலாஸை ஒரு கணம் பார்த்துவிட்டுப் பிறகு அவனைச் சட்டை செய்யாத மதகுரு, "அப்படியா! உங்கள் மதத்தைவிட்டு நீ எங்கள் மதத்தில் சேருவது எனக்கு வியப்பாயில்லை. உங்கள் மதத்தில் உன்னைப் போன்ற அறிவாளிகளுக்குப் பெரிய பதவிகள் கிடைப்பதில்லை. ஆனால் இங்கு பார். கானாவில் நீ கால் வைத்ததும் அரச மரியாதை, அரசன் மகள் உறவு, உலகத்திலேயே சிறந்த மதத்தின் அன்பு வீச்சு எல்லாம் கிடைக்கிறது" என்று சொல்லிச் சற்று இரைந்தே சிரித்தார் மதகுரு. தன்னை ஏளனம் செய்கிறாரா, உண்மையாகத்தான் பேசுகிறாரா என்பதைப் புரிந்து கொள்ள முடியாத இளஞ்செழியன், "எல்லாம் மன்னர் அளித்தது. அவருக்கு நான் ஆயுள் முழுவதும் ஊழியம் செய்யக் கடமைப்பட்டவன்" என்று பணிவுடன் உரைத்தான்.

இதனால் மதகுரு மட்டுமின்றி இலி-ஆஸுவும் சற்றே திருப்தியடையவே, அன்றிலிருந்து மூன்றாவது நாளிரவு இளஞ்செழியனை மதத்தில் சேர்த்துக் கொள்வதாக மதகுரு கூறி, இளஞ்செழியனை அன்று மாலைவரை அங்கேயே இருக்கும்படி உத்தரவிட்டார். தன்னைச் சோதனை செய்வதற்காகவே மதகுரு அந்த மாளிகையில் தங்க உத்தரவிட்டிருக்கிறாரென்பதைப் புரிந்துகொண்ட இளஞ்செழியன், அன்று முழுவதும் சகல அலுவல்களிலும் அவருக்கும் பெரும் திருப்தியை அளிக்கும் வண்ணம் நடந்து கொண்டதன்றி, மாலை மாளிகைக்குத் திரும்பும்போது தனக்குத் துணையாக நாலு காவலரை அனுப்பும்படியும் வேண்டிக் கொண்டான். படைத் தலைவனை அறிமுகப்படுத்திவிட்டுச் சென்றபோது இலி-ஆஸு அலீமாவை மதகுருவின் மாளிகையிலேயே விட்டுவிட்டுப் போனதால், மதகுருவிடம் அடிக்கடி பேசுவதும் சுலபமாயிற்று இளஞ்செழியனுக்கு. அவன் எத்தனையோ பணிவையும் அன்பையும் காட்டியும்கூட மதகுரு ஓரளவு தன்னிடம் திருப்தியைக் காட்டினாலும், தன்மீது ஓரளவு சந்தேகமும் அவருக்கு இருந்ததைக் கவனித்த இள்செழியன், மாலையில் புறப்படு முன்பாகத் தன்னுடன் காவலரை அனுப்பும்படி கோரினான்.

"காவலர் எதற்கு? வீரனான உனக்குத் தனியே செல்லப் பயமா?" என்று வினவினார் குரு.

"பயமில்லை. இருப்பினும் காவலர் வர குரு அனுமதிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான் இளஞ்செழியன்.

"காவலர் எதற்கு?" இரண்டாம் முறை கேள்வியைத் திருப்பினார் மதகுரு.

"உள்ளத்திலிருப்பதை வெளியிட்டுச் சொல்லலாமா?"

"சொல்லலாம்."

"உங்களையும் மன்னரையும் திருப்திசெய்ய இஷ்டப்படுகிறேன்."

"எங்களைத் திருப்தி செய்யவா!"

"ஆமாம். என்னிடம் உங்களுக்கு இன்னும் பூரண நம்பிக்கை பிறக்கவில்லை. ஆகவே நான் இன்னும் மூன்று நாட்கள், அதாவது குருநாதர் அருள் கூர்ந்து அவர் மதத்தில் என்னைச் சேர்த்துக்கொள்ளும்வரை காவலிலேயே உலா வர விரும்புகிறேன்."

இப்படிப் பட்டவர்த்தனமாக இளஞ்செழியன் உரைத்த சமயத்திலும் மதகுரு முகத்தில் ஆச்சரியக் குறியோ, வேறெவ்வித உணர்ச்சிகளோ துளிர் விடவில்லை. அதற்குப் பதில் அவர் சந்தேகமே வலுத்தது. "அப்படியானால் காவலரை அழைத்துப் போ" என்று உத்தரவிட்ட மதகுரு, அவன் முதல் வாயிற்படியைத் தாண்டியதும் தன் அந்தரங்கக் காவலன் ஒருவனை அழைத்து, "ஒன்று அந்த மனிதன் கள்ளங் கபடமற்றவனாக இருக்கவேண்டும். அல்லது பெரும் அயோக்கியனாக இருக்கவேண்டும். அவன் மீது ஒரு கண்ணை வைத்துக்கொள்" என்று உத்தரவிட்டு உள்ளறைக்குச் சென்று விட்டார்.

ஆயுதம் தாங்கிய காவலர் பலர் முன்னும் பின்னும் தொடர அலீமாவுடன் மீண்டும் இலி-ஆஸுவின் மாளிகைக்கு வந்த இளஞ்செழியன் அன்று இரவின் முதல்

ஜாமத்தைத் தனது அறையிலேயே கழித்தான். இரண்டாவது ஜாமம் புகத் தொடங்கியதும் மீண்டும் தனது புது உடைகளை அணிந்துகொண்டு அலீமாவையும் நான்கு காவலரையும் அழைத்துக்கொண்டு மதகுருவின் மாளிகையை நோக்கிச் சென்று, மாளிகையின் முதல் வாயிலிலேயே காவலரை நிறுத்திவிட்டு அலீமாவுடன் உள்ளே சென்று திரும்பினான். இப்படியே தொடர்ந்து அடுத்த நாளும் காரியங்கள் நடந்தன. இரண்டு தினங்களாக இளஞ்செழியன் எதற்காக அர்த்த ராத்திரியில் மதகுருவிடம் சென்று வருகிறான் என்பதை அறியாத காவலர் மெள்ள விஷயத்தை மன்னன் காதில் போட்டுவைத்தனர். ஆனால் அதைப் பற்றி இலி-ஆஸு எள்ளளவும் சிரமப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அதே நிகழ்ச்சி மூன்றாம் நாள் இரவு நடந்தபோது மட்டும் பலன் சிறிது வித்தியாசமாயிருந்தது. மூன்றாம் நாள் நள்ளிரவில் வழக்கம்போல் மதகுருவின் மாளிகைக்குள் இளஞ்செழியன் நுழைத்த சிறிது நாழிகைக்கெல்லாம் அலீமா மட்டும் வெளியே வந்து காவலரை விளித்து, "மிகவும் முக்கிய விஷயம். மன்னரிடம் போய் வருகிறேன். இந்த இடத்தைவிட்டு நகராதீர்கள்" என்று எச்சரித்துவிட்டு, புரவியொன்றில் வெகு வேகமாக இலி-ஆஸுவின் மாளிகையை நோக்கிப் பறந்தாள். அடுத்த அரை ஜாமத்திற்கெல்லாம் இளஞ்செழியன் பின் தொடர மதகுரு வெளியே வந்து கடற்கரையை நோக்கி நடந்தார். அவர் புறப்பட்டதும் வாட்களை உருவிக் கொண்டு பின் தொடர முயன்ற வீரர்களை மதகுருவே கையைக் காட்டித் தடுத்தார். மதகுருவின் போக்கு பெரும் விசித்திரமா யிருந்தது அந்த வீரர்களுக்கு. கானாவின் சரித்திரத்திலேயே எந்த மதகுருவும் இப்படிக் காவலின்றி, முரசு இன்றி வெளியே கிளம்பியதில்லை என்ற காரணத்தால், ஓரளவு சந்தேகம் மட்டுமின்றித் திகிலும் கொண்ட வீரர்களில் ஒருவன், மதகுரு வின் தலை மறைந்ததும் விடுவிடு என்று பாறைகளின் மறை வில் பதுங்கி இலி-ஆஸுவின் இருப்பிடத்தை நோக்கி ஓடினான்.

74. தேவியின் அருள்!

அன்று அமாவாசை தினமாகையால் எங்கும் மையிருள் சூழ்ந்து கிடந்ததன்றி, கானா துறைமுகப் பாறைகள்மீது அலைகளும் பெரிதாக எழுந்து மோதிக் கொண்டிருந்ததாலும் முதல் இரண்டு நாட்களில் அமைதி யாயிருந்த காற்று அந்த அமைதிக்கு ஈடுகட்டும் உத்தேசத் துடன் பலமாகச் சுழன்றடித்து, பேரிரைச்சலைக் கிளப்பிக் கொண்டிருந்ததாலும், ஒவ்வொரு அமாவாசையும் வடக்கி லிருந்து பெருக்கெடுக்கும் கடல் நீரோட்டம் அதிவேகமாக வடக்கிலிருந்து தெற்கே பாயத் தொடங்கிவிட்டதன் விளை வாக, தூரத்தே பிசாசுபோல் ஆடிக்கொண்டிருந்த கொள்ளையர் கப்பலும் தெற்குப் பக்கமாக இழுக்கப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்ததாலும் ஏற்பட்ட பயங்கரச் சூழ்நிலை குலை நடுக்கமெடுக்கக் கூடியதாக விளங்கினாலும், அதைச் சற்றும் கவனியாமல் அலட்சியமாகப் பாறைகளில் நடந்து தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த மதகுருவை நோக்கிப் பெரிதும் ஆச்சரியப்பட்டதல்லாமல், அவரது இணையற்ற துணிவைக் குறித்து உள்ளுக்குள்ளேயே அவரைப் பாராட்டவும் செய்தான். மக்களின் தலைத் தெய்வமான *ஐஸிஸிடம் அவருக்கிருந்த நம்பிக்கையும், மற்ற மதஸ்தர் களைத் தனது மனத்திற்கு மாற்றிக் கொள்வதில் அவருக்கிருந்த ஊக்கமும் பெரும் வியப்பைத் தந்தன படைத்தலைவனுக்கு. அந்த நம்பிக்கையும் ஊக்கமும் மட்டும் இல்லாவிட்டால்

* ஐஸிஸ் எகிப்திய தேவ மாதா கையில் ஹோரஸ் என்ற தெய்வீகக் குழந்தையுடன் கூடியவள். இயேசுநாதரை ஏந்திய அன்னை மேரிக்கும் எகிப்திய ஐஸிஸ் தேவிக்கும் பெரிய ஒற்றுமை இருப்பதாகக் கருதப்படுகிறது. Leonard Cottrell எழுதிய 'Life Under the Pharaohs' என்ற நூலில் ஆரம்ப அத்தியாயத்தைக் கவனிக்கவும்.

யவன ராணி கதையைப் பற்றிச் சொல்லப்படும் ஆதாரக்குறிப்புப் புத்தகங்கள் அனைத்தும் சென்னை கன்னிமரா புத்தக சாலையில் இருக்கின்றன.

மதகுரு இப்படிக் காவலில்லாமலும் முரசு இல்லாமலும் தன்னுடன் தன்னந்தனியாக மரக்கலத்துக்கு வர ஒப்புக் கொண்டிருக்க மாட்டார் என்பதையும், அப்படி அவர் வர இசையாத பட்சத்தில் தன் கதி அதோகதியாகி விட்டிருக்கு மென்பதையும் எண்ணிப் பார்த்த இளஞ்செழியன், அத்தனை மத நம்பிக்கையையும் ஊக்கத்தையும் மதகுருவுக்கு ஊட்டியதைப்பற்றி ஐஸிஸ் தேவியையும் மனத்தால் வணங்கினான். இப்படி யோசனைகளை எங்கெங்கோ அலையவிட்டுக் கொண்டிருந்த போதிலும் எதிரே கடலில் ஆடி நின்ற மரக்கலத்தை மட்டும் கூர்ந்து கவனித்துக் கொண்டே தமக்குப் பின்னால் நடந்து வந்த இளஞ் செழியனைப் பற்றி எந்தவித சிந்தனையுமில்லாமல் கடற்கரையின் பிரதான பாதையை அடைந்த மதகுரு சற்று நடையில் வேகத்தைக் காட்டினார். தன்னை மதமாற்றுவதி லிருக்கும் அக்கறையினாலேயே மதகுரு அத்தனை துரிதப் படுத்துகிறாரென்று நினைத்த இளஞ்செழியன் குருவை நோக்கி, "சற்று நிதானியுங்கள். மரக்கலத்தில் கொடி யேறட்டும்" என்று இரைந்து கூறியதன்றி, அவருக்கு முன்னால் ஓடி நின்று வழியையும் சற்றுத் தடை செய்தான்.

அவன் சொல்வது என்னவென்று புரியாததால் சில வினாடிகள் விழித்த மதகுரு ஆகாயத்தைத் தன் கைகளால் காட்டி, ஒரு உள்ளங்கையை இன்னொரு கையால் பாதியாகக் காட்டி நடு நிசி தாண்டிக் கொண்டிருக்கிறதென்பதை உணர்த்தினார். மூன்றாம் ஜாமம் முடிவதற்குள் தனக்கு முடி வாங்குதல் முதலிய சிட்சைகள் நடக்கவேண்டுமாதலால் மதகுரு அவசரப்படுகிறார் என்பதை உணர்ந்துகொண்ட இளஞ்செழியனும் தூரத்திலிருந்த மரக்கலத்தைச் சுட்டிக் காட்டி, தனது கையை முழங்கை வரையில் எழுப்பிக் காட்டியும், அதைக் கொடிபோல் அசைத்தும் ஓரிரு அராபியச் சொற்களை அரைகுறையாகப் பேசியும் மரக்கலத்தில் கொடியேறிய பின்பே அங்கு செல்ல வேண்டுமென்பதை உணர்த்த இல்லாத நாடகமெல்லாம் ஆடினான். அவன்

சொல்வதைப் புரிந்துகொண்டதற்கு அடையாளமாகத் தலையசைத்து, வினாடிகூடத் தாமதிக்க இஷ்டப்படாத மதகுரு வெகு வேகமாக நீர்க் கரையை அடைந்தார். நீர்க் கரையில் பெரிய அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது படைத் தலைவனுக்கு.

நீர்க்கரைத் தளையிலிருந்த தனது படகு அவிழ்க்கப் பட்டு மரக்கலத்துக்குச் செல்லத் தயாராக வைக்கப்பட்டிருந்த தன்றி உருவிய வாட்களுடன் நான்கு வீரர்கள் மதகுருவைக் காவல் புரியத் தயாராக நின்று கொண்டிருந்ததையும், அந்த வீரர்களுக்கு நடுவில் அலீமா கைகளிரண்டும் பிணைக்கப் பட்டு நிறுத்தப்பட்டிருந்ததையும் கண்ட இளஞ்செழியன் பெரும் திகிலுக்கு இலக்காகி, "அலீமா! என்ன இது?" என்று கூவியதன்றி, "விடுங்கள் அவளை! கைக் கட்டுகளை நீங்குங்கள்" என்று சொல்லிக்கொண்டு அங்கிருந்த வீரர்கள் மீது பாய்ந்தான். அடுத்த வினாடி இளஞ்செழியன் வாள் அவன் கரத்திலிருந்து பலமாகப் பறிக்கப்பட்டது. அந்த வாள் பறிக்கப்பட்ட வினாடியில் இலி-ஆஸுவின் மதகுரு உதிர்த்த பெரும் சிரிப்பு இடிகள் ஒன்றன்பின் ஒன்றாக விழுவதுபோல் கிளம்பி அந்த மலைப் பிரதேசத்தில் திரும்பத் திரும்ப எதிரொலி செய்ததால், கானாவின் மலைகள்கூட தன்னைப் பார்த்து நகைப்பது போல் தோன்றியது படைத் தலைவனுக்கு. "இதற்கு என்ன அர்த்தம்? மன்னன் வளர்ப்பு மகளைச் சிறை செய்ய யார் அனுமதி கொடுத்தது உங்களுக்கு?" என்று சீறினான் படைத்தலைவன்.

"அடமுட்டாள்! உன்னை ஒரு வினாடிகூட நான் நம்பவில்லை. முதல் நாள் உன்னைப் பார்த்தபோதே நீ பெரிய அயோக்கியனென்று தீர்மானித்தேன். இரண்டாம் நாளன்று நீ கப்பல் ஓட்டும் மரபைச் சேர்ந்தவனென்றும், எந்த தீட்சையும் கப்பலில்தான் உனக்கு நடக்க வேண்டுமென்றும் நீ கேட்டுக் கொண்டபோது அந்தத் தீர்மானம் உறுதியாயிற்று எனக்கு. அத்துடன்..." என்று ஏதோ சொல்ல முயன்று வாசகத்தை

முடிக்காத மதகுரு அலீமாவை நோக்கி, "உம்" என்று உறுமி, தான் சொன்னதை மொழிபெயர்க்கும்படி சைகை செய்தார்.

அலீமா மொழி பெயர்த்ததால் உண்மையை உணர்ந்த படைத் தலைவன், மதகுரு எத்தனை தூரம் தன்னைப் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதை அறிய முயன்று, "அத்துடன் என்று விட்டு விட்டீர்களே. முழுவதையும் சொல்லிவிடுங்கள்" என்று கேட்டான்.

இதைக் கேட்ட படைத் தலைவன் முகத்தில் ஏற்பட்ட கிலியைக் கண்டு நகைத்த மதகுரு, "சே! நீ இத்தனை அல்ப மான மனிதனா! உன்னைப் பெரும் தைரியசாலி யென்றல்லவா நினைத்தேன். உன் நடுக்கத்தைப் பார்க்கையில் உனக்கு இந்தப் பெண்ணைக் கொடுப்பதும் தவறு என்று தோன்றுகிறது. உன்னை மதம் மாற்றுவதாலும் கானாவுக்குப் பயனில்லை. கானாவுக்குத் தேவை துணிகர வீரர்கள். கோழைகளல்ல" என்ற மதகுரு நகைப்பில் வெறுப்பையும் காட்டினார்.

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லை தாங்கள்" என்றான் இளஞ்செழியன் சற்றுப் பணிவைக் காட்டி.

"யாருக்கும் மதகுரு பதில் சொல்ல வேண்டியதில்லை. மதகுருவுக்குத்தான் எல்லோரும் பதில் சொல்ல வேண்டும். இருப்பினும் சொல்கிறேன் கேள். உன்னைக் கண்ட கணத்தி லேயே நீ நம்பத்தகாதவன் என்பதை உணர்ந்து கொண்டேன். கொள்ளையர் பக்கத்தில் இருப்பதுபோல் நடித்து அவர்களை மோசம் செய்தவன். மற்றவர்களையும் மோசம் செய்யலாம் என்று தீர்மானித்தேன். ஆகவே என் ஆட்களைவிட்டு உன் நடவடிக்கைகளையும், இவள் நடவடிக்கைகளையும் கவனிக்கச் செய்தேன். இலி-ஆஸுவின் வளர்ப்புப் பெண் உன்னுடன் சதா பழகுவதையும் அடிக்கடி உனக்குப் பணிவிடை செய்வதையும், நீங்கள் நாழிக் கணக்கில் தனித்துப் பேசுவதையும் அறிந்தேன். ஆகவே முடிவு செய்தேன் உன்னை எதற்கும் நம்பக்கூடாதென்று. இன்றிரவு நீ என்னை

மரக்கலத்துக்கு வரும்படி அழைத்தபோது, தனியாகவே போகலாமென்றும் முரசு தேவையில்லையென்றும் நான் சொன்னதற்குக் காரணம் என்ன தெரியுமா?"

"என்ன?"

"உன்னைச் சோதித்துப் பார்க்கத்தான். நீ உடனே சரியென்று ஒப்புக் கொள்கிறாயா அல்லது முரசில்லாமல் காவலில்லாமல் மதகுரு கிளம்பக்கூடாதென்று கூறுகிறாயா என்று பார்த்தேன்..." என்ற மதகுரு வாசகத்தை முடிக்காமல் விட்டார். மதகுரு தன்னை அலசிப் பார்த்து விட்டதை உணர்ந்த இளஞ்செழியன் மண்டியிட்டு அவரை வணங்கி, "மதகுரு மன்னிக்கவேண்டும்" என்று மன்றாடினான்.

மதகுருவுக்கும் படைத் தலைவனுக்கும் ஏற்பட்ட சம்பாஷணையை அதுவரை மொழிபெயர்த்துக் கொண் டிருந்த அலீமாவுக்குக்கூட இளஞ்செழியன் மதகுருவிடம் மண்டியிட்டதைக் கண்டதும் மிதமிஞ்சிய வெறுப்பு ஏற்பட்ட தால், "தமிழகத்தின் வீரம் இவ்வளவுதானா? இந்த வீரத்தை வைத்துக்கொண்டா கானாவின் மதகுருவை ஏமாற்றிக் கப்பலுக்குக் கொண்டுபோய் அவர் உயிரைப் பணயமாகக் காட்டித் தப்பப் பார்த்தீர்கள்!" என்று கூறினாள். அவள் முகத்தில் துளிர்த்த வெறுப்பு குரலிலும் பூரணமாக மண்டிக் கிடந்தது.

அதற்குமேல் பேச்சை வளர்த்த இஷ்டப்படாத மதகுரு, இளஞ்செழியனையும் அலீமாவையும் காவலரையும் படகில் ஏறிச் சொல்லித் தூரத்தே நின்ற மரக்கலத்துக்குப் படகைக் கொண்டு போகும்படி உத்தரவிட்டார். தெற்கு நோக்கி நீரோட்டம் பலமாகப் பாய்ந்து கொண்டிருந்ததால் படகு வெகு வேகமாக மரக்கலத்தை அடைந்தது. படகின் வேகத்தை விட அதிக வேகமாக எங்கெங்கோ ஓடிக் கொண்டிருந்த உணர்ச்சிகளுடன் படகில் உட்கார்ந்து கொண்டிருந்த அலீமாவை இரண்டு மூன்று முறை இளஞ்செழியன் நோக்கி யும், அவனைப் பார்க்க இஷ்டப்படாத அலீமா கண்களை வேறுபுறம் திருப்பிக்கொண்டாள். இளஞ்செழியன் வெகு

துரிதமாகச் சமீபித்துக்கொண்டிருந்த மரக்கலத்தைப் பார்த்துக்கொண்டிருந்ததைக் கவனித்த மதகுரு, "தமிழா! மரக்கலத்தில் கொடி உயராது. உன் நண்பர்கள் அங்கில்லை. என் வீரர்கள்தான் அங்கு இருக்கிறார்கள்" என்று கூறிப் பேய்ச் சிரிப்பு சிரித்து, "உம்! மொழி பெயர்த்து உன் மணாளனுக்குச் சொல்லு, இந்தத் தமிழனுடன் சதி செய்ததற்காக அவனை மதம் மாற்றுவதல்லாமல் அவன் கையையும் துண்டித்து உனக்குத் திருமணப் பரிசாகத் திருமணத் தினத்தன்று தருகிறேன்" என்று அலீமாவை நோக்கிச் சொன்னார்.

அலீமாவின் உள்ளத்தில் வேதனை அலைகள் பெரிதாக எழுந்து மோதிக்கொண்டிருந்ததாலும், அந்த அமாவாசை இரவின் இருளைவிடப் பெரும் இருள் அவள் இதயத்தைச் சூழ்ந்து கொண்டிருந்ததாலும், வெறுப்பும் இகழ்ச்சியும் ததும்பிய குரலில் அவள் குருவின் வாக்கியங்களை மொழி பெயர்த்துக் கூறிவிட்டு மரக்கலத்தை ஏறிட்டு நோக்கினாள். நிசப்தமாயிருந்த மரக்கலத்தின் தளத்தில் திடீரென வீரர்கள் நடமாடும் அரவம் ஏற்படுவதற்கும் பந்தங்கள் எரிவதற்கும் படகு மரக்கலத்தை அடைவதற்கும் சமயம் சரியாயிருந்தது. ஆயுதம் தாங்கிய பத்து வீரர்கள் மதச் சின்னங்களை அணிந்தும் வாட்களை உருவிய வண்ணமும் மரக்கலத்தின் தளத்தில் காட்சியளித்தார்கள். மதகுருவின் சைகைப்படி காவலரிடையே நூலேணியில் ஏறி மரக்கலத்தின் தளத்தை அடைந்த இளஞ்செழியன், தன்னை மதம் மாற்றுவதற்கான சகல ஏற்பாடுகளும் அங்கு தயாராயிருப்பதைக் கவனித்ததும் சற்றுப் பிரமித்தான். அவன் பிரமிப்பைக் கண்டதால் திருப்தியடைந்த மதகுரு, "தமிழா! சாம்பிராணி நாட்டார் யாரை மதம் மாற்றுவதானாலும் அவர்கள் திருப்தியையும் கவனிப்பது சம்பிரதாயம். இந்தத் தளத்தில் மதச் சிட்சைகள் நடக்க வேண்டுமென்று விரும்பினாய். அப்படியே நடக்கப் போகிறது. ஆனால் என்னைக் கைப்பற்றி மன்னனை மிரட்டிக் கப்பலுக்கு ஆட்களைப் பெற்று நீ தப்பிவிடலாமென்று நினைத்தது மட்டும் நடவாது" என்று கூறிய மதகுரு, இரண்டு வீரர்களைப் பந்தங்களைப் பிடிக்கச் சொல்லி, அந்த இரண்டு

பந்தங்களுக்கு நடுவில் இளஞ்செழியனை மண்டியிட்டு உட்காரச் சொன்னார். படைத்தலைவன் அப்படியே உட்கார்ந்ததும் மற்ற பத்து வீரர்களையும் சுற்றிலும் காவலாகச் சூழ்ந்து நிற்கச் சொல்லி, தாமும் படைத் தலைவன் முன்பாக மண்டியிட்டு உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டு உரத்த குரலில் அராபிய மொழியில் ஏதேதோ மந்திரங்களை ஓதினார். அவர் மந்திரம் ஓதிய சமயத்தில் வீரர்கள் தலை கவிழ்ந்து பயபக்தியுடன் மௌனமாக நின்றனர். அலீமாவும் தலை கவிழ்ந்துதான் நின்று கொண்டிருந்தாள். இருப்பினும் அடுத்து நிகழவிருந்த ஏற்பாடுகளைக் குறித்து அவள் மனம் பெரும் வேதனைப்பட்டதன் விளைவாக, படைத்தலைவன் தலைமீதும், அடர்ந்து கருத்து சுருண்டு தொங்கிக் கன்னங்களில் விளையாடிய குழல்கள்மீதும் அவள் கண்கள் பதிந்தன. 'இத்தன அழகான குழல்கள் இன்னும் கால் ஜாமத்திற்குள் நீக்கப்படுமே' என்று நினைத்து உள்ளம் உருகினாள் அலீமா. 'மதகுருவைக் கடத்திச் செல்ல முயன்றபோது இவரைப் பெரிய வீரரென்று எண்ணி உள்ளம் மகிழ்ந்தேனே. இதோ பேடிபோல் நடுங்கித் தலை குனிந்து வணங்கிக் கிடக்கிறாரே, எத்தனை பரிதாபம்! அல்ல அல்ல! இதல்ல பரிதாபம். இத்தகைய மனிதரிடம் என் உள்ளத்தைப் பறிகொடுத்தேனே, அதுதான் பரிதாபம்! அதுகூட அல்ல பரிதாபம். இவருடன் தமிழ் நாடு செல்லலாம், அங்கு எனது ராணியைச் சந்திக்கலாம் என்ற திட்டங்களிட்டேனே, அதுதான் பரிதாபம்!' என்று ஏதேதோ சொல்லிக் கொண்டு மனம் புழுங்கிக் கொண்டிருந்த அலீமாவுக்கு வினாடிகள் நிமிடங்களாகி நிமிடங்கள் கால் ஜாமத்தை ஓட்டிவிட்டதுகூடத் தெரியவில்லை. நிமிடங்கள் ஓடியதையோ அவள் கால் ஜாமத்தை நகர்த்திவிட்டதையோ லட்சியம் செய்யமலே தமது நீண்ட ஜபத்தை முடித்த மதகுரு, "உம்...சிட்சை செய்பவர்கள் வரட்டும்" என்று உத்தரவிட்டு எழுந்தார். அவருடன் இளஞ்செழியனும் எழுந்திருக்க முயன்றதைக் கண்ட மதகுரு, "இரு! இரு! ஐஸிஸ் தேவியின் பூரண கிருபை உனக்கு வரவில்லை?

முதலில் உன் தலைமயிர் எடுக்கப்பட வேண்டும். பிறகு நான் மந்திர நீரைத் தெளிப்பேன். பிறகுதான் இந்தக் கடன்கள் முடியும்" என்று கூறினார்.

ஆனால் அவர் கூறியதை லட்சியம் செய்யாமலே எழுந்து நின்றுகொண்ட இளஞ்செழியன் மார்பில் காவலரின் கத்திகள் இரண்டு தடவின. "உம் மண்டியிட்டு உட்கார்" என்று மதகுரு கூறியதன்றிக் காவலரும் அவனை உட்காரும்படி சைகை காட்டினர்.

மார்பில் தடவி எந்த விநாடியிலும் ஊடுருவிவிடக் கூடிய கத்திகளையோ மதகுருவையோ சிறிதும் சட்டை செய்யாத இளஞ்செழியன் அலீமாவை நோக்கி, "அலீமா! தலைமயிரை வாங்கவேண்டிய அவசியமில்லை என்று சொல்" என்றான்.

அலீமா ஏதும் புரியாமல் விழித்தாள். மதகுரு சொல்வது எதை எதிர்த்தாலும் அந்த வினாடியிலேயே இளஞ்செழியன் கொல்லப்படுவான் என்பதை உணர்ந்த அலீமா, அவன் சொன்னதை மொழிபெயர்த்துக் குருவிடம் சொல்லாமல், "வேண்டாம், வேண்டாம். மண்டியிட்டு உட்கார்ந்து விடுங்கள். சிட்சை நடக்கட்டும். இல்லையேல் உங்கள் உயிர் போய்விடும்" என்று கெஞ்சினாள். அவள் குரல் நடுங்கியது. உடல்கூட சற்று ஆடியது.

இளஞ்செழியன் அவள் திகிலைக் கவனித்தான். இருந்த போதிலும் கவனியாதது போலச் சொன்னான், "நான் சொன்னதை மொழிபெயர்த்துக் குருவிடம் சொல்" என்று.

அடுத்த வினாடி அதிக ஆத்திரத்துடனும் குரோதத் துடனும் எழுந்தது மதகுருவின் குரல். "என்ன சொல்கிறான் தமிழன்?" என்று கேட்டார் மதகுரு.

"தலைமயிரை வாங்க வேண்டிய அவசியமில்லையாம்" தட்டுத் தடுமாறி மொழிபெயர்த்தாள் அலீமா.

மதகுருவின் உணர்ச்சியற்ற முகத்திலும் மெள்ளக் கோப உணர்ச்சி உதயமானாலும் அதை வெளிக்குக் காட்டாமலே, "காரணம் என்னவாம்?" என்று கேட்டார் அவர்.

"சிட்சையில்லாமலே ஐஸிஸ் தேவியின் அருள் எனக்குக் கிடைத்துவிட்டது. உன் மதகுருவுக்குத் தெரியும்படியாகச் சொல் அலீமா" என்றான் படைத் தலைவன். அலீமா மொழி பெயர்த்தாள். அப்புறம் மொழிபெயர்த்துக் கொண்டே இருந்தாள். மதகுருவும் படைத் தலைவனும் ஒருவரை யொருவர் நேரிடையாகப் பார்த்தே பேச ஆரம்பித்தார்கள்.

"ஏன்? எங்கள் தேவி உனக்குப் பிரசன்னமோ?" என்று உக்கிரத்துடன் கேட்டார் மதகுரு.

"ஆம்" என்று பணிவுடன் கூறினான்.

"எப்பொழுது பிரசன்னம்?"

"இப்பொழுது மண்டியிட்டுக் கண்களை மூடிக் கொண்டிருந்தபொழுது."

"உன் மனக் கண் முன் தோன்றிவிட்டாளோ?"

"ஆம் குருவே!"

"சிகையை எடுக்க வேண்டாம், இந்த நாட்டு மதவழக்கப் படி நடக்க வேண்டாம் என்றும் உனக்கு விளக்களித்தாளா?"

"ஆம்."

"விளையாடுகிறாயா?"

"மத விஷயத்தில் நான் விளையாடுவதில்லை?"

"அந்த மட்டும் நீ புத்திசாலிதான். மண்டியிடு, சிட்சை நடக்கட்டும்."

"எனக்கிஷ்டமில்லை."

"உன் இஷ்டம் எதுவும் இங்கு நடவாது. கண்ணை மூடிக் கொண்டிருந்த சமயத்தில் உன் புத்தி புரண்டுவிட்டது போலிருக்கிறது."

"மதகுரு தவறாக நினைக்கிறீர்கள். புறக் கண்களை மூடும்போது அகக் கண்கள் திறக்கின்றன. உணர்ச்சியால் பல விஷயங்களை அறிய முடிகிறது."

"அப்படியா?"

"ஆம். அறிந்த பின்புதான் எழுந்திருந்தேன்."

"எதை அறிந்த பின்பு?"

"ஐஸிஸ் தேவியின் அருள் கிடைத்துவிட்டது என்பதை அறிந்த பின்பு."

"வேறெதை அறிந்தாய்?" மதகுருவின் பேச்சில் கோபம் மட்டுமின்றி இகழ்ச்சியும் அதிகரித்திருந்தது.

"ஐஸிஸ் தேவி தனது மதத்தில் என்னைச் சேர்த்துக் கொள்ள இஷ்டப்படவில்லை என்பதையும் அறிந்தேன்" என்றான் படைத் தலைவன்.

"தேவியே சொன்னாளா?" என்று கேட்டார் மதகுரு.

"சொன்னது மட்டுமல்ல. செய்யவும் செய்தாள்."

"என்ன செய்தாள்?"

படைத் தலைவன் பதிலில் துக்கம் தாண்டவமாடியது. "என் நாட்டைவிட்டுப் போ என்று ஓட்டியும் விட்டாள்" என்றான் படைத் தலைவன்.

அப்பொழுதுதான் ஏதோ பெருமோசம் நடந்திருக்கிறதென்பதை உணர்ந்துகொண்ட மதகுரு சட்டென்று கரைப் பக்கம் தலையைத் திருப்பினார். அடுத்த வினாடி, "மோசம்! மோசம்! தமிழனை வெட்டிப் போடுங்கள்" என்று கூவினார் மதகுரு.

எதற்கும் அசையாத மதகுரு அப்படித் திடீரெனக் கூக்குரலிட்டதனால், வீரர்கள் செயலற்றுப் போன ஒரு விநாடியில் சரேலென்று குனிந்து வீரனொருவன் வாளை உருவி, திரும்பி நின்ற மதகுருவின் முதுகில் ஊன்றிக் கொண்ட படைத் தலைவன் மற்ற வீரர்களை நோக்கி, "உங்களில் யாராவது ஒருவன் ஒரு அடி நகர்ந்தாலும் மதகுரு பிணமாகி விடுவார். ஜாக்கிரதை" என்று எச்சரித்ததன்றி, "உம், வாட்களைக் கீழே போடுங்கள்" என்று கடுமையான குரலில் உத்தரவும் இட்டான்.

வீரர்கள் ஒரு வினாடி தயங்கினர். "நாங்கள் பத்துப் பேர் இருக்கிறோம். நீ ஒருவன் என்ன செய்ய முடியும்" என்றும் ஒருவன் துணிவுடன் கேட்டான்.

இளஞ்செழியன் முகத்தில் புன்முறுவல் அரும்பியது. "எதற்கும் கானாவின் கோட்டையைப் பாருங்கள். உங்களைச் சுற்றிக் கப்பலிலும் கவனியுங்கள்" என்று கூறினான்.

அவன் சொற்படி *கானாவின் கரையைக் கவனித்த காவலர் பிரமை பிடித்து நின்றார்கள். கானாவின் கரை தூரத்தே தெரிந்தது. நங்கூரம் எடுக்கப்பட்ட மரக்கலம் அதிவேகமாகத் தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. காவலர் தங்களைச் சுற்றிலும் ஒரு முறை கண்களை ஓட்டினார்கள். பந்தங்கள் அவர்களுக்கு வெகு அருகேயிருந்ததால் கப்பலின் ஓரங்கள் முதலில் தெளிவாகத் தெரியவில்லை. இருளிலிருந்து வெளிச்சமிருக்கும் பிரதேசத்தைப் பார்க்கலாம். வெளிச்சத்திலிருந்து இருட்டுப் பிரதேசம் தெரியாதல்லவா! ஆகவே உள்ள நிலையைப் புரிந்துகொள்ள ஊன்றிக் கவனிக்க வேண்டியிருந்தது காவலருக்கு. அப்படி ஊன்றிக் கவனித்த போதுதான் மரக்கலத்தின் ஓரப் பலகைகளில் தங்களைச் சுற்றிப் பலர் வேல்களைத் தாங்கி நின்றது தெரிந்தது. சிறைப் பட்டிருப்பது தமிழனல்ல, தாங்கள்தான் என்பதைப் புரிந்து கொண்ட மதகுருவின் படைவீரர்கள் எல்லையற்ற கலவரமடைந்து படைத் தலைவன் உத்தரவுப்படி கத்திகளைக் கீழே எறிந்தனர். இருளிலிருந்து வெளிவந்த ஹிப்பலாஸ் சுற்றிலும் வேல் தாங்கி நின்ற வீரர்களை விட்டு அந்தக் கத்திகளை எடுக்கச் சொன்னான். பிறகு மதகுருவின் காவலரை நடத்திக் கொண்டு போய் மரக்கலத்தின் ஒரு மூலையில் வளைத்து நிறுத்தும்படி உத்தரவிட்டான். காவலர் அப்புறப்படுத்தப் பட்டதும் மதகுருவின் முதுகில் ஊன்றியிருந்த கத்தியை அகற்றிய படைத் தலைவன், "மதகுரு மன்னிக்க வேண்டும். எந்த மதத்தையோ மதத்தைச் சேர்ந்தவர்களையோ

* 'யவன ராணி' யில் வரும் கானா நாடு, திரு. நிருக்மாவைப் பிரதமராகக் கொண்ட இன்றைய கானா அல்ல. இப்போது அராபியக் கடலோரத்தில் உள்ள ஏடனுக்கு அருகில் உள்ள கிராமம் அன்று கானா என வழங்கப்பட்டது.

அவமதிப்பது தமிழர் பண்பாடு அல்ல. ஆனால் நானிருந்த நிலையில் வேறு வழியில்லை'' என்று பணிவுடன் சொன்னான்.

மதகுரு ஏதும் புரியாமல் விழித்தார். பிறகு வேகத்துடன் எட்டச் சென்று கொண்டிருந்த கானாவின் விளக்குகளை ஏறெடுத்துப் பார்த்த மதகுரு பெருமூச்செறிந்தார். "தேவி உன்னைச் சும்மா விடமாட்டாள். இலி-ஆஸுவும் சும்மா விடமாட்டான்" என்று கூறினார் குரலில் ஆத்திரம் தொனிக்க.

நிராதரவான அந்த நிலையிலும் தைரியத்தைக் காட்டிய மதகுருவை மரியாதையுடன் நோக்கிய படைத் தலைவன், "மதகுருவே! இலி-ஆஸுவைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் ஐஸிஸ் தேவி கருணை வாய்ந்தவள். தேவியை நான் மறக்கமாட்டேன். தமிழகம் சென்ற பின்பும் மறக்க மாட்டேன். தெய்வம் கருணையின் சொரூபம். அது எந்த உருவிலிருந் தாலும் அதர்மத்திற்கு இடம் கொடாது. இது பாரத நாட்டு வேதாந்தம். தமிழர்கள் தனிச் சித்தாந்தமும் இதுதான். தேவி கருணை வாய்ந்தவள். மதகுருவே, அவள் பெயரால் இனி யாவது கட்டாய மதமாற்றம் வேண்டாம்" என்ற மதகுருவுக்கு யோசனை சொல்லவே, சீற்றம் கொண்ட மதகுரு, "உன் உபதேசம் எனக்குத் தேவையில்லை. என்னை என்ன செய்வ தாக உத்தேசம்?" என்று கடுங் கோபத்துடன் கேட்டார்.

"காலையில் சொல்கிறேன்" என்ற படைத் தலைவன், மதகுருவை அழைத்துச் சென்று பாதுகாக்கும்படி ஹிப்பலாஸுக்கு உத்தரவிட்டு, அலீமாவை அழைத்துக் கொண்டு தளத்திலிருந்த கொள்ளைத் தலைவன் அறைக்குச் சென்று, அங்கிருந்த பஞ்சணையில் அவளை உட்காரவைத்து அதுவரை மறைக்கப்பட்டிருந்த விளக்கையும் வெளியே எடுத்தான்.

அறைபூராவும் சூழ்ந்த விளக்கொளியில் பிரமை பிடித்து உட்கார்ந்திருந்த அலீமாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்ட இளஞ்செழியன், அவள் முகத்திலிருந்த வியப்பை

யும் பிரமையையும் கண்டு, "என்ன அலீமா அப்படிப் பார்க் கிறாய்?" என்று வினவினான்.

"பிரமை பிடித்திருக்கிறது" என்று மெள்ளத் தட்டுத் தடுமாறிப் பேசினாள் அலீமா.

"உலகமே ஒரு பிரமைதான் அலீமா'' என்றான் இளஞ்செழியன்.

"எப்படி மதகுருவை ஏமாற்றினீர்கள்?'' என்று கேட்டாள் அலீமா.

மெள்ள மெள்ள விவரித்தான் படைத்தலைவன். அவன் விவரிக்க விவரிக்க மேலும் பிரமை அடைந்த அலீமாவுக்கு அவன் விஷயத்தைச் சொல்லி முடித்ததும் உணர்ச்சிகள் கரை புரண்டோடின.

75. மரக்கலத்துக்கு ஒரு தலைவி

உணர்ச்சிப் பெருக்கினால் எதிர்பாராத விதமாகத் திடீரென அலீமா தன் கழுத்தை வளைத்துக் கட்டிக் கொண்ட தால் சோழர் படை உப தலைவன், மெள்ள அவள் கைகளைத் தன் கழுத்திலிருந்து பிரித்து எடுத்துவிட்டுச் சற்றே விலகிப் பஞ்சணையில் உட்கார்ந்து, "இலி-ஆஸுவின் வளர்ப்பு மகளுக்கு இது தகுதியல்ல அலீமா" என்று சிறிது கடுமை யாகவும் வார்த்தைகளை உதிர்த்தான். ஆனால் அலீமாவுக்கு தான் செய்ததில் பிழை ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை யாகையால் அவள் அவன் வார்த்தைகளைக் கேட்டதும் நகைக்கவே செய்தாள். 'யாரும் செய்வதற்கு முடியாத காரியத்தைச் சாதித்திருக்கும் இவருக்கு எப்படிப் பாராட்டுத் தெரிவிப்பது!' என்று தன் மனத்துக்குள் நினைத்துக் கொண்ட தல்லாமல், தான் கேட்ட விவரங்களை மீண்டும் மீண்டும் நினைத்துப் பெரும் பிரமையே அடைந்தாள். அத்தனை அற்புத நிகழ்ச்சிகளை அவளுக்கு விவரித்திருந்தான் படைத் தலைவன். தளத்தில் மதகுருவை ஹிப்பலாஸிடம் ஒப்படைத்த பிறகு அவளை அழைத்துக் கொண்டு கொள்ளைத் தலைவன்

அறைக்கு வந்தபோதுகூட அலீமாவின் குழப்பமும் பிரமையும் மிதமிஞ்சிக் கிடந்ததைக் கண்ட படைத்தலைவன், மேலும் அலீமாவைக் குழப்பத்தில் வைக்கக் கூடாதென்ற முடிவுக்கு வந்தானாகையால், "மதகுருவை எப்படி ஏமாற்றினீர்கள்?" என்று கேட்டதுமே விஷயத்தை மெள்ள மெள்ள விளக்க முற்பட்டு, "மதகுருவை ஏமாற்றுவதில் கஷ்டங்கள் பல இருந்தன அலீமா! அபாயமும் பலமாக இருந்தது" என்று கூறினான்.

அலீமா பிரமை பிடித்துக் கிடந்த தன் அழகிய விழிகளை அவன்மீது ஒரு கணம் நிலைக்க விட்டுப் பின்பு கீழ்ப்புறம் தாழ்த்திவிட்டு, "அபாயத்தைப் பற்றி எனக்குச் சொல்ல வேண்டாம். இதில் நீங்கள் வெற்றி கண்டிரா விட்டால் இத்தனை நேரம் நாமனைவரும் சித்திரவதை செய்யப்பட்டிருப்போம்" என்று முணுமுணுத்தாள்.

"முதல் நாள் நான் திட்டத்தைச் சொன்னபோதே இந்த எச்சரிக்கையை வெளியிட்டாயே அலீமா?" என்று நினைவு படுத்திய இளஞ்செழியன், "ஆனால் அலீமா! அபாயத்தைக் கண்டு அஞ்சுபவன் பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது. தவிர நான் சம்பந்தப்பட்ட வரையில் மதமாற்றமும் ஒரு சித்திரவதைதான் எனக்கு" என்று தெரிவித்தான்.

"அது கிடக்கட்டும். நீங்கள் சொன்ன திட்டம் வேறு. நடந்த திட்டம் வேறாயிருக்கிறதே?" என்று அலீமா கேட்டாள்.

"ஆம், அலீமா! இரண்டுக்கும் சிறிது வித்தியாசமிருக்கிறது. மதகுருவுக்கு நான் பணிவிடை செய்ய ஒப்புக் கொண்டவுடன், அதுவும் மதம் மாறுவது நிச்சயம் என்று தெரிந்தவுடன், அடிமை வர்த்தகர்கள் ஐம்பது பேரையும் இலி-ஆஸு விடுதலை செய்வான் என்று எதிர்பார்த்தேன். அப்படியில்லா விட்டால் உன்னைக் கொண்டாவது சிறைக் காவலரை ஏமாற்றி அவர்களை விடுவித்துவிட்டால் இரவோடு இரவாக மதகுருவைத் தூக்கிச் செல்லலாமென்று நினைத்தேன். ஆனால் மதகுருவும் இலி-ஆஸுவும் என் விஷயத்திலும் மிகுந்த எச்சரிக்கையுடனிருந்ததை முதல் நாளே கவனித்தேன்.

என்னை எப்பொழுதும் காவலர் சூழ்ந்து வந்தார்கள். நீ மன்னன் மாளிகையிலிருந்து வெளியே செல்லும் சமயங்களில் தூரத்திலிருந்து இருவர் உன்னைத் தொடருவதை மாளிகைச் சாளரத்தின் மூலம் இருமுறை கண்டேன். மற்றொன்றும் கண்டேன். ஹிப்பலாஸை மட்டும் யாரும் சட்டை செய்ய வில்லையென்பதையும் கண்டேன். இலி-ஆஸு அவனை ஒரு பொருட்டாகக் கருதவில்லையென்பதையும் அவன் வெளியே எங்கு சென்றாலும் ஒற்றர்கள்கூட அவனைத் தொடராததை யும் கவனித்தேன். ஆகையால் எதை செய்வதானாலும் உன்னைக் கொண்டு செய்வதில் பயனில்லை, ஹிப்பலாஸைக் கொண்டுதான் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். அதையொட்டித் திட்டத்தை மாற்றினேன்" என்று விளக்கினான் படைத் தலைவன்.

"திட்டத்தை மாற்றிய தகவலை என்னிடம் சொல்ல வில்லையே?" என்று கேட்டாள் அலீமா.

"காரணமாகத்தான் சொல்லவில்லை. அலீமா! உன்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் மன்னனின் ஒற்றர் களால் கவனிக்கப்பட்டது. ஆகவே உன் மூலமாக அவர் களுக்கு ஒரு திட்டத்தையும், தனிப்பட்ட ஹிப்பலாஸிடம் ஒரு திட்டத்தையும் தெரியப்படுத்தினால் பொய்த் திட்டம் மன்னன் காதுக்குப் போகும். அதை அவன் சரிக்கட்ட எத்தனிக்கையில் மற்றொரு திட்டம் நிறைவேறிவிடும் என்று முடிவு செய்தேன். வெற்றியின் ரகசியமே இவ்வளவு தான். ஒருபாதி பொய். ஒருபாதி உண்மை. பொய்யை நம்பி ஒருவன் செல்லும்போது உண்மை நிகழ்ந்து விடுகிறது."

"விளக்கிச் சொல்லுங்கள்" என்று அலீமா கேட்க, விவரிக்கத் தொடங்கினான் இளஞ்செழியன்.

"கானாவின் துறைமுகக் கோட்டையிலிருந்து தப்ப வழி ஒன்று தான். மதகுருவுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து அவர் நமது கையில் சிக்கினாலொழிய வேறு வழியில்லை என்பதை முதலிலேயே முடிவு செய்து கொண்டேன். ஆகையால் அமாவாசை இரவன்று மன்னனுக்கு உன்னைக் கொண்டு

மதுவூட்டி மயங்கச் செய்து அவன் முத்திரை மோதிரத்தைப் பறித்து அதைக் காட்டி அடிமை வர்த்தகர்களைச் சிறை மீட்ப தென்றும், அவர்களில் பத்துப் பேரை மதகுரு மாளிகையை அடுத்துள்ள பாறைகளில் பதுங்கச் செய்வதென்றும் மற்ற வரை மரக்கலத்துக்கு அனுப்பிவிடுவதென்றும் தீர்மானித் தேன். அப்படிப் பதுங்கிய பத்துப் பேர் நான் மதகுருவை அழைத்துக் கொண்டு இரவில் மாளிகைக்கு வெளியே வரும்போது அவரைக் கட்டித் தூக்கிக் கொண்டு போக வேண்டியதென்றும், பிறகு நான் தொடர வேண்டியதென்றும் முதலில் திட்டமிட்டேன். ஆனால் முதல் நாள் எத்தனை பணிவிடை செய்தும் மதகுருவின் பார்வை சந்தேகப் பார்வை யாயிருந்ததையும், என்னைக் கண்காணிக்கவும் அவர் தனிப் படத் தன் சீடர்களில் ஒருவனை ஏவியதையும் கண்டதும் திட்டத்தை மாற்றிவிட்டேன். மறுநாளே ஹிப்பலாஸை அழைத்துச் சிறை நிலவரத்தையும் காவல் முறையையும் அறியும்படி கூறினேன். சிறையில் இராக்காலத்தில் காவல் அதிகமில்லையென்பதையும் அறிந்த ஹிப்பலாஸுக்கு, அடிமை வர்த்தகர்களை விடுவிப்பது ஒரு பொருட்டல்ல என்பதைப் புரிந்து கொண்டேன். என் சொற்படியே ஹிப்பலாஸ் நடந்து கொண்டான். இரண்டாம் நாளிரவி லிருந்து சிறைக் காவலருக்குத் திருட்டுத்தனமாக மன்னன் மாளிகை மதுவைக் கொண்டுபோய்க் கொடுத்தான். தான் மதம் மாறப் போவதைக் குறித்தும் பெருமையடித்துக் கொண்டான். மத மாற்றப் பேச்சு அவர்கள் நினைவைக் குலைத்தது. ஆகவே அடிமை வர்த்தகர்கள் தப்புவது சுலப மாயிற்று. மயங்கிக் கிடந்த காவலரிடமிருந்து சாவியை எடுத்துச் சிறைக் கதவைத் திறந்துவிட்டான் ஹிப்பலாஸ்."

இப்படிச் சொல்லிக் கொண்டு போன இளஞ் செழியனை இடைமறித்த அலீமா ஒரு சந்தேகம் கேட்டாள், "விடுவித்தது சரிதான். ஆனால் அடிமை வர்த்தகர்கள் மரக்கலத்துக்கு எப்படி வர முடிந்தது? கானாவின் கோட்டை வாயிலில் காவல் பலமானதாயிற்றே?" என்று.

"அதை முன்பே கவனித்தேன் அலீமா. நான் முதலில் வந்ததே அந்த வாசல் வழியாகத்தானே? ஆனால் கோட்டையின் சுவர் பெரிய மலைப்பாறைகளை அண்டி யதும் நின்றுவிடுகிறது. மற்ற இடங்களுக்கு மலைப்பாறைகளே அரணாகின்றன. சிறைக் கட்டடங்களுக்குப் பின்புறம் பெரும் மலைப்பாறைகளே இருக்கின்றன. சிரமப்பட்டால் அவற்றில் ஏறி நீர் மட்டத்தை சிறிது தெற்குப் புறத்தில் அடையலாம். அங்கிருந்து மரக்கலத்துக்கு நீந்திச் செல்வது எளிது. அதுவும் இன்றுள்ள கடும் நீரோட்டத்தில் அது மிக எளிதாகிவிட்டது" என்று விளக்கிச் சொன்ன இளஞ்செழியன் மேலும் கூறினான்: "காவலரை ஏமாற்றுவது அத்தனை பெரிய காரியமல்ல. ஆனால் மதகுருவை எப்படித் தனித்து மாளிகைக்கு வெளியே கொண்டு வருவதென்று யோசித்தேன். மதத்துக்குப் பரிகாரம் மதம்தான் என்பதை யோசித்தேன். அதைப்பற்றிச் சர்ச்சை செய்வதாகக் கூறித்தான் உன்னையும் அழைத்துக் கொண்டு மூன்று இரவுகள் மதகுரு மாளிகைக்குச் சென்றேன்" என்று பேச்சைச் சற்று நிறுத்தினான்.

"ஓகோ! அதற்காகத்தான் என்னைக் கூட்டத்திலிருத்தி விட்டுப் பிரதி தினம் மதகுருவிடம் தனித்துப் பேசிக் கொண் டிருந்தீர்களோ?" என்று கேட்டாள் அலீமா.

"ஆம் அலீமா! மதகுருவுக்கு மதவெறி அதிகம் என்பதைக் கண்டதும் அந்த வெறியைத் தூண்ட முற் பட்டேன். வெறி, புத்தியை ஆட்சி கொள்ளும்போது அறிவு குலையும் என்பது ஆன்றோர் மொழி. ஆகவே அரபு நாட்டைப் பற்றி எங்கள் நாட்டு வணிகர் சொன்னதைப் பற்றி யெல்லாம் விசாரித்தேன். அரபு நாட்டில் பல கூட்டங்களிருக் கின்றனவாமே, அவற்றில் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி தெய்வமாமே என்றெல்லாம் கேட்டேன். மழைக்கு 'பிளைட்ஸ்' என்ற கடவுளும், காதலுக்கு 'உஸ்ஸா,' 'அத்தார்' என்ற கடவுள்களும் உண்டென்பது உண்மையா என்றும் கேட்டேன். உண்மையென்று ஒப்புக் கொண்டார் மதகுரு. அத்துடன் துர்ச்செய்கைக்கு 'மானா' என்ற தேவதையும் உதவி

புரிய 'யாகூத்'தும், நட்புக்கு 'வாட்' தேவதையும் அதிகாரிகளா என்று விசாரித்தேன். என் விசாரணையால் மகிழ்ந்தார் மதகுரு. அத்தனையும் உண்மை என்று சொல்லிப் பெருமூச் செறிந்தார். மதத்தில் எனக்குள்ள ஆராய்ச்சியையும் இப்பேர்ப் பட்ட சீடன் கிடைத்தது தனது அதிர்ஷ்டம் என்றும் பாராட்டினார். அத்துடன் அந்தத் தேவதைகள் உண்மைத் தெய்வங்கள் அல்லவென்றும், எகிப்து கலாசாரத்தின் சின்னமும் உலகமாதாவும் 'ஹோரஸ்' என்ற தெய்வீகக் குழந்தையைக் கையிலேந்தியவளுமான 'ஐஸிஸ்' தேவியே உண்மைத் தெய்வமென்றும் கூறினார். அவர் சொன்னதி லிருந்து பல விஷயங்களை உணர்ந்தேன். மற்றக் கலாசாரங்கள் போலவே எகிப்தின் கலாசாரமும் அரபு நாட்டில் வேரூன்றி யிருக்கிறதென்பதையும், ஐஸிஸ் தேவியிடம் இலி–ஆஸுவுக்கு இணையற்ற நம்பிக்கை என்பதையும் புரிந்து கொண்டேன். ஆகவே அந்தப் பழைய நம்பிக்கைகளைக் கலந்து மதகுருவிடம் பேசினேன். 'மானா' என்ற துர்த்தேவதை எனது மரக்கலத்தில் உலவுவதாக நான் கனவு கண்டதாகவும், ஆகவே ஐஸிஸ் தேவியின் மந்திரங்களை மரக்கலத்தின் தளத்தில் உச்சரித்தால் அந்தத் துர்த்தேவதை ஓடிவிடுமென்றும் கூறினேன். என்னைப் போன்ற கடலோடிகளை மதம் மாற்றுவதானாலும் எங்கள் கப்பல்மீது மாற்றுவதே எங்கள் நாட்டுப் பழக்கம் என்றேன். மற்றக் காரணங்களுக்கு மசிவதுபோல் பாசாங்கு செய்த மதகுரு மானாவின் பெயரைக் கேட்டதும் உண்மையாகவே வெகுண்டார். ஐஸிஸ் தேவியின் பெயரை உச்சரித்தால் அது ஓடிவிடும் என்றும் கூறி, மூன்றாவது நாள் இரவில் என்னுடன் தனித்துப் புறப்பட்டார். யாராவது வீரர்களை அழைத்துக் கொள்ளுங்களேன் என்றேன். தேவையல்லை என்ற மதகுரு, கடைக்கண்ணால் என் முகத்தைக் கவனித்தார். நான் பெரிய விசாரம் விட்டது போல் முகத்தை வைத்துக் கொண்டேன். நீ கூறியதுபோல் அது நடிப்புத்தான் அலீமா! நான் உன்னையும் பத்துக் காவலரையும் கடற்கரையில் கண்டதும் கிலி பிடித்த தாகக் காட்டியதும் நடிப்புத்தான். நடிப்பதைத் தவிர வேறு

வழியும் இல்லை. என் திட்டத்தைக் குலைத்துவிட்டதாக மதகுரு நினைக்க வேண்டும். அந்த நினைப்பின் தைரியத்தில் அசட்டையாயிருக்க வண்டும் என்று தீர்மானித்தேன். உன்னை எப்பொழுதும் மன்னரின் ஒற்றர்களும் மதகுருவின் ஒற்றர்களும் தொடருவதால் நீ அரண்மனையை அடையு முன்பே சிறை பிடிக்கப்படுவாயென்பது எனக்குத் தெரியும்..."

சற்றுப் பேச்சை நிறுத்தி அலீமாவைப் பார்த்தான் இளஞ்செழியன். அவள் விழிகளில் கோபச்சாயை படர்ந் திருந்தது. "ஒருவேளை என்னை வீரர்கள் சிறை செய்து கொட்டடியில் அடைத்திருந்தால் என்னைக் கனாவிலேயே விட்டுப் போய் விடத்தானே உத்தேசம்?" என்று அவள் கேட்டாள் சொற்களில் கோபம் சொட்ட.

"வீரர்கள் சிறை செய்தாலும் உன்னைச் சிறையில் அடைக்க மாட்டார்களென்பது எனக்குத் தெரியும்!"

"எப்படித் தெரியும்?"

"எனக்கும் மதகுருவுக்கும் இடையே மொழி பெயர்க்க, மன்னன் உன்னைத்தானே நியமித்திருக்கிறான்?"

"அப்படியானால் மதகுருவிடம் தனிமையில் பேசுகையில் என்ன செய்தீர்கள்?"

"தெய்வங்களின் பெயர்களை மட்டும் பெரிதாக உச்சரித்தேன். சிலவற்றுக்கு ஜாடை காட்டினேன். நான் எங்கள் நாட்டுக்கு வந்த அரபு வணிகரிடமிருந்து கற்ற மொழியையும் அரைகுறையாகப் பேசினேன்."

"முதல் நாள் ஏன் அப்படிப் பேசவில்லையென்று மதகுரு கேட்கவில்லையா?"

"கேட்டார். ஆனால் மொழி சரியாகத் தெரியாததால் பயமாயிருந்ததென்று மன்னிப்பும் கேட்டேன்."

அலீமா சிறிது நேரம் ஆழ்ந்து யோசித்துவிட்டு மீண்டும் சந்தேகம் கேட்டாள், "ஆமாம், மரக்கலம்தான் உங்கள் வசமிருந்தது. அப்படியிருக்கத் தளத்தின்மீது மண்டியிட்டு மதகுருவிடம் சிட்சை பெறுவதற்கு எதற்காக உட்கார்ந் தீர்கள்?" என்று.

"அவகாசம் தேவையாயிருந்தது அலீமா!" என்றான் இளஞ்செழியன்.

"எதற்கு அவகாசம்?" என்று கேட்டாள் அலீமா.

"அடிமை வர்த்தகர்கள் தப்பிய பிறகு அவர்களைத் துடுப்புக்களுள்ள அறையில் மூச்சுப் பேச்சில்லாமல் பதுங்கியிருக்கும்படியும், மதகுருவும் நானும் மற்றவர்களும் தளத்துக்கு வந்த பின்பு ஓசைப்படாமல் மெள்ள நங்கூரத்தைத் தண்ணீரிலிருந்து மேலிழுத்து விடும்படியும் கூறினேன். கடலில் நீர்வேகம் அதிகம் இருந்தால், துடுப்புக்களைத் துழாவ வேண்டியதில்லையென்றும் ஹிப்பலாஸிடம் சொல்லி யிருந்தேன்" என்றான் இளஞ்செழியன்.

"உங்கள் திட்டம் தவறியிருந்தால்? மதக்குரு உங்கள் வலையில் விழாமலிருந்தால்? மரக்கலத்துக்கு வர மறுத்திருந் தால்?" என்று உணர்ச்சி பொங்கக் கேட்டாள் அலீமா.

"மரக்கலத்தை நடக்கிச் சென்று, முடிந்தால் தமிழகம் சேருமாறு ஹிப்பலாஸுக்கு உத்தரவிட்டிருந்தேன்" என்றான் இளஞ்செழியன்.

"அங்கு...? அங்கு...?" என்று இருமுறை ஏதோ சொல்ல முற்பட்ட அலீமா மேலே முடியாததால் பெருமூச்செறிந்தாள். "அங்கு காத்திருப்பவளுக்கு ஆறுதல் சொல்லவா ஹிப்பலாஸை அனுப்புகிறீர்கள்?" என்று கேட்கத் துடித்தாள் அவள். அதை நினைக்க நினைக்க இளஞ்செழியனின் ஆழ்ந்த காதல், ஆழ்ந்த கடமை உணர்ச்சி, எந்த நிலையையும் சமாளிக்கவல்ல ஆழ்ந்த திறமை, எல்லாவற்றையும்விட எல்லையற்றுக் கிடந்த அவன் நாட்டுப்பற்று, வீரம், தந்திரம் எல்லாம் அவள் இதயத்தைச் சூழ்ந்து உணர்ச்சிகளைக் கிளறிவிடவே, கரை புரண்ட அன்பினாலும் மதிப்பினாலும் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அப்பொழுதுதான் அவன் சற்றுக் கண்டித்தான், "இலி-ஆஸுவின் வளர்ப்பு மகளுக்கு இது தகுதியல்ல அலீமா" என்று.

அவன் வார்த்தைகளிலிருந்த உஷ்ணத்தைக் கவனித்த அலீமா மெள்ள நகைத்தாள். அந்த உஷ்ணத்தை ஊட்டும் ஒரு

பெண் ஆயிரக்கணக்கான ஸ்டேடியாக்களுக்கு அப்பால் இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டதால், 'அவளென்ன அத்தனை பெரிய அழகியா?' என்று பொறாமையும் கொண்டாள் அந்தப் பாலைவனத்து அழகி. அவள் சிரிப்பைச் சிறிதும் ரசிக்காத இளஞ்செழியன் பஞ்சணையிலிருந்து எழுந்தான், பிறகு மௌனமாக வெளியே செல்ல முயன்றான்.

"எங்கு போகிறீர்கள்?" அவன் அசட்டையைக் கண்டு கோபத்துடன் கேட்டாள் அலீமா.

"மேற்கொண்டு ஏற்பாடுகளைச் செய்ய" என்றான் இளஞ்செழியன்.

"என்ன ஏற்பாடுகள்?"

"விடிய அரை ஜாமமே இருக்கிறது."

"அது தெரியும்."

"விடிவதற்குள் மதகுருவைக் கரையில் இறக்கி விட வேண்டும்."

"எங்கே?"

"இன்னும் அரை காதம் சென்றதும் கானாவின் தெற்கு ஓரத்திலிருக்கும் பாறைகளுக்கருகில் கரையை அடைய ஒரு படகைக் கொடுத்து, குருவையும் வீரர்களையும் அனுப்பி விடுகிறேன்.',

"பிறகு?"

"பிறகு துடுப்புகளைக் கொண்டு இந்த சிவப்புக் கடலுக்குக் குறுக்கே, மேற்கில் மரக்கலத்தைச் செலுத்த வேண்டும். காற்று வசதியிருந்தால் பாயையும் விவரிக்க வேண்டும்."

இளஞ்செழியனின் திட்டங்கள் தெளிவாக இருப்பதைக் கண்ட அலீமா, சோழர் படைகளின் உபதலைவன் எல்லா விஷயங்களையும் முன்கூட்டியே யோசனை செய்வதை நினைத்துப் பார்த்து அவன் கூரிய அறிவை வியந்தாள். வெள்ளி முளைத்த சில வினாடிகளில் மிகத் திறமையுடன் அவன் திட்டங்களை நிறைவேற்றி முடித்த விதரணையைக் கண்டும் ஆச்சரியப்பட்டாள்.

மதகுருவுக்கும் அவருடைய வீரர்களுக்கும் படகு ஒன்றை அளித்துக் கரை சேரும்படி அனுமதித்துவிட்டு, ஹிப்பலாஸை விளித்து அடிமை வர்த்தகர்களைத் தளத்துக்கு அழைத்து வரும்படி உத்தரவிட்டான் இளஞ்செழியன். அப்படித் தளத்தில் கூடிய அடிமை வர்த்தகர்களைப் பார்த்து, "என்னை நீங்கள் அடிமையாக விற்க நினைத்தீர்கள். உங்களை அடிமைத் தளையிலிருந்தும் இலி-ஆஸுவின் சித்திரவதையிலிருந்தும் மீட்டிருக்கிறேன். என்னிடம் பணிபுரிய இஷ்டப்பட்டால் இந்த மரக்கலத்தில் அலுவல் புரியலாம். இல்லையேல் உங்களை அடுலீஸ் துறைமுகத்தில் இறக்கிவிடுகிறேன். பிறகு நீங்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம். கப்பலைச் செலுத்தப் புது மாலுமிகளையும் பணத்தையும் சம்பாதிக்க வழி எனக்குத் தெரியும். என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

படைத் தலைவனிடம் பணிபுரிவதே தங்கள் நோக்கமென்பதை அடிமை வர்த்தகர்கள் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கவே, சிலரைத் துடுப்புகளைத் துழாவவும் சிலரைப் பாய் விவரிக்கவும் ஏவிய இளஞ்செழியன், கோபத்தால் கொதித்துக்கொண்டு சற்றுத் தூரத்தில் தளத்தில் நின்ற அலீமாவை ஹிப்பலாஸிடம் சுட்டிக்காட்டி, "ஹிப்பலாஸ்! இந்தக் கப்பலுக்கு இனி அலீமாதான் தலைவி" என்று கூறியதன்றி, "அலீமா! உனக்குத்தான் மரக்கலத்தை நடத்தத் தெரியுமென்று சொன்னாயே. அடுலீஸுக்கு எங்களைக் கொண்டு சேர்ப்பது உன் கடமை" என்று சொல்லி அவளை அணுகி அவள் சீற்றத்தைத் தணிக்க அவளது இரு கரங்களையும் பிடித்துக் கொண்டான்.

"காரியம் ஆகவேண்டுமல்லவா! அதனால்தான்..." என்று சீறினாள் அலீமா.

"காலைப் பிடிக்கிறேன் என்கிறாய். பிடிக்கட்டுமா?" என்று சொல்லிப் புன்முறுவல் செய்தான் இளஞ்செழியன்.

அந்தப் புன்முறுவல் முன்பாக அவள் கோபம் கரைந்தது. "மரக்கலத்தின் இடது பக்கத்துத் துடுப்புக்களை

மட்டும் துழாவுங்கள். யாரங்கே, சுக்கானை வலது பக்கம் திருப்பு. பாய்களை அத்தனை தூரம் விசிற வேண்டாம். இப்படி, உம்! இந்தப்புறம்..." என்று உத்தரவுகளை மடமடவெனப் பிறப்பித்தாள் அலீமா. அவள் உத்தரவுகளை அடிமை வர்த்தகர்கள் வெகு துரிதமாக நிறைவேற்றவே மெள்ள, திடமாக வடமேற்கில் திரும்பிய மரக்கலம் காற்று வேகத்தில் ஓட முற்பட்டது. அலீமாவின் எண்ணங்களும் மரக்கலத்தை விட அதிக வேகத்துடன் அடுலீஸின் பெரும் வீதிகளில் ஓடிக் கொண்டிருந்தது.

76. மலைத் தீவில்...

அலீமாவின் செம்பவள உதடுகளிலிருந்து உதிர்ந்த இரண்டு மூன்று கட்டளைகள் நிறைவேற்றப்பட்டதுமே, மரக்கலம் ஏதோ மந்திர நீர்ச் சக்கரம்போல் சுழன்று திசைமாறி வடமேற்கில் திரும்பி ஓட முற்பட்டதைத் தளத்தில் நின்றே கண்ட சோழர் படையின் உபதலைவன், கப்பலோட்டும் கலையில் அவளுக்கிருந்த திறமையைக் கண்டு பெரிதும் வியப்படைந்து, 'டைபீரியஸ் சாமானியப்பட்டவனல்ல. ஒரு பெண்ணைக் கப்பலோட்ட இப்படிப் பழக்கக் கூடியவன் கரங்களில், அறிவு மிக்க ஆண்வீரர்கள் கிடைத்துவிட்டால் அவர்களை அவன் செப்பனிடக் கூடிய திறனைச் சொல்லவா வேண்டும்?' என்று தனக்குள்ளேயே கூறிக்கொண்டான். இப்படி அலீமா காட்டிய திறமையால் டைபீரியஸின் திறனும் தந்திரமும் அவன் சிந்தையிலெழுந்து உலாவவே, 'இத்தகைய வல்லவனொருவன் தமிழகத்தில் புகுந்திருக்கிறானே! அவன் ஆணைப்படி இயங்க யவனர்களும் ஏராளமாயிருக்கிறார்களே! போதாக்குறைக்கு நாடும் பிளவுபட்டுக் கிடக்கிறதே. நாட்டின் கதி எப்படியிருக்கிறதோ?' என்று நாட்டு நினைப்பிலும் ஆழ்ந்து, விவரிக்க முடியாத வேதனைக்குள் பல வினாடிகள் ஆழ்ந்து விட்ட படைத் தலைவன், கடலையும் தூரத்தே கண்ணுக்கு மறைந்து கொண்

டிருந்த மதகுருவின் படகையும், கானாவின் தெற்குப் புறத்தில் எட்டத் தெரிந்த பாறைகளையும் வெறித்துப் பார்த்துக் கொண்டு மௌனமாகவே நின்று கொண்டிருந்தான். நாட்டைவிட்டுத் தான் வெளியேறி இரண்டு மாதங்களுக்கு மேலாகவே ஓடிவிட்டதை எண்ணிப் பார்த்த இளஞ்செழியன், மீண்டும் நாடு திரும்ப இன்னும் இரண்டு மாதங்களாகலா மென்பதையும், போதிய பண வசதியும் பொருள்களும் கிடைக்காவிட்டாலோ, அல்லது கடற்காற்று அனுகூலமாக இல்லாவிட்டாலோ இரண்டு மாதங்களுக்கு மேலும் தாமதம் ஏற்படாமலென்பதையும் உணர்ந்தானாகையால், 'இந்த நாலைந்து மாதங்களில் மன்னன் கரிகாலன் கதியும் புகாரின் கதியும் என்னவாகுமோ? இதுவரை என்ன ஆகியிருக்கிறதோ? நான் நாட்டில் திரும்பவும் காலை வைக்கும்போது விபரீத நிலைமை ஏற்பட்டிருந்தால்...?' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு அதைப்பற்றி மேற்கொண்டு நினைக்கவும் அஞ்சி, நினைப்பை வேறு துறையில் மாற்றத் தளத்தின் கோடியில் நின்று ஏதோ உத்தரவிட்டுக் கொண்டிருந்த அலீமாவின்மீது தன் கண்களை ஓட்டினான்.

சமீபப் பார்வைக்கு இணையற்ற அழகுடன் விளங்கும் அலீமா தூரப் பார்வைக்கு மோகனாகாரமாக விளங்கினாள். தளத்தின் ஓரங்களில் எரிந்துகொண்டிருந்த இரண்டொரு பந்தங்களின் வெளிச்சம் அவ்வப்பொழுது ஆடிய பாய்ச்சீலை யால் தடைப்பட்டதன் விளைவாக அவள் முதுகின் மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் திட்டுத் திட்டாகத் திடீர்திடீரென விழுந்து மறைந்த ஒளித் தகடுகள் அவள் அழகு வடிவத்தை அதிக நேரம் காட்ட இஷ்டப்படாதவை போலக் காட்டிக் காட்டி மறைத்ததால், அவ்வப்பொழுது தோன்றித் தோன்றி மறையும் தேவஸ்திரீ போலக் காட்சியளித்தாள் அலீமா. இரட்டைப் பின்னலாகத் துலங்கி அவள் தோள் பட்டையில் தொங்கிய கருங்குழல்கள், பந்தங்களின் மின்னல் போன்ற வெளிச்சத்தில் தோன்றிய சமயங்களில் கருக்கலின் இருளைவிடத் தாங்கள் எத்தனை கருமையென்பதை

நிரூபித்தன. கப்பலின் பெரும் பக்கப்பலகைகளுக்கெதிரே தெரிந்த அவள் சிறிய உருவம், துடிப்புடன் திரும்பி உத்தர விட்ட சமயங்களில் அசைந்த வேகத்தைப் பார்த்த இளஞ் செழியன் பூவழகி ஒருத்தி மட்டும் தன் மனத்தை ஆதியில் ஆட்கொள்ளாவிட்டால் யவன ராணியின் மையலிலோ அல்லது அந்த அராபிய அழகியின் காதலிலோ தான் சிக்கி யிருப்பது நிச்சயமென்பதைப் புரிந்துகொண்டான். அந்தச் சிந்தனை ஏற்பட்டதால் தமிழகத்துப் பெண்களின் கற்பின் கவசம் ஆண் மகனை இதர பெண்களிடமிருந்தும் காக்கும் உரம் பெற்றிருந்ததை எண்ணி எண்ணி, பாரதத்தின் பண்பாட்டின் உச்சநிலையை வியந்து, 'உணர்ச்சிகளைக் கூடக் கட்டிப் போட ஒரு பண்பாட்டை உலகத்துக்கு அளித்துள்ள என் நாடு பெருமையுடையது. அது வாழட்டும்!' என்று சொந்த நாட்டுக்கு ஆசி கூறும் முறையில் ஏதோ தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இப்படிப் பல எண்ணங்களால் பீடிக்கப்பட்ட படைத் தலைவனைத் தளத்தின் கோடியிலிருந்து நெருங்கி வந்த அலீமா, "தமிழகத்து வீரர் என் அறைக்கு வரவு செய்ய வேண்டும். ஹிப்பலாஸையும் வரச்சொல்ல வேண்டும்" என்று அழைப்பை விடுத்து, பணிவு நிரம்பிய குரலிலும் சொற் களிலும் உத்தரவின் தொனியையும் சிறிது காட்டினாள். அலீமாவின் சமீபத்தாலும் அவள் அதிவேகமாகத் தன் முன்பு வந்துவிடுத்த உத்தரவாலும், சிந்தையில் உலாவிய எண்ணங் களிலிருந்தும் தமிழகச் சூழ்நிலையிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு, செங்கடலில் ஓடிக்கொண்டிருந்த மரக்கலத்துக்கும் அப்பொழுதிருந்த நிலைமைக்கும் திரும்பிய இளஞ்செழியன் தன் உதடுகளில் புன்முறுவலைத் தோற்று வித்து, "உன் அறையா! எது அலீமா உன் அறை?" என்று வினவினான் ஏதும் புரியாதது போல்.

"அலீமாவுக்குத் தனி அறை இந்த மரக்கலத்தில் கிடையாது படைத் தலைவரே" என்று சுட்டிக் காட்டிய

அலீமா சற்றுப் பெருமையுடன் தலையை உயர்த்திப் படைத் தலைவனைப் பார்த்தாள்.

"வேறு யார் அறைக்கு அழைக்கிறாய் அலீமா?" என்று, வினவினான் படைத் தலைவன்.

"மரக்கலத்தின் தலைவன் அறைக்கு அழைக்கிறேன், யவனர் மரக்கலங்களில் அறைகள் இரண்டுதான் உண்டு" என்றாள் அலீமா.

"அப்படியா!"

"ஆம் படை தலைவரே! துடுப்புத் துழாவும் அடிமைகள் இருக்கும் அடித்தள அறை. மரக்கலத் தலைவனோ தலைவியோ தங்கும் மேல்தள அறை. வேறு அறைகளை யவனர்கள் தங்கள் போர்க் கப்பல்களில் அமைக்க மாட்டார்கள்."

"ஏன்?"

"கொள்ளையர்களும் அடிமை வர்த்தகர்களும் நிறைந்த இந்தக் கடல் மூக்கிலும்..." என்று சொல்லிக் கொண்டுபோன அலீமாவை இடைமறித்த இளஞ்செழியன், "என்ன! கடல் மூக்கா!" என்று வியப்புடன் வினவினான்.

பேச்சை அவன் சட்டென்று அறுத்துவிட்டதால் ஒரு வினாடி சிரமப்பட்ட அலீமா, தன்னைச் சமாளித்துக் கொண்டு கூறினாள். "ஆம் படைத்தலைவரே! எரித்திரியக் கடலின் இப்பகுதியை இங்கிருப்பவர் கடல் மூக்கு என்று தான் அழைக்கிறார்கள். எகிப்து எதியோப்பிய நாடுகளின் கடற்கரை ஒருபுறமும் அரபு நாட்டுக் கடற்கரை ஒருபுறமும் நீண்டு கிடப்பதால், இடையேயுள்ள இந்தக் கடற்பகுதி நாசித் துவாரம்போல் குறுகலாகவும் நீண்டதாகவும் இருப்பதாலும், இப்படிக் கூறுகளாயிருப்பதால் வீசும் பெரும் கடற்காற்றுகள் நாசியிலிருந்து சில சமயங்களில் கிளம்பும் பெருமூச்சுப்போல் சப்திப்பதாலும், இந்தக் குறுகிய நீண்ட கடற்பகுதியைக் கடல் மூக்கு என்று அழைக்கிறார்கள்."

இந்த விவரத்தைக் கேட்ட படைத் தலைவன், "ஓகோ! அதனால்தான் இந்தக் கடல்பிராந்தியத்தில் காற்றோட்டமும் நீரோட்டமும் பலமாக இருக்கின்றனவா?" என்றான்.

"ஆமாம் படைத் தலைவரே! நல்ல திறமைசாலியான மாலுமிகளே இந்தக் கடல் மூக்கில் மரக்கலத்தைச் செலுத்த முடியும். தீவிரமான நீரோட்டத்தாலும் அலைகளின் திசை மாற்றத்தாலும் இந்தக் குறுகலான கடலுக்கு இடையே மணற் திட்டுத் தீவுகள் பல உண்டு. தீவுகள் திடீரெனத் தோன்றுவதும் மறைவதும் உண்டு. மரக்கலத் தலைவன் சிறிது எச்சரிக்கைக் குறைவாயிருந்தாலும் ஏதாவது ஒரு திட்டில் மரக்கலம் உராய்ந்து மணலில் புதைந்துவிடுவதும் உண்டு. இவற்றை யெல்லாம் விடப்பெரிய ஆபத்து ஒன்றும் இருக்கிறது."

"என்ன ஆபத்து அலீமா?"

"இன்னும் ஒரு பகலில் நாம் அராபிய ஜலசந்தியின் முனையைத் திரும்பிவிடுவோம். அங்கிருந்து அடுலீஸை நோக்கிக் கப்பல் திரும்பும்போது எதியோப்பிய கடற்கரையும் அரபு நாட்டுக் கடற்கரையும் அதிகமாக நெருங்குவதால் நீர்ப்பகுதி மிகவும் குறுகுகிறது. அங்கு நீரோட்டத்தின் வேகம் அளவிட முடியாதது. சில ஸ்டேடியாக்கள் வரை மரக்கலம் துடுப்புக்களின் பலத்தால் நகர வேண்டும். துடுப்புத் துழாவு பவர்களின் கை சிறிது சளைத்தாலும் மரக்கலம் திரும்பப் பின்னோக்கி ஓடிவிடும். பழைய இடத்துக்குப் போய்ச் சேர்ந்துவிடுவோம்."

எரித்திரியக்கடல் மூக்கின் அபாயங்களை அலீமா விவரிக்க விவரிக்க மரக்கலத்தின் பிரயாணத்தை எதிர் நோக்கி யுள்ள சங்கடங்களை நினைத்துப் பார்த்த இளஞ்செழியன், ஓரளவு மனக்கலக்கம் அடைந்தானானாலும் இத்தனையும் சமாளிக்கவல்ல ஒரு மரக்கலத் தலைவி தனக்குக் கிடைத்தது பற்றி மகிழ்ச்சியும் அடைந்தான். 'எனக்கும் கொள்ளைக் காரர்கள், கப்பலோட்டும் கலையைப் போதிக்கத்தான் செய்தார்கள். ஆனால் இத்தனை நுணுக்கங்களைப் போதிக்க வில்லை' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்ட இளஞ்

செழியன் குரலைச் சற்று உயர்த்தி அலீமாவை நோக்கிச் சொன்னான். "இந்தக் கடல் பயணம் அபாயமானது அலீமா. ஆனால் ஆண்டவன் அந்த அபாயத்தை நிவர்த்தித்து விட்டான்" என்று.

அலீமா தன் அழகிய விழிகளை உயர்த்தி அவனை நோக்கினாள். 'எப்படி?' என்ற கேள்வியும் அந்தப் பார்வையில் தொக்கி நின்றது. அவள் பார்வையில் எழுந்த கேள்வியைப் புரிந்துகொண்ட இளஞ்செழியன் தொடர்ந்து சொன்னான்: "அலீமா! கடல் பகுதியில் ஆபத்துகள் அதிகமிருந்தாலென்ன? அவற்றைச் சமாளிக்க உன்னைப் போன்ற ஒரு தேவதையை ஆண்டவன் அளித்திருக்கிறானல்லவா?"

அலீமாவின் வதனம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. "நான் என்ன தேவதையா! எனக்கு இறக்கை முளைத்திருக்கிறதா? காற்றில் பறக்கிறேனா?" என்று கேட்டு மெள்ள நகைக்கவும் செய்தாள்.

"காற்றுத் தேவதைக்குத்தான் இறக்கை வேண்டும் அலீமா. கடல் தேவதைக்கு எதற்கு?" என்று கேட்ட இளஞ் செழியன் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு, "தேவி உத்தரவுப்படி அறைக்கு வரச் சித்தமாயிருக்கிறேன். எந்த உத்தரவையும் ஏற்கவும் சித்தம்'' எனக் கூறிவிட்டு, "ஹிப்பலாஸ்!" என்று குரல் கொடுத்துவிட்டு அலீமாவுடன் கப்பல் தலைவர்களுக்கென நிர்மாணிக்கப் பட்டிருந்த அறைக்குச் சென்றான். படைத் தலைவன் அழைத்ததைக் கேட்ட ஹிப்பலாஸும் அடித்தளத்திலிருந்து மேல் தளத்துக்கு வந்து அலீமாவின் அறையைத் துரிதத்தில் அடைந்தான்.

அறையை அடைந்ததும் பஞ்சணையில் படைத்தலைவனுக்கு அருகில் உட்கார்ந்த அலீமா பல வினாடிகள் தீவிர யோசனையில் ஆழ்ந்தாள். ஹிப்பலாஸ் உள்ளே நுழைந்த பிறகும் கூட சில வினாடிகள் அவள் தலையைத் தூக்காமலேயே உட்கார்ந்திருந்தாள். பிறகு பஞ்சணையிலிருந்து எழுந்து தலை குனிந்த வண்ணமே சிறிது நேரம் அறையில் உலாவி விட்டுக் கடைசியாக ஒரு மூலைக்குச் சென்று

அங்கிருந்த தூணில் சாய்ந்து கொண்டு படைத் தலைவனையும் ஹிப்பலாஸையும் ஏறெடுத்துப் பார்த்தாள். அவள் பல வினாடிகள் மௌனமாகவே உட்கார்ந்திருந்ததையும் பிறகு எழுந்து தலையைக் குனிந்தவண்ணமே உலாவியதையும் கண்ட படைத் தலைவனும் ஹிப்பலாஸும் அவள் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறாளென்பதைப் புரிந்து கொண்டார்களாதலால், அவள் யோசனையில் குறுக்கிட இஷ்டமில்லாததால் பேசாமலே இருந்தார்கள். அவள் தலை நிமிர்ந்து அவர்களைப் பார்த்தபோதுகூட அவள் சம்பாஷணையைத் துவங்குவதே நல்லதென்று நினைத்த படைத்தலைவனும், ஹிப்பலாஸும் மௌனமே சாதித்ததைக் கண்ட அலீமாவே பேச ஆரம்பித்து, "நான் உங்களை அழைத்த காரணம் உங்களுக்கு விளங்கியிருக்கும் என்று நினைக்கிறேன்?" என்று கூறினாள்.

"விளங்கவில்லை அலீமா" என்று பதில் கூறினான் இளஞ்செழியன்.

"விளங்க முடியாத விவகாரம் ஏதும் இதில் இல்லை படைத் தலைவரே! கொள்ளையர் மரக்கலம் உங்கள் கையில் சிக்கிவிட்டது. துடுப்புத் துழாவ அடிமை வர்த்தகர்களும் கிடைத்து விட்டார்கள். இலி-ஆஸுவிடமிருந்தும் மதகுருவிடமிருந்தும் தப்பிவிட்டோம். அடுத்துச் செய்ய வேண்டியது என்ன? இதை யோசிக்கவே உங்களை அழைத்தேன்?'' என்றாள் அலீமா.

"யோசிப்பதற்கு என்ன இருக்கிறது இதில்? அடுலீஸ் நகரம் சென்று வசதிகளைச் சேகரித்துக் கொண்டு தமிழகம் திரும்ப வேண்டியதுதான்" என்றான் ஹிப்பலாஸ்.

"மிகச் சுலபமாகச் சொல்லி விட்டீர்கள் ஹிப்பலாஸ்! அடுலீஸில் என்ன வசதிகள் தேவை? அவற்றை எப்படிச் சேகரிப்பதாக உத்தேசம்?'' என்று வினவினாள் அலீமா முகத்தில் ஆழ்ந்த கவலையைத் தோற்றுவித்து.

இந்தக் கேள்வியால் ஹிப்பலாஸ் வாயடைத்து நின்றது மட்டுமல்ல, 'இத்தனைகூட யோசிக்கும் சக்தியை இழந்து விட்டோமே' என்று நினைத்துக் குழம்பவும் செய்தான். அவள் கேள்வி இளஞ்செழியனுக்குக்கூட ஓரளவு குழப்பத்தை விளைவித்ததால் அந்தக் குழப்பத்தின் சாயை அவன் முகத்திலும் பிரதிபலித்தது. இருவர் குழப்பத்தையும் கவனித்த அலீமா, "கஷ்டம் ஓரளவு உங்களுக்குப் புரிகிறது என்று நினைக்கிறேன்" என்று கூறினாள்.

"புரிகிறது அலீமா!" என்று மெல்லக் கூறினான் இளஞ்செழியன்.

"அடுலீஸ் சென்ற பின் ஏற்படும் கஷ்டம் பின்னாலிருக்கிறது படைத் தலைவரே! அதற்கு முன்பும் சில கஷ்டங்களிருக்கின்றன. முதன்முதலாக உணவு நிலை. இந்தக் கப்பலில் கடுகளவு உணவுகூடக் கிடையாதென்று நினைக்கிறேன். இங்கிருந்து அடுலீஸ் செல்லக் குறைந்தபட்சம் நாட்கள் ஏழு ஆகும். அதுவும் காற்று அனுகூலமாக இருந்தால்..." என்று அலீமா வார்த்தைகளை இழுத்துக் கூறினாள்.

"ஏழு நாட்களா!" என்று வினவினான் படைத் தலைவன் பிரமிப்புடன்.

"ஆம் படைத்தலைவரே! இந்தக் கடல் மூக்கின் வடமேற்குக் கோடியில் பெரினிஸ் பட்டணம் இருக்கிறது. அதற்குக் கீழே தாலமே துறைமுகம். அதற்கும் கீழே மூவாயிரம் ஸ்டேடியா அளவிலிருக்கிறது அடுலீஸ் மாநகரம். நமக்கு வெகு அருகிலிருப்பது அடுலீஸ்தான். ஆனால் அதை அடைய ஒரு வாரப் பயணம் செய்ய வேண்டும். அதை நெருங்கிய பின் துறைமுகத்துக்கு அருகில் சென்று நங்கூரம் பாய்ச்ச நாட்கள் இரண்டு பிடிக்கும்" என்று சொன்னாள் அலீமா.

"துறைமுகத்தை நெருங்கியபின் நங்கூரம் பாய்ச்ச இரண்டு நாட்களா? இதென்ன விசித்திரம் அலீமா!" என்று

விசாரித்த இளஞ்செழியன் குரலில் வியப்பு பெரிதும் மண்டிக் கிடந்தது.

அலீமா அவன் முகத்தின்மீது தனது அழகிய வழிகளை நிலைநாட்டிவிட்டுச் சொன்னாள்: "இது இயற்கை விளைவித்துள்ள விசித்திரம் படைத் தலைவரே! எகிப்து நாட்டினுள் தென்புறமாகச் சென்று விசாலமாகும் விரிகுடாவின் கோடியிலுள்ள அடுலீஸ் நகரத்துக்குப் புறம்பே நேர் எதிரில் மலைத்தீவு என்ற தீவு இருக்கிறது. அந்தத் தீவுக்கும் அடுலீஸுக்கும் இடையேயுள்ள துறை முகத்தில் கடல் வேகம் அதிகம். சில சமயங்களில் அந்த வேகத்தில் கப்பல்கள் கவிழ்வதும் உண்டு. ஆகவே அடுலிஸுக்குச் செல்பவர்கள் முதலில் மலைத் தீவில் இறங்கி நீர்நிலையைக் கவனித்த பிறகுதான் அடுலீஸ் முன்பாகக் கப்பலைச் செலுத்தி நங்கூரம் பாய்ச்ச வேண்டும்."

உள்ள கஷ்டங்களை உணர்ந்த படைத் தலைவன், "அலீமா! உன் பணி நிரம்ப கஷ்டமானது. ஆனால் உன்னை விட்டால் எங்களுக்கு வேறு வழியில்லை. உன்னைப் போன்ற ஒரு பெண்ணை இத்தனை கஷ்டத்துக்கு உள்ளாக்க எனக்கு மனமுமில்லை" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினான்.

அலீமா அவன் உட்கார்ந்திருந்த பஞ்சணைக்கு அருகே வந்து அவன் கைகளிலொன்றை யெடுத்துத் தன் கைகளில் வைத்துக் கொண்டு ஆறுதலையளிக்கும் சொற்களை உதிர்க்கத் தொடங்கினாள்: 'படைத் தலைவரே! டைபீரியஸிடம் மரக்கலத்தை ஓட்டும் பயிற்சி பெற்றவளுக்கு இதெல்லாம் சர்வசகஜம். இந்தக் கடல் மூக்கிலுள்ள கஷ்டங்களை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் உணவுப்பிரச்னை பெரும் பிரச்னை. இன்னொன்று கப்பலோட்டிகள் பிரச்னை. அடுலீஸ் சேரும் வரையில் உணவு தேவை. அதற்குப் பிறகு மாலுமிகள் தேவை. இந்த அடிமை வர்த்தகர்களை நம்பி நாம் தமிழகம் செல்ல முடியாது. எரித்திரியப் பெருங் கடலில் புகுந்த பிறகு பல கொள்ளைக் கப்பல்களும், அடிமை

வர்த்தகர் கப்பல்களும் வருமென்று கேள்வி. அவற்றைக் கண்டு விட்டால் பணத்துக்கு மனிதர்களை விற்கத் துணியும் இந்தப் பதர்கள் எதையும் செய்வார்கள். ஆகவே புது மாலுமிகளை நாம் அடுலீஸில் திரட்ட வேண்டும். அதற்குப் பணம் வேண்டும்" என்றாள் அலீமா.

"உணவைப்பற்றிக் கவலைவேண்டாம் அலீமா! கடல் மீன்களைப் பிடித்தும், மரக்கலத்தின் தளத்தில் வலைவிரித்துக் கடற் பறவைகளைப் பிடித்தும் உணவுப் பிரச்னையைச் சமாளிக்கலாம். மாமிசத்தைப் பதனம் செய்வதற்கு வேண்டிய மற்றப் பொருள்கள் மரக்கலத்தில் இருக்கும். இலி-ஆஸுவின் வீரர்கள் இதிலிருந்து பொக்கிஷத்தைத்தான் எடுத்திருப் பார்களே தவிர உணவுப் பொருள்களை எடுத்திருக்க மாட்டார்கள். அதல்ல பிரச்னை. அடுலீஸ் சென்றதும் பணம் திரட்டுவது எப்படி...?" என்று பேசிக் கொண்டு போன இளஞ்செழியன் சட்டென்று பேச்சை நிறுத்தி, "ஏன் அலீமா! அடுலீஸில் உள்ள யவன ராஜ குடும்பம்தான் உனக்குத் தெரியுமே. அவர்களைக் கேட்டால் உதவமாட்டார்களா?" என்று கேட்டான்.

"அவர்கள் இருப்பது அடுலீஸல்ல, யவன நாடு! படைத் தலைவரே! எப்பொழுதாவது ரதப் போட்டிகளைப் பார்க்க வருவார்கள். வரும்போது அங்கு தங்குவார்கள். இப்பொழுது அங்கிருப்பார்களா என்பது நிச்சயமல்ல" என்ற அலீமா திடீரென ஏதோ யோசித்துவிட்டு, "ஆமாம், உங்களுக்கு ரதம் ஓட்டத் தெரியுமா?" என்று கேட்டாள்.

இதைக் கேட்ட இளஞ்செழியன் மஞ்சத்தில் சாய்ந்து பெரிதாக நகைத்தான். "ஏன் நகைக்கிறீர்கள்?" என்று வினவினாள் அலீமா, அவன் நகைத்ததன் காரணத்தை அறிய முடியாமல்.

"நகைக்காமல் என்ன செய்ய முடியும் அலீமா! இளஞ்சேட்சென்னியின் ரதங்களை ஓட்டவல்ல படைத் தலைவனைக் கேட்கும் கேள்வியா இது?" என்ற படைத்

தலைவன் மீண்டும் நகைத்தான். அதுவரை மௌனமாக சிலைபோல் நின்றிருந்த ஹிப்பலாஸ்கூட மெள்ளச் சிரித்தான்.

"யாரது இளஞ்சேட்சென்னி?" கோபத்துடன் எழுந்தது அலீமாவின் கேள்வி.

"சோழர் குல விளக்கு" என்றான் படைத் தலைவன்.

"மன்னனா?"

"மாமன்னன்?"

"ரதம் ஓட்டுவதில் சிறந்தவனா?"

"ரதம் ஓட்டுவதில் மட்டுமல்ல, புதுப் புதுவிதமான ரதங்களை நிர்மாணிப்பதிலும் வல்லவர்."

"நல்ல வேகமாய்ச் செல்ல கூடிய ரதங்களா?"

"காற்றைவிட வேகமாகச் செல்லக் கூடியவை. அவற்றுக்குத் தகுந்த புரவிகளை மன்னர் அரபு நாட்டிலிருந்து தான் வரவழைப்பது வழக்கம்."

"அந்த ரதங்களை நீங்கள் செலுத்துவீர்களா?"

"அதிகமாகச் சொன்னால் தற்புகழ்ச்சியாகும் அலீமா."

இதைக் கேட்ட அலீமாவின் நாசிகளிலிருந்து ஆறுதல் பெருமூச்சு ஒன்று வெளிவந்தது, "இத்தனைக் கஷ்டத்திலும் ஆண்டவன் நமக்குத் துணையிருக்கிறார் படைத்தலைவரே. நீர் மட்டும் அடுலீஸ் ரதப் போட்டியொன்றில் வெற்றி பெற்று விட்டால் தமிழகம் திரும்புவது நிச்சயம்!" என்று கூறினாள் அலீமா.

"ரதப் போட்டிக்கும் தமிழகத்துக்குத் திரும்புவதற்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டான் படைத் தலைவன்.

"நிரம்ப சம்பந்தமிருக்கிறது படைத் தலைவரே. அடுலீஸ் ரதப் போட்டிகளில் பல நாடுகளின் வர்த்தகர்களும் மன்னர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் பங்கெடுத்துக் கொள்வார் கள். அந்தப் போட்டிகளில் ஏதாவது ஒன்றில் நீர் பங்கெடுத்துக் கொண்டு வெற்றி பெற்றாலும் இந்த மாதிரி பத்து மரக்கலங் களை வாங்கக் கூடிய பொற்குவியல் கிடைக்கும்" என்று விளக்கிய அலீமா, "இனி கவலையில்லை" என்றாள்.

"ஏன் கவலையில்லை? ரதத்திற்கு எங்கு போவது?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

"நான் வாங்கித் தருகிறேன்" என்று அலீமா மேற் கொண்டு கவலை ஏதும் படாமல் அறையைவிட்டு வெளியே நகர்ந்தாள்.

ஒரு வார காலம் மெள்ளத்தான் நகர்ந்தது. ஆனால் அந்த ஒரு வாரத்தில் எப்பேர்ப்பட்ட ஒரு தலைவியை மரக் கலம் அடைந்திருக்கிறது என்பதை எண்ணி இளஞ்செழியன் மட்டுமல்ல, ஹிப்பலாஸும் அடிமை வர்த்தகர்களுங்கூட விவரிக்க இயலாத பிரமிப்பை அடைந்தார்கள். கைதேர்ந்த மாலுமி போல் குறுகிய ஜலசந்தி வழியாகவும், சுழன்ற காற்றுக்களின் சூழ்நிலையிலும் திடீரென்று தோன்றிய மணற்குன்றுகளை விட்டுச்சரேலென்ற உத்தரவுகளால் மரக்கலத்தைச் சுழற்றித் திருப்பியும், திடீர் திடீரெனப் பாய்களை அவிழ்த்தும் விரித்தும் துடுப்புகளைத் துழாவச் செய்தும் நிறுத்தச் செய்தும் மிகுந்த திறமையுடன் மரக்கலத்தை நடத்திச் சென்ற அலீமா, எட்டாவது நாள் மாலை மலைத் தீவுக்கருகில் நங்கூரம் பாய்ச்சிக் கப்பலை நிறுத்தினாள். கப்பல் நங்கூரம் பாய்ச்சிய முதல் ஜாமத்திலேயே வேறு பல நடவடிக்கைகளில் இறங்கினாள் அலீமா. அவள் ஆரம்ப நடவடிக்கைகள் இளஞ்செழியனுக்குக் குழப்பத்தைத் தந்தன. கடைசியாக அலீமா அடுலீஸ் மாநகரத்திலிருந்து தனது நண்பனொருவனை அழைத்து வந்து இளஞ்செழியனுக்கு அறிமுகப்படுத்தியபோது அவன் பிரமிப்பு உச்ச நிலைக்குச் சென்றது. அறிமுகப்படுத்தப் பட்ட இருவரும் ஒருவரை யொருவர் பார்த்ததும் அடியோடு திகைத்துச் சிலைகளைப் போல் நின்றார்கள். இருவரில் இளஞ்செழியனைவிட வந்தவன் பெரும் திகிலடைந்தான். பேச முயன்ற அவன் உதடுகள் அசைந்தனவேயொழிய, பேச்சு மட்டும் வெளிவர வில்லை. சொல்லவும் முடியாத பெரும் திகைப்பால் அவன் முகம் பெரிதும் விகாரமடைந்தது.

77. படைத் தலைவனா, பகைவனா!

சந்தர்ப்பம் மனிதனை உருவாக்குகின்றது என்பது ஆங்கிலப் பழமொழி. அதுவும் சரியான மனிதன் ஆபத்தான சந்தர்ப்பங்களில் சிக்கிக் கொள்ளும்போது அவன் திறமையும் அனுபவமும் அவனைப் பன்மடங்கு அதிகச் சிறப்புள்ளவ னாகவும் சாமர்த்தியசாலியாகவும் ஆக்கி விடுகின்றன. தமிழகத்திலிருந்து கிளம்பிய சில மாதங்களில் ஏற்பட்ட வாழ்க்கைச் சோதனைகள் சோழர்படை உபதலைவனைப் பல விதங்களில் செப்பனிட்டிருந்தன. தரைப் படைகளை மிகவும் துணிகரமாகவும் தந்திரத்துடனும் நடத்திச் சென்று பெரும் போர்க்களங்களில் வெற்றி கண்ட இளஞ்செழியன், பரதவர்களின் சகவாசத்தால் நீச்சுத்திறமை மட்டுமின்றிப் படகுகளையும் சிறு மரக்கலங்களையும் செலுத்துவதில் ஓரளவு சாமர்த்தியமும் அடைந்திருந்தானானாலும், சேர மன்னனுக்கிருந்த அளவு, கடற்படை சோழர்களிடமில்லா திருந்த காரணத்தாலும், இருந்த சில போர்க்கலங்களும் போருக்கு உதவ அவசியமில்லாதிருந்தபடியாலும் கப்பலைச் செலுத்தும் கலையில் அவனுக்கு அதிக அனுபவம் ஏற்படுவது சாத்தியமில்லாமல் போயிற்று. ஆனால் சோழ நாட்டிலிருந்து டைபீரியஸ் அவனை யவனர் கப்பலில் அனுப்பிய பிறகு ஏற்பட்ட பல ஆபத்துக்களும், பயங்கர சூழ்நிலைகளும் இளஞ்செழியன் வாழ்விலிருந்த ஒரே ஒரு குறையை நீக்கி விட்டன. கொள்ளையர்களிடமிருந்து அடிமை வர்த்தகர்கள் தற்காப்புக்காக நடத்திய போரைக் கவனித்ததாலும், கொள்ளைக் கப்பலின் தலைவன் போதித்த கப்பலைச் செலுத்தும் முறை, காற்றின் பெரும் மாறுதல்களையும் கடல் அலைகளின் எழுச்சியையும் சமாளிக்கும் முறை, போர் மூண்டால் எரிபந்தங்களைப் பெரும் விற்களிலிருந்து வீசும் முறை இவற்றை நன்கு உணர்ந்து கொண்டதாலும், நிலத்தில் போலவே நீரிலும் பெரும் போர்களை நடத்தும் திறனைப்

பெற்றான் இளஞ்செழியன். அத்தனை கற்ற பின்பும் எரித்திரியக் கடல் மூக்கில் அலீமா மரக்கலத்தைச் செலுத்திய திறமையைக் கண்ட இளஞ்செழியன், தான் கற்றது கைம்மண்ணளவு தான் என்பதையும் அலீமாவிடம் தான் கற்க வேண்டிய வித்தை நிரம்ப இருக்கிறதென்பதையும் புரிந்து கொண்டான். திரும்பத் தமிழகத்தை அடையு முன்பு கப்பலோட்டும் வித்தையைப் பரிபூரணமாக அலீமாவிடம் கற்றுவிட்டால் புகாரை வளைத்துக் கொள்ளும்போது தரைமார்க்கமாக மட்டுமின்றி, கடல் மார்க்கமாகவும் டைபீரியஸைத் துணிவுடன் எதிர்க்கலாம் என்று யோசித்து, அந்த யோசனையின் விளைவாக ஏற்பட்ட திருப்தியின் அடையாளமாகக் கடை யிதழ்களில் புன்சிரிப்பையும் வரவழைத்துக்கொண்ட இளஞ்செழியன், நங்கூரம் பாய்ச்சி நின்றுகொண்டிருந்த கப்பலைச் சுற்றிலுமிருந்த வனப்பிலும் கவனிப்பைச் சற்றே செலுத்தக் கூடிய திராணியை அடைந்தான்.

அவன் கண்ணெதிரே அடுலீஸ் நகரம் பெரிதாக மிக அழகாக எழுந்து நின்றது. அதன் அமைப்பைக் கவனித்ததுமே அது பெரும் வர்த்தக ஸ்தலமாகவும் கேளிக்கை ஸ்தலமாகவும் விளங்குவதற்காகவே நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டு மென்பதையும் பெரும் படையெடுப்புகளைச் சமாளிக்கத் தகுதியற்றது என்பதையும் படைத்தலைவன் எளிதில் புரிந்து கொண்டான். அவன் கண்ணெதிரே தூரத்தே எழுந்தன பெரும் மாளிகை உச்சிகள். நீண்டு மெல்லியதாய் வானத்தைத் தொடச் சென்றும், பட்டையாய் விஸ்தாரமாய் நடுவே விரிந்தும், சக்கர வட்டமாக உருண்டும் பலவிதமாகக் காட்சி யளித்த மாளிகை உச்சிகளிலிருந்தும் அவற்றின் நிர்மாண முறைகளிலிருந்தும் அந்த மாளிகைகள் உல்லாசத்திற்காகவே அமைக்கப் பெற்றவையென்பதைப் புரிந்து கொண்ட இளஞ்செழியன், 'அடுலீஸைச் சுற்றி அரண் ஏதுமில்லாததைக் கவனித்துப் படையெடுப்பவன் திறமைசாலியாய் இருந்தால்

அடுலீஸ் வழியாக எதியோப்பியாவிலும் எகிப்திலும் நுழைந்து விடலாம் என்று கணக்குப் போட்டான். இந்தக் கடல் மூக்கிலிருக்கும் நீர் வேகத்தால் ஒரே சமயத்தில் பல மரக்கலங்களில் படைகளைக் கொண்டுவந்து இறக்கிவிட முடியாதென்பது உண்மை. ஆனால் மெள்ள மெள்ள மரக் கலங்களில் வர்த்தகர் உடைகளில் வீரர்களைக் கொண்டுவந்து சில மாதங்களில், ஊரில் அவர்கள் தொகையைப் பரப்பி விட்டால், ஒரே இரவில் இந்த அடுலீஸைக் கைக்குள் போட்டுக் கொண்டு அடுத்த ஊர்கள்மீதும் பாயலாம். சரியான இடம், படையெடுப்பவன் வாயில் விழ இதைவிடச் சிறந்த இடம் இருப்பது அரிது' என்று தான் படையெடுப்பதற் காகவே அந்த இடத்துக்கு வந்திருப்பதுபோல் நினைத்துக் கொண்டு தலையை ஆட்டிய படைத்தலைவன், அடுத்த வினாடி வெட்கத்தால் ஏளனச் சிரிப்பும் ஒன்று சிரித்தான். 'அவனவன் பழக்கப்படிதான் புத்தி போகிறது. போரிடுபவ னுக்குப் போரிடும் புத்தி! வணிகனுக்கு வர்த்தகம் செய்யும் புத்தி! புத்தி சில வருடங்களில் ஒரு சுவட்டில் திரும்பி விட்டால் வேறு சுவட்டில் திரும்பாது போலிருக்கிறது' என்று எண்ணியதால் ஒருமுறைக்கு இரு முறையாகச் சிரித்த படைத் தலைவன், திரும்பி மரக்கலம் நின்றிருந்த கடற்பகுதியையும் மலைத் தீவையும் கவனித்தான். அடுலீஸுக்கும் மலைத் தீவுக்கும் இடையேயிருந்த கடல் பிராந்தியத்தில் அலைகள் மிகப் பெரிதாக எழுந்து கொண்டிருந்தது மட்டுமின்றி, நீர் வேகமும் அதிகமாயிருந்ததால் நங்கூரம் பாய்ச்சி நின்ற நிலையிலும் மரக்கலம் பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தது. இதைப் பார்த்த படைத்தலைவன், 'மலைத்தீவு ஒன்றை மட்டும் ஆண்டவன் அந்த இடத்தில் எழுப்பிக் கொடுத்திரா விட்டால் அடுலீஸுக்கருகில் நங்கூரம் பாய்ச்சுவதோ இறங்குவதோ நடவாத காரியம்' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டதன்றி, மலைத் தீவின் அழகைப் பார்த்துப் பெரிதும் வியக்கவும் செய்தான்.

'ட' எழுத்துப்போல் எதிரே காட்சியளித்த அடுலீஸ் கடற்கரையின் எதிர் மையத்தில் அந்த 'ட'வுக்கு ஒற்று வைத்த புள்ளியைப் போலத் தெரிந்த மலைத்தீவு ஆகிருதியில் சிறியதாக இருந்தும் அடுலீஸின் வசதிகளில் ரதப் போட்டி விளையாட்டு ஒன்றைத் தவிர, மற்ற எதிலும் எந்தக் குறையையும் பெறவில்லை. கடலிலிருந்து திடீரென எழுந்த தீவாதலால் அதன் நடுவிலிருந்த சிறுமலையைச் சுற்றிலும் பாறைகள் அதிகமாகத் தெரியாமல் வெண்மணற் பரப்பே அதிகமாயிருந்ததன் விளைவாக, வெண்மை ஆடையைச் சுற்றிய எதியோப்பிய கருமுக மங்கையைப் போல் காட்சியளித்தது அந்த மலைத்தீவு. அந்த வெண்மணற் பரப்பில் அடிக்கப்பட்டிருந்த நானாவித வண்ணக் கூடாரங்களையும், அந்தக் கூடாரங்களில் தங்கியிருந்தவர்களைக் குறிக்கக் கூடாரங்கள்மீது பறந்து கொண்டிருந்த பலவிதக் கொடிகளையும் கண்ட படைத் தலைவனுக்குத் தமிழகப் பூம்புகாரின் இந்திர விழா நாட்கள் நினைவுக்கு வந்தன. 'இந்திர விழாவின்போது புகார் இதைவிடப் பன்மடங்கு அதிகக் கூட்டத்தால் நிறைவுபடுமே! அங்கும் எத்தனை கொடிகள் பறக்கும்! சங்கமத் துறையில் எத்தனை நாட்டு அழகிகள் நீராடுவார்கள்! ஏன், அங்கும் தான் ரதப்போட்டி உண்டு!' என்று எண்ணி ஆயாசப் பெருமூச்சுவிட்ட இளஞ்செழியன், சீக்கிரம் ஊர் திரும்ப வேண்டுமென்ற எண்ணத்தால் துடித்துக் கொண்டிருந்தான். அந்தத் துடிப்பால் மலைத்தீவின் வனப்பு வெகு சீக்கிரம் அவன் மனக்கண்ணைவிட்டு விலகியது. அடுலீஸின் பெரும் கோபுரங்களையும் பெருங்கூட்டங்களையும் பெரும் வீதிகளையும் பெருஞ் செல்வத்தையும் கண்டும்கூட, அவன் புத்தி சுவடு மாற மறுத்துத் திரும்பத் திரும்பத் தமிழகத்துக்கே போய்க் கொண்டிருந்தது.

அவன் மனவேதனை அலீமாவுக்கு நன்றாகப் புரிந்து தான் இருந்தது. இருப்பினும் அந்தப் பேதை என்ன செய்வாள். நீர்வேகம் இருந்த நிலையின் விளைவாக, கப்பல் நங்கூரம்

பாய்ச்சிய முதல் இரண்டு நாட்கள் ஏதும் செய்ய முடியாத அலீமா, மரக்கலத்திலிருந்து படகிலேறி மலைத்தீவில் இறங்கிக் கடற்கரையோரமாக உலாவுவதிலும், அங்கு நடந்துகொண்டிருந்த நடனக் கேளிக்கைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைவதிலும் காலத்தைத் தள்ளினாள். கப்பல் நின்ற முதல் ஜாமத்திலேயே படகைக் கப்பலிலிருந்து அவிழ்த்து இறக்கி, இளஞ்செழியனையும் அழைத்துக் கொண்டு மலைத் தீவின் கடற்கரை கேளிக்கைக் கூட்டங்களுக்குச் சென்று வேடிக்கை பார்க்கத் தொடங்கியதைச் சிறிதும் படைத் தலைவன் ரசிக்கவில்லை. அப்படியிருக்க அங்கு நடந்த நடன வகைகள் நடனமாடும் நாட்டினர் முதலியவற்றைப் பற்றியெல்லாம் அவள் விவரித்ததையும், அந்த முதல் ஜாமம் முதல் மூன்றாம் ஜாமம்வரை அலீமாவும் அந்தக் கூட்டங்களுடன் கலந்து கொண்டு ஆடியதையும் அவன் எப்படி ரசிக்க முடியும்? வேறு சமயமாயிருந்தால் அலீமாவின் வனப்பிலும் பம்பரம்போல் சுழன்று சுழன்று அவள் ஆடிய ஆட்டங்களிலும் மனத்தைப் பறிகொடுத்திருப்பான் படைத் தலைவன். ஆனால் எப்படியாவது தமிழகம் சேர நிச்சயித்து மனம் துடித்துக்கொண்டிருந்த படைத் தலைவனுக்கு அலீமா கேளிக்கைகளில் கலந்து கொண்டது விபரீதமாகவே விளங்கியது. அதைப் பற்றி அவன் கேட்ட கேள்விக்கு அலீமா அளித்த விடை அவள் நடவடிக்கையைவிட அதிக வேதனையை மட்டுமின்றிக் கோபத்தையும் அளித்தது இளஞ்செழியனுக்கு.

மீண்டும் மரக்கலத்தை அடைந்ததும் அலீமாவுடன் கப்பல் தலைவன் அறைக்குள் நுழைந்த இளஞ்செழியன் சற்று உஷ்ணத்துடனேயே கேட்டான், "அலீமா! நாம் இங்கு வந்தது எதற்கு?" என்று.

அலீமா ஆச்சரியம் ததும்பி வழிந்த விழிகளை அவன் மீது திருப்பினாள். "ஏன் கேட்கிறீர்கள்? வந்த காரணம் உங்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும்" என்று பதிலும் சொன்னாள்.

"வந்த காரியத்தை நான் நினைப்பில் வைத்துக் கொண்டிருக்கிறேன். நீ நினைப்பில் வைத்துக்கொண்டிருக்கிறாயா?" என்று மீண்டும் ஒரு கேள்வியைத் தொடுத்தான் இளஞ்செழியன், உஷ்ணம் சிறிதும் தணியாத குரலில்.

"வைத்துக் கொண்டிருப்பதாகத்தான் நினைக்கிறேன்" என்ற அலீமாவின் கடையிதழ்களில் புன்முறுவல் தெரிந்தது.

"நான் அப்படி நினைக்கவில்லை." புன்முறுவலைக் கண்டதால் இளஞ்செழியன் உள்ளத்தில் ஏறிய சூடு உதடுகளிலிருந்து உதிர்ந்த சொற்களிலும் பிரதிபலித்தது.

"நினைக்க வேண்டாமே!"

"அலீமா!"

"ஏன்?"

"விளையாட இது நேரமல்ல."

"அப்படியா!"

"ஆம். கேளிக்கைக்கும் இது சமயமல்ல."

"எது சமயமோ?"

"எது சமயமாயிருந்தாலும் எனக்கு அக்கறையில்லை. ஆனால் சமயம் இதுவல்ல."

"மிகவும் நல்லது."

"உன் நடனத்தைக் கண்டு களிக்க நான் அடுலீஸ் வரவில்லை."

"ஏன்? என் நடனம் நன்றாயில்லை?"

"அதைப்பற்றி எண்ணவும் புத்தி இடம் தரவில்லை."

"தெரிகிறது! தெரிகிறது! புத்தி உங்களுக்கு நிதானத்தில் இல்லையென்று திட்டமாகத் தெரிகிறது. படுத்து உறங்குங்கள், காலையில் நிதானப்படும். போய் வாருங்கள்" என்று சொன்ன அலீமா, அறையின் மூலைக்குச் சென்று அதுவரை நடனத்தை முன்னிட்டுத் தலையில் சுற்றியிருந்த சிவப்புப் பட்டுத்

துணியை எடுத்து மஞ்சத்தில் எறிந்துவிட்டுத் திரும்பினாள். அப்பொழுதும் படைத்தலைவன் அறைமுகப்பில் நகராமல் நின்றிருப்பதைக் கவனித்து, "போய் வாருங்கள் என்று சொன்னேன்" என்று சற்று அழுத்தி அது உத்தரவு என்று தொனிக்கும் முறையில் கூறினாள்.

"நாளைக்கு என்ன செய்ய உத்தேசம்?" என்று கேட்டான் இளஞ்செழியன் வறண்ட குரலில்.

"மலைத் தீவில் இன்னும் பார்க்கவேண்டிய வேடிக்கைகள் பல இருக்கின்றன" என்றாள் அலீமா.

"அவற்றைப் பார்ப்பதாகவா உத்தேசம்?" இளஞ்செழியன் கேள்வியில் முரட்டுத்தனம் மண்டிக் கிடந்தது

"ஆம்."

"அடுலீஸுக்கு எப்பொழுது போவது?"

"நான் இஷ்டப்பட்டபோது!"

"எல்லாம் உன் இஷ்டம்தானா?"

"ஆமாம். நான்தானே கப்பல் தலைவி!"

"உன்னைக் கப்பல் தலைவியாக்கியது நான்."

"ஆமாம்."

"அந்தப் பதவியிலிருந்து நீக்கவும் என்னால் முடியும்."

"தாராளமாகச் செய்யுங்கள். ஆனால் அந்தப் பணியை இன்றிரவு நிறைவேற்ற முடியாது. காலையில் பார்ப்போம். முதலில் நீங்கள் அறையைவிட்டுச் செல்லுங்கள்."

"முடியாது. நீ எப்பொழுது அடுலீஸ் போவாய். உன் நண்பர்களைக் கண்டு ரதத்துக்கும் புரவிகளுக்கும் எப்பொழுது ஏற்பாடு செய்வாய் என்பதை அறிந்து கொண்டு தான் இந்த இடத்தைவிட்டு நகருவேன்" என்றான் இளஞ்செழியன்.

"அப்படியானால் உங்களிஷ்டம்" என்று சொல்லிவிட்டு தன் ஆடைகளை மாற்றிக் கொள்ளத் தொடங்கினாள் அலீமா.

அவள் தானிருப்பதை அசட்டை செய்து ஆடைகளை மாற்ற முற்பட்டதைக் கவனித்த இளஞ்செழியன் உதடுகள்

கோபத்தால் துடித்தன. மனம் பெரிதும் சங்கடப்பட்டது. அடுத்த வினாடி அவன் கால்கள் ஏதோ பொறியால் இயக்கப் பட்டவைபோல் திரும்பின. வெகு வேகமாக அறையை விட்டுப் பறந்தான் இளஞ்செழியன்.

இளஞ்செழியன் அப்படிப் பறந்து சென்றதைக் கண்ட அலீமா பஞ்சணையில் சாய்ந்தபடி இன்பமாக நகைத்தாள். 'படைத்தலைவர் பேரில் மன்னர்தான். ஆனால் பெண்களைக் கண்டால் என்ன நடுக்கம்! எப்படிக் காற்றாகப் பறந்தார்! பாவம்!' என்று நினைத்துப் பரிதாபப்பட்டதன்றி, இத்தகைய ஓர் ஆண் மகனைத் தான் அடையக் கொடுத்து வைக்க வில்லையே என்பதை நினைத்து ஆயாசப் பெருமூச்சும் எறிந்தாள். 'யாரோ ஒரு பெண் இவரை மயக்கியிருக்கிறாள். அதனால்தான் இப்படி விழிக்கிறார் மனிதர். அவளென்ன அத்தனை அழகியா! என் ராணியை விடவா அழகியாயிருக்க முடியும்? இருக்க முடியாது. என் அரசியைவிட உலகில் அழகி யாருமே இருக்க முடியாது. அவளை மட்டும் இவர் கண்டு விட்டால் இந்த உறுதியெல்லாம் காற்றில் பறந்துவிடும். இருங்கள் படைத் தலைவரே! தமிழகம் சென்றதும் யவன ராணி எங்கிருந்தாலும் அவள் முன்பாக உங்களைக் கொண்டு போய் நிறுத்துகிறேன். அப்பொழுது பார்க்கிறேன் உமது உறுதியை. காதல் தெய்வமான வீனஸையும் வெட்கச் செய்யும் அந்த மோகன பிம்பத்துக்கு முன்பு நீர் என்ன செய்கிறீரோ பார்க்கிறேன்' என்று தனக்குள் கறுவியும் கொண்டாள் அலீமா. இத்தகைய நினைப்புகளால் மறுநாட்களில் படைத் தலைவனைச் சந்தித்தபோதும் வேண்டுமென்றே சொற் களால் அவனைக் குத்தினாள்.

இரவு நேரத்தைவிடக் காலை நேரம் அடுலீஸ் கடற்பகுதியையும் மலைத் தீவையும் மனோகரமாக அடித்திருந்தது. கடற் பகுதியின் ஓரங்களில் நங்கூரம் பாய்ச்சி நின்ற மரக்கலங்களின் ஆட்டங்களும், மலைத்தீவு அடுலீஸ் இவற்றின் கரையோரங்களில் மனிதர்களின் நடமாட்ட

அரவமும், எங்கும் எழுந்துவிட்ட உயிர்த் துடிப்பை வலியுறுத்தின. பல் துலக்கி, முகம் கழுவி, தலை சீவி, காலையில் புதிதாக மலர்ந்த புஷ்பம் போல் மரக்கலத்தின் தளத்துக்கு வந்த அலீமா அந்தக் காலையின் இளவெயிலில், கடவுள் அந்தக் கடற்பகுதியில் ஒளிவிட சிருஷ்டித்த பொன் மலர் போல் விளங்கினாள். அவள் படைத்தலைவனை நோக்கி நடந்து சென்றபோது அசைந்த அங்கலாவண்யங்களைக் கண்ட அடிமை வர்த்தகர்கள்கூட அசந்து போய், 'இவள் மட்டும் நம்மிடம் அடிமையாகக் கிடைத்திருந்தால் பத்தாயிரம் பொற் காசுகளுக்கு விற்றிருக்கலாமே' என்று கணக்குப் போட்டார்கள்.

அவள் அபார எழிலையும் அவள் நடந்து வந்த ஒய்யாரத்தையும் படைத்தலைவனும் கடைக் கண்ணால் கண்டானானாலும் காணாதவனைப்போல் நடித்து, எதிரே யிருந்த அடுலீஸ் நகரத்தை எடை போடுபவன்போல் உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றான். அவன் கடைக்கண் சரேலென்று தன்மீது பாய்ந்ததையும் ஒளிவிட்டதையும் பிறகு படைத்தலைவன் பார்வையை மாற்றிக் கொண்டதையும் நொடிப் பொழுதில் கவனித்த அலீமா தனக்குள் நகைத்துக் கொண்டு அவனை அணுகி, "படைத்தலைவர் மிகவும் கோபத்திலிருக்கிறார் போலிருக்கிறது" என்றாள் கேலி ஊடுருவ மெல்ல நகைத்து.

இளஞ்செழியன் பதிலேதும் சொல்லவில்லை. மௌன மாகவே இருந்தான். "தலையைத் திருப்பி என்னைப் பாருங்கள்! பாதகமில்லை" என்றாள் அலீமா மீண்டும். அதற்கும் பதிலில்லாது போகவே, "ஆடையைப் பூராவாக அணிந்துதானிருக்கிறேன்" என்று மெள்ள முணுமுணுத்தாள்.

அதுவரை வாளாவிருந்த இளஞ்செழியன் கோபத் துடன் திரும்பி அவளை நோக்கி, "அப்படியா! மிகவும் சந்தோஷம். இவ்வளவு பெரிய மனது செய்ததற்கு நன்றி" என்றான்.

"உங்களை மகிழ்விக்கத்தான் நான் எதையும் செய்கிறேன்" என்றாள் அலீமா புன்சிரிப்பொன்றை இதழ்களில் ஒட்டி.

இளஞ்செழியன் ஏதோ கேட்க வாயெடுத்து மூடிக் கொண்டான். அவன் வாயில் சரேலென்று எழுந்துவிட இருந்த கேள்வியை நினைத்தபோது அவனுக்கே வெட்கமாயிருந்தது. அத்தனை இழிநிலைக்குத் தான் வந்துவிட்டதை நினைத்துத் தன்னையே கடிந்துகொண்டதன்றி, பேச்சையும் மாற்றிக் கேட்டான், "அலீமா! இன்றைக்கு என்ன செய்வதாக உத்தேசம்?" என்று.

"அதுதான் சொன்னேனே. மலைத் தீவில் நாம் பார்க்க வேண்டிய வேடிக்கைகள் பல இருக்கின்றன என்று" எனக் கூறினாள் அலீமா.

இளஞ்செழியன் நிதானமும் வெறுப்பும் கலந்த குரலில் கூறினான்: "அலீமா! என்னை அதிகமாகச் சோதிக்காதே. வேடிக்கைகளைப் பார்க்கும் மனோநிலை எனக்கு இல்லை. என்னுடைய நாட்டின் கதியைப் பற்றிய கவலை என் உள்ளத்தைப் பீடித்துக் கொண்டிருக்கிறது. நாடு திரும்பத் துடிக்கும் உள்ளம் வேடிக்கை பார்க்க ஒப்புமா அலீமா! யோசித்துப் பார். தமிழகத்துக்கு வா. நீ ஆயுளில் கண்டிராத கலைக் காட்சிகளை, கேளிக்கைகளை, ரதப் போட்டிகளைக் காணலாம். அதற்கு செல்ல ஏற்பாடு செய். உன்னைக் கெஞ்சுகிறேன்."

அலீமா தன் அழகிய கண்களை அவன்மீது திருப்பினாள். அந்த விழிகளில் சற்று முன்பு தெரிந்த ஏளனம் இல்லாததைக் கவனித்த இளஞ்செழியன் சற்று ஆறுதலடைந்தான். ஏளனத்துக்குப் பதிலாக அந்த விழிகளில் அனுதாபம் மண்டிக் கிடந்ததைக் கவனித்த படைத்தலைவன் மனத்தில் முதல் நாளிரவு அகன்றுவிட்ட நம்பிக்கை மீண்டும் உதயமாயிற்று. அலீமாவின் உதடுகளிலிருந்து அடுத்து எழுந்த சொற்கள் அவன் இதயத்தில் மகிழ்ச்சி அலைகளை எடுத்து வீசி அவன் உடலெங்கும் இன்பத்தைப் பரப்பின.

"படைத் தலைவரே! நீங்கள் அறிவிற் சிறந்தவர்கள். உங்களுக்கு நான் எதுவும் சொல்லத் தேவையில்லை. மலைத் தீவிலுள்ள மரக்கலங்கள் மலைத் தீவிலேயே நிற்பதும் எதிர்க் கரையிலுள்ள மரக்கலங்கள் அங்கேயே நிற்பதும் புலப்படவில்லையா உங்களுக்கு? ஏதாவது ஒரு படகு இக் கரையிலிருந்து அக்கரைக்கோ, அக்கரையிலிருந்து இக்கரைக்கோ நகருகிறதா பாருங்கள். நீர் வேகம் கடலில் அதிகமாயிருக்கிறது. இப்பொழுது படகில் நான் சென்றால் பிறகு என் பிணம்கூட உமக்குக் கிடைக்காது, இந்த வேகம் இரண்டு நாட்கள் இப்படித்தான் இருக்கும். ஆகையால் பொறுப்பதைத் தவிர வேறு வழியில்லை. இங்கு தங்கியிருக்கும் இரண்டு நாட்களையும் கழிக்கத்தான் மலைத்தீவில் இறங்கும் பல நாட்டவரும் கேளிக்கைகளை நடத்துகிறார்கள். இல்லாவிட்டால் அதோ அந்தக் கூடாரவாசிகளுக்கு விளையாட்டுத் தான் தொழிலென்று நினைக்கிறீர்களா? இல்லை படைத் தலைவரே, இல்லை அத்தனை பேரும் வர்த்தகர்கள்" என்று விளக்கினாள் அலீமா.

அப்பொழுதுதான் அலீமாவின் விபரீதப் போக்குக்கும் நடன விளையாட்டுக்களில் அவள் பங்கெடுத்துக்கொள்ள முயன்றதற்கும் காரணம் தெளிவாயிற்று இளஞ்செழியனுக்கு. அவளைத் தவறாக அர்த்தம் செய்துவிட்டதை எண்ணி மனம் புழுங்கிய இளஞ்செழியன், அவள் கையை எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டு தடவிக் கொடுத்துக் கொண்டு, "அலீமா! இந்தக் கடல் நிலைமை தெரியாமல் உளறி விட்டேன். மன்னித்துவிடு" என்று மன்னிப்பும் கேட்டுக் கொண்டான். அந்த மன்னிப்பைப் பூராவாகப் பெறும் நோக்கத்துடன் அவளிஷ்டப்படி அவளுடன் அடுத்த இரண்டு நாட்களும் மலைத் தீவைச் சுற்றுவதிலும் முனைந்தான் படைத் தலைவன். நடன கேளிக்கைகளில் அவள் சேர்ந்து பலவித ஆட்டங்களை ஆடினாள். அவற்றையெல்லாம் கண்டு ரசித்ததற்கான பரிசை நான்காவது நாள் அவனுக்கு

அளித்தாள் அலீமா. மூன்றாவது நாளே நீர் வேகம் அடங்கி விட்டதால் மரக்கலத்தை மலைத் தீவிலிருந்து குறுக்கே செலுத்தி அடுலீஸ் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சிய அலீமா, படைத் தலைவனையும் மற்றவர்களையும் மரக்கலத்திலேயே இருக்கச் செய்து, தான் மட்டும் அடுலீஸ் நகரத்துக்குள் சென்று வந்தாள். வந்தவள் நேராகத் தன் அறைக்குச் சென்று படைத் தலைவனையும் ஹிப்பலாஸையும் அழைத்து, "நான் எதிர்பாரத கனவிலும் நினைக்காத நண்பர் ஒருவர் கிடைத்து விட்டார். அவரே புரவிகளையும் ரதத்தையும் வாங்கித் தருவார்" என்று அறிவித்தாள்.

"யார் அவர்? யவன அரச குடும்பத்தைச் சேர்ந்தவரா?" என்று வினவினான் இளஞ்செழியன்.

"யவன அரச குடும்பத்தார் யாருமே இங்கில்லை. யவன நாட்டுக்குப் போய்விட்டார்களாம். மூன்றாவது இளவரசர் மட்டும் முழு நிலவு புறப்படும் நாள் இங்கு வருவாராம்."

"ஏன்?"

"ரதப் போட்டியில் பங்கு கொள்ள. இளவரசர் லேசுப் பட்டவரல்ல. நீங்கள் ஏதோ காற்று என்று சொன்னீர்களே, அப்படிப் புரவிகளைச் செலுத்த வல்லவர். ஆகையால்தான் அவருக்கு அக்கிலீஸ் என்ற தேவ புருஷன் பெயரை வைத்திருக் கிறார்கள்."

"அது கிடக்கட்டும். யவன ராஜ குடும்பத்தாரில்லா விட்டால் வேறு எந்த நண்பர் கிடைத்தார்?"

"நீங்களே அவரைச் சந்திக்கப் போகிறீர்கள்"

"எப்பொழுது?"

"நாளை இரவு, இங்கே."

"வருவதாகச் சொல்லியிருக்கிறாரா?"

"ஆம். நான் சென்று அழைத்து வருவேன். நாளை இரவு நீங்கள் இந்த அறையில் இருள் சூழ்ந்த இரண்டாவது நாழிகை காத்திருங்கள். அவரை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்" என்றாள் அலீமா.

அலீமா கூறிய நான்காவது நாளிரவும் வந்தது. நடுப் பகலிலேயே அடுலீஸ் நகரத்துக்குள் சென்றுவிட்ட அலீமா இரவில்தான் தனது நண்பனுடன் திரும்பி வந்தாள். முன்னால் அவள் வந்ததால் பின்னால் குனிந்து நடந்து வந்த வனைக் கவனிக்காத இளஞ்செழியன், அலீமா அவனை அறிமுகப்படுத்தும் முறையில், "இவர்தான் எனது நண்பர் தமிழக வீரரே. நான் சொன்ன தமிழக வீரர் இவர்தான்" என்று கூறினாள்.

அடுத்த விநாடி அறிமுகப்படுத்தப்பட்ட இருவர் முகத்திலும் மட்டுமின்றி, இளஞ்செழியனுக்குப் பின்னால் நின்ற ஹிப்பலாஸ் முகத்திலும் பெரும் திகைப்பு நிலவியதைக் கண்ட அலீமா, அவர்கள் திகைப்புக்கான காரணத்தை அறியாமல் பிரமித்து சில விநாடிகள் சிலையென நின்று விட்டாள். அலீமா அழைத்து வந்த யவன நண்பன் திகைப்பு, அவன் முகத்திலும் மேலும் மேலும் படர்ந்ததன்றி உள்ளத் திலும் பல கலவரங்கள் சுழன்றதால், அவன் முகம் பெரிதும் விகாரமடைந்தது. ஹிப்பலாஸ் உணர்ச்சிகளைக் காட்டும் திறனைக்கூட இழந்து கற்சிலை போல் நின்றான்.

மூவரில் படைத் தலைவனே அந்த அசந்தர்ப்ப நிலையைச் சீர்படுத்த முயன்று, "உலகம் மிகக் குறுகலானது. யவன மருத்துவரே! அதனால்தான் மீண்டும் சந்திக்கிறோம்" என்று உரையாடலைத் துவக்கினான்.

படைத் தலைவன் ஆரம்ப மொழிகளால் சிறிது துணிவடைந்த யவன மருத்துவனும், "உலகம் குறுகியது மட்டுமல்ல தமிழக வீரரே! விசித்திரமானதுங்கூட" என்றான்.

"ஆண்டவன் படைப்பில் விசித்திரங்கள் பல உண்டு" என்று வேதாந்தம் பேசினான் படைத் தலைவன்.

யவன மருத்துவன் உடல் சிறிது நடுக்கம் கண்டது. "மூங்கில் தட்டியில் இறுகக் கட்டப்பட்டு சுறாக்கள் நிரம்பிய கடலில் தள்ளப்பட்ட தாங்களும் தங்களைக் காக்க கடலில் இறங்கிய உங்கள் நண்பரும் பிழைத்து மீண்டும் என்னைச் சந்திப்பது விசித்திரங்களில் சிறந்தது. அதைவிட விசித்திரம்

உங்களுக்காக அலீமா என்னிடம் உதவி நாடி வருவது" என்று கூறிய யவன மருத்துவன், "வருந்துகிறேன் தமிழரே! வருந்துகிறேன்" என்றும் அலுத்துக் கொண்டான்.

"எதற்கு வருந்துகிறீர்?"

"டைபீரியஸ் கூறியபடி உங்களுக்கு அதிக விஷத் துளிகளைக் கொடுத்துக் கொல்லாததற்கு" என்றான் யவன மருத்துவன்.

"நீங்கள் மருத்துவரா, கொலைகாரரா!" என்று மீண்டும் ஒரு கேள்வியை விடுத்தான் இளஞ்செழியன்.

"மருந்து இரண்டு வகைக்கும் உதவும். பிந்திய வேலையைச் செய்திருந்தால் நான் இந்த ஆபத்திலே சிக்கிக் கொண்டிருக்க மாட்டேன்."

"இப்பொழுது என்ன ஆபத்து வந்து விட்டது உங்களுக்கு!"

"அலீமா யார் தெரியுமா?"

"தெரியாமலென்ன?"

"டைபீரியஸின் சீடப் பெண்."

"அவளே சொல்லியிருக்கிறாள்."

"அவள் குருநாதரின் பகைவன் நீர் என்பதை அறிவாளா அவள்?" என்று கேட்ட யவன மருத்துவன் மெள்ள அலீமாவை நோக்கித் திரும்பி, "இந்த மனிதர் சோழர் படைகளின் உபதலைவர். டைபீரிஸின் ஜன்ம வைரியென் பதை நீ அறிவாயா?" என்று வினவினான்.

அலீமாவின் முகத்தில் அதுவரை நிலவிக் கிடந்த பிரமிப்பு மறைந்தது. முகத்தில் கோபமும் குழப்பமும் கலந்து தாண்டவமாடின. "என் குருநாதருக்கு நீங்கள் பகைவரா? இவர் சொல்வது உண்மையா?" என்று சீறினாள் அலீமா.

"உண்மைதான்" என்றான் இளஞ்செழியன்.

"இதை என்னிடம் ஒப்புக்கொள்ள என்ன துணிச்சல் உங்களுக்கு? என் குருநாதருக்கு என்ன அபசாரம் செய்ய இருந்தேன்! அவர் ஜன்ம விரோதிக்கு உதவ இருந்தேனே!

இதைப் பற்றி ஒரு வார்த்தை கானாவில் சொல்லியிருந்தால் உங்களைச் சாம்பிராணிக் காட்டுக்கு நானே அனுப்பி யிருப்பேனே. இப்பொழுதுதான் என்ன கெட்டுப் போய் விட்டது. நீங்கள் தமிழகம் திரும்புவதைப் பார்த்து விடுகிறேன்" என்று பெண் புலி போல் சீறிய அலீமா "என்னுடன் வாருங்கள் மருத்துவரே!" என்று யவன மருத்துவனை நோக்கிச் சைகை செய்து அறையை விட்டு வெகு வேகமாக வெளியே செல்லத் தொடங்கினாள்.

78. நுணல்

"நில் அலீமா! நில்!" சுருட்டிக் கையில் வைக்கப் பட்டிருந்த சாட்டையைத் திடீரெனச் சுழற்றிக் காலை நோக்கி வீசப்பட்டால் எத்தனை வேகத்துடன் கால்களைச் சுற்றி வளைத்து இறுக்கி நிறுத்திவிடுமோ, அத்தனை வேகத்துடனும் சுளீரென்று உணர்ச்சிகளில் தைக்கும் வகையிலும் ஒலியூட்டி விடுவிக்கப்பட்ட படைத் தலைவனின் அந்த மூன்று சொற்கள் அலீமாவின் உணர்ச்சிகளைச் சரேலென்று கட்டுப்படுத்திய தன்றி, உள்ளிருந்து வெளியே இழுத்துச் செல்ல முயன்ற கால்களையும் விலங்கிட்டதுபோல் நிற்கவைத்தமையால் ஒரு வினாடி தாமதித்த அலீமா, முன்னே செல்ல எடுத்து வைத்த இடது காலைப் பின்னுக்கிழுக்காமலே தலையை மட்டும் திருப்பி அவனை நோக்கினாள்.

அது விசித்திரத்துடனும் அதி துரிதத்துடனும் தனக்கு எதிராகத் திரும்பிவிட்ட அலீமாவின் பகை உணர்ச்சி அந்தப் பார்வையில் பூராவாக ஒளி விடுவதையும், கோபம், வெறுப்பு ஏதோ விவரிக்க இயலாத ஒரு ஏமாற்றம், எதையாவது உடனே செய்துவிட வேண்டும் என்ற துடிப்பு இப்படிப் பல விவரங்கள் அந்தப் பார்வையில் துள்ளி விளையாடுவதையும் கண்ட படைத் தலைவன், அவள் திருப்பத்தின் காரணத்தை எண்ணிப் பெரிதும் வியந்தான். அந்த ஒரே பார்வை,

டைபீரியஸின் இணையற்ற ஆகர்ஷண சக்தியை அவனுக்கு நிரூபித்தது. அந்த ஒரே பார்வை, டைபீரியஸ் எத்தனை சிறந்த குருவாகவும், எத்தனை அத்தியந்த நண்பனாகவும் இருக்க முடியும் என்பதைத் தெள்ளென விளக்கியது. அந்த ஒரே பார்வை ஆயிரக்கணக்கான ஸ்டேடியாக்களுக்கு அப்பாலும், கேள்விக்கும் அதிகமாக எட்டாத தூரப் பிரதேசங்களிலும் தனக்கு எத்தனை பெரிய பகைவனாக டைபீரியஸ் இருக்க முடியும் என்பதையும் சந்தேகமறப் புரிய வைத்தது. அந்த ஒரே பார்வை, டைபீரியஸைச் சில நாட்கள் தமிழகத்தில் வேரூன்ற விட்டால் யவன ராஜ்யத்தை அவன் அங்கு ஸ்தாபித்து விடுவதோடு அல்லாமல், தனக்காக எதையும் தியாகம் செய்யவல்ல மக்கள் குழாத்தையும் அவன் சிருஷ்டித்துவிட முடியுமென்பதையும், அப்படி மக்களாதரவு ஏற்பட்டுவிடும் பட்சத்தில் டைபீரியஸையோ யவனர்களையோ தமிழகத்தி லிருந்து பெயர்த்தெடுத்து விடுவது வீண் பிரமையென்பதையும் படைத் தலைவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியெனத் துலங்க வைத்தது. 'கேவலம் அடிமைப் பெண்ணான அலீமாவிடமே இத்தனை பக்தியைச் சிருஷ்டிக்கக்கூடிய டைபீரியஸ், சாதாரணமாகவே தலைவனிடம் பக்தி கொள்ளும் படை வீரர்களை எப்படி வசப்படுத்தக் கூடிய வனாயிருக்க வேண்டும்! டைபீரியஸை யவனர்கள் தேவ புருஷன்போல் பாவிப்பதாக ஆரம்ப நாளன்றே ஹிப்பலாஸ் சொன்னது எத்தனை சரியாகப் போய்விட்டது!' என்று எண்ணிய படைத் தலைவன் அலீமாவின் கண்களோடு தன் கண்களைச் சில விநாடிகள் உறவாட விட்டான்.

படைத் தலைவனுடைய கூர்மையான பார்வை மட்டும் தைக்கும் பட்சத்தில் அதை மீறிச் செல்லும் திறன் யாருக்கும் கிடையாதென்பது பிரசித்தமாகையால், அவன் வாயிலிருந்து உதிர்ந்த மூன்று சொற்களும், அலீமாவின் பார்வையை நிறுத்திய அவன் பார்வையும் அவளை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்து விட்டதை அறை மூலையிலிருந்து கண்ட

ஹிப்பலாஸ், "இனிமேல் படைத் தலைவர் இவளைச் சமாளித்து விடுவார்" என்று தனக்குள்ளேயே ஆறுதல் அடைந்ததன்றி, அந்த ஆறுதலுக்கு அடையாளமாகப் பெருமூச்சு ஒன்றும் விட்டான். ஆனால் ஹிப்பலாஸ் நினைத்தது போல் அலீமாவின் மனத்தைத் திருப்புவது அவ்வளவு எளிதாயில்லை படைத் தலைவனுக்கு. அவனது இயற்கையான பேச்சுத் தந்திரம், வாதத் திறன், காரணங் களைத் தொகுத்துக் காட்டக்கூடிய சாமர்த்தியம், அனைத்தும் தேவையாயிருந்தது சோழர் படை உபதலைவனுக்கு, அந்த அடிமைப் பெண்ணைத் திருப்ப.

அவன் சொற்கள் உதிர்த்த தடை உத்தரவாலும், கண்கள் கண்களை கட்டியிழுத்த பார்வைக் கயிறுகளின் பலத்தாலும் சிறிது தாமதித்த அலீமா, "எதற்காக நிற்கச் சொல்கிறீர்கள்? இங்கு எனக்கு இனி வேலையில்லை. என் குருநாதரின் பகைவருடன் எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ள நான் இஷ்டப்படவில்லை" என்றாள் திட்டமாக.

அவளை அழைத்து நிறுத்திய சொற்களிலிருந்த சீற்றத்தைத் தணித்துக் கொண்ட படைத் தலைவன் பழையபடி நிதானத்துக்கு வந்து, "பதற்றத்தால் முடிவுகளைச் செய்வது புத்திசாலிகளுக்கு அழகல்ல அலீமா. ஆய்ந்தோய்ந்து செய்யப்படாத முடிவு பின்னால் வருத்தத்தை அளிக்கும்" என்று சுட்டிக் காட்டினான்.

அவன் உபதேசத்தைக் காதில் வாங்கிக் கொள்ளும் நிலையில் கூட இல்லாத அலீமா, சட்டென்று திரும்பி அவனை ஏறெடுத்து நன்றாக இரு கண்களாலும் சற்றும் பயமின்றி நோக்கிச் சொன்னாள்: "இதில் ஆய்வதற்கோ ஓய்ந்து சிந்திப்பதற்கோ ஏதுமில்லை படைத் தலைவரே. நீர் என் குருநாதரின் பகைவர். நான் வந்துள்ள முடிவுக்குக் காரணம் அதுபோதும்."

இளஞ்செழியன் கண்கள் அவள் தாமரை வதனத்தை ஆராய்ந்தன. அந்த முகத்தின் அழகு கோபத்தால் சிவந்து

அந்தி வானம் போலும் காலைத் தாமரை போலும் காட்சியளித்தது. அந்த அழகு முகத்தில், செவ்வானத்தின் குறுக்கே படர்ந்த கறுப்பு மேகம்போல் எழுந்த வெறுப்பைக் கண்ட படைத் தலைவன், 'அப்பப்பா! பெண்களுக்கு மட்டும் கோபம் வந்துவிட்டால் எத்தனை ஆத்திரம், எத்தனை கொந்தளிப்பு! கடல் அலைகளைக் கூட அடக்கிவிடலாம் போலிருக்கிறது. இவர்கள் கோபத்தை அடக்க யாரால் முடியும்!' என்று உள்ளூர சிந்தித்தானானாலும் அந்தச் சிந்தனையையோ வேறெந்த உணர்ச்சிகளையோ வெளிக்குக் காட்டாமல், "அலீமா! நான் இஷ்டப்பட்டால் இந்த மரக்கலத்திலேயே உன்னையும் இந்த யவன மருத்துவரையும் நிறுத்திக்கொள்ள என்னால் முடியும். அது மட்டுமல்ல. நீ இந்த மரக்கலத்திலிருப்பதாக யவனர் இளவரசன் அக்கிலீசையும் இந்த மரக்கலத்துக்குத் தன்னந் தனியே வரவழைத்துச் சிறை செய்து பயமுறுத்திப் பணம் பெற்றுத் தமிழகத்துக்கு இக்கப்பலைக் கொண்டு போக என்னால் முடியும். இலி-ஆஸுவையும், மதகுருவையும் ஏமாற்றிய எனக்கு வெளுத்த உள்ளமுடையவர்களும், ஆதிக்க ஆசை ஒன்றைத் தவிர வேறு குணக்கேடு இல்லாதவர்களும், கண்ணியத்தின் வரம்புகளுக்குக் கட்டுப் படுபவர்களுமான யவனர்களை ஏமாற்றுவது ஒரு பொருட்டல்ல என்பதை நீயே ஒப்புக் கொள்வாயென நினைக்கிறேன். தவிர, நீ கூறியதுபோல் என்னை இலி-ஆஸு வின் சாம்பிராணிக் காட்டுக்கு நீ அனுப்பியிருக்க முடியாது. இலி-ஆஸுவை ஒரு விதத்தில் ஏமாற்றியவனுக்கு இன்னொரு விதத்தில் ஏமாற்றுவது பெரும் வித்தையுமாகாது. அலீமா! கானாவிலிருந்து தப்பியது நான் உன்னிடம் சொன்ன திட்டத்தாலல்ல என்பதையும், நான் வகுத்த திட்டங்கள் இரண்டில் உன்னைவிட ஹிப்பலாஸின் பங்கே அதிகமென்பதையும் நினைவு வைத்துக் கொள்வதும் நல்லது" என்று மெள்ள மெள்ளச் சொற்களை உதிர்த்தான்.

படைத் தலைவன் சொற்கள் சுட்டிக் காட்டிய உண்மையையும், அவன் திட்டங்களில் தானும் ஹிப்பலாஸும் - ஏன்

இலி-ஆஸுவும் மதகுருவுங்கூட வெறும் சதுரங்கக் காய்கள் தானென்பதையும் புரிந்துகொண்ட அலீமா, தான் ஆத்திரத்தில் ஏதேதோ பேசிவிட்டதை உணர்ந்து சிறிது உள்ளூர வருந்தினாளானாலும் எப்படியும் குருநாதனுடைய பகைவனுக்கு எத்தகைய உதவியைச் செய்வதும் குருத்துரோகம் என்பதை நினைத்து, "படைத் தலைவர் திறனை யாரும் சந்தேகப்படவில்லை. ஏமாற்று வித்தையில் தாங்கள் சிறந்தவரென்பதை வலியுறுத்த விவரணமும் அதிகம் தேவையில்லை. டைபீரியஸைப் பற்றி நான் பேசியபோதெல்லாம் தாங்கள் அவர் பகைவர் என்பதை மறைத்து என்னை ஏமாற்றி அவருக்கெதிராக என்னைத் திருப்பி உங்களுக்கு உதவத் தூண்டியதிலிருந்தே தங்கள் திறன் புரிகிறது எனக்கு. தவிர கானாவில் சொந்த முயற்சியால் தாங்கள் தப்பியிருக்கலாம். நான் அதிகமாக உதவாமலும் இருந்திருக்கலாம். ஆனால் உங்கள் திட்டங்களுக்கும் ஒரு கருவி தேவையாயிருந்தது. அந்தக் கருவியாக நான் இல்லாதிருக்கலாமல்லவா? அதுவும் தவிர, அம்புக்கு மூங்கில் சீவும் கத்திகூட சீவுபவன் கையைக் காயப்படுத்துவதுண்டு படைத் தலைவரே! அப்படியும் நான் தங்களுக்குக் காயம் விளைவித்திருக்க முடியும். சற்று நான் தாங்கள் குறித்த திசையில் செல்லாமல் மாறுபட்டிருந்தால், இலி-ஆஸுவின் காதில் எதையாவது ஓதியிருந்தால் உங்கள் திட்டங்கள் காயப்பட்டிருப்பது மட்டுமல்ல, ரத்தமும் கானாவில் பிரவகித்திருக்கும். சாம்பிராணிக் காட்டுக்கு இன்னும் இரண்டு முடவர்கள் கிடைத்திருப்பார்கள்" என்று இளஞ்செழியன் திட்டத்தில் தனக்கும் பங்கு உண்டு என்பதை மட்டுமின்றி, அவனோடு ஹிப்பலாஸின் கதியும் அதோ கதியாகியிருக்கும் என்பதையும் உணர்த்தினாள். அத்துடன் படைத் தலைவனை மட்டுமின்றி அவனுக்குப் பின்னால் நின்றிருந்த ஹிப்பலாஸ்மீதும் தன் அழகிய விழிகளைத் திருப்பினாள்.

அவள் வாதத்திலிருந்த உண்மையைச் சிறிதும் மறக்காமலும் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமலும்,

"நாங்கள் தப்பியதில் உன் பங்கை மறக்கவில்லை அலீமா? நாங்கள் இத்தகைய திட்டங்களை அலசிப் பார்க்கும் முறை வேறு. தமிழகத்தில் சிந்தனைக்கு முக்கியம் கொடுக்கப் படுகிறது. அதை முன்னிட்டே உன் பங்கைக் குறைத்துக் கூறினேன். கருவிகள் மனிதனுக்குத் தேவைதான். ஆனால் கருவிகள் மனித வாழ்வில், திட்டங்களில் கொள்ளும் பங்கு குறைவு. சிந்தனைக்குத்தான் வேலை அதிகம். வீரனுக்கு வேலும், வாளும் தேவை. ஆனால் வீரன் வெற்றி கொண்ட தாகச் சொல்கிறார்களேயொழிய வேலையோ வாளையோ யாரும் முக்கியமாகக் கருதுவதில்லை. கவிஞனுக்கு எழுத் தாணியும் ஓலையும் தேவைதான். ஆனால் கவிதையை அவை புனைவதில்லை. அவற்றைக் கொண்டு கவிஞன் தன் சிந்தனை யிலுள்ள கவிதையை மற்றவருக்குத் தீட்டிக் கொடுப்பதால் எழுத்தாணியும் ஓலையும்தான் கவிதைக்குப் பிரதானம் என்று யாரும் எண்ணுவதில்லை" என்று குறிப்பிட்டான் படைத் தலைவன்.

அலீமாவின் சுடுவிழிகள் மீண்டும் நெருப்பைக் கக்கின "தமிழகத்தின் கவிஞரே! நான் எழுத்தாணியா ஓலையா? இரண்டில் எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள், ஒப்புக் கொள்கிறேன். தங்கள் அறிவு யாருக்கும் இல்லையென்பதை யும் ஒப்புக் கொள்கிறேன்" என்று உள்ளூரக் கொந்தளித்த உணர்ச்சிகள் சொற்களில் தெறிக்கவும், இகழ்ச்சி பேச்சில் கலந்து பாயவும் கூறினாள் அலீமா.

"இரண்டுமில்லை" என்று சாதாரணமாகப் பதில் சொன்னான் படைத் தலைவன்.

"வேறு என்ன?" அலீமாவின் இந்தக் கேள்வியும் உஷ்ண மாகவே தொடர்ந்தது.

"என்னைக் கவிஞன் என்பதைவிட வீரன் என்று அழைப்பது பொருந்தும்."

"தற்பெருமை மிதமிஞ்சிப் போகிறது, படைத் தலைவரே!"

"உன் பெருமையை முன்னிட்டே இந்தத் தற் பெருமையை மேற்கொள்கிறேன் அலீமா!"

"என் பெருமையா?"

"ஆம் அலீமா! என்னை வீரன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையே அடைகிறேன். ஏன் தெரியுமா?"

"தெரியவில்லை, சொல்லுங்கள்."

"அப்பொழுதுதான் உன் அழகு துலங்கும்."

"எப்படியோ?"

"அப்பொழுதுதானே உன்னை வேலுக்கும் வாளுக்கும் ஒப்பிடலாம். வீரன் கையேந்தும் கருவிகளல்லவா அவை?"

"அப்படித்தான் ஒப்பிடுங்கள்."

"நான் மட்டுமென்ன! யாரும் உன்னை அப்படித்தான் ஒப்பிடுவார்கள். இந்த ஹிப்பலாஸைக் கேட்டுப் பார். சந்தேகமிருந்தால் உன் நண்பர் இந்த யவன மருத்துவரைக் கேட்டுப் பார்."

"என்ன கேட்பது?"

"உன் விழிகளுக்கும், வேலுக்கும், வாளுக்கும் ஏதாவது வித்தியாசமுண்டா என்று."

அலீமா சங்கடத்தால் காற்பெருவிரலால் அறையின் மர அடியைக் கீறினாள். படைத் தலைவனின் உவமையால் சற்றே மயங்கி கோபத்தின் ஊடே நாணமும் புகுந்ததால் கோபத் துடன் புன்சிரிப்பும் அவள் கோவை இதழ்களில் படர்ந்தது. பெண்களின் பலஹீனஸ்தானம் அவர்கள் அழகுதான் எனப் புரிந்துகொண்ட படைத்தலைவனும், அவள் முகத்திலேற் பட்ட சொற்ப மாறுதல்களைக் கணப்பொழுதில் கண்டு கொண்டாலும் அதைக் கவனிக்காதவன்போல் யவன மருத்துவனை நோக்கி, "என்ன மருத்துவரே! நான் சொன்னதில் தவறு ஏதும் இருக்கிறதா?" என்று வினவினான்.

யவன மருத்துவன் மனம் பல திசைகளில் அலைந்து கொண்டிருந்ததால் அவன் உடனே பதில் சொல்ல முடியாமல் மென்று விழுங்கினான். படைத் தலைவன் மெள்ள மெள்ள அலீமாவின் மனத்தை மாற்றியதன்றி, தான் புகுத்திய கருத்து விஷயத்தையும் அவள் புத்தியிலிருந்து ஈர்க்கத் துவங்கி விட்டதைக் கண்டு சற்றுத் திகிலும் அடைந்தான் யவன மருத்துவன். போதாக்குறைக்கு, பேச்சின் ஆரம்பத்தில், 'இஷ்டப்பட்டால் உன்னையும் இந்த யவன மருத்துவரையும் இந்த மரக்கலத்திலேயே இருக்கச் செய்ய என்னால் முடியும்' என்று அலீமாவை நோக்கிப் படைத் தலைவன் சொன்ன சொற்களும் அவனுக்குப் பெரும் பீதியை ஊட்டியிருந்ததால் தன் கதி என்ன ஆகும் என்று எண்ணிக் கலங்கினான் மருத்துவன்.

யவன மருத்துவன் படைத் தலைவனை அலீமாவிடம் காட்டிக் கொடுத்ததற்குக் காரணம் வேறு. டைபீரியஸ் கொல்ல இஷ்டப்பட்டவனைத் தான் கொல்லாது விட்டது பெருங்குற்றம். தவிர அவன் இறந்துவிட்டதாகப் பொய் சொன்னது அதைவிடப் பெருங்குற்றம். பொற்காசுகளுக்காகத் தன் மக்களின் பகைவனைத் தப்ப வைத்ததற்கு யவன நாட்டில் சித்திரவதை கிடைக்குமென்பதையும், யவனர் முறைகள் மிகப் பயங்கரம் என்பதையும் நினைத்து நடுங்கினான் மருத்துவன். சாதாரணமாக சிங்கத்துக்குத் தான் குற்றவாளிகளை யவனர் தீனியாகப் போட்டு வந்தார்கள். 'நான் செய்த குற்றம் மட்டும் வெளியாகி விட்டால்! சிங்கங்கள் என் முகத்தையும் வாயையும் கடித்துக் கரகரவென்று பட்சணம் செய்யுமே' என்று எண்ணமிட்ட யவன மருத்துவனுடைய நரம்புகளில் பயம் மின்னல் போல் பாய்ந்து சென்றது. அலீமாவிடமும் யவன ராஜ குடும்பத்தாரிடமும் படைத் தலைவனைக் காட்டிக் கொடுத்துவிட்டால் தன் குற்றம் மறைந்து போகும் என்ற நினைப்பில்தான் யவன மருத்துவன் படைத் தலைவன் யாரென்பதை விளக்கினான். அந்த விளக்கம் எத்தனை

விபரீதத்தில் தன்னை இழுத்துச் செல்ல முடியும் என்பதையோ, தான் சமாளிக்க வேண்டிய படைத்தலைவன் எப்பேர்ப்பட்ட மனிதனென்பதையோ முதலிலேயே யவன மருத்துவன் அறிந்திருந்தால் வாயைத் திறந்திருக்க மாட்டான்; நுணலின் நிலையில் அவன் இருந்திருக்கவும் நேர்ந்திராது.

ஆகவே படைத் தலைவன் பேச்சு மெள்ள மெள்ள நீண்டதையும், படைத் தலைவன் பேச்சைக் கேட்கக் கேட்க அலீமா சிறிது சாந்தப்பட்டதையும், கடைசியாக அழகு உவமையில் படைத் தலைவன் புகுந்ததும் அவள் முகத்தில் கோபத்துடன் வெட்கமும் கலந்து கொண்டதையும் கண்ட யவன மருத்துவன், தன் நிலை அபாயத்தை நோக்கி வருவதைக் கண்டு பெரும் கிலியும் கொண்டான். அந்த நடுக்கத்திலேயே பேசவும் தொடங்கி, "இல்லை. தவறில்லை. அலீமாவின் கண்களை வேலுக்கும் வாளுக்கும் ஒப்பிடுவதில் தவறில்லை..." என்றான்.

"ஏன் இழுக்கிறீர் மருத்துவரே! சொல்வதைத் தைரிய மாகச் சொல்லும். இந்த அறையை விட்டு நம்மில் யாராவது ஒருவர் நகரு முன்பு நமக்குள் விஷயத்தை அலசி ஒரு முடிவுக்கு வரவேண்டும்" என்றான்.

யவன மருத்துவன் அறையின் வாயிற்படிக்காகக் கண்களை ஓட்டினான். அதைக் கண்டு நகைத்த படைத் தலைவன், "மருத்துவரே! கதவைப் பார்த்துப் பயனில்லை. வெளியிலிருப்பவர்கள் கண்ணியமான மாலுமிகளல்ல! அடிமை வர்த்தகர்கள். மரியாதைக் குறைவாக ஏதாவது நடந்து கொள்ளலாம். தாங்கள் நியாயமாக நடந்து கொண்டால் தங்களுக்கோ அலீமாவுக்கோ ஆபத்து ஏதும் நேரிடாமல் பார்த்துக் கொள்வது என் கடமை. ஆகவே விபரீத யோசனைகள் வேண்டாம் மருத்துவரே. இதோ இந்த மஞ்சத்தில் உட்காரும். அலீமா, இந்தப் பஞ்சணை உனக்குப் புதிதல்ல. நீயும் உட்கார். உள்ள நிலையைச் சரியாக அலசு வோம். அதற்குப் பின்பும் உனக்கு இந்த மருத்துவருடன்

வெளியே செல்ல இஷ்டமிருந்தால் உன்னை நான் கரையில் கொண்டு போய்விடுகிறேன்" என்று கூறினான்.

வேறு வழியில்லாமல் இருவரும் உட்கார்ந்து அறைக் கதவுக்கருகில் சென்று காவல் புரியும்படி ஹிப்பலாஸுக்கு உத்தரவிட்ட படைத் தலைவன், மருத்துவருக்கும் அலீமா வுக்கும் எதிரே நின்று கொண்டே தன் புத்தியில் உதித்தபடி கடந்தகால நிகழ்ச்சிகளை ஒன்று கூட்டி, கேள்வியும் பதிலுமாகத் தொடுக்கத் தொடங்கினான். அந்தக் கேள்வி பதிலின் ஆரம்பக் கட்டமாக அமைந்தது, "மருத்துவரே! நான் டைபீரியஸுக்குப் பகைவனென்று கூறுகிறீர் இல்லையா?" என்ற கேள்வி.

ஏதோ புதிதாகக் கண்டு பிடித்துவிட்டது போல் பழைய கேள்வியை வீசிய இளஞ்செழியனைச் சற்றுப் பரிதாபத்துடன் நோக்கிய யவன மருத்துவன், "ஆம், அதிலெனன்ன சந்தேகம்?" என்றான்.

"சந்தேகமில்லை. ஆனால் நான் டைபீரியஸ் பகைவ னென்று உமக்குச் சொன்னது யார்?" என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டான் படைத் தலைவன்.

"யார் சொல்ல வேண்டும்? யவன நாட்டு விஷத்துளி களை உங்களுக்கு டைபீரியஸ் புகட்டி இருந்தானல்லவா?"

''ஆமாம்'' என்று படைத் தலைவன் ஒப்புக் கொண்டான்.

"யவன நாட்டில் யாரும் நண்பர்களை விஷம் வைத்துக் கொல்ல முற்படுவதில்லை. தமிழ் நாட்டுப் பழக்கம் எப்படியோ தெரியாது" என்று சற்றுக் குறும்புத் தனத்தையும் காட்டினான் மருத்துவன்.

"தமிழகத்தில் விரோதிகளுக்குக்கூட விஷம் வைப்ப தில்லை. தேவையானால் நெருப்புத்தான். வைப்போம்" என்ற இளஞ்செழியன், இருங்கோவேளையும் ஆம்பிரா நதிக்கரை மாளிகையையும் ஒரு கணம் நினைத்தான்.

"நெருப்பும் அப்படியொன்றும் இழிவான சாதனமல்ல" என்ற யவன மருத்துவன் சொற்களில் கேலி தொனித்தது.

"விஷத்தைவிட இழிவு என்று சொல்ல முடியாது. நெருப்பு வைத்தவுடன் எப்படியும் ஆரம்பத்தில் புகைச்சல் கிளம்பும். சற்று முன்னெரிக்கை கிடைக்கும். யவனர் முறையில் அந்தக் கஷ்டம் கிடையாது. ஓசைப்படாமல் விரோதியிடம் நண்பன் போல் நடித்து ஒழித்துக் கட்ட விஷத்தைவிடக் கை கண்ட மருந்து கிடையாது. அது கிடக்கட்டும் மருத்துவரே! சொற்களின் போராட்டம் இப்பொழுது எதற்கு? நாம் ஆராய முற்பட்ட தகவலே வேறு. டைபீரியஸ் எனக்கு விஷம் வைத்த தாக உங்களுக்குச் சொன்னது யார்?"

"புகாரில் நங்கூரம் பாய்ச்சி நின்ற எங்கள் கப்பல் தலைவன் சொன்னான்."

"எப்படி டைபீரியஸ் விஷத்துளிகளை எனக்கு அளித் தான், எந்தச் சந்தர்ப்பத்தில் அளித்தான் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது."

''சரி'' என்று சொன்ன படைத் தலைவன் சில வினாடிகள் ஏதோ யோசித்துக்கொண்டு அறையில் அங்கும் இங்கும் உலாவிவிட்டு, திடீரென யவன மருத்துன் முன்பாக நின்று, "மருத்துவரே! விஷத் துளிகளை எனக்குக் கொடுத்து என்னைக் கப்பலுக்கு அனுப்பியதால் டைபீரியஸ் என் விரோதி என்று உணர்ந்தீர்?" என்று கேட்டான்.

"ஆம்." திட்டமாக வந்தது மருத்துவன் பதில்.

படைத் தலைவன் முகத்தில் சிறிது சங்கடம் தோன்றியது. படைத் தலைவன் மீளாமல் தன்னிடம் சிக்கி விட்டான் என்பதை நினைத்த மருத்துவன் குறுநகை கொண்டான். படைத் தலைவனின் அடுத்த கேள்வி தொடர்ந்தது. ''டைபீரியஸ் வேறு ஏதாவது உத்தர விட்டானா?"

"ஆம். நீங்கள் எப்படியும் பிழைக்கக் கூடாதென்றும், பிழைத்தால் மேலும் விஷத்துளிகளைக் கொடுத்துக் கொன்று விடும்படிக்கும் உத்தரவிட்டான்" என்ற வெற்றி ஒலியில் வார்த்தைகளைக் கொட்டிய மருத்துவன் அலீமாவை நோக்கி, "இப்பொழுது தெரிகிறதா அலீமா, இவர் டைபீரியஸின் பரம விரோதியென்று!" எனக் கூறினான். ஆனால் அடுத்த வினாடி இடிஇடியென உதிர்த்த படைத் தலைவன் நகைப்பு அவன் சப்த நாடிகளையும் ஒடுக்கியது. அதைவிட அவன் உயிரைக் குடித்துவிடுவது போல் விஷத்தைக் கக்கிக் கொண்டு தன்னை நோக்கி எழுந்த அலீமாவின் கண்களைப் பார்த்த மருத்துவன், "இந்தத் திடீர் மாற்றத்திற்கு என்ன காரணம்?" என்று எண்ணி ஏதும் புரியாததால் பெரும் திகில் கொண்டான். நுணலென விழித்தான். சுற்றிலும் நோக்கினான். காலசர்ப்பம் போல் இளஞ்செழியன் முகம் தன்னை நோக்கி வருவதை உணர்ந்தான். அத்துடன், "இந்த மருத்துவமனை உடனே வெட்டிப் போடுங்கள் படைத் தலைவரே!" என்று இடியென எழுந்த அலீமாவின் குரல் அவனைக் கண்ட துண்டமாக வெட்டிக் கொன்றுவிடுவது போல் பயங்கரமாக எழுந்தது. "உம்...ஏன் தாமதிக்கிறீர்கள்? இந்த அயோக்கியனை உடனே வெட்டிப் போடுங்கள் படைத் தலைவரே! இவனை உயிருடன் விடாதீர்கள்!" என்று மீண்டும் மீண்டும் சித்தப் பிரமை பிடித்தவன் போல் அலறினாள் அலீமா.

79. ராணியின் சகோதரன்

பேச்சிலும் சரி, எழுத்திலும் சரி, அறிவாளிகள் நிதானத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். ஏனென்றால் ஆண்டவன் மனிதனுக்கு அளித்திருக்கும் இந்த இரண்டு சாதனங்களும் அதிக சக்தி வாய்ந்தவையாயிருப்பது மட்டுமின்றி, கொஞ்சம் நிலை தவறினால் எழுத்தும் பேச்சும் அவற்றைக் கையாள்பவர்களையே சங்கடத்தில் மாட்டி

வைத்துவிடுகின்றன! மனித வரலாறு கண்ட உண்மை இது. அவசரப்பட்டுப் பேசப்படும் பேச்சினாலும், அந்தச் சந்தர்ப்பத்துக்குச் சரியாகத் தோன்றும் விஷயங்களின் விளைவை எண்ணிப் பாராமல் எழுதப்படும் எழுத்தினாலும் பிற்காலத்தில் நினைத்து வருந்தும் ஆத்திரக்காரர்களின் கணக்கு ஏட்டிலடங்காது. அந்தப் பெரும் பட்டியலில் சேர்ந்து கொண்ட மருத்துவன் அந்த யவன மரக்கலத்தின் அறையில் அசந்தர்ப்பமாகப் பேச்சுக் கொடுத்துப் படைத் தலைவன் விரித்த வலையில் விழுந்துவிட்டதன்றி, அலீமாவுக்குத் திடீரெனத் தன்மீது அளவற்ற சினம் ஏற்பட்டதன் காரணத்தை அறிய முடியாமலும் நீண்ட நேரம் திகைத்து நின்றான். 'தமிழகத்துக்கு நீ செல்வதைப் பார்த்து விடுகிறேன்...' என்று சற்றுமுன்பாகப் படைத் தலைவன் மீது சீறிய அலீமா திடீரெனத் தனக்கு எதிராக எப்படித் திரும்பினாள்? ஏன் திரும்பினாள்? சில நிமிடங்களுக்குள் அத்தகைய ஒரு திருப்பத்தை அவள் மனத்தில் ஏற்படுத்தக் கூடிய என்ன நிகழ்ச்சி நேர்ந்துவிட்டது என்பதையெல்லாம் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்தும் ஏதும் புரியாதவனாய் குழப்பம் மிகுந்த தன் கண்களால் அலீமாவையும் படைத் தலைவனையும் மாறிமாறிப் பார்த்தான் யவன மருத்துவன். 'முதலில் இந்த மருத்துவனை வெட்டிப் போடுங்கள்' என்று அலீமா கூவியது யவன மருத்துவனுக்குத் திகிலைவிடக் குழப்பத்தையே அதிகமாக உண்டாக்கியது. குழப்பம் மேம்படும்போது அவசியமாக ஏற்பட வேண்டிய உணர்ச்சிகள் தணிந்து விடுவது இயற்கையேயல்லவா?

ஆகவே அலீமா தன்னை வெட்டிப் போடும்படி கதறிய போது முதலில் சிறிது திகில் ஏற்பட்டாலும், பின்பு அந்தத் திகில் மறைந்து குழப்பத்துக்கு இடம் கொடுக்கவே சற்றுத் தடுமாறிப்பேசவும் முற்பட்ட யவன மருத்துவன், "அலீமா! நீ இப்படிச் சீறும் காரணம் எனக்கு விளங்கவில்லை. விளக்கிச் சொல். நான் செய்த தவறுதானென்ன?" என்று மெள்ள வினவினான்.

அலீமா தன் சுடு விழிகளை அவன்மீது ஒரு கணம் திருப்பி விட்டுப் பிறகு படைத் தலைவனை நோக்கி, "மருத்து வருக்கு விளங்கவில்லையாம். விளங்கவையுங்கள்" என்று இகழ்ச்சி நிரம்பிய குரலில் கூறினாள்.

இளஞ்செழியன் இதழ்களில் அதுவரை இருந்த இளநகை மறைந்து இகழ்ச்சி லேசாக மலர்ந்தது. அவன் மருத்துவனைப் பார்த்த பார்வையில் இகழ்ச்சியுடன் பரிதாபமும் கலந்து நின்றது. தானாகவே குரல் கொடுத்து, தானிருக்குமிடத்தைப் பாம்புக்குக் காட்டி, அந்தப் பாம்பின் வாயில் சிக்கியதும் தத்தளிக்கும் தவளையைப்போல் யவன மருத்துவன் தத்தளித்து மிரண்டு நிற்பதைக் கண்ட இளஞ் செழியன், "மருத்துவரே! மூளையைத் துரிதப்படுத்தும் மருந்து ஏதாவது இருக்கிறதா?" என்று ஏதோ அவசியமான ஒரு பொருளைக் கேட்பதுபோல் சாவதானமாகக் கேட்டான்.

"பல இருக்கின்றன. மூளையின் மந்தம் நரம்பு மந்தத்தால் ஏற்படுகிறது. நரம்பை முடுக்கினால் மூளையும் முடுக்கப்படும்" என்று விவரித்த யவன மருத்துவன், அந்தச் சாத்திரத்தில் தனக்குள்ள வல்லமையை அத்தனை இக்கட்டிலும் தன் குரலில் தொனித்த பெருமையால் விளக்கினான்.

"அப்படியானால் அந்த மருந்துகளில் ஏதாவது ஒன்றைச் சாப்பிட்டுவிடும்."

"எதற்கு?"

"தங்கள் மூளை துரிதமாகச் செயலாற்ற!"

"இப்பொழுது அப்படியில்லையென்பது தங்கள் அபிப் பிராயமா?"

"என் அபிப்பிராயத்தைப் பற்றி இப்பொழுது கவலை யில்லை. இப்பொழுது அலீமாவின் கருத்தைப் பற்றித்தான் நாம் கவலைப்பட வேண்டும்."

"அதில் கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது."

"அது விளங்கவில்லையா உமக்கு?"

"இல்லை."

"உமக்கு மூளைக்கு மருந்து தேவைதான் மருத்துவரே! இப்பொழுது அலீமா பெரும் குழப்பத்திலிருக்கிறாள்" என்று படைத் தலைவன் வார்த்தைகளை இழுத்தான்.

"என்ன குழப்பமோ?" என்று வினவினான் மருத்து வனும் குழப்பத்தின் உச்ச நிலைக்குச் சென்று.

"நம் இருவரில் யார் பெரிய அயோக்கியன், யாரை அடுலீஸிலுள்ள யவனர்களிடம் ஒப்படைக்கலாம் என்று தீர்மானிக்க முடியாமல் திண்டாடுகிறாள் அலீமா" என்று விளக்கினான் படைத் தலைவன்.

யவன மருத்துவன் கேட்டான் ஏதும் புரியாமல், "உம்மை யவனர்களிடம் ஒப்படைத்துச் சிறையிடுவதில் அர்த்தமிருக்கிறது..." என்று ஆரம்பித்து மென்று விழுங்கினான்.

இளஞ்செழியன் மருத்துவன் கருத்து ஓடும் பாதையைப் புரிந்துகொண்டு சொற்களின் இடையிலே புகுந்து, "மருத்துவரே! உம்மைச் சிறையிடுவதிலும் அர்த்தமிருப்பதாக அலீமா நினைக்கிறாள்" என்று சுட்டிக் காட்டினான்.

"ஏன்?" என்று கேட்டான் யவன மருத்துவன்.

அதுவரை இருவர் பேச்சையும் கேட்டுக்கொண்டு மஞ்சத்தில் மௌனமாக உட்கார்ந்திருந்த அலீமா, திடீரென மஞ்சத்திலிருந்து இறங்கி மருத்துவனை நோக்கி வந்து கொண்டே, "ஏனென்றா கேட்கிறாய்? அட பதரே! என் குருநாதருக்கும் யவன நாட்டுக்கும் நீ செய்த துரோகம் உனக்கு இன்னும் விளங்கவில்லையா? இந்தப் படைத்தலைவராவது குருநாதருக்குப் பகைவர். ஆகவே யவன நாட்டுக்கே விரோதி. இவர் வேறு நாட்டவர். மற்றொரு நாட்டவருடன் பகைமை இருக்கலாம். நீ அப்படியல்லவே! நீ யவனன். யவன மக்களின் நன்மைக்காக எதையும் செய்ய வேண்டியவன். அப்படியிருக்க உன் நாட்டுப் படைத் தலைவர் கட்டளையையே மீறத் துணிந் தாய். சோழ நாட்டுப் படைத் தலைவரை விஷம் வைத்துக் கொல்லச் சொல்லி உனக்கு என் குருநாதர் கட்டளையிட் டாரே, அதை ஏன் நிறைவேற்றவில்லை? நீ நிறைவேற்றியிருந்

தால் இவர் இப்பொழுது நம் எதிரில் உயிருடன் நிற்க முடியுமா? ரதப்போட்டிக்குக் குதிரைகளை வாங்கிக் கொடு என்றுதான் கேட்க முடியுமா? டைபீரியஸின் கட்டளையை ஏன் மீறினாய்? அதற்கு எத்தனை பொற்காசுகள் வாங்கினாய்? சொல் துரோகி, சொல். யவனர் நாட்டில் பிறந்த கோடரிக் காம்பே, சொல்" என்று சீறுசீறு என்று சீறினாள்.

யவன மருத்துவனின் மந்த புத்திக்கும், அலீமாவின் சீற்றத்துக்குக் காரணம் மெள்ள மெள்ளப் புலனாகியதால் அவன் முகத்தில் பெரும் திகில் குடி கொண்டது. தான் பணம் வாங்கிப் படைத் தலைவனைப் பிழைக்க வைத்த விஷயம் அடுலீஸிலுள்ள யவனர்களுக்குத் தெரிந்தால், அடுத்த வினாடி அடுலீஸ் யவனர் மாளிகைச் சிறையொன்றில் தனக்கு உபசாரங்கள் பலமாக நடக்குமென்பதையும் அந்த உபசாரங்களுக்குப் பிறகு தன்னைச் சிங்கங்களுக்கு நிவேதனம் செய்து விடுவார்களென்பதையும் புரிந்துகொண்ட யவன மருத்துவன் மீண்டும் விழித்தான். அவன் திகிலை அதிகமாக விசிறிவிட முற்பட்ட இளஞ்செழியன், "அலீமா! என்னை விடுவிக்க எத்தனை பொற்காசுகள் வாங்கினாரென்பதை அறிய விரும்பினால் இதோ இருக்கும் ஹிப்பலாஸைக் கேள். மருத்துவருக்குப் பொற்கிழி வழங்கியது அவன்தான். எங்கள் நாட்டில் பொற்கிழி முக்கியமாகப் புலவர்களுக்குத்தான் வழங்குவது வழக்கம். ஹிப்பலாஸ் மருத்துவருக்குப் பொற்கிழி அளித்து ஒரு விதிவிலக்கை ஏற்படுத்தியிருக்கிறான்" என்று கூறி ஹிப்பலாஸை நோக்கி, "ஹிப்பலாஸ்! பொற்காசுகள் எத்தனையிருக்கும்?" என்றும் கேட்டான்.

யவன மருத்துவன் பலமாகச் சிக்கிக்கொண்டதை அறிந்த ஹிப்பலாஸ், "எத்தனையென்று நிச்சயமாகத் தெரியாது. பிரும்மானந்தர் கொடுத்த முடிப்பை மருத்துவரிடம் அப்படியே கொடுத்தேன். அவர்தான் காசுகளை எண்ணினார். ஆனால் அதை எண்ணியதும், 'வீரரே! உமது படைத் தலைவர் தப்பி விட்டார். இந்தக் காசுகளுக்காக யார் கட்டளையையும் மீறத் தயார். கிடக்கிறான் டைபீரியஸ்'

என்று உற்சாகத்துடன் சொன்னார் மருத்துவர்!" என ஓரிரண்டு வார்த்தைகளை அதிகமாகக் கூட்டியே சொன்னான்.

இளஞ்செழியன் சொற்களிலேயே பயத்தின் வசமாயிருந்த மருத்துவன் ஹிப்பலாஸின் சொற்களால் கிலியின் உச்சிக்குச் சென்று, "பொய் பொய். நான் அப்படி ஏதும் சொல்லவில்லை அலீமா. அத்தனையும் பொய், நம்பாதே! இருவரும் அயோக்கியர்கள்!" என்று கூவினான்.

அலீமாவின் வெறுப்பு நிறைந்த பார்வை மருத்துவன் மீது நிலைத்தது. "நீ யோக்கியனா!" என்று மரியாதையின்றி வெளிவந்த கேள்வி மருத்துவனுக்கு ரண சிகிச்சை செய்வது போலிருந்தது.

"இல்லை, நான் யோக்கியன் இல்லை. தவறு செய்து விட்டேன். மன்னித்துவிடு" என்று மன்றாடினான் மருத்துவன்.

"எத்தனை பணம் வாங்கினாய்?"

"மூவாயிரம் பொற்காசுகள்."

"அதற்காக டைபீரியஸின் கட்டளையை மீறினாய்?"

"ஆம் ஆம்."

"எதிரிக்கு உதவினாய்?"

"ஆம் ஆம்."

அலீமாவின் கேள்வி திடமாக வரவர மருத்துவன் பதில் பரிதாபமாக வந்ததன்றி, கடைசியாக மருத்துவன் தள்ளாடித் தள்ளாடி நடந்து அறையின் ஒரு மூலையில் சென்று சாய்ந்து கொண்டான். மேலும் அத்தகைய நிலைமையை நீடிக்க விடுவதால் தனக்கும் பயனில்லை என்பதை உணர்ந்த படைத் தலைவன் அலீமாவை நோக்கி, "அலீமா! மருத்துவரை வருத்துவதில் பயனில்லை. அடுத்துச் செய்ய வேண்டியதை ஆலோசிப்போம்" என்றான்.

அலீமா தன் கண்களை யவன மருத்துவனிடமிருந்து திருப்பி இளஞ்செழியனை நோக்கினாள். "இனி ஆலோசிப்பதற்கு என்ன இருக்கிறது?" என்று வினவினாள்.

"ஆலோசிப்பதற்கு என்பதைவிட தீர்மானிப்பதற்கு என்று சொல்வது பொருந்தும்" என்று கூறினான் படைத் தலைவன்.

"எதைத் தீர்மானிக்க வேண்டும்? யார் தீர்மானிக்க வேண்டும்?" என்று மீண்டும் ஒரு கேள்வியை வீசினாள் வெறுப்பும் துச்சமும் மண்டிய குரலில்.

"நீ தீர்மானிக்க வேண்டும் அலீமா! என்னையும் இந்த மருத்துவரையும் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி நீ ஒரு முடிவுக்கு வர வேண்டும்" என்று கூறிய இளஞ்செழியன் ஹிப்பலாஸை அழைத்து, "ஹிப்பலாஸ்! மருத்துவரை வெளியே அழைத்துச் சென்று காவல் புரி. நான் அழைக்கும் போது உள்ளே வரலாம்" என்று உத்தரவிட்டான். ஹிப்பலாஸ் வெளியே சென்றதும் அலீமாவைக் கையைப் பிடித்து அழைத்து வந்து மஞ்சத்தில் உட்கார வைத்து அவளெதிரில் நின்றுகொண்டு, "அலீமா! நான் உன்னைத் தொடலாமா? நான் உன் குருநாதருக்குப் பகைவனாயிருக்கலாம். ஆனால் நான் யாருக்கும் துரோகம் செய்தவனல்ல" என்றான்.

அலீமாவின் மனம் பெரும் போர்க்களமாயிருந்தது. மாறுபட்ட பல உணர்ச்சிகள் அங்கு ஒன்றையொன்று தாக்கிக் கொண்டிருந்தன. படைத் தலைவனிடம் அவளுக்கு உள்ளூர இருந்த காதல், டைபீரியஸிடம் அவளுக்கிருந்த குருபக்தி இரண்டும் பற்பல உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டதால், யார் பக்கம் சாய்வது என்பது உணர முடியாமல் திணறினாள், அவள். ஆகவே படைத் தலைவன் கேள்விக்கு அவள் பதில் ஏதும் சொல்லவில்லை. அந்த மௌனத்தைப் பயன்படுத்திக் கொண்ட படைத்தலைவன், அவள் தோளிரண்டையும் தன் கைகளால் சற்று அழுத்திப் பிடித்தான்.

அத்தனை கோபத்திலும் தாபத்திலும் அவன் கைபட்ட இடங்களில் உயிர் துள்ளி விளையாடியது அலீமாவுக்கு. அந்த உயிர்த் துடிப்பை உதறிவிடச் சிந்தனையை வேறு இடங்களில் ஓட்ட முயன்ற அவள் தோல்வியே அடைந்தாள். அப்படி யொரு ஆறுதலை அவளுக்களித்த படைத்தலைவன்,

"அலீமா! உன் இஷ்ட விரோதமாக உன்னை எதுவும் செய்யத் தூண்ட முற்படமாட்டேன். நான் சொல்வதைச் செவி கொடுத்துக் கேள். இந்தச் சமயத்தில் உன்னிடம் உண்மையைத் தவிர வேறெதையும் சொல்ல நான் விரும்பவில்லை. நான் டைபீரியஸின் விரோதிதான். ஆனால் யவனர்களின் விரோதியல்ல" என்று கூறினான்.

அலீமா பதிலேதும் சொல்லாமலே உட்கார்ந்திருந்தாள். படைத் தலைவனே தொடர்ந்து பேசினான். "உண்மைதான் அலீமா. என் வாளின்மீது ஆணையாகச் சொல்கிறேன். நான் டைபீரியஸின் விரோதியாயிருக்கலாம். ஆனால் யவனர்களின் விரோதியல்ல. என் உயிர்த் தோழர்களில், உயிர் வீரர்களில் யவனன் ஹிப்பலாஸும் ஒருவன். எனக்காக உயிரையும் விடுவான். ஏன்? நான் யவனர்கள் விரோதி என்பதற்காகவா? அல்ல அலீமா அல்ல, என் படையில் யவனர்கள் பலர் இருக்கிறார்கள். எதற்காக? சொந்த நாட்டுக்குத் துரோகம் செய்யவா? கிடையாது. சொந்த நாட்டுக்கு மதிப்பைத் தேடித் தர. தமிழகத்தின் தலைசிறந்த துறைமுக நகரம் பூம்புகாரைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய். அந்தப் பூம்புகாரைக் காத்து நிற்பதே யவனர்கள்தான். அங்கு தமிழர்கள் யவனர்களைச் சகோதரர்களாகப் பாவிக் கிறார்கள். எங்கள் இந்திர விழாவை ஒரு முறை பார்த்தால் புரிந்துகொள்வாய் அலீமா, எங்கள் நாட்டினர் பிற நாட்டினரை எத்தனை மதிப்புடன் வைத்திருக்கிறார்கள் என்பதை. இந்திர விழாவில் தமிழர்களும் யவனர்களும் கலந்து விளையாடுவார்கள். போட்டியிடுவார்கள். போட்டிகளில் தமிழர் வெற்றியடைந்தால் யவனர் கொண்டாடுவார்கள். யவனர் வெற்றியடைந்தால் தமிழர் கொண்டாடுவார்கள். பரஸ்பர மரியாதையுள்ள சமத்துவம் நிரம்பிய, பண்பாடு மிகுந்த, ஒரு அதிசய சமூகத்தை அங்கு காண்பாய். தமிழகம் உலக மக்கள் அனைவரையும் தன்னிடம் வரவேற்கிறது, நண்பர்களாக. ஆகையால் யவனரையும் வரவேற்றது. டைபீரியஸ் மட்டும் மாற்றானாக வந்தான். ஆகவே தான்

விரோதியானேன். எங்கள் நாட்டை ஆதிக்கம் கொள்ள வருபவரை நான் எப்படி வரவேற்பேன்...?"

இப்படிப் பேசிக் கொண்டுபோன படைத் தலைவன் ஒரு வினாடி பேச்சை நிறுத்தி, "அலீமா!" என்று மெள்ள அழைத்தான்.

"ஹூம்!" அந்தச் சப்தமொன்றுதான் பதிலாக வந்தது.

"டைபீரியஸிடம் உனக்குக் குருபக்தி அதிகமென்பதை கண்டேன்..."

"ஆமாம்."

"ஆனால் உன் தலைவி யவன ராணியிடம் உனக்குப் பக்தி உண்டா?"

"அதிலும் சந்தேகமா?"

"அந்த யவன ராணிக்கு எதிராக இயங்குபவனை என்ன செய்வாய்?"

"கொல்லக்கூடத் தயங்க மாட்டேன்."

"அப்படியானால் முதலில் நீ டைபீரியஸைத்தான் கொல்ல வேண்டும்."

"என்ன, குருநாதரையா?"

"ஆம் அலீமா. டைபீரியஸ் ராணியின் விரோதி. நான் சொல்வதை நீ நம்புவது கடினம். தமிழகம் வந்தால் என்னால் இதை நிரூபிக்க முடியும்."

"பொய்யையும் பொருந்தச் சொல்ல வேண்டும் படைத் தலைவரே."

"பொய் சொல்லும் பழக்கம் எனக்கில்லை அலீமா. வாளின் மேல் ஆணை வைத்த எந்த வீரனும் தமிழகத்தில் பொய் சொல்ல மாட்டான். நீ நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, டைபீரியஸ் தற்சமயம் ராணியின் விரோதி. ராணியைக் காக்கவாவது நான் தமிழகம் செல்லவேண்டும்.

தமிழகத்தில் யவன அரசை நிறுவ ராணிக்குள்ள ஆசையை நான் அங்கீகரிக்கவில்லை. ராணியின் அந்த அன்னப் பறவை ஆபரணம், ஏன் கடலைவிட அற்புதமாக ஜொலிக்கும் அந்த நீலமணிக் கண்கள்கூட, அது விஷயத்தில் என்னைத் திருப்பச் சக்தியற்றவை. மாலைக் கதிரவன் கதிர்கள் போன்ற ராணியின் பொன்னிறக் கொண்டைகூட அந்த ஆசையை அங்கீகரிக்க என்னைத் தூண்டா. ஆனால் டைபீரியஸிடம் ராணி அடிமையாக மட்டும் நான் அனுமதிக்க மாட்டேன். யவன மக்கள் யார் கண்டாலும் வணங்கவேண்டிய யவன ராணி அவனிடம் தற்சமயம் சிறைப்பட்டிருப்பாள் என்பது நிச்சயம். அவளைச் சிறை மீட்பது என் கடமை. ராணிக்கு ஏற்பட்ட இத்தனை துன்பத்துக்கும் காரணம்..." என்று மேலே சொல்லப்போன இளஞ்செழியன் சட்டென்று பேச்சை நிறுத்திக் கொண்டான்.

ராணியின் நீல மணிக் கண்களையும் பொன்னிறக் கொண்டையையும் பற்றிப் பிரஸ்தாபித்த சமயத்தில், படைத் தலைவன் கண்கள் எங்கோ சொர்க்கலோகத்துக்குச் சென்று கொண்டிருந்ததைக் கண்ட அலீமா காரணத்தைப் புரிந்து கொண்டாள். 'இவர் ராணியைத் தனக்குத் தெரியுமென்று கானாவில் ஏன் என்னிடம் சொல்லவில்லை? ராணியின் காதலர் இவர் என்றறிந்தால் நான் பொறாமை கொள்வேனென்று நினைத்தாரா?' என்று நினைத்த அலீமா உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள். 'என் ராணிக்கு நான் எதையும் விட்டுக் கொடுப்பேனே. பைத்தியக்கார மனிதர்! அப்பொழுதே நினைத்தேன், இவர் இதயத்தில் வேறொரு பெண் உறைகிறாளென்று. ஆனால் அவள் என் ராணியென்று தெரியாமல் போய்விட்டதே. ராணிக்காக நான் எதைத்தான் செய்யமாட்டேன்? ஆனால் குருநாதன் எப்படி ராணிக்கு விரோதியானார்? ஏதும் புரியவில்லையே' என்று ஏதேதோ நினைத்த அலீமா கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து, 'இதற்கெல்லாம் விடை கிடைக்கும் இடம் தமிழகம்தான். அங்கு செல்லவேண்டுமானால் படைத் தலைவனுக்கு உதவ

வேண்டும்' என்று முடிவு செய்தவளாய், "படைத் தலைவரே! மருத்துவரை உள்ளே அழையுங்கள்" என்றாள்.

படைத் தலைவன் அழைக்க, ஹிப்பலாஸைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த யவன மருத்துவனை நோக்கிய அலீமா "மருத்தவரே! நீர் செய்திருக்கும் துரோகம் பெரிது! ஆனால் தற்சமயம் உமது குற்றத்தை மறைக்க ஒப்புக் கொள்கிறேன், நீர் ஒழுங்காக நடந்து கொள்ளும் பட்சத்தில்" என்றாள் ஏதோ பணியாளை நோக்கி உத்தரவிடும் அரசி போல.

"எதை வேண்டுமானாலும் சொல் அலீமா! செய்கிறேன்" என்றான் யவன மருத்துவன்.

"நான் தமிழகம் சென்று அங்கு என் தலைவியைக் கண்ட பிறகுதான் இவரை என்ன செய்வதென்று முடிவு செய்ய வேண்டும், தமிழகம் செல்ல நல்ல மாலுமிகளும் பணமும் தேவை. அடுலீஸில் பணம் பெற ரதப் போட்டி ஒன்றுதான் வழி. ரதப் போட்டிக்கு உதவக் கூடியவர் இளவரசர் அக்கிலீஸ் ஒருவர்தான். அவரிடம் படைத் தலைவரை அறிமுகப்படுத்து. நானும் சொல்கிறேன்" என்றாள் அலீமா.

பிரமித்து நின்றான் மருத்துவன். இப்படித் திடீரென அலீமாவை மாற்றிவிடக்கூடிய சக்தி படைத் தலைவனுக்கு எங்கிருந்து வந்தது என்று புரியவில்லை மருத்துவனுக்கு. பிறகு, 'என்ன இருந்தாலும் இவள் பெண். படைத்தலைவனோ பார்வைக்கு நன்றாயிருக்கிறான். இந்த இணைப்பை உடைக்கக் குருபக்தி, நாட்டுப் பற்று எதனால்தான் சாத்தியம்?' என்று தனக்குள்ளேயே எண்ணிப் புன்முறுவல் கொண்டான்.

"இது நகைக்க வேண்டிய விஷயமல்ல" என்றாள் அலீமா.

"இல்லை" என்று மருத்துவனும் புன்சிரிப்பை அகற்றினான்.

"இளவரசர் வந்ததும் இங்கு வாருங்கள்" என்றாள் அலீமா.

இம்முறை அவள் வார்த்தையில் சற்று மரியாதை இருந்ததால் தன் தலை தப்பியது என்பதைப் புரிந்து கொண்ட மருத்துவன், அவளிஷ்டப்படி நடப்பதாக ஒப்புக் கொண்டு விடைபெற்றுச் சென்றான். அன்றிலிருந்து சரியாக நான்காவது நாள் யவன நாட்டு இளவரசனான அக்கிலீஸுக்கு இளஞ்செழியனை மருத்துவனும் அலீமாவும் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அவர்கள் சந்திப்பு அடுலீஸ் நகரத்தின் வெளிப் புறத்திலிருந்த யவன நாட்டுப் பெரும் அரண்மனையில் நடைபெற்றது. அக்கிலீஸைக் கண்ட இளஞ்செழியன் மலைத்து நின்றான். 'இது அக்கிலீஸா! அல்லது ஆண் வேடம் பூண்ட யவன ராணியா!' என்று எண்ணி, அந்த அக்கிலீஸின் சாயலிலும் நீலமணிக் கண்களிலும் இதயத்தைப் பறி கொடுத்து, வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டு சிலையென நின்ற படைத்தலைவனைக் கையைப் பிடித்துச் சொந்தமாக அழைத்துக்கொண்டு தன் அறைக்குள் சென்ற அக்கிலீஸ், "தாங்கள் தமிழகத்திலிருந்து கிளம்பி நாளாகிறதோ?" என்று வினவினான்.

"ஆம்" என்று பதில் சொன்னான் படைத் தலைவன். அடுத்தபடி தொடர்ந்த சம்பாஷணை மட்டுமின்றி, அடுத்த சில நாட்களில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளும், படைத் தலைவனுக்கு நல்ல நாட்கள் விளைய முற்பட்டுவிட்டதைச் சந்தேகமற நிரூபித்துவிட்டன.

80. மருத்துவன் சதி

யவன இளவரசர்களில் ஒருவனான அக்கிலீஸினால் அன்புடன் வரவேற்கப்பட்டு யவன அரசர் மாளிகையின் அந்தரங்க அறை ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளஞ் செழியன், அந்தப் பெருமாளிகையின் அமைப்பையும் அதிலிருந்த பலதரப்பட்ட பொருள்களையும் பார்த்துப் பெரிதும் பிரமிப்படைந்ததன்றி, யவனர்களின் கரம்

உலகத்தில் எந்தெந்தக் கோடிகளுக்கெல்லாம் நீண்டிருக்கிறதென்பதையும் நினைத்து நினைத்து விவரிக்க இயலாத வியப்புக்கும் உள்ளானான். அடுலீஸ் கடற்கரையிலிருந்து நகரத்துக்குள் புகுந்ததும், சுமார் பதினைந்து ஸ்டேடியா தூரத்தில் தலைகாட்டிய அந்தப் பெரிய அரண்மனையின் சிகரங்கள், அடுலீஸின் எல்லா மாளிகைகளையும் விட அதிக உயரமாகக் காட்சியளித்ததன்றி, மாளிகையின் உட்புற விஸ்தீரணமும் தோட்டங்களும் நீண்ட புல்வெளிகளும் மன்னர் குடும்பத்தாரை மட்டுமின்றி, சாதாரண சிறு படையொன்றையும் பந்தோபஸ்துக்கு வைத்துக் கொள்ளக் கூடிய பெரும் நிலப்பரப்பைக் காட்டின. பெரும் புல்வெளிகளில் பல வர்ணப் புரவிக் குட்டிகள் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருந்ததை இளவரசனின் அந்தரங்க அறையிலிருந்தே கவனித்த இளஞ்செழியன் கரங்கள் அந்தப் புரவிக் குட்டிகளைப் பிடித்து அணைக்கத் துடித்தன. மாளிகையில் முன்கூடத்தில் போலவே இளவரசனின் அந்தரங்க அறைக்குள்ளும் தமிழகத்தின் விலையுயர்ந்த வாட்களும் கேடயங்களும் சுவர்களில் மாட்டப்பட்டிருந்ததோடு, தமிழகத்துக்கும் அப்பால் தூரக் கிழக்கிலிருந்த சோனகர் நாட்டுச் சித்திர வேலைப்பாடுள்ள வெள்ளை மட்பாண்டங்களும் அழகுக்காக ஆங்காங்கு வரிசையாக வைக்கப்பட்டிருந்ததைக் கண்ட இளஞ்செழியன், 'கிழக்கு நாடுகளின் இந்தச் செல்வங்களைப் பார்த்துத்தான் யவனர்கள் அந்த நாடுகளைக் கைக்கொள்ள ஆசைப்படுகின்றனர்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, தன்னை உற்றுப் பார்த்த வண்ணம் ஏதும் பேசாமல் நின்றுகொண்டிருந்த யவன இளவரசனான அக்கிலீஸின்மீது மீண்டுமொருமுறை தன் கண்களை ஓட்டினான்.

யவனர் இளவரசனான அக்கிலீஸ் அசல் யவன ராணியின் பிரதிபிம்பமாக விளங்கினான். அந்த ஆண் மகனுடைய நீலமணிக் கண்கள் அவன் வீரன் என்பதைச் சந்தேகமற நிரூபித்தனவானாலும், அத்தனை வீரத்திலும் ராணியின் கண்களில் சதா விளையாடிய அந்த மயக்கமும் கலந்து

தெரிந்தது. ஆண்மகன் என்ற காரணத்தால் அக்கிலீஸின் தலை மயிர் வெட்டப்பட்டிருந்ததால், ராணியின் கொண்டையைப் போல் அவை சுருட்டிக் கட்டப்படாமல் வார்வாராக அவன் தோள்களில் உராய்ந்தனவானாலும், அவற்றின் நிறம் ராணியின் குழல் நிறத்தைப்போலவே அசல் பொற்கம்பிகள் போல் காட்சியளித்தன. யவன அரச குமாரன் நடையில் கம்பீரம் இருந்தது. அந்த கம்பீரத்திலும் ராணியின் ஒய்யார நடைச்சாயல் கலந்தே தெரிந்தது. ராணிக்கும் அக்கிலீஸுக்கும் ஒரே ஒரு முக்கிய வித்தியாசம் மட்டுமே இருந்தது. ராணியைவிட அக்கிலீஸ் சற்று உயரம். ஆனால் இளவரசன் சரீரம் சற்று புஷ்டியின்றி மெல்லியதாயிருந்த படியால் அந்த உயரம் சற்று அசாத்திய உயரமாகப் பார்வைக்குத் தெரிந்தது.

இளஞ்செழியன் இப்படித் தன்னை உற்றுப் பார்ப்பதை கண்டு அழகிய தன் இதழ்களில் புன்முறுவலைத் தவழ விட்ட அக்கிலீஸ், அரசர்கள் உட்காருவதற்காக அந்த அறையின் நடுவில் போடப்பட்டிருந்த பெரும் ஆசனத்தில் அமர்ந்து, எதிரேயிருந்த மற்றொரு ஆசனத்தைப் படைத் தலைவனுக்குக் காட்டி, "உட்காருங்கள், உட்கார்ந்து கொண்டே என்னை ஆராயலாம்" என்று கூறினான்.

தான் அளவுக்கு மீறி அநாகரீகமாக இளவரசனை அக்கு அக்காக அலசியதை நினைத்துச் சற்று வெட்கமும் கொண்ட இளஞ்செழியன், "இளவரசர் மன்னிக்க வேண்டும். திடீரென ஏற்பட்ட பிரமிப்பு என்னை அப்படிப் பார்க்க வைத்து விட்டது" என்று கூறி, மன்னிப்பைக்கோரும் முறையில் தலையும் தாழ்த்தினானே தவிர, உட்காராமலே சம்பாஷணையை மேற்கொண்டும் தொடர முற்பட்டு, "இளவரசர்..." என்று ஏதோ சொல்லத் தொடங்கினான்.

இளஞ்செழியனை மேலே பேச அனுமதிக்காத அக்கிலீஸ், "முதலில் உட்காருங்கள். பிறகு பேசுவோம்" என்றான்.

"இளவரசருக்கு முன்பு நான் அமருவது உசிதமாயிருக்காது. தவிர, தாங்களும் நானும் நீண்ட நேரம் பேச வேண்டு

மானால் சம்பாஷணையை மொழிபெயர்க்க அலீமாவாவது வேண்டும். மூன்றாம் பேர்வழி முன்பாகச் சாதாரண மனிதனான நான் தங்களுக்கு எதிரில் அமருவது தவறு. தாங்கள் அதற்கு இடம் கொடுத்தாலும் நான் ஒப்பமாட்டேன்" என்று இளஞ்செழியன் பதில் சொன்னான்.

"உங்கள் நாட்டுமொழி எனக்கு நன்றாகத் தெரியும். என் சகோதரி ஒருத்திக்கு நாங்கள் தமிழ் கற்பித்தோம். அப்போது நானும் பலமுறை கூட இருந்திருக்கிறேன். அதுமட்டுமா? பாடம் கேட்கும் சமயங்களைத் தவிர என் சகோதரி என்னிடம் தமிழில்தான் பேசிப்பேசிப் பிராணனை வாங்குவாள். அவளைப்பற்றி உங்களுக்குத் தெரிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். விஷமத்துக்குப் பெயர் போனவள்" என்று தமிழ் தனக்கு நன்றாகத் தெரிந்த காரணத்தை விளக்கியதோடு தன் சகோதரியிடம் தனக்குள்ள அன்பையும் விளக்கினான் அக்கிலீஸ்.

இளஞ்செழியன் இதழ்களில் புன்முறுவல் ஓடியது. "தங்கள் சகோதரி மிகவும் திறமை வாய்ந்தவர்கள்தான். இல்லாவிடில் தொலைதூரமுள்ள தமிழகம் வருவார்களா?" என்றொரு வெடியைத் திடீரென வீசினான் இளவரசனை நோக்கி.

இதைக் கேட்டதும் யவனர்களின் இளவரசன் ஆசனத்திலிருந்து துள்ளியெழுந்தது மட்டுமின்றிக் கண்களில் ஆச்சரியம் பொங்க வினவினான். "என்ன? என்ன? என் சகோதரியைத் தெரியுமா உங்களுக்கு?" என்று.

அந்தச் சமயத்தில் எதிரேயில்லாது போனாலும் சிந்தையில் சதா சுழன்று கொண்டிருந்த ராணியை நினைத்து மரியாதைக்கு அறிகுறியாக சிரம் தாழ்த்திய படைத் தலைவன், "யவன ராணியை அறியாதவர்கள் புகாரில் யாருமே கிடையாது. அவர்கள் அழகு மக்களை ஆட்கொண்டது. அவர்கள் கம்பீரம் வீரர்களைப் பணியச் செய்தது" என்றான்.

"நீங்களும் பூம்புகாரின் வாசியா?" என்று மீண்டும் ஒரு கேள்வியை வீசினான் யவனர் இளவரசன், குரலில்

ஆச்சரியமும் பூரா விவரத்தையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற வேட்கையும் கலந்து விளையாட.

"ஆமாம்" என்று சாவதானமாகப் பதில் சொன்னான் படைத் தலைவன்.

"பூம்புகாரில் உங்கள் தொழில்?"

"படையில் சேவை புரிபவன்."

"போர் வீரரா?"

"ஆம்."

இதைக் கேட்டதும் யவனராஜகுமாரன் சில வினாடிகள் மௌனம் சாதித்தான். பிறகு அறையில் இங்கும் அங்கும் உலாவ முற்பட்டவன் திடீரென நின்று இளஞ்செழியனை நோக்கி, "எந்தப் படையில் பணி புரிகிறீர்கள்?" என்று வினவினான்.

இந்தத் திடீர் கேள்வியால் இளஞ்செழியன் அசந்து விடுவானென்றோ எதையாவது உளறிக் கொட்டிவிடுவான் என்றோ யவன இளவரசன் எதிர்பார்த்திருந்ததால் ஏமாந்தே போனான். எவ்விதத் தாமதமும் இல்லாத குரலில் பதில் சொன்னான் படைத் தலைவன், "டைபீரியஸின் படையில்" என்று.

பதில் யவனர் இளவரசனைத்தான் அயர வைத்தது. "டைபீரியஸை உங்களுக்குத் தெரியுமா?" என்று சற்று தடுமாற்றமுள்ள குரலில் இளவரசன் கேட்டதைக் கவனித்த இளஞ்செழியன், சற்று எச்சரிக்கையடைந்து மிகுந்த ஜாக்கிரதையுடன் இளவரசனின் அடுத்த கேள்விகளுக்குப் பதில்களை அமைத்துக்கொண்டான். ஆகவே முதல் கேள்விக்கு, "டைபீரியஸை நன்றாகத் தெரியும். என் படைத் தலைவரல்லவா அவர்?" என்றான் படைத் தலைவன்.

"டைபீரியஸ் படையா திரட்டியிருக்கிறான்? எதற்குப் படை?" என்று ஏதும் அறியாததுபோல் கேட்டான் யவன அரசகுமாரன்.

"புகாரைக் காக்கப் படைத்தலைவன் வேண்டுமல்லவா?" என்றான் படைத் தலைவன்.

"புகாரை டைபீரியஸ் காப்பானேன்? அந்த நாட்டு மன்னர்கள் இல்லையா?"

"புகார் சோழ நாட்டின் தலைநகரம் இளவரசே! அந்த நாட்டு மன்னன் ஒரு வஞ்சகனால் கொல்லப்பட்டதாலும், அதன் விளைவாக ஏற்பட்ட உள்நாட்டுச் சண்டையாலும் நாட்டு எல்லையிலுள்ள துறைமுக நகரமான புகார் காப்பாரின்றித் தத்தளித்து. அந்தச் சமயத்தில்தான் டைபீரியஸும் யவன ராணியும் தங்கள் கப்பல் தீக்கிரையாகித் தெய்வாதீனமாகத் தப்பி, புகார் சேர்ந்தார்கள். தெய்வம்தான் டைபீரியஸைப் புகாரில் சேர்ப்பித்திருக்க வேண்டும். அவர் வரவால் புகார் திடப்பட்டது. டைபீரியஸைக் கண்டதுமே யவனர்கள் அவருக்கு அடிமையாகிவிட்டார்கள். புகாரை ஏற்கெனவே காத்து நின்றவர்கள் யவனர்கள்தான். டைபீரியஸ் வந்ததும் அவர்களுக்கு ஒரு நிகரற்ற தலைவரும் கிடைத்துவிட்டார். இப்படி யவனர் பலம் புகாரில் ஓங்கவே புகார் மட்டும் உள் நாட்டுச் சண்டையில் சிக்கவில்லை. சோழ அரசைப் பறித்த வஞ்சகன் கையிலும் அது அகப்படவில்லை'' என்று உண்மையை அரையும் குறையுமாகத் திரித்துக் கூறினான் படைத் தலைவன்.

"இப்பொழுது புகார் யார் வசமிருக்கிறது?" என்று இளவரசன் கேட்டான்.

"நான் நாட்டைவிட்டுப் புறப்படும்போது யவனர் கைகளில் இருந்தது. ராணிக்குப் புகாரில் முடி சூட்டுவதாகக் கூட ஒரு வதந்தி கிளம்பியது. இப்பொழுது நிலைமை என்னவோ தெரியாது."

"நீங்கள் யவன நாடு புறப்படக் காரணம்?"

"நானாகப் புறப்படவில்லை."

"யார் அனுப்பி வைத்தார்கள்?"

"அது ஒரு பெரும் கதை இளவரசே!" என்று கூறிய இளஞ்செழியன் சற்றுப் பெருமூச்செறிந்தான். அத்துடன் ஏதோ தன்னைத்தேற்றிக்கொண்டு பேசுவதுபோல் நடித்து, "நான் டைபீரியஸின் படையில் சேர்ந்துகொண்டது பற்றிப்

புகாரிலுள்ள தமிழர்கள் பலர் வெகுண்டார்கள். என்னைக் கொல்லவும் முயன்றார்கள். ஆனால் என்னைக் கொன்றால் டைபீரியஸ் என்ன செய்வாரோ என்று பயந்து இரவில் நான் தூங்கிக்கொண்டிருக்கையில் என்னைத் தூக்கிச் சென்று மேற்றிசை அடிமை வர்த்தகர்களிடம் விற்றார்கள். அடிமை வர்த்தகர்களின் மரக்கலம் கொள்ளைக்காரர்களிடம் பிடிபட்டது. ஆகவே நான் கொள்ளைக்காரரை ஏமாற்றி இலி-ஆஸுவிடம் அவர்களை ஒப்படைத்தேன். அங்குதான் அலீமாவைச் சந்தித்தேன்..." என்று சொல்லிக் கொண்டு போனவனை இடைமறித்த அக்கிலீஸ், "மீதி விவரங்களை அலீமா சொன்னாள். உங்களை ஏதோ படைத் தலைவர் என்று கூறினாளே அவள்?'' என்று சந்தேகத்துடன் வினவினான்.

"நான் காட்டிய பக்திக்குப் பரிசாக டைபீரியஸ் எனக்கு ஒரு உபதலைவன் பதவியை அளித்தார்" என்றான் இளஞ் செழியன்.

"டைபீரியஸின் போக்கு விசித்திரமாயிருக்கிறது. ஒரு உப தலைவனை விஷம் வைத்துக் கொல்கிறான். இன்னொருவனை உபதலைவனாக்குகிறான்" என்ற யவன ராஜகுமாரன் பேச்சில் சந்தேகத்தின் சாயை தலை காட்டியது.

அதை உடைக்கச் சற்றுக் குதூகலத்துடன் சொன்னான் இளஞ்செழியன், "அதுதானே ராஜதந்திரம்?" என்று.

"எது?"

"துணை நிற்பவனுக்குப் பதவியும் எதிர்ப்பவனுக்கு நற்கதியும் அளிப்பது."

இதைக் கேட்ட யவன ராஜகுமாரன் இரைந்து நகைத்து விட்டு, "நீங்கள் நன்றாகப் பேசுகிறீர்கள். ஆனால் நீங்கள் நம்பத் தகுந்தவர்தானா என்று மட்டும் எனக்குப் புரியவில்லை" என்றான்.

"ஏன் அந்தச் சந்தேகம் தங்களுக்கு?"

"யவனர்களிடம் சேர்ந்து நீர் சொந்த நாட்டுக்குத் துரோகியாகவில்லையா?"

"என் உயிர் போனாலும் சொந்த நாட்டுக்குத் துரோகம் செய்யமாட்டேன். என்னைப் புகாரில் சந்தித்த யவன மருத்துவரை வேண்டுமானாலும் கேளுங்கள்."

"பின் எதற்காக யவனர் படையில் சேர்ந்தீர்?" யவன ராஜகுமாரன் கேள்வியில் கடுமையும் வெறுப்பும் மண்டிக் கிடந்தது.

"நாட்டு நன்மையை முன்னிட்டு." உறுதியுடன் வெளி வந்தது இளஞ்செழியன் பதில்.

"பிற நாட்டான் படையில் சேவை செய்வது நாட்டு நன்மையை முன்னிட்டா?" இகழ்ச்சியும் கோபமும் இழைந்த குரலில் கேட்டான் யவன ராஜகுமாரன்.

இளஞ்செழியன் தன் கூரிய விழிகளை யவன ராஜ குமாரனுடைய நீலமணிக் கண்களுடன் தைரியத்துடன் கலக்க விட்டான். ஒரு வினாடி அந்தப் பார்வையாலேயே ராஜகுமாரனைச் சலனமடையச் செய்து, உறுதி நிரம்பிய குரலில் பேசவும் முற்பட்டு, "இளவரசே! அரசியல் சிக்கல் என்பது சுலபமாகப் பிரிக்கக் கூடியதல்ல. பல வேளைகளில் அறிவுக்குப் பொருத்தமாக நடந்து கொள்வதுகூட நாட்டை அபாய நிலையில் இழுக்கும். குருட்டுத்தனமான நாட்டுப் பக்தி மட்டும் பலன் தராத சமயங்களும் வரலாற்றில் உண்டு. நீண்ட கால சுதந்திரத்தை முன்னிட்டு இடைக்கால ஆதிக்கத்தை அனுமதித்த ராஜதந்திரிகள் உண்டு. டைபீரியஸ் தமிழகம் வந்தபோது தமிழகம் இருங்கோவேள் என்ற வஞ்சகன் கையிலும், அவனுக்குத் துணை நின்ற சேர, பாண்டிய மன்னர்கள் கைகளிலும் சிக்கி நின்றது. சோழ அரியணையின் உண்மை மன்னன் மறைந்து உறைந்த காலம் அது. பூம்புகார் செல்வம் நிரம்பிய துறைமுக நகரம். அது மாற்றார் கையில் விழுந்தால், பிறகு சோழநாடு சோழர் கைகளில் சிக்குவது பகற்கனவாக முடியும். ஆகவே சோழ நாட்டின் வாயில் போன்ற புகாரைப் பாதுகாக்க, இடைக் காலத்துக்கு மட்டுமாவது பலமான ஒரு கரம் தேவையா யிருந்தது. சமயத்தில் டைபீரியஸ் வந்தார். நாட்டுப்பற்றுடைய

பலர் அவருடன் சேர்ந்தோம்..." என்று கூறிக் கொண்டே போன இளஞ்செழியனை இடைமறித்த யவன ராஜகுமாரன், "மறைந்துறையும் உங்கள் உண்மை மன்னன் படை திரட்டி வெளிவந்தால்?" என்று வினவினான்.

"சொல்கிறேன் இளவரசே. ஆனால் உண்மையைச் சகிக்க முடியுமா உங்களால்?" என்று கேட்டான் படைத் தலைவன்.

"முடியும் சொல்லுங்கள்."

"டைபீரியஸுக்கு எதிராகத் திரும்பி, புகாரை யவனர் பிடியிலிருந்து விடுவித்திருப்போம்."

இதைக் கேட்ட யவன ராஜகுமாரன் இரண்டே அடியில் இளஞ்செழியனை அடைந்து, அவனது இரு கைகளையும் ஆதரவாகப் பிடித்துக்கொண்டு, "நாட்டுப் பற்றுடையவன் பேசும் முறையில் பேசினீர்கள். அதற்காக உங்களை மதிக்கிறேன். ஆமாம், உங்கள் பெயர்...?" என்று கேட்டான்.

"ஏன், அலீமாவோ மருத்துவனோ கூறவில்லையா?"

"இல்லை. இன்றுதானே நான் வந்தேன்-எங்கள் நாட்டிலிருந்து."

இதைக்கேட்ட இளஞ்செழியன் பல விஷயங்களை உறுதிப்படுத்திக் கொண்டான். மருத்துவனோ அலீமாவோ தன்னைப் பற்றி அதிகம் ஏதும் கூறவில்லையென்பது ஒன்று. மருத்துவன் வந்த கப்பல் அடுலீஸை அடைந்ததற்கும் தான் அடுலீஸை அடைவதற்கும் பல நாட்கள் வித்தியாசமிருந்த போதிலும் தமிழ் நாட்டிலிருந்து வேறு கப்பல்கள் வர நாளாகவில்லையென்பது இரண்டு. ஆகவே யவன இளவரசனுக்குத் தன்னைப் பற்றியோ தமிழகத்தைப் பற்றியோ முழுத்தகவல் அதுவரை கிடைக்க நியாயமில்லையென்பது மூன்று. இப்படி அலசிப் பார்த்து முடிவுக்கு வந்த படைத் தலைவன், பல காரணங்களை முன்னிட்டுத் தன் பெயரை மாற்றி, "என் பெயர் அமரன்" என்றான்.

"அமரன் என்றால் தேவபுருஷன் என்றல்லவா பொருள்?" என்று சொல்லி நகைத்த யவன ராஜகுமாரன், "தமிழக வீரரே! நீங்கள் தமிழகம் திரும்ப உதவி கேட்பதாக யவன மருத்துவர் கூறினார். அதற்குப் பொருள் பெற அடுலீஸில் வழி ஒன்றுதான். ரதப்போட்டியில் வெற்றி பெற வேண்டும்" என்றான்.

"அலீமா, மருத்துவர் இருவருமே இதைத்தான் கூறினார்கள்" என்றான் இளஞ்செழியன்.

"ரதம் விடுவதில் வல்லவரா நீங்கள்? இங்கு புரவிகளை வாயு வேகத்தில் செலுத்தக் கூடியவர்கள் இருக்கிறார்களே?" என்றான் யவன ராஜகுமாரன்.

"மனோ வேகத்தில் செலுத்த என்னால் முடியும்" என்றான் இளஞ்செழியன்.

"நாளை முதல் பயிற்சி ஆரம்பிப்போம். இன்னும் ரதப் போட்டிக்கு நாட்கள் பத்து இருக்கின்றன. அதுவரை நீங்கள் இந்த மாளிகையிலேயே தங்கலாம்'' என்றான் யவன ராஜகுமாரன்.

அடுத்த நாள் முதல் இளஞ்செழியனுக்கு அந்த மாளிகையில் அரச உபசாரம் நடந்தது. அன்றிரவே அலீமாவையும் யவன மருத்துவனையும் தனது அறைக்கு அழைத்த இளஞ்செழியன், தனக்கும் யவன ராஜகுமாரனுக்கும் நடந்த சம்பாஷணையை விளக்கினான். தான் மாற்றுப்பெயர் கொண்டிருப்பதை மறக்காதிருக்கும்படியும் தன் உண்மைப் பெயரைச் சொல்லி அழைக்காதிருக்கும்படியும் எச்சரித்தான். அவன் செய்த எச்சரிக்கையை அனுசரித்து அலீமாவும் யவன மருத்துவனும் நடந்துகொண்டபடியாலும், மருத்துவன் மரக்கலம் வந்த பிறகு வேறு யவன மரக்கலங்கள் எதுவுமே தமிழகத்திலிருந்து வராததாலும், வந்த யவன மருத்துவன் மரக்கலத்தலைவனுக்கும் இளஞ்செழியனைப் பற்றிய விவரங்களை டைபீரியஸ் கூறாததாலும் இளஞ்செழியனைப் பற்றிய முழு உண்மை யவன ராஜகுமாரனுக்குத் தெரிய சந்தர்ப்பமே யில்லாது போயிற்று. தவிர, குதிரைகளிடம்

உயிரை வைத்திருந்த அக்கிலீஸ், தமிழகத்தின் 'அமரன்' அவற்றைப்பற்றிக் காட்டிய அறிவைக் கண்டு பெரிதும் வியந்ததன்றி, அது காரணமாகவே அவனிடம் இணையற்ற மதிப்பையும் கொண்டான். குதிரைச் சாலையில் புரவிகளை நோக்கிக் கண்களை ஓட்டிய இளஞ்செழியன், பார்ப்பதற்குத் திடமாயிருந்த புரவிகளை விலக்கி இளைத்தவை போலிருந்த இரண்டு வெண் புரவிகளைத் தனக்குத் தேர்ந்தெடுத்ததைக் கண்டதும் பிரமித்துப்போன இளவரசன், "இவற்றை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?" என்று வினவினான்.

"இவற்றின் உடல்களில் வளைவுகள் நிரம்ப இருக்கின்றன. கால் நரம்புகள் அனாவசியச் சதைகளால் கொழுப்புக் கொள்ளவில்லை. தவிர நடு முகத்திலிருக்கும் சுழிகள் புரவிகள் அதி உன்னத அரபுச் சாதி என்பதை நிரூபிக்கின்றன" என்று சுட்டிக் காட்டினான் படைத் தலைவன்.

இதைக் கேட்ட யவன ராஜகுமாரன் அன்றுமுதல் சதா சர்வகாலமும் இளஞ்செழியனுடனேயே இருந்து வந்தான். அரண்மனைத் தோட்டத்திலேயே இருவரும் ரதங்களில் புரவிகளைப் பிணைத்து ஓட்டிப் பழகினார்கள். நாலைந்து நாட்களுக்குள்ளாகவே இணைபிரியாச் சகோதரர்களாகி விட்ட அந்த இருவரையும் கண்ட அரண்மனை ஊழியர்கள் அனைவரும் வியப்பில் மூழ்கினார்கள். எங்கிருந்தோ வந்த ஒரு தமிழன் இத்தனை தூரம் தங்கள் இளவரசனை மயக்கமுடியுமென்று அவர்கள் யாருமே எதிர்பார்க்கவில்லை. அப்படி ஊறிவிட்ட நேசத்தின் விளைவாக இளவரசனுக்குக் கிடைத்த ராஜோபசாரம் இளஞ்செழியனுக்கும் கிடைத்தது.

ஆனால் அத்தனை உபசாரத்தினாலும் இளஞ்செழியன் மனம் மட்டும் வேதனையில் ஆழ்ந்து கிடந்தது. தாய்நாடு எந்தக் கதிக்கு உள்ளாகியிருக்கிறதோ என்ற நினைப்பினால், அவன் சரியாக உணவருந்தவோ உறங்கவோ முடியாமல் புழுவென இரவும் பகலும் உள்ளூரத் துடித்துக் கொண்டிருந்தான்.

ரதப் போட்டி தினத்துக்கு நாலைந்து நாட்களுக்கு முன்பாகவே அடுலீஸ் அமளிப்பட்டது. அதன் பெருவீதி

களில் பலதரப்பட்ட உடைகளை அணிந்த ரோமரும், கிரேக்கரும், அராபியரும், எகிப்தியரும், எதியோப்பியரும் தங்கள் பெருரதங்களை வாயுவேகத்தில் ஓட்டி வீதிகளையே போட்டி அரங்கமாக்கிக் கொண்டிருந்தார்கள். போட்டி ஏற்படுவதற்கு நாலைந்து தினங்களுக்கு முன்பாக அடுலீஸ் நகரம் ஜனநெரிசலாலும் பந்தயம் கட்டும் வர்த்தகர் கூட்டத்தாலும் தத்தளித்தது. அத்தனை தத்தளிப்பிலும் எங்கும் ஆரவாரமும் வீரகோஷங்களும் பந்தயம் யார்மீது கட்டுவதென்பதைப் பற்றிய போட்டிக் கூச்சலும் நகரத்தை நிறைத்துக் கொண்டிருந்தன.

அந்தக் கோலாகலத்தில் யவன ராஜகுமாரன் மாளிகையும் பங்கு கொண்டது. பந்தயப் பேச்சு அன்றி வேறு பேச்சு எதுவுமே காதில் விழாத அந்த இரவுகளில், பந்தயத்துக்கு முந்திய நாளிரவு இளஞ்செழியன் செவிகளில் மட்டும் வேறு பேச்சு விழுந்தது. அந்தப் பேச்சுமட்டும் அவன் காதில் விழாதிருந்தால் அவன் கதையின் போக்கு மட்டுமல்ல, அவனுடன் சம்பந்தப்பட்ட மற்ற பலருடைய கதைகளும் வேறு திசையில் திரும்பியிருக்கும். அந்த முந்திய நாளிரவு தூக்கம் அடியோடு வராமையால், இளஞ்செழியன் மாளிகையின் நந்தவனத்தில் மெல்ல நடந்து சென்று கொண்டிருக்கையில் யாரோ இருவர் பின்னால் வரும் சத்தம் கேட்கவே, சட்டென்று பக்கத்திலிருந்த புரவிக்கூடத்தின் தூணொன்றில் மறைந்து நின்றான். பின்னால் வந்தவர்களும் புரவிக் கூடத்துக்குள்தான் நுழைந்தார்கள். நுழைந்ததும் பேசவும் முற்பட்டார்கள். ஒருவன் குரல் இளஞ்செழியனுக்குப் பழக்கமானதாக இல்லையெனினும், இன்னொருவன் குரல் யவன மருத்துவன் குரலெனத் திட்டமாகத் தெரிந்தது. யவன மருத்துவன் கூறிய சில வார்த்தைகளிலிருந்து அவன் எத்தகைய சதியைச் செய்துவிட்டானென்பதை அறிந்த இளஞ்செழியன் இதயம், அலைகடலென எழுந்து மோதி அவன் உள்ளத்தே பெரும் கிளர்ச்சியை எழுப்பி அவன் உணர்ச்சிகளைப் பலதிசைகளில் புரட்டத் தொடங்கியது. ஒரு சிறு

காரியத்தால் தான் தமிழகம் செல்வதை அடியோடு ஒழித்ததன்றி, தன்னை யவனராஜகுமாரனின் பழிக்கும் ஆளாக்க யவன மருத்துவன் ஏற்பாடு செய்துவிட்டதை அறிந்த இளஞ்செழியன் நிதானம் காற்றில் பறந்ததன்றி கோபமும் தலைக்கேறியது. "புரவியின் இடதுகாலில் பச்சிலையைத் தடவியிருக்கிறேன். முதலில் நொண்டாது. பந்தயத்தின் இரண்டாவது சுற்றில் சற்று நொண்டும். மூன்றாவது சுற்றில் கால் இருமுறை மக்களித்து, சரேலென்று விழுந்துவிடும். அத்துடன் இந்தத் தமிழன் வாழ்வும் முடிந்துவிடும். சந்தேகமே வேண்டாம். பந்தயத்தில் தோற்றதற்காகவும், சப்பை குதிரைகளைப் பொறுக்கியதற்காகவும் இளவரசர் தமிழனைச் சிங்கங்களுக்குத் தீனியாகப் போடுவார்...அவன் தசைகளைச் சிங்கங்கள் கிழித்துப் புசித்து எலும்புகளையும் நரநரவெனக் கடிக்கும் காட்சியை நாமிருவரும் காணப் போகிறோம்!" என்று கூறிய யவன மருத்துவன், மகிழ்ச்சி மிகுதியால் சற்று இரைந்தே நகைத்தான்.

81. இடைக்கால அமைதி

சோழ மன்னர்களின் இன்ப வாசத்துக்காகவே நிர்மாணிக்கப்பட்ட உறையூர் எல்லைப்புற மாளிகையைத் தைத்திங்களின் பின்பனி சற்று அதிகமாகவே திரையிட்டிருந்ததாலும் அதிகாலை வேளையில் கீழ்வானம் வெள்ளென்று விரிந்து வீசிய மெல்லிய வெளிச்சம் அந்தப் பனிக்கு மெருகூட்டி, அதை ஊடுருவிப் பார்க்கும் அளவுக்கு மட்டும் லேசாகக் கலைந்திருந்தன் காரணமாகவும், மாளிகையின் தோட்டச் சுவரை அடுத்திருந்த தோப்பிலிருந்த தேவதாரு மரங்களும் செண்பக மரங்களும் தங்கள் புஷ்பக் கொத்துக்களை மெல்ல மெல்ல ஆட்டி விசிறி எழுப்பிய காற்றும், பனித்திரையின் கனத்தையும் கடினத்தையும் குறைக்க முனைந்ததன் விளைவாகவும் தோப்புக்கும் மாளிகைக்கும் இடையே இரவின் நடுச்சாமத்திலிருந்து அசையாமல் நின்றிருந்த

பனிச்சுவர் சற்றே அசைந்து கொடுத்ததாலும், அடியோடு மாளிகையை விட்டு ஓட மறுத்து அதன் புறத்தேயிருந்த தோட்டத்தின் புல்வெளியிலும் தேவதாரு செண்பக மரங்கள் விரித்துக் காட்டிய இலைப் படுக்கையிலும் படுக்கத் துவங்கி, 'என்னை விரட்டுவது அவ்வளவு சுலபமல்ல' என்பதைக் குறிக்க ஆயிரமாயிரம் முத்துப் பற்களைக் காட்டி வானத்தைப் பார்த்து நகைத்துக் கொண்டிருந்தது. அந்த நகைப்பைப் பொறுக்காத கீழ்வானமும் விநாடிகள் ஏறஏற, தன் வெள்ளிய முகத்தில் குருதியைப் பாய்ச்சிக்கொண்டு சிவந்து மரங்களிலும் புற்களிலும் பரந்து நகைத்த பனித்திரை முத்துக்களைச் சிறிதுநேரம் சினந்து பார்த்துவிட்டு, கோபத்தை உள்ளடக்கி, கதிரவனை எழுப்பி அவன் இளங்கதிர்களை அந்த முத்துக்களில் பாய்ச்சிய போதிலும், அதற்கும் மசியாத பனிமுத்துக்கள் அந்த இளங்கதிர்களில் முன்னிலும் அதிகமாகப் பிரகாசிக்கத் தொடங்கியதன்றி, அந்தக் கதிர்கள் பாய்ந்த காரணத்தால் மற்றும் பல வர்ணங்களை வெளியிட்டு 'என்னிடம் ரத்தினச் சிவப்பும் மரகதப் பச்சையும், ஏன் உன்னுடைய நீலமும் இன்னும் நானாவித வண்ணங்களும் இருக்கின்றன' என்று வானத்தை நோக்கி முன்னைவிட அதிகமாக நகைக்கத் தொடங்கின. அந்த முத்துக்களுக்குச் சாட்சி சொல்வனபோல் தேவதாருவின் வெண்மலர்கள் மட்டுமின்றி, செண்பகத்தின் மஞ்சள் மலர்களும் அந்த மரங்களின் கிளைகளில் தழுவி ஏறிய கொடிகளில் அதிநீளமாகவும் பெரும் பட்டைகளாகவும் காட்சியளித்த நானாவித காட்டுப் புஷ்பங்களும் காற்றில் தங்கள் தலைகளை அப்புறமும் இப்புறமும் ஆட்டின. மரங்களின் உயரத்திலில்லாததால் மேலிருந்து பதில் சொல்லச் சக்தியற்ற தோட்டத்து வாவியின் ஆம்பலும் செங்கழுநீரும், வாவியில் தங்கள் கொடிகளை வாலால் அடித்து ஓடிய வாளை மீன்களால் அசைக்கப்பட்டு நீர் மட்டத்திலே ஆடி, மேலே இருப்பவர்களைப் போலவே கீழே இருப்பவர்களுக்கும் சொந்தக் கருத்துக்களைச் சொல்ல உரிமையுண்டு என்பதை நிரூபித்தன. இத்தனை இயற்கை காட்சிகளால் பாராட்டப்

பட்ட பனியின் மதிப்பை ஒரு வழியாக உடைத்துத் தள்ள முற்பட்ட கதிரவனும் தன் கிரணங்களின் உஷ்ணத்தைச் சற்றே அதிகப்படுத்தவே, பனித் துளிகளும் ஆங்காங்கு மெல்ல மறைய முற்பட்டதால் உறைந்த பனியின் உக்கிரத்திலிருந்து விடுதலையடைந்த மைனாக்கள் தேவதாருவின் மரங்களிலிருந்து ஜில்லென்று பறந்து தோட்டத்துப் புல் தரையில் குதித்து சூரியரச்மியில் கம்பீர நடைபோட்டதன்றி, தங்கள் சின்னஞ்சிறு தலைகளைப் பக்கவாட்டில் திருப்பி மஞ்சள் மூக்குகளால் சிறகின் உட்புறத்தைக் குத்திக் குத்திக் கிளப்பியும் ஓரிருமுறை சிறகுகளை அடியோடு விரித்தும் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, தோட்ட மரங்களையும் ஏறெடுத்து நோக்கி, 'இனி பனியைக் கண்டு பயப்பட வேண்டாம்' என்று எச்சரிக்கை சத்தத்தையும் இன்பமாகக் கொடுத்தன. அந்த் எச்சரிக்கையை உணர்ந்து கொண்டன போல் மரக்கிளைகளின் கூடுகளில் பதுங்கிக் கிடந்த நானாவித பக்ஷி ஜாலங்களும் கூடுகளுக்கு வெளியே தலையை நீட்டிப் பதில் குரலைக் கொடுத்ததால் எங்கும் இன்பமான ஒலி பரவலாயிற்று. இசையின் மேல் ஸ்தாயியின் மென்மை ஒலியைப் போலவே கீழேயுள்ள கமகத்துக்கும் கரகரப்பான ஜீவாவுக்கும் இடமுண்டென்பதைக் காட்ட இஷ்டப்பட்டன போல் மரக்கிளைகளிலிருந்த பச்சோந்திகளும் கீழேயிருந்த மான், கடம்பைக் குட்டிகளும் நகரத் தொடங்கி மரக்கிளைகளிலும், கீழே உதிர்ந்த சருகுகளிலும் சரசரவென்ற ஒலியைக் கிளப்பி, பட்சிகளின் ஸ்தாயி கீதத்துக்கு ஆதார கமகத்தையும் ஜீவாவையும் சிருஷ்டித்தன.

உலகத்தின் சகல ஜீவராசிகளுக்கும் உயிரளிக்கும் கதிரவன் தொட்டு எழுப்பியதால் பின்பனிப் போர்வையை உதறி எழுந்த உறையூரில், எங்கும் கால்நடைகளின் அரவமும் ஜனங்களின் நடமாட்டமும் பலமாகக் கேட்கலாயிற்று. எல்லைப்புற மாளிகையை வந்து தாக்கிய அந்தச் சோழ மாநகரத்தின் உதயகால ஒலிகளும் அரண்மனையிலிருந்து சப்தித்த உதய தாரைகளும், மாளிகைத் தோட்டத்திலிருந்த

அன்னப் பறவைகளையும் மயில் கூட்டங்களையும் சின்னஞ் சிறு மான் குட்டிகளையும்கூடப் பாதித்திருக்கவேண்டும். மயில்களில் சில தங்கள் தோகைகளை ஒருமுறை உதறிவிட்டு நகரமிருந்த திக்கை நோக்குவனபோல் கழுத்தை உயர்த்தின. நகர ஒலிகளால் திடீரெனப் பாதிக்கப்பட்ட அன்னங்கள் முடிந்த வரையில் வேகமாக நடந்து வாவிகளில் தொப்புத் தொப்பென்று குதித்து, இனி யாரும் தங்களை எதுவும் செய்ய முடியாதென்று நினைத்து அலட்சியமாகவும் கம்பீரமாகவும் நீந்த முற்பட்டன. மான் குட்டிகள் சில திடீரென்று துள்ளிக் குதித்து அங்குமிங்கும் ஓடத் தொடங்கின. இயற்கையின் இத்தனை இன்பத்தையும் உயிர்த் துள்ளலால் ஏற்பட்டிருக்கும் உதயகால உல்லாசத்தையும் இவள் மட்டும் ஏன் அனுபவிக்க வில்லை என்று எண்ணியதுபோல் அந்த எல்லைப்புற மாளிகைமீது தொத்தி ஏறியிருந்த முல்லைக் கொடியொன்று காற்றில் அசைந்து சாளரத்தின் வழியாக உள்ளே எட்டிப் பார்த்து, ஒரு வினாடி தன் வெண்மலர்ப் பற்களை விரித்துச் சிரித்துப் பிறகு துன்பம் தாங்காததால் சரேலென்று தலையை வெளிக்கு இழுத்துக் கொண்டது. உள்ளே மஞ்சத்தில் படுத்துக் கிடந்த பூவழகியின் நிலை, இயற்கையும் கண்டு இரங்கும் வகையில்தான் இருந்தது. சோழ மன்னர்களின் இன்ப வாசத்துக்காக ஏற்பட்ட அந்த எல்லைப்புற மாளிகை, பூவழகிக்கு மட்டும் துன்ப வாசத்தையே அளித்ததென்பதை வாயிருந்தால் அந்த முல்லைக்கொடி என்ன, தூரத்திலிருந்த தேவதாரு மலர்களும் செண்பகப் புஷ்பங்களும், மயில்களும் மான்களும் மைனாக்களும் புற்களில் இளவெயிலுக்கும் ஈடு கொடுத்துப் பிடிவாதத்துடனிருந்த பின்பனித் துளிகளும் கூடக் கதறியிருக்கும். அப்பொழுதும் அவை தங்களுக்குத் தெரிந்த மொழியில் கதறத்தான் செய்தன. அந்த மொழி மனித வர்க்கத்துக்குப் புரியாவிட்டால் அதற்கு அவை எப்படிப் பொறுப்பாக முடியும்?

இயற்கையே கண்டு இரங்கும் வண்ணம் துன்பமே வடிவாய், சாளரத்தின் ஓரமாக இருந்த பஞ்சணையில்

துவண்டு கிடந்த பூவழகி, அத்தனை துயரத்திலும் அவளை எட்டிப் பார்த்த முல்லைக் கொடியைவிட எத்தனையோ அதிக எழிலுடன் விளங்கினாள். துவண்டு கொடி போலத் தான் கிடந்தாள் பூவழகியும் அந்தப் பஞ்சணையில், ஆனால் முல்லைக் கொடியிலிருந்த ஒரேவித வெள்ளைப் புஷ்பங்களை மட்டும் அந்தப் பைங்கொடி தாங்கவில்லையே! கொடியின் கணுக்குக் கணு சிவந்தும் வெளுத்தும், சிவப்பு வெளுப்பு இரண்டும் கலந்தும் இருந்த எத்தனைவித புஷ்பஜாலங்களை அந்தக் கொடி தாங்கி நின்றது! வாடி வதங்கிக் கிடந்த தன்மை யிலும் அந்தக் கொடியில் திகழ்ந்த அரவிந்தங்களும், முல்லை களும், நீலோற்பலங்களும் எத்தனை இணையற்ற அழகுடன் விளங்கின! என்ன வதங்கிச் சோர்ந்துவிட்டால் தானென்ன? மேன்மக்களின் இயற்கைக் குணம் மறைந்துவிடுமா என்ன? மறைந்துவிட்டால், 'கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே' என்ற தமிழ்ப் பெருமக்கள் அறிவுரைக்கு உலகத்தில் இடம் ஏது?

சோர்வடைந்த நிலையிலும் அவள் விழிகளின் கம்பீரம் சிறிதும் குறையாமலே இருந்தது. சித்தம் அதிகமாகப் பாதிக்கப் பட்டவள்போல் பூவழகி வெறித்த பார்வையுடன் அந்தப் பஞ்சணையில் படுத்துக் கிடந்தாள். சாளரத்துக்கு வெளியே நோக்கிக் கிடந்த அந்தக் கண்கள், பின்பனியும் பிறகு இளம் பரிதியும் விளைவித்த மகோன்னத இன்பக் காட்சிகளைச் சிறிதும் அனுபவித்ததாகத் தெரியவில்லை. ஆனால் அவள் பார்வை தேவதாரு மரங்களையும் ஊடுருவி எங்கோ தொலை தூரத்துக்குச் செல்வதுபோல் தோன்றியது. அந்தப் பார்வை வெளியே ஊடுருவியும் கூட எப்படி நீண்ட நேரம் சலனமற்று நின்றதோ அப்படியே அவள் கொடி உடலும் சலனமற்றுத் தான் படுக்கையில் கிடந்தது. சலனத்தைக் காட்டி அசைந்த ஓரிரு சமயங்களிலும் அது உயிர்த் துடிப்பை அதிகமாகக் காட்டவில்லை. இளம்பரிதி தலைகாட்டிய பின்பும் இப்படிப் படுப்பது சில மாதங்களாகவே தலைவிக்கு வழக்கமாகப் போய்விட்டதை அவள் தோழி இன்பவல்லி மட்டுமல்லாமல்,

சமீப நாட்கள்வரை அங்கு வந்து போய்க்கொண்டிருந்த அல்லியும் அறிந்திருந்தாள். அந்த வழக்கத்தின் காரணத்தை நன்றாக உணர்ந்திருந்த அந்தப் பெண்களிருவரும், நாளாக ஆகப் பூவழகியின் போக்கில் செயற்கையான ஒரு நிதானம் ஏற்பட்டு வந்ததையும் கண்டார்களாதலால், நிலை அப்படியே நீடித்தால் பூவழகியின் வாழ்க்கை பூமியில் அதிக நாள் நிலைக்காது என்பதையும் புரிந்து கொண்டு அதன் விளைவாகப் பெரும் கவலையும் பீதியும் கொண்டார்கள். ஆனால் அதற்குப் பரிகாரம் செய்யும் மார்க்கத்தை மட்டும் கண்டுபிடிக்க இயலாமல் தவித்தார்கள்.

பூவழகியின் நிலைக்குப் பரிகாரம் ஒன்றுதான். அந்தப் பரிகாரம் எங்கு சென்றது எங்கிருக்கிறது, அதை எப்படிக் கண்டுபிடிப்பது, மீண்டும் கிடைக்குமா கிடைக்காதா என்பது பற்றிய எந்தத் தகவலுமே தெரியாததால், பூவழகி அந்த மாளிகையில் சிறை வைக்கப்பட்ட நாளிலிருந்து மாதா மாதம் அவள் உடற்கட்டு குலைந்து, சிந்தை குலைந்து வந்ததைக் கவனித்த இன்பவல்லியும் அல்லியும் சொல்லவொணாத் திகிலையும் அடைந்தார்கள். அவள் சிறைப்பட்டுக் கிடந்த ஆறுமாத காலத்தில் சோழ நாட்டின் நிலையும் கிட்டத்தட்ட அவள் நிலைக்கே வந்து கொண்டிருந்ததால், முதல் இரண்டு மூன்று மாதங்கள் அந்தப் பக்கத்தில் ஒற்றர் மூலம் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த பிரும்மானந்தரும் கரிகாலனும்கூட, காலக்கிரமத்தில் தங்கள் வரவை நிறுத்திக் கொள்ளவே எல்லைப்புற மாளிகையில் பூவழகியின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்கிடமாகிக் கொண்டிருந்தது. பிரும்மானந்தரும் கரிகாலனும் திடீரென ஏன் அந்தப் பக்கம் வருவதைக்கூட நிறுத்திக் கொண்டார்கள் என்ற விஷயத்தை அறிய முயன்ற அல்லிகூட அந்த முயற்சியில் தோல்வியே அடைந்தாள். பிரும்மானந்தருக்கும் கரிகாலனுக்கும் அவள் பணியாட்கள் மூலம் அனுப்பிய ஓலைகளுக்கு ஒரு மாத காலமாகப் பதிலேதும் கிடைக்காததால் அல்லி சற்றுக் குழப்பமும் ஓரளவு கோபமும் அடைந்தாள். அதை வாய்விட்டும் பூவழகியிடம்

இரண்டு மூன்று முறை கூறினாள். பூவழகி பதிலேதும் சொல்லவில்லை. வரட்டுச் சிரிப்பு ஒன்றை மட்டும் அந்தச் சமயங்களில் உதிர விட்டாள்.

இப்படி வரட்டுச் சிரிப்புச் சிரிப்பதும், வெறித்துச் சாளரத்துக்கு வெளியே பார்ப்பதும் பூவழகியிடம் பிரதி தினம் விருத்தியாகிக் கொண்டிருந்தது. அவள் இதயத்தில் உயிரணுக்களைச் சுழலவிடக்கூடிய ஒரே ஒரு சக்தி எங்கிருக்கிறது, என்ன செய்கிறது என்பதை மட்டும் அறியத் திராணியில்லாததால் அவள் புத்தி புல் ஏதுமற்ற கட்டாந்தரை போல் புதிதாக எதுவும் விளையச் சக்தியற்றுக் கிடந்தது. அந்தச் சக்தியற்ற தன்மைதான் அவள் பார்வையிலும் தெரிந்தது. இளஞ் செழியன் பிரிவால் அந்த மனோவியாதி வளர்ந்துவிட்ட அந்தப் பின்பனிக் காலத்தில், இயற்கை மனோகரச் சூழ் நிலையைச் சிருஷ்டித்துவிட்ட அந்தக் காலை நேரத்தில், பஞ்சணையில் வஞ்சிக் கொடியெனத் துவண்டு கிடந்த பூவழகியைப் பின்புறமிருந்து நெருங்கிய அவள் தோழி இன்பவல்லி, "அம்மா!" என்று மெல்ல அழைத்தாள்.

பூவழகி படுத்திருந்த முறையைக்கூட அதிகமாகக் கலைக்காமல் மெள்ளத் தலையை மட்டும் திருப்பி இன்பவல்லியை வெறித்து நோக்கினாள். அந்தப் பார்வை கூரிய வாள்போல் இதயத்தில் பாய்ந்தாலும் அதைப் பொறுத்துக் கொண்ட இன்பவல்லி, "விடிந்து விட்டதம்மா" என்று அழுத்திச் சொன்னாள்.

பூவழகி அத்தனை சித்தங் குலைந்த நிலையிலும் துன்பப் புன்முறுவலொன்றை மனோகரமாகத் தன் இதழ்களில் தவழ விட்டாள். "யாருக்கு?" என்றும் வினவினாள்.

பூவழகியின் கேள்வியிலிருந்த கருத்தை இன்பவல்லி நன்றாகவே புரிந்துகொண்டாலும் புரிந்துகொள்ளாதவள் போல் பாசாங்கு செய்து, "எல்லோருக்கும்தானம்மா" என்று பதில் சொன்னாள், தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு.

"எல்லோருக்கும் என்று சொல்லாதே இன்பவல்லி" என்று முணுமுணுத்தாள் பூவழகி.

"வேறு எப்படியம்மா சொல்ல வேண்டும்?" என்று கேட்ட இன்பவல்லியின் குரல் சற்றே நடுங்கியது. அந்த நடுக்கத்தைப் பூவழகி கவனித்துவிடப் போகிறாளென்ற பயத்தாலோ என்னவோ, இன்பவல்லி சட்டென்று தன் முகத்தைத் திருப்பி, பூவழகியின் கண்களோடு தன் கண்களைக் கலந்தாள்.

தன் கண்களோடு உறவாட முற்பட்ட இன்பவல்லியின் கண்களைக் கண்டதும் பழைய நினைவுகள் ஏற்படவே, 'இப்படித்தான் அவர் கண்களும் உறவாடும். ஆனால் இந்தப் பரிதாபம் அவற்றில் இருக்காது. வேட்கைதான் துள்ளிக் கிடக்கும்' என்று நினைத்த பூவழகி சற்று வெட்கத்தையும் முகத்தில் படர விட்டுக் கொண்டாளானாலும், அடுத்த வினாடி அதை மறைத்துப் பழைய சம்பாஷணைக்குத் திரும்பி, "என்ன கேட்டாய் இன்பவல்லி?" என்று மீண்டும் வினவினாள்.

கண்களைப் பூவழகியின் முகத்திலிருந்து அகற்றிப் பஞ்சணைத் தலையணையில் அவற்றைப் பதித்த வண்ணம் சொன்னாள் இன்பவல்லி: 'ஊருக்கு விடிந்துவிட்டது என்று சொன்னேன். வேறு விதமாகச் சொல்ல வேண்டும் என்று குறிப்பிட்டீர்கள்."

இதைக் கேட்ட பூவழகி வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னாள்: "ஆமாம் இன்பவல்லி! நீ சொன்னதில் முழுதும் தவறல்ல. ஒருவரைத் தவிர என்று சேர்த்துக் கொண்டிருந்தால் சரியாயிருக்கும்."

பூவழகியின் சொற்களின் பொருள் இன்பவல்லிக்கு நன்றாகப் புரியத்தான் செய்தது. தன் ஒருத்தியைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் விடிவு ஏற்பட்டதென்பதையே தலைவி குறிப்பிடுகிறாளென்பதைப் புரிந்துகொள்ள அதிகக் கஷ்டம் ஏற்படவில்லை அவளுக்கு. இருப்பினும் பொருளை உணர்ந்து கொள்ளாதவள் போலவே அவள் பேசத் தொடங்கி, "என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? சூரியன் கூடக் கிளம்பி விட்டான். இருளெல்லாம் அகன்று விட்டதே. தெரியவில்லையா உங்களுக்கு!" என்று கூறினாள்.

"என் உதய சூரியன் இருக்குமிடம் இன்னும் தெரியவில்லையே இன்பவல்லி. ஆகவே என் இதயத்திலும் புத்தியிலும் ஒளியேதுமில்லை. இருள்தானிருக்கிறது. புத்தியில் இருள் இருந்தால் கண்களுக்கு ஏது வெளிச்சம்? புத்தியின் புறப் பகுதிதானே கண்?" என்றாள் பூவழகி. பூவழகியின் சொற்களிலே எல்லையற்ற துன்பம் ஊடுருவிக் கிடந்தது. அந்தச் சொற்களின் ஒலியிலே சிறிது வேதாந்தமும் தொனித்தது. துன்பம் விளக்குவதுதான் வேதாந்தம் என்ற மூதுரைக்கு அர்த்தமுண்டு என்பதற்கு அத்தாட்சியாக விளங்கினாள் பூவழகி.

"நீங்கள் இப்படிப் பேசுவது சரியல்ல அம்மா" என்று மிகுந்த மரியாதையும் சற்றுக் கடுமையும் கலந்த குரலில் கூறினாள் இன்பவல்லி.

"ஏன் சரியல்ல இன்பவல்லி? என் உள்ளத்தில் ஒளியில்லை. ஆகவே கண்களிலும் இல்லை. சொற்களிலும் இருக்காது. இதில் தவறென்ன?" என்று கேட்டபோதும் வெறித்த பார்வையையே இன்பவல்லிமீது திருப்பினாள் பூவழகி.

"நீங்கள் வேளிர் குலம் அம்மா!" என்று முணுமுணுத்தாள் இன்பவல்லி.

"அதை நினைவு படுத்தாதே இன்பவல்லி" என்றாள் பூவழகி வெறுப்பு மண்டிக் கிடந்த குரலில்.

"ஏன்? வீரர்கள் மரபல்லவா அது?" என்று கேட்டாள் இன்பவல்லி.

"கயவர்கள் மரபும்கூட என்பது தமிழகத்தில் பரவி விட்டது."

"இருங்கோவேள் ஒருவனை வைத்துக்கொண்டு மரபை எடை போடக்கூடாது அம்மா."

'பின் யாரை வைத்துக்கொண்டு எடை போட வேண்டும் இன்பவல்லி! அந்தக் கயவனுடன் சேர்ந்து அவனுக்குப் பக்கபலமாக நிற்கும் பன்னிரண்டு வேளிர்களையும் வைத்துக்கொண்டு எடை போடட்டுமா?" என்று கேட்ட பூவழகியின் குரலில் இகழ்ச்சி பூரணமாகத் துளிர் விட்டதன்றி, அந்த இகழ்ச்சி உணர்ச்சி உடலிலும் ஊடுருவியதாலும் உடலிலும் துடிப்பைப் பெறவே சட்டென்று மஞ்சத்திலும் எழுந்து உட்கார்ந்தாள் மாரப்பவேளின் மகள்.

அப்படிப் பூவழகி வேகமாக எழுந்து உட்கார்ந்ததில் சற்று மகிழ்ச்சியே அடைந்த இன்பவல்லி, அந்த ஏந்திழையின் உடலில் இன்னும் உயிரூட்ட எண்ணி, "பன்னிரண்டு வேளிர்களை வைத்து எடை போட வேண்டியதில்லையம்மா? தங்கள் தந்தையை வைத்து எடை போடுவதுதானே?" என்றாள்.

பஞ்சணையில் உட்கார்ந்த அந்தப் பைங்கிளி கலகலவென்று ஏளன நகை நகைத்தாள். "இரண்டு மாத காலமாக என்னைத் திரும்பியே பார்க்காத என் தந்தையைக் கொண்டு எடை போட வேண்டுமென்கிறாயா இன்பவல்லி? தன் மகளைச் சிறையிலடைத்திருக்கும் வஞ்சகனுடன் கலந்து களித்து இச்சகம் பாடி, அரண்மனையில் இன்ப போகத்தை அனுபவித்து வரும் என் தந்தையைக் கொண்டு தானே வேளிர் குலத்தை எடைபோடச் சொல்கிறாய்? கண்டிப்பாய் எடை போடலாம் இன்பவல்லி" என்றாள் பூவழகி, அந்த ஏளனச் சிரிப்புக்கிடையே ஏளனச் சொற்களையும் உதிரவிட்டு.

"தந்தையைப்பற்றித் தவறாக நினைக்கிறீர்கள் அம்மா! நமக்குத்தான் இரண்டு மாத காலமாக அவரைப்பற்றித் தகவல் ஏதுமில்லையே" என்றாள் இன்பவல்லி.

"ஏனில்லை? கருவூர் செல்லுமுன்பு சமண அடிகளே சொன்னாரே, என் தந்தையிடம் இருங்கோவேளுக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாக."

"அடிகள் கருவூர் சென்று மாதம் இரண்டாகிறதே?"

"ஆமாம். அதனாலென்ன?"

"பிறகு உங்கள் தந்தையோ இருங்கோவேளோ மாறவில்லை என்பது என்ன நிச்சயம்?"

"எதையும் கண்டுபிடிக்கும் சக்திவாய்ந்த அல்லிகூட நமக்கு அப்படித் தகவல் எதுவும் சொல்லவில்லையே."

"அவளுக்குத் தகவல் ஏதும் தெரியவில்லையோ என்னவோ?"

"இதில் தெரிவதற்கு என்ன இருக்கிறது இன்பவல்லி? மன்னர் ஒருவரைத் தவிர இருங்கோவேளுக்கு என்னை மணமுடிப்பதில் எல்லோரும் ஒற்றைக் காலால் நிற்கிறார்கள். பிரும்மானந்தரும் சமண அடிகளும் அரசியல் காரணம் கூறுகிறார்கள், என் தந்தையும் அதற்கு ஒப்புக்கொண்டு விட்டதாக அல்லியே சொல்லவில்லையா?"

"சொன்னாள் அம்மா. ஆனால் இரண்டு மாத காலமாக அதைப்பற்றிச் செய்தி ஏதுமே இல்லையே. அரசியலிலிருந்து தங்கள் திருமணம்வரை எல்லாமே கிணற்றில் கல் போட்டது போலத்தானே இருக்கின்றன."

"இது இடைக்கால அமைதி இன்பவல்லி. புயலுக்கு முன்பாக இப்படி ஒரு அமைதி ஏற்படுவதுண்டு."

"நீங்கள் திடீரெனப் பெரும் புயலை எதிர்பார்க்கிறீர்களா?"

இந்தக் கேள்விக்குப் பூவழகி உடனே பதில் சொல்லவில்லை. பஞ்சணையைவிட்டுச் சற்று சிரமத்துடனேயே எழுந்திருந்து அறையில் மௌனமாக இரண்டு மூன்று தடவை குறுக்கும் நெடுக்கும் நடந்தாள். மீண்டும் பஞ்சணை முகப்பில் உட்கார்ந்துகொண்டு இன்பவல்லியை நோக்கிச் சொன்னாள்: "ஆம் இன்பவல்லி! நான் பெரும் புயலை எந்த நிமிடமும் எதிர்பார்க்கிறேன். நாட்டின் வாழ்வில் மட்டுமல்ல, என் சொந்த

வாழ்விலும்கூடத் திடீர் மாற்றங்களை எதிர்பார்க்கிறேன். உனக்கே விசித்திரமாயில்லையா இன்பவல்லி! நிகழ்ச்சி களைத் தொகுத்துப் பார். புகாரை இருங்கோவேளின் சாசனப் படி ஏற்று யவனர்களுடைய சொத்தாக்கிக்கொண்ட டைபீரியஸ், யவன ராணிக்கு மகுடாபிஷேகம் செய்ய இந்திர விழா மாளிகையை வீனஸ் கோயிலாக்கிப் பெரும் மாறுதல் களைச் செய்தானேயொழிய மகுடாபிஷேகத்தை மட்டும் நிறைவேற்றவில்லை-பிரும்மானந்தர் என் திருமணத்தை முடிக்கத் துடித்தாரேயொழிய, இரண்டு மாத காலமாக வாணகரையைவிட்டு வெளியேறாமலும், இருங்கோ வேளுடன் அது சம்பந்தமாக எந்தத் தூதனையும் அனுப்பாம லும் மௌனமாயிருக்கிறார். அரசியலில் மிகப் பற்றுடைய வரும் வேவு பார்க்கும் தொழிலில் இணையற்றவருமான சமண அடிகள் இரண்டு மாதங்களுக்கு முன்பு திடீரெனக் கருவூர் சென்று பழையபடி துறவியின் அலுவல்களில் திளைத் திருக்கிறார். வஞ்சகனான இருங்கோவேள்கூட இரண்டு மாத காலமாக என்னைத் துன்புறுத்த இந்த மாளிகைப் பக்கம் தலை காட்டக் காணோம். அரண்மனையிலிருக்கும் என் தந்தையோ மற்ற வேளிர்களோ யாருமே இருக்குமிடம் தெரியவில்லை. இந்தச் சோழர் தலைநகரத்துக்கு இருமுறை விஜயம் செய்து அமளி துமளி எழுப்பிய சேர பாண்டிய மன்னர்களைப் பற்றியும் எதுவும் தெரியவில்லை. எல்லாம் கிடக்க, பதினைந்து நாட்களாக அல்லியையும் காணோமே, தமிழகமே ஸ்தம்பித்துவிட்டதா இன்பவல்லி? இல்லை, இல்லை. நாம் அறியாத ஏதோ பயங்கரச் சூழ்நிலை உருவாகி வருகிறது. அது என்னவென்று நம்மால் உணர முடியவில்லை. அவ்வளவு தான். ஆனால் என் மனம் சொல்கிறது இன்பவல்லி, ஏதோ பலமான தீமை இந்தத் தமிழகத்துக்கு ஏற்படுகிறது என்று. அந்தத் தீமையில் வேளிர்கள் பெரும்பங்கு கொள்வார்கள். அதனால் வேளிர்குலம் பரம்பரை பரம்பரையாகத் துன்பப் படும். அத்தகைய குலத்தில் பிறந்ததை நான் பெருமையாக

நினைக்கவில்லை. மிகவும் சிறுமையாக நினைக்கிறேன். அந்தக் குலப்பெருமையை நினைவுபடுத்தாதே. வேளிர்கள் வீரர்களாக அறத்தின்பால் நின்றதுண்டு. வேளிர் மகளிர் வீரமகளிராகத் திகழ்ந்த காலமுண்டு. இப்பொழுது அவர்கள் மற்றவர்களின் அரசியல் சதுரங்கத்தில் வெறும் காய்கள்..."

இப்படிப் பேசிக்கொண்டே போன பூவழகி திடீரெனப் பேச்சை நிறுத்தி மஞ்சத்திலிருந்து மயிலென நடந்து வெளியே சென்றாள். அவளைத் தொடர்ந்து சென்ற இன்பவல்லி அத்தனை துயரத்திலும் தன் தலைவிக்கிருந்த அழகு நடையைக் கண்டு வியந்து, 'கோப நடையே அழகாயிருந்தால் படைத் தலைவர் திரும்பிவந்து என் தலைவி இன்பநடை நடந்தால் எத்தனை அழகாயிருக்கும்!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

பஞ்சணையிலிருந்து எழுந்திருந்து சென்ற பூவழகி ஸ்நானத்தை முடித்துக்கொண்டு, இன்பவல்லியின் கட்டாயத்தின்மேல் பாலை மட்டும் சிறிது அருந்திவிட்டு, மாளிகைத் தோட்டத்தை நோக்கிச் சென்று வாவிலின் மேற் படியில் உட்கார்ந்து கொண்டு மீண்டும் தீவிர யோசனையில் ஆழ்ந்தாள். அவளைத் தொடர்ந்து தோட்டத்துக்கு வந்து தூரத்தில் அவளை நோக்கிய வண்ணம் நின்றிருந்த இன்ப வல்லி, அன்றுகாலை பூவழகி விவரித்த விஷயங்களைப்பற்றி நினைத்து நினைத்து, 'அப்படியென்ன ஆபத்தைத் தலைவி எதிர்பார்க்கிறாள்?' என்று பன்முறை கேட்டுக்கொண்டாள். 'எல்லாம் தலைவியின் வீண் பிரமை. இரண்டு மாத கால அமைதிக்குக் காரணங்கள் எத்தனையோ இருக்கலாம். இங்கு வராதவர்களுக்கு அலுவல் பல இருக்கலாம். அலுவல் முடிந்ததும் யாராவது வரலாம்' என்று தனக்குத்தானே சமாதானமும் சொல்லிக்கொண்டே யிருக்கையில் அவள் நினைவுகள் பட்டென்று அறுந்தன. மாளிகைக்கு வெளியே திடீரெனப் புரவிகள் வந்து நிற்கும் அரவம் கேட்டது. "பூவழகி! பூவழகி!" என்ற பெருங் குரலின் அழைப்பைக் கேட்ட இன்ப வல்லி விமோசனம் வந்துவிட்டது என்று பூரித்து எழுந்தாள்.

அந்தக் குரல் எங்கோ உணர்ச்சிகளைப் பறக்க விட்டுக் கொண்டிருந்த பூவழகியையும் தட்டி எழுப்பவே, அவளும் வாவியின் முகப்பில் சட்டென்று எழுந்து நின்றாள்.

82. தந்தையும் மகளும்

இரண்டு மாத காலமாக ஏற்பட்ட இடைக்கால அமைதியின் காரணமாக ஏதேதோ ஆபத்துக்களைக் கற்பனை செய்து பெரும் குழப்பத்துக்குள்ளாகியிருந்த பூவழகியும், அவள் விவரித்துச் சொன்ன ஆபத்துக்களின் விளைவுகளை எண்ணிப் பார்த்ததால் விவரிக்க இயலாத துக்கத்துக்குள்ளான இன்பவல்லியும், வாயிற்புறத்தில் எதிர் பாராவிதமாக எழுந்த அழைப்பைக் கேட்டதும், அதுவரை அவர்களை ஆட்டி வதைத்த உணர்ச்சிகளை உதறித் தள்ளிவிட்டு ஒருவரையொருவர் சற்று ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டார்களானாலும், வெளியே எழுந்த குரலின் ஒலி இருவர் இதயத்திலும் மாறுபட்ட எண்ணங்களையே சிருஷ்டித்தது. "பூவழகி, பூவழகி!" என்று வாயிலிலிருந்து எழுந்த குரல் மாரப்பவேளின் குரலென்பதை, கேட்டதுமே இருவரும் புரிந்து கொண்டார்களானாலும், இரண்டு மாத காலமாக மாளிகைப் பக்கம் எட்டிப் பார்க்காத அந்த வேள்மாண் திடீரென்று அன்று வரும் காரணம் யாதாயிருக்கக்கூடும் என்பதில் தலைவியும் தோழியும் மாறுபட்ட கருத்தையே கொண்டார்கள். அந்த இரண்டு மாத காலத்தில் மாரப்பவேள் தனது மகளைச் சிறை மீட்கத் தீவிர முயற்சி செய்திருக்க வேண்டுமென்றும், அந்த முயற்சியில் வெற்றி கண்ட காரணத்தாலேயே அவர் அன்று திடீரென வந்திருக்கிறாரென்றும் நினைத்த இன்பவல்லி தன் தலைவிக்கு நல்ல காலம் பிறந்துவிட்டதென்றும், இனி அந்த மாளிகையை விட்டுப் புறப்பட வேண்டியதுதானென்றும் முடிவு கட்டினாள். ஆனால் விஷயங்களை நன்றாக அலசும் திறன் வாய்ந்த பூவழகியின் இதயத்தில் மட்டும் அத்தகைய நம்பிக்கை எதுவும் உதயமாகவில்லை. தான் சுதந்திரமாயிருந்தும், ஆறு மாத காலம் மற்றொருவன் சிறையில் மகளை விட்டுவைத்து வாளாவிருந்த தந்தைக்குத் தன்னை விடுவிக்க வேண்டுமென்று திடீரென ஞானோதயம் வருவதில் அர்த்தமில்லையென்றும், அவருடைய வருகைக்கு வேறு முக்கிய காரணங்கள் இருக்கவேண்டுமென்றும் அவள் திட்டமாக நம்பினாள். முதல் நான்கு மாதங்களில் மாரப்பவேள் தன் மகளை அடிக்கடி வந்து பார்த்து அவளிருப்பது சிறையல்லவென்றும், அவள் நன்மையை முன்னிட்டே இருங்கோவேள் அவளை அங்கு வைத்திருப்பதாகவும் தைரியம் சொல்லிக் கொண்டிருந்தார். சென்ற இரண்டு மாதங்களில் அந்தத் தைரியத்தைச் சொல்லக்கூட அவர் வராததைக் கண்ட பூவழகி, ஒன்று அவர் இருங்கோவேளின் ராஜதந்திர வலைக்குள் பூரணமாகச் சிக்கியிருக்க வேண்டும் அல்லது சிறைப்பட்டிருக்க வேண்டும் என்று தீர்மானித்தாள். ஆனால் காரணம் இரண்டுமல்லவென்பதை அல்லி சுட்டிக் காட்டிய பின்புதான் அவள் மனம் தந்தைபால் கல்லாக முற்பட்டது. வேவு பார்க்கும் தொழிலில் பிரும்மானந்தரால் பழக்கப்பட்டிருந்த அல்லி, உறையூர் அரண்மனையில் நடந்த அத்தனை செய்திகளையும் அவ்வப்பொழுது அறிந்து வந்தாளாதலால், மாரப்பவேளும் இருங்கோவேளும் இணைபிரியாமல் இருக்கும் விவரத்தையும் சோழர்களின் அரசியல் வேளிர்கள் கைக்கு மாறவேண்டிய அவசியத்தில், இருங்கோவேளைவிட மாரப்பவேள் ஒரு படி அதிக சிரத்தை காட்டி வந்ததையும் பூவழகிக்குத் திட்டமாக எடுத்துச் சொல்லியிருந்தாள். தொடர்ச்சியாக மாரப்பவேள் எல்லைப்புற மாளிகைப் பக்கம் தலை காட்டாமலே இருந்தது அல்லி சொன்ன விவரங்களைச் சந்தேகத்துக்கு இடமின்றி ஊர்ஜிதம் செய்துவிட்டதால், தாராள சிந்தையுடைய தன் தந்தைகூட இத்தகைய பேராசைப் பிசாசுக்குப் பலியாகி விட்டாரென்று மனம் வெதும்பினாள் பூவழகி. ஆகவே தந்தையின் குரல் தைத் திங்களின் அந்தக் காலைநேரத்தில் வாயிலில் கேட்டதும், எதிர் தோப்பில் குயில்கள் கூடி இசைத்த இன்ப நாதத்துக்கு இடையூறு செய்ய

வந்த அபஸ்வரமாகவே அதைப் பூவழகி கருதியதால், சற்று அதிர்ச்சியும் வெறுப்பும் கலந்த உணர்ச்சிகளுடனே வாவியின் முகப்பிலிருந்து வாயிலை நோக்கினாள் அவள்.

மாரப்பவேளின் வருகையால் பெரும் நம்பிக்கை கொண்ட இன்பவல்லி மட்டும் அந்தக் குரலைக் கேட்டதுமே பேருவகை கொண்டு, "அம்மா! அம்மா! தங்கள்..." என்று சொல்லிக் கொண்டு வாவியை நோக்கி ஓடி வந்தவள், தலைவியின் முகத்தில் நன்றாகத் துளிர்விட்ட வெறுப்பின் சாயையைக் கண்டதும் சட்டென்று வாயடைத்து நின்றாள்.

தோழியின் வேகத்தையும் பரபரப்பையும் கண்ட பூவழகி, வெறுப்புக் கலந்த புன்முறுவலொன்றைத் தன் இதழ்களில் தவழவிட்டு, "ஆம், இன்பவல்லி! மாரப்பவேள் வந்திருக்கிறார். அவர் குரல்தான் அது" என்றாள்.

தந்தை என்று சொல்லாமல் பெயரைச் சொல்லி, குலப் பெயரையும் இணைத்து மரியாதையுடன் மூன்றாவது பேர் வழியைப் பற்றிக் குறிப்பிடுவதைப் போலச் சொந்தத் தந்தை பற்றிப் பூவழகி பேசியதைக் கேட்ட இன்பவல்லி ஒரு நிமிடம் திகைத்து, நின்ற இடத்திலே ஸ்தம்பித்து நின்று விட்டாளானாலும் மறுநிமிடம் சமாளித்துக் கொண்டு, "தந்தையின் வருகை தங்கள் விடுதலைக்காக இருக்கலாம். ஏன், உங்களுக்குச் சந்தேகமாயிருக்கிறதா?" என்று வினவினாள்.

"இருங்கோவேளின் உயிர் நண்பருக்கு என் விடுதலையை வாங்குவது அத்தனை கஷ்டமா இன்பவல்லி? நீ சொல்வது போலும் இருக்கலாம். ஆனால் அத்தனை அற்ப காரியத்துக்கு என் தந்தை வரமாட்டார். எதற்கும் பார்ப்போம் வா" என்று இன்பவல்லிக்குப் பதில் கூறிய பூவழகி, மிகுந்த நிதானத்துடன் மாற்றரசன் தூதனுக்குப் பேட்டி கொடுக்கச் செல்லும் ராணிபோல மிக நிதானமாகவும் கம்பீரமாகவும் தோட்டத்துக்குக் குறுக்கே நடந்து சென்றாள். அவளைப் பின்பற்றி இன்பவல்லியும் மௌனமாகவே சென்றாள்.

மாளிகையின் தோட்டக் கதவுக்கருகில் வந்ததும் இன்பவல்லியைத் திரும்பிப் பார்த்த பூவழகி, "இன்பவல்லி!

இப்படியே நான் என் அறைக்குச் செல்கிறேன். தந்தையை நீ அழைத்து வா" என்று சர்வ சாதாரணமாகக் கூறிவிட்டுத் தந்தை என்ற சொல்லை உச்சரித்தபோதும் எந்த உரிமையையோ ஆசையையோ காட்டாமலே படிகளில் ஏறி மேலே சென்றாள். மாடிக்கு வந்து தன் அறையை அடைந்ததும் பழையபடி சாளரத்தின் அருகிலிருந்த பஞ்சணையில் உட்கார்ந்து கொண்டாள். புதிதாகப் பூம்புகார் சிற்பி செதுக்கிய பதுமையெனப் பஞ்சணையில் உட்கார்ந்திருந்த நிலையில்தான் உள்ளே நுழைந்த மாரப்பவேள் தனது மகளைக் கண்டார். தனக்கும் மகளுக்கும் இடையே கிடந்த பத்து அடி தூரத்தைப் பத்து வினாடிகளில் நடந்து, அவளை அணைத்து ஆதரவு சொல்லத் துடித்து அறைவாயிற்படியைத் தாண்டிய மாரப்பவேள், தன் மகளிருந்த நிலையைக் கண்டதும் ஸ்தம்பித்து வாயிற்படிக்கருகிலேயே பல நிமிடங்கள் நின்றுவிட்டார்.

இளைத்துக் கிடந்த அவள் உடல் அவர் இதயத்தில் வேதனைக் கணைகளைப் பாய்ச்சின. வெறித்து நோக்கிய அவள் கண்கள் கூர்வேல்களாக அவர் சித்தத்தைத் தாக்கி உடைத்துத் தூளாக்கின. சோகத்தால் உள்ளேயிருந்து எழுந்த பெருமூச்சு காலாக்கினிபோல் அவர் உடலைத் தகித்தது. வேதனை மிதமிஞ்சியதால் பேசக்கூடச் சக்தியற்று நின்ற மாரப்பவேளை மகள் அழைத்த முறை, அதற்காக அவள் உதிர்த்த சொற்கள், நரகத்துக்கே இழுத்துச் சென்று அங்கே இருப்பதாகச் சொல்லப்படும் காய்ந்த இருப்புச் சலாகையில் படுக்க வைத்தன. வெறித்த பார்வையுடன் அவரை நோக்கிய பூவழகி, "இருங்கோவேளின் நண்பர் வரவை நான் எதிர்பார்க்கவில்லை. வாயிற்கதவைத் திறக்க அதனால்தான் சற்று நேரமாயிற்று" என்று சம்பிரதாய முறையில் மூன்றாவது மனிதரை வரவேற்கும் பாணியில் உபசார வார்த்தைகளை உதிர்த்தாள்.

இந்தச் சம்பிரதாய வார்த்தைகளைப் பூவழகி உதிர்த்தாலும், தன்னைப் பார்த்ததால் எவ்வித மகிழ்ச்சியையும்

அவள் காட்டாததாலும் துயரத்தால் பீடிக்கப்பட்ட மாரப்பவேள் அந்தத் துயரத்தின் குறியை முகத்திலும் காட்டி, "நான் உன் தந்தை, பூவழகி" என்று கூறினார் குரலில் வருத்தத்தின் சாயை படர.

"ஆம்" என்று சாதாரணமாகச் சொன்னாள் பூவழகி.

"அதை மறக்காதது பற்றி மகிழ்ச்சி பூவழகி" என்று துக்கத்துடனும் சற்றுக் கோபத்துடனும் கூறினார் மாரப்ப வேள்.

"அதை நான் எப்படி மறக்க முடியும்?" என்று கேட்டாள் பூவழகி. இதைக் கேட்டபோது அவள் குரல் இருந்த மாதிரியைக் கவனித்த மாரப்பவேள், மகள் தன்னைப் பார்த்து நகைக்கிறாளா அல்லது கோபிக்கிறாளா என்பதை அறிய முடியாமல் திணறினாரானாலும் அதை வெளிக்குக் காட்டாமல், "அதை நீ மறக்காதது பற்றி மகிழ்ச்சி மகளே!" என்று மீண்டும் கூறி நிலைமையைச் சமாளிக்க முயன்றார்.

"நானென்ன? அதை உலகமே மறவாதே!" என்று சற்று அழுத்திப் பதில் கூறினாள் பூவழகி.

"என்ன கூறுகிறாய் பூவழகி?"

"இதில் புரியாத விஷயம் ஏதுமில்லையே. நான் உங்கள் மகள் என்பதையும் நீங்கள் என் தந்தை என்பதையும் சோழ நாடு மட்டுமே முன்பு அறியும். இப்பொழுது தமிழகம் பூராவுமே நமது உறவை அறியும். பிற்காலத்தில் உலகமே அறியும். சரித்திரத்தில் நமது இருவர் பெயரும் நிலைத்து நிற்கப் புலவர் பெருமக்கள் கவிகளைப் புனைவார்களல்லவா?"

"அப்படியென்ன செய்துவிட்டோம் நாம்?"

"என்ன செய்யவேண்டும்? இளஞ்சேட்சென்னியை வஞ்சகத்தால் கொன்று, சோழ அரசைக் கைப்பற்றிய இருங்கோவேளின் உற்ற நண்பர் நீங்கள் என்பது உலகம் அறியுமே. அவர் மகளைச் சிறை வைத்தும் அதையும் பொறுத்து எப்படியாவது இருங்கோவேளின் நட்பு கிடைத் தால் போதும் என்று அமைதியுடனிருந்த மாரப்பவேள் பொறுமையின் அவதாரம் என்பது யாருக்குத் தெரியாது?

இப்பொழுது மக்களுக்கு நமது இருவர் பிரபாவமும் மிகமிக நன்றாகத் தெரியும். பிற்காலத்தில் இது சரித்திரத்தின் ஏடு களிலும் பொறிக்கப்படும். வேளிர்களின் புகழ் உலகமெங்கும் பரவும். எப்படி? வீரர் கூட்டமென்று அல்ல, வஞ்சகர் கூட்ட மென்று. அதில் தலையாய ஸ்தானம் தங்களுக்குக் கிடைக்கும். வேளிர் வாழ்வுக்காக, அரசுக்காக, புகழுக்காக மகளையும் இருங்கோவேளிடம் ஒப்படைத்த மாரப்பவேளின் பெயர் என்றென்றும் மனித வர்க்கத்தின் மனத்தில் நிலைத்து நிற்கும். சந்தேகமே வேண்டாம். ஆனால்..."

"ஆனால்?"

"இதில் ஒரு இடைஞ்சலிருக்கிறது. இத்தனை புகழ் தங்களை எய்த வைக்கும் கூண்டில் ஒரு பகுதி பலவீனமானது."

"அது எந்தப் பகுதியோ?" மாரப்பவேளின் கேள்வியில் கோபத்துடன் சிறிது கேலியும் கலந்து ஒலித்தது.

அவர் குரலில் தொனித்த கோபத்தையோ கேலியையோ லட்சியம் செய்யாமலே பூவழகி சொன்னாள், "பூவழகியைப் பற்றிய பகுதி" என்று.

"அந்தப் பகுதியில் என்ன விஷயம்?" என்று கேட்டார் மாரப்பவேள்.

உட்கார்ந்திருந்த பஞ்சணையில் சிறிது சாய்ந்து கொண்டு திடமாகவே பதில் சொன்னாள் பூவழகி: "தமிழ் மகளின் பண்பும் உறுதியும் அதில் கலந்து கிடப்பதுதான் விஷயம். எதைச் சாதித்தாலும் இரண்டு காரியங்களைச் சாதிக்கமட்டும் உங்களால் முடியாது. உயிருடன் என்னை இருங்கோவேளிடம் ஒப்படைப்பது ஒன்று; இருங்கோவேளை நிரந்தரமாகச் சோழர் அரியணையில் அமர்த்துவது இரண்டு."

"இந்த இரண்டையும் யார் தடுக்க முடியுமென்பதை நான் அறியலாமா?" என்று வினவினார் மாரப்பவேள்.

"ஆகா! தாராளமாய் அறியலாம். முதலாவதை நானே தடுக்கமுடியும். இரண்டாவதைத் தடுக்க ஒருவர் வருவார்" என்றாள் பூவழகி. 'ஒருவர் வருவார்' என்று சொன்னபோது பூவழகியின் குரலில் திடீரெனத் தவழ்ந்த மென்மையைக்

கண்டு, அந்த ஒருவர் யாரென்பதைப் புரிந்துகொண்ட மாரப்பவேள் சற்று இரைந்தே நகைத்தார். அத்துடன், "இளஞ்செழியனா, எங்கிருந்து வருவான்?" என்றும் வினவினார்.

"எங்கிருந்தென்று தெரியாது?"

"ஆனால் வருவானென்பது மட்டும் தெரியும் போலிருக்கிறது."

"ஆமாம்."

"சோதிடம் பழக்கமுண்டோ?"

"சோதிடத்துக்கும் மேம்பட்டது இருக்கிறது."

"அது என்னவென்று நான் அறியலாமா?"

"நல்ல சிந்தையுள்ள யாருமே அறியலாம். இதய சுத்தமாயிருப்பவர்களுக்கு அது சரியாக எடுத்துக் காட்டும் உண்மையை."

"ஆரூடமா?"

"இல்லை. அதற்கும் மேம்பட்டது. ஆண்டவனால் பிறப்பிலேயே ஏற்படுத்தப்பட்டது. உணர்ச்சி!"

"உணர்ச்சியா?" வியப்புடன் கேட்டார் மாரப்பவேள்.

"ஆம். உணர்ச்சிதான். சோதிடத்தையும் ஆரூடத்தை யும் விடத் திடமானது. கடவுளைப் போலவே மனிதயுக்திக்கும் சாத்திரத்துக்கும் எட்டாதது. நல்ல இதயங்களில் சதா ஊடுருவித் தெளியவைத்து வழி காட்டும் இணையற்ற இயற்கையின் குரல். அந்தக் குரல் இப்பொழுதும் கேட்கிறது. அவர் வருவார். வந்து இந்த நாட்டின் விபரீதங்களுக்கு முடிவு கட்டுவார். அப்படி வரும்போது நீங்கள் அறத்தின் பக்கமிருந்தால் வேளிர் குலத்துக்குப் பெருமை; அயோக்கியன் பக்கமிருந்தால் குலத்துக்குச் சிறுமை. இதில் எதையும் சம்பாதித்துக் கொடுக்க உங்களுக்கு உரிமை உண்டு."

மகளின் விவரணத்தைக் கேட்ட மாரப்பவேள் நீண்ட நேரம் மௌனமாகவே இருந்தார். உள்ளே பல குழப்பங்கள் எழுந்து தாண்டவமாடுவதை அவர் முகம் நன்றாகக் காட்டியது. பிறகு, மகளைப் பரிதாபத்துடன் உற்றுப் பார்த்துப்

பெருமூச்சு விட்டு, "பூவழகி! நீ எனக்கு ஒரே மகள். இந்த உலகத்தில் எனக்கு வேறு யாரும் கிடையாது. வேறு எதிலும் பந்தமும் கிடையாது. ஆனால் இந்த மண்ணில் பிறந்ததற்கு நாட்டு நலன் ஒன்றை மட்டும் நான் கவனிக்க வேண்டி யிருக்கிறது. அதை முன்னிட்டுத்தான் உன்னை இருங்கோ வேளுக்குத் திருமணம் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டேன்" என்று மெள்ளச் சொன்னார்.

"அதற்கு என் இஷ்டத்தைக் கேட்டீர்களா?" என்று வினவினாள் பூவழகி.

"இல்லை மகளே! கேட்கவில்லை. கேட்க அவகாச மில்லை. அவசியமுமில்லை. உனக்கும் இருங்கோவேளுக்கும் நடக்கக் கூடியது காதல் திருமணமல்ல. உன் மனத்தை இளஞ் செழியன் அபகரித்து விட்டது இரண்டு வருடங்களுக்கு முன்பே எனக்குத் தெரியும். யாரோ ஒருத்தியின் குங்குமம் அவன் கன்னத்தில் ஒட்டிக் கிடந்ததற்காக அவனை வீட்டை விட்டே விரட்டச் சொன்ன அன்றே அதைப் புரிந்து கொண்டேன் பூவழகி! காதலே அந்தக் கோபத்துக்கு அடிப்படை என்பதைக்கூட அறியும் ஆற்றலற்றவன் உன் தந்தை என்று நினைக்கிறாயா? இல்லை இல்லை. அத்தனை அறிவற்றவனல்ல நான். ஆனால் இன்றிருப்பது அன்றைய நிலையல்ல. நாடு தத்தளிக்கும்போது சொந்த உணர்ச்சிகள், சொந்த நலன்கள் எவற்றுக்குமே இடமில்லை. இருங்கோ வேளுக்கு உன்னையளிக்க நான் ஒப்புக் கொண்டதற்கு பல மான காரணங்கள் உண்டு. ஆனால் இந்தத் திருமணத்திற்கு ஒருவன் பேரிடைஞ்சலாக நிற்கிறான்..." என்று பேசிக் கொண்டு போன மாரப்பவேள் சிறிது பேச்சை நிறுத்தி மகளை ஏறெடுத்துப் பார்த்தார்.

"யாரவன்?" என்று உணர்ச்சியற்ற குரலில் கேட்டாள் பூவழகி.

மாரப்பவேளின் பதில் வரண்டு கிடந்த பூவழகியின் உணர்ச்சிகளைக்கூடத் தட்டி எழுப்பியதால் அவள் மஞ்சத்தி லிருந்து துள்ளி எழுந்தாள். "இருங்கோவேள்" என்று தந்தை

சொன்ன ஒற்றைச் சொல்லால் பிரமிப்படைந்து எழுந்த பூவழகி. "என்ன! என்ன? இன்னொரு முறை சொல்லுங்கள்" என்று கேட்டாள்.

"இருங்கோவேள்." திடமான குரலில் தயக்கம் சிறிதுமின்றிப் பதில் கூறினார் மாரப்பவேள்.

"இருங்கோவேளா! இருங்கோவேளா இந்தத் திருமணத்துக்குத் தடையாயிருக்கிறான்?" ஆச்சரியம் மண்டிக் கிடந்தது பூவழகியின் குரலில்.

"ஆம் அவனேதான்" என்றார் மாரப்பவேள்.

"என்னை மணக்க இஷ்டப்படாதவன் என்னை ஏன் இந்த மாளிகையில் சிறை வைத்திருக்கிறான்?" என்று வினவினாள் பூவழகி.

மாரப்பவேள் விஷமமாக முறுவலித்து, "மணக்க இஷ்டப்படுபவரைத்தான் சிறை வைக்க வேண்டுமென்ப தில்லை மகளே! என்னையும் ஆரம்பத்தில் இரண்டு மாத காலம் சிறை வைத்திருந்தான். என்னை மணக்க இஷ்டப் பட்டா வைத்தான் சிறையில்?" என்றும் கேட்டார்.

"பின் எதற்காகச் சிறை வைத்திருக்கிறான்!"

"காரணங்கள் பல உண்டு மகளே! ராஜீய காரணங்கள் அனைத்தையும் உனக்கு விவரிப்பது சாத்தியமில்லை. ஆனால் நன்றாக யோசித்துப் பார். உன்னைப் பலவந்தமாக மணப்பதானால், உன்னிடம் துன்மார்க்கமாக நடக்க இஷ்டப் பட்டிருந்தானானால் இருங்கோவேளுக்குச் சந்தர்ப்பங்கள் பல இருந்திருக்கின்றன. உன்னைக் கருவூர் பாழடைந்த மாளிகைக்கு அழைத்துச் சென்றபோது அவன் தீமை விளை வித்திருக்கலாம் அல்லது இந்த எல்லைப்புற மாளிகையிலும் துன்பங்களைத் தந்திருக்கலாம். ஆனால் இங்கும் சரி, கருவூர் வஞ்சியிலும் சரி, உன்னைத் தீண்டக்கூட முற்படவில்லை அவன். காரணம் உனக்கு நான் சொல்லுகிறேன். கேள். உன்னை வதுவை செய்து கொள்ள அவன் விரும்பவில்லை."

"அப்படியானால் சிறை வைக்கக் காரணம்?"

"உன்னைப் பாதுகாக்கும் வீரர்கள் இருவர். ஒன்று கரிகாலன். இன்னொன்று இளஞ்செழியன். இந்த இருவரையும் தன் வலைக்குள் இழுக்க நீ ஒரு தூண்டில் பூச்சி. அப்படித் தான் உன்னைக் கருதுகிறான் இருங்கோவேள். அதற்காகத் தான் உன்னை இங்கு சிறை வைத்திருக்கிறான். வேளிர்கள் பகைவர் இருவரில் ஒருவன் மாண்டுவிட்டான். இன்னொருவனை எந்த நிமிஷத்திலும் இந்த மாளிகையில் எதிர்பார்க்கிறான் இருங்கோவேள்..."

"மன்னர் கரிகாலரையா!"

"ஆம். அவன் எந்த நிமிடம் வந்தாலும் சிறை செய்ய ஒற்றர்கள் சதா இந்த மாளிகைமீது கண் வைத்திருக்கிறார்கள்" என்று விளக்கினார் மாரப்பவேள்.

"மாண்டு விட்டவர்..."

"ஆமாம் இளஞ்செழியன்தான்."

"அவர் மாளவில்லை."

"யார் சொன்னது?"

"மாண்டு விட்டதாக யார் சொன்னது உங்களுக்கு?"

"இளஞ்செழியனுக்கு விஷம் வைத்துக் கொன்ற டைபீரியஸே சொன்னான்."

பூவழகியின் முகத்தில் ஒரு வினாடிதான் சந்தேகச் சாயை படர்ந்தது. பிறகு அவள் கேட்டாள், "டைபீரியஸ் சொல்வது உண்மையென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அவன் ஏன் பொய் சொல்ல வேண்டும்?" என்று கேட்டார் மாரப்பவேள்.

"அவர் இருப்பது தெரிந்தால் வாணகிரியிலுள்ள படையின் யவனர் பிரிவு அவனுக்குப் படியாது. மற்றப் படைப் பிரிவுகளும் அவனை எதிர்க்கும். ஆகவே புகாரில் யவனர் அரசை நிலைநிறுத்த முடியாது."

"அத்தனை நிச்சயமா அது?"

"புகாரில் யவன அரசு நிலைத்துவிடும் என்று அவன் நம்பினால் இத்தனை நாள் ராணி அங்கு முடி சூடியிருப்பாள். இருங்கோவேள் புகாரை யவனருக்குச் சாஸனம் செய்து இத்தனை மாதங்களுக்குப் பிறகு அந்த சாஸனத்துக்கு ஒரே இடைஞ்சலான படைத் தலைவரும் மறைந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு, ராணிக்கு அவன் மகுடாபிஷேகம் செய்யவில்லையென்றால் அதற்குக் காரணம் இருக்க வேண்டும்?"

"என்ன காரணம் என்று நினைக்கிறாய்?"

"எந்தச் சமயத்திலும் படைத் தலைவர் தோன்றுவார் என்று டைபீரியஸ் கருதுகிறான்."

பூவழகியின் பேச்சு பெரும் விந்தையாயிருந்தது மார'ப்ப வேளுக்கு. இளஞ்செழியனிடமுள்ள ஆழ்ந்த காதலால் அவள் இறந்துவிட்டவனை இருப்பவனாக நம்புகிறான் என்றே நினைத்தார். ஆகவே வருத்தத்துடன் சொன்னார். "மகளே! உன் நம்பிக்கை எனக்கில்லை. சுவடு தெரியாமல் ஆறு மாத காலம் மறைந்துவிட்டவன், டைபீரியஸால் விஷம் வைத்துக் கொல்லப்பட்டவன், திரும்பி வருவானென்று எதிர்பார்க்க, என் மனம் இடம் கொடுக்கவில்லை. இளஞ்செழியன் உயிருடனிருந்தால், உன்னை இத்தனை நாள் சிறையில் விட்டு வைத்திருக்கமாட்டான். சோழ நாட்டிலும் இந்த அமைதி இருக்காது. அவனிருந்தால் நான் இருங்கோவேள் பக்கம் சாய மாட்டேன். வேளிர்கள் பெருமை சிறுமைகளைப் பற்றியும் கவலைப்படமாட்டேன். ஆனால் இல்லாத ஒருவனை வைத்து நாட்டுக்குத் திட்டம் போட முடியாது. இப்பொழுது நாட்டில் வேண்டியது உறுதியான அரசியல். யவனர்கள் புகாரைக் காத்து நிற்கிறார்கள். சோழ நாட்டின் வாயில் காக்கப்பட்டி ருக்கிறது. சேர பாண்டிய மன்னர்கள் இருங்கோவேளுடன் நட் புரிமை கொண்டாடுகிறார்கள். ஆக, உள்நாட்டிலும் அமைதி ஓரளவு இருக்கிறது. கரிகாலன் இருக்குமிடம் தெரியவில்லை. பூம்புகாரிலேயே சிறுபடை நிறுவிய இரும்பிடர்த்தலையாரும்,

கரிகாலனும் இருக்குமிடம் இரண்டு மாத காலமாகத் தெரியவில்லை. இனி அவர்கள் வெளிவந்தாலும் படை திரட்டுவது கஷ்டம். படை திரட்டினாலும் புகாரின் யவனர்கள், உறையூர் இருங்கோவேள் சேர பாண்டிய மன்னர்கள், இவர்கள் கூட்டுப் படைகளை எதிர்ப்பது நடவாத காரியம். அப்படி எதிர்க்கும் திறன் கரிகாலனுக்கு ஏற்பட்டால் பெருவாரியான மக்கள் போர்ப் பிசாசுக்குப் பலியாவார்கள். ரத்த வெள்ளம் இந்த நாட்டில் ஓடும். இதை அனுமதிப்பது சரியல்லவென்று நான் நினைக்கிறேன். ஆகையால்தான் உன்னை இருங்கோவேளுக்கும் கொடுக்க வேண்டுமென்று பிரும்மானந்தர் கூறிய யோசனையை ஏற்றேன். இருங்கோவேளை எதிர்ப்பவர் இருவர். ஒன்று நாங்கூர்வேள், இனனொருவன் நான். இப்பொழுதுள்ள நாங்கூர்வேள், இருங்கோவேளின் அரண்மனைக் காவலர் தலைவன். நான் ஒருவனும் சேர்ந்துவிட்டால் ஆதரவு தரும் வேளிர்கள் பட்டியல் பூர்த்தியாகி நாட்டில் ஒற்றுமை ஏற்படும். போரைத் தவிர்க்கலாம் என்று பிரும்மானந்தர் சொல்லி யனுப்பினார். சரியென்று சம்மதித்தேன். நாட்டின் அமைதிக்கு மட்டுமல்ல, உன் பிற்காலத்துக்கும் நல்ல ஏற்பாடு உன் திருமணம். ஆனால் ஒன்று நிச்சயம். நீயாக இஷ்டப் பட்டாலொழிய இருங்கோவேள் உன்னை மணக்க முடியா தென்று திட்டமாகக் கூறிவிட்டான்."

பூவழகி சிரித்தாள். தந்தை பேசியது அத்தனையும் விசித்திரமாயிருந்தது அவளுக்கு. ஆகவே ஒரு கேள்வி கேட்டாள்: "ஆகவே திருமணத்தை வற்புறுத்த இவ்விடம் வந்தீர்களா?"

"அதுவும் ஒரு காரணம். நான் புகார் செல்கிறேன் அதற்காக உன்னிடம் விடை பெறவும் வந்தேன்" என்றார் மாரப்பவேள்.

"என்னையும் அழைத்துப் போங்களேன் புகாருக்கு" என்றாள் பூவழகி.

"அதற்கு இருங்கோவேள் அனுமதியில்லை. உன்னைக் காட்டிக் கரிகாலனைச் சிறை செய்ய இஷ்டப்படுபவன் உன்னை இங்கிருந்து அனுப்புவானா?" என்று மாரப்பவேள் கேட்டார்.

"மாட்டான், மாட்டான்" என்றாள் பூவழகி.

"இருங்கோவேளைக் கண்டு பயப்பட அவசியமில்லை பூவழகி. உனக்கு எந்தத் தீங்கும் நேரிடாமல் காப்பதாக ஆணையிட்டுக் கொடுத்திருக்கிறான் இருங்கோவேள்" என்றார் மாரப்பவேள்.

"வஞ்சகனின் ஆணை" என்று இகழ்ச்சியுடன் கூறினாள் பூவழகி.

மாரப்பவேள் அவளை நெருங்கி அவள் தோளை மட்டும் பற்றி, "பூவழகி! பயப்படாதே. நானில்லாதபோது இந்த மாளிகைமீது கண் வைக்க இரண்டு ஒற்றர்களை நியமித்திருக்கிறேன். இருங்கோவேள் தீமை செய்ய முற்பட்டால் அதையும் தடுக்கும் திறன் வாய்ந்தவர் அவ்விருவரும். ஆகவே எதற்கும் அஞ்சாதே. நான் சொன்ன விஷயங்களைச் சிந்தித்துப் பார், நாட்டு நன்மையை முன்னணியில் வைத்துச் சிந்தனையை ஓட்டு. இப்பொழுது நாட்டுக்கு வேண்டியது போரல்ல, அமைதி. நான் திரும்பி வந்ததும் திருமணத்துக்குச் சம்மதம் கொடுக்கச் சித்தமாயிரு" என்று கூறிவிட்டு வந்த வேகத்தில் அந்த அறையைவிட்டு வெளியே சென்றார்.

பூவழகியின் இதயம் குழம்பிக் கிடந்தது. அந்தக் குழப்பத்தில் தந்தையும் அவருடன் வந்த வீரர்களும் ஏறிச் சென்றதால் பலமாக வாயிலில் கேட்ட புரவிகளின் குளம்படிச் சத்தம்கூட அவள் காதில் விழவில்லை. நாள் பூராவும் ஏதேதோ சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தாள் அவள். மாலை மறைந்து மையிருள் சூழந்து பஞ்சணையில் படுத்த நீண்ட நேரத்துக்குப் பின்பும் அவள் யோசனையிலேயே லயித்திருந்தாளாதலால், இரவு ஏறிய வெகு நேரத்துக்குப் பின்பும் தூக்கம் பிடிக்காமல் வெளியேயிருந்த தேவதாரு மரக் கூட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு எதையோ கேட்பதற்காக, "இன்பவல்லி" என்று குரல் கொடுத்து, பஞ்சணையிலிருந்து திரும்பினாள். அறை மூலையில் வழக்கமாகப் படுக்கும் மஞ்சத்தில் இன்பவல்லி இல்லை. திறந்த கதவுக்கருகில் சயனக் கிருகத்துக்குச் செல்லும் அலங்காரங்களுடனும் காமக்கண்களுடனும் இருங்கோவேள் நின்றிருந்தான்.

83. சுடும் கற்பு

பிறைகள் ஐந்து ஓடிவிட்டதால் பளிச்சென்று கிரணங்களைப் பெற்ற ஆறாம் பிறை மதி, சாளரத்தின் மூலமாகப் பெரும் வெள்ளிப்பாளமொன்றை அறையில் பாய்ச்சியிருந்தாலும், அறை மூலையிலிருந்த பெரும் குத்து விளக்கும் சுடர் விட்டு நன்றாகவே எரிந்துகொண்டிருந்ததாலும், வாயிற்படிக் கருகில் நின்ற இருங்கோவேளின் அலங்கார விசேஷத்தையும், அவன் கண்களில் துள்ளி நின்ற காமமும் வஞ்சகமும் கலந்த விபரீத ஒளியையும் சரியாகக் காண முடிந்தது பூவழகிக்கு. அளவுக்கதிகமான தடிப்புடன் வளர்ந்து காக்கையின் இறகுகளைப் போல் வகிர்ந்து எடுக்கப்பட்டு முரட்டுத்தனமாய்த் தோள்களைக் குத்துவனபோல கிடந்த இருங்கோவேளின் முடியில் சிறந்த வாசனைத்தைலம் தடவப்பட்டிருந்ததை அறையைச் சூழ்ந்த கதம்ப வாசனையிலிருந்து பிரித்துப் பார்த்து அறிந்த பூவழகி, அத்தனை தைலத்துக்கும் அடங்காமல் அவன் தலைமுடி சிலிர்த்துப் பயங்கரமாகவே நின்றதைக் கண்டு, 'மனிதனின் முரட்டுத்தனத்தை முடிகூட எடுத்துக் காட்டும் போலிருக்கிறது' என்று நினைத்தாள். மயிலின் கண்களைப் போல் சரிகை வேலை செய்யப்பட்டு அவன் தோளில் புரண்ட மேலாடை, விசிறிபோல் மடிக்கப்பட்டுப் பாதம் வரையில் தொங்கி அவன் காலிலிருந்த தங்க முகப்புடைய

பாதரட்சையைத் தொட்டுக் கொண்டிருந்ததால், தன் அறைக்குள் வரும்போது பாதரட்சையை அகற்றி விட்டு வரத் தெரியாத பண்பற்றவன் அந்த இருங்கோவேள் என்பதை நினைத்துப் பார்த்த பூவழகி அவன்மீது எல்லையற்ற வெறுப்பே கொண்டாள். அந்த வெறுப்பின் விளைவாக, இருங்கோவேளின் மார்பில் பரந்து அறையெங்கும் பரிமள கந்தத்தைச் சுழலவிட்டு, முடியின் தைல வாசனையும் அதிக மாகத் தலை காட்டவிடாத சந்தனக்குழம்பின் நறுமணம்கூட அவளுக்கு மிதமிஞ்சிய எரிச்சலையே தந்தது. அவன் மார்பில் அணிந்திருந்த விலை உயர்ந்த மகரகண்டியைக் கூட அவள் லட்சியம் செய்யவில்லை. 'இத்தனையும் சோழ வேந்தர் களுக்குச் சொந்தமானது. இவன் திருடன்தானே' என்று எண்ணியதால் கோப நகையொன்று அவள் இதயத்தில் எழுந்து அதன் சாயை முகத்திலும் பரவியது. அவனது ஒவ் வொரு அலங்காரமும் அவளுக்கு மிதமிஞ்சிய கோபத்தையே தந்தது. யாரும் கண்டு அஞ்சும் அவனது பயங்கர மீசையும் வஞ்சகக் கண்களும்கூட அவளுக்கு வெறுப்பைத் தந்தனவே யொழிய பயத்தை எள்ளளவும் தரவில்லை. ஆகவே அந்தச் சந்தர்ப்பத்தில் வேறு பெண்ணாயிருந்தால் காட்டக்கூடிய கிலியையோ நடுக்கத்தையோ சிறிதும் காட்டாத பூவழகி, சாய்ந்து கிடந்த பஞ்சணையைவிட்டு நகராமலும், அரசன் வந்திருக்கிறானே என்ற எண்ணத்தால் மரியாதைக்கு அடை யாளமாக, 'வாருங்கள்' என்று முகமன்கூட அழைக்காமலும், காமுகன் வந்திருக்கிறானே என்ற பயத்தில், 'ஏன் வந்தீர்கள் இப்பொழுது?' என்று நடுங்கி வார்த்தைகளை உதிர்க்காமலும், ஏதோ பணியாளை நோக்கும் அரசிபோல் நிர்ப்பயமாக ஒருமுறை அவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

அந்தப் பார்வையில் ஏதாவது எச்சரிக்கை இருந்திருக்க வேண்டும். கற்புக்கரசிகளை மாற்றார் அணுகுவது சுலபமல்ல என்ற ஆன்றோர் வாக்கிலும் உண்மையிருக்க வேண்டும். ஆகவே காமத்தால் பீடிக்கப்பட்டவனும் வஞ்சகனுமான

இருங்கோவேள்கூட அந்தப் பார்வையின் விளைவாக, நின்ற இடத்தைவிட்டு ஓர் அடிகூட முன் எடுத்து வைக்காமலே அவளை மெல்ல அழைத்தான், "பூவழகி" என்று.

பூவழகி பதில் ஏதும் சொல்லாததால் அவனே மேலும் பேசி நிலையைச் சமாளிக்க முற்பட்டு, "என்னை நீ எதிர் பார்த்திருக்க மாட்டாய்..." என்று சற்று இழுத்ததுபோல் கூறினான்.

இம்முறை பூவழகியின் கண்கள் அவன் கண்களைத் தைரியத்துடன் தாக்கின. பெண்களின் கண்களுக்கு 'பூசலம்பு' (போரிடும் அம்புகள்) என்ற உவமையை பிற்காலத் தமிழ்க் கவிச் சக்கரவர்த்தி கொடுத்ததற்கு, முற்கால அத்தாட்சியாக விளங்கிய அந்த விழிகளின் கூர்மையைக் காணமாட்டாத இருங்கோவேளின் வஞ்சக விழிகள் சிறிது சலனப்படவும் தொடங்கின. அவள் விழிகளைப் போலவே வார்த்தைகளும் அவன் நெஞ்சத்தைப் பிளந்தன. "எதிர் பாராதபடி நடந்து கொள்வதில் தாங்கள் சமர்த்தர் என்பதை உலகம் அறியுமே" என்று வெறுப்புச் சொற்களைக் காட்டினாள் பூவழகி.

இதனால் தாக்குண்ட அவன் இதயம் தன் சாந்தப் போர்வையைக் கிழித்துக்கொண்டதால், சற்றுக் கடுமை யாகவே பதில் சொல்ல முற்பட்ட இருங்கோவேள், "எதிர் பாராத இன்பத்தில் சுவையிருக்கிறது பூவழகி. அதை அடையப் பின்வாங்கும் சுபாவம் இருங்கோவேளுக்கு இல்லை" என்று சுட்டிக் காட்டினான்.

"அதையும் உலகம் அறியும்" என்று சர்வ சாதாரண மாகவே பதில் சொன்னாள் பூவழகி.

"ஆனால் நீ அறியவில்லை" என்றான் இருங்கோவேள்.

"நன்றாக அறிந்திருக்கிறேன்." திட்டவட்டமாக எழுந்த பூவழகியின் பதிலில், சொற்கள் அசாத்திய வேகத்தைப் பெற்றிருந்தன.

அவற்றின் வேகத்தையும் அவற்றைப் பூவழகி உச்சரித்த முறையையும் கண்ட இருங்கோவேள் சற்று அச்சத்துடனேயே கேட்டான்: "அறிந்துமா அலட்சியம் செய்கிறாய் பூவழகி?"

"அறிந்ததினால்தான் அலட்சியம்."

"புரியவில்லை பூவழகி."

"புரியச் சொல்கிறேன் கேள். நெருப்பில் வீடுகள் வேகும் இருங்கோவேள். சடலங்கள் உருக்குலையும். நஞ்சில் உயிர்கள் போகும். கற்புடைய மகளிர் உறுதி மட்டும் நெருப்பைக் கண்டு கலங்குவதில்லை. நஞ்சைக் கண்டும் அஞ்சுவதில்லை. ஏன் தெரியுமா?"

"ஏன்?" மூர்க்கத்தனமான குரலில் கேட்டான் இருங்கோவேள்.

"கற்பு நெருப்பையும் சுடும் சக்தி உள்ளது. கற்புடைய பெண் தன் மனத்துக்குப் பிடிக்காதவனுக்கு நஞ்சைவிட விஷத்தன்மை வாய்ந்தவள்."

"தீயிடுபவன் தீயைக் கண்டு அஞ்சுவதில்லை பூவழகி. பிடாரன் பாம்பின் நஞ்சைக் கண்டு கலங்குவதில்லை."

"அச்சம் வேறு, விளைவு வேறு. அச்சமில்லை என்பதற்காக ஒருவனுக்குத் தர்மத்தின் தண்டனை கிடைக்காதிருப்பதில்லை. பிடாரன் பாம்பின் விஷத்தைக் கண்டு அஞ்சாதிருக்கலாம். ஆனால் பாம்பு விஷத்துட னிருக்கும் காலத்தில் அது தீண்டினால் அந்தப் பிடாரனும் மாய வேண்டியவன்தான். அறம் தாக்கும்போது எந்த விஷத்தின் மாற்று மருந்துகளும் பயன் தருவதில்லை."

இதைக் கேட்டதும் இருங்கோவேளின் பயங்கர மீசை சற்று அசைந்து அது மறைத்திருந்த உதடுகள் இடைவெளி கொடுக்கவே அவன் இதழ்களில் இகழ்ச்சிக் குறி துளிர் விட்டது. இகழ்ச்சி குரலிலும் தொனிக்கக் கூறினான் இருங்கோ வேள்: "நன்றாகப் பேசுகிறாய் பூவழகி. கேட்பதற்கு நன்றாயிருக் கிறது உன் தத்துவம். ஏட்டில் எழுதலாம். படிக்க இனிப்பாக இருக்கும். ஆனால் அனுபவத்துக்கு ஒவ்வாது. இளஞ்சேட் சென்னியை அறத்தின் அடையாளம், அறத்துக்கே அஸ்தி வாரம், லட்சியம் என்று போற்றினார்கள். இருப்பினும் நெருப்பு அவனை மாய்த்தது. அறத்தைக் கண்டு அது அஞ்சிய தாகத் தெரியவில்லை. நாங்கூர்வேளையும் நெறியுடையவர் என்றுதான் நாடு சொல்கிறது. ஆனால் பாவம், அவரை நச்சுமாய்த்து விட்டதாகக் கேள்விப்பட்டு எத்தனை தூரம் வருந்தினேன் தெரியுமா? இந்த விருத்தாந்தங்களை நீயும் கேட்டிருப்பாய்." இதைச் சொல்லி முடித்ததும் வருத்தத்துக்கு அறிகுறியாகப் பெருமூச்சும் விட்டான் அந்த அயோக்கியன்.

பூவழகியின் கண்கள் ஆச்சரியத்தாலும் மிதமிஞ்சிய வெறுப்பாலும் மலர்ந்தன. பெரும் பாதகச் செயல்களைப் பெரும் வெற்றிகளைப்போல் இருங்கோவேள் கூறுவதைக் கண்ட பூவழகி, 'அவன் மனிதனா அரக்கனா?' என்பதை அறிய முடியாததால் ஏதும் பதில் சொல்லாமல் அவனைக் கூர்ந்து நோக்கினாள். அவள் வாயடைத்து விட்டதைக் கண்ட இருங்கோவேள் சற்றுப் பெரிதாகவே நகைத்தான். "ஏன் பூவழகி? நிலைமை புரிந்துவிட்டதா உனக்கு? உன் வாய், சொல் முத்துக்களை உதிர்ப்பதை அறவே நிறுத்திவிட்டதே?" என்று கேட்கவும் செய்தான்.

"உண்மைதான் இருங்கோவேள்" என்றாள் பூவழகி.

"எது பூவழகி?" வியப்புடன் எழுந்தது இருங்கோவேளின் கேள்வி.

"முத்துக்கள் உதிர்வது நின்றுவிட்டது."

"ஏன் நின்றுவிட்டது?"

"முட்டாளுக்கு முன்னால் முத்துக்களை உதிர்த்துப் பயனென்ன? அவற்றின் மதிப்பு அவனுக்கு என்ன தெரியப் போகிறது?"

மிகத் துணிவுடன் பூவழகி சொன்ன பதிலால் சினத்தின் எல்லையை அடைந்த இருங்கோவேளின் மனம் பெரும் எரி மலையாக வெடிக்க ஆரம்பித்தது. தன்னிடம் சிறைப் பட்டிருக்கும் ஒரு பெண், எந்த நிமிஷத்திலும் தான்கட்டாய

மாக வசப்படுத்திக் கொள்ளக்கூடிய நிலையிலிருக்கும் ஓர் அபலை, சோழ ராஜ்யாதிபதியான தன்னைக் கேவலம் ஒரு துரும்புபோல் மதித்துப் பேசியதால், அதுவரை அவனைக் கவர்ந்திருந்த காம உணர்ச்சி உடைந்து கோப உணர்ச்சி மேலெழுந்ததால் சற்று இரைந்து பேச முற்பட்ட இருங்கோ வேள், "பூவழகி! யாரிடம் பேசுகிறோம் என்பதை மறந்து பேசுகிறாய். எந்த நிலையில் நீ இருக்கிறாய் என்பதையும் மறந்து பேசுகிறாய். பூவழகி! ஆம் ஆம்! உனக்கு உன் தந்தை சரியான பெயரைத்தான் சூட்டியிருக்கிறார். இங்கிருந்து பார்க்கும் போதே உன் உடல் புஷ்பம் போல் தானிருக்கிறது. அதைத் தழுவ என் கரங்களும் துடிக்கவே செய்கின்றன. இருப்பினும் பூவைக் கசக்கி முகர இஷ்டப்படவில்லை நான். உன்னை எனக்களிக்க உன் தந்தை இஷ்டப்பட்டு விட்டார். நாடு ஒரு ராணியைத் தேடுகிறது. அரியணையில் பாதி இடம் காலியா யிருக்கிறது. ஆகையால் உன்னிடம் மன்றாடுகிறேன். அந்தப் பாதி இடம் பூர்த்தியாகட்டும். உனக்கு அரச யோகம் நிலைக் கட்டும்" என்று பாதி பயமுறுத்தலாகவும் பாதி கெஞ்ச லாகவும் கூறினான்.

பூவழகி அப்பொழுதும் பஞ்சணையிலிருந்து அசை யாமலே பதில் சொன்னாள். "அரச போகம் நிலைக்காது இருங்கோவேள். நீ உட்கார்ந்திருக்கும் பாதி அரியணை உனக்கே நிலையற்றது. ஆகவே மீதி பாதி அரியணைக்கு ஆள் தேடாதே" என்ற பூவழகியின் பதிலில் உறுதி மிகுந்திருந்தது. கேலியும் கலந்திருந்தது.

"என் அரசை யார் பறிக்க முடியும்?" என்று கேட்டான் இருங்கோவேள்.

"அதற்கு உரிமையுடையவர்."

"கரிகாலனா!"

"ஆம்."

"அவனிருக்குமிடம் தெரியவில்லை."

"காலம் வரும்போது தெரியும்."

"எந்தக் காலம்?"

"உன் அரசு குலையும் காலம். எந்த அதமர்த்துக்கும் உலகத்தில் முடிவு என்பது ஒன்று உண்டு."

"என் அரசு திடப்பட்டு விட்டது பூவழகி. அதை இனி அசைக்க யாராலும் முடியாது. சோழ நாட்டின் பெரு வாசலான புகாரில் எனக்கு உயிரைக் கொடுக்க யவனர்கள் காத்து நிற்கிறார்கள்..." என்ற பேச்சை பூவழகியின், "ஆம் ஆம்" என்ற கேலி ஆமோதிப்பு இடைமறிக்கவே, இருங்கோவேள் கேட்டான், "என்ன ஆமோதிக்கிறாய் பூவழகி?" என்று.

"உன் அரசை நிலைக்கச் செய்ய முதலில் துறைமுகத்தை வெளிநாட்டாருக்கு அர்ப்பணம் செய்துவிட்டாய். நாட்டில் ஒரு பகுதி உன்னிடமிருந்து போய்விட்டது" என்றால் பூவழகி.

"போகாது பூவழகி, போயிருப்பது தற்காலிகமாகத்தான். மறைந்திருக்கும் கரிகாலன் என் கையில் சிக்கட்டும். அந்த நாளிலிருந்து ஒரே வாரத்தில் புகாரை யவனர்களிடமிருந்து பறித்துவிடுவேன். சோழ நாட்டின் கடல் வாயிலை இன்னொருவர் கையில் ஒப்படைக்க நான் விரும்பவில்லை" என்றான் இருங்கோவேள்.

"யவனரை வஞ்சிக்க உத்தேசமா?"

"இதெல்லாம் வஞ்சகமல்ல ராஜதந்திரம்."

"ராஜதந்திரத்துக்குப் புது இலக்கணம் இது இருங்கோ வேள்."

"ஆனால் பலன் தரும் இலக்கணம் பூவழகி."

"அதிக நாள் பலன் தராது. யவனர்கள் நீ நினைப்பது போல் முட்டாள்களில்லை. அவர்கள் தலைவன் டைபீரியஸ் போர்த் தந்திரத்திலும் ராஜதந்திரத்திலும் இணையற்றவன். அவனை வெல்ல முடியாது. அவனை வென்றாலும் அவன் தலைவியை வெல்ல முடியாது."

இருங்கோவேள் பலமாக நகைத்தான். "ராணியைச் சொல்கிறாயா பூவழகி? அந்தப் பொற்கொண்டைப் பேரழகி

என் கையில் சிக்க அதிக நாளாகாது. உனது அந்தப்புரத்தில் வெகு சீக்கிரம் அவளுமிருப்பாள்" என்று அந்த வஞ்சகன் கூறினான். ராணியை நினைத்த மாத்திரத்தில் அவன் கண்களில் காமவெறி அதிகமாகியது. கண்கள் கனவுலகத்துக்கும் சில வினாடிகள் சென்றன.

ராணியின் பேச்சைக் கேட்டதுமே அவன் கண்களில் தோன்றிய காமவெறியைக் கண்ட பூவழகி, 'இவன் மனிதனா மிருகமா' என்று உள்ளுக்குள் எண்ணமிட்டாள். அவள் உள்ளத்திலோடிய எண்ணங்களைப் புரிந்து கொள்ளாத இருங்கோவேள், மேற்கொண்டு ஏதும் பேசாமல் பூவழகியின் பஞ்சணையை நோக்கி நடந்து வரத் தொடங்கினான். ராணியை நினைத்த மாத்திரத்தில் அவன் உள்ளே எழுந்து ரத்தத்தில் சுழலத் துவங்கிவிட்ட மிதமிஞ்சிய காமவெறி அதுவரை அச்சப்பட்டுக் கிடந்த கால்களுக்கு உறுதியூட்டி விட்டதால் அவன் நடையிலும் வெறி தெரிந்தது. கண்களிலிருந்த நிலை சொல்லத் தேவையில்லை. புறாவை நோக்கி பருந்துபோல் பஞ்சணையை நோக்கி வந்த இருங்கோவேளைக் கண்டதும் உள்ளூர ஓரளவு அச்சம் கொண்ட பூவழகி பஞ்சணையைவிட்டுச் சரேலென்று எழுந்து, "நில் அப்படியே" என்று கூறினாள், பெரிதாக.

"நான் இங்கு வந்தது என் குண விசேஷங்களையும், தத்துவ சாத்திரங்களையும், ராஜதந்திரங்களையும் பற்றி இரவு பூராவும் தர்க்கிக்க அல்ல பூவழகி. உன் பூவுடலை அணைக்கவே வந்தேன். அணையாமல் அரண்மனை செல்ல மாட்டேன். இத்தனை நேரம் நான் வாளாவிருந்ததற்குக் காரணம் பூவைக் கசக்கி முகர இஷ்டப்படாததால். ஆனால் புஷ்பச் செடியிலும் தோன்றும் முட்கள் அதிகமாகக் குத்தும் போது எந்த மனிதனும் பொறுமை இழக்கிறான். இனி என்னைத் தடுத்துப் பயனில்லை. வா இப்படி" என்று கைநீட்டி அவளைப் பிடிக்க முயன்றான்.

பூவழகி அவனுக்கு எட்டாமல் சற்றுத் துரிதமாக நடந்து அறையின் மூலையில் குத்துவிளக்கின் பக்கம் சென்று நின்று

கொண்டாள். அப்பொழுதும் அணுகி வந்து கொண்டிருந்த இருங்கோவேளை நோக்கி, "இருங்கோவேள்! கிட்டே நெருங்காதே. நெருப்பு இளஞ்சேட் சென்னியைத்தான் சுடும் என்பதில்லை. உன்னையும் சுடும். பேசாமல் அரண்மனை நோக்கிப் போய்விடு. உன் ஆணையை மறவாதே" என்று எச்சரித்தாள். அவள் குரலிலிருந்த எச்சரிக்கை, ஈட்டிகள் போல் ஜொலித்த அவள் கண்களிலும் தெரிந்தது.

ஆணையைப் பற்றிச் சொன்னதும் சற்று நின்ற இருங்கோவேள், "ஆணையா? எந்த ஆணை?" என்று கேட்டான்.

"என் தந்தையிடம் நீ ஆணை இடவில்லை என்னைக் காப்பதாக?"

"ஆம், ஆணையிட்டேன், அந்த முட்டாளைப் புகார் அனுப்ப. இங்கு அவனிருக்கும் வரை இந்த எல்லைப்புற மாளிகைக்கே வர முடியவில்லையே பூவழகி. எத்தனை இடைஞ்சலாக நின்றான் எனக்கும் என் இன்பத்துக்கும் குறுக்கே! இப்பொழுது உன் தந்தையில்லை உன்னைக் காக்க. உன் காதலனும் இல்லை. ஒருவனைப் புகாருக்கு அனுப்பி விட்டேன். இன்னொருவனை டைபீரியஸ் வானுலகுக்கு அனுப்பிவிட்டான். புரிகிறதா? இனிமேல் எட்ட நிற்பதில் பயனில்லை. வா இப்படி" என்றான்.

"வஞ்சகனுடைய ஆணை எத்தன்மையது என்பதை என் தந்தை அறியாரென்று நினைக்கிறாயா? நீ அத்துமீறி நடந்தால் என்னைக் காக்க இருவரை விட்டுப் போயிருக்கிறார். நான் கூவினால்...!"

"உன் கூவல் இன்பமாகக் காட்டில் எதிரொலி செய்யும். உன் தந்தை ஒற்றர்களை விட்டுப் போனதை இருங்கோவேள் அறியாதிருப்பானென்று நினைக்கிறாயா பூவழகி! இந்த உறையூரிலுள்ள உன் நண்பர்கள் நடவடிக்கை ஒவ்வொன்றையும் என் ஒற்றர்கள் கவனிக்கிறார்கள். உன் தந்தை விட்டுப்

போன அவரது மெய்க்காவலர் இருவரும் சிறையிலிருக்கிறார்கள். மாரப்பவேள் உறையூரின் எல்லையைத் தாண்டு முன்பே அவரை என் வீரர்கள் பிடித்துவிட்டார்கள். இனி உன்னை யாரும் எதுவும் காக்க முடியாது."

"யாரும் என்று வேண்டுமானால் சொல். ஆனால் எதுவும் என்று சொல்லாதே. உனக்கு உயிரின் மேல் ஆசை இருந்தால் கிட்டே வராதே. பெண்களின் கற்பின் சக்தியை நீ அறிய மாட்டாய்."

இங்கோவேள் மீண்டும் நகைத்தான், "நீயாக இஷ்டப்பட்டு என்னை ஏற்றுக் கொள் பூவழகி, உன்னை ராணியாக்குகிறேன்.இல்லையேல் உன்னை பலவந்தமாக அடைந்து என் காமக் கிழத்தியாக்குவேன். இரண்டு பதவிகளில் நீ இஷ்டப்பட்டதை அடையலாம். எது வேண்டும் சொல். வீணாகக் கற்பு, உறுதி என்ற அர்த்தமற்ற சொற்களைக் கொட்டி என்னை மிரட்டாதே" என்று கூறிய இருங்கோவேள் திடீரென ஒரு கரத்தை நீட்டி பூவழகியின் இடது கரத்தைப் பிடித்தான்.

வேறாரு பெண்ணாயிருந்தால் அந்த நிலையில் அலறியிருப்பாள். கையை திமிரியிருப்பாள், அறையின் மூலைக்கு மூலை ஓடியிருப்பாள். அது எதையும் செய்யவில்லை பூவழகி. அவள் முகத்தில் உறுதி மட்டும் பலமாக இருந்தது. கண்களில் ஏதோ பயங்கர ஒளி சுடர்விட்டது. கையைப் பிடித்ததும் அவள் அலறாமலும் கையைத் திமிறாமலும் இருந்ததைக் கண்ட இருங்கோவேள் அவளைத் தவறாகப் புரிந்து கொண்டான். அத்தனை நேரம் அவள் வாதிட்டது வெளிப் பூச்சு என்று நினைத்தான். ஆகவே தன் தலையை அவள் முகத்தை நோக்கித் தாழ்த்தினான். அப்பொழுதும் அவள் அலறவில்லை. திமிறவுமில்லை. அலறியதும் திமிறியதும் இருங்கோவேள்தான். அவன் உடலில் திடீரென நெருப்புப் பலமாகச் சுட்டது. "ஐயோ!" என்று அலறினான் அவன். "அடி பாவி! உனக்கு என்ன துணிச்சல்!'' என்று கூவிக்கொண்டே

பின்னடைந்து மேல் சரிகைத் துணியைத் தரையில் எறிந்தான். மிகுந்த பயத்துடன் விசிறி எறியப்பட்ட அவன் சரிகைத் துணி பூவழகிக்கும் அவனுக்கும் இடையே பெரிதாக எரிந்தது. கற்பின் அக்கினியே காக்க வந்ததுபோல் தனக்கும் இருங்கோவேளுக்கும் இடையே எரிந்து கொண்டிருந்த அந்தச் சரிகைத் துணியையும் நோக்கி இருங்கோவேளையும் நோக்கிக் கையில் குத்துவிளக்குடன் நின்று கொண்டிருந்த பூவழகி, அவனெதிரே ஏதோ பெரும் அஸ்திரத்தை ஏந்தி வந்திருக்கும் தேவதைபோல் நின்றாள். கையிலிருந்த குத்து விளக்கை எடுத்துக் காட்டி தேவதை பேசுவது போலும் பேசினாள். "இருங்கோவேள், நீ என்னை நெருங்க முற்பட்டதும் இந்த விளக்கு லஷ்மியை நான் பாதுகாப்புக்கு நெருங்கினேன். நீ என் கையைப் பிடித்ததுமே விளக்கின் சுடரை உன் மேல் துணியில் சாய்த்துப் பிடித்தேன். ஆகையால் மேல் துணி மட்டும் பிடித்து உன் முதுகில் மட்டுமே தீப்புண்கள் ஏற்பட்டிருக்கின்றன. நான் இஷ்டப்பட்டிருந்தால் விளக்கைச் சற்றுத் தாழ்த்திப் பிடித்து உன் ஆடை பூராவையுமே எரிய வைத்து, உனக்கு மன்னர் இளஞ்சேட் சென்னியின் முடிவை அளித்திருப்பேன். ஆனால் உன்னைப் போன்ற வஞ்சக முறையைப் பின்பற்ற எனக்கு இஷ்டமில்லை. நீ மடிய வேண்டியது போரில், நானும் உன் குலத்தவள். இருங்கோவேள் என் குலத்தானை நான் தீக்கு இரையாக்கினேன் என்ற பழிச் சொல் எனக்கு வேண்டாம். இன்றைக்கு உனக்கு உயிர் பிச்சையளித்தது அதனால்தான். போ. அரண்மனைக்குப் போய் புண்களை ஆற்றிக்கொள். முடிந்தால் மனத்தையும் மாற்றிக்கொள். உண்மை மன்னரைக் கண்டுபிடித்து மன்னிப்புக் கேட்டுக் கொள்" என்றாள்.

அவள் சொற்கள் விளைவித்த மனப் புண்ணாலும் தீ விளைவித்த உடற்புண்ணாலும் வேதனை பெரிதும் அடைந்த இருங்கோவேள், அவளைக் கொலை செய்து விடுவதுபோல் சில வினாடிகள் பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றான். வெளியிலிருந்த வீரர்களை விட்டு அந்தக் குத்துவிளக்கை

பிடுங்கச் சொல்லி அவளைப் பலவந்தமாக அடைந்தாலென்ன என்று ஒரு வினாடி நினைத்தான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டு தன் முடிவை மாற்றி, 'உம் இருக்கட்டும். இவளுக்கு அதுதான் சரியான தண்டனை' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டான். கடைசியில் பூவழகியை நோக்கிச் சொற்களில் தீப் பறக்க உள்ளேயிருந்த விஷத்தை வெளியிலும் கொட்டத் தொடங்கிக் கூறினான்: "பொறு. மாரப்பவேள் மகளே! பொறு. உன் கதியும் உன் தந்தையின் கதியும் என்ன ஆகிறது பார். இன்று நீ எனக்கு விளைவித்த மனப்புண்ணைப் போல் பத்து மடங்கு மனப் புண்ணை உனக்கு விளைவிக்கிறேன். குத்து விளக்குத் தீயல்லவா என்னைச் சுட்டது? உன் தந்தையை ஆட்டு இறைச்சியைச் சுடுவதுபோல் சிறுகச் சிறுகத் தீயில் காய்ச்சிக் கொல்லுகிறேன். இதோ உன்னை என் சிறைக்குக் கடத்திச் செல்ல வீரர்கள் தயாராயிருக்கிறார்கள்" என்று கூவிய இருங்கோவேள், வாயிற்படியை நோக்கி ஓடி, "டேய் யாரங்கே?" என்று குரல் கொடுத்து அடியுண்ட புலிபோல் அறைக்குள் மீண்டும் வந்தான். அவனால் விளிக்கப்பட்ட வீரர்கள் ஓடி வந்தவுடன், "இவளையும் ஏற்கெனவே நம்மிடம் சிக்கியிருக்கும் இவள் தோழியையும் அழைத்துப் போய்ச் சிறையில் தள்ளுங்கள்" என்று உத்தரவிட்டு, தீப்புண் பெரிதும் பாதித்ததால் சரசரவென்று அறையைவிட்டு ஓடினான். அடுத்த சில வினாடிகளில் அவன் ரதம் சென்ற ஓசை காதில் விழவே, குத்து விளக்கைக் கீழே வைத்த பூவழகி ஆயாசப் பெருமூச்சொன்றை வெளிவிட்டாள். 'வஞ்சகனிட்ட ஆணை. அதன் பெறுமானத்தை அறியவில்லையே தந்தை' என்று முணுமுணுக்கவும் செய்தாள்.

உள்ளே நுழைந்த வீரர்கள் இருங்கோவேளின் சரிகைத் துணித் தீயை அணைத்தார்கள். பிறகு பூவழகியை நோக்கி, "உம் புறப்படுங்கள்" என்று கட்டளையிட்டார்கள். வேளிர்கள் குலத்தின் உரம் நெஞ்சில் பரிபூரணமாக இருந்ததால் சற்றும்

லட்சியம் செய்யாமலே பூவழகி கிளம்பினாள். வாயிலில் காத்திருந்த காவலர் தலைவன் அவளையும் இன்பவல்லியையும் இருபுரவிகளில் ஏற்றி, வீரர்களை முன்னும் பின்னும் காவல் புரியச் சொல்லிக் குதிரைகளைச் செலுத்த உத்தரவிட்டான். அரண்மனைப் பெருவீதி வழியாக அந்தக் காவல் படை செல்லாமல் பக்கத்துத் தோப்பின் வழியாகச் சென்றதைக் கவனித்த பூவழகி, "பார்த்தாயா இன்பவல்லி! இருங்கோவேளுக்கு எதையும் பகிரங்கமாகச் செய்யும் பழக்கம் போய்விட்டது. ஏதோ ரகசிய வழியாக அழைத்துச் செல்கிறான்" என்றாள். ரகசியம் அத்துடன் நிற்கவில்லை. தோப்பின் வழியாகச் சென்று அரண்மனைத் திட்டி வாசல் கண்ணுக்குப் புலப்பட்டதும், "இவர்கள் கண்களைக் கட்டுங்கள். நாம் செல்லும் பாதை தெரிய வேண்டாம்" என்றான் இருங்கோவேளின் காவலர் தலைவன். இருவர் கண்களும் பலமாகக் கட்டப்பட்டன. பிரயாணம் நீண்ட நேரம் நீடித்தது. வீரர்களின் புரவிகள் சத்தம் பல திசைகளில் பரவியது. ஜாமம் ஒன்றாகியும் பிரயாணம் முடிவடையாததைக் கண்ட பூவழகி, "எத்தனை தூரமிருக்கிறது இன்னும்" என்று வினவினாள்.

"அதைப் பற்றி உனக்கென்ன கவலை? நடத்து குதிரையை" என்று காவலர் தலைவன் மிரட்டினான். பேசாமல் நடத்தினாள் பூவழகி, விதியின் மேல் பழியைப் போட்டு.

84. கண்கட்டு வித்தை

கட்டப்பட்ட கண்களுடன் குதிரைமீது அமர்ந்து சென்ற பூவழகியின் மனத்தில் கணக்கற்ற துன்ப அலைகள் எழுந்து மோதிக்கொண்டிருந்த போதிலும், வேளிர் குலத்தில் பிறந்ததன் விளைவாக பயத்துக்கு மட்டும் அவள் சிறிதும் இடம் கொடாததால், உள்ள நிலையைத் தெளிவாகச் சீர் தூக்கிப் பார்க்கும் திறன் அவள் புத்திக்கு இருக்கவே செய்தது.

அது காரணமாகக் கண்ணால் காண முடியாததைப் புலன்களால் உணர முற்பட்டாள் அந்த வேளிர் குலப் பேரழகி. அரண்மனை திட்டிவாசல் தென் பட்டதுமே தங்கள் கண்களைக் கட்டும்படி வீரர்களுக்கு உத்தரவிட்ட காவலர் தலைவன் அரண்மனையை நாடுவதில் அளவுக்கு மீறிய தாமதம் காட்டும் காரணம் என்ன என்று எண்ணிப் பார்த்ததன்றி, தன் கண்களும், தன் தோழியின் கண்களும் கட்டப்பட்டதுமே புரவிகள் பல திசைகளில் சென்று விட்டதை அவற்றின் குளம்படிச் சத்தங்களால் அவள் உணர்ந்து கொண்டாளாகையால், தங்களைச் சிறை செய்த வீரர்கள் தொடர்ந்து காவல் புரிவதை விட்டு ஏன் ஓடி விட்டார்கள் என்றும் நினைத்துப் பார்த்தாள். தங்கள் புரவிகளைத் தவிர முன்னால் ஒரு புரவியும், பின்னால் ஒரு புரவியுமே வருகின்றன என்பதை அவற்றின் நடையொலியிலிருந்து ஊகித்த பூவழகி, 'வாள் கிடைத்தால் இரண்டு மூன்று வீரர்களை எதிர்த்துப் போரிடும் திறன் வாய்ந்த வேளிர் குல வீரமாது ஒருத்தியைக் காவல் புரிய இருவர் போதும் என்று நினைக்கிறானா இந்தக் காவலர் தலைவன்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டதன்றி, காவலர் தலைவன் போக்கை எண்ணிப் பார்த்துப் பெரிதும் வியப்பையும் அடைந்தாள். அரண்மனை திட்டமாகத் தெரிந்த பின்பு நேராக உள்ளே தங்களை அழைத்துச் செல்வதை விட்டு, திசையைக் காவலர் தலைவன் மாற்றியதும் தங்களைச் சிறை வைப்பதை இருங்கோவேள் ரகசியமாக வைத்திருக்க முயல்கிறான் என்று நினைத்த வேளிர்குல மங்கை. அதற்குப் பிறகு ஒரு ஜாமம் ஆகியும் அரண்மனையைத் தாங்கள் நெருங்காததையும், பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்துவதையும் பார்த்துக் காவலர் தலைவன் தங்களை எங்கு கொண்டு போகிறான் என்பதை அறிய முடியாமல் தவித்தாள். எல்லைப்புற மாளிகைக்கு வெளியில் சந்தித்த சமயத்திலிருந்தே தலைமுதல் கால்வரை யவனர்களைப் போல் காவலர் தலைவன்

கவசத்தை அணிந்திருந்தானாதலால் அவன் முகத்தைப் பார்க்க முடியாது போனதாலும், அவன் குரலும் பழக்கமற்ற புதிய குரலாய் இருந்ததாலும் ஏதும் பேசாமலேயே நீண்ட நேரம் பயணம் செய்த பூவழகி, நடுநிசிக்குப் பிறகு இரண்டு ஜாமத்துக்கு மேலும் நீடித்த பயணத்தின் அலுப்பையும் மனத்தின் கவலையையும் தாங்க முடியாமல் இன்பவல்லியை அழைத்து, "இன்பவல்லி! காவலர் தலைவரிடம் நேரம் எத்தனை இருக்குமென்று கேள்" என்று கட்டளையிட்டாள்.

அதிகாரம் நிரம்பிய குரலில் பூவழகி தன் தோழிக்குப் பிறப்பித்த உத்தரவைக் காதில் வாங்கிக்கொண்ட காவலர் தலைவன், தோழி கேட்குமுன்பாகவே, "விடிய இன்னும் நான்கு நாழிகைகளே இருக்கின்றன. சொல்லுங்கள் தலைவியிடம்" என்றான்.

"இத்தனை நேரம் பயணம் செய்யவேண்டிய அவசியம் என்ன?" இக்கேள்வியைப் பூவழகி நேரிடையாகவே காவலர் தலைவனைக் கேட்டாள்.

காவலர் தலைவன் சிறிதும் உணர்ச்சியற்ற குரலில் சர்வ சகஜமாகவே பதில் சொன்னான், "போக வேண்டிய இடம் தூரம். ஆகவே நேரம் அதிகமாவதும் இயற்கைதானே,' என்று.

"போக வேண்டிய இடம் எது? அதையாவது சொல்ல முடியுமா?" என்று வினவினாள் பூவழகி, குரலில் சிறிது கோபத்தைக் காட்டி.

"ஆகா! தாராளமாகச் சொல்ல முடியும். மன்னர் இருக்கும் இடம் போகிறோம்" என்றான் காவலர் தலைவன். இந்தப் பதிலைச் சொல்கையில் அவன் குரலில் சிறிது கேலியும் கலந்திருந்ததாகத் தோன்றியதால் பூவழகியின் கோபம் எல்லை மீறவே, "மன்னரா! எந்த மன்னர்? அந்த அயோக்கியனை மன்னனென்று யார் சொன்னது?" என்று சீறினாள்.

"சோழ நாட்டு நன்மையில் அக்கறையுள்ள அனைவரும் சொல்கிறார்கள்'' என்று பதில் சொன்னான் காவலர் தலைவன்.

"கூலி வாங்குவதற்காக வஞ்சகர்களைப் புகழும் நாக்கை என்ன செய்தால் தகும்?"

"வாளால் துண்டித்து எறியலாம்."

"அப்படியானால் உமது நாக்கையும் துண்டிக்க வேண்டியதுதானே?"

"அந்தப் பாக்கியம் இந்த நாவுக்கில்லை."

"ஏன்?"

"நான் கூலியும் வாங்கவில்லை. வஞ்சகரைப் புகழவுமில்லை" என்று ஏளனத்துடனேயே வந்தது காவலன் தலைவன் பதில்.

பூவழகி சிந்திக்கத் தொடங்கினாள். காவலர் தலைவன் பேச்சில் ஏதோ மர்மமிருக்கிறது என்பதை மட்டும் புரிந்து கொண்டாளாகையால், அது என்னவாயிருக்கக் கூடும் என அறிய முடியாமல் திணறியதன்றி, அதை வாய்விட்டுச் சொல்ல முற்பட்டு, "காவலர் தலைவரே! உமது பேச்சு விசித்திரமாயிருக்கிறது. முரண்பாடாயுமிருக்கிறது. குழப்பமும் நிரம்ப இருக்கிறது. கண்ணைக் கட்டி காட்டில் விட்ட மாதிரி யிருக்கிறது," என்றாள்.

"உண்மை, உண்மை" என்று கேலியுடன் ஆமோதித்த காவலர் தலைவன், பெரிதாக நகைக்கவும் செய்தான்.

"எது உண்மை? எதற்கு நகைக்கிறீர்?" என்று ஆத்திரத்துடன் வினவிய பூவழகி, தன் புரவியைச் சட்டென்று நிறுத்தினாள்.

"கண்ணைக் கட்டியிருப்பதும் உண்மை. உங்களைக் காட்டில் விட்டிருப்பதும் உண்மை" என்று சிரித்துக் கொண்டே சொன்ன காவலர் தலைவன், பின்னால் வந்து கொண்டிருந்த வீரனை அழைத்து, "டேய்! இவர்கள் கண் கட்டுகளை அவிழ்த்துவிடு. இனித் தேவையில்லை" என்று கூறவே, அந்த வீரனால் கண்கட்டுகள் அவிழ்க்கப்பட்ட

பூவழகி, குதிரையிலிருந்து கீழே குதித்துக் கண்களைச் சிறிது கசக்கிவிட்டுக்கொண்டு சுற்றிலும் பார்வையைச் செலுத்தி னாள்.

அக்கம்பக்கத்தில் அடர்ந்திருந்த மரங்களிலிருந்தும், சற்றுத் தூரத்தில் ஓடிக்கொண்டிருந்த ஆற்று ஜலத்தின் ஒலியிலிருந்தும் ஆற்றின் கரையிலுள்ள ஒரு காட்டில் தான் இருப்பதை உணர்ந்தாள் பூவழகி. மரங்களினூடே கண்களைச் செலுத்தி, கருக்கலின் இருட்டிலும் பளபளவென்று தெரிந்த நீரைக் கண்டு, "இது என்ன ஆறு? இது என்ன காடு?" என்று வினவினாள்.

"இது காவிரிதான். கிழக்கே செல்லச் செல்ல ஆழம் அதிகமாகி, சற்றுக் குறுகலாகத் தெரிகிறது. புகார் பிராந்தியத் தில் இதில் மரக்கலங்களும் உலாவுமே, உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டான் காவலர் தலைவன்.

"தெரியும். ஆனால் அதன் கரையில் இத்தகைய பெரிய காடு இருப்பதை நான் பார்த்ததில்லை" என்றாள் பூவழகி.

"நீங்கள் எப்பொழுதும் பட்டினப்புறங்களில் இருந்திருக் கிறீர்கள். ஆகவே காவிரியின் காடுகளை என்ன, எந்தக் காட்டையுமே அதிகமாகப் பார்த்ததில்லை. இதைவிட அடர்த்தியான காடுகளைப் பார்க்கும் பாக்கியம் இன்னும் சில நாட்களில் கிடைக்கும்" என்றான் காவலர் தலைவன்.

"காட்டைப் பார்க்கும் பாக்கியமா?" என்று வியப்புடன் வினவிய பூவழகி திடீரெனச் சந்தேகப்பட்டு, "அப்படியானால் அரண்மனைக்கு...." என்று கேட்க முற்பட்டு வாசகத்தை முடிக்காமலே விட்டாள்.

"அரண்மனையா! அங்கு நமக்கென்ன வேலை?" என்று சர்வ சாதாரணமாகக் கேட்ட காவலர் தலைவன், தன்னுடன் வந்த வீரனை அழைத்து, "இனி நீ உடையைக் களையலாம்" என்றும் கூறினான்.

பூவழகி எரித்துவிடும் கண்களுடன் காவலர் தலைவனை நோக்கி, "என்ன உளறுகிறீர்? இங்கா வீரனை

உடையைக் களையச் சொல்கிறீர்?'' என்று உஷ்ணத்துடன் கேட்கவும் செய்தாள்.

"ஆம், ஆம்" என்று கூறி நகைத்த காவலர் தலைவன் "அடடே! மறந்துவிட்டேன். நான் இங்கிருக்கக் கூடாதுதான்" என்று சொல்லிவிட்டு மரங்களிருந்த மறைவை நோக்கிச் சென்றான்.

காவலர் தலைவன் கட்டளைப்படி அதிதுரிதமாக உடையைக் களைய வீரன் முற்பட்டவுடன், பூவழகி வேறு புறம் முகத்தைத் திருப்பிக்கொண்டு கண்களையும் மூடிக் கொண்டாள். சில வினாடிகளே அவள் கண்கள் மூடிக் கிடந்தன. உள்ளம் மட்டும் மடை திறந்து ஆத்திர அலைகளை எழுப்பிக் கொண்டிருந்தன. ஆத்திர அலைகள் விளைவித்த உஷ்ணத்தைச் சமன்படுத்த இஷ்டப்பட்டன போல் மூடிக் கிடந்த பூவழகியின் கண்களைப் பின்புறமாக வந்த இரு தண் கரங்கள் சற்று அதிகமாக அழுத்தி மூடின. பட்டுக் கன்ன மொன்றும் அவள் கன்னத்துடன் இழைத்தது. "தலைவி!" என்று மதுரகானம்போல் அழைத்த சொல்லொன்றும் அவள் காதில் நுழைந்தது. பூவழகியின் ஆத்திரம் அகன்றது. அதன் இடத்தை வியப்பு அடைத்துக் கொண்டது.

''யார் நீயா?'' திரும்பிப் பார்க்காமலும் அந்தக் கன்னத்தின் இழைப்பிலிருந்து தன் கன்னத்தை நீக்கிக் கொள்ளாமலும் வினவினாள் பூவழகி.

"ஆமாம் தலைவி!" என்று சற்று இரைந்தே எழுந்த சொற்கள், துன்பத்தையெல்லாம் துடைக்க வந்த அமுதத் துளிகளென அவள் இதயத்துக்குப் பெரும் சாந்தியை அளித்தன.

அந்தச் சாந்தியின் விளைவாகத் துள்ளும் உள்ளத் துடனும் மலர்ந்த முகத்துடனும் சரேலென்று திரும்பிய பூவழகி, "நிஜமாக நீதானா? நம்பவே முடியவில்லையே அல்லி! ஆண் உடையை இந்த அழகுத் தேகம் எப்படி அணிந்தது?" என்று பூரித்துப் பேச்சுக்களை உதிர்த்தாள்.

பூவழகியின் பிடியிலிருந்து விலகாமலே இன்பவல்லி யைப் பார்த்துச் சிரித்த அல்லி, "இன்பவல்லி! பார்த்துக் கொள். காவல் வீரனைத் தழுவி நிற்கிறார்கள். உங்கள் படைத் தலைவர் வந்தால் இதைக் கட்டாயம் சொல்ல வேண்டும்" என்றாள்.

மகிழ்ச்சிப் பெருக்கால் அந்த மூன்று மங்கையரும் சிரித்த இன்ப ஒலியைக் கேட்டதால், அவர்களைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தால்தானோ என்னவோ அருணனும் மெள்ளக் கீழ்த்திசையில் கிளம்பினான். அருணோதயத்தால் தூரத்தே பளபளத்த காவிரிக்குச் சென்று பல் துலக்கி முகம் கழுவிய அந்த மூன்று மங்கையரும் திரும்பி வந்த போது, காவலர் தலைவன் கவசத்தை நீக்கிவிட்டுப் புரவியில் ஏறத் தயாராயிருந்தான். மற்றப் புரவிகளும் பயணத்துக்குத் தயாராயிருப்பதைக் கவனித்த பூவழகி, "ஏன், மீண்டும் போக வேண்டுமா?" என்று கேட்டாள்.

"ஆம். முன்பே சொல்லவில்லையா மன்னர் இருக்கு மிடம் போக வேண்டும் என்று?" எனப் பதில் கூறினான் காவலர் தலைவன்.

"சொன்னீர்கள். ஆனால்..." என்று இழுத்தான் பூவழகி.

"மன்னர் கரிகாலர் என்பதைத் தெளிவுபடுத்தவில்லை" என்று முடித்தாள் இன்பவல்லி.

"ஏன் தெளிவுபடுத்தவில்லை?'' என்று கேட்டான் காவலர் தலைவன்.

"எங்கு தெரியப்படுத்தினீர்கள்?" என்று கோபித்துக் கொண்டாள் அல்லி.

"சரி சரி! மூன்று பெண்களும் சேர்ந்து கொண்டீர்களா! ஒரு பெண் கேள்வி கேட்க ஆரம்பித்தாலே சமாளிப்பது கஷ்டம். மூன்று பெண்களும் சேர்ந்து சொல்லம்பு தொடுத்தால் தான் தொலைந்தேன். இருக்கட்டும். யோசித்துப் பார் பூவழகி! சோழ நாட்டின் நன்மையில் அக்கறையுள்ள அனைவரும் ஒருவரை மன்னர் என்று அழைப்பார்கள் என்று

நான் சொல்லவில்லையா?" என்று கேட்டான் காவலர் தலைவன்.

"ஆமாம்" என்று பூவழகி ஒப்புக் கொண்டாள்.

"உனக்கிருந்த குழப்பத்தில் இருங்கோவேளை மன்னனென்று அழைப்பதாக அர்த்தம் செய்து கொண்டாய். அதற்காக என்னைக் கூலியென்று அழைத்தாய். நாவைத் துண்டிப்பதாகக் கூறினாய். நான் கூலி வாங்கவில்லையென்று சொன்னேன். துண்டிக்கப்படும் பாக்கியம் என் நாவுக்கு இல்லையென்று விளக்கினேன். இன்னும் எத்தனை விளக்க மாகச் சொல்ல முடியும்? அதுவும் உறையூருக்கருகில், எந்த வினாடியிலும் இருங்கோவேளின் வீரர்களால் நாம் சூழப்பட இருந்த அபாய நிலையில்," என்றான் காவலர் தலைவன்.

பூவழகி சிறிது நேரம் மௌனம் சாதித்தாள். பிறகு அல்லியை நோக்கி, "அல்லி! என் புத்தியே குழம்பிக் கிடக் கிறது. இவர் யார்? எப்படி எங்களைக் காப்பாற்றினீர்கள்?" என்று கேட்டாள்.

அல்லி காவலர் தலைவனை ஒருமுறை நோக்கிவிட்டு, "சொல்லட்டுமா?" என்று வினவினாள், அவனை உத்தரவு கேட்கும் முறையில், 'சொல்லலாம்' என்று அனுமதிக்கும் வகையில் காவலர் தலைவன் தலையை அசைக்கவே, அல்லி சொல்லத் தொடங்கி, "தலைவி! இவர் என் தந்தை" என்றாள் மெதுவாக.

பூவழகியின் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்ததன்றி, ஒருமுறை அல்லியின் தந்தையையும் ஏறெடுத்துப் பார்த்தன. "உன் தந்தை! நாங்கூர்வேள்" என அவள் உதடுகள் வார்த்தை களை உதிர்க்கவும் செய்தன.

"ஆம் தலைவி! நாங்கூர்வேள்தான். இவர் நாங்கூர் வேளானதை அவரே உங்களிடம் சொல்லவில்லையா?" என்று அல்லி கேட்டாள். 'அவர்' என்ற சொல்லைச் சற்று வெட்கத்துடன் உச்சரித்து.

அவள் வெட்கத்தைக் கண்ட பூவழகியின் உடலில் இன்ப அலைகள் பாய்ந்து சென்றன. "ஆமாம், சொன்னார்

அல்லி, உன்னைத் தன் ராணியென்று என்னிடம் அறிமுகப் படுத்திய அன்றே சொன்னார் மன்னர். ஆனால் உன் தந்தையை நான் பார்த்ததில்லை. இவரை நாங்கூர்வேள் என்று அறிந்துமா இருங்கோவேள் இவரைக் காவலராக நடத்துகிறான்?" என்று ஆச்சரியத்துடன் கேட்கவும் செய்தாள் பூவழகி.

"அவன் நடத்தவில்லை தலைவி! இவர்தான் தன்னை அப்படி நடத்திக் கொள்கிறார்" என்றாள் அல்லி.

"ஏன்?" பூவழகியின் குரலில் வியப்பு மிதமிஞ்சி நின்றது.

"நான் சாக விரும்பவில்லை பூவழகி" என்றார் நாங்கூர் வேள்.

"என்ன!"

"ஆம் பூவழகி! நான் நாங்கூர்வேளாகப் பதவியேற்றுச் சற்று எதிர்ப்பைக் காட்டினாலும் பழைய நாங்கூர்வேளைப் போலவே என்னையும் தீர்த்துக் கட்டி விடுவான் இருங்கோ வேள். ஆகவே கரிகாலன் விஷயம் இரண்டிலொன்று முடிவாகும் வரை நாங்கூர் சிற்றரசை ஏற்க மறுத்தேன். இருங்கோவேளுக்குப் பணி செய்வதே பெரும் பாக்கியம் என்றேன். அவனது பூரண நம்பிக்கையைப் பெற்றேன். ஆகையால்தான் அல்லி உன்னை நிர்ப்பயமாகக் கண்காணிக்க முடிந்தது. மாரப்பவேளைப் புகாருக்கு அனுப்பி விட்டு உன்னைத் தீண்ட இருங்கோவேள் வந்தபோது நாங்களிருவரும் உன்னைக் காக்கவும் முடிந்தது" என்று விளக்கிய நாங்கூர்வேளை ஒரு சந்தேகம் கேட்டாள் பூவழகி. "என்னைக் காக்க வந்த நீங்களிருவரும் கீழேயே நின்று விட்டீர்களே. என்னை அந்த அயோக்கியன்..." என்று துவங்கிய பூவழகி மேலும் பேச முடியாமல் தவித்தாலும் அவள் மனத்திலோடிய எண்ணங்களைப் புரிந்து கொண்ட நாங்கூர்வேள், "அல்லி ஆண் உடையில் குத்து வாளுடன் அறைக்கு வெளியே நின்றிருந்தாள். நீ ஒரு குரல் கொடுத் திருந்தால் இருங்கோவேளின் ஆயுட்காலம் அந்த அறையி லேயே முடிந்திருக்கும். உன்னைச் சிறை செய்ய இருங்கோ

வேள் குரல் கொடுத்ததும் உள்ளே நுழைந்த இரு வீரர்களில் அல்லியும் ஒருத்தியென்பதை ஊன்றிப் பார்த்திருந்தால் கண்டு கொண்டிருக்கலாம்" என்றார்.

மேற்கொண்டு ஏதோ கேட்க முற்பட்ட பூவழகியை நாங்கூர்வேள் சற்று அடக்கி, "நமக்கு இன்னும் இரண்டு நாள் பயணம் இருக்கிறது பூவழகி. தவிர, இத்தனை நேரம் இருங்கோவேளின் வீரர்கள் நம்மைத் தேட முற்பட்டிருப் பார்கள். காவலர் தலைவன் தங்களைப் போக உத்தரவிட்டுத் தன்னந்தனியே ஒரே ஒரு வீரனுடன் உங்களை அழைத்துச் சென்றான் என்பதைக் கேட்ட மாத்திரத்திலேயே இருங்கோ வேள் சந்தேகப்பட்டிருப்பான். நீங்கள் சிறையிலும் காணாதது சந்தேகத்தை உறுதிப்படுத்தியிருக்கும். இந்நேரம் உறையூரின் நான்கு எல்லைகளிலும் ஒற்றர்கள் கண்காணிப்பு பலமாயிருக்கும். உம்! புறப்படுங்கள். பேசுவதற்குப் பின்னால் நிரம்ப அவகாசமிருக்கிறது" என்று கூறி, புரவியில் ஏறிக் கொண்டார்.

மூன்று பெண்மணிகளும் புரவிகளில் ஏறிக் கொண்டதும் காட்டுமார்க்கமாகவே ஒரு காதம் மேற்கிலும் பிறகு வடக்கிலும் அழைத்துச் சென்ற நாங்கூர்வேள், பகலவன் சற்று மேல்திசையில் சாய்ந்து பிற்பகல் துவங்கிவிட்டதை அறிவித்த நேரத்தில் தங்கச் செய்து, தாம் மட்டும் பக்கத்துக் கிராமமொன்றுக்குச் சென்றார்.

இரு நாழிகையில் பெரும் மூட்டையுடன் திரும்பி வந்து, அதிலிருந்த உழவர் உடைகளை அணியும்படி பெண்களுக்கு உத்தரவிட்டதன்றி, அவர்கள் மாற்றுடை அணிந்ததும் தாமும் ஒரு உழவன் உடையை அணிந்து தலையில் முண்டாசையும் பலமாகக் கட்டிக் கொண்டார். வேடம் இப்படி மாறியதும் புரவிகளைச் சேணத்தால் அடித்து விரட்டிவிட்டு மூவரையும் நடத்தி அழைத்துச் சென்று பக்கத்துக் கிராமமொன்றில், புகுந்து குடிசைகள் இருந்த பகுதிக்குச் சென்று அவர்களை இருக்கச் செய்து சிறிது உணவும் வாங்கிக் கொடுத்தார். மாலை வரையில் அந்தக் கிராமத்தில் இளைப்பாறிய நாங்கூர்வேள்,

அந்த ஊரிலிருந்து கிளம்பிய பொதி வண்டிகளில் பெண்களை ஏற்றிக் கொண்டு நள்ளிரவுவரை பயணம் செய்து, பெரிய பாதையொன்று கிளைபிரிந்த இடத்தில் வண்டிகளுக்கு ஊதியம் கொடுத்து இறங்கி, பிரிந்த பாதைக்கு நேர் எதிரி லிருந்த காட்டுக்குள் புகுந்தார்.

அடுத்த நாள் பயணம் முதல் நாள் பயணத்தைவிடக் கடுமையாயிருந்தது. மிகுந்த எச்சரிக்கையுடன் இரவில் பயணமும், பகலில் ஊர் பேர் தெரியாத காட்டு முகப்புக் கிராமங்களில் இளைப்பாறவும் செய்து கொண்டு, மூன்றாம் நாளிரவில் குணவாயிற் கோட்டத்தின் அடவியை அடைந்த நாங்கூர்வேள் ஆயாசப் பெருமூச்சு விட்டு, "பூவழகி! தெய்வத் தின் உதவியால் தப்பினோம். இனி, பத்து இருங்கோவேள்கள் வந்தாலும் பயமில்லை" என்றார்.

"சோழநாட்டு எல்லையைத் தாண்டிவிட்டோமா?" என்று கேட்டாள் பூவழகி.

"ஆம்" என்றார் நாங்கூர்வேள் மகிழ்ச்சியோடு.

"இது சேர நாடா?"

"அல்ல, கொங்கு நாடு."

"இங்கு ஏன் வந்தோம்?"

"வா. தெரிவிக்கிறேன்" என்று அடவிக்குள் புகுந்தார் நாங்கூர்வேள்.

அடுத்த அரை ஜாம நேரத்தில் பெரும் விந்தைகள் பூவழகியின் கண்களின் முன்னே எழுந்தன. இது உண்மையா அல்லது கண்கட்டு வித்தையா என்று மீண்டும் மீண்டும் எண்ணி ஆச்சரியக் கடலில் ஆழ்ந்தாள் அந்த வேளிர் குலப் பேரழகி. யாரும் புக முடியாத அந்த அடவிக்குள் திடீரென எங்கிருந்தோ பந்தங்கள் தோன்றின. கண்ணெதிரே கந்தர்வ லோகமொன்று விரிந்தது.

பூவழகி புரிந்து கொண்டாள். இரண்டு மாத இடைக் காலத்தில் கரிகாலன் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந் திருக்கவில்லையென்பதைப் புரிந்து கொண்டாள். இடைக் கால அமைதி உடைந்துவிடும் நேரம் நெருங்கி விட்டது

தமிழகத்தில் என்பதையும் புரிந்து கொண்டாள். பல படை வாயில்கள் இடையிடையே அந்த அடவியில் தோன்றின. அவற்றையெல்லாம் கடந்து செல்லச் செல்ல மகிழ்ச்சியும் வேதனையும் கலந்து தோன்றின அவள் இதயத்திலே. சகோதரன் கை வலுப்பெற்றது என்ற மகிழ்ச்சியை, இதில் பங்கு கொள்ள இளஞ்செழியன் இல்லையே என்ற இதய வேதனை ஓரளவு அடக்கவே செய்தது. பல படை வாசல் களைத் தாண்டிச் சென்று பிரும்மாண்டமான கரிகாலன் பாசறையில் நின்ற சமயத்தில், காதலனை நினைத்து இதயத் தில் ரத்தக் கண்ணீரே விட்டாள் பூவழகி. அந்தப் பாசறையில் தன் படைத்தலைவர்களுக்கெதிரில் கரிகாலன், "வா சகோதரி!" என்று அழைத்து அவள் மலர்க் கரங்களைப் பிடித்துக் கொண்ட சமயத்திலும், பெருமை அவள் உள்ளத்தில் துள்ளிய அந்த இன்ப நேரத்திலும், "இந்தப் படைகளை அவரல்லவா நடத்த வேண்டும்" என்ற நினைப்பு நிலவை மூடிய மேகமென அவள் சித்தத்தில் எழவே, அவள் செந்தாமரைக் கண்கள் கண்ணீரை மடமடவென உதிர்த்தன.

85. வருகுது வேல்!

குணவாயிற் கோட்டத்தின் அடர்ந்த அடவியின் ஒருபுறத்தே எழுந்து நின்ற குன்றின் குகையினுள்ளே அமைக்கப்பட்டிருந்த போர்ப் பாசறையில் இருகைகளையும் பிடித்துக் கொண்டு கரிகாலன், 'வா சகோதரி!' என உள்ளிருந்த அன்பையெல்லாம் வெளியே அமுதமெனக் கொட்டி அழைத்த நேரத்திலும் காதலனை நினைத்துக் கண்ணீர் உகுந்த பூவழகியைக் கண்டு, கண்ணீருக்குக் காரணத்தை அறியாத நாங்கூர்வேளின் முகத்தில் சற்றே ஆச்சரிய ரேகை படர்ந்ததானாலும், மன்னன் மட்டும் அவள் உள்ளத்தின் துன்ப அலைகளைப் புரிந்து கொண்டானாகை யால், "சகோதரி! சோகக் கண்ணீர் உருக்கும் நேரமல்ல இது. ஆனந்தக் கண்ணீர் சொரிய வேண்டிய நேரம் வந்து விட்டது.

சோழ நாட்டு விடுதலையின் ஆரம்ப அத்தியாயம் துவங்கி விட்டது. அந்த விடுதலையுடன் பிணைந்திருக்கிறது நம் அனைவர் சந்துஷ்டியும்" என்று சமாதானமும் சொன்னான்.

அவன் சொற்கள் குழைந்த விதத்தையும் அவன் காட்டிய பரிவையும் கவனித்ததால் ஓரளவு நன்றியறிதலைக் கொண்டாலும் துன்பத்தை மட்டும் விடாத பூவழகி, "மன்னவா! நம் சந்துஷ்டி என்று பொதுப்படையாகச் சொல்லாதீர்கள். என் நிலை வேறு" என்று மெள்ள வார்த்தை களை உதிரவிட்டாள், துக்கத்தால் துடிப்புடன் பேசமுடியாத காரணத்தால்.

"சகோதரி! உனக்கு நான் எத்தனை முறை சொல்வது என்னை மன்னனென்று அழைக்காதே என்று?" என லேசாகக் கடிந்து கொண்ட கரிகாலன், அவள் கைகளை இறுக்கிப் பிடித்தான். 'நானிருக்கிறேன் உன்னைக் காக்க. அஞ்சாதே!' என்று சொல்லும் பாவனையில்.

"தங்களை மன்னரென்று அழைக்காமல் வேறெப்படி அழைப்பேன்? தாங்கள் மன்னர்தானே?" என்று சிறிது தைரியப்படுத்திக் கொண்டு பேசினாள் பூவழகி, மன்னன் கைகள் அளித்த உறுதியால் சிறிது துணிவும் கொண்டு.

"நான் ஊருக்கெல்லாம் மன்னனாயிருக்கலாம். ஆனால் உனக்கு அண்ணன்தானே? கருவூரில் பாழடைந்த மாளிகை யில் நாம் பேசிக் கொண்டதை மறந்து விட்டாயா? நீ மறந்தாலும் நான் மறக்கவில்லை..." என்ற கரிகாலன், சொற் களைப் பாதியில் வேண்டுமென்றே அறுத்தான்.

"நீங்கள் எதை மறக்கவில்லை?"

"எதை என்பதைவிட எவற்றை என்று கேட்பது பொருத்தமாக இருக்குமே சகோதரி!"

"சரி சரி சொல்லுங்கள், எவற்றை மறக்கவில்லை?"

"செம்பருத்திச் சாறு பிழந்த இரண்டு செங்கமலக் கரங் களை மறக்கவில்லை. இதமாகச் சுடும் நீர்த் துளிகளை வெந்த காலில் உதிர்த்து, புண்ணின் எரிச்சலுக்கு ஒத்தடம் கொடுத் துதவிய இரண்டு பங்கய விழிகளை மறக்கவில்லை..." இதற்கு

மேல் கரிகாலன் நாவிலிருந்து சொற்கள் உதிரவில்லை. உதிரவேண்டிய சொற்கள் உணர்ச்சி வடிவம் எடுத்து, முகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் எழுந்து நின்று அவன் உள்ளம் நெகிழ்ந்து கிடந்த கதையைப் பறைசாற்றின. அந்த உணர்ச்சி வெள்ளம் குரலில் பொங்க, சில வினாடிகளுக்குப் பிறகு சொன்னான் கரிகாலன்; "அன்று கேட்டுக் கொண்டேன் சகோதரி, நீ என்னைச் சகோதரனாகப் பாவிக்க வேண்டுமென்று. நீயும் ஒப்புக் கொண்டாய். அன்று நீ அண்ணாவென்றழைத்த அந்த இன்பச் சொல்லை நினைத்து இன்றும் வலுவடைகிறேன். உன்னைப் போன்ற ஒரு சகோதரியின் கரம் பக்கத்திலிருக்கையில் சோழ நாட்டை யென்ன உலகத்தையே வெற்றி கொண்டு விடுவேன். ஆகவே..."

"என்ன அண்ணா?" என்று இடைமறித்துக் கேட்டாள் பூவழகி. அந்த இரண்டு சொற்கள் சற்றே இரைந்தே பேசப் பட்டதன் விளைவாக அந்த மலைக் குகை பூராவும் எதிரொலி செய்த பல சகோதரிகள், 'அண்ணா அண்ணா' என்று அழைப்பது போன்ற பிரமை ஏற்படவே மகிழ்ச்சியுடன் நகைத்த கரிகாலன், "பார்த்தாயா சகோதரி! குகையின் கற்கள் கூட நீ சொல்வதை ஆமோதிக்கின்றன" என்றான்.

"குகை உங்களுடையதுதானே அண்ணா?" என்று ஆரம்பித்த பூவழகியை, "சே! சே! நிறுத்து நிறுத்து. சரியில்லை" என்றான் மன்னன்.

"எது சரியிலலை?" என்று கேட்டாள் பூவழகி.

"நீ பேசுவது."

"என்ன அண்ணா?"

"இதுவரை சரி."

"குகை உன்னுடையதுதானே என்றேன்."

"உம், இப்பொழுது சரி. தமிழில் அண்ணாவுக்கும் 'உங்களு'க்கும் சரிப்பட்டு வராது சகோதரி. அன்பு மேற்படும் போது மரியாதைச் சொற்கள் சிறிது நிற்க வேண்டும். புரிகிறதா?"

"உம், புரிகிறது."

இம்முறை கரிகாலனோடு பூவழகியும் சேர்ந்து கொண்டு நகைத்தாள். இப்படி அக்கம் பக்கத்திலிருப்பவர்களை அறவே மறந்து இரண்டு குழந்தைகள் போல் நகைத்துக் கொண்டு நின்ற அந்த இருவரையும் நாங்கூர்வேள், "மன்னரின் சகோதரி யார் மூன்று நாட்களாகப் பயணம் செய்திருக்கிறார்கள்" என்று மிகவும் மரியாதையுடன் குறிப்பிட்டார்.

அப்பொழுதுதான் அந்தக் குகையில் தங்களைத் தவிர மற்றும் சிலர் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்ட கரிகாலன், "ஆம் ஆம், மறந்துவிட்டேன். நாங்கள் பேச வேண்டியது நிரம்ப இருக்கிறது. பிறகு பேசிக் கொள்வோம்" என்று கூறிவிட்டு மீண்டும் நாங்கூர்வேளை நோக்கி, "தங்களை இத்தனை சீக்கிரம் இங்கு நான் எதிர்பார்க்கவில்லை. இதற்குள் இருங்கோவேள், என் சகோதரியைத் துன்புறுத்த முனைவா னென்றும் நினைக்கவில்லை" என்றான்.

"நான் எதிர்பார்த்தேன்" என்று நாங்கூர்வேள் பதில் சொன்னார் சற்றுத் திடமாகவே.

"ஏன்? உறையூர் நிலை மாறிவிட்டதா?"

"உறையூர் நிலை மாறவில்லை. இருங்கோவேளின் நிலை தான் மாறிவிட்டது. ஆறு மாத காலம் அவன் தங்கள் சகோதரியைத் துன்புறுத்தாமல் விட்டு வைத்தற்கு மாரப்ப வேள்தான் முக்கியக் காரணம். அவர் எக்காரணத்தைக் கொண்டும் உறையூரைவிட்டு நகர மறுத்தார். அத்துடன் பூவழகி சிறையிருந்த எல்லைப்புற மாளிகை மீது மட்டுமின்றி இருங்கோவேளையும் கண்காணிக்கத் தமது ஒற்றர்கள் இருவரை நியமித்திருந்தார். இதையெல்லாம் அறிந்த இருங்கோவேள் தாமதித்தான். ஆனால்..."

"ஆனால் என்ன? சொல்லுங்கள்!"

"தங்கள் சகோதரியாரின் வனப்பு அவன் எச்சரிக்கை யையும் உடைத்தது. அவர்கள் அழகு அந்தப் பாதகனை நிலை குலையச் செய்தது..."

"போதும் போதும். பிறகு..."

"புகார் நிலைமையை அறிந்து வர அரசாங்கக் காரியமாக மாரப்பவேளை ஏவினான். இருங்கோவேளின் கட்டளையை மீற மாரப்பவேளால் முடியவில்லை. 'மகளிருக் கிறாளே' என்று மன்றாடிப் பார்த்தார். 'மகளைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். என் வாளின் மீது ஆணை. நான் பாதுகாக்கிறேன் அவளை' என்றான் அந்த வஞ்சகன். அதையும் நம்பவில்லை மாரப்பவேள். தயங்கினார். 'என்ன தயங்குகிறீர்? உமது மன்னனையே சந்தேகிக்கிறீரோ' என்று விரட்டினான். வேறு வழியில்லாமல் புகார் சென்றார்."

கரிகாலன் பூவழகியின் கைகளை விட்டுவிட்டுச் சிறிது நேரம் ஆழ்ந்த யோசனையில் இறங்கினான். பிறகு கேட்டான், "இதைப்பற்றி எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை?" என்று.

நாங்கூர்வேள் மிகுந்த நிதானத்துடன் மன்னனை ஏறிட்டுப் பார்த்துவிட்டுச் சொன்னார். "சொல்ல அவகாச மில்லை பிரபு! தவிர நானிருக்கும் நிலையில் தங்களுக்குத் தூது அனுப்புவதும், எந்தவித நற்பயனையும் அளித்திராது. இருங்கோவேள் யாரையும் நம்பாதவன். என்னிடம் சிறிது சந்தேகம் ஏற்பட்டிருந்தாலும் தங்கள் சகோதரியாரை விடுவிப்பது அத்தனை சுலபமாக இருந்திராது. எப்பொழுது பல மாதங்களுக்கு முன்பு, 'பூவழகி என் சகோதரி. இவளைக் காப்பது உன் கடமை. அந்தப் பணியில் உன் உயிர் போனாலும் பாதகமில்லை' எனறு கட்டளையிட்டீர்களோ, அன்றிலிருந்து நானும் அல்லியும் ஒரு கண்ணை எல்லைப்புற மாளிகையின் மீது வைத்திருந்தோம். இருங்கோவேளுக்கு எங்கள் மீது கொஞ்ச நஞ்ச சந்தேகம் ஏற்படக் கூடா தென்பதற்காக அந்த மாளிகைக்குப் போவதைக்கூட நிறுத்திக் கொண்டோம். திடீரென இருங்கோவேள் மூன்று நாட்களுக்கு முன்பு மாரப்பவேளைப் புகார் அனுப்பினான். அந்த வினாடியிலிருந்து அல்லி ஆண் வீரன் உடையணிந்தாள். அடியவன் காவலர் தலைவன் பதவியை உதற உறுதி கொண்டேன். ஆகையால்தான் சகோதரியாரைக் காக்க முடிந்தது" என்று விளக்கினார்.

கரிகாலன் அந்த விளக்கத்தைக் கேட்டதும் பூவழகியை இருங்கோவேளிடமிருந்து மீட்க நாங்கூர்வேள் எத்தனை சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறாரென்பதைப் புரிந்து கொண்டானாகையால், பூவழகியை மட்டுமின்றி நாங்கூர் வேளையும் அல்லியையும் இன்பவல்லியையும்கூட நோக்கி, அவர்கள் அணிந்திருந்த உழவர் உடையைக் கண்டு சிரசை அசைத்து, "ஆம், அந்த வஞ்சகனிடமிருந்து தப்புவது எளிதல்ல. மூன்று நாள் பயணத்தில் மிகவும் சிரமம்தான் பட்டிருக் கிறீர்கள்" என்று கூறித் தன் வீரர்களை அழைத்து, "இவர்கள் நீராடவும் தங்கவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டான்.

அரசன் கட்டளைப்படி காவலர் அந்தப் பெண்கள் மூவரையும் பக்கத்திலிருந்த மற்றொரு குகைக்கு அழைத்துச் சென்று, குகையை ஒட்டி ஓடிக்கொண்டிருந்த சுனையை காட்டி, "இதில் நீராடலாம். நீங்கள் எந்தச் சமயத்தில் வந்தாலும் தங்குவதற்காக இந்தக் குகை இரண்டு மாதங் களாகத் தயாராயிருக்கிறது" என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

பெண்கள் மூவரும் அந்தக் குகையின் நடுவில் நின்று சுற்று முற்றும் பார்த்தார்கள். அரண்மனையிலிருப்பது போன்ற சொகுசு வசதிகள் ஏதுமில்லாவிட்டாலும் குகை இயற்கையழகு துள்ளி விளையாட மிகுந்த மனோகரமாகவே காட்சியளித்தது. குகையை அணைத்து ஓடியிருந்த அருவியின் பக்கமாகப் பாறை சிறிது உடைக்கப்பட்டிருந்ததால் ஓடை நீரின் மீது விளையாடிய சந்திர வெளிச்சம் ஏதோ இந்திர ஜால வித்தை காட்டுவது போலிருந்தது, அது. நீரையும் தாண்டி வந்த சந்திரன் கதிர்கள் குகைக்குள்ளும் புகுந்து கொண்டதால், கோடியில் ஈட்டிகளுக்கிடையிலிருந்த பந்தம் அணைந்து போனாலும் வெளிச்சத்துக்கு ஏதும் குகையில் குறைவில்லை யென்பதைப் பெண்கள் மூவரும் புரிந்து கொண்டார்கள். அந்தக் குகையின் ஒருபுறக் கல்லைப் பிளந்து வந்த ஆலமரக் கிளையொன்று குகையின் மறுபுறத்தில் பாய்ந்து சென்ற தாலும், அந்தக் கிளையில் தங்கியிருந்த ஒரு பச்சைக்கிளி

அடிக்கடி கத்திக் கொண்டிருந்தாலும், ஆயிரம் அரண்மனைகள் அளிக்கக் கூடாத இயற்கையின் பேரழகைப் பெற்ற அந்தக் குகையைக் கண்டு பெண்கள் மூவரும் பிரமித்துப் போனார்கள். குகையின் அழகை அனுபவித்த பிறகு நீண்ட நேரம் அருவியில் நீராடிய அந்தப் பெண்கள் மூவரில் இன்பவல்லி முதலில் நீராட்டத்தை முடித்துக் கொண்டு குகைக்குள் நுழைந்து, குகையின் கோடியில் பெட்டியொன்றிருப்பதைக் கண்டு அதைத் திறந்து பார்த்துப் பெரிதும் வியந்து, "மன்னர் மகா கெட்டிக்காரர்! எல்லா விஷயங்களையும் முன் கூட்டியே யோசித்திருக்கிறார்" என்று சொல்லி மெள்ளச் சிரித்தாள்.

அருவியில் நீராடிக் கொண்டிருந்த இருவரும் இன்பவல்லி நகைப்பதைக் கேட்டு குகைக்குள் ஓடி வந்து, "எதற்காக நகைக்கிறாய் இன்பவல்லி?'' என்று ஏககாலத்தில் கேட்டார்கள்.

"பாவம்! மன்னரை நினைத்துச் சிரித்தேன்" என்றாள் இன்பவல்லி சற்றுக் கேலியாக.

"பிறர் பார்த்து நகைக்கும்படியாகவா இருக்கிறார் மன்னர்?" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டாள் அல்லி.

"அப்பா! மன்னரைச் சொன்னதில் எத்தனை கோபம் தங்களுக்கு!" என்றாள் இன்பவல்லி.

"ஏன் கோபமிருக்காது? மன்னரைச் சொன்னால் மகாராணிக்குக் கோபம் வராமல் வேறு யாருக்கு வரும்?" என்று கூறிய பூவழகியும் நகைத்தாள்.

"அம்மணி...!'' என்று ஏதோ சொல்லத் துவங்கிய அல்லியை நோக்கி, "என்ன மகாராணி!" என்று கேட்டாள் பூவழகி.

"நான் தங்களுக்கு மகாராணி அல்ல" என்று கடிந்து கொண்டாள் அல்லி.

"நானும் தங்களுக்கு அம்மணி அல்ல."

"தங்களுக்கு என்று என்னை அழைக்கக் கூடாது."

"என்னையும் அப்படி அழைக்கக் கூடாது."

"எப்படித்தான் அழைப்பது?"

"பூவழகி என்று பெயர் சொல்லி அழைக்கலாம்."

"மாட்டேன்."

"அப்படியானால்..."

"உம்...?"

"புருஷன் சகோதரி பெரியவளாயிருந்தால்..."

"அக்கா என்று அழைக்கலாம்.." மிகுந்த வெட்கத்துடன் இதைச் சொன்ன அல்லி தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். அல்லியை நெருங்கிய பூவழகி அவள் முகத்தை நிமிர்த்தி, "அல்லி, ஏதோ... உம்..." என்று ஊக்கப்படுத்தினாள்.

"போங்கள்...அக்கா," சொல்ல முடியாத வெட்கத்துடன் அதைச் சொல்லிவிட்டு மரப் பெட்டியை நோக்கி ஓடிய அல்லி, அதைப் பார்த்து அப்படியே பிரமித்து நின்றாள்.

"இப்பொழுது தெரிகிறதா மன்னர் எத்தனை முன் யோசனைக்காரர் என்று? அதுவும் தன் ராணிக்கும் சகோதரிக்கும் என்னென்ன ஆடைகள் தேவை, என்னென்ன அணிமணிகள் தேவை என்பதை ஆராய்ந்து அத்தனையையும் வாங்கி வைத்திருக்கிறார்" என்று கூறி மீண்டும் கேலியாகச் சிரித்த இன்பவல்லி, அந்த மரப்பெட்டியிலிருந்து இரண்டு பட்டுச் சேலைகளையும் அழகிய கச்சைகளையும் எடுத்து அல்லிக்கும் பூவழகிக்கும் அளித்து, தானும் ஒரு சேலையை எடுத்து கட்டிக் கொண்டாள். பிறகு இருவருக்கும் குழல்களைக் கோதி வாரி எடுத்துக் கொண்டைகளைப் போட்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் மன்னரிடமிருந்து அழைப்பு வந்தது உணவருந்த. அறுசுவையுடன் படைக்கப்பட்ட உணவருந்திய சமயத்திலேயே பூவழகி பல கேள்விகளைக்கேட்டாள். அவற்றுக்கெல்லாம் மன்னன் ஓரளவு ஒளிவு மறைவில்லாமல் பதில் சொல்லி வந்ததைக் கண்ட நாங்கூர்வேளே பிரமித்துப் போய், 'இந்தப் பெண்ணிடம் எத்தனை நம்பிக்கை வேந்தனுக்கு!' என்று தனக்குள் பல முறை கேட்டுக் கொண்டார்.

உணவருந்த ஆரம்பித்ததுமே பேசவும் ஆரம்பித்த பூவழகி, "இரண்டு மாத காலமாகத் தகவல் ஏதுமே இல்லாததைக் கண்டு மிகவும் தத்தளித்தேன் அண்ணா! நீ இருக்குமிடம் கூடத் தெரியவில்லை. இத்தனை தூரத்தி லிருப்பாய் என்று தெரியாது" என்றாள்.

"இந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கவே நாளாயிற்று சகோதரி. நாடு இன்னொருவனிடமிருக்கும் போது நாடோடி யாகத் திரியும் மன்னன் ரகசியத்திலும் எச்சரிக்கையாகத் தானே காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது!" என்றான் கரிகாலன்.

"ரகசியத்துக்குக் காடு அவசியம்தான். ஆனால் சோழ நாட்டிலிருந்து தொலைதூரத்திலிருந்தால் எதிரியை எப்படிக் கண்காணிக்க முடியும்?" என்று மீண்டும் கேட்டாள் பூவழகி.

"கண்காணிக்க ஒற்றர்கள் இருக்கிறார்கள் சகோதரி, ஆனால் குணவாயிற்கோட்டம் நாட்டிலிருந்து தொலை தூரத்திலில்லை. தவிர போர்த்துறையின் அவசியத்திலிருந்து கவனித்தால் இது மிகவும் முக்கியமான இடமும் கூட."

"இதன் பெயர் குணவாயிற் கோட்டமா?"

"ஆம். இது கொங்கு நாட்டிலிருந்தாலும் கருவூருக்கு நேர் கிழக்கே மூன்று காத தூரத்திலிருக்கிறது. அப்படி ஒருவூர் வஞ்சியின் கிழக்குப் புறத்தில் கிழக்கு வாயிலைப் போலிருப்ப தால் இதைச் சேரர் குணவாயில்* என்றழைக்கிறார்கள். இந்தக் குணவாயிற் கோட்டத்தின் மேற்புறத்தில் சேர மன்னன் தலை நகர் வஞ்சியும், கிழக்குப் பகுதியில் புகாரும், இரண்டுக்கும் குறுக்கே சோழ நாட்டுத் தலைநகர் உறையூரும் இருப்பதால்

*குணவாயில் என்ற குணவாயிற் கோட்டம் கொங்கு நாட்டில் அதாவது இப்பொழுது சிதம்பரம் தாலுகாவில் இருக்கிறது. இப்பொழுது குணவாசல் என்றழைக்கப்படுகிறது. கருவூருக்கு நேர் கிழக்கே 30 மைலில் இருக்கிறது. விவரங்களுக்கு, பேராசிரியர் மு. இராகவய்யங்கார் எழுதிய ஆராய்ச்சித் தொகுதி பக்கம் 247ஐப் பார்க்கவும்.

இந்த ஒரு இடத்திலிருந்து மூன்று முக்கிய இடங்களையும் நாம் கவனிக்க முடியும். தவிர இந்தக் கோட்டம் சோழ நாட்டிலிருந்து சிறிது தள்ளியிருப்பதால் ரகசியமாகப் படை திரட்டுவதும் சாத்தியம். படை பலம் மிகுதிப்பட்டு நான் போரிடத் துவங்கும் போது ஒரு படைப் பிரிவினால் கருவூரில் சேரனைத் தடை செய்து உறையூரைத் தாக்கலாம். இவற்றை யெல்லாம் யோசித்தே குணவாயிற் கோட்டத்துக்கு வந்தேன். இங்குள்ள அடவியும் குன்றுகளும் என் ஏற்பாட்டுக்குப் பெரிதும் உதவியாயிருந்தன. திரட்டப்படும் படைகளை மறைத்து வைப்பதற்கும் அவற்றுக்குப் பயிற்சியளிப்பதற்கும் இந்த இடம் முதல் தரமாயிருக்கிறது" என்று விளக்கினான் கரிகாலன்.

மன்னனை ஆச்சரியத்துடன் பார்த்த பூவழகி, 'இத்தனை இளவயதில் எத்தனை கூர்மையான அறிவு படைத்தவ ராயிருக்கிறார் மன்னவர்!' எனறு தன் மனத்துக்குள்ளேயே சொல்லிக் கொண்டாளானாலும் அதை வெளிக்குக் காட்டாமல், "அப்படியானால் எப்பொழுது உறையூரைத் தாக்குவதாக உத்தேசம்?" என்று கேட்டாள்.

வாயில் போட எடுத்த உணவைக் கையிலேயே வைத்துக் கொண்ட கரிகாலன் பார்வை, தொலைவிலிருந்த உறையூரை நோக்கிச் சென்றது. சிந்தையும் எங்கோ கனவுலகில் சஞ்சரிப்பதைக் கண்கள் வலியுறுத்தின. ஏதோ கனவில் பேசுவது போலவே அவன் சொற்களும் வெளிவந்தன. "உறையூரை எப்பொழுது தாக்குவதாக உத்தேசம்? சரியான கேள்வி சகோதரி! ஆம்; எப்பொழுது உறையூரைத் தாக்கலாம்? இந்தக் கேள்வியைப் பலமுறை நான் என்னையே கேட்டுக் கொண்டிருக்கிறேன். நான் உறையூரைத் தாக்குவ தானால் முதலில் சேர பாண்டியர்களைச் சமாளிக்க வேண்டும். பிறகு புகாரின் யவனர்களை சமாளிக்க வேண்டும். நான் போர்ப்பறை கொட்டிய மறு வினாடி சேரன் படை தெற்கிலிருந்தும் யவனரின் படைகள் கிழக்கே புகாரிலிருந்தும்

கிளம்பி சாரிசாரியாகச் சோழ நாட்டில் பாயும். அப்படிப் பாய்ந்தால் வீரர்கள் மட்டுமின்றிச் சாதாரண மக்களும் பெருவாரியாக மாய்ந்து போவார்கள். சோழ நாட்டு மண் ரத்த ஆடை புனையும். புனையட்டும். வீரர்கள் ரத்தம் சிந்தட்டும். அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சாதாரண மக்கள் ரத்தமும் சிந்துமே! அதற்காகவே அஞ்சு கிறேன். அப்படிச் சாதாரண மக்கள் ரத்தம் சிந்த வேண்டா மென்றால், எல்லைகளிலேயே போர் நடக்க வேண்டும். எல்லைகளில் போர் நடப்பதானால் படைகள் மூன்று பிரிவாக பிரிய வேண்டும். அத்தனைக்கும் படைபலம் நம்மிட மில்லை. ஆகவே பொறுக்கிறேன். இன்னும் படை திரட்டி, மக்கள் உயிர்ச்சேதமின்றி நாட்டை அடைய எண்ணுகிறேன்..." இந்த இடத்தில் கரிகாலன் ஏதும் பேசாமல் நின்றான்.

அவன் பேச்சைக் கேட்ட அல்லி பெருமிதத்துடனும் கரை கடந்த காதலுடனும் கண்களை உயர்த்தி அவனை நோக்கினாள். ஆனால் கரிகாலன் மனம் உலகத்தையே மறந்து சோழ நாட்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்ததால், அவன் அந்தப் பெண்களிருப்பதை மறந்தான், சகோதரி பாசத்தையே மறந்தான். குகையின் சூழ்நிலையையே அடியோடு மறந்து வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு திடீரென எழுந்து கைகழுவி வேகமாகக் குகைக்கு வெளியே சென்றான்.

மற்றவர்களும் உணவருந்துதலைப் பாதியில் நிறுத்தி விட்டுக் குகைக்கு வெளியே சென்றார்கள். அதற்குப் பிறகு இரண்டு நாட்கள் பெண்கள் மூவரும் கரிகாலனைப் பார்க்கவேயில்லை. அதைப்பற்றிக் கேட்டபோது நாங்கூர் வேள் கூடச் சரியான சமாதானம் சொல்லவில்லை. அதனால் வேதனை அடைந்த உள்ளத்துடன் காட்டில் பதுங்கியிருந்த படைப்பிரிவுகளைப் பகலில் பார்வையிட்டுக் காலம் கழித்த அல்லியும் பூவழகியும், கரிகாலன் எங்கு சென்றான், ஏன் காணப்படவில்லை என்பதை அறிய முயன்றார்கள். மூன்று நாட்கள் வரை தகவலேதும் கிடைக்கவில்லை. நான்காவது

நாள் பூவழகி மட்டும் தனியே தன் குகையில் நின்று ஆலமரக் கிளையிலிருந்த பஞ்சவர்ணக் கிளியைப் பார்த்து, "அண்ணன் எங்கே கிளியே! நீ கூடச் சொல்லமாட்டாயா? எத்தனை பேருக்குத் தூது சென்றிருக்கிறாய்? என் அல்லி தவிக்கிறாளே! அவளுக்காக ஒருமுறை துது சென்று வாயேன்" என்று பைத்தியம் போல் கேட்டாள். அதைப்புரிந்து கொண்டது போல கிளியும் கத்திக் கொண்டு சிறகடித்து வெளியே சென்றது.

அந்தக் கிளி தூது சென்றிருக்கத்தான் வேண்டும். நான்காவது நாளிரவில் பெண்களின் குகைக்குள் கரிகாலன் வெகு வேகத்துடன் புகுந்தான். புகுந்தவன் சகோதரன் கரிகாலன் அல்ல, அரசனான கரிகாலன் புகுந்தான். புகுந்த வேகத்தில், "அல்லி!" என்று ஆக்ஞையிடும் தோரணையில் அழைத்தான். அல்லி வெட்கத்துடன் அவனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

"ஏன் அண்ணா! வரும்போதே அதட்டல் பலமாயிருக் கிறது?" என்றாள் பூவழகி.

"இந்தப் பேச்சுக்கு இது சமயமல்ல சகோதரி" என்று திட்டமாகவும் கடுமையாகவும் அறிவித்த மன்னவன், "அல்லி! நீ உடனே புகார் செல்ல வேண்டும். புரவிகளும் துணைக் காவலரும் தயாராயிருக்கிறார்கள். உம். புறப்படு" என்றான்.

"என்ன அத்தனை அவசரம்?" பூவழகி சற்று அதட்ட லாகவே கேட்டாள்.

"தமிழகத்தைத் துண்டித்துச் சிதறடிக்கப் பெரும் வேலொன்று அதை நோக்கி வருகிறது. அந்த வேலை எய்பவன் யாரென்று அறிய முடியவில்லை" என்றான் கரிகாலன்.

"வேலா?" என்று வினவினாள் பூவழகி.

"விளக்கம் தேவையா? இதோ போய் விளக்கம் சொல்லக் கூடியவரை அனுப்பி வைக்கிறேன். அல்லி, புறப் படத் தயாராயிரு. கட்டளையிடுவது காதலனல்ல. சோழ

நாட்டின் மன்னன்" என்று கூறிவிட்டுக் குகையிலிருந்து வெகு வேகமாக வெளியில் சென்றான்.

சற்று நேரத்திற்கெல்லாம் சமண அடிகள் குகைக்குள் நுழைந்தார். அவர் முகத்தில் சொல்லொணாக் கவலை படர்ந்து நின்றது.

86. வாணகரை விந்தை

அல்லியிடம் உள்ளத்தையெல்லாம் பறிகொடுத்திருந்த மன்னன் கரிகாலன் அன்று அவளிடம் சிறிதும் கருணையையோ, காதலையோ காட்டாமல் மிகவும் முரட்டுத்தனமாக அவளைப் புகார் செல்ல ஆணையிட்டு, குகையிலிருந்து வெளியேறியதையும், சில வினாடிகளுக்குள் குகைக்குள் நுழைந்த வஞ்சிமாநகர் சமண மடத் தலைவரின் கண்களில் இயற்கையாக விளையாடும் விஷமக் குறியில்லாமல், கவலையே முகம் பூராவும் படர்ந்து நின்றதையும் கவனித்த பூவழகி, புகார்ப் பிராந்தியத்தில் போர் நிலை அபாயமாகி வருகின்றதென்பதைப் பொதுப்படையாகப் புரிந்து கொண்டாளானாலும், "மன்னன் குறிப்பிட்ட வேல் எது? அது எந்த உருவத்தில் வருகிறது? எந்தத் திக்கிலிருந்து வருகிறது?" என்பதைத் திட்டமாகத் தெரிந்து கொள்ள முடியாததால் சிறிது சலனப்பட்டே சமண மடத் துறவியை ஏறெடுத்துப் பார்த்தாள். உணர்ச்சிகள் இயற்கை மார்க்கத்தில் ஓடியிருந்தால் சமண அடிகளின் வருகை அவளுக்கு வியப்பையே தந்திருக்க வேண்டும். அவர் திடீரெனப் புகாரை விட்டுக் கிளம்பி வஞ்சிமாநகர் சமண மடத்துக்குச் சென்று மீண்டும் துறவறத்தில் திளைத்து அமைதியை நாடிய செய்தியை அவள் அறிந்திருந்தாள். அதைப்பற்றி அவள் இன்ப வல்லியிடம் பேசியிருந்தாள். ஆகவே சமணமடத் தலைவர் திடீரெனக் குணவாயிற் கோட்டத்தின் அடவிக் குகையில் தலைநீட்டிய போது அவள் வியப்பைத்தான் அடைந்திருக்க

வேண்டும். ஆனால் கரிகாலன் காட்டிய உணர்ச்சி வேகமும், நாட்டை நெருங்கிவரும் அபாயத்தைப் பற்றி அவன் குறிப்பிட்ட முறையும், அதைத் தொடர்ந்து எதிர்பாராத விதமாக சமண அடிகள் தன் முன்பு தோன்றியதும், எல்லாமே அவள் புத்தியைப் பெரிதும் சலனப்படுத்தியிருந்ததால், அவள் வியப்புக்குப் பதில் ஓரளவு குழப்பத்தையும் கவலையையும் முகத்தில் காட்டி, அந்தக் கவலையும் குழப்பமும் சொற்களிலும் பிரதிபலிக்க, "அடிகளே! எனக்கு எதுவுமே புரியவில்லை. கொஞ்சம் விளக்குங்கள். மன்னர் ஏன் இப்படி நிலை குலைந்திருக்கிறார்?" என்று வினவினாள்.

சமண அடிகள் பதிலேதும் சொல்ல முடியாமல் தமது வழுக்கைத் தலையை இருமுறை தடவிக் கொண்டு ஏதோ தீர்க்காலோசனையில் நிண்ட நேரம் இறங்கினார். பிறகு எதிரே நின்ற மூன்று பெண்களின் மீதும் தமது விழிகளை ஒரு முறை ஓடவிட்டார். கடைசியாகப் பெருமூச்சு ஒன்று விட்டுத் தன் கண்களால் பூவழகியை மட்டும் திடமாகப் பார்த்து, "பூவழகி! புகார் என்பதன் பொருள் தெரியுமா உனக்கு?" என்று கேட்டார்.

அந்தக் கேள்வியின் விளைவாக எந்தவித ஆச்சரியத்தையும் காட்டாத பூவழகி நிதானமான குரலில் பதில் சொன்னாள், "தெரியும்" என்று.

"மாற்றார் புகமுடியாத பட்டணம் என்பதற்காக நமது மூதாதைகள் அந்தப் பெயரைச் சோணாட்டின் பிரதான துறைமுக நகருக்குச் சூட்டினார்கள்" என்று ஏதோ சரித்திரம் கற்பிப்பவர்போல் சமண அடிகள் கூறினார்.

"தெரியும்" என்றாள் பூவழகி மீண்டும்.

"இப்பொழுதும் புகாருக்கு அந்தப் பெயர் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் பொருள் போய்விட்டது" என்று கூறிச் சோகப் பெருமூச்சு விட்டார் சமண அடிகள்.

பூவழகி பதிலேதும் சொல்லவில்லை. சமண அடிகள் மேற்கொண்டு பேசட்டுமென்று அவர் பேச இருந்ததை

எதிர்பார்த்துக் கொண்டு நின்றாள். அவள் மனோபாவத்தைப் புரிந்து கொண்ட சமண அடிகள் தாமே மேற்கொண்டும் பேசத்துவங்கி, "பூவழகி! மாற்றார் புகமுடியாத அந்த நகரில் இப்பொழுது மாற்றார் புகுந்திருக்கிறார்கள். சில மாதங்களாகவே புகார் யவனர் கைக்கு மாறிவிட்டது உனக்குத் தெரியும். அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. புகாரிலுள்ள யவனர்களை நாம் எந்த நேரத்திலும் நம்மிடம் அடிபணியச் செய்ய முடியும் என்று நம்பியிருந்தோம். ஆகவே டைபீரியஸிடமிருந்த யவனர்களைப் பற்றி நாம் அஞ்சவில்லை. ஏனென்றால் யவனர் கூட்டம் பிரிந்து நின்றது. அவர்களின் ஒரு பிரிவு வாணகரையில் இளஞ்செழியன் வசப்பட்டுக் கிடந்தது. வாணகரைப் படையின் யவன வீரர்கள் இளஞ்செழியனிடம் அன்பினாலும் அவர் வீரத்திடம் இருந்த அபார நம்பிக்கையாலும் கட்டுப்பட்டுத் தமிழர் பக்கம் இருந்தார்கள். ஆகவே டைபீரியஸ் புகாரை அடைந்ததை நாம் பொருட்படுத்தவில்லை. அவன் இந்திர விழா மாளிகை மீது எழுப்பிய பெரும் தூண்களும் இதர பாதுகாப்பு ஏற்பாடுகளும் நமக்கு ஓரளவு அச்சத்தை விளைவித்தாலும், அவற்றை நாம் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியம் இருந்தது. ஆனால் அந்தத் தைரியமும் தளரும்படியான நிலை ஏற்பட்டுவிட்டது. அதனால்தான் திடீரெனப் பதினைந்து நாட்களுக்கு முன்னால் பிரும்மானந்தர் அவசர அவசரமாக என்னை வாணகரைக்குக் கூப்பிட்டனுப்பினார். நான் சென்றேன்..." என்று கூறி மேலே பேசாமல் சற்றுத் தயங்கினார்.

"தயக்கம் வேண்டாம். சொல்லுங்கள். சென்று என்ன கண்டீர்கள்?" என்று கேட்டாள் பூவழகி படபடக்கும் மார்புடன். திடீரென மூன்றாமவர் ஒருவரால் இளஞ்செழியன் பெயரும் வாணகரையின் பெயரும் எழுந்து அடிபடவே, "புதியதொரு வாணகரையைக் கண்டேன்" என்ற உணர்ச்சி மிகுதியால் சொற்கள் தடைப்படப் பதில் சொன்னார் சமண அடிகள்.

"புதியதொரு வாணகரையா!" ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்டாள் பூவழகி. அவள் உணர்ச்சிகள் பெரும் அலைகளாக எழுந்து உள்ளத்தைத் தாக்கிக் கொண்டிருந்தன.

"ஆம், புதியதொரு வாணகரைதான். அதைத்தான் கண்டேன். படைபலம் குறைந்த வாணகரையைக் கண்டேன். எந்தச் சமயத்திலும் எதற்கும் அஞ்சாத பிரும்மானந்தர்கூடக் கவலையால் பீடிக்கப்பட்டு உட்கார்ந்திருந்த வாணகரையைக் கண்டேன்."

"பிரும்மானந்தருக்கு என்ன கவலை? வாணகரைப் படைபலம் ஏன் குறைய வேண்டும்?"

"வாணகரைப் படையிலிருந்த யவனர் பிரிவின் பெரும் பாகம் புகாருக்குச் சென்று டைபீரியஸின் படைகளோடு இணைந்து கொண்டது."

இதைக் கேட்ட பூவழகி மட்டுமின்றி இன்பவல்லிகூடத் திடுக்கிட்டுப் போனாள். அல்லியின் முகத்தில் மட்டும் திகைப்புக்குப் பதில் கோபம் மிதமிஞ்சித் தாண்டவமாடியது. "பிரும்மானந்தரும் குமரன் சென்னியும் கைகட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்களா?" என்று வினவினாள் அல்லி சற்று அதட்டலாக.

"அவர்கள் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டார் அடிகள்.

"படையிலிருந்து விலகிச் செல்பவர்களைத் தடுத்து நிறுத்த முடியும். சிறை செய்யமுடியும்" என்றாள் அல்லி.

"தெரிந்தால் இரண்டையும் செய்யலாம்."

"எது தெரிந்தால்?"

"விலகிச் செல்வார்கள் என்பது தெரிந்திருந்தால், முன் கூட்டி அதற்கு அறிகுறிகள் இருந்தால்..."

"இல்லையா?"

"இல்லை அல்லி! அடியோடு இல்லை. இருந்திருந்தால் பிரும்மானந்தருக்குத் தெரியாதிருக்குமா? வாணகரையில் இலை அசைந்தாலும் அறிந்து கொள்ளக்கூடிய பெரும் ராஜ தந்திரியான பிரும்மானந்தருக்குத் தெரியாமல் படையில் பிளவு நடந்திருக்கிறது. சரித்திரத்தில் இதுவரை நிகழ்ந்திராத இனிமேலும் நிகழமுடியாத விசித்திரம் வாணகரையில் நிகழ்ந்தது."

"எப்படி அடிகளே அது நிகழ்ந்தது? விளக்கிச் சொல்லுங்கள்" என்று கேட்டாள் பூவழகி.

"அதிகமாக விளக்குவதற்கு ஏதுமில்லை பூவழகி. வாணகரையின் மர்மங்களை, கோட்டை நுட்பங்களை, காவிரிக்குக் குறுக்கும் நெடுக்கும் படகு செல்லும் மார்க்கங்களை, நன்றாக அறிந்த ஒருவனால் இந்த விசித்திரம் நிகழ்ந்திருக்கிறது. நல்ல நடுநிசியில் சுமார் ஐம்பது படகுகள் ஓசைப் படாமல் வாணகரையை நோக்கி வருகின்றன. இராக் காவலர் குரல் கொடுக்கு முன்பு கட்டி வீழ்த்தப்படுகிறார்கள். வந்த படகுகளிலிருந்துப் பெரும் படைத் தலைவர்களைப் போன்ற இருவர் இறங்கி ஏதோ சொந்த வீட்டில் நுழைவது போல் வாணகரைக் கோட்டையின் மர்ம வாயில்கள் வழியாக நுழைந்து யவனர் படைகளில் இருப்பிடத்துக்குச் செல்கிறார்கள். அடுத்தபடி குபுகுபுவென யவன வீரர்கள் புறப்பட்டு வாணகரை நீர்த்துறைக்குப் போகிறார்கள். வழியிலுள்ள காவலரைக் கட்டிப் போடுகிறார்கள். கண்ணிமைக்கும் நேரத்தில் படகுக்குப் பத்துப் பேராக ஏறுகிறார்கள். படகுகள் ஓசைப்படாமல் விரைகின்றன. படகுகள் மறைந்த பிறகு அடுத்த ஜாமம் காவல் மாற்றச் செல்லும் வீரர்கள் செய்தி கொடுக்கிறார்கள். வாணகரையில் ஏகப் பரபரப்பு. பிரும்மானந்தரும் குழம்பிப் போய் உட்கார்ந்து விடுகிறார்...? விந்தை நிகழ்ந்த முறை இதுதான். இந்த நிலையை எண்ணிப் பார் பூவழகி! இந்த நிலையை எந்த ராஜதந்திரி சமாளிக்க முடியும்? எல்லாம் ஏதோ மாயஜாலம் போல் இருக்கிறதல்லவா?"

"ஆமாம். ஆனால் மீதியுள்ள யவனரை விசாரிக்க வில்லையா?" என்று கேட்டாள் அல்லி, பிரமிப்புத் தட்டிய குரலில்.

"விசாரித்தோம். மீதி யவனர்களில் பெரும்பாலோர் பேச மறுத்தார்கள். பேசியவர்கள் டைபீரியஸின் அழைப்பால் யவனர்கள் புகார் சென்றுவிட்டதாகக் கூறினார்கள். தாங்களும் போக அனுமதி கேட்டார்கள்" என்றார் அடிகள்.

"டைபீரியஸின் அழைப்பா!" என்று வினவினாள் அல்லி.

"ஆம். ராணியின் பெயரால் டைபீரியஸ் யவனர்களை அழைத்தானாம். அன்னப்பறவை சின்னத்தின் ஆணையாக யவன ராஜ குடும்பத்துக்குச் செலுத்த வேண்டிய கடமையை யவனர்கள் அனைவரும் செலுத்த வேண்டுமென்று டைபீரியஸ் கேட்டானாம். சீக்கிரம் யவன ராணிக்கு முடிசூட்டு விழா புகாரில் நடக்குமென்றும் தெரிவித்தானாம். அதைத் தெரிவிக்க அந்த இரண்டு படைத் தலைவர்களை அனுப்பினானாம். அவர்கள் சொன்னதைக் கேட்டதும் யவனர் பலர் பதிலேதும் சொல்லாமல் கிளம்பி விட்டார்களாம்."

"யார் அந்த இருவர்?" என்றாள் பூவழகி.

"அதைச் சொல்ல மீதி யவனர்கள் மறுக்கிறார்கள். அவர்களை இனி நம்பவும் முடியாதென்று பிரும்மானந்தர் அஞ்சுகிறார். ஆகவே அவர்களில் பலரைச் சிறையும் இட்டார்" என்றார் அடிகள்.

"சொல்லுங்கள்" என்றாள் பூவழகி.

"சிறையிடப்பட்டவர்களில் பெரும்பாலோர் இரண்டு நாட்களுக்கெல்லாம் விடுவிக்கப்பட்டனர். முதலில் வந்து யவனர்களை அழைத்துச் சென்ற இரு படைத்தலைவர்களில் ஒருவன் இரண்டாம் முறையும் இதைச் செய்திருக்கிறான்."

"யாரவன் இத்தனைத் துணிச்சலுடன் யவனர்களைப் பிரித்து டைபீரியஸுடன் சேர்ந்தவன்? புலியின் குகையில் தலையிடுவது போல் வாணகரைக்குள் நடுநிசியில் புகும் திறன் வாய்ந்தவன்?"

"அதுதான் தெரியவில்லை."

"தெரிய வேண்டும் அடிகளே! படைத்தலைவர் படையில் யவனர் பிரிவு பலமுள்ள கிளைகளில் ஒன்றாயிற்றே" என்று குறிப்பிட்டாள் அல்லி.

"ஆம் அல்லி! தெரியவேண்டும். அதுவும் தெரிய வேண்டும். அதைத் தொடர்ந்து நிகழ்ந்துள்ள காரியங்களுக்கும் காரணம் தெரியவேண்டும்" என்றார், அடிகள் சற்று விசனத்துடன்.

"அடுத்து நேர்ந்த காரியங்களா!" என்று பயத்துடன் வினவினாள் பூவழகி.

அடிகள் அல்லியை நோக்கி, "அல்லி! யவனர் படைப் பிரிவின் பெரும் பாகம் புகாருக்குச் சென்று டைபீரியஸுடன், சேர்ந்த சில நாட்களுக்கெல்லாம் திடீரென யவனர் மரக்கலங்கள் நான்கு புகாருக்கு எதிரில் தோன்றின. அதிலிருந்து பலதரப்பட்ட உடையணிந்த யவனர்கள் பலர் புகாருக்குள் சென்றார்கள். அடுத்த நாள் மரக்கலங்கள் மறைந்தன. ஆனால் மீண்டும் புகாரின் முன்பாகத் தோன்ற ஆரம்பித்தன. டைபீரியஸின் கை இப்பொழுது பெரிதும் வலுவடைந்து விட்டது. அந்த மரக்கலங்களுடன் சேரநாட்டு மரக்கலங்கள் சிலவும் இணைந்திருக்கின்றன. அந்தக் கடற்படை எந்த நேரத்திலும் வாணகரையைத் தாக்க முடியும். அந்த மரக்கலப் படையின் தலைவன் யாரென்பதையும் பரம ரகசியமாக வைத்திருக்கிறான் டைபீரியஸ். எங்கிருந்தோ வந்த இந்த யவனர் மரக்கலப்படையைச் சோழ நாட்டைத் துண்டிக்க வந்த கூர் வேலென்று நம்புகிறார் பிரும்மானந்தர். அதனால் பெரும் விபரீதங்கள் விளைய முடியும் என்று கருதுகிறார்.

இந்தச் செய்தி மன்னருக்குச் சில நாட்களுக்கு முன்பாகவே தெரியும். அதனால்தான் அவர் கலங்கியிருக்கிறார். இந்தப் புது அபாயத்தின் மர்மத்தை உடைக்கத்தான் உன்னை அழைத்து வரச் சொன்னார் பிரும்மானந்தர்" என்றார் அடிகள்.

"என்னையா! இதில் நான் செய்யக் கூடியதென்ன?" என்றாள் அல்லி.

"வேவுத் தொழிலில் உனக்கிணையானவர் யாருமில்லையென்று பிரும்மானந்தர் கருதுகிறார். உடனே புறப்படு அல்லி. சோழ நாட்டைப் பெரும் ஆபத்து சூழ்ந்திருக்கிறது. அது எந்தவித ஆபத்து? எப்படி உருவெடுக்கும் என்பதற்குப் பதில் ராணியிடமிருக்கிறது. ஆகவே நீ உடனே புகாருக்குள் நுழைய வேண்டும். அதற்காக உன்னை அழைத்துப் போகவே நான் வந்திருக்கிறேன்" என்று விளக்கினார் அடிகள்.

சற்றுச் சிந்தனையைத் தெளிவுபடுத்திக் கொண்ட பூவழகி, "அடிகளே! அல்லியைத் தவிர வேவு பார்ப்பவர்கள் யாருமில்லையா?" என்றாள்.

"இல்லை" என்றார் அடிகள் திட்டவட்டமாக.

"அவள் சோழ நாட்டு ராணியாகப் போகிறவள்"- என்றாள் பூவழகி.

'மன்னர் கட்டளைக்குச் சோழ நாட்டு ராணியும் கட்டுப்பட்டவள்" என்று குறிப்பிட்டார் அடிகள்.

"விலக்கு எதற்கும் உண்டு அடிகளே" என்று சுடச்சுடச் சொன்னாள் பூவழகி.

"இல்லை சகோதரி! இந்த விஷயத்தில் இல்லை. நாடு தத்தளிக்கும் போது பதவிகளின் பெயர்கள் பொருளற்றுப் போகின்றன. கடமையொன்றுக்குத்தான் பொருள் உண்டு" என்று சொல்லிக் கொண்டு குகைக்குள் நுழைந்தான் கரிகாலன்.

87. அல்லியும் தாமரையும்

சோழ நாட்டின் நலன் பாதிக்கப்படும்போது, பெரும் தீமையிலிருந்து நாட்டைக் காக்க அவசியமேற்படும்போது, அது சம்பந்தமான பணியில் இறங்க வேண்டுமானால், அதற்குச் சோழ நாட்டு அரியணையில் அமரவேண்டிய அல்லியும் விலக்கல்ல என்பதைத் திட்டமாகத் தெரிவித்துக் கொண்டு குகைக்குள் நுழைந்த கரிகாலனின் முகத்தை ஏறெடுத்துப் பார்த்த பூவழகி, அதில் பெரும் கவலையும் உறுதியும் கலந்து மண்டிக் கிடப்பதைக் கண்டு ஏதும் பேசமாட்டாமல் சில வினாடிகள் நின்றாள். பிறகு அல்லியின் கண்களை ஒரு முறை நோக்கினாள். அல்லியின் கண்கள் என்ன சேதி சொல்லிற்றோ, மற்றவர்களுக்குத் தெரியாதென்றாலும் பூவழகி மட்டும் கணப் பொழுதில் ஒரு முடிவுக்கு வந்து, "வா இன்பவல்லி, வாருங்கள் அடிகளே!" என்று இருவரையும் அழைத்துக் கொண்டு குகைக்கு வெளியே சென்றாள். பூவழகி இப்படிச் சாதுரியமாகக் காதலரிருவரையும் விட்டுக் குகைக்கு வெளியே சென்று பல நிமிடங்களுக்குப் பின்பும், அல்லி கரிகாலனை ஏறெடுத்து பார்க்காமலும் ஒரு சொல்கூடச் சொல்லாமலும் தலையைக் கவிழ்ந்துப் பூமியைப் பார்த்தபடியே நின்றிருந்தாள். அவள் மனோநிலை கரிகாலனுக்குப் பூரணமாகப் புரிந்திருந்ததால், அவனே இரண்டடி எடுத்து வைத்து அணுகி அவள் மலர்க் கரங்களிரண்டையும் பிடித்துக் கொண்டானானாலும் அவன் வாயிலிருந்து சொல்லேதும் கிளம்பவில்லை. மன்னனாகக் கட்டளையை அனாயாசமாகவும் உறுதியாகவும் உதிர்த்த அவன் நா, காதலன் என்ற முறையில் அந்தக் கட்டழகியின் கைகளை அவன் பிடித்த போது சொல் திறனை அடியோடு இழந்து நின்றது. அவள் மலர்க் கரங்களைப் பிடித்து நின்ற கைகளின் விரல்கள் மட்டும் அவள் உணர்ச்சிகளுடன் பேச விரும்பி, விரல்களுக்கிடையே புகுந்து லேசாக அவற்றை நெருக்கவும் செய்தன. அந்த மலரின் விரல் இதழ்களும் திடீரென வலிமை

பெற்று அந்த ஆண்மகன் விரல்களையும் கடுமையாக அழுத்தவே, வாய்கள் பேசாத எத்தனை எத்தனையோ செய்தி அந்த விரல்கள் பேசிக்கொண்டன. பிரிந்தும் நெருங்கியும் பின்னியும் சங்கடப்பட்டு இணைந்தும் நின்ற அந்த இருவர் விரல்களும் இருவர் உடல்கள் பூராவும் பாய்ச்சிவிட்ட உணர்ச்சி அலைகள், அந்த இரு உடல்களையும் சற்று நெருங்க வைக்கவே, இடது கையின் விரல்களை விடுவித்துக் கொண்ட கரிகாலன் அல்லியின் அழகிய தோளின் மீது கையை வைத்தான்.

இன்ப வேதனையடைந்த அல்லி சிறைப்பட்டுக் கிடந்த இன்னொரு கையின் விரல்களால் அவன் கை விரல்களை நொறுக்கிவிடுவது போல் மிகவும் கெட்டியாகப் பிடித்தாள். அந்த நொறுக்கலுக்கு ஈடுகொடுக்க முடியும் என்பதைக் கரிகாலன் விரல்களும் நிரூபித்ததன் விளைவாக அவள் பூவிதழ் விரல்கள் மட்டுமின்றி, அவன் அழுத்தப் பிடித்த கையும் கன்னிச் சிவந்தது. அப்படிச் சிவந்த கையில் தன் இதழ்களைப் பொருத்தும் எண்ணத்துடன் அதைத் தூக்கிய கரிகாலன் அதில் கண்களை ஓட்டியதும் சற்றே நின்று, "ஒரு சந்தேகம் அல்லி" என்று ஏதோ ரகசியம் பேசுவது போல் சொன்னான்.

அல்லியின் உணர்ச்சிகள் அதிகம் பேச முடியாததால் குனிந்த முகத்தைத் தூக்காமலே அவள் பெரிதும் சங்கடப்பட்டு, "என்ன சந்தேகமாம்?" என்று கேட்டாள்.

"அல்லி தாமரையாகுமா, அல்லி" என்று கேட்டான் கரிகாலன் அவள் உள்ளங்கையை மீண்டும் உற்று நோக்கி.

"என்ன கேள்வி இது?" என்று வெட்கத்தால் பேசமாட்டாமல் பேசினாள் அல்லி.

"பதில் சொல்."

"அவசியம் சொல்ல வேண்டுமா?"

"ஆமாம்."

"சொல்லாவிட்டால்?"

"தண்டனை கிடைக்கும்."

"உங்கள் ராஜாங்கத்தில் எதற்கும் தண்டனைதான் போலிருக்கிறது?"

"பொதுவாகக் கிடையாது அல்லி. ஆனால் இந்த ராஜாங்கத்துக்கு நான் வரும்போது தண்டனைதான் பல விதத்தில் கொடுப்பேன்."

"இந்த ராஜாங்கமா!" என்றாள் அல்லி.

"ஆமாம். எனக்கு ராஜாங்கங்கள் இரண்டு."

"அப்படியா!"

"ஆமாம். ஒன்று நாடு சம்பந்தமானது. இன்னொன்று காதல் சம்பந்தப்பட்டது."

இதைச் சொல்லிய கரிகாலன் அவன் மலர்க் கையை ஓர் அழுத்து அழுத்தினான்.

"உம்! வலிக்கிறது" என்றாள் அல்லி வலியிலும் உள்ளூர உவகை பொங்க.

"தண்டனை என்ன இன்பமாகவா இருக்கும்?" என்று கேட்டான் கரிகாலன்.

அந்தத் தண்டனை அவளுக்கு எத்தனையோ இன்ப மாகத்தானிருந்தது. ஆனால் அந்த அபலை அதை எப்படிச் சொல்வாள்! உள்ளத்திலிருந்த உவகையை வெளிக்குக் காட்ட முடியாததால், வெளியே செல்லமாகச் சிணுங்கி முகத்திலும் பொய்க் கோபத்தைக் காட்டி, "போதும் போதும் விடுங்கள்" என்றாள்.

"கேட்டதற்குப் பதில் சொன்னாலொழிய முடியாது" என்றான் கரிகாலன்.

"என்ன கேட்டீர்கள்?"

"அல்லி தாமரையாகுமா என்று கேட்டேன்."

"இது என்ன கேள்வி?"

"அல்லியானால் வெள்ளை ராசிதானே அதிகம்!"

"ஆமாம்!"

"தாமரையில்?"

"சிவப்பு ராசி அதிகம்."

"ஆகவே வெள்ளை அல்லி செந்தாமரையாகுமா என்று கேட்டேன்."

"ஆகாது. பதில் சொல்லிவிட்டேன். விடுங்கள் என்னை."

"நான் ஆகும் என்று சொல்கிறேன்."

"எங்கே ஆகியிருக்கிறது!"

"இதோ உன் உள்ளங்கையைப் பார்" என்று அவள் உள்ளங்கையையே அவளிடம் காட்டிய கரிகாலன், "இது சாதாரணமாக வெண்மையான அல்லி போலிருக்கும்" என்றான்.

"ஊஹூம்..." என்று அவள் புன்முறுவல் கோட்டினாள்.

"இப்பொழுது செந்தாமரையாகி விட்டது பார், எத்தனை குங்குமச் சிவப்பாயிருக்கிறது?" என்று சுட்டிக் காட்டிய கரிகாலன். பொய்க் கவலையையும் முகத்தில் காட்டினான்.

"அல்லி ஏன் தாமரையாகிறது தெரியுமா?" என்று கேட்டான் கரிகாலன்.

"ஏன்?"

"மந்திரவாதியின் கைபட்டிருக்கிறது."

இதைக் கேட்ட அல்லி வெட்க மிகுதியால் இரண்டு கைகளாலும் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். முகத்தைப் புதைத்துக் கொண்டு விளையாடும் சிறு குழந்தையைப் போல் தன் எதிரே நின்ற அந்த எழிலரசியை இடது கையால் அணைத்துத் தனக்காக இழுத்துக் கொண்ட

கரிகாலன், இன்னொரு கையால் அவள் முகத்தை உயர்த்தி, "அல்லி, இதோ என்னைப் பார்" என்றான்.

அல்லி விழிகளைத் திறக்க மறுத்தாள். "வேண்டாம்! வேண்டாம்! இந்தச் சொர்க்கத்திலேயே நானிருக்கிறேன்" என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

"கண்களைத் திற அல்லி, இல்லையேல் நான் திறப்பேன்" என்ற கரிகாலன் சொல்லைக் கேட்ட அல்லி மெள்ளத் தன் மலர் விழிகளைத் திறந்தாள். அவற்றுக்கு எதிரே வெகு அருகில் நெருங்கி இருந்த கரிகாலன் கண்கள், காதல் வெள்ளத்தை அவள் கண்களில் பாய்ச்சின.

இரு ஜோடி கண்களிலிருந்து பிரவகித்து எதிரும் புதிருமாக மோதிக் கொண்ட அந்தக் காதல் வெள்ளத்திலே நீண்ட நேரம் ஆழ்ந்துவிட்ட அந்த இருவரில் முதன் முதலாக நனவுலகத்தை அடைந்த அல்லி, "மன்னவா!' என்றாள்.

மன்னவனிடமிருந்து பதில் ஏதுமில்லை. "என் மன்னவா!" என இரண்டாம் முறையும் அழைத்தாள் அவள்.

"உம்..." என்ற சப்தம் மட்டும் வெளிவந்தது கரிகாலனிடமிருந்து.

"கலங்காதீர்கள்" என்றாள் அல்லி, அவன் உள்ளத்தில் எழுந்து அலைமோதிக் கொண்டிருந்த எண்ணங்களைப் பூரணமாக அறிந்து.

"கலக்கம் ஏதுமில்லை" என்று கரிகாலன் மெள்ளக் கூறினான், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு.

"பொய் சொல்லாதீர்கள். உங்கள் உள்ளத்தில் ஓடும் கவலை எனக்குப் புரியாமல் யாருக்குப் புரியும்?" என்றாள் அல்லி உணர்ச்சிகளை ஓரளவு கட்டுப்படுத்திக் கொண்டு.

"ஆம் அல்லி, ஆமாம். என் மனம் ஒரு நிலையில் இல்லை" என்று ஒப்புக் கொண்டு கவலைப் பெருமூச்சும் விட்டான் கரிகாலன்.

"அபாயத்தில் என்னைப் பிடித்துத் தள்ளுவதை எண்ணிக் கலங்குவீர்கள். இந்தப் பணியில் நான் உயிரிழக்கவும் நேரிடும். அது உங்களுக்கும் தெரியும். இந்த உயிர் இனிப் போனாலும் எனக்குத் துன்பமில்லை. இன்பம்தான்" என்ற அல்லி அவனை நெருங்கி அவன்மீது சாய்ந்தாள்.

"என்ன அப்படிச் சொல்கிறாய் அல்லி! என்னை விட்டு ஒரேயடியாகப் பிரிந்து விடுவது உனக்கு இன்பமாகவா இருக்கிறது" என்று வினவினான் கரிகாலன்.

"பிரிவு துன்பம்தான் என் மன்னவா! ஆனால் என் உயிரை இழப்பதில் துன்பமில்லை. என் இதய மன்னன் இணையற்ற சோழர் அரியணையில் அமர, அவர் கமலத் திருவடிகளில் குறுநில மன்னர் சிரங்கள் தாழ, இந்த உயிரை அர்ப்பணிக்க முடியுமென்றால், அதைவிட எனக்கு இன்பம் வேறென்ன இருக்க முடியும்? உங்களுக்கு நாடு பெரிது, அதன் சேவைக்கு உங்கள் ராணியும் விலக்கல்ல என்கிறீர்கள். நான் அப்படி நினைக்கவில்லை. யாராவது என்னிடம் வந்து, 'உனக்குச் சோழநாடு முழுவதும் வேண்டுமா அல்லது உன் இதயக் காவலர் வேண்டுமா?' என்று வினவினால் தடையின்றிச் சொல்வேன் பின்னவர் வேண்டுமென்று. எனக்குச் சோழ நாடு முக்கியமல்ல. ஏன், உலகமே முக்கியமல்ல. கற்புடைய மங்கையருக்குக் கணவனைவிடச் சிறந்த செல்வம் எதுவுமில்லை. ஆகவே உங்கள் கட்டளைப்படி போகிறேன். ஒருவேளை நான் நிறைவேற்றச் செல்லும் பணியில் நான் இறந்துவிட்டால் என்றாவது ஒருநாள் நினையுங்கள். 'அல்லியென்று ஒரு பேதை இருந்தாள்' என்று" எனக் கூறிய அல்லி, அதற்குப் பின் நீண்ட நேரம் மௌனமே சாதித்தாள். பிறகு உணர்ச்சிகளைச் சரேலென்று கட்டுப்படுத்திக் கொண்டு பிரயாண உடையணியக் குகையின் மூலைக்குச் சென்று, "வெளியே இருங்கள் மன்னவா! பயணத்துக்குத் தயார் செய்து கொண்டு வருகிறேன்" என்று கூறினாள்.

மன்னவன் வெளியே செல்லவில்லை. அதற்குப் பதிலாக இரண்டு எட்டில் குகையின் மூலையை அடைந்து

அல்லியின் அழகிய தோளை முரட்டுத்தனமாக உலுக்கினான். அல்லி உணர்ந்து கெண்டாள், இது காதல் உந்திய சோகத்தால் ஏற்பட்ட வேகம் என்று. அவள் எண்ணியது சரியாயிற்று. அடுத்த வினாடி பிடித்த முரட்டுத்தனத்திலேயே அவளை விடுவிக்கவும் செய்த கரிகாலன், சோகம் தாங்க மாட்டாமல், அதிதுரிதமாகக் குகையைவிட்டு வெளியேறினான்.

அவன் சென்ற அவசரத்தைப் பார்த்துக் கொண்டே நின்ற அல்லி, கடைசியாகப் பெருமூச்சு விட்டுப் பெட்டியிலிருந்து உடைகளை எடுத்துப் பார்த்துப் பழையபடி உழவர் உடையை அணிந்து கொண்டாள். பிறகு பெட்டியிலிருந்த குறுவாளில் ஒன்றை எடுத்துக் கூர் பார்த்து உறையில் போட்டு இடுப்பிலும் செருகிக் கொண்டாள். இந்த ஏற்பாடுகள் முடிந்ததும் மனத்தின் கிளர்ச்சியைப் பெரிதும் அடக்கி முகத்தில் ஒரு நிதானத்தை வரவழைத்துக் கொண்டு குகைக்கு வெளியே வந்தாள். அவள் நிலையைக் கண்டு பூவழகி மட்டுமன்றிச் சமண அடிகள்கூடப் பிரமித்துப் போனார்.

மன்னன் குகையிலிருந்து மிக அவசரமாக நிலை குலைந்து வெளியே சென்றதைக் கண்ட பூவழகியும் அடிகளும், அல்லியின் நிலையும் அப்படித்தானிருக்குமென்று நினைத்தார்களாதலாலும், அப்படி அவள் கலக்கத்துடன் வெளியே வரும் பட்சத்தில் அவளுக்கு ஆதரவு சொல்லத் தயாராயிருந்தார்களாதலாலும், அத்தகைய ஆதரவுக்கு ஏதும் அவசியமின்றி உறுதியான முகத்துடன் உழவன் உடையில் பயணத்துக்குத் தயாராக வெளியில் வந்த அல்லியைக் கண்டதும் பெரும் வியப்பையே அடைந்தார்கள். இம்முறை அல்லி எந்தப் பணியை நோக்கிச் செல்கிறாளோ அந்தப் பணியின் அபாயத்தைப் பூரணமாக அடிகள் உணர்ந்திருந்தாராகையால் அதன் விளைவாக, கரிகாலன் புருஷனாகையால் அதிகமாகக் கலங்காவிட்டாலும் அல்லி கலங்கியே போவாளென்று நம்பியிருந்தார். ஆனால் நிலை நேர்மாறாகி விட்டதைக் கண்ட அடிகள் அல்லியின் திட நெஞ்சை உள்ளூர ஒரு முறை பாராட்டவும் செய்தார். அவர்களின்

மனத்திலோடிய எண்ணங்களே பூவழகியின் இதயத்திலும் ஓடியதாகையால் அவள் குகைக்கு வெளியே வந்த அல்லியை நோக்கி, "அல்லி! இது மகத்தான் தியாகம் அல்லி! உன்னை நாடு மறவாது" என்று அவள் கைகளையும் நன்றிக்கு அறிகுறியாகப் பிடித்துக் கொண்டாள்.

"நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்கிறேன் அக்கா. அதுமட்டுமா? இது அவருக்கு நான் செலுத்த வேண்டிய கடமையல்லவா?" என்று கூறினாள் அல்லி.

"நீ அபூர்வப் பிறவி அல்லி. உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? இந்த நாடுதான் என்ன கைம்மாறு செய்யப் போகிறது. புகார் பூரணமாக யவனர் ஆதிக்கத்துக்குட்பட்டுள்ள சமயத்தில் நீ அங்கு செல்கிறாய். உன் உயிருக்கு..." என்ற பூவழகி, உணர்ச்சி மிகுதியால் மேலே பேச முடியாமல் பேச்சை நிறுத்தினாள்.

"எந்த அபாயமும் நேரிடாது அக்கா! ஏற்கெனவே நான் வேவு பார்த்த இடம்தானே?" என்று தைரியம் சொன்னாள் அல்லி.

"அந்த இடம் முன்போல் இல்லை அல்லி. அது இப்பொழுது யவனர் கோட்டை மேல் திசைப் போர் முறைகளை நன்றாக அறிந்த டைபீரியஸின் வசமிருக்கிறது. தவிர நீ குகைக்குள்ளிருந்த சமயத்தில் அடிகள் சொன்ன விஷயங்களும் எனக்குப் பயத்தைத் தருகின்றன."

"அடிகள் என்ன சொன்னார்?"

"நீ புகார் நகரை மட்டுமல்ல, அதற்குள் அடங்கிய மருவூர்ப்பாக்கத்தையும் பட்டினப்பாக்கத்தையும் மட்டுமல்ல, புகாரின் எதிரே கடலில் அடிக்கடி தோன்றி மறையும் மரக்கலங்களின் மர்மத்தையும் அறிய வேண்டுமாம்."

இதைக் கேட்ட அல்லி ஒரு கணம் திகைத்தாளானாலும் அடுத்த கணம் திகைப்பைத் துடைத்துத் தள்ளி, "அக்கா, ஆபத்து ஏற்படுவதானால், அது நிலத்தில் ஏற்பட்டாலென்ன, நீரில் ஏற்பட்டாலென்ன?" என்று கேட்டாள்.

பூவழகியின் கண்களில் நீர் திரண்டது. "அல்லி, என்ன சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை" என்றாள்.

"அக்கா?" என்று அழைத்தாள் அல்லி.

"ஏன் அல்லி?"

"ஒரு உபகாரம் செய்வாயா?"

"சொல் அல்லி."

"ஒருவேளை நான் இம்முறை எதிரிகளிடம் சிக்கிக் கொண்டு என் உயிர் போகுமானால்..."

பூவழகி அவள் பேச்சைச் சட்டென்று இடைமறித்து, "போதும் போதும், நிறுத்து. என்னால் தாங்க முடியாது" என்றாள்.

"அக்கா! பெண் இதயம் பெண்ணுக்குத்தான் தெரியும். அதனால்தான் சொல்கிறேன். இந்த ஒரு வேண்டுகோளை மட்டும் மறுக்காதே. ஒருவேளை நான் உயிர் துறந்தால் மன்னவர் மனம் உடைந்து போகும். அதற்கு வேறொருத்தியைத் துணை சேர்த்து உடைந்த மனத்தினை நீ ஒட்டவைக்க வேண்டும். இது அல்லியின் வேண்டுகோள் மட்டுமல்ல. உயிருடனிருந்தால் பிற்காலத்தில் சோழநாட்டு ராணியாகக் கூடிய நாங்கூர்வேளின் மகளது கட்டளையும் கூட" என்று கூறிய அல்லி, எதிரே கரிகாலனே பிடித்துக் கொண்டு வந்த புரவிமீது ஏறி, அடிகள் மற்றொரு புரவியின்மீது ஏறித் தொடருவதற்குக் கூடக் காத்திராமல் வேகமாகப் புரவியைத் தட்டி விட்டாள்.

அல்லியையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்ற கரிகாலன் பெருமூச்சுவிட்டான். அடிகளை நோக்கி, "சீக்கிரம் செல்லுங்களேன் அடிகளே! பேச்சு எதுவும் வேண்டாம்" என்று கண்டிப்பாயக் கூறிய கரிகாலன் வேறு திசையில் வெகு வேகமாகச் சென்றான். அடிகள் பெண்களிருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு, கிளம்பி, காட்டு முகப்பில் அல்லியைச் சந்தித்தார்!

"சிறிது நேரமாகிவிட்டது அல்லி!" என்று பேச்சும் கொடுத்தார்.

"பாதகமில்லை" என்று சர்வ சாதாரணமாகக் கூறிய அல்லி அவரை மேற்கொண்டு எதுவும் பேசவிடாமல் குதிரையை நடத்தினாள். பல இடங்களில் தங்கியும் மறைந்தும் காவிரியின் வடபுறமாகச் செல்லாமல், காவிரியைப் புகாருக்கு வெகு தூரம் முன்பாகவே கடந்து தென்புறமாகப் பயணம் செய்து, மறுநாள் இரவு வாணகரையை அடைந்த அல்லியையும் அடிகளையும் உச்ச மாளிகையின் வாயிலிலேயே சந்தித்த பிரும்மானந்தர், "அல்லி! நல்ல சமயத்தில் வந்தாய், வா உள்ளே. செய்தி சொல்கிறேன்" என்றார்.

உள்ளே சென்றதும் உலகமே புரண்டாலும் எந்தக் கவலையையும் காட்டாத பிரும்மானந்தர் முகம் சொல்லவொண்ணாத கவலையைக் காட்டியது. பேசத்துவங்கியதும் சொற்கள் உறுதியாக வராமல் தத்தித் தத்தி உதிர்ந்தன. அப்படி உதிர்ந்த சொற்களில் விரிந்த கதையை விளைந்துள்ள அபாயத்தை, குலை நடுக்கமெடுக்கும் விபரீத நிகழ்ச்சிகளைக் கேட்ட அல்லியின் ரத்தம் உறைந்து போகும் நிலைக்கு வந்து விட்டது. அவள் முகமும் வெண்மையான அல்லியைவிட வெளெரென்று வெளுத்தது. பயத்தை அறியாத இதயத்தில் கூட ரத்தம் வரண்டிருக்க வேண்டும். அதுவும் வெளுத்துத் தான் விட்டதோ என்று அல்லி அஞ்சினாள். திகில் அவளைப் பரிபூரணமாக ஆட்கொண்டது.

88. தொடுவான விளக்குகள்

அல்லியின் அழகிய வதனத்தில் படர்ந்த அபரிமித அச்சத்தையும், பருவத்தின் துடிப்பால் சிவப்புத் தட்டிக் கிடந்த அவள் கன்னக் கதுப்புக்கள் உட்பட முகம் பூராவும் உதய கால மதிபோல் வெளுத்துவிட்டதையும் கண்ட பிரும்மானந்த அடிகள் எள்ளளவும் வியப்படையவில்லை. தம்மையே நடுங்க வைக்கும் புகாரின் சூழ்நிலை, அபலையும் கரிகாலன் காதலில் கட்டுண்டு தவிப்பவளுமான அந்தக் கட்டழகியின் உணர்ச்சிகளை உலுக்கிவிட்டது ஒரு பிரமாதமல்ல என்றே நினைத்தார்.

அப்படி அவள் உணர்ச்சிகள் பெரிதும் பாதிக்கப்படும் என்பதை முன்கூட்டியே உணர்ந்திருந்தாராகையால் வாணகரை உச்சி மாளிகை வாயிலில் சந்தித்த போதும், பிறகு சில நாழிகைகளும் அவளுக்குத் தகவலை உணர்த்தாமலே மெள்ள அவளை வாயிலிலிருந்து உச்சி மாளிகையின் மாடி அறைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த பஞ்சணையில் உட்காரச் சொன்னார்.

அல்லி பஞ்சணையில் உட்காரவில்லை. வாயிலில் சந்தித்த போதே, 'அல்லி! நல்ல சமயத்தில் வந்தாய். வா, செய்தி சொல்கிறேன்' என்று அவசர அவசரமாகத் தன்னை உள்ளே அழைத்த பிரும்மானந்தர் கூடத்துக்கு வந்ததுமே சிறிது நிதானப்பட்டுவிட்டதையும், பிறகு கூடத்தில் செய்தி எதுவும் சொல்லாமல், மாடியறைக்கு அழைத்து வந்து பஞ்சணையில் உட்காரும்படி உபசரித்துக் காலத்தை ஓட்டுவதையும், கண்ட அல்லி, பிரும்மானந்த அடிகள் விஷயத்தைச் சொல்லக் கூட அஞ்சுகிறாரென்பதைப் புரிந்து கொண்டாளாகையால், 'அப்படிப் பிரும்மானந்தரையே அயரவைக்கும் நிலை என்னவாயிருக்கும்? போருக்கோ, பூசலுக்கோ பிரும்மானந்தர் அஞ்சுபவரல்லவே?' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட தன்றி, பிரும்மானந்தர் கூறியபடி மஞ்சத்தில் உட்காராமல் சாளரத்தருகில் சென்று வெளியே தன் பார்வையை ஓட விட்டாள். அவள் கண்ணெதிரே விரிந்தது மனோகரமான இன்பக் காட்சி.

காவிரியாள் பெருவேகத்துடன் கடலரசனுடன் கலந்த சங்கமத் துறையில் அன்று சற்று நிலவு ஏறியிருந்ததன் காரண மாகப் பெரிய பெரிய அலைகள் எழுந்து மோதிக் கொண்டிருந்தன. அந்தச் சங்கம அலைகளில் மூழ்கினால் மறுமையில் பொன்னுலகம் கிடைக்கும் என்பதை வலியுறுத்த இஷ்டப்பட்டதுபோல் புகாரின் பெரும் கலங்கரை விளக்கம் தன் வெளிச்சத்தை அந்த அலைகளில் பாய்ச்சி, அவற்றைப் பொன்னிறம் பெறும்படி செய்திருந்தது. எதிரே கடலில் ஆடி நின்ற இரண்டொரு வர்த்தக மரக்கலங்களையும் அவற்றி

லிருந்து சரக்கை ஏற்றிக் கொண்டு காவிரியின் புனல் பரப்பை நோக்கி எழும்பியும் தாழ்ந்தும் வந்து கொண்டிருந்த சில படகு களையும் தவிர ஆபத்தைக் குறிக்கும் வேறெந்த மரக்கலங் களும், அல்லியின் கண்களுக்குத் தெரியவில்லை. கடற்கரை யின் கருமணல் திட்டுகளிலிருந்த பரதவர் குடிசை வட்டாரங் களில் பாட்டும் கூத்தும் வழக்கம் போல் கேட்டுக் கொண் டிருந்தன. சங்கமத் துறைக்கருகாமையிலிருந்த சுங்கச் சாவடி களிலும் வழக்கமாகக் கேட்கும் காவலர், வர்த்தகர் கூச்சலே கேட்டுக் கொண்டிருந்தன. கடலோடும் பரதவர்க்கும் வீட்டடையாளம் காட்டப் பரதவர் மங்கையர் மாடங்களில் ஏற்றிவைக்கும் விளக்குகள் அன்றுமிருந்தன. பழைய புகாருக்கும் பிரும்மானந்தர் குறிப்பிடும் புதுப் புகாருக்கும் எந்தவித வித்தியாசமும் தெரியாததால் அல்லி நினைத்தாள், 'ஒருவேளை பிரும்மானந்தர் உள்ள நிலையைப் பெரிதுபடுத்தி அனாவசியமாகப் பயப்படுகிறாரோ' என்று. ஏனென்றால் அவள் கண்முன்னே தெரிந்ததெல்லாம் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் புகாரின் இன்பக் காட்சிதான். புகாரில் யவனர்கள் கை மேம்பட்டுவிட்டதென்பதிலோ, அதனால் சோழ நாட்டு ஒற்றுமைக்கும் சுதந்திரத்துக்கும் ஆபத்து உண்டென்பதிலோ அல்லிக்குச் சந்தேகமில்லை. ஆனால் சென்ற ஆறு மாதங்களாக இல்லாத புதுநிலை ஏதும் புகாரில் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் எதுவும் அவள் கண்களுக்குப் புலப்படவில்லை. கண்களுக்கு எட்டாத அபாயம் இருக்கிற தென்பது பிரும்மானந்தர் மெள்ள மெள்ள விளக்கிய பின்பு தான் அவளுக்குப் புலனாயிற்று.

அல்லி சாளரத்தின் மூலம் புகாரின் பெருங்கடலையும் சங்கமத் துறையையும், பிறகு மருவூர்ப்பாக்கத்தையும் பட்டினப்பாக்கப் பகுதிகளையும் நீண்ட நேரம் கவனித்ததை யும், அதனால் அவள் வதனத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படாததையும் அவள் தன்னை நோக்கித் திரும்பிய பின்பே உணர்ந்த பிரும்மானந்த அடிகள், தமது சின்னஞ்சிறு யானைக்

கண்களை அவள்மீது நிலைநாட்டி, "ஆராய்ச்சி முடிந்து விட்டதா அல்லி?" என்று வினவினார்.

"ஆராய்ச்சி ஏதும் செய்யவில்லை அடிகளே! பழைய புகாருக்கும் புதிய புகாருக்கும் என்ன வித்தியாசமிருக்கும் என்று பார்த்தேன்" என்றாள் அல்லி அவரைத் தைரியத்துடன் நோக்கி.

"ஏதாவது வித்தியாசத்தைக் கண்டாயா?" என்று வினவினார் பிரும்மானந்தர்.

"இல்லை. எந்த வித்தியாசமும் எனக்குப் புலப்பட வில்லை. வழக்கமாக கடலில் ஆடி நிற்கும் நாவாய்கள் நிற்கின்றன. வழக்கமாக வரும் படகுகள் வருகின்றன. பரதவரின் ஆடல் பாடல்களும் கேட்கின்றன" என்றாள் அல்லி.

"உண்மைதான் அல்லி! சாதாரணக் கண்களுக்குப் புகாரில் வித்தியாசம் ஏதுமில்லைதான்" என்றார் பிரும்மானந்தர்.

"தாங்கள் ஆராய்ச்சிக் கண்களுக்கு வித்தியாசமிருக்கும் போலிருக்கிறது" என்று குரலில் இகழ்ச்சி தொனிக்கக் கேட்டாள் அல்லி.

அல்லியின் குரலில் தொனித்த இகழ்ச்சியைப் பிரும்மா னந்தர் கவனிக்கவே செய்தாராகையால் உள்ளூர இருந்த அத்தனை கிலியிலும் சுபாவமாகத் தமக்கிருந்த விஷமத்தையும் காட்ட முற்பட்டு, "ஆமாம் அல்லி! ஆண்டவன் என்ன காரணத்தாலோ எதையும் கவனிக்கும் கண்களை இந்த அடியவனுக்கு அளித்து விட்டான். அப்படி அளித்திரா விட்டால் படைத்தலைவன் மறைந்து ஆறு மாதங்களுக்குப் பிறகும் வாணகரை சோழர் வசமிருக்கும் இக்கட்டான நிலை ஏற்பட்டிராது. வாணகரை இருப்பதால் தானே டைபீரியஸை நாம் கவனிக்க வேண்டிய அவசியமிருக்கிறது" என்று அலுத்துக் கொள்வது போல் பேசினார்.

விஷமமாக அவர் பேச முற்பட்டதைப் புரிந்து கொண்ட அல்லி, தனக்கும் அப்படிப் பேச முடியும் என்பதைக் காட்டி, "உண்மைதான். வாணகரை நம்மிட மிருக்கத்தான் செய்கிறது. ஆனால் படை வீரர்களில்தான் பாதிப் பேர் இல்லை" என்றாள்.

"இங்கிருந்து பிரிந்து போய்விட்ட யவனர்களைச் சொல்கிறாயா?" என்று கேட்டார் பிரும்மானந்தர். தமது மார்பிலிருந்த மகர கண்டியின் பதக்கத்தை ஒருமுறை தடவி விட்டுக் கொண்டு.

"ஆமாம். அதனால் பாதகமில்லை போலிருக்கிறது" என்றாள் அல்லி மீண்டும்.

"பாதகமிருந்தால் என்ன நடந்திருக்கும் தெரியுமா அல்லி?" என்று கேட்டார் அடிகள்.

"என்ன நடந்திருக்கும்?"

"நன்றாக யோசித்துப் பார். புகாரில் இருப்பவன் போர்த் தந்திரங்களை நன்றாக அறிந்த எதிரி. இப்பொழுது படையும் அவனுக்குத் திரண்டுவிட்டது. போதாக்குறைக்கு இங்கிருந்த யவனர்களும் அவனிடம் சேர்ந்து விட்டார்கள். ஏற்கெனவே அவனைத் தெய்வம் போல் மதிக்கும் யவனர், புகாரை அவன் பூரணமாகச் சுவாதீனப்படுத்திக் கொண்டதும் அவனிடம் பன்மடங்கு பயபக்தியுடன் இருக்கிறார்கள். புகாரை நில மார்க்கத்தில் காக்க யவன வீரர்களைத் திரட்டிய டைபீரியஸ், அந்நகரை நீர் முனையிலும் காக்க அதோ அந்த இரண்டு பெரிய தூண்களை இந்திர விழா மாளிகை மீதும் எழுப்பி விட்டான். போர்க்கலங்களைக் கொண்ட அந்தப் பெரும் பொறிகள் இருக்கும் வரை டைபீரியஸின் அனுமதியின்றி மரக்கலங்களோ, படகுகளோ புகாரை நாட முடியாது. இத்தகைய பகைவனுக்கு, எதிரிலிருக்கும் வாணகரையை, தலைவனற்ற இந்தப் படைத்தளத்தை, முறியடிப்பது எத்தனை நிமிடங்களாகும் சிந்தித்துப் பார் அல்லி, நன்றாகச் சிந்தித்துப் பார்" என்று பிரும்மானந்தர் ஓரளவு உணர்ச்சியுடன் பேசினார்.

"உண்மைதான் பிரும்மானந்தரே! அவன் ஏன் வாண கரையை அணுகவில்லை?" என்று ஆச்சரியத்துடன் வினவினாள் அல்லி.

"இந்தப் பிரும்மானந்தன் இருப்பதால் அணுகவில்லை. இருமுறை அவன் என்னை ஏமாற்றியது உண்மை. இளஞ்செழியன் மிகவும் சிரமப்பட்டு நேராக வாயில்களை ஒன்றன் பின் ஒன்றாக வைக்காமல் கோட்டைச் சுவர்களைப் பின்னிப் பின்னி, பல பிராகாரங்களாகக் கட்டி, ஒரு வாயிலுக்கும் இன்னொரு வாயிலுக்கும் சம்பந்தமில்லாமல் தள்ளி வைத்திருக்கும் இந்தக் கோட்டைக்குள் அவன் யாரையோ அனுப்பி யவனர்களை அழைத்துச் சென்றது எனக்குப் பெரும் தோல்விதான். ஆனால் வாணகரையின் அமைப்பு, அதையும் விடக் குமரன் சென்னி, பரத வல்லாளன் போன்ற தலைவர்களுடைய போர்த் திறன், அந்தத் தலைவர்களைப் பின்பற்றும் படைகள், இளஞ்செழியனால் பயிற்றுவிக்கப்பட்டவை என்ற அறிவு, இவைதான் இன்னும் டைபீரியஸின் கரங்களைத் தேக்கி வைத்திருக்கின்றன. ஆனால் ஒரு விஷயம் அல்லி! என்று வாணகரை விழுகிறதோ அன்று சோழநாடு விழுந்த விடும். ஆகவே இங்குள்ள படைகள் முழுவதையும் பலி கொடுத்தாவது இதைக் காக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்றார் பிரும்மானந்தர்.

"வாணகரை விழுந்தால் சோழநாடு விழுந்ததா?" ஆச்சரியத்துடன் வினவினாள் அல்லி.

"ஆம் அல்லி! சோழ நாட்டின் கடல் வாயிலான புகார் முழுதும் தமிழருக்கு அடைபட்டு விடுவதற்கு ஒரே தடையாக இருப்பது வாணகரை. இது டைபீரியஸின் கையில் சிக்கினால் கடல் வழி அடைபடும். பிறகு சேர, பாண்டியர் ஆதிக்கம் தமிழகத்தில் ஏற்படும்..." என்று சொல்லிக் கொண்டு போன பிரும்மானந்தரை இடைமறித்த அல்லி, "மன்னர் இருக்கிறாரல்லவா?" என்றாள்.

"கரிகாலன் படை சிறியது. இன்னும் திரட்டப்பட்டு வருகிறது. அவற்றுக்கு ஆயுதங்கள் தேவை. பயிற்சி தேவை. பயிற்சியுள்ள வீரர்கள் அப்படையில் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆனால் புதிதாகச் சேருபவர்களுக்குப் போர்ப் பயிற்சியளிக்க நாளாகும். அந்தப் பயிற்சி பெறுவதற்குள் வேளிர்களும் சேரபாண்டியரும் கரிகாலன் படைகளை நசுக்கி விட முடியும். இன்று நாடு இருப்பது மிகவும் ஆபத்தான நிலை அல்லி. அந்த நிலையைச் சீர்படுத்தவல்ல ஒரே ஒரு ரத்தினமான பிரதேசம் வாணகரை. காரணமில்லாமல் இளஞ்செழியன் இந்தச் சிறுகுன்றைப் பெரும் படைத்தளமாக்கவில்லை..." என்று கூறிய பிரும்மானந்தர், "இப்படி வா!" என்று அல்லியை அழைத்துக் கொண்டு மீண்டும் சாளரத்தை நோக்கிச் சென்று, "அதோ புகாரின் காவிரிக் கரையோரக் கோட்டைச் சுவர்களை நன்றாகக் கவனி" என்றார்.

அல்லி கவனித்தாள். மெள்ள மெள்ள அவளுக்கு உள்ள நிலைமை புரியலாயிற்று. "ஆம், ஆம், புரிகிறது அடிகளே!" என்றாள் சிறிது அச்சத்துடன்.

"என்ன புரிகிறது மகளே!" என்று கேட்டார் பிரும்மானந்தர்.

"சுவர்களில் பரதவர் வலை வீசி ஏறுவதற்காக அமைக்கப்பட்டிருந்த தளைகள் ஒன்றுகூடக் காணோம்."

"இங்கு மட்டுமல்ல அல்லி, கடற்கரையை நோக்கியுள்ள கோட்டைச் சுவரிலும் வலை மாட்டும் தளைகள் கிடையாது."

"கடற்கோள் ஏற்பட்டால் அலைகள் பனைமர உயரம் கிளம்புமே? அப்பொழுது பரதவர் என் செய்வார்கள்?"

"வலைகளை வீசிச் சுவர்களில் மாட்டி ஏறத் தளைகள் இல்லாததால் சாவார்கள்."

"புகாருக்குள் இனி..."

"தமிழர்கள் யாரும் புக முடியாது, டைபீரியஸ் உத்தரவின்றி."

"அபாயமான நிலைதான்."

"அபாயமான எதிரி, டைபீரியஸ் ஒவ்வொரு நிகழ்ச்சியிலிருந்து ஒவ்வொரு படிப்பினையை அடைகிறான். ராணியைச் சாளரத்தின் மூலமாக முன்பு இளஞ்செழியன் சிறையெடுத்து இங்கு கொண்டு வந்தான். அதற்குச் சுவர்த் தளைகள் காரணமென்பதை அறிந்த டைபீரியஸ் தளைகள் எல்லாவற்றையும் நீக்கினான். காவிரியின் நீரடியிலுள்ள சுரங்க வழியாக நீ சென்றதையறிந்த டைபீரியஸ் அத்தகைய வழிகள் அனைத்தையும் மூடிவிட்டான்."

"என்ன! நான் சுரங்க வழியாகச் சென்று ராணியை அழைத்து வந்தது டைபீரியஸுக்குத் தெரியுமா?"

"தெரியும் என்று ராணி செய்தியனுப்பினாள். அவள் ஈர உடைகள் அறை மூலையிலிருந்ததைக் கண்டு டைபீரியஸ் சந்தேகித்துவிட்டானாம்."

அல்லி பெருமூச்சு விட்டாள். "மிகவும் அபாயமான எதிரிதான்'' என்று நடுங்கும் குரலில் சொல்லவும் சொன்னாள்.

"ஆம் அல்லி! மிகவும் அபாயமான எதிரியை நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது. அவன் யவன அரசைப் புகாரில் மட்டுமல்ல. தமிழகத்திலேயே நிறுவ முயல்கிறான். ஆகவே புகாரின் ரகசிய வழிகளை அடைத்துத் தனிக் கோட்டையாக அடித்துவிட்டான். அடுத்தபடி படை பலத்தைப் பெருக்க யவனர் போர் மரக்கலங்களை வரவழைத் திருக்கிறான். சிறிது எதிர்ப்பைக் காட்டுபவர்களையும் வெட்டிக் கடலில் எறிந்துவிட உத்தரவிட்டிருக்கிறான். சடலங்கள் சில வாணகரையோரமாகவும் ஒதுங்கியிருக் கின்றன. இத்தனையிலும் எச்சரிக்கையுடன் நடந்துகொள் கிறான் டைபீரியஸ். விசாரணையின்றி யாரையும் கொல்வ தில்லை. மேலுக்கு தர்ம நாடகம் நடைபெறுகிறது. உள்ளே உறுதியுள்ள யவனர் படை ஆட்சி புரிகிறது. இந்த நிலையில் புகாரில் புரட்சி எதுவும் சாத்தியமில்லை. ஆகவே டைபீரியஸ் எந்த நிமிடத்திலும் தன் படைகளை இருங்கோவேள் படைகளுடன் இணைத்துக் குணவாயிற் கோட்டத்துக்குச் சென்று கரிகாலனை அழித்துவிட முடியும். போதாக் குறைக்கு, சேரனுடைய மரக்கலங்களும் இப்பொழுது வந்துள்ள யவனர் மரக்கலங்களுடன் சேர்ந்து கொண்டிருக்கின்றன. ஏன் சேர்ந்து கொண்டிருக்கின்றன? இந்த மரக்கலங்களையெல்லாம் தலைமை வகித்து நடத்துபவன் யார்? இவை தெரிய வேண்டும் அல்லி. அதற்காகத்தான் உன்னை வரவழைத் தேன்."

பிரும்மானந்தர் விவரித்ததால் அரசியல் நிலையை நன்றாகப் புரிந்து கொண்டாள் அல்லி. புகாரின் நிலையையும் கரிகாலன் எந்த நிமிடத்திலும் அழிக்கப்படலாம் என்ற உண்மையையும் அறிந்து கொண்டதால் அச்சம் அவள் உள்ளத்தைச் சூழ்ந்து கொண்டது. அதனால் அவள் முகம் வெளேரென்று வெளுத்தது. காதலுனுக்கு ஏற்பட இருந்த அபாயத்தால் கிலியடைந்த அவள் உள்ளத்தில் ஓர் உறுதியும் ஏற்பட்டது. 'என்ன ஆனாலும் கரிகாலனைக் காப்பாற்ற வேண்டும். நாடு மாற்றாரிடமோ வஞ்சகனான இருங்கோ வேளிடமோ சிக்கக்கூடாது' என்று உள்ளூரத் தீர்மானித்த அல்லி, "அடிகளே! இனிச் சொல்லுங்கள். நான் என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினாள்.

"யவனர் போர் மரக்கலங்களின் தலைவன் யார் என்பதை அறிய வேண்டும் அல்லி" என்றார் பிரும்மானந்தர், சற்றுத் தயக்கத்துடன், எத்தகைய அபாயமான அலுவலுக்கு அந்தப் பெண்ணை ஏவுகிறோம் என்ற நினைப்பினால்.

அல்லியின் பதிலில் தயக்கம் ஏதுமில்லை, "எப்படி அறிவது?" என்று கேட்டாள்.

"நீராடி உணவு உண்டு இளைப்பாறு மகளே! நடு நிசியில் நீ கிளம்பினால் போதும். அதற்குள் இந்த ஆரம்பச் சந்திரன் ஆட்சியும் தீர்ந்துவிடும்" என்ற பிரும்மானந்தர், அது வரை ஏதும் பேசாமல் தூரத்தே நின்ற சமண அடிகளை அழைத்து, அல்லிக்கு நீராட வசதி செய்யச் சொன்ன தல்லாமல், "நீராடி முடிந்ததும் அல்லிக்குப் பழைய உடை

வேண்டாம். அவள் பரதவர் உடை அணியட்டும்" என்றும் உத்தரவிட்டார்.

அவர் உத்தரவுப்படி சமண அடிகள் செய்து கொடுத்த வசதிகளால் நீராடி, உடை உடுத்து, உணவருந்திய அல்லி சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டாள். நடு நிசி வந்ததும் பிரும்மானந்தரே அவளை எழுப்பி மீண்டும் மாடியறைக்கு அழைத்துச் சென்று, சாளரத்தருகில் அவளை நிற்க வைத்துப் பக்கத்தில் தாமும் நின்று கொண்டார். பிறகு சொன்னார்: "அல்லி! அதோ கடலில் தொடுவானம் தெரிகிறதல்லவா? அதைக் கண்கொட்டாமல் கவனி."

அல்லி இமைகொட்டாமல் அவர் காட்டிய இடத்தைக் கூர்ந்து கவனித்தாள். நீண்ட நேரம் எதுவும் தெரியவில்லை! வினாடிகள்கூட ஆமைவேகத்தில் நகருவது போல் தோன்றியதால் சலிப்படைந்தாள் அல்லி. திடீரென்று பிரும்மானந்தர் அவள் கையை இறுகப் பிடித்து, "அதோ பார் அல்லி, உற்றுப் பார்! நான் சொல்லும்வரை கண்ணை அப்புறமோ இப்புறமோ திருப்பாதே" என்று காதோடு காதாகச் சொன்னார்.

உற்று நோக்கினாள் அல்லி. கடலை வானம் தொட்ட இடத்தில் திடீரென மினுக் மினுக்கென்று இரண்டு விளக்குகள் தோன்றின. காரிருளில் கடல் பிராந்தியத்தில், உலகமே அடங்கிவிட்டதால் எங்கும் அமைதி சூழ்ந்து விட்டதால் பயங்கர நிலையில், தொடுவானத்தே தோன்றிய அந்த விளக்குகள் கடலுக்கு அடியிலிருந்து எழுவதுபோல் மெள்ள மெள்ள எழுந்தன. "உம்! உம் உற்றுக் கவனி! இதோ இப்படித் திரும்பு. இப்பொழுது கலங்கரை விளக்கத்தைப் பார்" என்று வலியுறுத்தினார் அடிகள்.

கவனித்தாள் அல்லி. சோழர் ஆட்சியில் என்றும் அணைக்கப்படாத பூம்புகாரின் கலங்கரை விளக்கம் அணைந்து கிடந்தது. தொடுவானத்தருகே தெரிந்த இரண்டு விளக்குகள் சிறிது நேரத்திற்கெல்லாம் நான்காயின. அந்த நான்கு விளக்குகளும் துரிதமாகக் கலங்கரை விளக்கிருந்த திசையை நோக்கி நகரத் தொடங்கின.

89. நள்ளிரவில் பேய்ச் சிரிப்பு

காரிருளில் கடலிடைத் தோன்றி, கலங்கரை விளக்கத்தை நோக்கித் துரிதமாக நகர்ந்த அந்த நான்கு விளக்குகளையும் கவனித்த அல்லி, அவை நான்கும் பெரும் மரக்கலங்கள் என்பதை உணர்ந்து கொண்டாளானாலும், அவை அப்படி ரகசியமாக இரவில் வரவேண்டிய அவசியத்தை உணர முடியாத காரணத்தால், பிரும்மானந்தரை நோக்கி ஏதோ கேட்க வாயெடுத்ததும் அவளைப் பேச வொட்டாமல் கையை அழுத்தி மௌனமாயிருக்கச் செய்த அடிகள், "இன்னும் கொஞ்சம் நிதானி மகளே! நாடகம் இத்துடன் முடியவில்லை'' என்று கூறித் தொடுவானத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தார். அல்லியும் மேற்கொண்டு ஏதும் பேசாமல், அலைகள் பெரிது பெரிதாக எழுந்து மோதினாலும் இருளின் காரணமாக அவற்றின் பரிணாமம் தெளிவாகத் தெரியாமல், பெரும் கரி மலைகள் எழுந்து விழுவது போன்ற பிரமையை அளித்த கடலின் பெரும் நீர்ப்பரப்பையும் தொடுவானத்தையும் உற்று நோக்கலானாள்.

கடல் அன்றிரவு இருந்த உக்கிரத்திலும் பேரலைகள் எழுந்ததால் உண்டான பயங்கரத்திலும், பெரும் சுறாக்கள் நீர்மட்டத்திலிருந்து திடீரென மேற்கிளம்பி அரைச் சக்கரமாகப் பாய்ந்து, மீண்டும் திடீர் திடீரென நீருக்குள் மூழ்கிச் சென்றது போன்ற பல விந்தைகளை விளைவித்துக் கொண்டிருந்த பூம்புகாரின் கடற்பிரதேசம் காண்பதற்கு இணையற்ற இன்பமாகவே இருந்தது. இரவின் கடுமையை லேசாகக் கிழித்து வேடிக்கை காட்டுவது போல் கண்சிமிட்டிய தூரத்து மரக்கலங்களின் நான்கு விளக்குகளும், கடலரசிக்கு மங்கள ஆரத்தி எடுப்பது போல் ஒரே சீராகக் கலங்கரை விளக்கத்தை நோக்கி நகர்ந்தன. கடலின் உக்கிரத்தால் எழுந்த பெரு அலைகள் அந்த மரக்கலங்களின்மீது வாரியடித்த நீர்த் திவலைகள் விளக்குகளின் வெளிச்சத்தில் ஓரளவு தெரிந்த

தால் தனக்கு எடுக்கப்படும் மங்கள ஆரத்திக்குச் சன்மானம் செய்யக் கப்பல் தட்டில் கடலரசி பொன் நாணயங்களை வீசுவது போன்ற பிரமையே ஏற்பட்டது. அத்தனை பயங்கர நிலையிலும் தன் மனத்தை இழுத்து அழகில் லயிக்கச் செய்ய வல்ல புகாரின் இணையற்ற எழிலை நினைத்த அல்லி, 'உலகத்தில் ஆயிரம் நாடுகள் இருக்கலாம். ஆயிரம் துறை முகங்கள் இருக்கலாம். ஆனால் எங்கள் புகாருக்கிணை எங்கும் இருக்க முடியாது' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டாளாகையால், அவள் மனத்தில் எழுந்த பூரிப்பின் பொலிவு முகத்திலும் படர்ந்தது. அளவுக்கு மீறிய சந்துஷ்டி துன்பத்தில்தான் கொண்டு போய்விடும் என்ற நியதியாலோ என்னவோ, அவள் மன மகிழ்ச்சியைத் தண்டிக்க வேறிரு விளக்குகள் அந்த நான்கு விளக்குகள் இருந்த இடத்திலிருந்து சிறிது தூரம் தள்ளி மற்றொரு திசையில் தோன்றின. நேர் கிழக்கில் தோன்றிக் கலங்கரை விளக்கத்தை நாடி நகர்ந்த நான்கு விளக்குகளையும், அவற்றைக் குறுக்கிட முனைந்தவை போல் தென்கிழக்கே தோன்றி மிகவும் வேகத்துடன் குறுக்கே நகர்ந்த பிந்திய இரண்டு விளக்குகளையும் நோக்கிய அல்லி, "இந்த இரண்டு மரக்கலங்கள் அவற்றைக் குறுக்கிட வருகின்றனவா!" என்று மெள்ள வினவினாள்.

"இல்லை, அந்த நான்குடன் சேர வருகின்றன" என்று பிரும்மானந்தர் பதில் கூறினார்.

"ஆறும் ஒரே நாட்டின் மரக்கலங்களா?" என்று மீண்டும் வினவினாள் அல்லி.

"தெரியாது அல்லி. அந்த மரக்கலங்களைப் பற்றித் திடமான தகவல் எதுவும் தெரியாது. கடலோடிகளான பரத வர்கள் சொன்ன சில தகவல்களிலிருந்து இந்த மரக்கலங்களில் சில யவனருடையதென்றும், சில பெருஞ்சேரலாதனுடைய தென்றும் தெரிகிறது. தவிர மரக்கலங்கள் மொத்தம் ஆறுக்கு மேற்பட்டும் இருக்கின்றன."

"அதை மட்டும் எப்படி அறிந்தீர்கள்?"

"இவை வரும் போதெல்லாம் பார்க்கிறேன். சில சமயம் ஆறு மரக்கலங்கள் வருகின்றன. சில சமயம் எட்டு மரக்கலங் களைக்கூடக் கண்டிருக்கிறேன். ஆனால் ஒவ்வொரு சமயத் திலும் மரக்கலங்கள் சேர்ந்து வருவது கிடையாது. எப்பொழு தும் பிரிந்தே வருகின்றன! எதுவும் எதிர்த் திசைகளிலிருந்து."

"பிரதிதினம் இப்படி இரவில் வருகின்றனவா?"

"இல்லை. தினம் வருவதில்லை. சில சமயங்களில் நான்கு நாட்களுக்கு ஒரு முறை வரும். சில சமயங்களில் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை வரும்."

"ஏன் பிரிந்து வருகின்றன?"

"காரணம் தெரியவில்லை. ஆனால் யவனர் மரக்கலங் களின் தளமும் சேரன் மரக்கலங்களின் தளமும் வெவ்வேறு இடங்களில் இருக்க வேண்டும். யவனர் மரக்கலங்கள் புறப் பட்ட சிறிது நேரத்திற்குப் பின் சேரன் மரக்கலங்கள் புறப்பட் டிருக்க வேண்டும் என்று ஊகிக்கிறேன்."

"இருக்கலாம். ஆனால் ஒற்றர்களை அனுப்பி அந்தக் கடற்படைத் தளங்களைக் கண்டுபிடிப்பதுதானே?"

பிரும்மானந்தர் பெரும் கவலையை வலியுறுத்தப் பெருமூச்செறிந்துவிட்டுச் சொன்னார்: "அதற்கும் முயன்றேன் அல்லி! முயன்றேனென்ன, முயன்றும் வருகிறேன். இப்பொழுதுகூட பரதவல்லாளனையும் குமரன் சென்னியை யும் இன்னும் பலரையும் அதற்காகவே அனுப்பியிருக்கிறேன். புகாரிலிருந்து பாண்டி நாட்டுக் கொற்கைவரை கடற் கரையைச் சல்லடை போட்டுச் சலித்துவிட்டேன். ஆனால் மரக்கலங்கள் தங்கும் சுவடுகூடத் தெரியவில்லை. இந்த மாய மரக்கலங்கள் எங்கே தங்கியிருக்கின்றன? எங்கிருந்து வருகின்றன? நாலைந்து நாட்களுக்கு ஒரு முறை ஏன் புகாரை நோக்கி வருகின்றன? யவனர் கப்பல்களாயிருந்தால் யவனர் ஆதிக்கத்திலிருக்கும் பூம்புகாரிலேயே வந்து நங்கூரம் பாய்ச்ச என்ன நடை? இந்தக் கேள்விகளைப் பலமுறை என்னை நானே கேட்டுக் கொண்டேன். ஆனால் விடை இன்றுவரை கிடைக்கவில்லை."

அல்லியின் சித்தத்தில் ஊக அலைகள் பல எழுந்தன வானாலும் அவை மீண்டும் பயனற்ற அறிவீனப் பாறை யிலேயே மோதி மோதிச் சிதறின. "மிகவும் விசித்திரமாகத் தானிருக்கிறது. அடிகளே!" என்றாள் அவள் கடைசியில்.

பிரும்மானந்தர் குழந்தையைத் தடவிக் கொடுப்பது போல் இடது கையல் அவள் தலையைத் தடவிக் கொடுத்து, "குழந்தாய்! அந்தக் கேள்விகளுக்கு விடைகளை நீதான் கண்டு பிடிக்க வேண்டும். அதற்காகத்தான் உன்னை வரவழைத்தேன். நீ நாங்கூர்வேள் மகளானது எனக்குத் தெரியும். இன்றைய அல்லி நாளது சோழமாதேவியென்பதையும் நான் அறிவேன். மன்னர் உன்மீது உயிர் வைத்திருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியாததல்ல. ஆனால் இந்த அபாயப் பணிக்கு நம்பி வேறு யாரையும் நான் ஏவ முடியவில்லை. இளஞ்செழியனிடம் சேவகம் புரிவதைப் புனிதப் பணியாகக் கருதியிருந்த நமது யவனர் பிரிவு, யாரோ இரு தலைவர்கள் வந்து ஒரு வார்த்தை சொன்னதும் வாணகரையிலிருந்து போய்விட்டதை அறிந்த பின் இங்குள்ள யரையுமே நம்ப என்னால் இயலவில்லை. அவர்கள் போனது இன்னும் எனக்குப் பேராச்சரியமாக இருக்கிறது..." என்று மேலும் ஏதோ சொல்லப் போன அடிகளை இடைமறித்த அல்லி, "ராணியின் பெயரால் அன்னப் பறவை ஆபரணத்தின் ஆணையால் யவனர்கள் அழைக்கப்பட்டதாகச் சொன்னார்களே!" என்று கூறினாள்.

அந்த விளக்கம் அர்த்தமற்றது என்பதைக் குறிப்பது போல் தலையசைத்த பிரும்மானந்தர், "அல்லி! ராணி புகாரின் மண்ணில் புரண்டு மாதங்கள் எட்டு ஆகின்றன. அவள் அன்னப் பறவை ஆபரணத்தையும் அவள் அந்தஸ்தை யும் இங்குள்ள யவனர்கள் இத்தனை மாதங்களாக அறிந்து தானே இருந்தார்கள்? அப்படி இத்தனை மாதங்களாக டைபீரியஸின் ஆணைகளைப் புறக்கணித்து, இளஞ்செழியன் படையைவிட்டு அகலாத யவனர்களுக்கு இந்த மனமாற்றமும் ராணியிடம் பக்தியும் திடீரென ஏற்படக் காரணமென்ன?" என்று வினவினார்.

அல்லியால் பதிலேதும் சொல்ல முடியவில்லை. அவள் மௌனமே சாதித்தாள். பிரும்மானந்தரே மேலும் சொன்னார்: "காரணம் ஏதும் புரியவில்லை அல்லி. நான் சற்று முன்பு எழுப்பிய கேள்விகள் கேள்விகளாகவே நிற்கின்றனவே ஒழிய விளக்கமோ விடையோ கிடைக்கவில்லை. இந்த மரக் கலங்கள் புகாரைக் காத்து நிற்கின்றன. டைபீரியஸுக்கு உதவுவதே இவற்றின் தொழில். அதுவரை நிச்சயம். இல்லா விடில் புகாரை அவை அணுகுவதும் சாத்தியமல்ல. இதோ இப்படித் திரும்பிப் பார்."

பிரும்மானந்தர் காட்டிய மார்க்கத்தில் திரும்பினாள் அல்லி. கலங்கரை விளக்கம் அணைந்து கிடந்தது. ஆனால் இந்திரவிழா மாளிகை மீதிருந்த இரண்டு தூண்களின் முகப்பில் இரு சிறு விளக்குகள் மின்னின. "இவை ஏன் ஏற்றப் பட்டன?" என்று வினவினாள் அல்லி வியப்புடன்.

"அந்த மரக்கலங்கள் கரையை நோக்கி நகரலாம் என்ப தற்கு அடையாளம் இது" என்று விளக்கினார் அடிகள்.

"கலங்கரை விளக்கத்தை அணைப்பானேன்?" ன்று வினவினாள் அல்லி.

"கலங்கரை விளக்கம் பொதுவாக எல்லா மரக்கலங் களுக்கும் வழிகாட்டி. அதை அணைத்து இந்த இரு ஸ்தூபி களின் விளக்குகளையும் ஏற்றுவது யவனர் போர்க்கலங்கள் வரலாம் என்பதை வலியுறுத்துவதற்கு."

அல்லிக்கு அந்த மரக்கலங்களின் வருகை மட்டுமின்றி தங்கள் ஆதிக்கத்திலிருக்கும் புகாருக்கு யவனர்கள் தங்கள் கப்பல்களைத் திருட்டுத்தனமாக வரவழைப்பதும், அதற்காக அடையாளங்களை மாற்றிக் காட்டுவதும் பெரும் வேடிக்கை யாக இருந்ததன்றிப் பெரும் மர்மமாகவும் இருந்தது. இதற் கெல்லாம் காரணம் என்ன என்பது மட்டும் பிரும்மா னந்தரைப் போலவே அவளுக்கும் விளங்கவில்லை. இரு காரணத்தை மட்டும் பிரும்மானந்தர் திட்டமாகச் சொன்னார்: "இவையெல்லாம் பெரும் போர் மூள அறிகுறிகள் அல்லி! போர் மூள நாளும் அதிகமில்லையென்று

நினைக்கிறேன். போர் நிலத்தில் மட்டுமல்ல, நீரிலும் நடக்கும். சோழ நாடு இருப்பதா அல்லது அழிவதா என்பது வெகு சீக்கிரம் நிர்ணயிக்கப்படும். அந்த நிர்ணயப் பணியில் அரச பக்தியும் தேசபக்தியும் உள்ளவர்கள் தங்கள் பணிகளைச் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. அவசியம் வருமானால் இந்தக் காவியுடையுடன் கத்தியைப் பிடித்து மாற்றார் பலர் குருதியை என் தாய் நிலத்தில் பாய்ச்சி விட்டுத் தான் நான் இறப்பேன். அதற்குப் பூர்வாங்கப் பணிகளைச் செய்யத்தான் உன்னை வரவழைத்தேன். இந்தப் பணியில் உன் உயிர் போகலாம். நீ அவமானப்படுத்தப்பட்டாலும் படலாம். என்ன நடக்குமோ, அந்த மரக்கலங்களில் யாரிருக்கிறார் களோ, தலைவன் கொடியவனா, நல்லவனா எதுவும் எனக்குத் தெரியாது. கண்ணை மூடிக் கொண்டு உன்னை அனுப்பு கிறேன். மனத்தில் பெரும் சோகத்துடனேயே உன்னைப் போகச் சொல்கிறேன். நாட்டின் கதி அதோகதியாகும் நிலையில் நம் கதியைப் பற்றி நினைக்க அவகாசமில்லை அல்லி. நீ போகத்தான் வேண்டும்" என்றார் பிரும்மானந்தர்.

மேற்கொண்டு நீண்ட நேரம்வரை அல்லியோ பிரும்மா னந்தரோ பேசவில்லை. பிரும்மானந்தரின் சொற்கள் மென்மையான இதயத்தை வயிரமாக அடித்துவிட்டது. "என்ன நடந்தாலும் நடக்கட்டும். அந்த மரக்கலங்களின் மர்மத்தைக் கண்டு பிடிக்கிறேன்" என்று அல்லி சொல்லிக் கொண்டாள். தீர்க்கலோசனைக்குப் பிறகு பிரும்மானந்தர் கேட்டார், "என்ன யோசனை செய்கிறாய் அல்லி?" என்று.

"அந்த மரக்கலங்களை அணுகுவது எப்படி? அணுகிய பின் நடந்து கொள்வது எப்படி என்பதைப்பற்றி யோசிக் கிறேன்" என்றாள் அல்லி, கல்லாகிவிட்ட உள்ளத்தின் விளை வாக வரண்டு போன சொற்களைக் காட்டி.

"அவற்றையெல்லாம் நான் யோசித்துவிட்டேன். ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன்" என்றார் பிரும்மானந்தர்.

"என்ன ஏற்பாடு பிரும்மானந்தரே?" என்று அல்லி வினவினாள் அதே வரண்ட குரலில்.

பிரும்மானந்தர் எதிரேயுள்ள கடலில் சில இடங்களைச் சுட்டிக் காட்டி உறுதியும் விவேகமும் தொனித்த குரலில் மிகுந்த எச்சரிக்கையுடன் தனது திட்டத்தை விவரித்தார். "கவனமாகக் கேட்டுக் கொள். நான் சொல்வதிலிருந்து சிறிது பிறழ்ந்தாலும் உன் உயிர் உன்னுடையதல்ல. பிறகு நாடும் நம்முடையதல்ல'' என்று ஆரம்பித்த பிரும்மானந்தர் பூம்புகாரின் சங்கமத் துறைக்கருகிலிருந்த இடத்தைக் காட்டி, "அந்த இடத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டார்.

"பார்த்தேன்" என்றாள் அல்லி.

"அது..."

"முதன் முதல் ராணி மயக்கமுற்று ஒதுக்கப்பட்ட இடம்."

"ஆம் ஆம். அதற்கு நேரில் சற்றுத் தூரத்திற்கப்பால் அந்த நான்கு மரக்கலங்களும் நங்கூரம் பாய்ச்சி நிற்கும்."

"உம்."

"புதிதாக வந்து சேர்ந்துகொண்ட இரு மரக்கலங்களும் சங்கமத் துறைக்குத் தெற்குப் புறத்தில் அதாவது வாணகரை யிலிருந்து சிறிது தூரத்தில் நிற்கும்."

"சரி, இடையே காவிரி கடலுடன் கலக்கும் பெரும் புனல்."

"ஆமாம் அல்லி. குறுக்கே கடலுக்குள் பாயும் காவிரி யின் புனல் வேகம் வாய்ந்தது."

"அதன் குறுக்கே சாதாரணப் படகுகள் செல்வது அபாயம்."

"நன்று நன்று. அதுதான் விஷயம் அல்லி. ஆகவே அதற்கு வேறு யுக்தி செய்திருக்கிறேன். வாணகரைக் குன்றின் தென் புறத்தில், அதாவது அந்த இரண்டு மரக்கலங்களையும் தள்ளி வெகு தூரத்தில் படகு ஒன்று தயாராயிருக்கிறது" என்று மெள்ள அல்லி செய்ய வேண்டியதை விளக்க முற்பட்ட

பிரும்மானந்தரை இடைமறித்த அல்லி, "சொல்லுங்கள், அந்தப் படகில் நான் செல்ல வேண்டும். அந்தப் படகில் ஏறி நேராகக் கடலில் கிழக்குத் திசையில் சிறிது தூரம் சென்று, பிறகு வடக்காகத் திரும்பினால் காவிரியின் புனல் வேகம் குறைந்திருக்கும். அங்கு கடலின் குறுக்கே சென்றால் சங்கமத் துறைக்கு, அதாவது ராணி கிடந்த இடத்துக்கு எதிரில் வட புறத்தில், அந்த நான்கு மரக்கலங்களுக்குப் பின்னால் என் படகு வரமுடியும்" என்று கூறினாள்.

"ஆமாம் அல்லி! அதேதான்" என்றார் பிரும்மானந்தர்.

"ஆனால் எனக்குப் படகு ஓட்டத் தெரியாதே" என்றாள் அல்லி.

"தெரிய வேண்டியது இல்லை அல்லி. தெரிந்தாலும் பயனில்லை."

"ஏன்?" ஏதும் புரியாமல் வினவினாள் அல்லி.

"நீ சுதந்திரமாகப் படகில் செல்லப் போவதில்லை."

"பின் எப்படிச் செல்வேன்?"

"உன்னைப் புகாரில் டைபீரியஸிடம் ஒப்படைக்க இரு யவன வீரர்கள் அழைத்துச் செல்கிறார்கள். அவர்களில் ஒருவன் நீரில் விழுந்து விடுகிறான். இன்னொருவனை நீ கட்டையாலடித்து விடுகிறாய். அவன் படகில் ரத்தக் காயத் துடன் உன் பக்கத்தில் கிடப்பான். உன் பக்கத்தில் அவனை அடித்த கட்டை இருக்கும். அவனும் உன்னை மண்டையில் அடித்து விடுவதால் நீயும் மயக்கமாயிருக்கிறாய். உங்களிரு வரையும் சுமந்த படகு மெள்ள மெள்ள அந்த நான்கு மரக் கலங்களை அணுகும். மரக்கல மாலுமிகள் உங்களைக் கண்டெடுத்துத் தலைவனிடம் சேர்ப்பிப்பார்கள்" என்று பிரும்மானந்தர், ஒரு பெண்ணை இத்தனை அவதிக்குள் ளாக்கும் அவசியம் நேர்ந்ததன் காரணமாக வெறுப்பினால் பேச்சையும் நிறுத்தினார்.

அவர் மேற்கொண்டு எதுவும் சொல்ல அவசியமு மில்லை. அவர் திட்டத்தை நன்றாகப் புரிந்து கொண்டாள் அல்லி. மரக்கலத்தை அடைந்ததும், தான் செய்ததாகச் சொல்லப்பட வேண்டிய குற்றம். தன்னைப் படகில் அனுப்பிய காரணம் இவற்றுக்கெல்லாம் பொய்யைத்தான் சிருஷ்டிக்க வேண்டுமென்பதையும் அல்லி சந்தேகமறத் தெரிந்து கொண்டாள். தன்னைப் பரதவர் உடையை அணியச் செய்ததன் காரணமும் புரிந்து விட்டது அல்லிக்கு. டைபீரியஸிடம் செல்லாத சில யவனர்களை இந்த வேவுத் தொழிலுக்குப் பிரும்மானந்தர் பயன்படுத்த முயலுகிறா ரென்பதை மட்டுமின்றி, அந்த யவனர்களைப் பயன்படுத்து வதனால் ஏற்படக்கூடிய அபாயத்தையும் நன்றாக உணர்ந் தாள். இருப்பினும் அந்தத் துணிகர அலுவலில் யாருக்கு மில்லாத பெரும் துணிச்சலுடன் இறங்கினாள் அல்லி.

மூன்றாம் ஜாமம் முடிவடையும் தருணத்தில் பிரும்மா னந்தர் அவளையும் ஒரு யவன வீரனையும் வாணகரைக் குன்றின் தென்புறத்துக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று, படகுத் துறையை அடைந்து, "பார்த்தாயா அல்லி, இந்தக் குன்றின் விசேஷம் இதுதான். அதன் தென்கரை வளைவில் நின்றால் வடபுறத்திலிருக்கும் பெரும் புகாரே கண்ணுக்குத் தெரியாது. பல சௌகரியங்களை, முன்னிட்டே இளஞ் செழியன் இங்கு தனது படைத்தளத்தை நிறுவினான். அவன் மட்டும் இப்பொழுது இங்கிருந்தால்..." என்று கூறிப் பெருமூச் செறிந்தாரானாலும் சட்டென்று தம்மைத் திடப்படுத்திக் கொண்டு, "அல்லி! இதோ படகு, ஏறிக்கொள். அதோ இருக் கிறது அதில் ஒரு பெரும் கட்டை. அதை உபயோகித்துக் கொள்" என்று கூறிய பிரும்மானந்தர், பக்கத்தில் மிகவும் உயர மாக நின்ற யவன வீரனை நோக்கி, "வீரனே! இளஞ்செழியன் பெயரால் ஆணையிடுகிறேன். உன் கடமையைச் செய், மற்றவர்களைப் போல் துரோகம் செய்யாதே" என்று கூறி விட்டு அவர்களைப் படகிலேறப் பணித்தார்.

"இன்னொரு வீரன் எங்கே?" என்று அல்லி கேட்டாள்.

"அவன் நீரில் விழுந்து விட்டதாகச் சொன்னால் போதும். படகில் உனக்கும் இரண்டு யவன வீரர்களுக்கும் சண்டை ஏற்படும்போது ஒருவன் நிலை தவறிக் கடலில் விழுவது சகஜம்" என்று குறிப்பிட்டார் பிரும்மானந்தர்.

அல்லி புரிந்து கொண்டாள். மேற்கொண்டு ஏதும் பேசாமல் படகில் ஏறிக்கொண்டு, "வருகிறேன் அடிகளே!" என்றாள் உறுதி நிரம்பிய குரலில்.

பிரும்மானந்தருக்குப் பேச முடியவில்லை. அவர் தொண்டையைத் துக்கம் அடைத்தது. படகு நகர்ந்தவுடன் முதுகைக் கடலுக்காகத் திருப்பிக் கொண்டார். படகை யவனன் தள்ள நின்று கொண்டே சென்ற அல்லி, அத்தனை இருட்டிலும் கடற்கரையில் நின்ற பிரும்மானந்தரின் பெரும் உடல் குலுங்குவதைக் கண்டு, அவர் குலுங்கிக் குலுங்கி அழுகிறார் என்பதைப் புரிந்து கொண்டு மனம் நெகிழ்ந்தாள்.

படகு மெள்ள மெள்ளக் கடலில் கீழ்த் திசையை நோக்கிச் சென்றது. அதில் விளக்கேதும் இல்லாததாலும் கடற் பிராந்தியம் பேரிருளில் மூழ்கிக் கிடந்ததாலும் யவன வீரனும் அல்லியும் ஒருவரையொருவர் அரைகுறையாகவே பார்த்துக் கொள்ள முடிந்தது. அப்படிப் பார்த்துக் கொண்டே பேசிய அல்லி, "வீரனே! உன் கத்தியால் சிறிது உன் தலைப்புறத்தை வலது பக்கத்தில் கிழித்து ரத்தத்தை வெளியிடு. நான் என் தலையில் இடப்புறத்தின் சருமத்தில் லேசாகக் குத்திக் கொள்கிறேன். அப்படி வெளிவரும் ரத்தத்தை என் கட்டை யால் இருவரும் பரவலாகத் தலையில் துடைத்து விடுவோம். உன் வாளின் அடிப்புறத்தை அந்த ரத்தத்தில் சிறிது உருட்டிக் கொள். இருவரும் பிறகு தனித்தனியாக மாறிப் படுத்து விடுவோம். நான் உன்னைக் கட்டையாலும் நீ என்னை வாட் பிடியாலும் அடித்ததாக எதிரிகள் அர்த்தம் செய்து கொள்வார்கள்" என்று கூறினாள்.

'சரி' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த வீரன் படகைத் துரிதமாகச் செலுத்தத் துடுப்புகளைத்

துழாவினான். இருப்பினும் படகு மெள்ளவே நகர்ந்தது. அலைகள் பெரிது பெரிதாக எழுந்து மோதின. சுமார் கால் ஜாமம் முடிந்த பிறகு காவிரி கடலில் பாயும் பெரும்புனலைக் கடந்து புகாரின் வடக்கில் படகு திரும்பியது. அதைக் கண்டதும் அல்லி துரிதமாக தனது மடியிலிருந்து குறுவாளை எடுத்து தலையில் இடது புறத்தில் லேசாகக் குத்திக் கொண்டு யவன வீரனிடமும் கத்தியை நீட்டினாள். அவனும் சிறிது குருதியை வரவழைத்துக் கொள்ளவே அல்லி கட்டையாலும், வீரன் வாளின் பிடியாலும் குருதி பரவலாகச் செய்து கொண்டார்கள்.

"சரி, சற்றுத் தள்ளிப்படு. அதோ மரக்கலங்களைச் சிறிது நேரத்தில் அணுகிவிடுவோம். கரைக்குச் செல்லும் அலைகள் படகை வெகு துரிதமாக உத்திச் செல்லும்" என்று கூறிய அல்லி, படகின் ஒரு முனையில் அடிபட்டு விழுந்த தோரணை யில் படுத்துக் கொண்டாள். யவன வீரன் மற்றொரு முனையில் கிடந்தான்.

படகு மரக்கலங்களை அணுகி விட்டதை, சமீபத்தில் எழுந்த மாலுமிகளின் கூச்சலாலும் மரக்கலங்களின் மீது ஏற்பட்ட நடமாட்ட ஒலிகளாலும் புரிந்து கொண்டாள் அல்லி.

"அதோ ஒரு படகு, படகு" என்ற சத்தங்கள் சில, "விளக்கு எங்கே, இப்படிக் காட்டு, அப்படிக் காட்டு" என்ற சத்தங்கள் சில, "கொக்கியை விட்டெறிந்து படகை இழு, உம் உம்" என்ற சத்தங்கள் சில. இப்படிப் பலவித சத்தங்கள் கிளம்பின. கொக்கி எறியப்பட்டு 'டக்'கென்று படகில் மாட்டிக் கொண்டதையும், படகு சரசரவென்று ஒரு மரக் கலத்தை நோக்கி இழுக்கப்படுவதையும் உணர்ந்த அல்லியின் இதயம் படுவேகத்தில் ஓடியது.

அடுத்த சில வினாடிகளில் அல்லியை இருவர் தூக்கி மரக்கலத்தின் பெரும் தளத்தில் கிடத்தினார்கள். யவன வீரனும் கிடத்தப்பட்டிருக்க வேண்டும் என்று அல்லி ஊகித்தாள்.

"உம்! இன்னும் படகில் யாராவது இருக்கிறார்களா, பொருள்கள் ஏதாவது இருக்கின்றனவா பார்'' என்றது அதிகாரமான குரல். அடுத்த வினாடி படகில் மாலுமிகள் குதிப்பதும் பிறகு ஏறி வருவதும் அல்லியின் புலன்களுக்குத் தெரிந்தன.

சில வினாடிகள் மௌனம் நிலவியது. திடீரென பேய்ச் சிரிப்பு ஒன்று அந்தக் கடல் பிராந்தியத்தைத் திரும்ப ஊடுருவிச் சென்றது. அடுத்த கணம் சிரிப்பு நின்றது. அதைத் தொடர்ந்து, "இந்த ஒற்றர்கள் இருவரையும் என் அறையில் கொண்டு தள்ளுங்கள்" என்று கடுமையான உத்தரவொன்றும் பிறந்தது.

90. தலைவன்

பூம்புகாரின் குணதிசையில் விரிந்து கிடந்த பெருங் கடலில் உக்கிரத்துடன் எழுந்து எழுந்து சீறிக் கொண்டிருந்த அலைகளின் இரைச்சலையும் மீறிக் கடற்பரப்பை ஊடுருவிச் சென்ற பேய்ச் சிரிப்பைக் கேட்டதாலும், 'இந்த இரு ஒற்றர் களையும் துக்கிச் சென்று என் அறையில் தள்ளுங்கள்' என்ற சொற்கள் திட்டமாகக் காதில் விழுந்ததாலும், பிரும்மானந்தர் சிருஷ்டித்த நாடகம் பலிக்கவில்லையென்பதையும், தன் உயிரும் தன்னுடன் வந்த யவனன் உயிரும் இனிச் செல்லாக் காசு பெறாதென்பதையும் சந்தேகத்துக்குச் சிறிதும் இடமின்றி உணர்ந்து கொண்ட அல்லி, தன் உயிருக்குப் பயப்படா விட்டாலும் 'இந்தத் திட்டமும் உடைந்து விட்டால் சோழ நாட்டின் கதி இனி என்ன?' என்பதை நினைத்து உள்ளூர ஏங்கவே செய்தாள். அந்த ஏக்கத்தின் விளைவாக எத்தனை எத்தனையோ எண்ணங்கள் அவள் சித்தத்தில் கணப் பொழுதில் சுழன்றதென்றாலும், அவற்றில் எள்ளளவையும் வெளிக்காட்டுவது பலவீனத்துக்கு அறிகுறியென்பதை அல்லி அறிந்து கொண்டாளாதலாலும், சற்றுச் சாமர்த்தியமாக நடந்து கொண்டால் அந்தப் பேய்ச் சிரிப்புச் சிரித்த மரக்

கலத்தின் தலைவனை ஏமாற்றுவதற்கு ஒரு வேளை வாய்ப்பு ஏற்படலாமென்று மனப்பால் குடித்தாளாகையாலும், அவள் மூச்சுக்கூட விடாமல் கட்டை போலவே மரக்கலத்தின் தளத்தில் கிடந்தாள். ஆனால் அந்த ஆசையையும் போக் கடித்தன அடுத்து நேர்ந்த நிகழ்ச்சிகள். திடீரென எதையோ நினைத்துக் கொண்ட மரக்கலத் தலைவன் தன் வீரர்களை நோக்கி, "இருவரையும் என் அறைக்கு எடுத்துச் செல்ல வேண்டாம். இந்தப் பெண்ணை மட்டும் எடுத்துச் செல்லுங்கள். இந்தப் படகோட்டி இங்கேயே கிடக்கட்டும். அவன் காயத்துக்கு மட்டும் சிகிச்சை செய்யுங்கள்" என்று முதலில் இட்ட உத்தரவை மாற்றிவிட்டு தடதடவென்று நடந்து சென்று விட்டான்.

தலைவன் உத்தரவில் ஏற்பட்ட இந்த மாற்றத்தால் அல்லியின் உணர்ச்சிகள் பெரும் கொந்தளிப்பை அடைந்தன. 'ஒருவேளை யவனர் மரக்கலத் தலைவன் அயோக்கியனா யிருந்தால் தன் கதி என்னவாகும்' என்பதை நினைத்துச் சிறிது நடுங்கவும் செய்தாள். 'ஆயுதம் ஒன்றுமட்டும் கையிலிருந்தால் இந்தத் தலைவனைப் போல் ஆயிரம் பேரிடமிருந்தும் என்னைக் காத்துக் கொள்வேன். ஆனால் நிராயுதபாணியாக இவனிடம் சிக்கிக் கொண்டிருக்கிறேனே, என்ன செய்வேன்?' என்று மனம் நொந்த அல்லி ஆபத்தான அந்த நேரத்தில் கரிகாலனை நினைத்துக் கொண்டாள். அவனை நினைத்துக் கொண்டதன் விளைவாகச் சிறிது தைரியமும் அவள் உள்ளத்தில் ஊறவே 'இந்த உடலும் உயிரும் அவர் பணிக்குத் தானே ஏற்பட்டவை. இருக்கட்டும் பார்ப்போம். எத்தனையோ இக்கட்டுகளிலிருந்து என்னைத் தப்ப வைத்திருக்கும் ஆண்டவன் இப்பொழுதுதானா கைவிட்டு விடுவான்?' என்று தன்னைச் சற்றுத் திடப்படுத்திக் கொண்ட தால், மரக்கலத் தலைவன் உத்தரவுப்படி வீரர்கள் தன்னைத் தூக்கிச் சென்ற போதும் தலைவன் அறையிலிருந்த மஞ்சத்தில் தன்னைப் படுக்க வைத்த போதும் சுரணையற்றவள் போலவே கிடந்தாள். அந்தச் சுரணையற்ற பாவனையைச் சரேலென்று

உடைக்க ஏற்பட்ட சிற்றுளிகள் போல் களுக்கென்ற சிரிப்பு ஒன்று அந்த அறையின் மூலையிலிருந்து எழுந்தது.

அந்த சிரிப்பொலியிலிருந்த ஏளனத்தில் விளைவாகச் சட்டென்று விழித்த அல்லி மஞ்சத்தில் மெல்ல எழுந்து உட்கார்ந்து, அறையில் சுற்றும் முற்றும் கண்களை ஓட விட்டாள். மரக்கலத் தலைவனின் அந்த அறை மிகச் சிறியதா யிருந்தாலும், சாதாரண மரக்கலங்களில் காணப்படும் அறை களைப் போல் இல்லாமல் சற்று வித்தியாசமாக அமைக்கப் பட்டிருந்ததை அல்லி கண்டாள். யவனர் மரக்கலங்களில் பலவற்றைக் கண்டிருக்கும் அல்லிக்கு, மரக்கலத் தலைவனின் ஆசனம் நட்டநடுவில் போடப்படாமல் ஒரு மூலையில் போடப்பட்டிருந்ததும், தலைவன் உட்காரக் கூடிய ஆசனத் தையும் உள்ளின் இதர பாகங்களையும் ஒரு சிறு மரப்பலகை பிரித்திருந்ததும் பெரும் விந்தையாயிருந்தன. தவிர மற்ற யவனர் மரக்கலத் தலைவர்களின் அறையைப் போல் அந்த அறையில் போர்க்கலங்கள் நிறைந்தில்லாததையும், நீண்ட வாள் ஒன்றுமட்டும் மரப்பலகையின் ஆணியில் மாட்டப் பட்டிருந்ததையும் கண்ட அல்லி, 'இந்த மரக்கலத் தலைவ னுக்குப் போரில் அதிகப் பிரியமில்லை போல் தெரிகிறது' என்று நினைத்தாள். போதாக்குறைக்கு அறை வெகு சுத்தமா யிருந்தது. அந்த அறையின் மஞ்சங்கள் ஏதோ அலங்கார ஆசனங்கள் போல் அர்த்த சந்திர வடிவத்தில் போடப்பட் டிருந்ததன்றி அவற்றின் வேலைப்பாடும் அவை அரண்மனை யில் இருக்கத் தகுந்தவை என்பதை வலியுறுத்தின. அந்த அறையின் மரச்சுவர்களில் பல நாட்டு அழகுப் பொருள்களும் கடலில் கிடைக்கும் பெரும் கிளிஞ்சல்களும் சிங்காரமாக மாட்டப்பட்டிருந்தன. இவற்றையெல்லாம் கண்ட அல்லி, மரக்கலத் தலைவன் பெரும்ரசிகன் என்பதை உணர்ந்து கொண்டாளாகையால் அப்பேர்ப்பட்ட ரசிகனுக்கும் சற்று முன்பு தளத்தில் கிளம்பிய பேய்ச்சிரிப்புக்கும் எப்படி சம்பந்த மிருக்க முடியுமென்பதை நினைத்துப் பார்த்துப் பதிலேதும் கிடைக்காததால் சிரிப்பு வந்த திக்கை நோக்கினாள்.

அந்தத் திக்கு இருண்டு கிடந்தது. அறையின் நட்ட நடுவில் இடம் பார்த்து மாட்டப்பட்டிருந்த யவனர் விளக்கின் திரி வேண்டுமென்றே இழுக்கப்பட்டிருந்ததாலும், குறுக்கே யிருந்த மரப்பலகை அடித்துவிட்ட இருட்டாலும் தலைவ னிருந்த மூலையில் எதுவும் திட்டமாகக் கண்ணுக்கு புலப்பட வில்லை. தலைவன் நன்றாக நீட்டிக் கொண்டிருந்த இரு கால்கள் மட்டும் குறுக்கே நின்ற பலகையைச் சிறிது தாண்டி வந்திருப்பதைக் கவனித்த அல்லி, தலைவன் காலைத்தான் பார்க்கலாமேயொழிய முகத்தைப் பார்க்க முடியாதென்பதை அறிந்து வியந்தாள். இத்தகைய அறிவும் திறனும் வாய்ந்த வனிடம் வேவு பார்ப்பது அத்தனை சுலபமல்லவென்பதையும் புரிந்து கொண்ட அந்த நாங்கூர்வேள் மகள், 'சட்டென்று நான் எழுந்து அந்தப் பலகையைத் தாண்டி இவனைப் பார்த்தால் என்ன செய்வான்?' என்று உள்ளூர எண்ணினாள்.

அந்த எண்ணத்தைப் புரிந்து கொண்டவன்போல் மரக்கலத் தலைவன் மீண்டும் களுக்கென்று நகைத்தான். அந்த நகைப்பு அரை வினாடியில் நின்றதும் சொன்னான்: "பெண்ணே! இருக்கும் இடத்தை விட்டு எழுந்திராதே. என் முகத்தைப் பார்க்க முயன்ற குற்றத்திற்காக ஏற்கெனவே மூவர் உயிரிழந்திருக்கிறார்கள். நீயும் அந்தப் பட்டியலில் சேர வேண்டாம்" என்று.

தலைவன் வார்த்தைகள் திட்டமாக இருந்தன. குரலும் வறட்சியாய்க் கரகரவென்றும் இருந்ததால் குரூரமும் அதில் தொனித்தது. மிகுந்த அபாயமான ஒரு மனிதனிடம் தான் சிக்கிக் கொண்டிருப்பதை அல்லி உணர்ந்தாள். ஆகவே மஞ்சத்தைவிட்டு நகராமல் காயமடைந்த இடத்தைச் சற்று அழுத்திக் கையால் பிடித்து மஞ்சத்தில் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். மீண்டும் களுக்கென்று அந்த வறட்டுச் சிரிப்பு அறையைப் பயங்கரமாக ஊடுருவிச் சென்றது. அத்துடன் மறுபடியும் எழுந்தது மரக்கலத் தலைவனின் ஏளனப் பேச்சு. "காயம் பிறர் விளைவித்தாலும் சொந்தமாக விளைவித்துக் கொண்டாலும் வலிக்கத்தான் செய்யும்" என்று.

தங்கள் நாடகத்தை அந்தத் தலைவன் பூரணமாக உணர்ந்து கொண்டுவிட்டான் என்பதை அறிந்து கொண்ட அல்லி, "நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை" என்றாள்.

"நீங்கள் செய்தது எனக்கு விளங்கிவிட்டது" என்றான் மரக்கலத் தலைவன் தன் கால்களைக் குறுக்குப் பலகைக்கு வெளியே நன்றாக நீட்டி.

அல்லி தன் முகத்தில் பெரும் வியப்பைக் காட்டுவது போல் நடித்து, "நாங்கள் செய்ததா?" என்று வினவினாள்.

"ஆம் பெண்ணே! இதோ பார்" என்று தானிருந்த மறைவிடத்திலிருந்து ஒரு சிறு கத்தியையும் மரக்கட்டையையும் தன் காலடியில் விட்டெறிந்த தலைவன், "இவற்றை நன்றாகப் பார்" என்று மீண்டும் வலியுறுத்திப் பேசினான்.

"பார்த்தேன். இவற்றுக்கென்ன?" என்று ஏதும் தெரியாதது போல் பதில் சொன்னாள் அல்லி.

"இது உன்னை யவன வீரன் தாக்கிய கத்தி. இது நீ அவனை மண்டையிலடித்த மரக்கட்டை" என்று கூறினான் தலைவன்.

"ஆம் ஆம். இப்பொழுதுதான் நினைவுக்கு வருகிறது" என்றாள் அல்லி.

"நினைவுக்கு வரச் சிறிது நேரம்தான் ஆகும். அடிபட்டவுடன் இருவரும் மயக்கமடைந்து விட்டீர்களல்லவா?" என்றான் தலைவன் மீண்டும் களுக்கென்ற அந்தப் பழைய ஏளனச் சிரிப்பை உதிரவிட்டு.

தலைவன் எப்படித் தங்கள் திட்டத்தைத் துருவித் துருவி ஆராய்ந்து விட்டான் என்பதைப் புரிந்துகொண்ட அல்லி வெட்கத்தால் பதிலேதும் சொல்லாமல் மௌனம் சாதித்தாள். தலைவன் மீண்டும் மரக்கலத்தில் சிரித்தது போல் பேய்ச் சிரித்துவிட்டுச் சொன்னான், "பெண்ணே! பிரும்மானந்தருக்கு இந்தச் சிறுபிள்ளை நாடகத்தைத் தவிர வேறு நாடகம் ஆடத் தெரியாது போலிருக்கிறது. கேவலம் உன்னையும் ஒரு யவனனையும் சேர்த்து அனுப்பி விட்டால் நான் ஏமாந்து விடுவேன் என்று நினைப்பதைப் போல் பெரும்

முட்டாள்தனம் வேறென்ன இருக்க முடியும்? இந்தப் பிரும்மானந்தரா ராஜதந்திரத்திலும் போர்த் தந்திரத்திலும் இணையற்றவனும், மரக்கலம் உடைந்து அனாதையாகப் புகார் வந்த அரை வருட காலத்திற்குள் அதை வசப்படுத்திக் கொண்டவனுமான டைபீரியஸை முறியடிக்க முடியும்! நன்றாக யோசித்துப் பார்! நாலைந்து நாட்களுக்கு ஒரு முறை இரவில் விளக்குகளுடன் பகிரங்கமாக வரும் என் மரக்கலங்களை வாணகரையிலுள்ள படைத் தலைவர்கள் கவனிப்பார்களென்பதைப் போர்த் தந்திரம் தெரிந்த எவனாவது அறியாமலிருப்பானா? அப்படி அறிந்திருப்பவன் தன் கப்பலை நாடிச் சரியான சமயத்தில் ஒரு படகு வருமானால் அதன் காரணத்தைத்தான் உணராமலிருப்பானா? இந்தக் கத்தியும் மரக்கட்டையும் யாரை ஏமாற்ற முடியும்? கத்தியை நன்றாகப் பார். அதன் பிடியைச் சுற்றிலும் ரத்தக்கரை இருக்கிறது. மரப் பிடியிலும் அதே மாதிரி இருப்பதைக் கவனி. காயம் இவற்றால் ஏற்படவில்லை என்பதற்கும், காயம் ஏற்பட்ட பின்பு இவை காயத்தின் மீது உருட்டப் பட்டிருக்கின்றன என்பதற்கும் இதைவிட என்ன அத்தாட்சி வேண்டும்?"

அல்லியின் விழிகள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. மரக்கலத் தலைவனின் புத்திக் கூர்மையைக் கண்டு சொல்லவொண்ணா வியப்படைந்த அவள், இப்பேர்ப்பட்டவன் டைபீரியஸுடன் சேர்ந்துக் கொண்டு விட்டானே, இனித் தமிழகத்தின் கதி விபரீதமாகும் போலிருக்கிறதே என்றும் எண்ணியதால் சோகப் பெருமூச்சு விட்டாள்.

அவள் பெருமூச்சைக் கவனித்த மரக்கலத் தலைவன், "பெண்ணே! எதிரிகளுக்கும் அறிவு உண்டு என்பதை நினைத்து நடப்பவன்தான் அறிவாளி. பிரும்மானந்தர் பெரிய ராஜதந்திரி என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படிப் பட்டவர் எதற்காக இந்தச் சிறுபிள்ளை நாடகத்துக்கு ஏற்பாடு செய்தார் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை" என்று கூறினான்.

அல்லி பதிலேதும் சொல்லவில்லை. சொல்வதற்கு எதுவும் இல்லை. நீண்டநேரம் மௌனமே சாதித்தாள். பிறகு கேட்டாள்: "நீங்கள் யார்? எந்த நாடு?" என்று.

சிறிது நிதானித்தே பதில் சொன்னான் மரக்கலத் தலைவன். அந்தப் பதிலும் ஒரு கேள்வியாகவே வெளிவந்தது. "எந்த நாடென்று நினைத்து நீ இங்கு வந்தாய்?" என்றான் தலைவன்.

"யவன நாட்டினராயிருக்க வேண்டுமென்று நினைத்து வந்தேன்" என்றாள் அல்லி.

"அப்படித்தான் வைத்துக் கொள்ளேன். டைபீரியஸைச் சேர்ந்தவன் வேறு எந்த நாட்டானாயிருக்க முடியும்!"

"டைபீரியஸுடன் சேருவதற்கு யவன நாட்டானாகத் தானிருக்க வேண்டுமென்று விதியில்லை. தமிழனாகக் கூட இருக்கலாம்."

"அப்படியா?"

"ஆமாம். இருங்கோவேள் தமிழன்தான். அவன் டைபீரியஸுடன் சேரவில்லையா?"

"ஆமாம், ஆமாம்."

"தமிழ்நாட்டில் எதிரியுடன் சேர்ந்து நாட்டையழிக்கும் புல்லுருவிகளுக்கா குறைவு?"

"குறைவில்லை."

அடுத்த கணம் அல்லியின் குரல் மிகுந்த வெறுப்புடன் எழுந்தது. "குறைவில்லையென்பதை உன் கால்கள் காட்டு கின்றன" என்று குரோதம் குரலில் பொங்கக் கூறினாள் அல்லி.

மரக்கலத் தலைவன் பதிலேதும் சொல்லவில்லை. சங்கடத்துடன் ஆசனத்தில் அசைந்ததை லேசாகச் சற்றுப் புரண்ட அவன் கால்கள் நிரூபித்தன. அவன் சங்கடத்தை மேலும் அதிகப்படுத்தவும் அவன் நிலைகுலையைச் செய்ய வும் ஆத்திரத்துடன் பேசத் துவங்கிய அல்லி, "நீ முகத்தை மறைக்கலாம். ஆனால் வர்ணத்தை எப்படி மறைக்க முடியும்? குணத்தைத்தான் எப்படி மறைக்க முடியும்? உன் கால்களை

விளக்கொளியில் கண்ட போதே அவற்றின் செம்பொன் நிறத்திலிருந்து நீ யவனனல்ல என்பதை உணர்ந்து கொண் டேன். சுத்தமான உன் தமிழிலிருந்து நீ அராபியனாகவோ வேறுநாட்டானாகவோ இருக்க முடியாதென்பதை ஊகித்துக் கொண்டேன். ஆகவே நீ தமிழகத்தைச் சேர்ந்தவனாகத் தானிருக்க வேண்டும். இத்தகைய கோடரிக் காம்புகள் வேறு நாட்டில் கிடைப்பது கஷ்டம். இந்த நாட்டில் மண்டிக் கிடக் கின்றன. இருங்கோவேள்! அவனைச் சேர்ந்த பதினைந்து வேளிர்கள்! பெருஞ்சேரலாதன்! பாண்டியன்! தமிழகத் துக்குத்தான் எத்தனை துரோகிகள்? இவையெல்லாம் தெரியும் எனக்கு. ஆனால் போர்க் கப்பல்களைத் தலைமை வகித்து நடத்தவும் ஒரு துரோகி வந்திருக்கிறானென்பதை இன்றுதான் உணர்ந்தேன். ஆனால் உன்னைப் போல் லட்சம் பேர் சேர்ந்தாலும் இந்த நாட்டை வெற்றி கொள்ள முடியாது. மன்னர் கரிகாலரிடம் இன்று பெரும் படை திரண்டு வருகிறது. வெகு சீக்கிரம் பெரும் போர் மூளும். அந்தப் போரில் நீங்களனைவரும் அழிக்கப்படுவீர்கள். உன்னைப் போன்ற துரோகிகள் பூம்புகாரின் காவற்பூதத்தின் பலிப் பாறையில் வெட்டப்படுவதை என் கண்ணால் காணப் போகிறேன்," என்றாள். அவள் குரலில் ரத்த வெறி மண்டிக் கிடந்தது. தமிழனின் துரோகச் செயலால் அவள் உணர்ச்சிகள் மரக்கலத்தைச் சுற்றிச் சீறிக்கொண்டிருந்த அலைகளை விடப் பெரிதாக எழுந்து கொண்டிருந்தன.

அவள் நிதானித்து வரச் சில வினாடிகள் சென்றன. ஆத்திரத்தில் ஏதேதோ பேசிவிட்டதை நினைத்துச் சற்றுக் கூசவும் செய்தாள். ஒற்றர்கள் எந்தச் சமயத்திலும் உணர்ச்சி களுக்கு இடம் கொடுக்கலாகாது என்று பிரும்மானந்தர் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தது அப்பொழுதுதான் அவள் நினைவுக்கு வந்தது. மரக்கலத்தின் தலைவன் தன் ஆத்திரத் துக்கும் தூஷணைப் பேச்சுக்கும் எத்தகைய தண்டனை கொடுப்பானோ என்பதை நினைத்துச் சற்று அஞ்சவும் செய்தாள்.

ஆனால் மரக்கலத்தின் தலைவன் அவள் ஆத்திரத்தையோ வசைபாடலையோ சிறிதுகூட லட்சியம் செய்ததாகத் தெரிவில்லை. பதிலேதும் சொல்லாமல் தன் கைகளை இருமுறை தட்டினான். அந்த அழைப்பின் விளைவாக உள்ளே நுழைந்த இரு வீரர்களை நோக்கி, "இந்தப் பெண்ணின் கண்களை நன்றாகக் கட்டுங்கள். இவளைப் புகாருக்கு இப்பொழுதே அழைத்துச் செல்ல வேண்டும். ஒரு படகு தாயாராகட்டும்" என்று உத்தரவிட்டான்.

தலைவன் உத்தரவுப்படி அடுத்த சில வினாடிகளில் அவள் கண்கள் கட்டப்பட்டன. அந்த மஞ்சத்திலேயே அரை ஜாம நேரம் அவள் கிடந்தாள். அவள் கண்கள் கட்டப்பட்டதும் அறையைவிட்டு வெளியே சென்று விட்ட மரக்கலத் தலைவன், அவளை மீண்டும் படகில்தான் சந்தித்தான். அப்பொழுது அவள் கண்கள் மட்டுமின்றி, கைகளும் கட்டப்பட்டிருந்ததால் மிகவும் நிராதரவான நிலையில் இருந்த அல்லி, படகைச் செலுத்தத் தலைவன் உத்தரவிட்டதும், "புகாருக்கு என்னை ஏன் கொண்டு செல்கிறாய்?" என்று அதிகாரத்துடன் கேட்டாள்.

"எங்கள் தலைவரிடம் ஒப்படைக்க."

"யார் உங்கள் தலைவர்?"

"டைபீரியஸ்."

"எனக்கு என்ன தண்டனை கிடைக்கும்?"

"முடிவு செய்ய வேண்டியது அவர்."

மரக்கலத் தலைவன் சம்பிரதாயத்துக்குத்தான் அந்தப் பதிலைச் சொல்கிறானென்பதை அல்லி உணர்ந்து கொண்டாள். கண்டிப்பாய்த் தன் உயிர் காலையில் ஆகாயத்தை நோக்கிச் சிட்டுக் குருவியாய்ப் பறக்கும் என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டாள் அல்லி. அந்த விளைவைத் தாங்களும் புரிந்துகொண்டவை போல் குணதிசைக் கடலலைகள் படகை வெகு வேகமாக உந்திக்கொண்டு கரையை நோக்கி உருண்டன.

91. கண்கள் கதை சொல்லும்

கடலலைகளால் உந்தப்பட்டு, பூம்புகாரின் கருமணல் மண்டிய கடற்கரையை நோக்கிக் கன வேகத்தில் சென்று கொண்டிருந்த படகில் கைகளும் கண்களும் கட்டப்பட்டுக் கிடந்த காரிகை அல்லி, வேவு பார்க்கும் தொழிலுக்கு டைபீரியஸ் எத்தகைய தண்டனையை அளிப்பானென்பதை உணர்ந்திருந்தாலும் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தான் மறைந்துவிட்டால் கரிகாலன் எத்தனை வேதனைப் படுவார் என்பதை மட்டும் நினைத்து நினைத்து மனம்புழுங்கினாள். கரிகாலன் பெரும்படைகளைத் திரட்டி மாற்றாருடன் ஒரு நாள் போரிடுவான், வெற்றி கொள்வான், வெற்றி வாகையுடன் தனக்கு மணமாலை சூட்ட வருவான் என்றெல்லாம் தான் கனவு கண்டு மகிழ்ச்சியுற்ற நேரங்களை எண்ணிப் பார்த்த அல்லி, அவன் வெற்றிவாகை சூடினாலும் இனித் தன் கண்களால் அந்தக் காட்சியைக் காணமுடியாதே என்று தீராத ஏக்கமும் கொண்டு, அந்த ஏக்கத்தின் விளைவாக நீண்ட பெருமூச்சு ஒன்றையும் விட்டாள். அந்தப் பெருமூச்சை அருகே உட்கார்ந்திருந்த யவனர் மரக்கலத் தலைவனும் கவனித்தானாகையால் மீண்டும் அவன் களுக்கென்று நகைத்து, "வீராங்கனைகள் அபாயச் செயல்களில் இறங்கும்போது, செயல்களின் பயனையும் முன்கூட்டி யோசிக்கவேண்டும்" என்று சுட்டிக் காட்டினான். படகின் பக்கங்களில் அலை மோதியதால் படகுகள் பெருந் தூறல்கள் போல் வாரி வீசி, சுள்ளென்று முகத்திலும் கைகளிலும் விழுந்த உப்பு நீர்த்துளிகள், தலைக்காயத் துணியில் பட்டதால் உண்டான எரிச்சலை விட அதிக எரிச்சலைக் கிளப்பி விட்ட தலைவன் சிரிப்பும் பேச்சும் அல்லியின் மனத்துக்கு மீண்டும் உறுதியை அளிக்கவே அவள் அலட்சியமாகப் பதில் சொன்னாள், "செயல்களின் பயனை நினைக்காமல் யாரும் செயல் புரிவதில்லை. விளைவை நினைத்து வீரப் பெண்மணிகள் அஞ்சுவதுமில்லை."

ஆனால் மரக்கலத்தின் தலைவன் அவள் ஆத்திரத்தையோ வசைபாடலையோ சிறிதுகூட லட்சியம் செய்ததாகத் தெரிவில்லை. பதிலேதும் சொல்லாமல் தன் கைகளை இருமுறை தட்டினான். அந்த அழைப்பின் விளைவாக உள்ளே நுழைந்த இரு வீரர்களை நோக்கி, "இந்தப் பெண்ணின் கண்களை நன்றாகக் கட்டுங்கள். இவளைப் புகாருக்கு இப்பொழுதே அழைத்துச் செல்ல வேண்டும். ஒரு படகு தாயாராகட்டும்" என்று உத்தரவிட்டான்.

தலைவன் உத்தரவுப்படி அடுத்த சில வினாடிகளில் அவள் கண்கள் கட்டப்பட்டன. அந்த மஞ்சத்திலேயே அரை ஜாம நேரம் அவள் கிடந்தாள். அவள் கண்கள் கட்டப்பட்டதும் அறையைவிட்டு வெளியே சென்று விட்ட மரக்கலத் தலைவன், அவளை மீண்டும் படகில்தான் சந்தித்தான். அப்பொழுது அவள் கண்கள் மட்டுமின்றி, கைகளும் கட்டப்பட்டிருந்ததால் மிகவும் நிராதரவான நிலையில் இருந்த அல்லி, படகைச் செலுத்தத் தலைவன் உத்தரவிட்டதும், "புகாருக்கு என்னை ஏன் கொண்டு செல்கிறாய்?" என்று அதிகாரத்துடன் கேட்டாள்.

"எங்கள் தலைவரிடம் ஒப்படைக்க."

"யார் உங்கள் தலைவர்?"

"டைபீரியஸ்."

"எனக்கு என்ன தண்டனை கிடைக்கும்?"

"முடிவு செய்ய வேண்டியது அவர்."

மரக்கலத் தலைவன் சம்பிரதாயத்துக்குத்தான் அந்தப் பதிலைச் சொல்கிறானென்பதை அல்லி உணர்ந்து கொண்டாள். கண்டிப்பாய்த் தன் உயிர் காலையில் ஆகாயத்தை நோக்கிச் சிட்டுக் குருவியாய்ப் பறக்கும் என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டாள் அல்லி. அந்த விளைவைத் தாங்களும் புரிந்துகொண்டவை போல் குணதிசைக் கடலலைகள் படகை வெகு வேகமாக உந்திக்கொண்டு கரையை நோக்கி உருண்டன.

91. கண்கள் கதை சொல்லும்

கடலலைகளால் உந்தப்பட்டு, பூம்புகாரின் கருமணல் மண்டிய கடற்கரையை நோக்கிக் கன வேகத்தில் சென்று கொண்டிருந்த படகில் கைகளும் கண்களும் கட்டப்பட்டுக் கிடந்த காரிகை அல்லி, வேவு பார்க்கும் தொழிலுக்கு டைபீரியஸ் எத்தகைய தண்டனையை அளிப்பானென்பதை உணர்ந்திருந்தாலும் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தான் மறைந்துவிட்டால் கரிகாலன் எத்தனை வேதனைப் படுவார் என்பதை மட்டும் நினைத்து நினைத்து மனம்புழுங்கினாள். கரிகாலன் பெரும்படைகளைத் திரட்டி மாற்றாருடன் ஒரு நாள் போரிடுவான், வெற்றி கொள்வான், வெற்றி வாகையுடன் தனக்கு மணமாலை சூட்ட வருவான் என்றெல்லாம் தான் கனவு கண்டு மகிழ்ச்சியுற்ற நேரங்களை எண்ணிப் பார்த்த அல்லி, அவன் வெற்றிவாகை சூடினாலும் இனித் தன் கண்களால் அந்தக் காட்சியைக் காணமுடியாதே என்று தீராத ஏக்கமும் கொண்டு, அந்த ஏக்கத்தின் விளைவாக நீண்ட பெருமூச்சு ஒன்றையும் விட்டாள். அந்தப் பெருமூச்சை அருகே உட்கார்ந்திருந்த யவனர் மரக்கலத் தலைவனும் கவனித்தானாகையால் மீண்டும் அவன் களுக்கென்று நகைத்து, "வீராங்கனைகள் அபாயச் செயல்களில் இறங்கும்போது, செயல்களின் பயனையும் முன்கூட்டி யோசிக்கவேண்டும்" என்று சுட்டிக் காட்டினான். படகின் பக்கங்களில் அலை மோதியதால் படகுகள் பெருந் தூறல்கள் போல் வாரி வீசி, சுள்ளென்று முகத்திலும் கைகளிலும் விழுந்த உப்பு நீர்த்துளிகள், தலைக்காயத் துணியில் பட்டதால் உண்டான எரிச்சலை விட அதிக எரிச்சலைக் கிளப்பி விட்ட தலைவன் சிரிப்பும் பேச்சும் அல்லியின் மனத்துக்கு மீண்டும் உறுதியை அளிக்கவே அவள் அலட்சியமாகப் பதில் சொன்னாள், "செயல்களின் பயனை நினைக்காமல் யாரும் செயல் புரிவதில்லை. விளைவை நினைத்து வீரப் பெண்மணிகள் அஞ்சுவதுமில்லை."

அவள் துணிவைக் கண்ட மரக்கலத் தலைவன் உண்மையில் ஆச்சரியத்தின் எல்லையை அடைந்தானானாலும் அதைச் சிறிதும் வெளிக்குக் காட்டாமலே கேட்டான். "அப்படி அஞ்சாதிருப்பதற்கு அடையாளம் சோகப் பெருமூச்சை வெளியிடுவதுதானா?" என்று.

இதைக் கேட்ட அல்லியின் வியப்பு பன்மடங்கு அதிகமாயிற்று. பெருமூச்சிலிருந்தே உள்ள உணர்ச்சிகளை அறியக்கூடிய அளவுக்கு மனோதத்துவத்தை அறியும் சக்தியை உடைய அந்த மனிதன் சாமான்யமானவனாயிருக்க முடியாதென்ற எண்ணத்தாலும், அவன் யாரென்பதை அறிய ஏற்பட்ட ஆசையாலும் மேலும் பேச்சுக் கொடுத்த அல்லி, "பெருமூச்சிலிருந்தே உள்ளத்திலோடும் எண்ணங்களை அறிந்துவிடுவீர்கள் போலிருக்கிறது'' என்று கேட்டாள், குரலில் சற்றே இகழ்ச்சியைக் காட்டி.

"அந்தச் சக்தியை ஆண்டவன் அளித்திருக்கிறான்" என்றான் தலைவன் சர்வசகஜமாக.

"அதுவும் பெண்கள் ஏன் பெருமூச்செறிகிறார்கள் என்பதையும் உங்களால் உணர முடியும்?"

"முடியும்."

"பெண்களிடம் தங்களுக்கு நிரம்பப் பரிச்சயமோ?"

"ஓரளவு பரிச்சயமுண்டு."

இதைக் கேட்டுச் சற்று இரைந்தே நகைத்தே நாங்கூர் வேள் மகள், "அதிலாவது அளவு வைத்திருக்கிறீர்களே" என்று கேலியாகப் பேசவும் செய்தாள்.

மாற்றார்களிடம் சிக்கிச் சுவாதீனமிழந்த நிலையிலும், நகைக்கவும் ஏளனமாகவும் பேசக்கூடிய அந்தப் பெண்ணின் மனத்திடத்தைக் கண்டு ஆச்சரியப்பட்ட தலைவன் ஏது மறியாதவன்போல் பதில் சொன்னான், "எதிலும் அளவுடன் இருக்க வேண்டும் என்பது ஆன்றோர் வாக்கு" என்று.

"எந்த ஆன்றோர் வாக்கு? தமிழ் ஆன்றோர் வாக்கா? அல்லது உங்கள் எசமானர்களுடைய ஆன்றோர் வாக்கா?" என்று அல்லி விஷமமாக வினவினாள்.

தலைவன் ஒரு வினாடி யோசித்துவிட்டு, "எங்கள் எசமானர்களா! ஓகோ! யவனர்களிடம் நான் பணி செய்வதைக் குறிப்பிடுகிறாயா! ஆன்றோர்கள் வாக்கு எந்த நாட்டிலும் ஒரே விதமாகத்தானிருக்கிறது. அளவோடும் நிதானத்தோடும் எதிலும் ஈடுபடவேண்டுமென்பதில் தமிழர்களும் சரி, யவனர்களும் சரி, ஒரே மாதிரியாகத்தான் சொல்லியிருக்கிறார்கள்" என்றான்.

அல்லி மேற்கொண்டு சிறிது நேரம் ஏதும் பேசாமல் சுற்றிலும் எழுந்து மோதிக்கொண்டிருந்த அலைகளின் இரைச்சலைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மரக்கலத் தலைவன் அவள் திடீரென்று மௌனமடைந்து விட்டதைக் கவனித்ததும் தானே பேச்சுக் கொடுத்து, "ஏன் பேச்சு நின்று விட்டது பெண்ணே? இன்னும் ஏதாவது சந்தேகமிருந்தால் இப்பொழுதே கேட்டுவிடு. நீ டைபீரியஸின் கைகளில் சிக்கிய பிறகு உன்னை நான் பார்க்க முடியாது" என்றான்.

''பேச்சுக்கு அவகாசமில்லை'' என்றாள் அல்லி திடமான குரலில்.

"ஏன் அவகாசமில்லை?"

"அனேகமாகக் கரைக்கு வந்துவிட்டோம்."

"எப்படித் தெரிகிறது உனக்கு? உன் கண்கள்தான் கட்டப்பட்டிருக்கின்றனவே?"

"கண்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் உணர்ச்சிகள் கட்டப்படவில்லை. காதும் அடைக்கப்படவில்லை."

"கரையைப் படகு அடைவதைக் காது காட்டுமா?"

"காது காட்டாது. கேட்குமல்லவா?"

"கேட்கும்."

"அலைகளின் சத்தத்திலிருந்து ஊகிக்கிறேன் தலைவரே. கரைக்கருகே புரளும் அலைகள் தரையில் மோதும் சப்தம் காதில் விழுகிறது."

"கடலலைகளை இத்தனை தூரம் அளவிட முடியுமா உன்னால்? நீ கெட்டிக்காரிதான்."

இதற்குப் பதில் அல்லி நகைத்தாள். "பெண்களின் எண்ண அலைகளை எடை போடும் உங்கள் கெட்டிக்காரத் தனத்துக்கு முன்பாக என் கெட்டிக்காரத்தனம் உறைபோடக் காணுமா?"

அவள் பதிலைக் கேட்ட தலைவனும் நகைத்தான். அந்த நகைப்பில் அவனது பழைய குரலின் கடுமை அதிகமில்லாததைக் கண்ட அல்லி, அதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய முயன்று மேலும் இரண்டொரு கேள்வி களை வீசினாளானாலும் மரக்கலத் தலைவன் பதிலேதும் சொல்ல மறுத்தான். அவள் கேள்விகள் முடிவதற்கும் படகின் மூக்கு சர்ரென்று மணலில் உராய்வதற்கும் யவன மாலுமிகள் நால்வரும் துடுப்புகளைத் தளர்த்தி நீரில் குதித்து, படகின் முன்புறக் கயிறுகளைப் பிடித்துப் படகை இழுத்துக் கரை சேர்ப்பதற்கும் நேரம் சரியாயிருந்ததால் மரக்கலத்தலைவன், "பெண்ணே! மேற்கொண்டு பேசவேண்டியதை அவகாச மிருக்கும் பட்சத்தில் பிறகு பேசிக் கொள்ளலாம்" என்று கண்டிப்புடன் அறிவித்துவிட்டு, ஒரு குழந்தையைத் தூக்குவது போல் அவளைப் படகிலிருந்து தூக்கிக் கரை மணலில் நிறுத்தினான். பிறகு கூட வந்த வீரர்களை விளித்து, "நீங்கள் படகைச் சங்கமத்துறைக்காகச் செலுத்திச்சென்று அங்குள்ள தளைகளில் பிணைத்துவிட்டு ஊருக்குள் செல்லுங்கள். இந்த வேவுக்காரி அகப்பட்டது யாருக்கும் தெரியவேண்டாம். மிகவும் ரகசியமாக இருக்கட்டும்" என்று உத்தரவிட்டு அவர் களை அனுப்பிவிட்டு, இரண்டடி எடுத்து வைத்து அல்லி தனிமையில் நின்றிருந்த இடத்துக்கு வந்து, அவளை வெகு அலட்சியமாகத் தூக்கித் தோள்மீது போட்டுக்கொண்டு

மாலுமிகள் சென்ற திக்குக்கு நேர் எதிர்ப்புறமாக நடக்கலானான்.

அவன் நடத்தை ஒவ்வொன்றும் பரம விசித்திரமாக இருந்தது அல்லிக்கு. 'வேவு பார்க்க வந்த என்னைப் பிடித்தவன் ஒன்று மாலுமிகளிடம் என்னை ஒப்படைத்துச் சிறைக்கு அனுப்ப வேண்டும். அல்லது தானே என்னைக் கொண்டு சென்று டைபீரியஸிடம் சேர்ப்பிக்க வேண்டும். இரண்டையும் செய்யாமல் எங்கோ தூக்கிக்கொண்டு போகிறானே' என்று நினைத்துப் பார்த்துவிடை கிடைக்காமல் திண்டாடினாள். அவள் எண்ணங்களைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாத யவனர் மரக்கலத் தலைவன், ஏதோ ஒரு துரும்பைத் தூக்கிக் கொண்டு போவதுபோல் அவளைத் தூக்கிக்கொண்டு வேகமாக நடையைக் காட்டினான்.

மூன்றாம் ஜாமம் நடந்து கொண்டிருந்ததால் பூம்புகாரில் ஜன நடமாட்டமும் இதர அரவங்களும் பெரிதளவு அடங்கிவிட்டாலும், டைபீரியஸின் பலத்த காவல் ஏற்பாடுகளின் காரணமாக யவன வீரர்களின் நடமாட்டம் மட்டும் அதிகமாக இருந்ததன் விளைவாக அவர்களின் பாதக் குறடுகளின் ஒலி கடற்கரைப் பிராந்தியத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. தவிர காவல்வீரர்கள் ஒருவருக்கொருவர் கொடுக்கும் எச்சரிக்கையொலி கோட்டைக்கு உள்ளும் புறமும் அடிக்கடி பலமாக எழுந்து கொண்டிருந்தது. டைபீரியஸ் புகாரை ஆக்கிரமித்துக்கொண்ட பிறகு கோட்டையின் அகன்ற சுவர்கள்மீதும் வீரர்களை நடமாட விட்டிருந்ததால், அவர்கள் கையிலேந்திய பந்தங்கள் சுவர்கள் மீது நடமாடுவது போலும் எரியும் கண்கள் பல புகாரிலிருந்து கடலைக் கண்காணிப்பது போலும் தோன்றின. யவனர்கள் கூச்சல் அதிகப்பட்டிருந்ததேயொழிய, பரதவர் இல்லங்களில் கேளிக்கையும் கூச்சலும் மருந்துக்குக்கூடக் கேட்காததைக் கவனித்த அல்லி, டைபீரியஸின் இரும்புப் பிடியில் புகார் பூரணமாகச் சிக்கிவிட்டது என்பதைப் புரிந்துகொண்டாள். அதை நினைத்ததால் அவளை அறியாமல் பெருமூச்சொன்று

அவனிடமிருந்து வெளிப்பட்டது. ஆனால் அதை உடனே அடக்கிக் கொண்டாள் அல்லி, அதற்கு ஏதாவது மரக்கலத் தலைவனிடமிருந்து இகழ்ச்சிப் பேச்சு வரும் என்ற நினைப்பில். ஆனால் அவள் எதிர்பார்த்தபடி இகழ்ச்சிப் பேச்சு அவனிடமிருந்து வரவில்லை. எச்சரிக்கைப் பேச்சே வந்தது. "பெண்ணே! உயிரின்மேல் ஆசையிருந்தால் எதுவும் பேசாதே. மூச்சுக்கூட விடாதே. மயக்கமுற்றவள்போல் படுத்திரு" என்றான் தலைவன்.

அவன் எச்சரிக்கைக்குக் காரணம் ஏதும் புரியாததால் அல்லி கேட்டாள், "மயக்கமுற்றவர்களின் கைகளும் கண்களும் கட்டப்பட்டிருக்குமோ?" என்று.

"கட்டப்பட்டிருக்காது. ஆனால் உன் கண்களையோ கைகளையோ யாரும் பார்க்கப் போவதில்லை" என்று கூறி விட்டுத் தன் இடது தோள்மீது மடித்துக் கிடந்த ஒரு போர்வையை உதறி அவள் உடலை போர்த்திவிட்ட தலைவன் சற்று வேகமாக நடக்க முற்பட்டான்.

அப்படி நடந்த வேகத்தில் அல்லியின் தோள் அவன் கழுத்தில் மட்டுமின்றி, கன்னத்திலும் உராய்ந்ததால் அவள் ஆச்சரியத்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள். அவன் கன்னத்தை மூடியிருந்த உலோகத் தகட்டிலிருந்து, யவனர் போர்க்கவசத்தால் அவன் முகத்தை மூடியிருக்கிறானென்பதைப் புரிந்துகொண்ட அல்லி, அவன் அப்படி எதற்காகத் தலைமறைந்து திரியவேண்டும் என்பதை அறிய முடியாமல் திணறினாளானாலும், அந்த மனிதனைச் சுற்றி ஏதோ பெரும் மர்மம் இருக்கிறதென்பதை மட்டும் புரிந்து கொண்டாள்.

அவன் அவளைத் தூக்கிச் சென்று பூம்புகாரின் வடதிசை கோட்டைச் சுவரின் திட்டிவாசலில் நுழைந்தபோதும், யவனர் தெருக்களின் வழியாக நடந்தபோதும், காவல் வீரர்கள் பேசிய பேச்சிலிருந்து தனது ஊகம் நூறுக்கு நூறு சரியென்பதை உணர்ந்து கொண்டாள் அல்லி. திட்டிவாசலில் அவன் நுழைந்ததுமே அவனுக்குத் தலை தாழ்த்தி

வணங்கிய யவன வீரர்களில் ஒருவன், "தலைவர் இன்றுதான் உடலைப் போர்த்தி மூடாமல் வருகிறார்" என்று மற்றொரு வீரனிடம் கூறினான் ஏளனத்துடன்.

"தோள் மேல் தூக்கி வந்திருக்கும் இன்பச் சுமையை மறைக்கப் போர்வை தேவையல்லவா?" என்று கூறிச் சிரித்தான் மற்றொருவன்.

அவர்களுடன் கலந்துகொண்டு நகைத்த மரக்கலத் தலைவன், "இந்தப் பெண் நம்மவளல்ல! இந்த ஊரைச் சேர்ந்தவள். பவள நாட்டு மதுவை அளவுக்கு அதிகமாக அருந்திவிட்டாள்" என்று கூறிவிட்டுத் தானும் மதுவைச் சற்று அதிகமாக அருந்திவிட்டதுபோல் பாசாங்கு செய்து, சிறிது தூரம் தள்ளாடி நடந்து, காவல் வீரர்கள் கண்களிலிருந்து மறைந்ததும் விடுவிடு என்று நடையைக் கட்டினான்.

மருவூர்ப்பாக்கத்தின் யவனர் வீதிகளில் வீடுகள் சிலவற்றில் அப்பொழுதும் கேளிக்கைகள் நடந்து கொண்டிருந்ததால், தெரு மூலைத் தீபங்கள் வீசிய ஒளிப்பாளங்களை விட்டு விலகி இருட்டடித்த இடங்களிலேயே ஒதுங்கி ஒதுங்கி நடந்த தலைவன், வெகு துரிதமாக மருவூர்ப் பாக்கத்துக்கும் பட்டினப்பாக்கத்துக்கும் இடையே இருந்த ஒரு மாளிகையை அடைந்து, கதவைப் பலமாகத் தட்டவே சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தப் பழைய மாளிகையின் பலத்த இரும்புத் தாழ்ப்பாள்கள் பெரும் சத்தத்துடன் இழுக்கப்பட்டுக் கதவுகள் திறந்தன. அந்த மாளிகைக்குள் யவனர்கள் கூட்டம் மட்டுமின்றி, மற்றும் பல நாட்டார் கூட்டமும் கலந்திருந்ததை அவர்கள் பேசிய யவன மொழி உச்சரிப்பிலிருந்து ஊகித்த அல்லி, அந்த மாளிகையிலும் ஏதோ மர்மம் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டாள். அதைப்பற்றி ஏதோ கேட்கவும் வாயெடுத்தபோது அவள் உடலைத் தலைவனின் கரம் பற்றிப் பலமாக அழுத்தி எச்சரிக்கை செய்யவே, அவள் நாவில் எழுந்த கேள்வி உதட்டிலேயே உறைந்து விடவே, 'பொறுத்தால் எல்லாம் புரிந்து விடுகிறது' என்று தீர்மானித்தாள் அல்லி.

மாளிகைக்குள்ளே நுழைந்த மரக்கலத் தலைவன், கதவைத் தாழிடும்படிக்கும் எச்சரிக்கையுடன் காவல் புரியும் படிக்கும் அங்கிருந்த வீரர்களுக்குக் கூறிவிட்டு, அல்லியைத் தூக்கிக்கொண்டு மாடிப்படிகளில் அதிக வேகத்துடன் ஏறிச் சென்று மாடியறையில் இருந்த மஞ்சத்தில் அவளைக் கிடத்தி அவள் கைகட்டுகளையும் கண்கட்டையும் அவிழ்த்துவிட்டு, "இனிப் பயமில்லை" என்றும் சொல்லி மஞ்சத்தின் ஓர் ஓரத்தில் தானும் உட்கார்ந்து கொண்டான்.

அல்லி கயிறு கட்டப்பட்டதால் சற்றுக் கன்னியிருந்த மணிக்கட்டுகளை இருமுறை அசக்கிக் கொண்டதன்றி, உள்ளங்கைகளால் தன் மலர் விழிகளையும் இருமுறை கசக்கி விட்டுக் கொண்டு சுற்றுமுற்றும் நோக்கினாள். அறையில் எங்கும் போர்க் கவசங்களும் போர்க்கலங்களும் நிறைந் திருந்தன. பலப்பல நாட்டு வாள்கள் சுவர்களில் தொங்கிக் கொண்டிருந்ததன்றி, தூரத்தேயிருந்த மஞ்சத்தில் சில ஓலைச் சுவடிகளும் வைக்கப்பட்டிருந்தன. ஓலைச்சுவடி நீங்கலாக மற்றப்படி அந்த அறை போர்க்கோலம் பூண்டு நின்றதையும், அறையின் கதவுகள் கூடப் பலமான இரும்புச் சலாகைகள் அறையப்பட்டு, ஒரு முறை கதவை அடைத்தால் கோடரி கொண்டு பிளந்தாலும் பிளக்கமுடியாத அளவுக்குப் பலப்பட்டிருந்ததையும் கவனித்த அல்லி, கதவுக்கு அப்பாலும் கண்களை ஓட்டினாள். கதவுக்கு வெளியே இருந்த மாடித் தாழ்வாரத்தின் கைப்பிடிச் சுவர்களில் யாரும் சுலபத்தில் ஏற முடியாதபடி சூலங்கள் பதிக்கப் பெற்றிருப்பதையும், கைப் பிடிச்சுவரின் ஓரமாக வளர்ந்திருந்த பெரும் வேப்பமரப் பிராந்தியத்தில் மட்டும் சூலங்கள் இல்லாததையும் கவனித்த நாங்கூர்வேள் மகள் சூலங்கள் சீதோஷ்ண நிலையால் பாதிக்கப்படாதிருந்ததைக் கண்டு, அவை மிகச் சமீபத்தி லேயே பொருத்தப்பட்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானித் தாள்.

அவள் கண்கள் போன திக்கையெல்லாம் கவனித்ததல் லாமல், அவள் முகத்திலோடிய உணர்ச்சிகளையும்

கவசத்தின் இடுக்குகள் வழியாகப் பார்த்துவிட்ட தலைவன் பழையபடி களுக்கென்ற ஏளனச் சிரிப்பை உதிரவிட்டான். அந்தச் சிரிப்பினால் விழித்துக்கொண்ட அல்லி சற்று எரிச்சலுடன் கேட்டாள், "எதற்காகச் சிரிக்கிறீர்கள்? என்ன ஆனந்தம் ஏற்பட்டுவிட்டது உங்களுக்கு?" என்று.

"பெரும் அபாயத்திலிருந்து தப்பினால் ஆனந்தம் ஏற்படுவது இயற்கைதானே?" என்று கேட்டான் தலைவன்.

"என்ன ஆபத்திலிருந்து தப்பினீர்கள்?" என்று மீண்டும் கேட்டாள்.

"தமிழகத்தின் தலைசிறந்த வேவுகாரியிடமிருந்து தப்பினேனே, அதைவிட அதிர்ஷ்டம் வேறு இருக்கிறதா?" என்று மீண்டுமொரு கேள்வியை வீசினான் தலைவன்.

"நான் தமிழகத்தில் தலைசிறந்த வேவுகாரியென்று யார் சொன்னது உங்களுக்கு?"

"உன் கண்கள்."

"என் கண்களா!"

"காரிகையர் கண்கள் சொல்லும் கதைகள் உலகில் ஆயிரமுண்டு என்பது கவிஞர் துணிபு. அதில் வேவுக் கதை ஒன்று உண்டு என்பதை இன்றுதான் அறிந்தேன். நீ அறையை ஆராய்ந்த திறன். சூலங்களை நோக்கியமுறை, அவற்றைப் பற்றிக் கட்டிய முடிவு இவையனைத்தையும் உன் கண்கள் மிக மிகத் தெளிவாகச் சொல்லுகின்றன."

அல்லி அவன் கூரிய அறிவை வியந்தாள். இருப்பினும் தன்னை இந்திர விழா மாளிகைக்கு அழைத்துச் சென்று டைபீரியஸிடம் ஒப்படைக்காமல் அந்தப் பழைய மாளிகைக்குக் கொண்டு வந்ததன் காரணம் புரியாததால், அவனை நேரடியாகக் கேட்டுவிடுவதெனத் தீர்மானித்து, "இங்கு எதற்காகக் கொண்டு வந்தீர்கள் என்னை!" என்று வினவினாள்.

"அதிகாரிகளிடம் ஒப்படைக்க."

"டைபீரியஸிடம் ஒப்படைக்க இங்கு கொண்டு வருவானேன்?"

"டைபீரியஸைச் சேர்ந்தவர்கள் இங்கு வருவார்கள்."

"எப்பொழுது வருவார்கள்?"

அவள் கேள்விக்குத் தலைவன் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லாது போயிற்று. வாயிற்கதவை மெல்ல யாரோ தட்டும் சத்தம் மிகத் தெளிவாகக் கேட்டது அல்லியின் காதுகளுக்கு. அந்தச் சத்தம் தலைவன் காதிலும் கேட்கவே அவன் சட்டென்று மஞ்சத்தைவிட்டு எழுந்தான். "உன்னை யாரிடம் ஒப்படைக்க வேண்டுமோ அவர்கள் வந்து விட்டார்கள். இதோ அழைத்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அறையைவிட்டு வெகு வேகமாக வெளியே சென்றான் தலைவன்.

வினாடிகள் விரைவாக ஓடின. வரப்போவது யார் என்பதை அறிய முடியாததாலும், வருவது டைபீரியஸா, அவன் உபதலைவனா என்பதைப்பற்றித் திட்டமாகத் தெரியாததாலும் வினாடிகளைவிட விரைவாக ஓடியது அல்லியின் இதயம். சிறிது நேரத்திற்கெல்லாம் மாடிப்படியில் யாரோ இருவர் ஏறி வரும் அரவம் கேட்டது அல்லிக்கு. அல்லி பஞ்சணையிலிருந்து எழுந்து நின்று கொண்டாள். மாடிப் படிகளில் ஏறி வந்தவர்களில் ஒருவர் மாடிப்படி உச்சியை அடைந்ததும் சிறிது தயங்கியதாகத் தோன்றியது அல்லிக்கு. ஆனால் அந்தப் பேர்வழி சற்றுத் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு அடியெடுத்து வைத்து அறைக்குள் நுழைந்தார். நுழைந்தவரைப் பார்த்ததும் அல்லியின் கண்கள் வியப்பால் மலர்ந்தன. "நீங்கள்...!" என்று ஏதோ சொல்ல முற்பட்டு முடியாததால் வாயடைத்து நின்றாள் அவள். பிறகு கால்கள் அடியோடு சக்தியற்றுப் போய்த் துவண்டு விழுவதுபோல் தோன்றியதால் மீண்டும் பஞ்சணையில் தொப்பென்று விழுந்தாள். மெள்ள மெள்ள அவளுக்கு உண்மை புலனாகத் தொடங்கியதால் முகத்தில் விவரிக்க இயலாத உணர்ச்சி பரவலாயிற்று. விழிகள் ஆச்சரியத்தைக் கக்கின. அந்த ஆச்சரியப் பார்வையிலும் அதிசயக் கதையொன்று விரிந்தது.

92. பழைய நினைவுகள்

மருவூர்ப்பாக்கத்துக்கும் பட்டினப் பாக்கத்துக்கு இடையே நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்தப் பழைய மாளிகையின் மாடிப்படி உச்சியில் சிறிது நேரம் தயங்கி நின்றுவிட்டு பிறகு அறைக்குள் நுழைந்த பேர்வழியைக் கண்டதும் அல்லியின் மலர் விழிகள் சில வினாடிகள் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து விட்டனவென்றாலும், அவள் புத்திகளில் எண்ண அலைகளைச் சிதறவிட்டதால், அவள் இதயத்தில் மெள்ள மெள்ள உள்ள நிலையும் உண்மையும் புலரத் தொடங்கின. அப்படி புலரத் தொடங்கியதன் விளைவாக, 'இப்படியும் காரியங்கள் நடப்பது சாத்தியமா!' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு வியப்பின் விளிம்பை அடைந்த அல்லி, தானும் பிரும்மானந்தரும் கொண்ட அச்சத்திற்கு வெளிப் படையான ஆதாரங்கள் பல இருந்தாலும் உள்மர்மம் வேறு விதமிருப்பதை எண்ணிப் பார்த்து, 'நிலைமை இப்படி யிருக்கும் போதா படகில் கடலில் மிதந்து கட்டையால் அடி பட்டது போல் பாசாங்கு செய்து இல்லாத கஷ்டமெல்லாம் பட்டு மரக்கலத் தலைவனிடம் சிக்கினேன்!' என்று நினைத் தாள். இத்தனையிலும் மரக்கலத் தலைவனின் பல செயல் களுக்கு மட்டும் அவளால் விடை கண்டுபிடிக்க முடியாமற் போகவே அவள் புத்தி மறுபடியும் குழம்பவே தொடங்கியது. 'மரக்கலத் தலைவன் சோழ நாட்டு மக்களின் நண்பனானால் என்னிடம் முகத்தை மறைக்க வேண்டிய அவசியமில்லை. எதிரியானால் டைபீரியஸிடம் என்னை அனுப்பாமல் இங்கு கொண்டு வருவதில் அர்த்தமில்லை. அவன் நண்பனா எதிரியா?' என்ற பல கேள்விகளைத் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

இப்படிக் கேள்விகளும் பதில்களும் எழுந்து அல்லியின் சித்தத்தில் சுழன்றனவென்றால், அறைக்குள் நுழைந்த பேர் வழியின் முகத்தில் சந்தேகம் பெரிதும் மண்டிக் கிடந்தது. அந்தச் சந்தேகத்தின் விளைவாக அறையைச் சுற்றிலும் ஒரு

முறை சுழன்ற நீலமணிக் கண்கள் கடைசியில் அல்லிமீது நிலைத்தன. அந்தக் கண்களுடன் தன் கண்களைச் சில வினாடிகளே உறவாடவிட்ட அல்லி, யவன ராணியின் முகத்தையும் பொதுத் தோற்றத்தையும் தன் கண்களால் ஆராய்ந்து, நீலமணிக் கண்களில் புதைந்து கிடந்த சோகம்கூட அந்த யவனப் பேரழகியின் முகத்துக்கு ஒரு தனிப் பொலிவை அளித்திருந்ததை நினைத்து ஆச்சரியப்பட்டாள். நிலவறை வழியாகத் தானும் குமரன் சென்னியும் காவிரி நதி நீர் மூலம் அழைத்துச் சென்ற யவன ராணிக்கும், அறைக்குள் நுழைந்த யவன ராணிக்கும் வேறுபாடுகள் பலமாக இருந்ததை அல்லி கவனித்தாள்.

வெள்ளகத்திப் புஷ்பத்தைவிட சாதாரணமாகவே வெளுத்திருக்கும் யவன ராணியின் வசீகர முகம் அன்றும் வெண்மை பாய்ந்திருந்தாலும், அவள் வழவழத்த கன்னக் கதுப்புகளில் தட்டும் சிவப்பு மட்டும் தெரியாதிருந்ததன் விளைவாக ராணி சற்றுப் பலவீனமுற்றிருக்கிறாள் என்பது தெளிவாகத் தெரிந்தது அல்லிக்கு. ஆனால் குறுகுறுவென்று சுழன்று வேல்கள்போல் பளிச்சிட்ட அந்த நீலமணிக்கண்கள், உடல்தான் பலவீனமுற்றிருக்கிறதேயொழிய உள்ளம் சிறிதும் பலவீனமடையவில்லையென்பதை அறிவுறுத்தின. பொன்னைப் பழிக்கும் அவள் கொண்டையிலிருந்து பிரிந்து அவள் முகத்தில் சுருண்டு கிடந்த மயிர்க் கொத்து ஒன்று முகத்தின் இயற்கையான கம்பீரத்தை அதிகப்படுத்தியதன்றி அவள் உள்ளத்தின் உறுதிக்குச் சான்றளிப்பதுபோல் தோன்றியது. அறைக்குள் அவள் நுழைந்தபோது தலையிலிருந்த பட்டு முக்காட்டை இடது கையால் அலட்சியமாகத் தள்ளிவிட்டுக் கொண்ட தோரணையும், இடை நெளிய அழகுகள் அசைய அவள் நடந்த மாதிரியும்கூட, ராணி எந்த நிலையிலும் ராணிதான் என்பதைச் சந்தேகமறப் பறைசாற்றின. சற்றே இளைத்த அந்த நிலையிலும் கவலை முகத்தில் பரவிக் கிடந்த அந்த நேரத்திலும், ராணி ஆண்களை என்ன, பெண்களைக் கூடக் கவரும் இணையற்ற சக்தியைப்

பெற்றிருந்ததால், ராணியின் ஒவ்வோர் அசைவையும் கவனித்த அல்லி, "அப்பா! என்ன தெய்வீக அழகு!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

ராணியும் அல்லியை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள். கரிகாலனுக்கும் அல்லிக்கும் ஏற்பட்டுள்ள புது உறவு முறையை ஒற்றர்கள் மூலம் டைபீரியஸ் அறிந்திருந்ததாலும் அதை அவன் ராணிக்கும் சொல்லியிருந்ததாலும், அல்லியின் முகத்தில் பிரதிபலித்த புதுப் பொலிவுக்கும் உடல் சற்று செழுமைப்பட்டிருந்ததற்கும் காரணத்தை ஊகித்துக் கொண்ட ராணி மெள்ளத் தன் செவ்விய இதழ்களில் ஒரு புன்முறுவலையும் படரவிட்டாள். அத்தனை முகப்பொலிவில் சிறிது குழப்பமும் கலந்திருந்ததைக் கவனித்த ராணி எதைப் பற்றி அவள் குழப்பமடைந்திருக்கிறாள் என்பதை அறிய முடியாததாலும், இருவர் மௌனமும் நீண்ட நேரம் நீடித்து விட்டதாலும், மேற்கொண்டு மௌனம் சாதிப்பது சங்கடமாயிருந்ததாலும், இரண்டடி எடுத்து வைத்து அல்லி உட்கார்ந்திருந்த மஞ்சத்தினருகில் வந்து நின்றுகொண்டு, "சோழ நாட்டின் பிற்கால ராணியை இங்கு நான் எதிர்பார்க்கவில்லை" என்றாள் உரையாடலைத் துவக்கி.

"சோழ நாட்டின் பிற்கால ராணியா!" என்று வியப்பு மண்டிய குரலில் கேட்ட அல்லி, "உட்காருங்கள் ராணி" என்று சிறிது நகர்ந்து மஞ்சத்தில் உட்கார ராணிக்கு இடமும் கொடுத்தாள்.

"ஆம் அல்லி, சோழ நாட்டு மன்னரின் மனையாட்டி பிற்கால ராணிதானே?" என்றாள் ராணி மஞ்சத்தில் உட்கார்ந்து, புன்முறுவலைச் சற்று அதிகமாகவே வளரவிட்டு.

"மன்னருக்கு மணிமுடியே இன்னும் கிட்டவில்லையே. பிறகுதானே மனையாட்டி ராணியாக முடியும்?" என்று கூறிய அல்லி, "அது மட்டுமல்ல ராணி. இன்னும் அவர் மனையாட்டி பதவிகூட எனக்குக் கிடைக்கவில்லை" என்றாள்.

ராணி மெல்ல நகைத்தாள். "இப்பொழுதுதானே முதற் பதவி கிடைத்திருக்கிறது" என்றும் கூறினாள்.

"முதற் பதவியா!" அல்லியின் கேள்வியில் ஆச்சரியம் மண்டிக் கிடந்தது.

"ஆம், காதலிப் பதவி கிடைத்திருக்கிறது. அடுத்தது மனையாட்டிப் பதவி. அதற்கும் அடுத்தது ராணிப் பதவி" என்று சொல்லிய ராணி அல்லியின் தோள்மீது கையை வைத்து, "அல்லி! இதெல்லாம் நானெப்படி அறிந்தேன் என்று ஆச்சரியப்படுகிறாயல்லவா? ஆச்சரியம் வேண்டாம். இதைச் சோழ நாட்டில் பெரும்பாலோர் அறிவார்கள். உறையூர் அரண்மனைக் காவலர் தலைவர் நாங்கூர்வேளானதும், பிறகு அவர் தமது மகளை மட்டுமின்றி இருங்கோவேள் சிறை வைத்த பூவழகியையும் அழைத்துக் கொண்டு மறைந்து விட்டதும் நாடெங்கும் பேசப்படுகிறது. ஆனால் அவர்கள் எங்கு போனார்கள், யாரிடம் சேர்ந்திருக்கிறார்கள் என்பது மட்டும் புகாரில் பலருக்குத் தெரியாது. ஆனால் இருவர் அறிவார்கள்" என்றும் விளக்கினாள்.

அல்லியின் இதயத்தில் ஆச்சரியத்துடன் ஓரளவு அச்சமும் கலக்கவே, "யார் அந்த இருவர்?" என்று கேட்டாள்.

"டைபீரியஸ் ஒருவன், நான் ஒருத்தி" என்றாள் ராணி.

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"டைபீரியஸ் சொன்னான்."

"டைபீரியஸுக்கு யார் சொன்னது?"

"மாரப்பவேள் சொன்னார்."

"யார், பூவழகியின் தந்தையா!"

"ஆம்!"

அல்லி சட்டென்று கட்டிலிலிருந்து எழுந்து கலவரம் நிரம்பிய கண்களுடன் ராணிக்கு எதிரில் நின்று கொண்டு சோழ நாட்டின் ராணிக்குரிய தோரணையில் தலையைச் சற்றுக் கம்பீரத்துடன் உயர்த்தி, "இப்பொழுது மாரப்பவேள் எங்கே?" என்று வினவினாள்.

"புகாரின் சிறையில்." ராணியின் பதில் திட்டவட்டமாக வந்தது.

"புகாரின் சிறையிலா? அவரைச் சிறையிலடைக்க டைபீரியஸுக்கு என்ன துணிச்சல்?" அல்லியின் கேள்வியும் உஷ்ணமாக எழுந்தது.

ராணியின் நீலமணிக் கண்கள் அல்லியின் கோபம் மண்டிக் கிடந்த முகத்தை ஒரு முறை துழாவின. அவள் இதழ்கள் புன்னகையை மறுபடியும் கொட்டின. "மாரப்பவேளைச் சிறையிலடைக்கத் துணிச்சல் எதற்கு" என்று ராணியின் உதடுகள் வார்த்தைகளையும் உதிர்ந்தன.

"மாரப்பவேள் இருங்கோவேளின் நண்பரல்லவா?" என்று கேட்டாள் அல்லி.

ராணியின் பதில் உறுதியுடன் வந்தது. "இல்லை அல்லி, இல்லை. மாரப்பவேள் அங்கு வருமுன்பே அவரைப் பற்றிச் செய்தி வந்தது. வந்தவுடன் அவரைச் சிறையில் தள்ளும்படி இருங்கோவேள் முன்னதாகவே ஓலை எழுதியிருந்தான். ஓலையை டைபீரியஸே என்னிடம் காட்டினான். அதன்படி அவர் சிறையில் தள்ளப்பட்டார்" என்றாள் ராணி.

அல்லிக்கு அப்போதுதான் நிலவரம் திட்டமாகப் புரிந்தது. பூவழகியைத் தான் அணுக இடைஞ்சலாயிருந்ததாலேயே மாரப்பவேளைப் புகாருக்கு அரசியல் காரியமாக அனுப்புவதுபோல் பாசாங்கு செய்து, இருங்கோவேள் அவரைச் சிறையிட ஏற்பாடு செய்துவிடடானென்பதை அறிந்து கொண்ட அல்லி, "என்ன நம்பிக்கைத் துரோகம்? எத்தனை கேவலம்!" என்று அலுத்துக் கொண்டாள்.

"அப்படி நம்பிக்கைத் துரோகிகள் இல்லாவிட்டால், வேறு நாட்டார் உங்கள் நாட்டை உடைக்க முடியுமா? புகார் தான் எங்கள் கைவசமாகுமா?" என்று கேட்ட ராணி, ஒரு விநாடி மௌனம் சாதித்துவிட்டு, "ஆமாம்! நீ இங்கு எப்பொழுது வந்தாய் அல்லி?" என்று வினவினாள்.

"இப்பொழுதுதான்" என்றாள் அல்லி.

"எப்படி வந்தாய்?" என்று கேட்டாள் ராணி சந்தேகத்துடன்.

"நானாக வரவில்லை. கொண்டு வரப்பட்டேன்" என்றாள் அல்லி.

"யாரால் கொண்டு வரப்பட்டாய்?"

"அதுதான் புரியவில்லை. கொண்டு வந்தவன் முகம் பூராவும் கவசத்தால் மூடிக் கிடந்தது."

ராணி மஞ்சத்தில் இருமுறை அசைந்தாள். அவள் முகத்தில் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் படர்ந்தன. மீண்டும் அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தாள். கடைசியாக அல்லியைப் பார்த்துக் கேட்டாள்: "இந்த அறையை முன்பு எப்பொழுதாவது நீ பார்த்திருக்கிறாயா?" என்று.

"இல்லை. பார்த்ததில்லை" என்று பதில் சொன்னாள் அல்லி.

ராணி மஞ்சத்திலிருந்து எழுந்து ஒருமுறை அறையைச் சுற்றினாள். சுவரின் ஒரு பகுதியில் சாத்தப்பட்டிருந்த இரும்புக் கவசத்தைப் பல நிமிஷங்கள் சோதித்தாள். "ஆம்! அதுதான்! சந்தேகமில்லை" என்று சற்று இரைந்து சொல்லிக் கொண்டு அறைக் கதவைத் திறந்து வெளியேயும் நோக்கினாள். அவள் முகம் திடீரெனப் பளிச்சிட்டது. திரும்பி வந்த யவன ராணியின் முகம் ஏதோ யோசனையின் விளைவாக ரத்தக் குழம்பாகச் சிவந்து கிடந்தது. "உன்னைத் தூக்கி வந்தவனை எங்கு சந்தித்தாய்?" என்று கேட்ட ராணியின் குரல் லேசாக நடுங்கவும் செய்தது.

ராணியின் திடீர் மாற்றத்துக்கும் குரல் தடுமாற்றத்துக்கும் காரணத்தைப் புரிந்துகொள்ள முடியாத அல்லியும் மஞ்சத்திலிருந்து திடீரென எழுந்தாள். "கடலில் சந்தித்தேன்" என்றாள் ஏதோ கட்டுக் கதைக்கு விடை கூறுவதைப் போன்ற ஒலியில்.

"கடலிலா?" யவன ராணி மறுபடியும் உதடுகள் துடிக்கக் கேட்டாள்.

"ஆம். அதாவது மரக்கலத்தில்."

"எந்த மரக்கலத்தில்?"

"யவனர் மரக்கலத்தில்."

"அங்கு ஏன் சென்றாய்?"

"யவன மரக்கலங்கள் நான்கு நாட்களுக்கு ஒருமுறை புகாரை நோக்கி வருவதாகப் பிரும்மானந்தருக்குச் செய்தி வந்ததன்றி, மரக்கலங்கள் வருவதையும் அவர் பார்த்தார். அதைப்பற்றிய விவரங்களை அறிய என்னை அனுப்பினார்."

"தன்னந்தனியாக! நடுக் கடலில்!"

"தன்னந்தனியாக இல்லை" என்ற அல்லி தான் படகில் யவன வீரனுடன் அனுப்பப்பட்ட விவரங்களையும், மரக்கலத் தலைவனைத் தான் ஏமாற்ற முயன்ற முறைகளையும் விவரித்தாள்.

ராணியின் கண்கள் பளிச்சிட்டன. 'களுக்'கென்று மதுரகீதம்போல் சிரிப்பொலியொன்றையும் வெளியிட்டாள் ராணி. அந்தச் சிரிப்பைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது அல்லிக்கு. அதே சிரிப்பைத்தான் திரும்பத் திரும்ப அவள் மரக்கலத் தலைவனிடம் கேட்டிருந்தாள். 'அப்படியானால் மரக்கலத்துக்குத் தலைமை தாங்குவது ராணியா!' என்று நினைத்து ஒரு வினாடி பிரமித்தாளானாலும் மறுவினாடி அந்தக் கருத்தைத் துடைத்துத்தள்ளிய அல்லி, 'சே! சே! ஒருநாளுமிருக்காது. நான் சந்தித்தது ஒரு ஆண்மகன்தான். என்ன அனாயாசமாக என்னைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டான். அந்தக் கைகளின் உரமெங்கே, இந்த ராணியின் பட்டுக் கரமெங்கே?' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்ட அல்லி, "ராணி! அந்தச் சிரிப்பை நான் ஏற்கெனவே கேட்டிருக்கிறேன்" என்று கூறினாள் சற்றுக் குழப்பத்துடன்.

"அந்த மரக்கலத் தலைவனிடம்தானே?" என்றாள் ராணி அதை முன்பே அறிந்தவள் போல.

அல்லியின் பிரமிப்பு முன்னைவிடப் பன்மடங்கு அதிகப்பட்டது. "மரக்கலத் தலைவனை உங்களுக்குத் தெரியுமா ராணி?" என்று வினவினாள் அல்லி.

"இதுவரை தெரியாது அல்லி. எனக்கு மட்டுமல்ல. டைபீரியஸுக்கும் தெரியாது."

"டைபீரியஸுக்கும் தெரியாதா?"

"ஆம் அல்லி. தெரியாது. விந்தையாயில்லையா? டைபீரியஸை இதுவரை சந்திக்க மறுத்துவிட்டான் யவனர் மரக்கலத் தலைவன்."

"அதெப்படி முடியும் ராணி? யவனர் நாட்டின் தலை சிறந்த கடற்படைத் தலைவனான டைபீரியஸ் உத்தர விட்டால் எதிரே வரவேண்டியவன்தானே மரக்கலத் தலைவன்?"

அல்லியின் கேள்விகளிலிருந்த நியாயத்தை ராணி புரிந்து கொண்டாளானாலும் அதைப்பற்றித் தர்க்கிக்காமல் சொன்னாள்: "யவன நாட்டிலிருந்து வந்திருக்கும் மரக்கலங் களுக்குத் தலைவர் இருவர் இருக்கிறதாக டைபீரியஸுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. ஒருவரைப் பற்றிய விஷயம் அவனுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. அதைப்பற்றி என்னிடம் எதுவும் சொல்ல மறுக்கிறான். இன்னொருவன் தான் இந்த முகக் கவசமணிந்த தலைவன். இவன் அடிக்கடி புகாருக்குள் வருவதாகச் செய்தி உலவுகிறது. ஆனால் டைபீரியஸ் இந்தத் தலைவனை யாரும் அணுகக் கூடாதெனத் திட்டமான உத்தரவு பிறப்பித்திருக்கிறான். டைபீரியஸின் போக்குக்கு காரணம் எனக்கே புரியவில்லை. மறைந்து திரியும் மரக்கலத் தலைவன் ஒருவன் விஷயத்தில் இத்தனை தாராள மாக அவன் ஏன் நடந்து கொள்கிறான் என்பதும் விளங்க வில்லை. டைபீரியஸ் யாராவது ஒருவனிடம் தாராளம் காட்டினால் அதில் ஆபத்தும் கலந்திருக்கிறது என்று அர்த்தம்."

அல்லியின் கண்களில் பரிதாபம் மண்டியது. "அப்படி யானால் இந்த மரக்கலத் தலைவனுக்கு..." என்று இழுத்தாள் அல்லி.

"ஆபத்து சதா காத்திருக்கிறது. அது எப்பொழுது வரும், என்ன உருவெடுக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது" என்று முடித்த ராணி சிறிது நேரம் ஏதோ யோசனையில் இறங்கினாள். பிறகு அல்லியைப் பார்த்து, "அல்லி, இந்தத் தலைவனைச் சுற்றி மர்மம் பெரிதாக இருக்கிறது. ஆனால் அதை ஓரளவு ஆராய்ந்தும்விட்டேன். இந்த அறைக்கு நான் ஏற்கெனவே ஒருமுறை வந்திருக்கிறேன்" என்றாள்.

"எப்போது வந்திருக்கிறீர்கள்? எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டாள் அல்லி.

ராணியின் நினைப்புப் பின்னோக்கி ஓடுவதை அவள் நீலமணிக் கண்களில் ஏற்பட்ட லேசான மயக்கப் பார்வை வலியுறுத்தியது. ஏதோ கனவில் பேசுவதுபோல் இல்லை ஏதோ சொர்க்கத்தில் சிக்கிவிட்டதுபோல் பேசினாள் ராணி. "பல மாதங்களுக்கு முன்பு ஒரே முறை வந்தேன் அல்லி! உன்னைப்போல் என்னையும் ஒருவர் கடற் பகுதியிலிருந்து தான் தூக்கி வந்தார். ஆனால் உனக்கும் எனக்கும் ஒரு வித்தி யாசம். நீ முழு உணர்வுடன் அவர்மீது சாய்ந்து கிடந்தாய். நான் உணர்வற்ற நிலையில் இருந்தேன். இங்குதான் கண் விழித்தேன். இந்த மஞ்சத்தில்தான் அவர் என்னைப் படுக்க வைத்து மதுவை ஊட்டினார். வேறு உடையும் கொடுத்தார். அந்தச் சம்பவங்களை இன்று நினைக்கக்கூட வெட்கமாயிருக் கிறது எனக்கு. ஆனால் கிட்டத்தட்ட எட்டு மாதங்கள் கழித்து அதே அறைக்கு இன்று வருகிறேன் ஒரு ஓலையின் உத்தர வுக்குப் பணிந்து..." என்று பேசிக்கொண்டு போன ராணி சற்றுப் பேச்சை நிறுத்தினாள்.

"ஓலையா!" என்று வியப்புடன் வினவினாள் அல்லி.

"ஆம். இந்த மாளிகை விவரத்தை எழுதி இங்கு இன்றிரவு சந்திக்கும்படியாக எழுதியிருந்தது. இதோ பார்

ஓலையை'' என்று மடியிலிருந்து ஓலையை எடுத்துக் கொடுத்தாள் ராணி.

அந்த ஓலையின் அடியில் பொறிக்கப்பட்டிருந்த அன்னப்பறவைக் குறியைக் கவனித்த அல்லி, "யவனர்களின் அரச முத்திரை" என்று முணுமுணுத்தாள்.

"ஆம். இந்த முத்திரைபோல் செய்யப்பட்ட ஆபரணத்தையும் இங்குதான் கண்டார் அவர். பிறகு இந்த மாளிகையில் பிரமிக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடந்தேறின. அன்றுதான் தமிழர் வீரம், எத்தகைய நிலையையும் சமாளித்துக் கொள்ள அவர்களுக்குள்ள திறமை, இவற்றைக் கண்கூடாகக் கண்டேன்" என்று பழைய கதையை விவரித்த ராணி, "ஆகவே இங்கு வரவழைத்தவர் யாராயிருந்தாலும் அவர் இத்தனை ரகசியங்களையும் அறிந்தவராகத் தானிருக்க வேண்டும்'' என்று கூறினாள்.

"அதிருக்கட்டும் ராணி. இத்தனை ரகசியங்களையும் அறிந்தவர் வேறு யாராக இருக்க முடியும்?"

ராணி சிறிது நேரம் மௌனம் சாதித்தாள். அவள் பளிங்கு முகத்தில் சிவப்பு மெள்ள ஏறி கன்னக் கதுப்புகளைக் குங்குமக் குழம்பாக அடித்தது.

"வேறு யாருமல்ல, அவர்தான்; சந்தேகமில்லை, சந்தேகமில்லை" என்று தட்டுத் தடுமாறிச் சொன்னாள் ராணி.

"ஏன் பெயரைச் சொல்லி விடுவதுதானே? பெயர் அத்தனை கசப்பாகவா இருக்கிறது?" எனக் கணீரென்று அறையை ஊடுருவிச் சென்ற சொற்களைக் கேட்ட ராணியும் அல்லியும் பிரமித்துப் போய் அறைக் கதவை நோக்கித் திரும்பினார்கள். கையில் தலைக் கவசத்துடனும் இதழ்களில் எந்த எழிலரசியையும் மயக்கும் இன்பப் புன்னகையுடனும் சோழர் படையின் உபதலைவனான இளஞ்செழியன் நின்றிருந்தான்.

93. சிலைகள் இரண்டா மூன்றா?

மாதக் கணக்கில் காணாமல் மறைந்துவிட்ட சோழர் படை உபதலைவனான இளஞ்செழியன், சர்வசாதாரணமாகவும் இயற்கையைகத் தவழ்ந்தோடும் புன்னகையுடனும் அந்தத் தனி மாளிகையின் மாடியறை வாயிற்படியில் தங்களெதிரே காட்சியளித்ததன்றி, எந்த விநாடியிலும் அவனை ஆபத்து விழுங்கிவிடக் கூடிய பயங்கரச் சூழ்நிலையிலும் இம்மியளவும் நிதானம் தவறாமல் சொந்த ராஜ்யத்தில் உலாவும் மன்னனைப் போல வேடிக்கையாகப் பேசவும் தொடங்கியதைக் கண்ட யவன ராணியும் சோழ நாட்டின் பிற்கால ராணியும், அடியோடு ஸ்தம்பித்துப் போய் அவனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே நின்றார்கள். அவர்கள் நிலையைக் கவனித்த சோழர் படை உபதலைவன் தன் முகத்தில் தவழ்ந்த முறுவலைச் சிறிதும் குறைக்காமலே கதவைத் தாண்டி இரண்டடி எடுத்து வைத்து அறைக்குள் நுழைந்து, ''இரண்டு ராணிகளின் தாக்குதல்களைத் தாங்குவதற்கு இந்த அடிமையிடம் சக்தியில்லை" என்று கூறிவிட்டு, 'உட்காருங்கள்' என்பதற்கு அடையாளமாகத் தன் கையிலிருந்த கவசத்தால் பஞ்சணையை நோக்கிச் சைகையும் செய்தான்.

எத்தனை ஆபத்துக்களையும், திடீரென ஏற்படும் எத்தகைய சந்தர்ப்பங்களையும் சமாளிக்கும் சக்திவாய்ந்த நெஞ்சத் திடமுள்ள அந்த வஞ்சியர் இருவரும், அந்தச் சில விநாடிகளில் மட்டும் தங்கள் நெஞ்சங்களை அடியோடு நெகிழ விட்டும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த அற்பத் திராணியுமில்லாமலும் இரண்டு சிற்பச் சிலைகளென நின்ற இடத்தை விட்டுச் சற்றுகூட அகலாமலிருந்ததைக் கவனித்த படைத் தலைவன், "சிலைகளைப் பார்த்திருக்கிறேன் பல இடங்களில். ஆனால் உயிர்ச் சிலைகளைப் பார்க்கும் பாக்கியம் இன்றுதான் கிடைத்தது" என்று அவ்விருவர்மீதும் தன் கண்களை ஓட்டி விட்டுக்கூறியதன்றி மெல்ல நகைக்கவும்

செய்தான். அந்தச் சிரிப்பினால் சுளீரென்று சாட்டையா லடிக்கப் பட்டவளைப் போல் சுரணையடைந்த அல்லி, அந்தச் சிரிப்புக்கும் தான் மரக்கலத் தலைவனிடம் கேட்ட சிரிப்புக்குமிருந்த பெரும் வித்தியாசத்தை எண்ணிப் பார்த்து, 'ஒருவேளை அந்த மரக்கலத் தலைவன் வேறோ?' என்று தன்னைத் தானே கெட்டுக் கொண்டு, 'இருக்காது, இருக்காது. அப்படியிருந்தால் இந்த முகக் கவசத்தை இவர் எதற்காகக் கையில் எடுத்து வரவேண்டும்?' என்று பதிலையும் தானே சொல்லிக் கொண்டாள்.

யவன ராணியின் நினைப்புகள், அல்லியின் எண்ணங்கள் ஓடிய திசையில் மட்டுமல்ல, இளஞ்செழியனைவிட்டு அப்புறமோ இப்புறமோ வேறெந்தத் திசையிலுமே அசையவும் மறுத்தது. அப்படி அசைந்தாலும் பல மாதங்களுக்கு முன்பு அவனைப் பிரிந்த அந்த இடத்துக்கே சென்றது. 'காவேரியின் அதே பெரும் புனல் பரப்பு! அதோ அந்தப் படகுதான் மிதந்து வருகிறது! காவிரி வெள்ளத்திலே மிதந்து தமிழகத்தின் மண் வாசனையைத் தூக்கி வந்த அதே தென்றல்தான் உடலைத் தழுவிச் செல்கிறது! ஆகா! தமிழகத்தின் மண்ணில்தான் எத்தனை நறுமணம்! அது கிடக்கட்டும். பூவழகியிடம் மனத்தைப் பறிகொடுத்ததாகப் பறை சாற்றும் இந்தப் படைத் தலைவர் என் மடியில்தானே படுத்திருக்கிறார்!' என்று ராணியின் இதயம் சொற்களை உதிர்த்தது. புத்தி அந்த இன்ப நேரங்களையும் பிராந்தியத்தையுமே சுற்றிச்சுற்றி வந்தது. அந்தச் சில விநாடிகளில் ராணி அந்த மாடியறையை மறந்தாள். தனக்குத் தமிழகத்தில் மகுடம் கிட்டுமெனச் சொன்ன சோதிடர்களை மறந்தாள். இளஞ்செழியனுடன் தான் பழகிய சில நாட்களை மட்டுமே எண்ணி மகிழ்ந்தாள். அத்துடன் தான் எப்பொழுதும் நம்பிய விதியின் வலிமையை மட்டும் தொடர்ந்து நம்பினாள். எட்டு மாதங்களுக்கு முன்பு முதன் முதலாகப் புகாரின் கடற்கரையில் புரண்ட நாளிலிருந்து பலவித ஆபத்துக்கள் ஏற்பட்ட போதிலும் விதி தன்னையும் படைத்தலைவனையும் திரும்பத் திரும்பப்

பிணைப்பதை எண்ணி இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்த ராணியின் இதழ்களில் மகிழ்ச்சிப் புன்முறுவலொன்று மெல்ல மெல்லப் படரலாயிற்று.

யவன நாட்டுப் பளிங்குச் சிலைபோலிருந்த ராணியின் முகத்திலும் உணர்ச்சிகள் மெல்ல மெல்லத் துளிர்விடத் தொடங்கிவிட்டதையும், அவள் சிவந்த இதழ்களில் புன்முறுவலொன்று ஓடியதையும் கண்ட இளஞ்செழியன், அல்லியை ஒரு முறை நோக்கிவிட்டு, "ராணி! இனியும் என்னால் தாங்க முடியாது. ஒன்று நீங்களிருவரும் உட்கார வேண்டும்" என்றான் சங்கடத்தின் சாயை தொனித்த குரலில்!

"எதைத் தாங்க முடியாது படைத் தலைவரே?" என்று கேட்டாள் அல்லி இளஞ்செழியனை நோக்கி, ராணியிடமிருந்து பதிலேதும் வராமற்போகவே.

"வேல்கள் நான்கு தாக்குவதை" என்று பதில் சொன்னான் படைத்தலைவன். அல்லியைக் கடைவிழியால் நோக்கி.

"நான்கு வேல்களா?" என்று அல்லி மீண்டும் வினவினாள் சற்று ஆச்சரியத்துடன். அல்லி சம்பிரதாயத்துக்குப் பேசுகிறாளேயொழிய அவள் உணர்ச்சிகள் ஒரு நிலையிலில்லை என்பதைக் குரலின் சலனத்திலிருந்தே ஊகித்துக் கொண்ட இளஞ்செழியன், அந்த இரு பெண்களின் பிரமிப்புக்குத் தன் திடீர் விஜயம் காரணமென்பதை அறிந்து கொண்டானாகையால், அவர்கள் திகைப்பைக் கலைப்பதற்காகவே மேலும் பேசத் தொடங்கி, "ஆம் ராணி! நான்கு வேல்கள்தான்" என்றான் அல்லியை நோக்கித் திரும்பி.

இதைக் கேட்ட அல்லி திடுக்கிட்டு, "யாரை அழைக்கிறீர்கள் ராணி என்று? என்னையா!" என்று வியப்பு மிதமிஞ்சிய சொற்களை உதிரவிட்டாள்.

"ஆம். தங்களைத்தான் அழைத்தேன். என்னைக் கண்டதால் நீங்களிருவரும் குழப்பமடைந்திருப்பது எனக்குத் தெரிகிறது. இந்த அறையில் எப்பொழுதும் குழப்பம் ஏற்படுவது இயற்கை. முதன் முதலில் யவன ராணி இங்கு

வந்தாள். சோழ நாட்டு அரசியல் குழம்பியது. இன்று சோழ நாட்டு ராணி, யவன ராணி ஆகிய இரண்டு ராணிகள் வந்திருக்கிறார்கள். எப்படி யாரை அழைப்பதென்று எனக்கே குழப்பமாயிருக்கிறது. இனி சோழநாடு என்ன, பாரத நாட்டின் நிலையே குழம்பினாலும் வியப்படைவதற்கில்லை" என்று வேடிக்கையாகப் பேசினான் படைத் தலைவன்.

அவன் நெஞ்சுரத்தைக் கண்டு இரண்டு ராணிகளும் ஆச்சரியத்தின் எல்லையை அடைந்தார்கள். 'தன் ஒரே விரோதியென்று நினைத்திருக்கும் படைத் தலைவன் உயிருடனிருக்கிறானென்பதை அறிந்தாலே டைபீரியஸ் அவனை அழித்துவிட ஒரு கணமும் தயங்கமாட்டானென் பதை அறிந்திருந்த அந்த இரு ராணிகளும், சிங்கத்தின் வாயில் நுழைவதைப் போல் டைபீரியஸால் நன்றாகக் காவல் செய்யப்பட்டு வரும் புகாருக்குள் தைரியமாக நுழைந்து உலாவுவதன்றி, வேடிக்கையாகவும் பேசுகிறாரே படைத் தலைவர்' என்று எண்ணியதால் திகைப்பும் வியப்பும் கலந்தோடிய உணர்ச்சிகளில் சிக்கிய அந்த இரு ராணிகளில் முதலில் சுயநிலையடைந்த அல்லி மட்டும் சொன்னாள் சற்றுப் பொய்க் கோபத்துடன், "படைத் தலைவர் பேசும் முறை எனக்குப் பிடிக்கவில்லை" என்று.

"நான் என்ன அப்படித் தவறாகப் பேசிவிட்டேன் தங்களிடம்?'' என்று வினவினான் படைத் தலைவன் வணக்கம் நிறைந்த குரலில்.

"உங்கள் குரலே எனக்குப் பிடிக்கவில்லை" என்றாள் அல்லி.

"ஏன், குரலில் அகந்தை இருக்கிறதா?"

"இல்லை, அகந்தை இருந்தால் எனக்குப் பிடிக்கும். வணக்கம் அதிகமாயிருக்கிறது."

"தாங்கள் சோழ நாட்டின் பிற்கால ராணியல்லவா?"

"தாங்கள்! ராணி! என்ன சொற்கள்! மிகவும் கசப்பா யிருக்கிறது படைத் தலைவரே! இனியொருதரம் இப்படிப்

பேசினால் உங்களைத் தண்டிக்கத் தயங்கமாட்டேன்" என்று அல்லி கூறி, தன் விழிகளை அவன்மீது நாட்டினாள்.

"எப்படித் தண்டிப்பீர்கள்?" என்று மீண்டும் மரியாதை யுடன் கேட்டான் படைத் தலைவன்.

அல்லியின் பதில் லவலேசமும் தயக்கம் இன்றி வந்தது. "என் முகத்தின் குங்குமத்தை உங்கள் கன்னத்தில் ஒட்டிப் பூவழகியிடம் அனுப்புவேன்" என்று கூறிய அல்லி, அதுவரை மேற்கொண்ட பொய்க்கோபத்தைத் துறந்து திடீரென நகைத்தாள். இளஞ்செழியன் அவளுடன் சேர்ந்து நகைத்ததோடு மட்டுமல்ல, "எத்தனை போக்கிரி, அல்லி நீ!" என்று சகஜமாக அவள் கைகளைப் பற்றி இழுத்து மஞ்சத்தில் தடாலெனத் தள்ளவும் செய்தான்.

இருவர் சிரிப்பும் பேச்சும் விளையாட்டும் அனலை வாரி உள்ளத்தில் வீசுவது போலிருந்ததால் ராணியின் கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன. வெண்மையான அவள் முகம் குங்குமச் சிவப்பாகச் சிவந்தது. கருவூர் சமண மடத்தின் அந்தரங்க அறையிலிருந்து தன்னைத் தப்ப வைத்து அழைத்துக் கொண்டு உறையூர் சென்றதும், எல்லைப் புறத்தி லிருந்த வீடுகளிலொன்றில் இளஞ்செழியன் புகுந்ததும், அங்கு படைத் தலைவனும் அல்லியும் கைகோத்துப் பேசிச் சிரித்ததும், அதைக் கண்டு, 'இவர் வாழ்வில் எத்தனை பெண்கள்!' என்று தான் வெகுண்டதும் ராணிக்கு நினைப்பு வரவே, அந்தச் சம்பவத்துடன் இப்புது விளையாட்டையும் இணைத்துப் பார்த்த ராணி, 'சே! சே! என்னதான் அண்ணன் தங்கை உறவு பூண்டாலும் இத்தனை விளையாட வேண்டாம்' என்று உள்ளுக்குள் கடிந்து கொண்டதன்றி, அந்த இருவர் விளையாட்டையும் பார்க்க இஷ்டப்படாமல் சுவர் ஓரமாகத் திரும்பிச் சென்று, அங்கிருந்த கவசமொன்றைப் பரிசோதிக்கத் தொடங்கினாள்.

அவள் உள்ள உணர்ச்சிகள் கொந்தளித்து நிற்பதைத் தெள்ளெனப் புரிந்துகொண்ட இளஞ்செழியன், அல்லியுடன்

வேடிக்கையாகப் பேசுவதை நிறுத்தி, "அங்கென்ன பார்க்கிறாய் ராணி?" என்று ராணியை நோக்கி வினவினான்.

"கவசத்தைப் பார்க்கிறேன்" என்றாள் ராணி சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு கவசத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டு.

"எதற்காகக் கவசம்?" என்று கேட்டான் இளஞ் செழியன்.

"கவசம் இப்பொழுது எல்லோருக்கும் தேவையாயிருக் கிறது" என்றாள் ராணி.

"கவசமா? எல்லோருக்குமா?"

"ஆம். அதிலும் முக்கியமாக உங்களுக்கு."

"எனக்கா ராணி!"

"ஆம். உங்களுக்கும் கவசத்திற்கும் பொருத்தம் ஆரம்பத்திலிருந்து இருக்கிறது."

"ஆரம்பத்திலிருந்தா?"

"ஆம் படைத் தலைவரே! நாம் சந்தித்த முதல் நாள் என்னை மறைத்து வைக்க ஒரு கவசம் தேவையாயிருந்தது. இப்பொழுது உங்கள் தலையை மறைத்துக் கொள்ளக் கவசம் தேவையாயிருக்கிறது" என்று கூறிய ராணி, அல்லியைப் பிடிக்க எண்ணியபோது அவன் மஞ்சத்திலெறிந்த கவசத்தைச் சுட்டிக் காட்டினாள்.

இளஞ்செழியன் ஏதோ பதில்-சொல்ல வாயெடுத்தான். ஆனால் சட்டென்று உயர எழுந்த ராணியின் கை அவன் சொற்களைத் தேக்கி நிறுத்தியது. ராணி அவனைப் பேசாமலிருக்கும்படி செய்துவிட்டு அல்லியை நோக்கிக் கேட்டாள்: "அல்லி! நான் படைத் தலைவருக்கு எத்தனை கடமைப் பட்டிருக்கிறேன் தெரியுமா?" என்று.

"தெரியும் ராணி! கடற்கரையிலிருந்து உங்களைப் படைத்தலைவர் தூக்கி வந்த விவரங்களைத் தமிழ் நாடு அறியும்" என்று பதிலளித்தாள் அல்லி.

"நாடு அறியாத விவரங்கள் பல இருக்கின்றன அல்லி. நீர்வாழ் ஜந்துக்களால் சின்னாபின்னப் படுத்தப்பட்ட உடையுடன் நனைந்த வண்ணமிருந்த என்னை, படைத்தலைவர் இந்த அறைக்குத்தான் தூக்கி வந்தார். இதே பஞ்சணையில் தான் படுக்க வைத்தார். யவன நாட்டு மதுவையும் புகட்டினார். என் தலைமயிரிழைகளைக் கோதி விட்டிருக்க வேண்டும். உணர்வு வந்தபின் அவை சீராக இருந்ததைப் பார்த்தேன். பிறகு ஆபத்து வந்தது அல்லி. என்னை அப்படியே கட்டித் தூக்கினார் படைத் தலைவர். இதோ இந்தக் கவசத்துக்குள் அடைத்தார்..." என்று சொல்லிக்கொண்டே போனவள் பேச்சை நிறுத்தி, அல்லியின் காதுக்கருகில் வந்து அல்லிக்கு மட்டும் கேட்கும்படி, "என்னைத் தூக்கி அந்தக் கவசத்துக்குள் அடைக்கும்போது எப்படியெல்லாம் தொட்டிருப்பாரோ அல்லி" என்று கூறிச் சிரித்தாள்.

அல்லி வேங்கையெனச் சீறி எழுந்து ராணியைப் பொசுக்கி விடுவதுபோல் பார்த்தாள். "ராணி! என்ன பேச்சு இது! பெண்களுக்கு நாணம் என்பது ஒன்று உண்டு" என்று சீற்றம் நிரம்பிய குரலில் பேசினாள்.

ராணியின் இதழ்களில் மோகனப் புன்னகையொன்று படர்ந்தது. "இதைத்தான் நானும் சொல்ல நினைத்தேன்" என்றாள் ராணி களுக்கென்று இன்பநகை நகைத்து.

"புரியவில்லை ராணி. புதிராயிருக்கிறது."

"புதிர் ஏதுமில்லை இதில்."

"விளக்கமாகச் சொல்லுங்கள்."

"பிறருக்குச் செய்யும் போதனையை நீயும் கையாள்வது நியாயம் என்று சொன்னேன்."

"எதைக் குறிப்பிடுகிறீர்கள்?"

"நாணத்தைப் பற்றித்தான்."

"என்ன அதற்கு?"

"என் நாணத்திற்குப் பழுது சொன்ன நீயும் படைத் தலைவருடன் அதிகமாக விளையாடாமலிருப்பது நல்லது என்று சொல்கிறேன்" என்று அழுத்தமும் அதிகாரமும் நிறைந்த குரலில் கூறினாள் ராணி.

அப்போதுதான் புரிந்தது அல்லிக்கு. ராணியின் கண் களை ஏறெடுத்து நோக்கினாள். கனல் கக்கிய அந்த நீலமணிக் கண்களில் காதலும் பொங்கி வழிந்துகொண்டிருந்ததைக் கண்டாள் அல்லி. 'ராணியும், படைத்தலைவரைக் காதலிக் கிறாள். மாரப்பவேள் மகளும் காதலிக்கிறாளே. படைத் தலைவர் மனம் எங்கிருக்கிறது' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டதன்றி, படைத் தலைவர் தன்னைத் தொட்டு விளையாடுவதை ராணி விரும்பவில்லையென்பதை யும் உணர்ந்ததால் நாணத்தால் முகம் சிவக்க, "நானும் படைத் தலைவரும்..." என்று இழுத்தாள்.

"அண்ணனும் தங்கையும்போல்" என்று ஏளனத்துடன் முடித்த ராணி, "அண்ணன் தங்கை, தந்தை பெண் இந்த உறவுகள் வரம்பு உடையவை அல்லி. ஆண் பெண் உறவில் சகல வரம்பையும் மீறுவது புருஷன் மனைவி உறவு ஒன்றுதான் என்று உங்கள் நாட்டு விதிகளே கூறுகின்றதாகக் கேள்வி" என்று சுட்டிக் காட்டினாள்.

அந்த இருபெண்களின் இந்தச் சம்பாஷணையின் விளைவாகப் பெரும் சங்கடமடைந்த இளஞ்செழியன் அறையில் சற்று அங்குமிங்கும் உலாவிக்கொண்டு காதில் எதுவும் விழாதது போலும், தீவிர சிந்தனையிலிருப்பது போலும் பாசாங்கு செய்து, "என்ன சொன்னாய் ராணி?" என்று திடீரென அவர்களை நோக்கித் திரும்பவே பெண்கள் இருவரும் தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்

கொண்டார்கள். ராணி வெகு விரைவில் சுயநிலைக்கு வந்து, "ஒன்றுமில்லை படைத் தலைவரே" என்றாள்.

"சரி, ராணி! மற்ற விஷயங்களைப் பேச அவகாசம் இருக்கிறது. ஆனால்..." என்று படைத்தலைவன் ஏதோ சொல்ல முற்பட்டதும் குறுக்கிட்ட ராணி, "முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். டைபீரியஸ் உங்களுக்கு விஷத்துளிகளைக் கொடுத்து மயக்கி யவன நாட்டுக்கு மரக் கலத்தில் அனுப்பிய பிறகு என்னிடம் சொன்னான்-நீங்கள் அடுத்த இரண்டு நாட்களில் வானுலகம் எய்திவிடுவீர்கள் என்று. உங்களைக் கொல்ல யவன மருத்துவனொருவனை ஏவியிருப்பதாகவும் கூறினான். அப்படியிருக்க நீங்கள் எப்படித் தப்பினீர்கள்" என்று கேட்டாள்.

"ஆண்டவன் ஒருவனை நம்புகிறாயா ராணி?" என்று வினவினான் படைத் தலைவன்.

"விதியை நம்புகிறேன்" என்றாள் தன் நம்பிக்கையைக் குரலில் காட்டி.

"பெயரில் என்ன இருக்கிறது ராணி? அப்படித்தான் வைத்துக்கொள். நீ விதி என்று சொல்கிறாய். நான் ஆண்டவன் என்று கூறுகிறேன். நாத்திகர்கள் இயற்கை என்கிறார்கள். பெயர்கள் பல உண்டு ராணி. ஆனால் சக்தி ஒன்றுதான் உண்டு. அந்தச் சக்தியால்தான் தப்பினேன். மனிதப் பிரயத் தனத்தால் பிறப்புமில்லை இறப்புமில்லை என்று எங்கள் சாத்திரங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. பிறப்பைப் பற்றி எனக்குத் தெரியாது ராணி. ஆனால் இறப்பைப் பற்றி நன்றாகத் தெரியும். என் அனுபவங்கள் அதைத் திட்டவட்ட மாகத் தெரிவித்துவிட்டன."

"என்ன தெரிவித்தன?"

"எந்த மனிதனும் ஆண்டவன் அளித்திருக்கும் ஆயுட் காலம் முடிந்தாலொழிய இறப்பதில்லையென்று. அதனால் தான் நான் சாகவில்லை ராணி. இல்லையேல் என் ஆயுள்

யவன மருத்துவன் கையில் முடிந்திருக்கும், சுறாக்களின் வாயில் முடிந்திருக்கும். அடிமைக் கப்பல் போரில் முடிந்திருக்கும். இது எதுவும் இல்லாவிட்டாலும் அந்த அரக்கன் இலி-ஆஸுவின் கரங்களில் முடிந்திருக்கும்..." என்று சொல்லி உணர்ச்சி வெள்ளத்தால் சற்றுப் பேச்சை நிறுத்தினான் இளஞ்செழியன்.

அல்லியின் விழிகள் ஆச்சரியத்தாலும் இளஞ்செழியன் பல ஆபத்துக்களிலிருந்து தப்பியதால் ஏற்பட்ட திகைப்பாலும் மலர்ந்தன. "யார் அவன் இலி-ஆஸு?" என்று கேட்டாள்.

"சாம்பிராணி நாட்டுத் தலைவன்."

"சாம்பிராணி நாடா!" என்றாள் மீண்டும் அல்லி ஆச்சரியத்துடன்.

ராணியின் விழிகளில் ஆச்சரியத்துக்குப் பதில் துயரம் மண்டிக் கிடந்தது. ஆகவே சட்டென்று நின்ற இடத்திலிருந்து திரும்பிய ராணி, "அல்லி! படைத் தலைவரை மேற்கொண்டு எதுவும் கேட்காதே. அவர் பிழைத்துவந்ததற்குப் பிரார்த்தனை செய்" என்று கூறிவிட்டுத் தானிருந்த இடத்தில் மண்டியிட்டுக் கண்களை மூடினாள். இலி-ஆஸுவின் பெயர் எதற்கும் அஞ்சாத ராணியின் இதயத்தில் பெரும் பயத்தை விளைவித்தது. 'அவனிடமிருந்து எப்படித் தப்பினார் படைத் தலைவர்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்ட ராணி, 'எப்படியோ தப்பினாரே அதுவரை நன்றி' என்று தன் தெய்வத்தைத் துதிக்க ஏதோ முணு முணுத்தாள்.

அல்லி இளஞ்செழியனை நோக்கி ராணியையும் நோக்கினாள். ராணியின் பளிங்கு முகத்தையும் பொன்னிறக் கொண்டையையும் சிறுத்த இடையையும் படைத்தலைவன் கண்கள் துழாவிக் கொண்டிருப்பதை அல்லி கவனித்தாள். ராணியின் எழிலுருவத்தைக் கவனிக்கக் கவனிக்க அவன் கண்களில் ஒரு சாந்தி நிலவுவதையும், லேசாகப் பார்வை மங்குவதையும் கண்ட அல்லி, 'இந்த மாயா தேவியின் வலையில்

படைத்தலைவர் பூரணமாக விழுந்து விட்டார்' என்றே தீர்மானித்தாள். ஆனால் ராணியின் முகத்தில் அவள் கண்கள் பதிந்தபோது படைத் தலைவன் மயக்கத்துக்குக் காரணமும் புரிந்தது அவளுக்கு.

யாருக்கும் மண்டியிட்டோ தலை வணங்கியோ பழக்கமில்லாத ராணி, அந்த அறையில் தங்கள் இருவருக்கும் எதிரில் அனாதைபோல் மண்டியிட்டுத் தலைவணங்கிக் கண்களை மூடியிருந்ததையும், ராணியின் முகத்தில் பரவியிருந்த பெரும் சாந்தியும் தெய்வீக ஒளியும் அவளை ஒரு தேவதையாக அடித்திருந்ததையும் கவனித்த அல்லி, 'பூவழகி மட்டும் படைத் தலைவன் இதயத்தில் முன்னதாகப் புகுந்திராவிட்டால் ராணி இளஞ்செழியன் இதயத்தில் நொடிப் பொழுதில் அரியணை அமைத்து ஏறி விடுவாள்' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டாள். படைத் தலைவனிடம் ராணிக்கிருந்த பரிபூரணக் காதலும், அந்தச் சமயத்தில் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

ராணியும் அல்லியும் ஒரே சமயத்தில்தான் கண்களைத் திறந்தார்கள். அப்பொழுது அவர்கள் கண்ணெதிரே இருந்தது படைத் தலைவன் உருவம் ஒன்று மட்டுமல்ல. படைத் தலைவனுக்குச் சற்றுப் பின்னால் இன்னொரு உருவமும் நின்றிருந்தது. அந்த மற்றொரு உருவத்தைக் கண்ட ராணி திக்பிரமையடைந்தாள். தான் காண்பது சொப்பனமா நிஜமா என்பதை நிர்ணயம் செய்துகொள்ள, தன் மலர்க் கரங்களால் மலர் விழிகளை ஒருமுறை நெருடியும் விட்டுக் கொண்டாள். அடுத்த விநாடி அந்த இன்னொரு உருவத்தின் அணைப்பிலிருந்தாள் ராணி. ராணியின் தழுவலில் திளைத்து நிலைத்து அந்தப் புது உருவமும் நின்றுவிட்டதைக் கவனித்த இளஞ்செழியன், அந்த அறையில் சிலைகள் இரண்டா மூன்றா என்று தீர்மானிக்க முடியாத நிலையை எய்தினான்.

94. கதையும் கனவும்

இலி-ஆஸுவின் பெயரைக் கேட்டதுமே இதயம் இடிந்து போய், படைத் தலைவன் தப்பி வந்ததற்குப் பிரார்த்தனை செய்ய அவன் பாதத்தடியிலேயே பளிங்குச் சிலையென மண்டியிட்டு நிலைத்து உட்கார்ந்து கண்களை மூடிய யவன ராணி நீண்ட நேரம் பிரார்த்தனைக்குப் பிறகு கண் விழித்ததையும், எதிரே யவன நாட்டுப் படைத் தலைவர்களின் சின்னங்களைத் தரித்த மற்றொரு உருவம் நிற்பதைக் கண்டு ஒரு வினாடி பிரமித்தாலும் அடுத்த வினாடி கண்களை நெருடிவிட்டுக் கொண்டு பிரமிப்பை உதறி மகிழ்ச்சியின் எல்லையை எய்தி உட்கார்ந்த நிலையிலிருந்து சரேலென எழுந்துவிட்டதையும், அதே சமயத்தில் புதிதாகத் தோன்றிய அந்த உருவமும் அவளை நோக்கிப் பாய்ந்து அவளை மார்புற அணைத்துக் கொண்டதையும் பார்த்த அல்லி, திரும்பத் திரும்ப அந்த அறையில் நிகழ்ந்த அதிசயங்களின் விளைவாகக் கற்சிலையெனக் கட்டிலில் உட்கார்ந்தேயிருந்தாள். அவள் சுரணை அவளுக்குத் திரும்பிய பின்பும்கூட, ராணி அந்த உருவத்தின் அணைப்பிலிருந்து விலகாதது மட்டுமின்றி, அந்தப் புது உருவம் அவளை அணைத்தபடியே நின்றிருந்ததைப் பார்த்தால், 'இருவருக்கும் நீண்ட நாள் உறவிருக்க வேண்டும்' என்று நினைத்த அல்லி, அவர்களையும் நோக்கி இளஞ்செழியனையும் நோக்கினாள். இளஞ்செழியன் முகம் மட்டும் எந்தவித மாறுதலையும் காட்டாமல் பழைய புன்முறுவலுடனேயே காட்சியளித்ததைக் கண்ட சோழ நாட்டின் பிற்கால ராணி, அந்த இன்னொரு படைத் தலைவரை வேண்டுமென்றே இளஞ்செழியன் அந்த அறைக்கு வரவழைத்திருக்கிறானென்பதை ஊகித்துக் கொண்டாலும், அதற்குக் காரணம் எதுவாயிருக்க முடியும் என்பது மட்டும் புரியாதால், பொறுத்துப் பார்ப்போம் என்று பேசாமலே இருந்தாள். வேவுத் தொழிலில் பிரும்மானந்தரால் நன்றாகப் பழக்கப் பட்டிருந்ததன் விளைவாக எவரையும் பார்த்த மாத்திரத்தில்

எடை போடக்கூடிய திறன் வாய்ந்த சோழ நாட்டின் பிற்கால ராணி, வந்த உருவத்தின் குழல்கள் அரபு நாட்டுச் சிவப்புத் துணியால் எடுத்துக் கட்டப்பட்டுப் பக்கவாட்டில் முடிச்சுப் போடப்பட்டிருந்ததைப் பார்த்து, வந்ததும் ஒரு பெண்தான் என்பதை முகபாவத்திலிருந்தே புரிந்துகொண்டு, யவனர் மரக்கலங்களுக்கு மற்றொரு 'தலைவன்' இல்லையென்றும், இருப்பது 'தலைவி'யே என்றும் ஒருமுறைக்கு இருமுறை தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். அந்தத் தீர்மானத்தை ஆமோதித்து முத்திரை வைப்பதுபோல் யவன ராணியின் செவ்விய இதழ்கள் அசைந்து ஏதோ மந்திரங்களை உச்சரிப்பதுபோல், "அலீமா! அலீமா!" என்ற சொற்களை ஆசையுடன் உதிர்த்தன.

பூம்புகாருக்கு வந்த நாள் முதல் ராணியைக் காணத் துடித்தும் முடியாமையால், மனம் புழுங்கிக் கிடந்த அலீமாவும், அன்று திடீரென ராணியைச் சந்தித்ததன் விளைவாக உணர்ச்சிப் பிரவாகத்தில் திளைத்து, "ராணி! என் ராணி!" என்று இருமுறை சற்று உரக்கவே கதறி, ராணியை இறுக அணைத்துப் பின்பு அவள் அடிகளில் விழக் குனிந்தாள். "வேண்டாம் அலீமா, வேண்டாம்!" என்று குழைந்த குரலில் கூறிய ராணி, அவள் இடையைப் பற்றி கீழே பணியவிடாமல் தடுத்தாள். பிறகு அவளைச் சற்று எட்ட நிற்க வைத்து மீண்டும் ஒருமுறை பார்த்து மகிழ்ச்சிப் பெருமூச்சும் விட்டு, "அலீமா! நீதானா? உண்மையாக நீதானா?" என்று திரும்பத் திரும்ப வினவவும் செய்தாள்.

அலீமாவின் உணர்ச்சிகளும் கரை கடந்துவிட்டதால், அவள் கண்களில் நீர் எழும்பி அருவியென அவள் அழகிய கன்னங்களில் உருண்டோடியது. "ஆம் ராணி! நான்தான், நானேதான்" என்றாள் அலீமா, மெல்லக் கண்ணீருடன் சிரிப்பையும் கலந்துகொண்டு.

கண்ணீரும், சிரிப்பும் கலந்து உறவாடிய அந்த நிகழ்ச்சி எந்தப் பெண்ணுக்கும் ஒரு விந்தையில்லை என்றாலும், ராணிக்கு அந்தச் சமயத்தில் பெரும் விந்தையாயிருக்கவே

அலீமாவின் கண்களைத் தன் அழகிய கரத்தால் துடைத்து "அலீமா! நீ இங்கு வந்து நாட்கள் எத்தனை இருக்கும்?" என்று வினவினாள், அவள் துக்கத்தைத் துடைக்கும் எண்ணத்துடன்.

"ஒரு மாத காலமிருக்கும் ராணி" என்றாள் அலீமா, சிரிப்பா அழுகையா என்று நிர்ணயிக்க முடியாத குரலில்.

ராணியின் முகத்தில் பிரமிப்பு மெல்ல மெல்லக் கலைந்து ஆச்சரியம் தட்டியது. "ஒருமாத காலமா அலீமா?" என்று கேட்டாள் ராணி, ஆச்சரியம் குரலிலும் பிரதிபலிக்க.

"ஆம் ராணி" என்றாள் அலீமா.

"இங்கு வந்ததும் என்னைப் பார்க்க ஒரு மாத காலமா ஆயிற்று உனக்கு?" என்று வினவிய ராணியின் குரலில் சற்று வருத்தமும் தொனித்தது.

அலீமாவின் கண்கள் ராணியின் முகத்தை ஒருமுறை வலம் வந்தன. "கோபிக்காதீர்கள் ராணி. உங்களைப் பார்க்கக் கால தாமதம் ஆனது உண்மைதான். ஆனால், அதற்குப் பொறுப்பாளி நானல்ல" என்றாள் அலீமா.

"வேறு யார் பொறுப்பாளி?" என்று ராணி கேட்டாள், கோபம் சற்றுக் குரலில் தொனிக்க.

அலீமா தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு கண்களிலிருந்த நீரையும் துடைத்துக் கொண்டாள். பிறகு திட்டமான குரலில் சொன்னாள் அலீமா, "படைத் தலைவர் தான் காரணம் ராணி! அவர் அனுமதியில்லாமல் தங்களைப் பார்க்கக் கூடாது என்று கூறிவிட்டார். அவர் ஆணையின்படி நடந்தேன்" என்று.

"அவர் ஆணைக்கு நீ கீழ்ப்படிய வேண்டிய காரணம்?" என்று கேட்டாள் ராணி.

உணர்ச்சிகள் பூரணமாகச் சுயநிலைக்குத் திரும்பி விட்டதால் லேசாக நகைத்தாள் அலீமா. "அவர் ஆணைக்குக் கீழ்ப்படிய வேண்டிய காரணங்கள் பல இருக்கின்றன ராணி" என்றும் கூறினாள் அந்த அரபு நாட்டு அழகி.

"காரணங்கள் பல இருக்கின்றனவா? அத்தனை நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுவிட்டதா உங்களிருவருக்கும்?

ஏதோ அந்தக் காரணங்களில் ஓரிரண்டை நான் அறியலாமா?" என்று ராணி கேட்டாள், குரலில் சற்றுப் பொறாமையும், சந்தேகமும், இகழ்ச்சியும் கலந்து ஒலிக்க.

"ஓரிரண்டென்ன ராணி? எல்லாக் காரணங்களையும் நீங்கள் அறியலாம். காரணங்களைச் சொல்லு முன்பு நான் கேட்கும் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். நீங்கள் எதற்காகச் சற்று முன்பு படைத் தலைவர் எதிரில் மண்டியிட்டு அடிமைபோல் உட்கார்ந்திருந்தீர்கள்?" என்று வினவினாள் அலீமா.

ராணி சற்று நிமிர்ந்து கம்பீரமாக அலீமாவைப் பார்த்தாள். "படைத் தலைவர் முன்பு மண்டியிடவில்லை அலீமா. ஆண்டவன் முன்பு மண்டியிட்டேன்" என்றாள் முகத்தில் தாண்டவமாடிய கம்பீரத்தைக் குரலிலும் காட்டி.

"ஆண்டவன் முன்பு எதற்காக மண்டியிட்டீர்கள்?"

"பிரார்த்தனை செய்ய!"

"எதற்காகப் பிரார்த்தனை?"

"படைத் தலைவரை இலி-ஆஸுவிடமிருந்து காப்பாற்றியதற்காக."

"ஓகோ! அத்தனை நெருங்கிய தொடர்பு உண்டா உங்களிருவருக்கும்" என்று சற்று முன்பு ராணி சொன்ன வார்த்தைகளைத் திருப்பிச் சொல்லிய அலீமா, சற்றுப் பெரிதாகவே நகைத்தாள்.

"அலீமா!" எச்சரிக்கையுடனும், அதட்டலாகவும் எழுந்தது ராணியின் குரல்.

அலீமா சிரிப்பை நிறுத்தி ராணியை ஏறெடுத்து நோக்கினாள். ராணியின் நீலமணிக் கண்களும், அலீமாவின் கருவிழிகளுடன் நீண்ட நேரம் கலந்தன. இருவர் இதய உணர்ச்சிகளும் கண்கள் மூலம் பொங்கி வழிந்ததால் ஒருவரை யொருவர் நன்றாகப் புரிந்து கொண்டார்கள். படைத் தலைவனிடம் மனத்தைப் பறிகொடுத்து அவனை எப்படியும் அடையாலமென்று நம்பிக்கையுடனிருந்த ராணியும், அவனைக் காதலித்ததாலும் அவன் மனம் வேறொரு

பெண்ணிடம் லயித்திருக்கிறதென்பதைச் சாம்பிராணி நாட்டிலேயே புரிந்து கொண்ட அலீமாவும், ஒருவரையொருவர் புரிந்துகொண்ட காரணத்தால் இருவர் நிலையும் சிறிது சங்கடத்துக்குள்ளானதையும் மௌனமாய் இருந்து கவனித்த அல்லி, 'ஓகோ, வெளிநாட்டிலும் படைத் தலைவருக்கு ஒருத்தி ஏற்பட்டாளா? சரி சரி, பூவழகிக்குப் போட்டி பிரதி தினமும் பலமாகிறது' என்று நினைத்துப் புன்முறுவல் செய்தாலும், அந்த அறையில் நடக்கும் நாடகம் எந்தத் திசையில் செல்கிறதென்பதைப் பார்க்கும் எண்ணத்துடன் அந்த இரு பெண்களின் சம்பாஷணையில் குறுக்கிடாமல் மௌனமாகவே இருந்தாள்.

அந்த இருவரில் முதன்முதலாகக் குழப்பத்தைத் தவிர்த்துக் கொண்ட அலீமா ராணியை நோக்கிச் சொன்னாள்: "விளையாட்டாகப் பேசியதற்கு மன்னிக்க வேண்டும் ராணி. பயங்கர மனிதனான இலி-ஆஸுவின் பெயரைக் கேட்டதுமே நீங்கள் பிரார்த்தனை செய்ய மண்டியிட்டீர்கள். அப்படியிருக்க அந்த இலி-ஆஸுவிடமிருந்து என்னைக் காப்பாற்றிய படைத் தலைவரிடம் நான் நன்றியுடையவளாயிருப்பதில் வியப்பு என்ன இருக்கிறது? நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். இலி-ஆஸுவிடம் சிக்கியவர்களில் இதுவரை யாராவது சொந்த நாடு திரும்பியதுண்டா? அப்படி இலி-ஆஸுவிடம் மட்டுமன்றி, அவன் மதகுருவிடமும் சிக்கியவர்கள் சுயமதத்துடனும் உயிருடனும் ஊர் திரும்ப முடியுமா? அறிவாளிகள் பலரை நான் பார்த்திருக்கிறேன் ராணி. நீங்களும் பார்த்திருக்கலாம். ஆனால் படைத் தலைவரைப் போல் கூரிய அறிவு படைத்த தலைவரை நாம் யாருமே பார்த்திருக்க முடியாது. அதுவும் மதம் மாறுவதாக அவர் மதகுருவைக் கப்பலுக்கு அழைத்து வந்து மதகுருவின் கண்களில் மண்ணைத் தூவியது யாரும் நம்பத்தகாத பெரும் வீர காவியம். மனித யுக்தியின் எல்லையெனப் பிற்காலம் கொண்டாடும் இணையற்ற சம்பவம் அது..."

இந்த இடத்தில் அலீமா உணர்ச்சிப் பெருக்கால் பேச்சைச் சிறிது நிறுத்தினாள். பிறகு இரண்டடிகள் அந்த அறையில் இப்படியும் அப்படியும் எடுத்து வைத்தாள். மேற்கொண்டு பூமியைப் பார்த்தபடியே சொப்பனத்தில் பேசுவதைப்போல் பேசினாள். "மதகுருவின் கண்களில் மண்ணைத் தூவிய பிறகு என்னையே கொள்ளை மரக்கலத்தின் தலைவியாக்கி அடுலீஸுக்குக் கப்பலைச் செலுத்தச் சொன்னார் படைத் தலைவர். அடுலீஸுக்குப் போகும் வழியில் அவர் என் குருநாதரான டைபீரியஸின் வைரியென்று நினைத்து அவரை அழிக்கவும் சதி செய்தேன். எந்த யவன மருத்துவனால் அவர் தப்பினாரோ, அதே மருத்துவன் அவரை அழிக்க முன்வந்தான். அப்பொழுதுதான் விளக்கினார் படைத் தலைவர், டைபீரியஸ் தங்களைச் சிறை வைத்திருப்பதாக. முதலில் நான் அதை நம்பவில்லை ராணி. தமிழகம் சேர்ந்தால் அதை நிரூபிப்பதாகக் கூறினார். தான் சொல்வது தவறாயிருந்தால், டைபீரியஸிடம் தம்மை ஒப்புவித்துவிடும் உரிமையை எனக்களிப்பதாகப் பிரமாணமும் செய்தார். ஆகவே என் சதியை நிறுத்தினேன். தங்கள் சகோதரரிடம் இவரை அறிமுகப்படுத்தினேன்."

ராணியின் நீலமணிக் கண்கள் ஒரு வினாடி இளஞ் செழியனை நோக்கி உயர்ந்தன. "என் சகோதரனைச் சந்தித்தீர்களா?" என்று கேட்டாள் ராணி, சகோதரனை நினைத்துக் கொண்டதால் குரல் அமுதமென இன்ப ஒலி பாய்ச்ச.

படைத் தலைவன் பதிலேதும் சொல்லவில்லை. 'சந்தித்தேன்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தான்.

அலீமா கதையைத் தொடர்ந்தாள்: "அடுலீஸிலும் தங்கள் சகோதரரின் பெருமாளிகையிலும், படைத் தலைவருக்கு ஆபத்து காத்திருந்தது ராணி. யவன மருத்துவன் பந்தய புரவிகளொன்றின் காலொன்றில் பச்சிலைச் சாறு தடவி சரியான சமயத்தில் அது நொண்டும்படி ஏற்பாடு செய்திருந்தான். அப்படிப் புரவி நொண்டி, பந்தயத்தில், படைத்

தலைவர் தோற்றிருந்தால்..." அலீமா வாசகத்தை முடிக்காமல் விட்டாள்.

ராணியின் உடல் லேசாக நடுங்கியது. "நமது வழக்கப் படி படைத் தலைவர் சிங்கங்களுக்கு இரையாகியிருப்பார்" என்றாள் குரல் சற்று நடுங்க.

"ஆம் ராணி! அப்படித்தான் கதை முடிந்திருக்கும். ஆனால் சிங்கத்துக்கு இரையானது அந்தச் சதிகார மருத்துவன்தான். குதிரையின் காலுக்கு அவனிழைத்த தீங்கை எப்படியோ அறிந்த படைத் தலைவர் குதிரைகளைச் சமயத்தில் மாற்றிவிட்டார். உண்மையை அறிந்த உங்கள் சகோதரர் மருத்துவனைச் சிங்கங்களிடம் தள்ளிவிட்டார்" என்று அலீமா கூறினாள்.

யவன மருத்துவனுக்குக் கிடைத்த அந்தப் பயங்கர மரணத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாத ராணி, "அது கிடக்கட்டும் அலீமா! ரதப் போட்டி என்னவாயிற்று?" என்று கேட்டாள்.

அலீமாவின் நினைப்பு மீண்டும் அடுலீஸுக்குப் பறந்து விட்டதை அவள் கண்கள் சுட்டிக் காட்டின. "என்ன ஆயிற்றென்றா கேட்கிறீர்கள்? அதை அடுலீஸுக்குச் சென்று இன்னும் ஐம்பது வருஷம் கழித்துக் கேளுங்கள். அப் பொழுதும் மக்கள் சொல்வார்கள். 'யாரோ எதிர் பாராத ஒரு தமிழன், எங்கிருந்தோ வந்தான்; புரவிகளா புயற்காற்றா என்பது தெரியாதபடி அடுலீஸ் பந்தய வெளியில் பறக்கவிட் டான்! யவன, அராபிய, எகிப்திய தங்கங்களைக் குவியலாகக் கொண்டு போய்விட்டான்' என்று மக்கள் கதை போல் சொல்வார்கள். அவர்களுக்குக் கதை அது. ஆனால், எனக்கு அது கனவு போலிருக்கிறது ராணி. அந்தப் பந்தய வெளியில் லட்சக்கணக்கான மக்களின் ஆரவாரத்தைக் கேட்டேன். வெறி பிடித்தவர்கள் கைகளை ஆட்டி ஆர்ப்பரித்ததைக் கண்டேன். கடைசியில் அந்தப் பொன் மூட்டையை அவிழ்த்து அத்தனை மக்களின் எதிரில் என் கால்களில் கொட்டினார் படைத்தலைவர். பிறகு என்னால் எதையும்

பார்க்க முடியவில்லை ராணி. என் கால்களில் பொற்குவியல். பக்கத்தில் யவனர்களின் பட்டத்து இளவரசர்! எதிரே அன்றைய மாவீரர் படைத் தலைவர்! சுற்றிலும் ஜன சமுத்திரம். எனக்கு எதுவுமே விளங்கவில்லை. 'அலீமா' என்று என்னை யாரோ அழைத்ததால் பெயரை அறிந்து கொண்ட அந்த ஜன சமுத்திரம், 'அலீமா, அலீமா!' என்று மகிழ்ச்சிக் கோஷத்தைக் கிளப்பியது. எந்தப் பெண்ணுக்கும் கிடைக்காத அந்த மகோன்னதப் பதவியைத் தாங்க முடியாமல் நான் மூர்ச்சையானேன்" என்று சொல்லி நிறுத்தினாள் அலீமா.

யவன ராணியின் முகத்தில் பொறாமை கொழுந்து விட்டது. அடுலீஸ் ரதப்போட்டியில் வெற்றி கொள்பவனின் காதலிக்குக் கிடைக்கும் பாராட்டு சக்ரவர்த்தினிக்குக்கூடக் கிடைக்காதென்பதை அறிந்திருந்த ராணி, 'அங்கு அலீமாவுக்குப் பதில் தான் இருந்திருந்தால் எத்தனை பெருமை கிடைத்திருக்கும் தனக்கு' என்று எண்ணிப் பெரு மூச்செறிந்து, "பிறகு?" என்று கேட்டாள்.

"பிறகு அந்தப் பொன்னைக் கொண்டு மரக்கலங்களை வாங்கினோம். மாலுமிகளை அமர்த்தினோம். இல்லாவிடில் இந்த யவன மரக்கலங்கள் ஏது? நான்கு மரக்கலங்களை அடுலீஸில் வாங்கினோம் ராணி, இரண்டு மரக்கலங்களை இலி-ஆஸுவிடமிருந்து கைப்பற்றினோம்" என்றாள் அலீமா.

"என்ன, இலி-ஆஸுவிடமிருந்து மரக்கலங்களைக் கைப்பற்றினீர்களா?" என்று வினவினாள் ராணி.

"ஆம் ராணி! மதகுருவையும் தன்னையும் ஏமாற்றிச் சென்ற படைத் தலைவரைப் பிடித்து, சாம்பிராணிக் காட்டுக்கு அனுப்ப இலி-ஆஸு தீர்மானித்திருக்க வேண்டும். தமிழகத்துக்கு நாங்கள் வரும்போது யூதெமான் முனையை திரும்பியதும் எங்களை மடக்கச் சில மரக்கலங்களைத் தயாராக வைத்திருந்தான் இலி-ஆஸு. ஆனால் அவனுக்கு இப்பொழுது புரிந்திருக்க வேண்டும், படைத் தலைவர் கடற் போரில் எத்தனை வல்லவர் என்பது. யூதெமான் முனையில் காற்று அதிகமிருந்ததால் எதிரி மரக்கலங்கள் பாய் விரித்து

வந்தன. இரண்டு மரக்கலங்களின் பாய்களைத் தூரத்தி லிருந்தே சுழற்பந்தங்களை வீசிக் கொளுத்தினோம். மற்ற இரண்டை வெற்றி கொண்டு எங்கள் மாலுமிகளை விட்டு நடத்திக் கொண்டு வந்தோம்" என்றாள் அலீமா.

"எத்தனை அபாயம்?" என்றாள் ராணி.

"ஆம் ராணி! ஒவ்வொரு அபாயத்திலும் படைத் தலைவர் லாபமடைந்திருக்கிறார். இல்லாவிட்டால் எதிர் பாராதவிதமாகச் சேர நாட்டு மரக்கலங்கள் இரண்டு இவரிடம் சிக்குமா?" என்று புதிர் போட்டாள் அலீமா.

"சேரநாட்டு மரக்கலங்களா!" என்று கேட்டாள் ராணி.

"ஆம் ராணி! சேர நாட்டுப் போர்க் கப்பல்கள் இரண்டு, குமரிமுனை திரும்புகையில் எங்களைக் கொள்ளைக் காரர்கள் என்று நினைத்துத் துரத்தின. எங்களுக்கும் அந்த மரக்கலங்களுக்கும் தொலை தூரமிருந்தது. இஷ்டப்பட்டால் நாங்கள் தப்பியிருக்கலாம். ஆனால் படைத்தலைவர் வேண்டுமென்றே எங்கள் மரக்கலங்களைத் திருப்பி அவற்றை மடக்கினார். போர் சிறிது நேரமே நிகழ்ந்தது. படைத் தலைவர் போர் முறையும் விசித்திரமாய் இருந்தது. அந்த மரக்கலங்கள் இரண்டே நாழிகையில் எங்கள் கைவசமாயின. ஆக எட்டு மரக்கலங்களுடன் புகாரை அடைந்தோம். அத்துடன் போர் நின்றது. ராணி, ராஜதந்திரம் துவங்கியது..."

"சொல் அலீமா!"

"டைபீரியஸைச் சந்திக்க என்னை மட்டும் அனுப்பி னார் படைத் தலைவர். தங்கள் சகோதரர் டைபீரியஸுக்கு உதவ மரக்கலங்களை அனுப்பியதாகச் சொல்லச் சொன்னார். உங்கள் நிலையையும் கவனிக்கச் சொன்னார். விசாரித்ததில் நீங்கள் சுதந்திரமிழந்து கிடப்பதை அறிந்தேன். என்னைக் காப்பாற்றிச் சொந்தக் குழந்தை போல் வளர்த்த யவனராஜ குடும்பத்தின் ராணியைச் சிறைசெய்ய முயன்ற குருநாதரைக் கொன்றுவிடவும் நினைத்தேன். படைத் தலைவர் தடுத்தார். டைபீரியஸ் ஒடுங்கி ராணி மறுபடியும் ராணியாக உலவும் நாள் வருமென்று உறுதி கூறினார். நான் அவர் சொற்படி நடப்பதாக வாக்குக் கொடுத்தேன். ஆகவே அவர் கேட்டுக் கொண்டபடி டைபீரியஸிடம் கூறினேன்."

"என்ன கேட்டுக் கொண்டார்?"

"புகாரில் போர் மூளுமுன்பு தம்மை டைபீரியஸ் சந்திக்கக்கூடாதென்று கூறினார்."

"டைபீரியஸ் ஒப்புக் கொண்டானா அதற்கு?"

"உடனே ஒப்புக் கொண்டார்."

"மரக்கலத்தின் மற்றொரு தலைவன் முகக் கவசத்துடன் புகாரில் எங்கும் உலாவ அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளச் சொன்னார்."

"அதற்கும் டைபீரியஸ் ஒப்புக் கொண்டானல்லவா?"

"ஒப்புக் கொண்டார்..."

"அங்குதானிருக்கிறது ஆபத்து அலீமா" என்றாள் ராணி சற்றுப் பயத்துடன்.

அதுவரை மௌனமாயிருந்த படைத் தலைவன் சம்பாஷணையில் புகுந்து, "அது எனக்குத் தெரியும் ராணி. அந்த ஆபத்தை நான் வேண்டுமென்றே வரவழைத்துக் கொண்டேன்" என்றான்.

"காரணம்?" இதைக் கேட்ட ராணியின் குரல் வறண்டு கிடந்தது.

காரணத்தையும், தன் திட்டங்களையும் விவரிக்கத் தொடங்கினான் படைத் தலைவன். அவன் விவரிக்க விவரிக்க ராணி மட்டுமல்ல, அலீமா மட்டுமல்ல, அல்லியும் ஆச்சரியத்தின் எல்லையை எய்தினாள். புகாரின் பிற்காலம், ஏன் தமிழ் நாட்டின் பிற்காலம் முழுவதுமே அவன் திட்டங் களின் வெற்றியைப் பொறுத்திருப்பதை அந்த மூன்று மாதர்களும் உணர்ந்தார்கள். அபாயமான அவன் திட்டங்கள் நிறைவேறுமா அல்லது கதையும் கனவுமாக முடியுமா என்பதை மட்டும் அம்மூவராலும் நிர்ணயிக்க முடியவில்லை. ஒரு உண்மை மட்டும் அம் மூவருக்கும் புலனாகியது. வெகு சீக்கிரம் தமிழகத்தில் பெரும் போர் மூளும் என்ற உண்மைதான் அது.

95. விளக்கம்

ராஜதந்திரத்தாலும், போர்த் தந்திரத்தாலும் இணையற்றவனும், யவன மகாவீரர்களில் சிறந்தவனெனப் பெயர் பெற்றவனுமான டைபீரியஸின் கண்களைத் தன்மீது திருப்பியதற்கு உண்டான காரணங்களைப் படைத் தலைவன் கூற முற்படு முன்பு அந்த அறையிலிருந்த வஞ்சியர் மூவரில் ராணியும், அலீமாவும் ஓரளவு சுய நிலையை அடைந்து விட்டார்களென்றாலும், அல்லியின் மனத்தில் மட்டும் போதிய தெளிவு ஏற்படாமையால், படைத் தலைவனின் செயல்கள் பலவற்றுக்கு விடை கிடைக்காமல் அவள் குழம்பியே இருந்தாள். அலீமாவுக்கும், ராணிக்கும் ஏற்பட்ட சம்பாஷணையிலிருந்து படைத் தலைவன் மனிதர் யாரும் சாதாரணமாக மீள முடியாத பல ஆபத்துக்களில் சிக்கி மீண்டிருக்கிறானென்பதையும், தமிழகத்தைப் போலவே வெளி நாடுகளிலும் அவன் வீரச் செயல்கள் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றன என்பதையும் அவள் புரிந்து கொண்டாலும், அந்த நாடுகளையும் மக்களையும் பார்க்காத காரணத்தால் அல்லிக்குப் படைத் தலைவன் அடைந்த ஆபத்தின் விரிவும் ஆழமும் போதிய அளவு விளங்காமலே இருந்தபடியால், அவற்றைப் பற்றி அவள் அதிகமாகச் சிந்திக்காமல் படைத் தலைவன் யவன நாட்டு மரக்கலத் தலைவனாகவும், டைபீரியஸின் கையாள் போலவும் வேடம்போட வேண்டிய அவசியமென்ன என்பதை மட்டுமே அதிகமாகச் சிந்திக்கலானாள். மரக்கலத்தில் தான் யாரென்பதை உணர்ந்தவுடனேயே படைத் தலைவன் எதற்காகத் தன்னிடம் உண்மையைக் கூறாமல், தன்னைக் கண்களையும் கைகளையும் கட்டிப் படகில் தள்ளி அந்த மாளிகைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் யோசித்தாள். அப்படிக் கொண்டு வந்தவன் படகு கடற்கரையை அடைந்ததும் தன்னை நடத்தி அழைத்து வராமல் எதற்காகத் தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு வர வேண்டுமென்றும், எதற்காகப் போர்வையால் தன்னை மூட

வேண்டும் என்றும் நினைத்துப் பார்த்தாள். தவிர, தமிழகம் திரும்பியுள்ள படைத் தலைவன் ஏன் வாணகரைக்கு வராமலும் தன் வரவை பிரும்மானந்தருக்குக்கூடத் தெரியாமலும் வைத்திருக்கிறான் என்பதையும் எண்ணிப் பார்த்தாள். எந்தக் கேள்விக்கும் விடை கிடைக்காது போகவே, படைத் தலைவனை நோக்கி ஒருமுறை சந்தேகங்கள் மண்டிக் கிடந்த தன் அழகிய விழிகளை உயர்த்தினாள்.

அந்த வஞ்சியின் நெஞ்சத்திலே கிளைத்துப் புரண்டு கொண்டிருந்த சந்தேக அலைகளை அவள் பார்வையிலிருந்தே ஊகித்துக் கொண்ட படைத் தலைவன், தான் விளக்க இருந்த விஷயங்களைச் சற்று நிறுத்தி, "கேள் அல்லி! தயங்காதே, கேள்!" என்றான் அவளை நோக்கி.

தன் மனத்தின் சந்தேகங்களை அவன் ஊகித்துவிட்டதால் சற்றே சங்கடமடைந்த அல்லி, "எதைக் கேட்கட்டும் படைத் தலைவரே?" என்று தனக்குக் கேட்பதற்கு எதுவுமே இல்லைபோல் பதில் சொன்னாள்.

ஈட்டியிலும் கூர்மையான படைத் தலைவனின் கண்கள் மற்ற இரு மாதரையும் நோக்கிவிட்டு மீண்டும் அல்லியின் மீது திடமாக நிலைத்தன. "சந்தேகங்களைக் கேள் அல்லி. இப்பொழுது நாம் தமிழகத்தின் சரித்திரத்தில் மிகப் பயங்கரமான கட்டத்திலிருக்கிறோம். ஆகவே பரஸ்பரம் எந்தவிதச் சந்தேகமுமின்றி நாம் செயலில் இறங்க வேண்டிய காலம் இது. நம்மில் யாராவது ஒருவர் மற்றொருவர் செயலிலோ, இதய சுத்தத்திலோ அவநம்பிக்கை கொண்டாலும் கடமையிலிருந்து அணுவளவு பிறழ்ந்தாலும் தமிழகத்தின் கதி அதோகதியாகிவிடும். ஆகவே, சந்தேகத்தைக் கிளைக்க விடாதே. கேட்பதை வெளிப்படையாகத் திட்டமாகக் கேள்" என்று உறுதியுடன் பேசினான்.

அதுவரை உட்கார்ந்து மஞ்சத்திலிருந்து எழுந்த அல்லி, சற்று நிமிர்ந்து மிகவும் கம்பீரமாக நின்றுகொண்டு முதல் கேள்வியைத் திடமாகவும் வேகமாகவும் வீசினாள்: "என்னை மரக்கலத்தின் தளத்தில் பார்த்தவுடனேயே நான் யாரென்

பதைப் புரிந்து கொண்டீர்களா இல்லையா?" ஏதோ பெரும் குற்றம் சாட்டுபவளைப்போல் கேட்டாள் அல்லி.

படைத் தலைவன் பதில் சர்வ சாதாரணமாக வந்தது. "புரிந்துகொண்டேன் என்பதைத்தான் மரக்கலத்தின் அறையிலேயே கூறினேனே?"

"தெரிந்தும் எதற்காக என்னிடம் நீங்கள் யாரென்பதை மறைத்தீர்கள்? எதற்காகத் தலைமறைவாய்க் கால்களை மட்டும் நீட்டி உட்கார்ந்தீர்கள்?" என்று பிறந்தது அல்லியின் இரண்டாவது கேள்வி.

"சோழ நாட்டின் பிற்கால ராணிக்கு எதிரில் கால்களை நீட்டி உட்கார்ந்தது பிசகுதான். ஆனால், அதற்குத்தான் போதிய தண்டனை அளித்து விட்டீர்களே?" என்றான் படைத் தலைவன்.

"மரியாதை வேண்டாம். தண்டனை அளித்து விட்டாயே என்று சொன்னால் போதும்" என்று அதற்கும் கடிந்து கொண்ட அல்லி, "தண்டனையாம் தண்டனை! தண்டனை அளித்தது நீங்களா, நானா? நானா உங்கள் கைகளையும், கண்களையும் கட்டினேன்?" என்றும் சற்று உஷ்ணத்துடன் கேட்டாள்.

"நான் உன் கைகளையும், கண்களையும் கட்டினேனே ஒழிய, உன் நாவைக் கட்டவில்லையே அல்லி? ஆனால் பெண்களின் நாவைக் கட்ட யாரால் முடியும்?" என்று சொல்லிப் புன்முறுவல் செய்தான் படைத் தலைவன்.

"நகைச்சுவைக்கு இது சமயமல்ல" என்றாள் அல்லி.

"அந்தச் சுவையை இந்தச் சந்தர்ப்பத்தில் காட்ட நானும் முற்படவில்லை அல்லி. உன் நாவை நான் கட்டாதது மட்டுமல்ல கட்ட முற்படவுமில்லை. அந்த அறையில் என்னென்ன கூறினாய், எண்ணிப் பார். என்னைத் தமிழகத்தின் துரோகி என்றாய், கோடரிக் காம்பென்றாய், இருங்கோவேளையும், பதினைந்து வேளிர்களையும் எனக்கு உவமை காட்டினாய். இந்தச் சொற்களைக் கேட்பதைவிட எனக்கு வேறு தண்டனை வேண்டுமென்று நினைக்கிறாயா அல்லி? உன் ஒவ்வொரு

சொல்லும் என் இதயத்தில் கூரிய வேல்களெனப் பாய்ந்ததை நீ அறிவாயா அல்லி! மன்னர் கரிகாலர் எதிரிகளை முறியடித்து நீ சோழர் அரியணையில் அமரும் காலத்தில் என் தலையைச் சீவ உத்தரவிட்டாலும், அந்தத் தண்டனை மரக்கலத்தின் அறையில் உன் சொற்கள் அளித்த வேதனையைவிட அதிகம் அளிக்காது. ஆனால் அத்தனை நீ சொல்லியும் நான் யாரென்பதை வெளிப்படுத்தவில்லை. தவிர, நீ சொன்னதை என் மாலுமிகள் நம்ப வேண்டுமென்றும் நினைத்தேன். மரக்கலத்தின் என் அறைக் கதவுக்கு வெளியே இரு மாலுமிகள் சதா காவல் புரிவது உனக்குத் தெரியுமா? தெரிந்திருக்க முடியாது. நீ சொல்வதெல்லாம் அவர்கள் காதில் விழட்டும் என்றுதான் உன்னை இஷ்டப்படி பேசவிட்டேன். அவர்களில் சிலருக்கு நான் சோழநாட்டின் உபதலைவன் என்பது தெரியும். என் மரக்கலங்களில் இருக்கும் மாலுமிகள் பல நாட்டவர், பல தரத்தவர் அல்லி. அடுலீஸில் ராணியின் சகோதரன் கொடுத்த யவனர்கள் இருக்கிறார்கள். அராபியர் இருக்கிறார்கள், அடுலீஸில் நாங்கள் பணம் கொடுத்துத் திரட்டிய எகிப்தியர் இருக்கிறார்கள், சில கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள், அடிமைகள் இருக்கிறார்கள். இப்படியிருக்கும் இந்தக் கதம்பக் கூட்டத்திலே எந்தச் சமயத்தில் யார் எப்படித் திரும்புவார்கள் என்று சொல்ல முடியாது....."

அல்லி மெள்ள மெள்ள உண்மையைப் புரிந்துகொண்டு சாந்தியால் பெருமூச்சு விட்டாள். அந்தச் சாந்திக்கு அடையாளமாக, "உம்" என்ற ஒலியும் அவளிடமிருந்து எழுந்தது.

படைத் தலைவன் மேலும் தொடர்ந்து சொன்னான்: "பலதரப்பட்டவர்களும் வாழ்க்கையில் எதற்கும் அஞ்சாதவர்களும் பணத்தை ஒன்றையே குறிக்கோளாக உடையவர்களுமான இந்தக் கதம்பக் கூட்டத்தில் யார் எந்தச் சமயத்தில் எப்படித் திரும்புவார்கள் என்று கூற முடியாது. ஆகவே, இவர்களில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் ஏற்படாமல் அலுவல்களைச் செய்யவேண்டியிருக்கிறது. அடுலீஸில் நான் ராணியின் சகோதரரிடம் ஆள் திரட்டியபோதுகூட,

டைபீரியஸை எதிர்ப்பதாக உத்தேசமிருப்பதாகவோ, யவன அரசை இங்கு நிலைக்க விடாதிருப்பதே என் உத்தேசமென்றோ சொல்லவில்லை. ராணிக்கு உதவுவது ஒன்று மட்டுமே என் குறிக்கோள் என்று சொன்னேன். இல்லாவிட்டால் இந்த நாட்டுக்கு நான் திரும்பியிருக்கவே மாட்டேன். ராணிக்கு உதவும் ஓர் ஆசையாலும் ரதப் போட்டியில் அவர் குதிரைகளை நான் வெற்றியுடன் நடத்தியதாலுமே யவன இளவரசர் எனக்கு உதவினார். என்னுடன் மரக்கலத்தில் அவர் அனுப்பியிருக்கும் யவன வீரர்களில் இருவர் அவருடைய மெய்க்காவலர். அவர்களையும், அலீமாவையும் அனுப்பியதால்தான் டைபீரியஸ் வந்திருக்கும் மரக்கலங்கள் தன்னைச் சேர்ந்தவை என்று இன்னும் நம்பியிருக்கிறான். அந்த நம்பிக்கை உடைந்தால், அந்த மரக்கலங்களின் படகுகளையும், ஏன் மரக்கலங்களையே அழிக்கக்கூட வழி தெரியும் டைபீரியஸுக்கு. ஆகவே, ஒரு பக்கம் டைபீரியஸுக்கு நம்பிக்கை உண்டாக்கவும், மற்றொரு பக்கம் யவன மாலுமிகளுக்கு அவர்கள் அரசு இங்கு நிறுவப்படுமென நம்பிக்கை உறுதிப் படுவதற்கும், போர் மூண்டால் பெரும் பண லாபமிருப்பதாகக் கொள்ளைக்கார மாலுமிகளுக்கு ஆசை காட்டுவதற்கும் கூடியவரையில் என் உண்மை நோக்கங்களை மறைத்துக் கொண்டேன். கொள்ளைக்கார மாலுமிகளுக்கு ஆசை காட்டுவதற்காக வேண்டுமென்றே சேரன் போர்க் கப்பல்கள் இரண்டைக் கைப்பற்றினேன். ஆகையால் இப்பொழுது என்னை டைபீரியஸ் தனக்கு உதவ யவன இளவரசன் அனுப்பிய கையாளாக நினைக்கிறான். கொள்ளைக்காரர்கள் தங்களுக்குப் பணம் திரட்டித் தர வந்திருக்கும் தலைமைக் கொள்ளைக்காரனாக நினைக்கிறார்கள்."

இளஞ்செழியன் சற்றுப் பேச்சை நிறுத்தி, ஏதோ யோசித்துத் தானே தலையை அசைத்துக் கொண்டான். பிறகு தொடர்ந்தான் பேச்சை, "ஆம், அல்லி! யார் யார் என்னைப்

பற்றி எப்படி எப்படி நினைக்க வேண்டுமென்று எண்ணமிட்டேனோ அப்படி அப்படி நினைக்கச் செய்தேன். பலர் குழப்பத்தில்தான் நான் எனது பணியை நிறைவேற்ற முடியும். ஆகவே, நீ கோடரிக் காம்பு என்று குற்றம் சாட்டியதை மரக்கலத்தின் அறையைக் காவல் புரிந்த யவனர்கள் கேட்கட்டுமென்று விட்டேன். அதற்காகவே அவர்களையும் உன்னுடன் படகில் அழைத்து வந்து அவர்களை ஊருக்குள் செல்லப் பணித்து உன்னை மட்டும் தூக்கி வந்தேன்..."

அல்லி சட்டென்று இடைமறித்து, "தூக்கி வருவானேன்? என்னால் நடக்க முடியாதா!" என்று கேட்டாள்.

"முடியும் அல்லி! ஆனால் உன்னைத் திடீரெனச் சுதந்திரமாய் நடக்க விடுவதில் ஆபத்துக்கள் இருந்தன" என்றான் படைத் தலைவன்.

"என்ன ஆபத்து?" என்று வினவினாள் அல்லி.

"நம்முடன் படகில் வந்த யவன மாலுமிகள் சந்தேகப் படலாம். உன்னை நான் பலாத்காரமாகத் தூக்கிக் கொண்டு போகிறேன் என்று நினைப்பார்கள். யவனர் மனோதத்துவத்தை நீ அறியவேண்டும் அல்லி. உன்னை நான் தூக்கிக் கொண்டு வடக்குத் திட்டிவாசல் வழியாக நுழைந்தபோது யவன காவலர் சிரித்ததை நீ பார்த்திருக்க முடியாது. உன்னைத்தான் போர்வையால் மூடியிருந்தேனே. ஆனால் நான் கவனித்தேன். குடித்தவன்போல் தள்ளாடி நடந்த போதும் கவனித்தேன்'' என்று சொன்னான் படைத் தலைவன்.

"எதற்காக இந்த நாடகமெல்லாம்?" என்று கேட்டாள் அல்லி.

"புரியவில்லையா அல்லி? படகில் வந்த யவன மாலுமிகளிடம் உன் காது படத்தானே சொன்னேன். இந்த வேவுகாரி வந்திருப்பது டைபீரியஸுக்குத் தெரிய வேண்டாமென்று."

"ஆம், சொன்னீர்கள்."

"சொன்னதும் உன்னை அள்ளித்தோள்மேல் போட்டுக் கொண்டேன். போர்வையால் மூடினேன். என்ன நினைத் திருப்பார்கள் யவன மாலுமிகள்?"

அல்லி மௌனம் சாதித்தாள். வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது. இதயம் படபடத்தது, பிராணனே போய்விடும் போலிருந்தது. படைத்தலைவன் அவள் உணர்ச்சிகளை முக பாவத்திலேயே புரிந்து கொண்டான். "ஆம் அல்லி! என்னைப் பஞ்சமா பாதகனாக்கிக் கொண்டேன். யவனமாலுமிகள் என் எண்ணத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளட்டும் என்றுதான் அந்த நாடகமாடினேன். திட்டி வாசல் வழியாகக் குடித்தவன் போல் வந்ததற்கும் அதுதான் காரணம். நான் இங்கு வந்ததைப்பற்றிச் செய்தி போகும் டைபீரியஸுக்கு. சதிகாரனாக அல்ல, அவனை முறியடிக்க முயலும் படைத் தலைவனாக அல்ல, குடிகாரன், நடத்தை கெட்டவன் என்று போகும். அதுவும் இந்த மாளிகைக்கு நான் வந்திருப்பதை அறிந்தால், சிறிதும் சந்தேகப்பட மாட்டான் டைபீரியஸ்" என்றான்.

அல்லி எதுவுமே பேசவில்லை. நிற்க முடியாமல் மீண்டும் நகர்ந்து பஞ்சணையில் உட்கார்ந்து தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். அவள் கண்கள் நீரையும் உகுத்தன. 'எத்தனை அபாண்டம் என்மேல்!' என்றும் நெஞ்சம் உருகினாள். அவள் நிலையைப் பார்த்த ராணி சற்றே வெகுண்டு படைத்தலைவனை நோக்கி, "அந்தப் பெண்ணின் மனத்தை ஏன் புண்படுத்தினீர்கள் படைத் தலைவரே! எதைப் பெண்களிடம் பேசலாம், பேசக்கூடாது என்ற பண்பைச் சாம்பிராணி நாட்டில் இழந்துவிட்டீர்களா?'' என்று வினவினாள்.

படைத் தலைவன் இதழ்களில் வறண்ட சிரிப்பு ஒன்று படர்ந்தது. "ராணி! என் தங்கையின் மானத்தில் எனக்கும் பங்கில்லையா? அல்லி யாரென்பதை யாருமே அறியக் கூடாது என்பதற்காகத்தானே அவள்மீது போர்வையைப் போர்த்தினேன். அதற்காகத்தானே இங்கு கொண்டு வந்தேன்" என்றான் இலஞ்செழியன்.

"அதற்காக இங்கு கொண்டு வந்தீர்களா? அப்படி என்ன விசேஷம் இந்த மாளிகையில்?" ராணியின் கேள்வியில் வியப்புத் தட்டியது.

"இந்த மாளிகை ஒரு காலத்தில் சோழர் படை உப தலைவனுடைய குடி வீடாயிருந்தது..." என்றான் படைத் தலைவன்.

"அது தெரியும் எனக்கு" என்றாள் ராணி.

"பிறகு கரிகாலர் ரகசியப் படை வீடாயிருந்தது."

"அதுவும் தெரியும்."

"சில காலமாக இந்த வீடு யவன மாலுமிகளின் கேளிக்கைக் கூடமாக மாறியிருக்கிறது. என்னை மயக்கத் துளிகள் கொடுத்து யவன மரக்கலத்தில் அனுப்பிய சில நாட்களுக்கெல்லாம், இது கரிகாலர் சதிக்கூடமாயிற்று. பிறகு டைபீரியஸ் இதைக் கேளிக்கைக் கூடமாகவும் மது ஆறாக ஓடும் குடிக்குமிடமாகவும் மாற்றினான். இந்த வீடு மருவூர்ப் பாக்கத்துக்கும் பட்டினப்பாக்கத்துக்கும் நடுவிலிருக்கிறது. தோப்புக்குள் மறைந்திருக்கிறது. ஆகையால் என்றும் புகாருக் குள் சிறுகோட்டையாக மாறலாம் என்பது டைபீரியஸுக்குத் தெரியும். ஆகவே இதை நாணயமாக வாழும் யாரும் அணுகக் கூடாத பயங்கர ஸ்தலமாக அடித்துவிட்டான் யவனர் கடற்படைத் தலைவன்."

"அது எப்படி தங்களிடம் வந்தது?"

"கேளிக்கைக் கூடம் வைத்திருந்த யவனனிடமிருந்து பொன்னைக் கொட்டி மீட்டுக் கொண்டேன். ஆனால், இதன் கெட்ட பெயர் இன்னுமிருந்து கொண்டிருக்கிறது. அதை நிலைநிறுத்தப் பகல் நேரங்களில் இன்னும் இங்கு யவனர் களுக்கு மது வழங்கப்படுகிறது."

"அப்படியானால் எங்களை ஏன் இங்கு வரவழைத்தீர்கள்?" என்று கோபத்துடன் கேட்டாள் ராணி! அல்லி, கேட்கவில்லை; தலையைத் தூக்கி எரித்துவிடுவதுபோல் படைத்தலைவனை நோக்கினாள். அலீமாவின் முகத்தில் மட்டும் எந்த உணர்ச்சியுமில்லை.

படைத் தலைவன் இருமுறை அறையில் உலாவினான். பிறகு நின்று மூன்று பெண்களையும் மாறி மாறிப் பார்த்தான். "இங்கு வரவழைத்ததற்கு ஒரே காரணம்தான் ராணி. இந்த மாளிகைமீது மட்டும்தான் டைபீரியஸின் கண்கள் உலாவவில்லை. இந்த ஒரு மாளிகையில்தான் நாம் டைபீரியஸின் கண்களில் படாமல் தைரியமாகப் பேசலாம். பூம்புகாரின் மற்ற எந்தப் பிராந்தியத்திலும் அவனது ஒற்றர்கள் இருக்கிறார்கள். மிகவும் நேர்மையானவன் என்று பெயர் பெற்ற சோழர்படை உபதலைவன் ஒருவேளை மீண்டாலும், யவனர் கேளிக்கைக் கூடத்தில் நுழைய மாட்டான் என்ற நம்பிக்கை டைபீரியஸுக்கு உண்டு. யவன நாட்டு ராணியையோ, சோழ நாட்டுப் பிற்கால ராணியையோ, தன்னுடைய சீடப் பெண்ணும், சாம்பிராணி நாட்டு மன்னனின் வளர்ப்புப் பெண்ணுமான அலீமாவையோ அவன் இங்கு எதிர்பார்க்க மாட்டான். ஆகையால்தான் வரவழைத்தேன். இந்த நாடு போர் மூளும் தருவாயில் இருக்கிறது ராணி. போர் மூண்டால் எத்தனை உயிர்கள் நாசமாகும்; எத்தனை பெண்களின் கற்பு பாதிக்கப்படும் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அச்சேதத்தை எண்ணித்தான் நமது பெயர்கள் கெட்டாலும் கெடட்டும் என்று எண்ணினேன். பெருவாரியான மக்களின் நலனுக்காக நாம் நமது உயிர், நற்பெயர் எதையும் இழப்பது தவறாகாது. ஆகையால்தான் இங்கு உங்களை அழைத்தேன். பொழுது விடிய ஒரு ஜாமமே இருக்கிறது. அதற்குள்ளாக நாம் பேசி முடித்ததாக வேண்டும். நீங்கள் மூவரும் இந்நாட்டுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளைச் சொல்கிறேன் கேளுங்கள்"

என்று கூறிய படைத் தலைவன் தன் திட்டங்களை விவரிக்க முற்பட்டு மடியிலிருந்த பட்டுச் சீலையொன்றை எடுத்து மஞ்சத்தில் விரித்து, "இதோ பாருங்கள்" என்று அந்த மூன்று பெண்களையும் அருகில் அழைத்தான்.

96. பட்டுச்சீலைத் திட்டம்

அலை மோதும் உணர்ச்சிகளுடன் தமிழகத்தின் நிலை மாறும் திட்டங்களை விளக்க முற்பட்டு, மடியிலிருந்த பட்டுச் சீலையை மஞ்சத்தில் விரித்து, 'இதைப் பார்க்க வாருங்கள்' என்று படைத் தலைவன் விரைந்து அழைத்த போதிலும், அறையிலிருந்த அந்த மூன்று அழகிகளில் ஒருத்திகூட இருந்த இடத்தைவிட்டு ஒரு இம்மிகூட நகராமல், அதுவரை படைத் தலைவன் உரைத்த செய்திகளால் அடியோடு மனம் இடிந்து போய் அசைவற்று சிலைகள்போல் நின்றிருந்தார்கள். அந்த மாளிகைக்குத் தங்களை வரவழைத்தன் மூலம் தங்கள் நற்பெயருக்கு எத்தனை பாதகத்தைப் படைத்தலைவன் விளைவித்து விட்டான் என்பதை எண்ணியதால், அந்த மூவர் இதயங்களிலும் எண்ணற்ற உணர்ச்சி அலைகள் எழுந்து எழுந்து மோதின. வெவ்வேறு எண்ணங்களைப் பெற்ற அந்த மூன்று அழகிகளின் முகங்களும் அவர்கள் இதயங்களில் ஏற்பட்ட ஒரேவித உணர்ச்சிகளின் விளைவாக ஒரேவிதமான வண்ணத்தை அடைந்து கற்புடைய மாதர்க்கெல்லாம் உள்ளப் போக்கு ஒன்றுதான் என்பதைத் தெளிவுறுத்தின. பளிங்குக் கல் போன்று மிக வெண்மையான யவன ராணியின் முகமும், வெளுத்த அல்லியைப் போலிருந்தாலும், அந்த அல்லி மலரைப் போலவே லேசாகச் செவ்வரி ஓடியதால் அதிக வெண்மையும் லேசான சிவப்பும் கலந்த அல்லியின் முகமும், அரபு நாட்டின் வெப்பத்தின் விளைவாக நல்ல வெளுப்பு சிறிது மந்தப்பட்டு மஞ்சள் நிறத்தை இணைத்துக் கொண்ட அலீமாவின் முகமும், ஏக காலத்தில் ஒரே விதமாகக்

குப்பென்று ரத்தச் சிவப்பாகி விட்டதையும், அவர்களுடைய மூவிரண்டு கண்களும் அக்கினியைக் கக்கியதையும், தன் அழைப்பை அவர்கள் லட்சியம் செய்யாமலே நின்றிருந்ததையும் கவனித்த படைத் தலைவன், மஞ்சத்திலிருந்த பட்டுச் சீலை மீதிருந்த தன் கண்களைச் சற்றே எழுப்பி அவர்கள் முகங்களை மற்றுமொருமுறை துழாவிவிட்டு, நீண்டதொரு பெருமூச்சும் விட்டான். அவன் தங்கள் முகங்களை இரண்டு முறை கவனித்ததையும், பிறகு பெருமூச்சு விட்டதையும் அழகிகளும் கவனிக்கத்தான் செய்தார்கள். அப்படி அவர்கள் கவனித்ததையும், கவனித்தும் அவர்கள் கோபம் தணிந்ததற்கான அறிகுறிகள் ஏதுமே அவர்கள் முகங்களில் துளிர் விடாததையும் கண்ட படைத் தலைவன் மஞ்சத்தின் மீதிருந்த பட்டுச் சீலையை அப்படியே விட்டு நன்றாக நிமிர்ந்து நின்று, அந்த அழகிகள் மூவர்மீதும் மிகவும் திடமாகத் தன் கண்களை நாட்டி, "பெண் இதயம் எனக்குப் புரியாதென்று நினைக்க வேண்டாம்...ஆனால்..." என்று சற்றுத் திடமான குரலிலும் பேச முற்பட்டான். அவனைக் கோபமும், இகழ்ச்சியும் கலந்து தாண்டவமாடிய யவன ராணியின் விழிகள் கம்பீரமாக நோக்கியதன்றி அவள் பவள இதழ்களும் அசைந்து, "பெண்கள் இதயம் உங்களுக்குப் புரியாதென்று யார் சொல்வார்கள் படைத்தலைவரே! நான் சொல்லமாட்டேன். அலீமா சொல்லமாட்டாள், வேளிர்குலப் பேரழகி சொல்லமாட்டாள், இன்னும் எத்தனை பெண்கள் சொல்லமாட்டார்களோ தொகை எனக்குத் தெரியாது..." என்று உஷ்ணத்துடன் சொற்களை உதிர்த்தன.

ராணியின் சொற்களில் அடங்கிக் கிடந்த விஷமத்தையும், ஏளனத்தையும், ஏன் கோபத்தையும்கூட, படைத் தலைவன் நொடிப் பொழுதில் புரிந்துகொண்டானானாலும் எதிர்நோக்கிக் கிடந்த முக்கிய அலுவலை முன்னிட்டு நிதானம் சிறிதும் தவறாத குரலிலேலே பதில் சொல்ல முற்பட்டு, "தொகை விரிந்தாலும் பாதகமில்லை. மனோ

தத்துவ சாஸ்திரத்தை நான் படித்திருக்கிறேன்..." என்று பேசத் துவங்கியவனை இடைமறித்த ராணி, "எங்கு படித்திருக்கிறீர்கள்? ஏட்டிலா பிறர் வீட்டிலா?" என்று வினவினாள்.

"வீட்டிலிருப்பதுதான் ஏட்டிலுமிருக்கிறது, ராணி! சமுதாயத்திலிருப்பதுதான் சாஸ்திரத்திலும் இருக்கிறது. ஆகவே சாஸ்திரங்களை அறிய வீட்டிலும் படிக்கவேண்டும். ஏட்டிலும் படிக்கவேண்டும். ஒன்று உணர்வுக்கு இன்னொன்று அனுபவத்துக்கு. இரண்டிலும் தீட்டப்படும் அறிவுதான் கூர்மையாகிறது" என்று கூறினான் படைத் தலைவன்.

"அப்படியானால் படைத்தலைவருக்குப் பெண்கள் விஷயத்தில் அனுபவம் அதிகம் போலிருக்கிறது?" என்று மீண்டும் இகழ்ச்சியுடன் கேட்டாள் ராணி.

படைத்தலைவன் குரலில் எந்த மாறுதலையும் காட்டாமலே பதில் சொன்னான்: "ராணி! தவறாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள். பெண்களைப்பற்றி மட்டும் நான் குறிப்பிடவில்லை. பொதுவாகப் பேசினேன்; மனோதத்துவ சாஸ்திரத்தைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டேன்."

ராணி தன் நீலமணிக் கண்களை நன்றாகத் தூக்கிப் படைத் தலைவன் முகத்தை ஒருமுறை ஆராய்ந்ததன்றி, ஆச்சரியத்துக்கும் உள்ளானாள். மூன்று பெண்களை, குடிக்கும் விபச்சாரத்துக்கும் பேர் போன ஒரு மாளிகைக்கு வரவழைத்துவிட்டு அதில் எந்தத் தவறும் இல்லைபோல் சர்வ சாதாரணமாகத் தன்னை நோக்கும் அவன் துணிவைப் பெரிதும் வியக்கவே செய்த ராணி, "மனோதத்துவம் உண்மையில் உங்களுக்கு நன்றாகத் தெரியுமா?" என்று விசாரித்தாள்.

அவள் கேள்வியின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட படைத் தலைவன், அதுவரை நிமிர்ந்திருந்த தன் தலையை நிலத்தை நோக்கித் தாழ்த்தி விழிகளையும் தரையில் நாட்டி மிக மெதுவாக, "ஓரளவு தெரியும் என்பதுதான் என் நம்பிக்கை ராணி" என்று பதிலளித்தான்.

"எங்கள் மனோநிலை இப்பொழுது எப்படியிருக்கிறதென்று உங்களுக்குப் புரிகிறதா?" இந்தக் கேள்வியை ராணி கேட்கவில்லை. ராணி கேட்கு முன்பாக அலீமா கேட்டுவிட்டாள்.

"புரிகிறது என்பதைத்தான் முன்னமே சொல்லிவிட்டேனே," என்றான் படைத் தலைவன் தாழ்ந்த தலையை நிமிர்த்தாமலே.

"புரிந்துமா எங்களை இங்கு வரவழைத்தீர்கள் படைத் தலைவரே!" என்று துயரம் தோய்ந்த சொற்களைக் கொட்டிய அல்லியும் சம்பாஷணையில் கலந்து கொண்டாள்.

"ஆம் அல்லி! நன்றாகப் புரிந்துதான் இங்கு வரவழைத்தேன். காரணத்தைத்தான் முன்பே சொன்னேனே?" என்றான் படைத் தலைவன்.

"இந்த மாளிகையின் அவப்பெயரால் கற்புடைய பெண்கள் இந்த இடத்தில் நடமாடமாட்டார்கள் என்று டைபீரியஸ் நினைப்பான் என்ற காரணத்தைத்தானே குறிப்பிடுகிறீர்கள்?" என்று குறுக்கே பாய்ந்தாள் ராணி சீற்றத்துடன்.

"ஆம் ராணி." தீனமான குரலில் வெளிவந்தது படைத் தலைவனின் பதில்.

"டைபீரியஸை ஏமாற்றுவதற்காகப் பெண்கள்மீது அபாண்டம் ஏற்படக் கூடிய காரியத்தில் ஈடுபடுவது முறையென்று நினைக்கிறீர்களா?" என்று அலீமா வினவினாள்.

இம்முறை படைத் தலைவன் தலையைக் கவிழ்ந்து கொண்டு பதில் சொல்லவில்லை. தலையை நன்றாக நிமிர்த்தி அந்த மூன்று அழகிகள்மீதும் தன் கண்களை ஒரு முறை வலம் வரச் செய்தான். பதில் சொல்ல முற்பட்டபோது அவன் குரலில் பழையபடி உறுதி புகுந்து கொண்டது. அந்த உறுதியால் வேல்களெனப் பிரகாசிக்கும் கண்களுடன் பேசினான் படைத்தலைவன். "ராணி! அலீமா! அல்லி! உங்கள் மூவரிடமும் என் இதயத்துக்கு எத்தனை ஈடுபாடு, எவ்வகை ஈடுபாடு என்பது உங்களுக்கே தெரியும். உங்கள்மீது அபாண்டம் ஏற்படுவதா அல்லது என் உயிரை இழப்பதா என்பது மட்டும் பிரச்னையாயிருந்தால் என் உயிரைத்தான் இழப்பேனே யொழிய உங்கள் நற்பெயருக்கு மாசு ஏற்பட ஒருகாலும் அனுமதிக்கமாட்டேன். ஆனால் இப்பொழுது நம் முன்னிருக்கும் பிரச்னையில் பிணைக்கப்பட்டிருப்பது உங்கள் மூவர் வாழ்வு மட்டுமல்ல தமிழகத்தின் மக்களின் தற்கால வாழ்வு, மானம், பிற்காலம் அத்தனையும் பின்னிக் கிடக்கின்றன. நாம் எந்த நிமிஷத்திலும் போர் மூளக்கூடிய நிலையில் இருக்கிறோம்..." என்று கூறிய படைத் தலைவன் தன் பேச்சைச் சிறிது நிறுத்தி அந்த மூவர் முகங்களையும் கவனித்தான்.

ஆவேசமான அந்தப் பேச்சினால்கூட அந்தப் பெண்களின் மனோநிலை மாறாதது மட்டுமல்ல, மேலும் கடினப்பட்டதாகத் தெரிந்தது படைத் தலைவனுக்கு. அந்தக் கடினம் ராணியின் அடுத்த கேள்வியிலும் தொனித்தது.

"உங்கள் நாட்டு இலக்கியங்களைச் சரியாகப் படித்திருக்கிறீர்களா படைத் தலைவரே?" என்று கேட்டாள் ராணி.

"ஓரளவு படித்திருக்கிறேன். எதற்காகக் கேட்கிறாய்?" என்று வினவினான் படைத்தலைவன்.

"உங்கள் படிப்பு பேச்சில் புலனாகவில்லை படைத் தலைவரே."

"எப்படி மாறுபடுகிறது?"

"இந்த நாட்டுக்கு வந்தபின் இருபெரும் கதைகளை உங்கள் மக்கள் சொன்னார்கள் எனக்கு."

"என்ன கதைகள்?"

"ஒன்று ராமாயணம்."

"இன்னொன்று மகாபாரதமாக்கும்?"

"ஆம் படைத் தலைவரே! சிறையெடுத்தவள் கற்பையும் கௌரவத்தையும் காக்க முதல் போர் நடந்தது. அப்படித்தானே?"

"ஆமாம்."

"இன்னொருத்தியின் விரிந்த குழலை வாரி முடிக்க இரண்டாம் போர் நிகழ்ந்தது!"

"ஆம் ராணி, ஆம்!"

"இந்தக் காவியங்களின் படிப்பினையை நீங்கள் ஏன் அறியவில்லை படைத் தலைவரே? ஒவ்வொரு பெண்ணின் மானத்தைக் காக்கவே பெரும் போர் நிகழ்ந்து ஏராளமான உயிர்கள் அழிந்துபோன இந்த நாட்டில் பிறந்த நீர், ஒரே ஒரு போருக்காக, அதுவும் போர் நிகழப் போகிறது என்ற எதிர் பார்ப்புக்காக, மூன்று பெண்களின் நற்பெயரை கெடுக்க முன் வந்தீர்களே, இது முறையா? நீங்கள் கற்ற வித்தையின் பயன் இதுதானா? கற்புடைய பெண் எவளும் தன் இனத்தை இழப் பாள், நாட்டை இழப்பாள், ஏன் கற்புக்காக உலகத்தையேகூட இழப்பாள் என்பது ஏன் உங்களுக்குப் புரியவில்லை?" இதை ராணி மிகுந்த உணர்ச்சியுடன் பேசினாள். மற்ற இருவரும் பேசாதிருந்தாலும் ராணியின் பேச்சு அவர்கள் மனத்தில் எதிரொலி செய்வதை முகபாவங்களிலிருந்தே ஊகித்துக் கொண்ட படைத்தலைவன் சிறிதும் அசையாமல் நிதான மாகவே பதில் சொன்னான்: "ராணி! நீ கூறிய காவியங்களை நான் நன்றாகப் படித்திருக்கிறேன். அவற்றில் கண்ட தத்துவங்களை நான் அறியாமலும் இல்லை. ஆனால் அந்தக் காவிய நிகழ்ச்சிகள் வேறு, இப்பொழுது நாம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளின் அஸ்திவாரமே வேறு. பொருந்தாத உவமை களைக் கூறாதே. ராமகாவியத்தில் நடந்ததுபோல் யாரை யாவது ஒருவன் கவர முற்பட்டால், என் பிணத்தைத் தாண்டித்தான் உங்கள்மீது அவன் கை வைக்க முடியும். பாரதத்தில் நடந்ததுபோல் உங்களில் ஒருவரை எவனாவது அவமதிக்கச் சபைக்கு அழைத்து வந்தால் அவன் மட்டுமல்ல, அந்தச் சபையில் அனைவரையும் தயைதாட்சண்யமின்றி வெட்டிப் போடத் தயங்கமாட்டேன். அத்தகைய சம்பவம் இங்கு ஏற்பட்டு விடவில்லை. நான் உயிருடன் இருக்கும் வரையில் ஏற்படவும் ஏற்படாது. தவிர உங்களை நான் வர

வழைத்தது என்னையும் என் சகாக்களையும் தவிர யாருக்கும் தெரியாது" என்றான்.

"எந்தச் சகாக்கள்? கொள்ளைக்காரர்களா?" என்று கேட்டாள் அலீமா.

"இல்லை அலீமா. இந்த மாளிகையில் இப்பொழு திருப்பவர்கள் கொள்ளைக்காரர்கள் அல்ல. என் நம்பிக்கைக்குப் பாத்திரமான வீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் என் நன்னடத்தையில் நம்பிக்கை யுள்ளவர்கள். தமிழகத்தின் பிற்காலம் ஒன்றுதான் என் குறிக்கோள் என்பதைச் சந்தேகமற உணர்ந்தவர்கள். இரவின் மூன்றாம் ஜாமத்திலிருந்து அவர்கள் மட்டும் இங்கிருப் பார்கள்" என்றான் படைத் தலைவன்.

"மற்ற சமயங்களில்?"

"புகாரின் கேளிக்கைக்காரர்களும், குடிக்கும் யவனர்கள், பரதவர்கள் முதலியோரும் இருப்பார்கள். இந்த மாளிகைக்கு இரண்டுவித வேஷமுண்டு."

"இருவித வேஷங்களா?"

"ஆம் அலீமா? பகலிலும் இரவின் முதல் இரண்டு ஜாமங்களிலும் இது கேளிக்கைக் கூடம், மூன்றாவது ஜாமத்தி லிருந்து தமிழகத்தின் தலைசிறந்த ஒற்றர்களின் இருப்பிடம், நான் சாதாரணமாக இங்கு வருவாதானால் இரண்டாம் ஜாம ஆரம்பத்திலேயே வந்து விடுகிறேன். ஆகவே, டைபீரியஸ் என்னைக் குடிகாரனென்றும் நடத்தை கெட்டவனென்றும் நினைக்கிறான். இரண்டாம் ஜாமத்தில் இங்கு வரும் நான் இரண்டாம் ஜாமம் முடிந்து கேளிக்கைக் கூட்டம் போன பின்பும் இங்கு தங்குகிறேன். மூன்றாம் ஜாமத்தில் ஊர் உறங்கும். ஆனால் நானும் என் ஒற்றர்களும் உறங்குவதில்லை. தமிழகத்திலிருந்து கிடைக்கும் செய்திகளைப்பற்றி விவாதிக்கிறோம்."

"அதனால் தான் சில நாட்கள் பகல் வேளைகளில் மரக்கலத்தில் உறங்குகிறீர்களா?" என்று அலீமா வினவினாள்.

"ஆம் அலீமா" என்ற படைத் தலைவன் மீண்டும் ராணியை நோக்கிச் சொன்னான்: "ராணி! நான் சொன்ன தன் அர்த்தம் புரிகிறதல்லவா உனக்கு? நீங்கள் நினைப்பது போல் பெரும் அபவாதம் எதுவும் ஏற்படாது உங்களுக்கு. உங்களை வேண்டுமென்றே இரண்டாம் ஜாமத்திற்குப் பின்பு இங்கு வரவழைத்தேன். இந்த இடத்தில் நாம் கூடுவதை டைபீரியஸ் எதிர்பார்க்கமாட்டான் என்ற நம்பிக்கையிலேயே இங்கு உன்னை வரவழைக்க ஓலை அனுப்பினேன்."

"இங்கு நம்மை டைபீரியஸ் எதிர்பார்க்க மாட்டான் என்று உங்களுக்கு எப்படி நிச்சயமாகத் தெரியும்?" என்றாள் ராணி.

"என்னுடன் படகில் வந்த யவனர்கள் சொல்லியிருப் பார்கள், நான் இந்த மாளிகைக்குப் போயிருப்பதாக. திட்டி வாசல் காவலரை விசாரித்தாலும் தலைக்கவசமணிந்த குடி காரன் ஒரு பெண்ணைத் தூக்கிக்கொண்டு போனதாகத்தான் தகவல் கிடைக்கும். ஆனால், நான் அல்லியைப் போர்த்தி விட்டதால், பெண் யாரென்று தெரியாது. நீயும் அலீமாவும் வந்ததோ பெரும் மர்மம். ஊரடங்கிய பிறகு வந்திருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் நினைக்கிற அளவுக்கு உங்கள் நற்பெயர் கெடக் காரணமில்லை. அப்படியே ஓரிருவர் உங்களைப் பார்த்ததாக வைத்துக்கொண்டாலும் நாம் கவலைப்பட வேண்டிய தில்லை" என்றான் படைத் தலைவன்.

"ஏன் கவலைப்பட வேண்டியதில்லை?" மிகுந்த கோபத்துடன் கேட்டாள் அல்லி.

"அப்படிப் பார்த்தவர்கள் கிளப்பக் கூடியது வெறும் வதந்திதானே அல்லி? வதந்திக்குப் பயப்படலாமா? முன்னமே நீ வதந்தியால் பாதிக்கப்பட்டவள். உன்னையும் என்னையும் தவறாகப் புரிந்துகொண்ட பூவழகி நம்மை என்ன பாடுபடுத்திவிட்டாள்? அதுமட்டுமா அல்லி? நான் யவன ராணியைக் கவர்ந்துகொண்டு எங்கெங்கெல்லாம் போயிருக் கிறேன். இங்கிருந்து பிரும்மானந்தர் ஆசிரமம் போனேன்.

அங்கு பூவழகியின் தீ விழிகளுக்கு இலக்கானேன். பிறகு இந்திர விழா மாளிகையிலிருந்து இரவோடு இரவாக ராணியைத் தூக்கிக்கொண்டு வாணகரை சென்றேன், கருவூர் சென்றேன், உறையூருக்கு வந்தேன். அங்கிருந்து மீண்டும் புகாருக்கு வந்தேனே? இதையெல்லாம் அறிந்தவர் ஒருவரா, இருவரா? பலர் அல்லி பலர்! இவற்றால் கிளம்பாத வதந்தி இனிக் கிளம்புமா? தவிர வதந்திகளுக்கு அஞ்சுவதும் விவேகமல்ல. அஞ்ச வேண்டியது மனச்சாட்சி ஒன்றுக்குத்தான். அது தெளிவாயிருக்கும்வரை நற்பெயரை யாரும் கெடுக்க முடியாது. வதந்திகள் இடைக் காலத்தில் கெடுக்கலாம். ஆனால், இறுதியில் பொய் வதந்திகள் வந்த வேகத்தில் மறையும். உண்மையும் நற்பெயருமே நிலைக்கும். ராணி கூறிய அந்த ராமாயணப் பெருங்காவியத்தையே பார். சீதை மீதும் வதந்தி ஏற்படத்தான் செய்தது. அதற்காகக் காட்டுக்கும் அனுப்பப்பட்டாள், அந்தக் கற்புக்கரசி, கருத்தரித்த நிலையில். ஆனால் உண்மை மறைந்ததா? இன்றும் அவளைக் கற்பின் தெய்வமாகக் கொண்டாடவில்லையா? வதந்தி பனி போன்றது. சத்தியத்தின் ஒளி அதை வெகு சீக்கிரம் கிழித்து விடும். ஆகவே கவலை வேண்டாம் அல்லி. உங்கள் யார் நற் பெயரும் போகாது. போக நான் அனுமதிக்கவும் மாட்டேன். நாட்டு நலனை முன்னிட்டு நாம் சில முறைகளை, எச்சரிக்கை களைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே உங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் மூவரும் இப்பொழுது எனக்கு அளிக்கக்கூடிய உதவிதான் தமிழகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும். பெரும் போர் மூள இருக்கும் இந்தச் சமயத்தில் உங்கள் மனத்தை விரிவுப்படுத்திக் கொள்ளுங்கள்... லட்சக்கணக்கான மக்களின் நலனில் உயிர்களில் தமிழகப் பெண்மக்களின் கற்பில் மனத்தைப் பதிய வையுங்கள். பதிய வைத்து இதைக் கவனியுங்கள்" என்று கூறிக் கொண்டே மீண்டும் மஞ்சத்தை அடைந்த படைத் தலைவன், அதில் விரிந்து படர்ந்த பட்டுச் சீலையைக் கூர்ந்து நோக்கினான்.

படைத் தலைவன் அளித்த விளக்கத்தாலும், அவன் பேச்சில் தொனித்த உணர்ச்சியாலும் தங்கள் ஒவ்வொருவர் நற்பெயரிலும் அவனுக்கிருந்த அக்கறையை அவன் வெளி விட்டுச் சொல்லியதாலும், தாங்கள் எதிர்பார்த்தபடி அப்படிப் பெரும் அபவாதம் ஏதும் தங்கள்மீது விழுவது சாத்தியமில்லை என்ற நினைப்பாலும், அந்த அழகியர் மூவரும் மெள்ள மெள்ள மஞ்சத்தை அணுகினார்கள். அலீமா வும் அல்லியும் எதிரும் புதிருமாக மஞ்சத்தில் உட்கார்ந்து கொள்ள ராணி மட்டும் படைத் தலைவனுக்கு வெகு அருகில் வந்து நின்றுகொண்டாள். "நீயும் இப்படி உட்கார் ராணி. அப்பொழுதுதான் நான் சொல்லும் விஷயங்கள் உனக்குத் தெளிவாகத் தெரியும்" என்று கூறிய படைத் தலைவன் ராணியின் தோளைப் பிடித்து அவளைத்தான் நின்றிருந்த இடத்துக்கு மிக அருகில் மஞ்சத்தில் உட்கார வைத்தான்.

அவன் அப்படித் தோளைப் பிடித்து அழுத்தி உட்கார வைத்ததால் ராணியின் கோபமெல்லாம் எங்கோ காற்றில் பறந்தது. 'இவர் மட்டும் இப்படி என்னை அடிக்கடி தொட முடியுமானால் இந்த அபவாத கூடத்துக்கும் ஆயிரம் முறை வருவேனே?' என்று ராணி தனக்குள் சொல்லிக்கொண்டு தலையைக் கவிழ்த்து மஞ்சத்தின் நடுவே கிடந்த பட்டுச் சீலையை நோக்கினாள். அந்தச் சமயத்தில் அவள் கட்டி யிருந்த பட்டுச்சீலை பக்கத்திலிருந்த படைத் தலைவன் மீது உராய்ந்து கொண்டிருந்தது. உட்காருவதற்காக மடிக்கப் பட்டுப் பட்டு மஞ்சத்தின் முகப்பிலிருந்த ஒரு காலைத் தவிர, கீழே தரையில் ஊன்றிருந்த மற்றொரு காலுடன் பக்கத்தில் நின்றிருந்த படைத் தலைவன் கால் பட்டுக்கொண்டிருந்ததால் ராணியின் உணர்ச்சிகள் கடலலைகளெனப் பொங்கி எழுந்தன.

பட்டுச் சீலையைப் பார்த்த கண்கள் சீலையிருந்த விரல் களைப் பார்க்கவில்லை. பழைய நிகழ்ச்சிகளைப் பார்த்தன.

"பட்டுச் சீலையைப் பார்த்தாயா ராணி?" என்று கேட்டான் படைத் தலைவன்.

ராணி பதிலேதும் சொல்லவில்லை. அவளை ஒரு கையால் பிடித்து அசக்கிய படைத்தலைவன், "என்ன ராணி! பார்த்தாயா? இல்லையா? முக்கியமாக அதில் என்ன தெரிகிறது?" என்று மீண்டும் கேட்டான்.

ராணியின் உணர்ச்சிகள் படைத்தலைவனுக்கு விளங்கா விட்டாலும் மற்ற இரு பெண்களுக்கும் விளங்கி விட்டன. ராணி பட்டுச் சீலையைப் பார்க்கவில்லை யென்றும் பழங்கனவுகளைக் காண்கிறாளென்பதையும் புரிந்துகொண்ட இரு பெண்களும், ஒருவரையொருவர் தலையைத் தாழ்த்திய வண்ணமே விழிகளை உயர்த்திப் பார்த்துப் புன்முறுவல் செய்து கொண்டார்கள்.

அவை எதையுமே கவனிக்காத படைத் தலைவன், "அலீமா! ராணிதான் மௌனியாகி விட்டாள். உனக்காவது தெரிகிறதா இல்லையா?" என்று கோபத்துடன் வினவினான்.

"எது படைத் தலைவரே?" என்று கேட்டாள் அலீமா.

"பட்டுச் சீலையில் காணப்படும் திட்டம்" என்றான் படைத் தலைவன்.

"அதில் திட்டம் ஏதும் தெரியவில்லையே!" என்றாள் அலீமா.

"வேறென்ன தெரிகிறது?"

"சில சித்திரங்கள் தெரிகின்றன. கோடுகள் தெரிகின்றன."

"பிறகு?"

"இரண்டு சிவப்புப் புள்ளிகள், ஒரு புள்ளி பெரியது. இன்னொன்று சிறியது."

"சரி அலீமா. கிட்டத்தட்ட திட்டத்தையே கூறி விட்டாய். இப்பொழுது கவனியுங்கள். ராணி! அல்லி! உம். உங்களையும்தான்" என்று மற்ற இருவரையும்கூட அழைத்த இளஞ்செழியன், "இந்தச் சிவப்புப் புள்ளிகளிலிருந்து நமது திட்டத்தைத் துவக்குவோம்" என்று முதல் புள்ளியில் கையை

வைத்துத் திட்டத்தை விவரிக்கத் தொடங்கி, "இந்த இரண்டும் போர் நிகழவேண்டிய இடங்கள். ஒன்றில் பெரும்போர்; அதிலிருந்து பின்வாங்கும் படையை அழிக்க இந்த இடத்தில் சிறிய போர் நடக்கும்" என்று மேலும் கூறலானான்.

97. சிவப்புப் புள்ளிகள் இரண்டு

மஞ்சத்தில் விரித்துக் கிடந்த மஞ்சள் நிறப் பட்டுச் சீலையிலிருந்த சிவப்புப் புள்ளிகளைச் சுட்டிக்காட்டி, தனது போர்த் திட்டத்தைப் படைத் தலைவன் விவரிக்கத் தொடங்கியதும், ராணி மட்டும் அதைச் சரியாகக் கவனிக்காமல் தனது கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாளேயொழிய, மற்ற இரு மங்கையரும் அதைச் சற்று ஊன்றிக் கவனிக்கவே தொடங்கினார்கள். அந்தப் பட்டுச் சீலை ஒன்றரை முழ நீளமும் அதே அகலமும் கொண்டு சச்சதுரமாயிருந்ததையும், அதில் செம்பருத்திச் சாற்றையும் கூட்டுமையையும் கொண்டு கறுப்பும், சிவப்புமாகப் படைத் தலைவன் பல கோடுகளை மட்டுமின்றிப் புலி, மீன் தலைகளையும் சங்கு அடையாளங்களையும் வரைந்திருந்ததையும், சில இடங்களில் அடர்த்தியான மரங்களுமிருந்ததையும் கண்ட அல்லி, அந்த அடையாளங்கள் எவற்றைக் குறிப்பிடுகின்றன என்பதைப் புரிந்து கொண்டாலும், அலீமாவுக்குச் சகலமும் கண்ணைக் கட்டிக் காட்டில்விட்டது போலிருந்தால், அவள் தனது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள இளஞ்செழியனை நோக்கிக் கேட்டாள், "படைத் தலைவரே! இந்த அடையாளங்கள் எவற்றைக் குறிக்கின்றன?" என்று.

படைத் தலைவன் பட்டுச் சீலையின் மீதிருந்த கண்களை வாங்காமல் தனது உடைக் கச்சையில் செருகப் பட்டிருந்த குறுவாளைக் கையில் எடுத்துக்கொண்டு அதன் நுனியால் அந்தச் சித்திரங்களைச் சுட்டிக் காட்டி, "அலீமா! இந்தப் புலியும் மீனும் முறையே சோழ பாண்டிய நாடுகளைக் குறிப்பிடுகின்றன. தமிழகம் மூன்று வேந்தர்களைக்

கொண்டது நீண்ட காலமாக. இந்த மூன்று வேந்தர்களின் நாடுகளும் மூன்றுவித நில நீர் வளங்களுக்குக் காரணமாக இருந்து வந்திருக்கின்றன. சோழ நாடு உணவு நிரம்பியது. பாண்டிய நாடு கடல் முத்துக்கள் முதலிய உடலலங்கார நவமணிகளுக்குப் பேர் போனது. சேரநாடு வெளிநாட்டு வர்த்தகத்துக்குத் தேவையான மிளகு முதலிய மருந்துச் சாமான்களையும் மரக்கலங்களையும் உடையது. இந்த மூன்று மன்னர்களும் ஒற்றுமையாக மட்டுமிருந்தால் இன்று தமிழகம் உலகத்தின் மிகச் சக்தி வாய்ந்த நாடுகளில் ஒன்றாயிருக்கும். உடல் உரத்துக்கு உணவும், உடல் அலங்காரத்திற்கு நவரத்தினங்களான போகப் பொருள்களும், வெளிநாட்டுச் செல்வத்தை வாணிபத்தால் கொணர மரக்கலங்களும் உள்ள நாட்டின் சக்தி அளவிடத் தகாததாயிருக்கும். ஆனால் இந்த மூவேந்தர்களின் பரஸ்பர விரோதம், ஆதிக்க ஆசை முதலியன தமிழகத்தின் சக்தியை அளவுக்குத் தகுந்தபடி விஸ்தரிக்க விடவில்லை. ஆகையால்தான் இன்றும் இந்த மூன்று முடியரசுகளும் ஒன்றையொன்று மோதும் நிலையிலிருக்கின்றன. சேரனும் பாண்டியனும், வஞ்சகனும் கொலைகாரனுமான இருங்கோவேளுக்கு இடங்கொடாவிட்டால், இன்று சோழநாட்டின் முதன்மையான துறைமுக நகரம் பூம்புகார் யவனர்கள் வசமிருக்காது. தமிழகத்தில் போர் மூளும் நிலையுமிருக்காது. ஆனால் அந்த நிலை வந்துவிட்டது. அந்த நிலையில் சோழ மன்னர் வெற்றியை எப்படிச் சம்பாதிக்க வேண்டும் என்பதையே இந்தப் பட்டுச் சீலையில் வரைந்திருக்கிறேன். பார் அலீமா! உற்றுப் பார். இதோ இந்தக் கோடு வரையில்தான் சோழநாடு. அதற்கு அப்பாலிருப்பது கொங்கு நாடு. அங்குதான் இப்பொழுது மன்னர் கரிகாலர் இருக்கிறார்..." என்று சொல்லிக்கொண்டே போகையில் திடீரென அல்லி மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டதையும், மஞ்சத்தில் அசைந்ததையும் கண்ட படைத் தலைவன் சற்றுப் பேச்சை நிறுத்தி, "என்ன அல்லி! ஏதாவது சந்தேகமா?" என்று வினவினான்.

அல்லி குனிந்த தலையை நிமிராமலே சொன்னாள், "சந்தேகமில்லை படைத் தலைவரே! வியப்புதான்!" என்று.

"எதற்கு வியப்பு அல்லி" என்று மீண்டும் கேட்டான் படைத் தலைவன்.

"மன்னர் இருக்குமிடத்தை அப்படியே சீலையில் வரைந்திருக்கிறீர்கள்" என்றாள் அல்லி.

"இதில் வியப்படைய என்ன இருக்கிறது அல்லி? வேவுத் தொழிலில் இணையற்றவளென்றும் பிரும்மானந்தரின் பிரதம சீடப் பெண்ணுமான உனக்குத் தெரியாதா, அரசியலில் திறமையுள்ளவர்கள் எப்படி நகருவார்கள் என்பது. இருங்கோ வேளின் கை ஓங்கி, புகாரிலும் யவனர் ஆதிக்கம் வலுப்பட்ட பின் குணவாயிற்கோட்டம் ஒன்றைத் தவிர, வேறு எந்த இடத்தில் மன்னர் படை திரட்ட முடியும்?"

"உண்மைதான் படைத் தலைவரே! உங்கள் ஊகம் சரிதான். ஆனால் குணவாயிற்கோட்டத்திலும் மற்றப் பகுதி களைத் துறந்து அடர்த்தியான மலையும் காடும் இருக்கும் இந்தப் பகுதியில் எப்படிப் புலிச் சின்னத்தை வரைந்தீர்கள்? இது ஊகமாயிருக்க முடியாதே!" என்றாள் அல்லி தன் விரலைப் புலிச் சின்னத்தின் மீது வைத்து.

இளஞ்செழியன் லேசாக நகைத்துவிட்டுச் சொன்னான்: "அல்லி! அசல் ராஜதந்திரியாகப் பேசுகிறாய். போர் முறை களையும் படைகள் அமைக்க வேண்டிய இடங்களையும் அறிந்து பேசுகிறாய். உன்னைப் போன்ற பெண்கள் தமிழகத் தில் அதிகரித்து விட்டால், இங்கு என்னைப் போன்ற ஆண் பிள்ளைகளுக்கு வேலையிருக்காது. படைத் தலைவர்கள் பிறகு கிடையாது. படைத் தலைவிகள்தான் இருப்பார்கள்."

இதைக் கேட்ட அல்லியும் புன்முறுவல் செய்தாளா னாலும், விஷயத்தை மாற்றாமல் பழையபடி தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள முற்பட்டு, "இருக்கட்டும் படைத் தலைவரே! என் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்ல வில்லையே" என்றாள்.

இளஞ்செழியன் மீண்டும் பட்டுச் சீலையை ஆராய்ந் தான். பிறகு தன் கத்தியால் இரண்டு மூன்று இடங்களைச் சுட்டிக் காட்டி, "அல்லி! மன்னரின் கூர்மையான புத்தியை யும் இரும்பிடர்த்தலையாரின் போர்த் திறமையையும் அறிந்தவர்களுக்கு அவர்கள் படை திரட்டக்கூடிய இடத்தைக் கண்டுபிடிப்பது ஒரு பிரமாதமல்ல. டைபீரியஸின் சதியால் நான் தமிழகத்திலிருந்து போன பிறகு இரும்பிடர்த் தலையாரும், மன்னரும் புகாரிலேயே ஒரு படையைத் திரட்டியதாகக் கேள்விப்பட்டேன். அது எத்தனை தூரம் உண்மையோ எனக்குத் தெரியாது..." என்று ஏதோ மேலும் சொல்லப் போனவனை ராணியின் குரல் தடுத்தது. "அது உண்மைதான் படைத் தலைவரே! சந்தேகம் வேண்டாம்" என்றாள் ராணி.

தனது கடைசி வார்த்தைகளால் ராணி சுயநிலை அடைந்துவிட்டதைப் புரிந்துகொண்ட படைத் தலைவன் வியப்புடன், "என்ன ராணி! கரிகாலர் புகாரில் படை திரட்டியது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"மற்றவர்களைவிட எனக்கு நன்றாகத் தெரியும். என்னைவிட டைபீரியஸுக்கு நன்றாகத் தெரியும்" என்றாள் ராணி.

"விளக்கிச் சொல் ராணி" என்று ஆவலுடன் கேட்டான் படைத் தலைவன்.

ராணி சொன்னாள்: "இரும்பிடர்த்தலையாரும் கரிகாலரும் இங்குள்ள பரதவரையும் இதர சோழ வீரர் களையும் கொண்டு ரகசியப் படையொன்று அமைத்தார்கள். மெள்ள பூம்புகாரை வசப்படுத்திக் கொண்டு கடல்வழியை அடைத்து விட்டால், இருங்கோவேளுக்கு சேரன் உதவி கடல் மூலம் கிடைக்காதென்றும், தரை மூலம் போர் நடந்தால் முதலில் உள்நாட்டுக் கலகத்தைத் கிளப்பி, சோழ நாட்டை வசப்படுத்திக் கொண்டு பிறகு சேரபாண்டியர்களைக் கவனிக்கலாமென்றும் கரிகால்வளவர் நினைத்திருக்க

வேண்டும். பூம்புகாரை வசப்படுத்த அவர்கள் செய்த முயற்சி ஓரளவு பலனும் தந்தது. ரகசியப்படை வலுத்தது. காவிரிமூலம் படகுகளில் அந்தப் படையினர் உலாவுவதும் சாத்திய மாயிற்று. ஏன் என்னையும் கருவூர் சமண அடிகளையும்கூட இரும்பிடர்த்தலையார் தன் வீரர்களைக் கொண்டு வளைத்து அழைத்துச் சென்றார்..."

ராணியின் பேச்சை இடையில் வெட்டிய படைத் தலைவன் கேட்டான், "உன்னையும் சமணத் துறவியையுமா ராணி?" என்று.

"ஆம் படைத் தலைவரே! இரவில் முன்னேற்பாட்டின் படி, பரதவர் குடிசைகள் பக்கம் சென்றேன். பிறகு டைபீரியஸின் வீரர்களிடமிருந்து தப்ப நானும், அடிகளும் சுங்கச் சாவடிக்குப் பக்கத்திலிருந்த பழைய மண்டபத்துக்குப் போனோம். அங்கு பொதிமூட்டைகளுக்கிடையில் இரும் பிடர்த்தலையாரும், அவர் வீரர்களும் மறைந்திருந்தார்கள். அதுமட்டுமல்ல, எங்களைத் தொடர்ந்த வீரர்களிடமிருந்து எங்களைக் காத்தவர் மன்னர் கரிகாலர்தான்" என்றும் ராணி கூறினாள்.

"மன்னரா?" ஆச்சரியத்துடன் எழுந்தது இளஞ் செழியன் கேள்வி.

"ஆம் படைத் தலைவரே! மன்னரைத்தான் பரதவர் குடிசையில் சந்தித்தேன். முதுகில் குத்தப்பட்டிருந்த என்னைச் சமண அடிகளின் தோளில் ஏற்றித் தப்ப வைத்தவரும் அவர்தான். துரத்தி வந்த டைபீரியஸின் வீரர்களை வாள் சுழற்றித் தேக்கியதும் அவர்தான்" என்று அன்று நடந்த சம்பவங்களை விவரித்த ராணி, "ஆம் படைத் தலைவரே! பிறகு என்னையும், சமண அடிகளையும் பொதிப் படகுகளில் இரும்பிடர்த்தலையாரும் அவரது வீரர்களும் கொண்டு போனார்கள். இதிலிருந்து தெரியவில்லையா புகார் கிட்டத் தட்ட அவர்கள் இஷ்டப்படி ஆடிக்கொண்டிருந்ததென்று?" என்று முடித்தாள்.

இளஞ்செழியன் சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனையில் இறங்கினான். பிறகு கேட்டான், "ஆம் ராணி! அப்படி யானால் புகார் ஏன் அவர்கள் வசம் சிக்கவில்லை?" என்று.

"எதிரி டைபீரியஸைத் தவிர வேறு யாராவது இருந்தால் சிக்கியிருக்கும். படை திரட்டப்பட்டது டைபீரியஸுக்குத் தெரியும். அவர்கள் காவிரியில் படகுகளில் அடிக்கடி உலாவியதும் அவனுக்குத் தெரியும். டைபீரியஸ் மட்டும் உடனே அவர்கள்மீது பாய்ந்திருந்தால், மன்னர் திட்டம் பலித்திருக்கும். ஆனால், நரியிலும் தந்திரம் மிகுந்த டைபீரியஸ் ரகசியப் படையை வளரவிட்டான், ஆட்டுக் கிடாவைப் போல. ரகசியப் படையில் சேர்ந்த ஒவ்வொருவனும் இருக்குமிடம், அவர்களுக்கு உதவும் பரதவர்களின் பெயர்கள், அத்தனையையும் அறிய ஒற்றர்களை ஏவினான். அவசரமாக ரகசியப் படையை நசுக்கினால், ஒருவேளை மக்கள் யவனர் மீது கொதித்தெழக் கூடும் என்பதால், உடனே எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை டைபீரியஸ். சிறுகச் சிறுக அந்தப் படையினரைச் சிறை செய்தான். சிலர் திடீரென மறைந்தனர், சிலர் சிறையில் உறைந்தனர். சிலர் சடலங்கள் காவிரி ஓரத்தில் ஒதுக்கப் பட்டன. டைபீரியஸின் முறைகள் மன்னருக்குப் புரிந்திருக்க வேண்டும். டைபீரியஸின் கை நீளத் துவங்கிய சில தினங்களில் மன்னர் ரகசியப் படையைக் கலைத்திருக்க வேண்டும். அப்புறம் அதன் சுவடு எதுவுமே புகாரில் தெரியவில்லை" என்றாள் ராணி.

இளஞ்செழியன் அவள் சொல்வதை ஆமோதிப்பது போல் சிரக்கம்பம் செய்து, "மன்னருக்கு இது ஒரு தோல்வி தான் ராணி! நானிருந்தால் அந்தத் தோல்வி ஏற்பட்டிருக் காது" என்றான்.

"நீங்களிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?" என்று கேட்டாள் ராணி.

"நானிருந்தால், முதன் முதலில் காவிரிப் படகுகளில் ஆட்களை உலாவ விட்டிருக்கமாட்டேன். பல நாட்டவரும் படகுகளைச் செலுத்தும் பரந்த நீர்ப் பரப்பில், அதுவும் சுங்க

அதிகாரிகளின் கண்ணோட்டத்தில் படகுகளை உலாவ விடுவது அபாயம். நடக்கும் எதுவும் நிலத்தில் நடந்திருக்க வேண்டும். நமது வீரர்கள் ஒற்றர்களாகவும் பணியாட்களாகவும் மாறி டைபீரியஸிடம் சேவகம் செய்திருக்க வேண்டும். அவசியமானபோது வாளேந்தவும், புகாரின் கடற்படைக் கோட்டை வாயில்களைத் திறக்கவும் எதிரியின் ஆயுத சாலையை நிர்மூலமாக்கவும் அவர்கள் பணியாற்றியிருக்க வேண்டும். பகிரங்கமாக மன்னர் இங்கு உலாவியதே பிசகு. மன்னரை அறியாதவர்கள் புகாரில் வெகு சிலர். யவனர் கேளிக்கைகளிலும் பந்தயங்களிலும் சிறுவயது முதலே அவர் கலந்து கொண்டவர். அவர் புகாரிலிருப்பதை டைபீரியஸ் அறிவது பிரமாதமல்ல. அறிந்த பின்பு ரகசியப்படை திரட்டப்படுமென்பதும் எளிதில் ஊகிக்கக்கூடிய விஷயம். அது கிடக்கட்டும் ராணி, மன்னரின் அந்த முயற்சிதான் தோல்வியடைந்து விட்டது. அடுத்த முயற்சி வெற்றி பெற இந்தச் சீலையைக் கவனியுங்கள்'' என்று கூறிய இளஞ் செழியன் மீண்டும் அல்லியை நோக்கி, "அல்லி! மலையும் காடும் மிகுந்த இந்த இடத்தில் தான் மன்னர் இருப்பார் என்பதை நான் எப்படி ஊகித்தேன் என்று கேட்டாயல்லவா? இதோ பார், குணவாயில் சேர நாட்டின் கிழக்கு வாயிலாகக் கருதப்படுகிறது. ஆகவே, அதற்கு வெளியிலுள்ள கிராமங்கள் அனைத்தும் சேர நாட்டு ஒற்றர்களின் கண்காணிப்பில் இருக்கும். நீண்ட தூரம் படைத் தளத்தைத் தள்ளிப் போட்டால், கரிகாலரின் ஒற்றர்கள் சேர நாட்டைக் கண்காணிக்க முடியாது. தவிர இந்த இடத்தில் காடுகள் அடர்த்தி. உள்ளிருக்கும் படையைப் பகற்காலத்திலேயே பார்க்க முடியாது. ஆனால் படையிலிருந்து பிரியும் தனி ஒற்றர்கள் எப்பொழுதும் நிர்ப்பயமாக எதிரிப் பிராந்தியத்தில் உலாவலாம். எதிரிக்குச் சந்தேகம் வலுத்தால் காட்டில் மறையலாம். காடு அடர்த்தியானதால் ஆயுதங்கள் கொண்டு வரும் வண்டிகள் இதற்குள் புகமுடியாது. புகுந்தாலும் மரங்கள் தடுக்கும். ஆகவே இந்த இடத்தில் படை திரட்டப்

படும். இது தளமாக முடியும் என்ற நினைப்பே எதிரிகளுக்கு இருக்காது. புத்திசாலியான எந்தப் படைத் தலைவனும் ரகசியத் தளத்தை இங்குதான் அமைப்பான். மன்னர் அறிவின் திறத்தைப்பற்றி நான் உனக்குக் கூறவேண்டுமா நாங்கூர்வேள் மகளே!" என்று விளக்கினான்.

அல்லியின் முகம் நாணத்தால் சிவந்தது. "அதையும் புரிந்துகொண்டு விட்டீர்களா?" என்றாள்.

"நீ நாங்கூர்வேள் மகளானதும் சோழ நாட்டின் பிற்கால ராணியாக மன்னர் உன்னை ஏற்றதும் எனக்குத் தெரியும். இதைப்பற்றித்தான் சற்று முன்புகூட விவாதித்தோமே. இந்த விவரங்கள் அனைத்தையும் தற்சமயம் சோழ நாடெங்கும் உலாவும் எனது ஒற்றர்கள் கூறினார்கள். அதில் எனக்கு ஆச்சரியமில்லை அல்லி. வண்டைப் பழிக்கும் கருவிகளையும், மன்னருக்காக உயிரையும் கொடுக்கத் துணியும் இதயத்தையும் உடைய என் அல்லியைவிடச் சிறந்த ராணி சோழ மண்டலத்துக்கு எங்கிருந்து கிடைக்கப் போகிறாள்?" என்ற இளஞ் செழியன், மீண்டும் பட்டுச் சீலையை நோக்கித் தலையைத் தாழ்த்தி, "நான் வந்த ஒரு மாத காலமாகச் சோழ நாட்டின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தலைமறைவாயிருந்து கவனித்து வருகிறேன். தலையை நான் கவசத்தால் மறைப்பதைக் கூறவில்லை. அந்த வேடம் புகாருக்கு மட்டும்தான். மற்ற இடங்களில் நேராகவும் போகிறேன், மாறு வேடங்களிலும் போகிறேன். அப்படிப் போய்ப் பல இடங்களையும் ஆராய்ந்ததன் விளைவாகத்தான் இந்தப் பட்டுச் சீலையில் திட்டத்தைத் தீட்டினேன். இதோ புலிச் சின்னம் குணவாயிற் கோட்டம். இதோ இருக்கும் ஈட்டி தான் இருங்கோ வேளிருக்கும் உறையூர். அவனுக்குப் பின்னால் பாண்டிய நாடு. பக்கவாட்டில் சேர மலைநாடு. இந்த மூன்று இடங்களும் அருகிலிருப்பதால், மூவருடன் தனித்தனியாகப் போரிட முடியாது. ஆகவே மூவரையும் சேர்த்து ஓரிடத்துக்கு இழுக்க வேண்டும். அந்த இடத்தைத் தான் இந்தப் பெரும் சிவப்புப் புள்ளியால் குறிப்பிட்டிருக்கிறேன். அங்கு நாம் சந்திப்போம்

சேர பாண்டியர்களையும், வேளிர்களையும். அங்கு அவர்கள் முறியடிக்கப் பட்டால், பின்வாங்க இந்த ஒரே ஒரு வழி தானிருக்கிறது. அந்த வழியில் அவர்களை வடக்கு நோக்கிப் போகவிட்டு இந்தச் சிறிய சிவப்புப் புள்ளியிருக்குமிடத்தில் மடக்கி நிர்மூலமாக்குவோம்" என்றான்.

"ஏன், நேராக உறையூரைத் தாக்கிப் பிறகு பக்கத்தில் ஏழு காதத்திலிருக்கும் கருவூரைத் தாக்கினால் என்ன?" என்று கேட்டாள் ராணி.

"இதோ பார் ராணி! உறையூரை அடையக் காவிரியைக் கடக்க வேண்டும். அங்கிருந்து கருவூரை அடைய ஆம்பிரா வதியைக் கடக்க வேண்டும். இரண்டு நதிகளின் இடைஞ்சல் இருக்கிறது. இரண்டு பெரும் கோட்டைகளையுடைய இரண்டு தலைநகரங்களையும் வளைத்து ஓடுகின்றன. அந்த நதிகளை இயற்கை அரண்களாகச் சோழ சேர மன்னர்கள் எப்பொழுதும் நினைத்து வந்திருக்கிறார்கள். ஆகவே நதி முகப்புகளில் காவற்படை உண்டு. காவற் படைகளைத் தாண்டினால், நதிகளின் இடைஞ்சல், நதிகளைத் தாண்டி னால் செயற்கை அரண்களான கோட்டைகளின் இடைஞ்சல். அதுவும் கருவூர் வஞ்சியின் கோட்டை பலமானது. பல வளைவுகளைக் கொண்டது. வெற்றி கொள்ள முடியாது. நாமிருவரும் முன்பு வஞ்சிக்குச் சென்றபோது கவனித்தேன் அதன் அமைப்பை. சேரனை வெற்றி கொள்வ தானால் அவனைக் கோட்டையிலிருந்து வெளியே இழுக்க வேண்டும் என்று அன்றே முடிவு செய்தேன். ஆகவே இந்தச் சிவப்புப் புள்ளிக்கு அவர்களை இழுக்க வேண்டும்" என்று விளக்கினான் படைத் தலைவன்.

"எப்படி இழுக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டாள் அதுவரை மௌனமாயிருந்த அலீமா.

"நான் இழுக்கப் போவதில்லை அலீமா. மன்னர்தான் இழுக்க வேண்டும். போர் மூளும்வரை இதில் நான் கலந்து கொள்ளப் போவதில்லை" என்றான் படைத் தலைவன்.

ராணியும், அல்லியும் சட்டென்று திரும்பி வியப்புடன் படைத் தலைவனைப் பார்த்தார்கள்: "என்ன! போர் மூளும் வரை கலந்து கொள்ளப் போவதில்லையா?" என்று அல்லி வாய் திறந்தும் கேட்டாள்.

"இல்லை அல்லி! இல்லை" என்றான் படைத் தலைவன்.

"ஏன்?" உஷ்ணத்துடன் வெளிவந்தது அல்லியின் கேள்வி.

"காரணங்கள் பல இருக்கின்றன. ஆனால் அவை எதையும் இப்பொழுது கூறமுடியாது. காரணங்கள் இந்தப் பட்டுச் சீலைச் சித்திரங்களில் இருக்கின்றன" என்று கூறிய படைத் தலைவன், சரேலெனப் பட்டுச் சிலையை மடித்துக் கையிலிருந்த கத்தியால் இரண்டாகக் கிழித்து, அவற்றில் ஒன்றை அல்லியிடம் கொடுத்து, "அல்லி, இதை மன்னனிடம் கொடுத்துவிடு. அவர் புரிந்து கொள்வார்" என்று சொல்லி மற்றொரு பாதியை மடித்துத் தன் மடியில் வைத்துக் கொண்டான்.

படைத் தலைவன் செயல்கள் விசித்திரமாயிருந்தன அந்தப் பெண்கள் மூவருக்கும். ஆனால் அவர்கள் வியப்பைச் சிறிதும் லட்சியம் செய்யாத படைத்தலைவன் சொன்னான்: "என்னிடம் ஆழ்ந்த அன்புள்ள உங்கள் மூவரால் தமிழகம் பிழைக்க வேண்டும். அல்லி! நீ மன்னனிடம் சீலையைக் கொடு. உன்னைப் பத்திரமாக மீண்டும் அலீமா வாணகரை சேர்ப்பாள். பிரும்மானந்தரிடம் எதுவும் சொல்லாதே. திரும்பி வந்த விதத்தைப் பற்றி ஏதாவது சொல்லி மழுப்பி விடு. சீக்கிரம் குணவாயிற் கோட்டத்துக்குப் போ. நீ இருக்க வேண்டிய இடம் மன்னர் அருகில். அலீமா என்னுடன் இருப்பாள். ராணி இருக்க வேண்டிய இடம் டைபீரியஸுக்கு அருகில்."

அலீமா தன் பெருவிழிகளைப் படைத் தலைவன்மீது நாட்டினாள். "ராணி டைபீரியஸின் அருகிலிருக்க வேண்டுமா?" என்றும் கேட்டாள்.

"ஆம்."

"ஏன்?"

படைத் தலைவன் தன் கூரிய விழிகளை அலீமாமீது நாட்டி, "வைரத்தை வைரத்தால்தான் அறுக்கமுடியும்" என்று கூறியதன்றி, "நேரமாகிறது அலீமா! அல்லியை அழைத்துப் போ. நான் ராணியிடம் சில விஷயங்களைத் தனிமையில் பேசவேண்டும்" என்றும் கட்டளையிட்டான்.

98. விதியின் வழி

படைத் தலைவன் கட்டளையைக் கேட்டதும் ஒரு கணம் நிதானித்து ஏதோ யோசித்த அலீமா, அவன் கண்களில் துளிர்விட்ட உறுதியைக் கண்டதும் மேற்கொண்டு அந்த அறையிலிருப்பதால் பயனேதுமில்லை என்பதையும், ராணியுடன் ஏதோ அந்தரங்கமாகப் படைத் தலைவன் பேச விரும்புகிறானென்பதையும், அந்தப் பேச்சில் தன்னையோ அல்லியையோ கலக்கவிடும் யோசனை அவனுக்குச் சிறிதளவும் இல்லையென்பதையும் புரிந்து கொண்டாளாகையால், "வாருங்கள் சோழ நாட்டு ராணி" என்று அல்லியை அழைத்துக் கொண்டு வாயிற்படியை நோக்கி நடக்கத் துவங்கினாள். அல்லியின் மனம் சற்று முன்பு கேட்ட பல போர்த் திட்டங்களால் பெரிதும் குழம்பிக் கிடக்கவே அவள் மஞ்சத்திலிருந்து துரிதமாக எழுந்திருக்கவில்லை. எழுந்த போதும் சட்டென்று வாயிற்படியை நோக்கி நகரவுமில்லை. 'பல வருடங்களாகப் பழகிய தான் அறியக்கூடாத அத்தனை பெரிய என்ன ரகசியத்தை நேற்று வந்த ராணியிடம் படைத்தலைவர் பேசமுடியும்?' என்று சிந்தித்துக் கொண்டு ஒரு விநாடி மஞ்சத்தின் பக்கத்தில் நின்று ராணியையும், படைத் தலைவனையும் மாறி மாறிப் பார்த்தாள். யவன ராணியின் எழில் முகம் பூராவும் படைத் தலைவன் கட்டளையின் விளைவாகப் புதுச் சோபையைப் பெற்று, மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து கிடந்தது. ஆழம் கண்டுபிடிக்க முடியாத மோகனப் புன்னகையொன்று அவளுடைய

செவ்விய இதழ்களில் மலர்ந்து கிடந்தது. அவள் நீலமணிக் கண்கள் ஓரளவு வெற்றி கொண்ட பெருமிதப் பார்வையை அல்லியின்மீது வீசின. 'இளஞ்செழியன் யாருக்கு அடிமை என்பதைப் பூவழகியிடம் சொல் போ' என்று ராணியின் கண்கள் தன்னை நோக்கி நகைப்பதாகத் தோன்றியது அல்லிக்கு. அந்தக் கண்களை விட்டுச் சிறிது சிரமத்துடன் பிரிந்த தன் கண்களைப் படைத் தலைவன்மீது ஓட்டிய அல்லி, அவன் முகம் ராணியின் முகத்துக்கு நேர் விரோதமான உணர்ச்சிகளைக் கொண்டிருந்ததையும், அதில் கவலை மண்டிக் கிடந்ததையும் கவனித்தாள். அதைக் கவனித்ததால் ஓரளவு மகிழ்ச்சியும் கொண்ட அல்லி, "படைத் தலைவர் உள்ளத்தில் கவலை விரிந்து கிடக்கிறது. ஆகவே ராணி எதிர்பார்க்கிறபடி வெற்றிக்கு இங்கு இடமில்லை" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு மெள்ள வாயிற்படியை நோக்கி நடந்தாள். எதற்கும் படைத் தலைவன் தன்னையும், ராணியுடன் நடத்தும் பேச்சில் அனுமதிப்பானோ என்ற சபலத்தால் வாயிற்படியில் நின்று ஒருமுறை இளஞ்செழியனைப் பார்க்கவும் செய்தாள். இளஞ்செழியன் கண்கள் சிறிதும் சலனமடையாமல் உறுதியுடன் அவளை நோக்கின. "போய்வா அல்லி? சொன்ன விஷயங்கள் நினைப்பிலிருக்கட்டும். பட்டுச் சீலையின் பாதியை மன்னரிடம் சேர்த்துவிடு. உயிரை விட்டாலும் விடு. ஆனால் அதை வேறு யார் கையிலும் சிக்க விடாதே" என்று அந்தக் கண்களிலிருந்த உறுதி குரலிலும் தொனிக்கக் கூறவே, அதற்கு மேலும் அங்கு நிற்பதில் பயனில்லை என்பதை உணர்ந்து கொண்ட அல்லி, சரேலெனக் கதவைச் சாத்திக் கொண்டு அலீமாவைத் தொடர்ந்து வெளியேறினாள். அவர்கள் சென்றதும் அல்லி கோபத்தால் சாத்தியதால் சட்டென்று மூடி, பாதி திறந்து விட்ட கதவை நன்றாகச் சாத்திவிட்ட படைத் தலைவன் மீண்டும் ராணி உட்கார்ந்திருந்த மஞ்சத்தை நோக்கினான்.

கால்களைக் கீழே தொங்கப் போட்டுக் கொண்டு இடது கையை ஒருபுறம் ஊன்றி வலது கையை மடியில் செயலற்றுக்

கிடக்கவிட்டுத் தலையை ஒருபுறமாகச் சாய்த்து மோகனாகாரமாக உட்கார்ந்திருந்தாள் ராணி. அறையின் மூலையிலிருந்த சிறு விளக்கின் சுடர் வீசிய பொன்னிற வெளிச்சம் ராணியின் கூந்தலோடு போட்டி போட முயன்று களைத்துவிட்டதால் மெள்ள மெள்ள விளக்குச் சுடர் இழிந்து தன் ஆகிருதியை அடக்கிக் கொண்டிருந்தது. அப்படி அது ஓரளவு பிரகாசத்தைக் குறைத்துக் கொண்டதால், வெற்றி கொண்ட ராணியின் பொன்னிறக் கொண்டையிலிருந்து விலகிய ஒரு குத்து இழை பிரிந்து காற்றிலலைந்து விளக்கின் ஒளியை நோக்கிக் கேலி செய்தது. ஒளி தரும் விளக்கை அப்படி அடியோடு முறியடிப்பது தவறு என்ற காரணத்தால் வெண்மையான அவள் வழவழத்த கன்னங்கள் சுடரின் ஒளியை ஓரளவு வாங்கிக்கொண்டு மெருகு கொடுக்கப்பட்ட பொற்கட்டிகளெனப் பிரகாசித்தன. அப்படிப் பிரகாசித்த கன்னங்கள் படைத் தலைவன் விழிகளால் தாக்கப்படவே உள்ளே ஓடிக்கொண்டிருந்த உணர்ச்சிகள் கன்னத்தின் பொன்னிறத்தில் சிவப்பையும் சிறிது பாய்ச்சிவிட்டன.

அவன் உணர்ச்சிகள் நிலை தடுமாறுவதை ராணி தன் கடைவிழிகளால் கவனித்து வெட்கமும், மகிழ்ச்சியும் உடல் பூராவும் ஊடுருவி ஓடச் சிறிது தத்தளித்தாள். பிறகு அந்த ஆண்மகனின் உணர்ச்சிகளை அலைக்கழிக்கக்கூடிய சக்தி தனக்கிருப்பதை நினைத்து மனம் பூரிக்கவும் செய்தாள். தான் ஏதாவது பேச்சுக் கொடுக்கும் பட்சத்தில் படைத் தலைவன் உணர்ச்சி ஓட்டம் அறுந்து அவன் சுயநிலை அடைந்து விடுவான் என்ற எண்ணத்தால் ஏதும் பேசாமல் மௌனமே சாதித்தாள் ராணி. இயற்கையின் எழிலெல்லாம் திரண்டு வந்ததுபோல் எதிரே மஞ்சத்தில் உட்கார்ந்தும் வாயைத் திறந்து ஒரு வார்த்தையும் பேசாமல் கிரேக்க நாட்டு வெண்கல சிலையென இருந்த யவன ராணியைப் பார்த்துத் தவித்த படைத் தலைவனின் இதயத்தில் முன்பு விவரித்த போர்த் திட்டங்கள் எழுந்து புத்தியின் மோக வெறியை மெள்ளப் பிளக்கவும் முற்பட்டது.

அப்படிப் பிளக்கத் துவங்கிய நேரத்தில் தன் பலவீனத்தை நினைத்து இளஞ்செழியன் பெரிதும் ஆச்சரியப் பட்டான். 'பூவழகியிடம் இதயத்தைப் பறிகொடுத்திருக்கும் என் உணர்ச்சிகளை வளைக்கக்கூடிய இந்த ராணியின் எழில் எத்தனை விசித்திரமானது! உறுதி மிக்கவன் என மக்கள் கொண்டாடும் என் உறுதியைப் பிளக்கும் வன்மை வாய்ந்த இந்த ராணியின் மோக வலை எத்தனை பலமானது?' என்று நினைத்து நினைத்து வியந்த இளஞ்செழியன், 'என் மனத்தை அலைக்கவும், என் நாட்டைக் குலைக்கவும் ஏன் வந்தாள் இந்த ராணி? இவளை ஏன் படைத்தான் ஆண்டவன்?' என்று நொந்துகொண்ட படைத்தலைவன், 'சரி சரி! இவளை நினைத்தது போதும். இனியாவது நாட்டைப் பற்றி நினைப்போம்' என்று தன்னைத்தானே திடப்படுத்திக் கொண்டு, ராணி உட்கார்ந்திருந்த மஞ்சத் தருகில் வந்து அவளெதிரே நின்றுகொண்டு, "ராணி!" என்று சற்றுக் கடுமையான குரலில் அழைத்தான்.

ராணி தலையை நிமிராமலும் அவனை ஏறெடுத்துப் பார்க்காமலும் இருந்தாள். அவன் குரலிலிருந்த கடுமைக்கு அவன் பலவீனம் காரணமென்பதை அவள் நன்றாக உணர்ந் திருந்தாள். தன்னுடைய எழில் வலையை அறுத்தெறியவே கடுமைக் குரலெனும் கத்தியைப் பலவந்தமாக வரவழைத்துக் கொண்டிருக்கிறான் படைத்தலைவன் என்பதைச் சந்தேக மறப் புரிந்துகொண்ட ராணி, தலையைத் தாழ்த்திய வண்ணமே புன்னகை கோட்டினாள். 'பெண்கள்தான் பலவீனமானவர்கள் என்று யவனநாட்டில் சொல்கிறார்கள். ஆனால், ஆண்கள் பலவீனம் பெண்களுக்கில்லை. இதோ என் எதிரே என்னைக் கடுமைக் குரலில் அழைக்கும் இந்தப் படைத் தலைவர், எத்தனை பலவீனமானவர். பாவம்! ஏன் அப்படித் தத்தளிக்க வேண்டும் இத்தனைப் பெரிய வாள்வீரர்? இவர் ஒரு சொல்லுக்கு என் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணிப்பேனே! இது ஏன் புரியவில்லை இவருக்கு?' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட ராணி,

இளஞ்செழியன் நிலை கண்டு பரிதாபமும், வெட்கமும் இணைந்த உணர்ச்சிகளுக்கு இலக்காகி எங்கோ கனவுலகில் சஞ்சரித்தாள்.

கதவருகில் எட்ட இருந்த சமயத்திலேயே நிதானத்தை இழந்த படைத் தலைவன் பட்டுச்சீலை உதவியால், ஓரளவு நிதானத்தை அடைந்தாலும், மஞ்சத்தினருகில் வந்த பிறகு ராணியின் சமீபத்தில் அவன் நிதானம் காற்றில் பறந்தது. 'ராணி' என்று அவன் அழைத்தபோது சொல்லில் தொனித்த கடுமையும், வெளிக்குக் கடுமையாய் இருந்ததேயொழிய அந்தக் கடுமையை உணர்ச்சிகளுடன் இழைக்கும் சக்தியைப் புத்தி அறவே இழந்தது. தலையைக் குனிந்து ராணி உட்கார்ந் திருந்ததால் பெரும் தங்கக் கட்டியில் இழை இழையாக வேலை செய்யப்பட்டதுபோல் தெரிந்த அவள் பொன்னிறக் கொண்டை அவன் கண்களுக்கெதிரே எழுந்து அவன் சித்தத்தைக் குழம்பிக்கொண்டிருந்தது. அந்தக் கொண் டைக்குக் கீழேயிருந்த கழுத்துப் பிரதேசம் மிக வெண்மையாக இருந்தது மட்டுமல்லாமல், உள்ளே ஓடிய நரம்புகளின் காரணமாக இரண்டொரு இடங்களில் பச்சையும் தட்டிக் கிடந்ததாலும், தவிர அங்கு சில மயிரிழைகளும் தங்கக் கம்பிகளென வளைந்து கிடந்ததாலும், வெள்ளைக்கல்லில் மரகதமும், தங்கமும் இழைக்கப் பட்டிருப்பது போன்ற பிரமையைத் தந்ததன் விளைவாக, படைத் தலைவன் கண்கள் கொண்டையை விட்டுப் பின்புறக் கழுத்தில் நீண்ட நேரம் பதிந்து நின்றன.

படைத் தலைவன் அவள் தோள்மீது தன் கையை மெள்ள வைத்து மீண்டும் ஒருமுறை, "ராணி!" என அழைத் தான்.

இம்முறை அவன் குரலில் கடுமையில்லை. குழைவு நிரம்பியிருக்கிறது. காதல் மயக்கம் கரைபுரண்டு ஓடியது. அந்த மாயாதேவிக்கு எதிரில் உணர்ச்சிகளைக் கட்டுபடுத்துவது அவசியம் என்பதை உள்ளம் உணர்த்தினாலும், உணர்ச்சிகள் இடம் கொடாததால் அவள் தோளில் கையைச் சற்றுப்

பலமாகவே அழுத்தினான் படைத் தலைவன். அவன் குழந்தைபோல் தத்தளித்துத் தன்னெதிரே நிற்பதைப் பரிபூரணமாகப் புரிந்துகொண்ட ராணி, அவனை அதிகம் சோதிப்பது சரியல்ல என்று தீர்மானித்தது, "இப்படி உட்காருங்களேன்?" என்று மெல்லிய குரலில் சொல்லியதன்றி, சிறிது நகர்ந்து மஞ்சத்தில் தன் பக்கத்தில் உட்கார இட மளித்தாள்.

மிகவும் தீனமான உணர்ச்சிகளால் மெல்லக் குழைந்த ஏதோ மேலைநாட்டு நரம்பு வாத்தியம் இழைக்கப்பட்டது போன்ற மெல்லிய அவள் குரல் ஒலியைக் கேட்ட படைத் தலைவன் அவள் உத்தரவை மீறச் சக்தி இல்லாதவன் போல் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். அவளது இடது கரத்தை எடுத்துத் தன் இரு கைகளிலும் ஆதரவாகப் பிடித்துக் கொண்ட இளஞ்செழியனோ, கரத்தை அவன் கரங்களி லிருந்து சிறை மீட்க இஷ்டப்படாத ராணியோ நீண்ட நேரம் ஏதும் பேசவில்லை. உணர்ச்சிகளே பேசிக் கொண்டன. விடிய முக்கால் ஜாமமே இருந்தது. அந்த முக்கால் ஜாமப் பொழுதும் கனவேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஓட்டத்தைக் காதலில் கட்டுண்டிருந்த அந்த இருவரும் அறியவில்லை. காதலுக்குக் கண்தான் இல்லை; உணர்ச்சிகளுமா இல்லை! இருந்தால் பொழுது ஓடுவதை அவை ஏன் உணர்த்தவில்லை? இதுவரை யாருக்கும் புரியாத விந்தை இது! விடை கிடைக்காத வேடிக்கை!

இயற்கையின் மடியில் மோதிய காதல் அலைகளின் வீச்சில் புரண்டுகொண்டிருந்த அந்த இருமனங்களில் ராணியின் மனமே சற்று உறுதியுடனிருந்ததால் அவள் பொழுது போவதை மெள்ள மெள்ள உணர முற்பட்டாள். கீழேயிருந்த வீரர்கள் அவசர அவசரமாக நடமாட முற்பட்ட தால் ஏற்பட்ட காலடிகளின் சத்தம் அவள் காதில் விழுந்தது. அதிக நேரம் தாமதித்தால் படைத்தலைவனுக்கு ஏற்படக் கூடிய ஆபத்தை அவள் அறிந்திருந்தாளாகையால், அவளே மௌனத்தைக் கலைத்து, "படைத் தலைவரே!" என்று அழைத்தாள்.

"ஹூம்" படைத்தலைவன் பதில் அந்த ஒரு ஹூங்காரத்தின் மூலம் வந்தது.

"நீங்கள் சற்று முன் என்னை அழைத்தீர்கள்?" என்றாள் ராணி.

"ஆமாம்." இம்முறை படைத்தலைவன் ஹூங்காரம் வார்த்தையாக மலர்ந்தது.

அவன் உணர்ச்சிகள் மெள்ள நிதானமடைவதை உணர்ந்த ராணி, "எதற்கு அழைத்தீர்கள்?" என்றொரு கேள்வியை வீசினாள்.

"உன்னிடம் பேசவேண்டியிருக்கிறது" என்றான் படைத்தலைவன் ஏதோ புது ரகசியத்தைச் சொல்லுபவன் போல.

'பேசுவதற்குத் தவிர வேறெதற்கு அழைப்பார்கள்?' என்று தனக்குள் சொல்லிக்கொண்ட ராணி, "என்ன பேச வேண்டியிருந்தது?" என்று கேட்டாள்.

"பேசவேண்டியிருந்தது என்பதைவிடக் கேட்கவேண்டியிருந்தது என்று சொன்னால் பொருந்தும் ராணி" என்றான் படைத் தலைவன் திட்டமாக, இம்முறை சுய உணர்ச்சிகளை நன்றாக அடைந்துவிட்ட காரணத்தால்.

"என்ன கேட்க வேண்டியிருந்தது?" என்று ராணி கேட்டாள். தன் தலையை நிமிர்த்தி படைத் தலைவன் மீது தன் நீலமணிக் கண்களை நாட்டி.

"ஒரு உதவி கேட்க வேண்டியிருந்தது."

"கேளுங்கள்."

"செய்வாயா?"

"யாருக்கு உதவி?"

"அதுதான் முன்பே சொன்னேனே. என் நாட்டுக்குத்தான்."

"அது நடவாது."

"ஏன்?"

"உங்கள் நாட்டைப்பற்றி எனக்கு அக்கறையில்லை."

"அப்படியானால் உதவமாட்டாயா?"

"உதவுவேன், உதவி உங்களுக்கென்றால்."

"நான் வேறு, நாடு வேறா?"

"என் சம்பந்தப்பட்ட வரையில் அப்படித்தான்."

"ஏனப்படிச் சொல்கிறாய் ராணி?"

"வேறெப்படிச் சொல்வது. உங்களை நான் மணக்க முடியும், நாட்டை மணக்க முடியுமா?"

இந்தக் கடைசிக் கேள்வி இளஞ்செழியன் உடலை ஒரு உலுக்கு உலுக்கியது. "மணமா ராணி" என்று கேட்டான் சங்கடம் மிகுந்த குரலில்.

இளஞ்செழியன் கரங்களில் சிறையிருந்த ராணியின் பூங்கரம் மெள்ளச் சுழன்றது. "ஆம் படைத் தலைவரே!" என்ற குரல் திட்டமாக வெளிவந்தது.

"என்ன? அத்தனை நிச்சயமாகச் சொல்கிறாய்?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

"நான் சொல்லவில்லை படைத் தலைவரே! விதி சொல்கிறது. விதி சொல்வதை யவன குருமார்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். நானும் முதன் முதலாக உங்களை இங்கு சந்தித்தபோது சொல்லவில்லையா, விதி நம்மிருவரையும் பிணைத்திருக்கிறது என்று. விதியை அப்பொழுது நீங்கள் நம்பவில்லை. ஏளனம் செய்தீர்கள். ஆனால் நிகழ்ச்சிகளை எண்ணிப் பாருங்கள். நான் புகாரின் கடற்கரையில் உங்கள் காலில் தட்டுப்பட்ட நாளாய் எத்தனை பேர் நம்மைப் பிரிக்கப் பார்த்தார்கள்? முடிந்ததா? உங்களை யவன மரக் கலத்தில் ஏற்றி அழித்து விட டைபீரியஸ் முயன்றதே முடியவில்லையே! மீண்டும் மீண்டும் நாம் ஒன்றாகத் தள்ளப் படுகிறோம். நீங்கள் பிரிந்த பின் முதன் முதலில் சந்திப்பது பூவழகியை அல்ல என்னைத்தான். பூவழகி எந்தச் சந்தர்ப்பத்திலும் விதியின் கரங்களால் பிரிக்கப்பட்டாள் என்பது ஞாபகமிருக்கட்டும். முதலில் உங்கள்மீதுள்ள பொறாமையால் உங்களை விலக்கினாள். மனமுடைந்த நீங்கள் கடற்கரையில் நடந்து வந்தீர்கள். நான்தான் மோதினேன் உங்கள் காலில், தவழ்ந்தேன் உங்கள் கைகளில். பிறகு கருவூர் வஞ்சிக்கு

ஒன்றாகச் சென்றோம். உறையூருக்கு ஒன்றாகப் பயணம் செய்தோம். அடுத்தபடி காவிரியின் விஷத் துளிகளால் பிரிக்கப்பட்டோம். நீங்கள் மீண்டதும் மறுபடியும் இதோ சந்திக்கிறோம். விதி மீண்டும் மீண்டும் நம்மை மோதவிடுகிறது படைத் தலைவரே. இது எத்தனை தெளிவாயிருக்கிறது! யவன குருமார்கள் சோதிடம் ஒருகாலும் பொய்க்காது. இந்தப் புகாரில் நான் முடி சூடத்தான் போகிறேன், நீங்கள் அதற்கு உதவத்தான் போகிறீர்கள். உங்களுக்கு நான் மாலை சூட்டுவது திண்ணம். இந்த மூன்றும் விதி வகுத்துள்ள திட்டங்கள். விண் மீன்கள் விளைத்துள்ள முறைகள். அவற்றைக் கணக்கிட்டு யவன குருமார்கள் சொன்ன தீர்ப்பு டைபீரியஸின் குருட்டுத் திட்டங்களால் சற்று மங்கியிருக்கிறது. ஆனால், இறுதியில் நான் சொல்லியவை நடக்கும். நான் எண்ணியது இதுவரை பொய்த்ததில்லை படைத் தலைவரே! இனியும் பொய்க்காது. ஆகவே விதி வழியில் சாயுங்கள். அதுதான் விவேகம். அதுதான் நடக்கக்கூடியது. அதுதான் உங்கள் நாட்டுக்கும் நன்மை பயக்கும்" என்றாள் ராணி.

படைத் தலைவன் பதிலேதும் சொல்லாமல் உட்கார்ந் திருந்தான். முதலில் தன்மீது கண்களை நாட்டிய ராணி பேச்சு முதிர முதிரக் கண்களை எதிரேயிருந்த அறைத் தாழ்வாரத்தை நோக்கி ஓட்டியதையும், அவள் பேச்சும் கனவில் பேசப் படுவதைப் போலிருந்ததையும் அறிந்ததால் சிறிது மௌனமே சாதித்த படைத் தலைவன், "மணத்தில் மனம் நாடவில்லை ராணி! போர் மூண்டால் நாட்டில் குவியக் கூடிய பிணக் கூட்டத்தை எண்ணித் துடிக்கிறது. துடிக்கும் மனத்துக்குக் காதலிடம் பிடிப்பு ஏது?" என்றான்.

"போரில் சோழர் வெற்றி கண்டால் மனம் களிவெறி கொள்ளுமல்லவா?" என்று ராணி கேட்டாள்.

"ஆம்! கொள்ளும்!"

"அந்தக் களி வெறியில் காதல் வெறிக்கும் இடமிருக்கும் படைத்தலைவரே. அந்தச்சமயத்தில் மணத்துக்கு மனம் இடம் தரும். அப்பொழுதாவது என்னை மணக்க ஒப்புவீர்களா?

கூறுங்கள். சோழ நாட்டு வெற்றியை நான் சம்பாதித்துக் கொடுக்கிறேன்."

"அது நீ கூறும் விதியின் திட்டங்களுக்கு முரண்பாடு அல்லவா?"

"இல்லை."

"ஏனில்லை? நீ புகாருக்கு ராணியானால்?"

"ஆனால் என்ன? ஒரு வல்லரசின்கீழ் பல சிற்றரசுகள் இருப்பது வரலாறு காணாத விந்தையா?"

ராணியின் போக்கு நன்றாகப் புரிந்தது படைத் தலைவனுக்கு. அவளுக்கு என்னபதில் சொல்வது என்று புரியாமல் திகைத்தான். 'ராணியை மணக்க மறுத்தால், அவள் உதவி கிடைக்காது. உதவி கிடைக்காவிட்டால் இருங்கோ வேளை முறியடிக்க வகுத்துள்ள திட்டம் வெற்றியடையாது. இந்தத் தர்ம சங்கடத்துக்கு என்ன செய்வது?' என்று எண்ணிக் கலங்கிய படைத்தலைவன் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். அவன் முடிவைக் கேட்ட ராணி திடுக்கிட்டாள். அவள்கூட எதிர்பார்க்காத முடிவு அது. அந்த முடிவு வீசிய பெரு வெடியால் அவள் உள்ளத்தை அதுவரை கட்டியிருந்த காதல் கயிறுகள்கூடப் பட்டென்று அறுந்தன. மஞ்சத்தி லிருந்து துள்ளி எழுந்து திகைப்பை அள்ளிச் சொரிந்த கண்களை இளஞ்செழியன்மீது நாட்டினாள் யவன ராணி.

99. திருமண ஒப்பந்தம்

வீரம் என்ற சொல்லுக்கு உலக அனுபவம் ஒரு அர்த்தத்தைச் சொல்லுகிறது. வாளைச் சுழற்றி, வேலை வீசி, புஜபல பராக்கிரமங்களால் பிறரை வெற்றி கொள்ளக் கூடியவன் வீரன். அவனுக்குள்ள அந்தச் சக்தி, வீரம் என்பது லோகாயத வழக்கு. ஆனால் தத்துவ வழக்கு வேறு. தன்னைத் தானே எவன் வெற்றி கொள்கிறானோ அவனைத் தான் வீரன் என்று தத்துவங்கள் ஏற்றுக் கொள்கின்றன. அதுதான் வீரம் என்றும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. புஜபல பராக்கிரமங்

களால் பிறரை வெற்றி கொள்ளும் சக்தி பிறரைத் தியாகம் செய்கிறது. தன்னைத்தானே வெற்றி கொள்ளும் சக்தியால், பிறர் அழிவதில்லை. தியாகமும் தன்னுடையதாகவே ஆகிறது. அத்தகைய சக்தியால் பிறர் லாபமடைகிறார்கள். அத்தகைய சக்தியின், தத்துவத்தின் இலக்கணமாய் அன்று விளங்கினான் சோழர் படை உபதலைவனான இளஞ்செழியன்.

இருங்கோவேளின் அதர்மக் கரங்களிலிருந்து சோழ நாட்டுக்கு விடுதலையளிக்க ராணி கூறிய நிபந்தனையைக் கேட்டதும், இதயமே பெரும் பிரளயமாகி உடலையும், ஓர் உலுக்கு உலுக்கி விட்டதென்றாலும், கொந்தளித்த உணர்ச்சி களை மெள்ள அடக்கிக் கொண்ட படைத் தலைவன், ராணியின் பக்கத்திலிருந்து எழுந்து மஞ்சத்தை விட்டுச் சற்று விலகி எட்ட நின்று அவளை மீண்டும் கவனித்தான். அவன் ராணியைக் கவனித்தானே ஒழிய ராணி அவனைக் கவனிக்க வில்லை. அவனது உணர்ச்சி வெள்ளத்தையும், இதயக் கொந்தளிப்பையும் நன்றாக உணர்ந்திருந்த அந்தக் கிரேக்க நாட்டு மோகனப் பாவை, தலையைக் கவிழ்ந்த வண்ணம் மஞ்சத்தில் சிறிதும் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். சற்றுத் தலை நிமிர்ந்து பார்த்தாலோ அல்லது உடலைச் சிறிது அசக்கினாலோ படைத் தலைவன்மீது தான் வீசியிருக்கும் மோகனாஸ்திரம் கலைந்துவிட்டால் என்ன செய்வது என்ற கவலை அவள் உள்ளத்தை ஆட்டிக் கொண்டிருந்தபடியால், சிலை போலவே அவள் உட்கார்ந்திருந்தாள். யவன குருமார்கள் ஜோதிடத்தில் இணையற்ற நம்பிக்கை வைத் திருந்த யவன ராணிக்கு, தன் வாழ்க்கையும், படைத்தலைவன் வாழ்க்கையும் விதியெனும் பலமான கயிற்றால் பிணைக்கப் பட்டிருக்கிறதென்பதில் சந்தேகம் சிறிதுமில்லை என்றாலும், தாங்களிருவரும் திருமணப் பந்தலில் இணைவது எப்பொழுது என்று கிலேசப்பட்டிருந்தாளாகையால், எப்படியும் அன்று படைத் தலைவனிடம் உறுதிமொழியை வாங்கிவிடத் தீர்மானம் கொண்டாள். அவள் தீர்மானத்துக்கு அவள் உள்ளத்திலோடிய மற்றொரு பயமும் காரணமாயிருந்தது.

பூவழகியின் மீது படைத் தலைவனுக்கிருந்த ஆழ்ந்த காதலை அவள் அறிந்தேயிருந்தாள். புகாரில் தான் முதன் முதலாகக் கண் விழித்த அதே இரவில் பிரும்மானந்தர் ஆசிரமத்தில் முதன் முதலாகப் பூவழகியைச் சந்தித்த சமயத்தில் படைத் தலைவன் கண்கள் அவளை விழுங்கி விடுவதுபோல் பார்த்ததை நினைவுபடுத்திக் கொண்டாளாகையால், அத்தகைய ஆழ்ந்த காதலைத் தன் பக்கத்தில் இழுப்பது சுலப மல்ல என்பதையும், புரிந்து கொண்ட யவன ராணி, அந்தத் தனி மாளிகை அறையும், அன்றைய இரவும், தமிழகத்தின் சூழ்நிலையும் அளித்த சந்தர்ப்பத்தை எக்காரணத்தை முன்னிட்டும் இழக்கக் கூடாதென்ற முடிவுக்கும் வந்தாள். அதில் மெள்ள மெள்ளத் தனக்கு வெற்றி கிட்டும் அறிகுறி களும் இருந்ததைக் கவனித்ததால் மௌனமாகத் தலை கவிழ்ந்து மஞ்சத்தில் அமர்ந்தேயிருந்தாள்.

ராணியைக் கவனித்த இளஞ்செழியன் கண்களுக்கோ, அவள் உள்ளத்தை ஆராய முற்பட்ட புத்திக்கோ, அவள் மனத்திலோடிக் கொண்டிருந்த எண்ணங்கள் தெளிவாகப் புரியவில்லையென்றாலும், இரண்டும் அவள் இணையற்ற எழிலில் ஈடுபடவே செய்தன. அந்த ஈடுபாடு ஏற்பட்ட சமயத்தில்கூடப் பூவழகியின் அழகை அவள் அழகுடன் இணைத்துப் பார்த்த இளஞ்செழியன் மனம் பூவழகியிடமே அதிகமாகச் சாய்ந்தது. இயற்கையாக அறத்தின் அடிப்படை யில் எழும் ஆசைக்கும், சந்தர்ப்பவசத்தால் பேரழகு ஒன்றின் ஆசை அலைகளில் விழுந்து புரண்டு மயங்கிக் கிடக்கும் மனநிலைக்கும் வித்தியாசம் நிச்சயமாய் உண்டு என்றே இளஞ் செழியன் நினைத்தான். ராணி அத்தனை அருகாமை யிலிருந்து எண்ணற்ற எழிலம்புகளைத் தொடுக்கும் அச்சமயத் திலும் எங்கோ மறைவிலிருந்து எழும் பூவழகியின் காதலம்பு கள் தாக்கி வீழ்த்துவதால் தன் உள்ளம் பூரணமாக ராணி யிடம் இழுபடாததை எண்ணிப் பார்த்த இளஞ்செழியன், தமிழகப் பெண்கள் கண்ணெதிரிலில்லாத காலத்திலும் அடக்கத்தில் விளையும் அவர்கள் அழகு எத்தனை பலமானது

என்பதை நினைத்து நினைத்து வியந்தான். இத்தகைய நினைப்புகளால் ராணியின் மோகனாஸ்திரங்களிலிருந்து விடுபட்ட இளஞ்செழியன், சற்றுத் தெளிவான மனத்துடனேயே ராணி விதித்த நிபந்தனையை ஆராயத் தொடங்கினான். அதை ஆராய ஆராய, தமிழ்நாடு எத்தனை தூரம் ராணியின் கைகளில் சிக்கிக் கிடக்கிறது என்பதை உணர்ந்தான். அப்படி அது சிக்கியதற்குத் தானும் ஓரளவு காரணமென்பதை அறிந்து கொண்டானானாலும், ராணியிடம் ஏதோ ஒரு தர்மத்தின் சக்தியும் இணைந்து கிடப்பதைப் புரிந்து கொண்டான். இஷ்டப் பட்டிருந்தால் தான் வெளிநாட்டிலிருந்த காலத்திலேயே ராணி புகாரில் முடிசூடி யவனர்களை ஒன்று திரட்டி வாணகரையை அழித்து இருங்கோவேளை நிரந்தரமாகச் சோழர் அரியணையில் அமர்த்தியிருக்கலாம் என்பதை இளஞ்செழியன் சந்தேகமற அறிந்திருந்தான். அப்படி அவள் செய்யாததிலிருந்து ஏதோ ஒரு பிடிப்பு தமிழகத்தின்மீது அவளுக்கு விழுந்திருக்கிறதென்பதையும், எந்தக் காரணத்தை முன்னிட்டும் இருங்கோவேளைப் போன்ற ஒரு அயோக்கியனுக்கு அவள் இடம் கொடுக்கப் பிரியப்படவில்லை யென்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்ட இளஞ்செழியன், அந்த வெளிநாட்டுப் பாவையிடம் ஒருவித அறம் இருக்கிறதென்று தீர்மானித்து சற்று அனுதாபத்துடனேயே ராணியைக் கவனித்தான்.

தலை கவிழ்ந்து மஞ்சத்தில் ராணி மோகனாகாரமாக உட்கார்ந்திருந்தாலும் ஏதோ ஒரு அனாதை உட்கார்ந்திருப்பதைப்போலவே தோன்றியது படைத் தலைவனுக்கு. கண்ணுக்கெட்டாத, சாதாரணமாகப் பயணம் செய்ய முடியாத தூரத்திலிருந்து வந்த ராணி, சொந்த நாட்டிலேயே இருந்திருந்தால், ராஜபோகத்துடன் வாழலாமே என்று எண்ணினான் படைத் தலைவன். அடுலீஸ் பந்தயங்களில் எத்தனை கிரேக்க ராஜகுமாரர்கள் அவள் வெண்ணிறப் பாதங்களில் பொற்காசுகளை மலையாகக் குவிப்பார்கள், அவள் பூங்கை விரல்களைத் தொட எப்படியெல்லாம்

துடிப்பார்கள் என்பதைக் கற்பனை செய்து பார்த்த படைத் தலைவன், 'இத்தனையையும் துறந்து அரசை நிறுவ இங்கு வந்த பின்னும் என் காதலுக்காகச் சகலத்தையும் துறக்கச்சித்தமாயிருக்கிறாளே இவள்! அப்படி என்ன அழகு நான்? அத்தகைய தகுதி என்ன இருக்கிறது எனக்கு?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். தகுதியிருந்தாலும் இல்லாவிட்டாலும் தன்னைக் காதலிக்கும் அந்தப் பெண்ணுக்குத் தான் ஒரு பதிலைச் சொல்லியாக வேண்டும் என்று தீவிர சிந்தனையில் இறங்கினான்.

தலை கவிழ்ந்திருந்த அந்த நேரத்திலும் ராணி புரிந்து கொண்டாள், படைத் தலைவன் பெரும் சங்கடத்திலிருக்கிறானென்பதை. உண்மையில் அந்தச் சங்கடம் அவன் முகத்தில் பிரதிபலிப்பதைச் சிறிது மெள்ளக் கண்களை உயர்த்திய ராணி உணர்ந்துகொண்டாள். மேகம் சூழ்ந்த வானம்போல் கவலை சூழ்ந்து கிடந்த படைத்தலைவனின் முகம் மெள்ள மெள்ளத் தெளிவு படலாயிற்று. ஏதோ பெரும் சங்கிலிப் பிணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதுபோல் கைகளை ஒருமுறை உதறிக்கொண்ட படைத் தலைவன், திடீரென ஏதோ வேகத்தால் உந்தப் பட்டவன்போல் ராணியை நோக்கி, இரண்டடி எடுத்து வைத்து அவளை அணுகி, அவள் இரு கைகளையும் தோளுக்குச் சற்றுக் கீழே பலமாகத் தன் கைகளால் பிடித்து சரேலென்று அவளைச் செங்குத்தாகத் தூக்கினான். அவன் அடுத்த வினாடி என்ன செய்யப் போகிறான் என்பதை ராணி உணருமுன்பாக அவன் இதழ்கள் மிகுந்த வேகத்துடன் ராணியின் அழகிய நெற்றியில் இணைந்தன. வேகத்தின் விளைவாக நெற்றியின் நடுப்பகுதி கன்னிச் சிவந்து சிவப்புக் கற்கள் பதித்த கட்டிபோல் பிரகாசித்தது.

அந்த வேகத்தால் ராணி திடுக்கிட்டுப் போனாள். எதிர்பாராதவிதமாக, முரட்டுத்தனமாக அளிக்கப்பட்ட அந்த முத்திரை அவள் உணர்ச்சிகளை எழுப்புவதற்குப் பதிலாக ஸ்தம்பிக்கவே செய்தது. படைத் தலைவன் அளித்த அந்த

முத்திரையில் ஆசையில்லை, காமமில்லை, கடமை மட்டுமே யிருந்ததாகத் தோன்றியது யவன ராணிக்கு. கைகளைப் பிடித்துச் சிறு குழந்தையைத் தூக்குவதுபோல் தன்னைத் தூக்கி, முகத்தை முரட்டு இதழ்கள் தாக்கிய செய்கையின் காரணம் திட்டமாக அவளுக்குப் புரியாததால், அவன் எதிரில் நின்றபடியே தலையைப் பின்புறம் தாழ்த்தி தனது நீலமணிக் கண்களை அவன்மீது நிலைக்கவிட்டாள். அவன் பிடித்துச் சரேலெனத் தூக்கியதால் அவள் கொண்டை அவிழ்ந்து நீண்ட பொன்னிறக் குழல் பின்புறம் சாய்ந்து நிலத்தைத் தொட்டது. அண்ணாந்து அவன் முகத்தை நோக்கிய அவள் முக சந்திரபிம்பம் எத்தனை எத்தனை ஆசை களையோ கிளறிவிட்டது.

ஆனால், அந்த ஆசைகள் படைத் தலைவன் முகத்தில் அறுந்து கிடந்தன. அவன் கண்களில் கவலையே படர்ந்து கிடந்ததை ராணி கவனித்தாள். தன் கைகளைப் பிடித்து அவன் தூக்கிச் சிறிது நேரமாகியும், அவன் தன்னை விடாமல் அப்படியே பிடித்துக் கொண்டிருந்ததைக் கண்ட ராணி ஏதோ பேச வேண்டுமென்பதற்காக, "படைத் தலைவரே! சற்று விடுங்கள். கை வலிக்கிறது" என்றாள்.

ஏதோ யந்திரத்தால் இயக்கப்பட்டவை போல் அவன் கைகள் அவளை விடுதலை செய்தன. "மன்னிக்க வேண்டும் ராணி" என்ற அவன் சொற்களும் சம்பிரதாயமாக வெளி வந்தன.

ஓர் ஆண் ஒரு பெண்ணைத் தொடும்போது ஏற்படும் குழப்பம், படைத் தலைவனின் சொற்களில் இல்லாததைக் கவனித்த ராணி 'படைத் தலைவர் ஏதோ திட்டவட்டமாக காரியத்தில் இறங்கியிருக்கிறார்' என்பதை ஊகித்துக் கொண்டாளாகையால், "எதற்கு மன்னிப்பது படைத் தலைவரே?" என்று பதிலுக்குக் கேட்டாள்.

"கொஞ்சம் முரட்டுத்தனமாகக் கைகளைப் பிடித்து விட்டேன்" என்றான் படைத் தலைவன் வருத்தம் தோய்ந்த குரலில்.

"இதில் வருத்தப்படுவதற்கு ஏதுமில்லையே. படைப்பின் வழி இது" என்றாள் ராணி.

"எது படைப்பின் வழி?" என்று வினவினான் படைத் தலைவன்.

"ஆண்களுக்கு முரட்டுத்தனமும், பெண்களுக்கு மென்மையும்" என்று சொன்ன ராணி, 'கையை அப்படிப் பிடித்ததில் தவறில்லை...' என்று மேலும் ஏதோ சொல்ல முற்பட்டு முடியாததால் மோகனப் புன்முறுவல் செய்தாள்.

தான் சொன்ன பதிலோ, பேச்சை இழுத்து விட்டதால் ஏற்படக் கூடிய ஊகத்தாலோ படைத் தலைவன் சங்கடப் படுவான் என்று நினைத்திருந்ததால் ராணி ஏமாந்தே போனாள். எந்தவிதச் சங்கடமுமில்லாமலும், உறுதியான குரலிலும் பதில் சொன்னான் படைத் தலைவன், "மற்ற எதிலும் தவறில்லை ராணி" என்று.

"தவறில்லையா?" என்று வினவினாள் ராணி ஆச்சரியத் துடன்.

"இல்லை, தவறில்லை." திட்டமாக வந்தது படைத் தலைவன் பதில்.

"நீங்கள் என்னை..." மேலும் சொல்ல முடியாமல் தவித்தாள் ராணி.

"ஆம். அதிலும் தவறில்லை."

"எனக்குப் புரியவில்லை படைத் தலைவரே."

"என்னை மணம் செய்து கொள்ளும்படி நீ கேட்க வில்லை?"

"ஆம், கேட்டேன்!"

"அப்பொழுதுதான் என் நாட்டுக்கு உதவுவதாகக் கூறினாய்."

"அதுவும் உண்மைதான்."

"மணம் புரிய முடிவு செய்துகொள்ளும் இருவர் மணமுத்திரையை இடும் வழக்கம் உங்கள் நாட்டில் எப்படி?"

ராணி பதிலேதும் சொல்லவில்லை. அவள் புத்தி பெரிதும் குழம்பிக் கிடந்தது. படைத் தலைவன் இதழ்கள் தன் நெற்றியுடன் கனவேகத்தில் இணைந்ததன் காரணத்தைப் புரிந்து கொண்டாள். தன்னை மணக்க உறுதி கூறும் முறையில் அவனிட்ட முத்திரை அது என்பது தெளிவாகத் தெரிந்தது அவளுக்கு.

'இருப்பினும் என் நாட்டு வழக்கத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லையே இவர்! தந்தையும் சகோதரனும் பாசத்தைக் காட்ட வெற்றியில் அன்பு முத்திரை யிடுவது உண்டு. கணவன் கடைப்பிடிக்க வேண்டிய முறை வேறல்லவா!' என்று எண்ணமிட்டுச் சற்று வெட்கமும் அடைந்தாள். ஆயினும் அவள் எண்ணம் தனக்கு மண முத்திரையளிப்பதே யென்பதை உணர்ந்ததால், 'சம்பிர தாயத்தில் என்ன இருக்கிறது? திருமணமானபின் எங்கே போகிறார்?' என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். முறை எப்படியிருந்தாலும் முத்திரை, மணத்தை முன்னிட்டுத் தானே என்று நினைத்து ஓரளவு திருப்தியும் அடைந்தாள்.

'இனி இவர் என் கணவர்! நெற்றியில் சிவப்புச் சுட்டி கட்டி முதன்முதலாக மண முத்திரையிட்ட என் ஆயுட் காவலர் இவர்! ஆமாம். இது கனவல்ல! உண்மை! உண்மை!' என்று அவள் சித்தம் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டது. இதயம் அந்த மங்கள நிகழ்ச்சிக்குப் பெரிதாகத் தாளம் போட்டது.

ராணியின் உடல் பூராவும் மயிர்க்கூச்சல் எடுத்தது. உணர்ச்சிகள் அத்தனை நிரம்பி நின்ற நேரத்திலும் ஒரு விஷயத்தை மட்டும் உணர்ந்து கொண்டாள் ராணி. 'இது அவர் எனக்கு அளிக்கும் காதல் பரிசு அல்ல. நாட்டுக்கு அவர் அளிக்கும் கடமைப் பரிசு. நாட்டு நலனுக்கு செய்யும் தியாகம். கரிகாலன் முடிசூட்டு விழாவுக்கு அவர் அளிக்கும் பாத காணிக்கை. இதை நான் ஏற்கலாமா? இப்படி ஒரு ஆடவரைக் கட்டாயப்படுத்திப் பெறும் திருமணத்தில் இன்பமிருக்குமா?'

என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். அந்தக் கேள்விக்கு விடை பெற இளஞ்செழியனை மீண்டுமொரு முறை ஏறெடுத்து நோக்கினாள்.

அவள் யோசனைகள் புத்தியில் சுழன்ற சில வினாடி களில் இளஞ்செழியன் தன் உணர்ச்சிகளைப் பூராவகாச் சுவாதீனம் செய்துகொண்டு விட்டதால், ராணியை நோக்கிப் புன்னகை செய்தான். அந்தப் புன்னகை ராணியின் மனத்தைக் கொள்ளை கொண்டது. 'எப்படியும் காலம் பூவழகியின் உருவத்தை இவர் இதயத்திலிருந்து அழித்துவிடும். எங்கள் காதல் வாழ்க்கை வெள்ளத்தில் வேளிர்குலப் பேரழகியின் உருவம் நிச்சயமாக மறைந்து போகும்' என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள் ராணி.

அந்தச் சமயத்தில் புன்முறுவல் செய்துகொண்டே கேட்டான் இளஞ்செழியன், "என்ன யோசிக்கிறாய் ராணி?" என்று.

"ஒன்றும் யோசிக்கவில்லை" என்றாள் ராணி.

"அப்படியானால் மேற்கொண்டு நாம் செய்ய வேண்டியதைத் தீர்மானிக்கலாமா?" என்று வினவினான் படைத் தலைவன்.

"எதைத் தீர்மானிக்க வேண்டும் படைத் தலைவரே?" என்ற பதிலுக்கு ராணியும் ஒரு கேள்வியை வீசினாள்.

"ஒப்பந்தத்தின் இன்னொரு பகுதியை."

"ஒப்பந்தத்தின் இன்னரு பகுதியா?"

"ஆம் ராணி! நமது ஒப்பந்தம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒன்று திருமணப் பகுதி. இன்னொன்று நாட்டுப் பகுதி."

"என்ன?"

"புரியவில்லையா ராணி? நான் உன்னை மணம் புரிவ தானால் நாட்டுக்கு உதவுவதாகக் கூறினாய். திருமணத்துக்கு ஒப்புக் கொண்டு ஒப்பந்தத்தில் முத்திரையும் வைத்து விட்டேன். இனி நாட்டுப் பகுதியைக் கவனிக்க வேண்டும்."

"இனி அது ஒப்பந்தமாகாது படைத் தலைவரே."

"பின் என்ன ஆகும்?"

"என் கணவர் கட்டளையாகும்."

"அப்படியானால் நான் சொல்வதைக் கவனி" என்று ஏதோ ஒற்றனுக்குத் திட்டத்தை விவரிப்பவன் போல், தன் திட்டத்தை விளக்க முற்பட்ட இளஞ்செழியன், "ராணி! இந்த ஊரில் இந்திரவிழா என்று ஒரு விழா உண்டு..." என்று துவங்கினான்.

"ஆமாம். உண்டு, கேள்விப் பட்டிருக்கிறேன்" என்றாள் ராணி.

"அது இந்த ஆண்டு நடைபெறப் போவதில்லை."

"ஏன்?"

"அதை உங்கள் காதல் தெய்வமான வீனஸின் திருவிழா வாக்க டைபீரியஸ் திட்டமிட்டிருக்கிறான்."

"அதனால் என்ன பயன்?"

"ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரை ஆக்கிரமிக்கும் பொழுது, ஆக்கிரமிக்கப்படும் நாட்டின் கலைகளையும், விழாக்களையும் மாற்றுவது வரலாறு கண்ட உண்மை. அது கிடக்கட்டும், வீனஸ் விழாவே நடக்கட்டும். ஆனால் அதில் அடுலீஸ் ரதப் போட்டிபோல் ஒரு ரதப்போட்டிக்கும் நீ ஏற்பாடு செய்யவேண்டும்."

"ரதப் போட்டி எதற்கு?"

"காரணமாகத்தான் கூறுகிறேன் ராணி. நமது திருமணம் நடக்கவேண்டுமானால் இந்த ரதப் போட்டி நிச்சயமாக நடக்கவேண்டும்" என்றான் இளஞ்செழியன்.

"நடந்தால்?" ராணி சந்தேகத்துடன் அவனை நோக்கினாள்.

யாருமில்லாத அந்த அறையை இருமுறை சுற்றுமுற்றும் பார்த்தான் படைத்தலைவன். பிறகு ராணிக்கு வெகு அருகில் வந்து அவள் காதில் ஏதேதோ சொன்னான். அவன் சொல்லச் சொல்ல ராணியின் விழிகள் பயத்தாலும், வியப் பாலும் நன்றாக மலர்ந்தன. "மிகவும் பயங்கரமான திட்டம் படைத் தலைவரே!" என்று இரைந்தே கூறினாள் ராணி.

அதை விடப் பயங்கரமான செய்தியொன்றும் அவ்விரு வருக்கும் காத்திருந்தது. அவர்கள் திட்டமெல்லாம் தவிடு பொடியாகும் செய்தியுடனும், திகிலும் கலவரமும் மண்டிய முகத்துடனும் அறைக் கதவைச் சரேலெனத் திறந்துகொண்டு உள்ளே ஓடி வந்தான் ஹிப்பலாஸ்.

100. மதுவும் மாதரும்

அதிவேகத்துடன் திடும்பிரவேசமாக முகத்தில் கலவரம் தாண்டவமாட ஹிப்பலாஸ் நுழைந்தபோது சரேலென்று படைத்தலைவன்தான் அவனை திரும்பிப் பார்த்தானேயொழிய, ராணி தலைதூக்கி அவனைப் பார்க்கவுமில்லை, இருந்த இடத்தைவிட்டு லவலேசம்கூட அசையவுமில்லை. இந்திரவிழாவை வீனஸ் திருவிழா வாக்கவும், அது சம்பந்தமாக ரதப் போட்டியை நடத்தவும் அவன் கூறிய விவரங்களையும், அந்தச் சந்தர்ப்பத்தை அவன் நாட்டு நலனுக்கு உபயோகப்படுத்த வகுத்திருந்த திட்டத்தைப் பற்றியுமே எண்ணியிருந்தாள். அவள் வீனஸ் விழாவை ஒரு சாக்காக வைத்துப் படைத் தலைவன் புகாருக்குள் புகவும், அதைக் கைப்பற்றவும் தீர்மானித்திருந்தாலும், அத்தீர்மானம் நிறைவேறுவது அத்தனை சுலபமல்லவென்றும் நன்றாக உணர்ந்திருந்தாள் ராணி. படைத் தலைவன் உயிருட னிருப்பது டைபீரியஸுக்குத் தெரியாவிட்டாலும், கரிகாலன் திறமை அவனுக்கு நன்றாகத் தெரியுமாதலால், வீனஸ் திருவிழாவைப் போன்ற திருவிழாவை நடத்து முன்பு புகாரை நன்றாகக் காவலுக்கு உட்படுத்தாமல் யவனர் கடற்படைத் தலைவன் இருக்கமாட்டானென்பதை ராணி அறிந்திருந்தா ளாகையால், படைத்தலைவனும், திருவிழாவில் பங்கு கொள்ளும் அவன் சகாக்களும் கண்டிப்பாய் டைபீரியஸ் கையில் சிக்கி அழிந்துவிடுவார்களென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். தவிர அவளுக்குப் படைத் தலைவன் விவரித்த திட்டத்தில் மற்றொரு விஷயமும் புரியவில்லை.

'இந்திர விழாவின்போது ரதங்களை மிதத் துரிதமாகச் செலுத்தவல்ல இளஞ்சேட்சென்னியே ரதப் போட்டிகளை நடத்தி வந்தாரே, அப்படியிருக்க அந்த விழாவை வீனஸ் திருவிழாவாக்குவதில் என்ன புதுப் பலன் இருக்க முடியும்?' என்றும் சிந்தித்து விடை கிடைக்காமல் திணறினாள்.

அவள் உள்ளத்தில் ஏதோ சந்தேகங்கள் எழுந்து வலம் வருவதை முகபாவத்திலிருந்தே ஊகித்த படைத்தலைவன், "என்ன ராணி! என்ன யோசிக்கிறாய்?" என்று வினவினான்.

ராணி அவனை ஒரு முறை ஏறெடுத்துப் பார்த்துச் சொன்னாள், "உங்கள் திட்டத்தில் சில பகுதிகள் எனக்குப் புரியவில்லை" என்று.

"எது புரியவில்லை? கேள், விளக்குகிறேன்" என்று படைத் தலைவன் கூறினான்.

"இந்திர விழாவை ஏன் வீனஸ் திருவிழாவாக்க வேண்டும்?"

"இந்திர விழா தமிழர் திருவிழா. வீனஸ் திருவிழா உங்கள் நாட்டுத் திருவிழா."

"அதை நடத்தவேண்டிய அவசியமென்ன?"

"இந்திர விழா கூடாது. வீனஸ் திருவிழாதான் வேண்டும் என்று கூறினால் டைபீரியஸுக்கு உன்னிடம் நம்பிக்கை ஏற்படும். யவனர் பழக்க வழக்கங்களைத் தமிழகத்தில் நிலை நிறுத்துவதில் உனக்கும் அக்கறை ஏற்பட்டுவிட்டதென்று டைபீரியஸ் நினைப்பான். நான்தான் முன்னமே சொன்னேனே ராணி! பிறநாட்டு ஆதிக்கம் ஏற்படும்போது சொந்த நாட்டுக் கலைகளும் விழாக்களும் வாழ்க்கை முறையும் நசுங்குமென்று. அதற்கு டைபீரியஸ் ஏற்பாடு செய்வான், அதை மறுக்காதது மட்டுமல்ல, அப்படித்தான் நடக்க வேண்டுமென்று முன்கூட்டிக் கூறினால், அவன் வழிக்கு நீயும் வந்துவிட்டதாகத் தீர்மானிப்பான். உன்னைப்பற்றிய அவன் எண்ணங்களை மாற்றுவது திட்டத்தின் முதல்படி. இரண்டாவதுபடி ரதப் போட்டியை ஏற்படுத்துவது."

ராணி சிறிது சிந்தித்தாள். படைத் தலைவன் புகுமுயலும் பாதை மெள்ள விளங்கியது அவளுக்கு. டைபீரியஸின் திட்டங்களுக்குத் தான் இணங்குவதுபோல் பாசாங்கு செய்வது மட்டுமல்ல, அந்தத் திட்டங்களை அவன் தெரிவிக்கு முன்பாகத் தன் வாயாலேயே அவற்றைத் தெரிவித்து நடத்த வற்புறுத்துவது அவனுக்குப் பெரு நம்பிக்கையை உண்டாக்கும் என்பதை ராணி அறிந்தாள். ஆனால், அதிலும் ஒரு சங்கடமிருந்தது அவளுக்குத் தெரிந்தது. ஆகவே அதைப் பற்றியும் சந்தேகம் கேட்டாள். "வீனஸ் திருவிழாவை நடத்தச் சொல்லி நானே வற்புறுத்துகிறேன். ஆனால் எங்கள் நாட்டில் மற்றொரு பழக்கம் உண்டு. பெரும் ரதப் போட்டிகள் அரச குடும்பத்துக்கு முன்பாகத்தான் நடக்கும். ஆகவே திருவிழாவைச் சாக்காக வைத்து டைபீரியஸ் முன்னதாக எனக்கு முடி சூட்ட விரும்பினால்?" என்று வினவினாள்.

அவள் கேள்வி புதுப் பிரச்னையொன்றைக் கிளப்பி விட்டதால் மீண்டும் யோசனையிலிறங்கினான் படைத் தலைவன். உள்ளே நுழைந்த ஹிப்பலாஸ், "படைத் தலைவரே!" என்று இரு முறை அவசரத்துடன் அழைத்ததையும் சட்டை செய்யாமல், 'இரு' என்பதற்கு அறிகுறியாகக் கையை அமர்த்தி, அவனைப் பேசாமலிருக்கும்படியும் பணித்தான். இளஞ்செழியன் இதயத்தில் எண்ண அலைகள் பெரிதாக மோதத் தொடங்கின. தனக்காகச் சகலத்தையும் அளிக்கத் தயாராயிருக்கும் ராணி சில நாட்கள் தமிழகத்தில் மகுடம் புனைவதைக்கூட அவன் விரும்பவில்லை. ஆனால், ராணியின் உதவிக் கரம் இல்லாது தான் ஏதும் செய்ய முடியாதென்பதை உணர்ந்துகொண்ட படைத் தலைவன், சிறிது நேர சிந்தனைக்குப் பின்பு ஒரு முடிவுக்கு வந்த ராணியின் தலையை இரு கைகளாலும் லேசாகப் பிடித்து, "ராணி! இந்த அழகிய தலைக்கு மகுடம் நன்றாயிருக்கும். ஆனால் தலைக்கு அது அழகு செய்யாது. தலைதான் அதற்கு அழகு செய்யும்" என்றான்.

"நீங்கள் சொல்வது?..." என்று சங்கடத்துடன் கேட்டாள் ராணி.

"புகாரில் முடிசூட வந்தாய் ராணி?" என்றான் படைத் தலைவன்.

"ஆமாம்."

"முடி சூடிவிடு."

"இது உங்களுக்கு இஷ்டமா?"

"எனக்கு இஷ்டமில்லைதான்! ஆனால் நாட்டு விமோசனத்துக்கு இதை விட்டால் வேறு வழியில்லை."

"உங்கள் இஷ்டம்."

"ஆனால் ராணி, ஒரே ஒரு வேண்டுகோள்."

"இனி வேண்டுகோளுக்கு இடமில்லை, கட்டளைக்குத் தான் இடமிருக்கிறது."

"சரி சரி; கட்டளை."

"என்ன கட்டளை பிரபு?"

"முடிசூடுவதானால் வீனஸ் திருவிழாவன்று காலையில் முடிசூடு. மாலையில் ரதப் போட்டியை நடத்து."

"அப்படியே செய்கிறேன். ஆனால் ரதப் போட்டியை ஒரு புதுமையாக நான் டைபீரியஸிடம் சொல்ல முடியாதே" என்றாள் ராணி.

"ஏன் ராணி?" ஏதும் புரியாமல் கேட்டான் படைத் தலைவன்.

"ரதப் போட்டியைத்தான் பழைய மன்னர் நடத்தி வந்தாராமே" என்று ராணி கேட்டாள்.

"ஆம், நடத்தினார் ராணி" என்ற இளஞ்செழியன் அப்பொழுதுதான் திட்டத்தின் முக்கிய விவரத்தை விட்டு விட்டதை உணர்ந்தான். ஆகவே, ராணியின் ஒரு கையை தன் கைகளில் எடுத்து வைத்துக் கொண்டு, "ராணி! தமிழகம் உனக்கு எத்தனை தூரம் கடமைப்பட்டிருக்கிறது! அத்தனைக்கும் பிரதி உபகாரம் ஒரு சாதாரணப் படைத்

தலைவனை அளிப்பதுதானா?" என்று குரலில் உணர்ச்சி பொங்கக் கூறினான்.

"தமிழகம் ஒரு நாடு பிரபு. ஆனால் நீங்கள் எனக்கு ஒரு தனி உலகம். சிறு நாடு பெரும் உலகத்தைத் தரும் போது அதைவிடப் பெரிய பரிசு என்ன வேண்டும்?" என்று கேட்டாள் ராணி.

"என்மீதுள்ள அன்பினால் என்னை அதிகமாக மதிக்கிறாய் ராணி. அத்தனைக்கு நான் தகுந்தவனல்ல" என்று அவள் கையை லேசாக அழுத்திய இளஞ்செழியன் மெள்ளப் பெருமூச்செறிந்தான். பிறகு தன் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக் கொண்டு, "ராணி! நேரம் ஆகிறது. ஹிப்பலாஸும் ஏதோ சொல்லத் துடிக்கிறான். ஆகவே கேள். இந்திர விழாவில் இளஞ்சேட்சென்னியின ரதப்போட்டி போல் இந்த ரதப் போட்டி இருக்கக் கூடாது" என்று கூறினான்.

"வேறெப்படி இருக்க வேண்டும்?" என்று கேட்டாள் ராணி.

"இந்திர விழா ரதப் போட்டியில் பத்து ரதங்களுக்கு மேல் போட்டி போடாது. இந்த விழாவிலும் அதைவிட அதிக ரதங்களை அனுமதிக்கத் தேவையில்லை. ஆனால், வீனஸ் விழாவில் ரதங்கள், இந்திர விழா ரதங்கள் ஓடிய பாதையில் ஓடக்கூடாது" என்றான் படைத் தலைவன்.

"அவை எந்தப் பாதையில் ஓடுவது வழக்கம்?"

"காவிரிக்கு அருகிலுள்ள இந்திர விழா விடுதியில்தான் துவங்கும். ஆனால் நாளங்காடி பூதத்துக்கு முன்புள்ள பெரும் சாலையில் திரும்பி மீண்டும் மாளிகைக்கு ரதங்கள் வந்து விடும். ரதங்கள் சுற்றும் மொத்த தூரம் அரை காதத்துக்குக் குறைவாயிருக்கும். நமது திட்டத்துக்கு அது போதாது. ரதப் போட்டியில் பத்து ரதங்கள் இந்திர விழா மாளிகையிலிருந்து ஓடத் துவங்கட்டும். ஆனால் அவை நாளங்காடி பூதத்துக்குப் பின்புறமுள்ள சிறு சாலை வழியில் சென்று, திரும்பிப் பூதத்தைப் பிரதட்சணமாக வரட்டும். இந்தச் சாலை இன்னும் கால் காதத்தை அதிகமாக உடையது. தவிர, சாலைக்கும்

பூதத்தின் பின் பகுதிக்கும் இடையே அடர்ந்த காடு இருக்கிறது. அந்தக் காடும் சாலையும் திருவிழாக் காலங்களில் வெறிச் சென்றிருக்கும். மனித சமுத்திரம் பூராவும் கடலோரமாக வுள்ள மருவூர்ப் பாக்கத்தில்தான் இருக்கும்."

படைத் தலைவன் திட்டத்தின் மர்மத்தை ராணி புரிந்து கொண்டாள். நாளங்காடி பூதத்திற்குப் பின்னாலுள்ள காட்டில் உதவியாளரை நிறுத்திக் கொள்ளப் படைத் தலைவன் திட்டமிடுகிறானென்பது தெளிவாகத் தெரிந்தது அவளுக்கு. 'இருப்பினும் அங்கு ஆட்களைக் கொண்டு வருவது அத்தனை சுலபமல்லவே. புகாரின் சகல வாயில்களையும் வீதிகளையும் டைபீரியஸ் அடைத்து விடுவானே' என்று நினைத்தாள். ஆனால் அந்தக் காவல் கட்டுக்களை மீறும் சக்தி படைத் தலைவனுக்கு உண்டென்பதை அவள் அறிந்திருந்த தால், மேற்கொண்டு ஏதும் கேட்காமல், "சரி படைத் தலைவரே! உங்களிஷ்டப்படியே நடந்து கொள்கிறேன்" என்று முடிவாகக் கூறினாள்.

இத்தனை நேரம் பொறுமையாயிருந்த ஹிப்பலாஸ் அதற்கு மேலும் சகிக்க மாட்டாமல், "ராணி! இன்னும் சிறிது நேரம் உங்களிருவர் சம்பாஷணையும் நடந்தால் இந்தத் திட்டம் ஏட்டுச் சுரைக்காயாக - இல்லை, இல்லை, வெட்டித் தர்க்கமாக - நின்றுவிடும்" என்றான்.

"என்ன விஷயம் ஹிப்பலாஸ்?" என்று கேட்டான் படைத்தலைவன்.

ஹிப்பலாஸ் சற்றுத் தயங்கினான். பிறகு ராணிக்குப் பேரதிர்ச்சி ஏற்படும்படியான இடியொன்றை எடுத்து வீச முற்பட்டு, "ராணி இங்கு வந்திருப்பது டைபீரியஸுக்குத் தெரியும்" என்றான்.

ராணி தன் நீலமணிக் கண்களை அவன்மீது சரேலெனத் திருப்பினாள். "எப்படித் தெரியும் ஹிப்பலாஸ்?" என்றும் கேட்டாள்.

"அவனே பார்த்திருக்கிறான்" என்று மேற்கொண்டும் சொன்னான் ஹிப்பலாஸ்.

"அவன் பார்த்தது உனக்கு எப்படித் தெரியும்?" படைத் தலைவன் கேள்வி அமைதியாகவே எழுந்தது.

ஹிப்பலாஸ் விவரித்தான். "வாயிலை நான் காத்துக் கொண்டிருந்தேன். ராணி வந்து சில நாழிகைக்குப் பிறகு ஒரு உருவம் மாளிகைக்கு முன்புறமுள்ள சிறு தோப்பில் நுழைந்தது..." என்று நிறுத்தினான் ஹிப்பலாஸ்.

"உம்! சொல்." படைத்தலைவன் இம்முறை சற்றுக் குரலில் உணர்ச்சி துள்ளக் கேட்டான்.

"நீண்ட நேரம் அங்கேயே நின்றிருந்தது."

"உம்! பிறகு?"

"தோப்பிலிருந்து வெளியே சென்றது. நான் அதைத் தொடர்ந்தேன்."

"அப்படியா!"

"ஆம்; தெரு விளக்கு அந்த உருவத்தின் முகத்தில் அடித்த பின்புதான் அது டைபீரியஸ் என்பதை உணர்ந்தேன். ஆகவே தொடர்ந்தே சென்றேன். டைபீரியஸ் கடற்கரைக்குச் சென்றான். அங்கிருந்த உங்கள் படகில் ஏறிக் கொண்டான். படகுக்குத் துடுப்புத் தள்ளிய யவனர் இருவரும் படகைச் செலுத்தினார்கள்."

படைத்தலைவன் முகம் திடீரென உணர்ச்சிகளை இழந்து கல்லாகிவிட்டது. ராணியின் முகத்தில் கவலை படர்ந்தது. அந்தக் கவலை குரலிலும் ஒலிக்கக் கேட்டாள்: "படகு எங்கே சென்றது?" என்று.

"கப்பல்களை நோக்கி." ஹிப்பலாஸின் பதிலில் கவலை மண்டிக் கிடந்தது.

ராணி படைத்தலைவனை நோக்கினாள். அவன் புத்தி மிகத் துரிதமாக வேலை செய்வதை முகத்திலிருந்தே ஊகித் தாள் ராணி. சில விநாடிகளுக்குள்ளாகவே ஏதோ முடிவுக்கு வந்த இளஞ்செழியன், "சரி ராணி! கிளம்பு. ஹிப்பலாஸ்! நீயும் என்னுடன் வா" என்று கூறிவிட்டு, மஞ்சத்திலிருந்த தனது முகக்கவசத்தை எடுத்து அணிந்துகொண்டு, வாளையும்

நன்றாகக் கச்சையால் இழுத்து இடையில் கட்டிக் கொண்டான்.

"எங்கு, பிரபு?" என்று கவலை மிதமிஞ்சக் கேட்டாள் ராணி.

"உன் இருப்பிடத்துக்குத்தான்" என்றான் படைத் தலைவன்.

"அங்கு வந்ததும் சிறைப்படுவீர்கள்" என்று அச்சத்தைத் தெரிவித்தாள் ராணி.

"என்னைக் காக்க ஒரு ராணி இருக்கும்போது அதைப் பற்றிக் கவலையில்லை" என்று கூறிய படைத்தலைவன், அதற்கு மேல் ராணியையோ ஹிப்பலாஸையோ பேச விடாமல் அவ்விருவருடன் அந்த மாளிகையிலிருந்து கிளம்பினான். படைத்தலைவன் செய்கையும் பேச்சும் பெரும் விசித்திரமாயிருந்தது ராணிக்கு. அவன் துணிவுடன் இந்திர விழா மாளிகையை அடைந்ததும், பிறகு தன்னுடன் தனது அறைக்கே வந்து சர்வ சுவாதீனமாக மஞ்சத்தில் உட்கார்ந் ததும் பிறகு, மாளிகைக் காவலன் ஒருவனை வரவழைத்ததும் எல்லாமே புரியாத புதிராயிருந்தது அவளுக்கு. எதிரியின் கோட்டைக்குள்ளேயே வந்து இளைப்பாறவும் முற்பட்ட அவன் துணிவைப் பெரிதும் வியந்த ராணி, அத்தகைய ஒரு புருஷன் தனக்குக் கிடைத்ததைப் பற்றிப் பெருமையும் கொண்டாள். ஆனால், அறைக்கு வந்த பிறகு காவலனை அழைத்து அவன் இட்ட உத்தரவு அவளுக்கு மட்டுமல்ல, கூட இருந்த ஹிப்பலாஸுக்கும் பேரதிர்ச்சியை அளித்தது, "என்ன சொல்கிறீர்கள் படைத்தலைவரே!" என்று நடுக்கத்துடன் கேட்டான் ஹிப்பலாஸ்.

"நான் இங்கு வந்து காத்திருப்பதாக டைபீரியஸுக்கு உடனே செய்தியனுப்பு" என்று சாதாரணமாகக் கூறிய இளஞ்செழியன், ராணியை நோக்கி, "ராணி! யவன நாட்டின் சிறந்த மது இருந்தால் கொஞ்சம் கொடு" என்றும் கேட்டான்.

ராணியும் ஹிப்பலாஸும் பெரும் குழப்பத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். 'மது அருந்தும்

வேளையா இது!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் ராணி. அவள் எண்ணத்தைப் புரிந்துகொண்டவன் போல நகைத்தான் படைத்தலைவன். "மதுவையும், மாதரையும் அணுகத் தனிப்பட்ட நேரம் ஏதும் தேவையில்லை. கொண்டுவா மதுவை ராணி! உன்னைத்தான்!" என்று சொல்லி மறுபடியும் வெறிபிடித்தவன் போல் பெரிதாக நகைத்தான்.

101. வெறி! சிரிப்பு!

படைத்தலைவனின் வெறி பிடித்த அந்தப் பெரு நகைப்பைக் கேட்டதும், அவனுக்கு ஏதாவது சித்தப் பிரமையா அல்லது அளவுக்கு மீறிய துணிவால் ஏற்பட்ட அகங்காரமா என்று ஹிப்பலாஸ் மட்டுமல்ல, அவன் காதலையே தன் வாழ்வின் ஜீவதாரை என்று எண்ணிக் கொண்டிருந்த ராணி கூட நினைத்தாள். பொழுது புலரக் கால் ஜாமம்கூட இல்லாத அந்த விடியற்காலை நேரத்தில் மதுவை அருந்தி விடுவதால், டைபீரியஸிடமிருந்து தப்ப என்ன அப்பேர்ப்பட்ட பிரமாத வசதி ஏற்பட்டுவிடும் என்பதை நினைத்துப் பார்த்து ஏதுமறியாததால், ராணி படைத்தலைவனையும் பார்த்து ஹிப்பலாஸையும் பார்த் தாள். அவள் பார்வையிலிருந்த குழப்பத்தையும், அச்சத்தை யும் புரிந்துகொண்டது மட்டுமன்றி, பகிர்ந்தும் கொண்ட ஹிப்பலாஸ் இளஞ்செழியனை நோக்கிச் சொன்னான்: "படைத்தலைவரே! கருக்கல் நெருங்க அதிக நேரமில்லை" என்று.

படைத் தலைவன் நகைப்பைச் சிறிதே நிறுத்தி, மஞ்சத்தில் முன்னைவிட நன்றாகச் சாய்ந்துகொண்டு எதிரேயிருந்த ராணியையும், ஹிப்பலாஸையும் பார்த்தான். பிறகு பெருமூச்சு விட்டான். அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து வந்த சொற்களில் ஆயாசம் பெரிதுமிருந்தது. "ஹிப்பலாஸ்! தமிழகத்தில், அதுவும் புகாரில் கருக்கல் வரும்

நேரம் எனக்குத் தெரியாதென்று நினைக்கிறாயா?" என்று வினவினான் படைத் தலைவன்.

ஹிப்பலாஸ் வணக்கத்துடனேயே பதில் சொன்னான்: "தங்களுக்குத் தெரியாதென்று சொல்லவில்லை படைத் தலைவரே! தெரிந்த விஷயங்களையும் நினைவுபடுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் வாழ்க்கையில் ஏற்படுவ தில்லையா?"

ஹிப்பலாஸின் பதில் படைத்தலைவன் போக்கில் எந்த வித மாறுதலையும் ஏற்படுத்தாதலால் அவன் சர்வசாதாரண மாகவே பேச முற்பட்டு, "ஹிப்பலாஸ், புகாரின் சீதோஷ்ண நிலையிலோ, காலையின் பிறப்பிலோ மாலையின் மறைவிலோ, எந்தவித மாறுதல் ஏற்பட்டாலும் என் உடலுக்கு உடனே தெரியும். இந்தத் துறைமுக நகரின் இயற்கை மாறுதல் களுடன் என் உடல், பொருள், ஆவி மூன்றுமே ஒன்றியிருக் கின்றன. விடியும் வேளையைப் பற்றியோ, நாளின் எந்தவித மாறுதலைப் பற்றியோ எனக்கு நினைவுபடுத்த அவசிய மில்லை. ஆகவே சில வினாடிகளில் கருக்கல் வரப் போவது எனக்குத் தெரியும். அது வந்தவுடன் புகார் முழுவதும் திடீரென இருளப் போவதும் எனக்குத் தெரியும். அதற்கு முன்பாகத்தான் மதுவருந்தவேண்டும். மதுவை அருந்துவது மிகவும் முக்கியம். சீக்கிரம் வரவழைத்துக் கொடு" என்று கூறிய படைத் தலைவன், "அடடே? மறந்துவிட்டேனே! சீக்கிரம் டைபீரியஸுக்குச் செய்தி அனுப்பு. வீணாக எனக்காகக் கப்பலில் காத்திருப்பார்" என்றும் கட்டளையிட்டான்.

அந்தக் கட்டளையை நிறைவேற்ற ராணியோ, ஹிப்பலாஸோ தயாராக இல்லை. டைபீரியஸுக்குச் செய்தி சொல்லியனுப்பி வரச் சொல்லுவது, படைத் தலைவனை அப்படியே அவனிடம் ஒப்படைப்பதாகும் என்பதை அவ்விரு வரும் உணர்ந்திருந்தது மட்டுமல்லாமல், அப்படி ஒப்படைக் கப்பட்டால் அவன் கதியும், தமிழகத்தின் கதியும் அதோகதி தான் என்பதும் வெட்ட வெளிச்சமாயிருந்தது அவர்களுக்கு. ஆகவே இருவரும் சற்று நேரம் பேசாமலிருந்தார்கள். பேசிய

போது ராணியே பேசினாள் சற்றுக் கடுமையாக, "பிரபு! இது நியாயமல்ல" என்று.

"எது நியாயமல்ல?" என்று படைத் தலைவன் வினவி, கால்களையும் எடுத்து மஞ்சத்தில் ஒரு புறமாகப் போட்டுக் கொண்டான்.

"பரிசைக் கொடுத்துப் பிறகு அதைப் பறிப்பது" என்றாள் ராணி. அவள் இதைச் சொன்னபோது, அவள் கண் களில் நீர் துளிர்த்துவிடும் சோகரேகை படர்ந்ததைக் கவனித்த படைத் தலைவன், அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், "எந்தப் பரிசு ராணி?" என்று கேட்டான்.

"தாங்கள் அளித்த பரிசுதான்" என்று ராணி சொன்னாள் கண்களை நிலத்தில் ஓட்டி.

"என்ன பரிசளித்தேன்?"

"தங்களையே எனக்கு அளிக்கவில்லையா?"

"அதைச் சொல்கிறாயா? ஆம் அளித்தேன்."

"அளித்ததை மீண்டும் பறிக்கலாமா?"

"எங்கே பறித்தேன்?"

"இப்பொழுது டைபீரியஸிடம் உங்களை அளிப்பதற்கு என்ன அர்த்தம்?"

"இங்குதான் நீ பைத்தியக்காரி ராணி!"

"எப்படிப் பைத்தியக்காரியோ?"

"நான் டைபீரியஸோடு சேர்ந்தால் அவன் எப்படி என்னை அழிப்பான்? அழிக்காவிட்டால் உன்னிடமிருந்து நான் எப்படி விலகுவேன்? ராணி! நன்றாகக் கவனி. உன்னைத் திருமணம் செய்துகொள்ள நான் தீர்மானித்து விட்டேன். டைபீரியஸ் எத்தனை பலசாலியாயிருந்தாலும் எத்தனை தந்திரசாலியாயிருந்தாலும், ராணியின் மணா ளனை அவன் கொல்வதை யவன வீரர்கள் ஆமோதிக்க மாட்டார்கள். புரிகிறதா?"

ராணிக்கு என்ன ஹிப்பலாஸுக்குக்கூடப் புரியத்தான் செய்தது. ஆனால் இருவரும் எல்லையற்ற திகைப்பை

அடைந்ததால் மூச்சைக்கூட விடாமல் நின்றார்கள். படைத் தலைவன் திட்டத்துக்குப் பொருள் என்னவென்பது அவர்களுக்குப் புரியாமல் இல்லை. தான், ராணியின் கணவன் என்று சொல்லி டைபீரியஸ் பக்கம் சேர்ந்தால், டைபீரியஸ் படைத் தலைவனைத் தொட முடியாது. படைத் தலைவன் உயிர் பிழைக்கலாம். ஆனால், தமிழகம் உயிர் பிழைக்க முடியாது. டைபீரியஸ் இளஞ்செழியனைப் புகாரை விட்டு நகர முடியாமல் செய்வான். படைத் தலைவன் கேவலம் டைபீரியஸின் கைப்பாவையாகத்தான் இருக்கமுடியும். அப்படியானால் உயிருக்காகவும், காதலுக்காகவும் அவன் நாட்டுக்குத் துரோகியாக நேரிடும். இதுதான் நிலை. அந்த நிலையைத் தவிர வேறு நிலை அந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட முடியும் என்று ராணியும் நம்பவில்லை, ஹிப்பலாஸும் நம்ப வில்லை. 'படைத் தலைவருக்கு இப்படி ஏன் விபரீத புத்தி போகிறது?' என்று ஹிப்பலாஸ் நினைத்தான். 'சற்று முன்பு நாட்டைக் காக்கத் திட்டம் போட்டவர் செய்யும் முடிவா இது? இருக்காது இருக்காது. படைத் தலைவர் போக்குக்கு வேறு ஆழ்ந்த காரணங்கள் இருக்க வேண்டும்' என்று ராணி மட்டும் மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

அந்த இருவர் மனத்திலோடிய எண்ணங்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாத படைத் தலைவன் திடீரென எழுந்து அறை நடுவுக்குச் சென்று, "டேய் யாரங்கே?" என்று வாயிற்படியை நோக்கிக் குரல் கொடுத்தான். உள்ளே நுழைந்த யவன வீரனை நோக்கி, "யவனர் கடற்படைத் தலைவர் என் மரக்கலத்துக்கு என்னைத் தேடிப் போயிருக்கிறார். நான் இங்கு காத்திருப்பதாகச் செய்தியனுப்பு" என்று ஏதோ அரசன் உத்தரவிடுவது போல் சொற்களை உதிர்த்தான்.

வந்த காவலன் கவசத்தால் மூடப்பட்ட முகத்திலிருந்து உதிர்ந்த அதிகாரச் சொற்களைக் கேட்டதும் ஒருகணம் திகைத்தான். மறுகணம் ராணியைப் பார்த்து, "ராணியின் உத்தரவு என்ன?" என்று வினவினான்.

ராணி பதில் சொல்லும் சக்தியை இழந்திருந்தாள். "அவர்தான் கட்டளையிடுகிறாரே!" என்றாள் சிறிது தாமதித்து.

"முகக் கவசமணிந்தவர் புகாரில் எங்கு சென்றாலும் தடை செய்யக் கூடாது என்று கடற்படைத் தலைவர் உத்தர விட்டிருக்கிறார். ஆனால் இவரிடம் உத்தரவை நிறைவேற்றக் கட்டளையில்லை" என்றான் காவலன்.

"இவர் கட்டளையிடுவது டைபீரியஸின் நேரத்தை வீணாக்காதிருப்பதற்காக. உடனே செய்தியனுப்பு" என்றாள் ராணி.

"என்னவென்று செய்தியனுப்பட்டும் ராணி!" என்று மிகப் பணிவுடன் கேட்டான் காவலன்.

ராணி ஒரு வினாடிதான் யோசித்தாள். பிறகு கூறினாள்: "மரக்கலத் தலைவர் என் அறையில் காத்திருப்பதாகத் தெரிவி" என்று.

காவலன் தன் தலைக் கவசம் தரையில்பட வணங்கிச் சென்றதும் ராணி, படபடக்கும் இதயத்துடன் இளஞ் செழியனை அணுகி அவனைப் பிடித்து அழைத்து வந்து மஞ்சத்தில் அமர்த்தி, "பிரபு! இனி டைபீரியஸ் வர அதிக நேர மாகாது. வீரர்கள் விரைந்து செல்வார்கள். சீக்கிரம் தப்பி விடுங்கள்" என்றாள்.

"எப்படித் தப்புவது ராணி?" என்று வினவினான் படைத்தலைவன்.

ராணி பதில் சொல்ல முடியாமல் தவித்தாள். அந்த இந்திர விழா மாளிகைக்குக் கண்கள் பல இருப்பது அவளுக்குத் தெரியும். எங்கும் திறமைசாலிகளான ஒற்றர் களாலும், வாளையும் வேலையும் தாங்கிய வீரர்களாலும் காவல் செய்யப்பட்டு வரும் அந்த மாளிகையிலிருந்து தப்பு வது அசாத்தியமென்பதை அவள் நன்றாக அறிந்திருந்தாள். 'முன்பாவது இந்திர விழா மாளிகையை அடுத்து ஓடிய காவிரியின் சுவர்த் தளைகள் மூலம் நூலேணியில் இறங்கித் தப்பலாம். இப்பொழுது அதுவும் முடியாதே. தளைகளை

எல்லாம் டைபீரியஸ் எடுத்து விட்டானே. நேராகக் காவிரி நீரில் குதித்துப் பிழைக்கவும் முடியாதே. பனைமர உயர மிருக்கும் இந்திர விழா மாளிகையிலிருந்து நீரில் பரதவர் மட்டுமே குதிப்பார்கள். பிற வகுப்பினருக்கு அந்தப் பழக்க மில்லை துணிவுமில்லை. தவிர இந்த மாளிகை வேண்டு மென்றே காவிரியின் பெரும் சுழல்கள் இருக்குமிடமாகப் பார்த்து அமைக்கப்பட்டிருக்கிறது. குதிப்பவனைச் சுழல்கள் நீரின் அடிமட்ட மணலில் கொண்டுபோய்ச் செருகிவிடும். இதிலிருந்து தப்புவது முடியாது. ஒருகாலும் முடியாது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே ராணி வியாகூலம் மிக்க வளாய், "பிரபு! சீக்கிரம் யோசியுங்கள். ஏதாவதொரு வழியை யோசியுங்கள்" என்று கெஞ்சவும் செய்தாள்.

"வழியை யோசிக்கப் புத்திக்குச் சுறுசுறுப்பு வேண்டும் ராணி" என்றான் படைத் தலைவன்.

"அதற்கு என்ன செய்ய வேண்டும். மருந்து ஏதாவது தேவையா?" என்று எரிச்சலுடன் கேட்டான் ஹிப்பலாஸ்.

"ஆம் ஹிப்பலாஸ். மருந்துதான் தேவை" என்று சொல்லிப் படைத்தலைவன் சிரித்தான்.

"என்ன மருந்து?" மீண்டும் எரிச்சலுடனேயே எழுந்தது ஹிப்பலாஸின் இரண்டாவது கேள்வியும்.

"மது! மதுவைவிட புத்தியை இயக்கும் சிறந்த மருந்து உலகில் இல்லை."

"மதியை மது மந்தப்படுத்துவதும் உண்டு" என்று ராணி உஷ்ணத்துடன் கூறினாள்.

"பழக்கமில்லாதவர்களை மந்தப்படுத்தும்" என்றான் படைத்தலைவன்.

"தங்களுக்குப் பழக்கமதிகமோ?"

"ஆம்."

"எப்பொழுது?"

"சிறுவயதிலிருந்தே. நான் அருந்தாத மது கிடையாது. எல்லா நாட்டு மதுவையும் அருந்தியிருக்கிறேன்."

ராணிக்குப் படைத்தலைவன் சொன்ன இந்தப் பதில் ஹிப்பலாஸுக்குத் தூக்கிவாரிப் போட்டது. படைத் தலைவன் ஓரிருமுறைகள் மதுவருந்தியிருப்பதை அவன் பார்த் திருக்கிறான். ஆனால் அளவுக்கு மீறியோ பிரியப்பட்டோ, இளஞ்செழியன் என்றுமே மது அருந்தியதில்லை. ஆகவே, 'இத்தகைய ஒரு பொய்யைப் படைத் தலைவர் ஏன் சொல் கிறார்?' என்று குழம்பினான்.

ராணிக்கும் படைத் தலைவன் பேச்சு வெறுப்பாக மட்டுமல்லாமல், டைபீரியஸ் வந்துவிட்டால் அவன் கதியை நினைத்ததன் விளைவாக அச்சத்தை அளிக்கும் படியாகவும் இருந்தது. இருப்பினும், திரும்பத் திரும்ப படைத் தலைவன் மதுவைக் கொண்டுவரும்படி கூச்சலிட்டபடியாலும், "என் மனைவியான நீ எப்படி நான் சொல்வதைத் தட்டலாம்?" என்று சீறியதாலும், ராணி வெளியே இருந்த காவலரை விளித்து, மதுவைக் கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பணியாட்கள் கொண்டு வைத்த மதுவையும், தங்க மதுக் கிண்ணங்களையும் திருப்தி யுடன் நோக்கிய படைத் தலைவன் விடுவிடு என்று நடந்து அந்த அறைக்குத் தென்புறத்திலிருந்த வெளித் தாழ்வாரத் திற்குச் சென்று காவிரியைக் குனிந்து நோக்கினான். பிறகு கிழக்குத் திசையில் கண்களை ஓட்டி மரக்கலங்களைக் கவனித்தான். பிறகு திரும்ப மஞ்சத்துக்கு வந்து இரு கிண்ணங்கள் மதுவை அருந்திவிட்டு இருமுறை நகைத்தான். மீண்டும் வெளியே இருந்த காவலருக்குக் குரல் கொடுத்தான். உள்ளே ஏற்பட்ட வெறி மிகுந்த நகைப்பால் பெரிதும் குழப்ப மடைந்த காவலர், ராணி அறையிலிருந்ததால் உள்ளே நுழையத் தயக்கப்பட்டாலும் திரும்பத் திரும்ப எழுந்த படைத் தலைவன் கூச்சலைச் சகிக்காமல் உள்ளே ஓடிவந்தார்கள் வந்தவர்கள் முகக்கவசமணிந்திருப்பவன் பூரண போதையி லிருப்பதை உணர்ந்து ஒருகணம் திகைத்தார்கள். அடுத்த கணம் அவர்களை அசர வைக்கும்படியான உத்தரவு பெரிதாக எழுந்தது. "இவனைக் கொண்டுபோய் மாளிகைக்கு

வெளியில் தள்ளுங்கள்" என்று ஹிப்பலாஸைச் சுட்டிக் காட்டினான் இளஞ்செழியன்.

"என்னையா!" ஹிப்பலாஸின் குரலில் அச்சமிருந்தது.

"ஆம், உன்னைத்தான்!" வெறி மிகுந்த குரலில் பதில் சொன்னான் படைத் தலைவன்.

"தங்களுக்குத் துணை?"

"ராணியிருக்கிறாள். நீ மரக்கலத்துக்குப் போ."

கட்டளை இடும் குரலில் போதை இருந்தாலும் திட்டவட்டமாக இருந்தது. காவலர் ராணியை நோக்கினர். ராணி ஹிப்பலாஸை வெளியே செல்லுமாறு ஜாடை செய்தாள். காவலர்களால் இழுக்கப்பட்டு ஹிப்பலாஸ் வெளியே சென்றதும் படைத் தலைவன் தள்ளாடி நடந்து அந்த அறைக் கதவைத் தாழிட்டான். அவன் அப்படித் தாழிடுவதைக் கண்ட காவலர் சற்று வெளியே தாமதித்தனர். கதவு வெகு வேகமாகப் பெரும் சத்தத்துடன் தாழிடப் பட்டது. அடுத்த வினாடி அறையில் வெறி பிடித்த சிரிப்பு பலமாகக் கேட்டது. வெறுப்புடன் காவலர் ஹிப்பலாஸை இழுத்துக் கொண்டு வெளியே சென்றனர்.

அரைக்கால் ஜாமம் வெகு துரிதமாக ஓடிவிட்டது. கருக்கலும் சூழ்ந்துவிட்டது. இன்னும் அரைக்கால் ஜாமம் காரிருள். பிறகு பொழுது புலரும் நேரம். அந்தக் காரிருள் கவியத் தொடங்கிய நேரத்தில் வெகு வேகமாகக் காவலர் பின் தொடர டைபீரியஸ் இந்திர விழா மாளிகையை நோக்கி வந்து விடுவிடு என்று ராணியின் அறையை நோக்கி விரைந்தான். அவன் அடைந்ததும் கதவு தாழிடப்பட்டிருப்பதைக் கண்டு சற்று தயங்கினான். உள்ளே அப்பொழுதும் வெறி பிடித்த சிரிப்புக் கேட்டது. திகைத்து ஒரு கணம்தான் நின்றிருப்பான் டைபீரியஸ். அப்படி நின்ற சமயத்தில் "விடு என்னை, விடு என்னை" என்று வெறிக் கூச்சல் கேட்டது. "வேண்டாம் வேண்டாம்" என்று ராணி உள்ளே பயங்கரமாக அலறினாள். அதற்கு மேல் தாளாத டைபீரியஸ் காவலரை நோக்கி, "உடையுங்கள் கதவை!" என்று உத்தரவிட்டான்.

102. கவசமணிந்த சடலம்

இந்திர விழா மாளிகையில் ராணியின் அறைக்குள்ளே அலறல் கேட்டவுடன் கதவை உடைக்கும்படி டைபீரியஸ் கட்டளையிட்டதும், அதை நிறைவேற்றக் காவலர் ஆயத்தம் செய்ய முயன்ற அடுத்த வினாடி அந்த அறைக் கதவே அதிவேகத்துடன் திறக்கப்பட்டதால், யவனர் கடற்படைத் தலைவன் கண்ணிமைக்கும் நேரத்தில் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த அலங்கோலத்தைக் கண்டு சில வினாடிகள் பிரமித்து நின்றான். அங்கிருந்த மஞ்சத்தின் மீது மது பாண்டமொன்று கவிழ்ந்து கிடந்ததன்றி, மஞ்சத்தில் சரிந்த மதுவும், மஞ்சத்தின் கால்கள் வழியாகத் தரையில் ஓடிக் கொண்டிருந்ததையும், இரண்டு மதுக் கிண்ணங்கள் அறை மூலைகளில் வீசியெறியப்பட்டு உருண்டு கிடந்ததையும் கண்ட டைபீரியஸ் கோபத்தின் எல்லையை அடைந்து, "என்ன ராணி இது?" என்று உக்கிரத்துடன் வினவினான். அப்படி வினவியபோது ராணியின் உடையும் ஓரளவு கலைந் திருப்பதையும், அதிலும் மது தெளிந்திருப்பதையும் பார்த்து, 'யவனர்களின் ராணியிடம் இப்படி நடந்து கொள்ளக்கூடிய வனும் இருக்கிறானா?' என்று தனக்குள்ளேயே பொங்கிய டைபீரியஸ் "எங்கே அந்த மரக்கலத்தலைவன்?" என்று சீறவும் செய்தான்.

"இங்கே இருக்கிறான்" என்று குழம்பிக் குழம்பி உதிர்ந்த சொற்கள் வெளித்தாழ்வாரத்திலிருந்து வருவதைக் கேட்ட யவனர் கடற்படைத் தலைவன், அந்தத் தாழ்வாரத்தை அணுக ஒரு காலை எடுத்து வைத்துப் பிறகு விஷக் கடிக்கு உள்ளானவன்போல் சரேலெனக் காலைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டதல்லாமல், என்றும் பயத்தைக் காட்டாத அவன் கண்களிலும் பயம் மிதமிஞ்சி உதயமாகி முகமெங்கும் பரவிக் கிடந்தது. உள்ளே மட்டுமின்றி வெளித் தாழ்வாரத் திலும் வீசிய அறையின் மங்கலான வெளிச்சத்தில் முகக்கவச

மணிந்த மரக்கலத் தலைவன் தாழ்வாரத்தின் கைப்பிடிச் சுவரில் ஏறி நின்று தள்ளாடிக் கொண்டிருந்தான். எந்த வினாடியும் அவன் காவிரியில் விழுந்துவிடலாமென்றும், அப்படி விழுந்து விட்டால் இரண்டு நாள் கழித்து அவன் சடலம் மட்டுமே அகப்படுமென்பதையும் சந்தேகமற உணர்ந்த டைபீரியஸ் ஒருகணம் என்ன செய்வதென்று தெரியாமல் திணறினான். அந்தக் குடிகாரனை மெள்ளச் சமாதானம் சொல்லி இறங்கச் செய்து, பிறகு தண்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை வெகு துரிதமாகத் தீர்மானித்த டைபீரியஸ், "டேய்! இறங்கு கீழே. அங்கே நிற்காதே. அபாயம்! என்று பாதி எச்சரிக்கையும், பாதி கோபமும் தொனித்த குரலில் கூறினான்.

இதைக் கேட்ட பிறகு கைப்பிடிச் சுவரின்மேல் ஆடிக் கொண்டிருந்த இளஞ்செழியன் ஆட்டம் இன்னும் சற்று அதிகமாகியது. பதிலும் பெரும் குமுறலுடன் வெளிவந்தது. "இது என் மரக்கலம். இதோ – ஆடுது பார் காற்றில்... இங்கு நான்தான் தலைவன்!" தட்டுத் தடுமாறி உளறினான் அவன்.

"நீ தலைவன்தான். ஆனால் அது மரக்கலமல்ல சுவர்..." என்று டைபீரியஸ் கூறினான்.

"பொய்!... சுவர் ஆடுமா!"

"சுவர் ஆடவில்லை. நீதான் ஆடுகிறாய்."

"அதுவும் பொய்."

"உம் இறங்கு..." இம்முறை உக்கிரமாக வெளிவந்தது டைபீரியஸின் கட்டளை. அந்தக் குடிகாரன் ஆட்டத்தைக் காண டைபீரியஸுக்கே பெரும் வெறுப்பாயிருந்ததால், அந்த வெறுப்பைக் குரலிலும் காட்டினான்.

இதைக் கேட்டதும் ஒரு முறை குனிந்து அறையைப் பார்த்த படைத்தலைவன், "நீ யார்?" என்று டைபீரியஸைக் கேட்டான்.

"டைபீரியஸ்" என்று பதில் கூறினான் டைபீரியஸ்.

"இல்லை. அதுவும் பொய். எங்கள் தலைவரை நான்...அறிவேன்" என்று மறுபடியும் குழறினான் படைத் தலைவன்.

எத்தனையோ திக்பிரமையளிக்கும் சந்தர்ப்பங்களையும் சமாளிக்கும் சாமர்த்தியம் வாய்ந்த டைபீரியஸுக்கு அந்த நிலையை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாததால் அவன் ராணியைப் பார்த்தான். ராணியின் முகத்தில் பயத்தின் சாயை பெரிதாகப் படர்ந்து கிடந்ததல்லாமல், அவள் நீலமணிக் கண்களில் அந்தப் பயம் பெரிதும் பொங்கி வழிந்து கொண்டுமிருந்தது. "அந்தக் குடிகாரரை இந்தப் பக்கம் இழுங்கள்" என்று ராணி உதடுகள் துடிதுடித்துச் சொன்னாள். "அந்த வழிதானே எனக்கும் தெரியவில்லை" என்று பதில் சொன்ன டைபீரியஸின் குரலில் குழப்பம் பெரிதுமிருந்தது. முகக் கவசமணிந்த வீரனைப் பார்க்க வேண்டுமென்றும், அந்தக் கவசத்தை நீக்கி அவன் யாரென்பதை அறியவேண்டு மென்றும் சில நாட்களாகவே ஆசைப்பட்டுக் கொண்டிருந்த டைபீரியஸ், 'முகக் கவசமணிந்த வீரனைத் தான் முதல் முதலாக இந்த நிலையில் சந்திக்க நேரிடுமென்று லவலேசமும் நினைக்கவில்லையாகையால், கைக்கெட்டியது வாய்க்கு எட்டாது போலிருக்கிறதே?' என்று நினைத்துப் பெரிதும் சங்கடப்பட்டான். ஆகவே மீண்டும் பரிதாபத்துடன் அவனை அழைத்தான். இம்முறை வார்த்தைகளை மரியாதையுடன் பேசினான். "மரக்கலத் தலைவரே! கைப் பிடியிலிருந்து இறங்கி விடுங்கள். அது அபாயமான இடம். கீழே காவிரியின் சுழல்கள் இருக்கின்றன" என்று கூறிய டைபீரியஸ், அவனை எதிர் கொள்ளும் நோக்கத்துடன் இரண்டடி முன்னாடியும் எடுத்து வைத்தான்.

பதிலுக்குப் படைத் தலைவன் பெரிதாக நகைத்தான். "அபாயம்!... அபாயம்! யாருக்கு அபாயம்! எனக்கா! தண்ணீரிலிருந்தா!... ஹி...ஹி...ஹி...! மீன்குட்டிக்குத் தண்ணீரில் அபாயம்!" என்று இடிஇடியென்றும் நகைத்த படைத்

தலைவன் புயலிலாடும் பாய்மரம்போலப் பெரிதாக ஆடினான்.

"டேய்! டேய்! வேண்டாம். இறங்கிவிடு!" என்று பயத்தின் மிகுதியால் மரியாதையைக் கைவிட்டுக் கூறினான் டைபீரியஸ்.

"வேண்டாம், வேண்டாம். இறங்கிவிடுங்கள்" என்று அழாக்குறையாக வேண்டினாள் ராணி.

அவர்கள் இருவர் முகத்திலும் பெரும் பயமும் கவலையும் தாண்டவமாடின. ஆனால், அடுத்த வினாடி அவர்கள் பயந்தது நடந்தே விட்டது. சரேலென்று கால்கள் அகன்றதால் படைத் தலைவன் உடல் மல்லாந்த வண்ணம் அப்புறத்திலிருந்த காரிருளில் மறைந்தது. டைபீரியஸும் ராணியும் கைப்பிடிச் சுவரை நோக்கி ஓடினார்கள். அவர்கள் சுவரை அணுகுமுன்பே படைத் தலைவன் உடல் காவிரி நீரைத் தொட்டுவிட்டதை உணர்த்த சடேரென்ற சத்தம் அறையை நோக்கி எதிரொலி செய்யவே, ராணி பயத்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு சுவரை அணுகாமல் சற்று எட்டவே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். டைபீரியஸ் மட்டும், "டேய், யாரங்கே? பந்தங்களைக் கொண்டுவா" என்று கட்டளைக் கூச்சலை விடுத்துக் கொண்டே கைப்பிடிச் சுவரை அடைந்தான்.

வெகு சீக்கிரம் பந்தங்கள் கொண்டு வரப்பட்டுக் காவிரி நீரின்மீது வீசப்பட்டன. அப்படி வீசப்பட்டாலும் மாளிகை இருந்த உயரத்தின் காரணமாக நீர்மட்டம் தெரியாததால் பெரும் கயிறுகளைப் பந்தங்களின் அடிக்கட்டைகளில் கட்டி, சின்னஞ்சிறு ஊஞ்சல்களைப் போல பந்தங்களை வீரர்கள் அடி மட்டத்துக்கு இறக்கினார்கள். அப்படி இறக்கப்பட்ட பந்தங்களை விசிறி ஆட்டி ஆட்டி காவிரிச் சுழல்களை ஆராய்ந்தான் டைபீரியஸ். பந்தங்களின் வெளிச்சத்தில் காவிரி நீர் பயங்கரமாகச் சுழன்று சுழன்று ஓடியது. நீண்ட நேர ஆராய்ச்சிக்குப் பின்பும் ஏதும் தெரியாததால், காவிரியின் சுங்கச் சாவடி ஓரங்களிலும், சங்கமத்துறைப் பகுதியிலும்

சடலத்தைத் தேடுமாறு வீரர்களுக்குக் கட்டளையிட்ட டைபீரியஸ், துயரம் தோய்ந்த உள்ளத்துடன் அறைக்குள் வந்தான். ராணியும் அவனைப் பின்பற்றி வந்து மஞ்சத்தில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள். அவள் இதயம் வெடித்துக் கொண்டிருந்ததை அவள் உட்கார்ந்திருந்த நிலையிலிருந்தே உணர்ந்த டைபீரியஸ், 'இந்தக் குடிக்காரனுக்காக ராணி ஏன் இத்தனை வருத்தப்படுகிறாள்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு, 'ராணியாயிருந்தாலும் இவள் பெண்தானே' என்று தானே பதிலும் சொல்லிக் கொண்டான். சில நிமிடங்கள் அவள் சிந்தையின் இடையே புகாமல் மௌனமாகவே நின்றிருந்த டைபீரியஸ் பிறகு மெள்ளக் கேட்டான், "இவன் யார் ராணி?" என்று.

ராணி சீக்கிரம் பதில் சொல்லவில்லை: பதில் சொன்ன போதும் அவள் குரல் தழுதழுத்தது. "மரக்கலத் தலைவன்" என்றாள் அவள்.

"அது தெரியும் ராணி! அவன் யார், எந்த ஊர் பெயர் என்ன, இது எதுவுமே தெரியாதா உங்களுக்கு?" என்று மீண்டும் வினவினான் டைபீரியஸ்.

"தெரியாது." தயங்கி வந்தது ராணியின் பதில்.

"தெரியாமலா அவனைச் சந்திக்க அந்தக் குடிகாரர் மாளிகைக்குக்குப் போயிருந்தீர்கள்?" என்று வினவிய டைபீரியஸின் குரலில் சற்றுக் கடுமையிருந்தது.

ராணி அவனுக்குப் பதிலேதும் சொல்லவில்லை. எழுந்து அறை மூலைக்கு நடந்து சென்று அங்கிருந்து தந்தப் பேழையிலிருந்து ஓர் ஓலையைக் கொண்டு வந்து டைபீரியஸிடம் கொடுத்தாள். ஓலையைப் பிரித்துப் படித்த டைபீரியஸ் மேலும் குழம்பவே செய்தான். "ராணிக்கு வணக்கம். இன்றிரவு நள்ளிரவுக்கு என்னை மருவூர்ப்பாக்கத்துக்கும் பட்டினப் பாக்கத்துக்கும் இடையே யிருக்கும் தனிமாளிகையில் சந்திக்கவும். விஷயம் முக்கியம். தங்கள் சகோதரர் தங்களுக்குத் தனிச் செய்தி சொல்லியனுப்பியிருக்கிறார்–யவனர் மரக்கலத்

தலைவன்." என்று ஓலையில் பொறித்திருந்ததை இரண்டு மூன்று முறை படித்த டைபீரியஸ் ராணியை மிகுந்த உஷ்ணத்துடன் பார்த்து, "நான் அறியக்கூடாத அப்பேர்ப்பட்ட, என்ன ரகசியத்தை உங்கள் சகோதரர் கூறினார்?" என்று கேட்டான்.

"ஏதும் கூறவில்லை" என்றாள் ராணி மஞ்சத்தில் உட்காராமலே டைபீரியஸைப் பார்த்து.

"பின் எதற்காக அந்தக் குடிகாரர் மாளிகைக்குப் போனீர்கள்?"

"அது குடிகாரர் மாளிகையென்று எனக்குத் தெரியாது."

"ராணிகள் இரவில் தனிமையில் போவது சம்பிரதாயமா? முறையா?"

"இரண்டுமில்லை. அவசியம் சம்பிரதாயங்களை உடைக்கிறது."

"அது கிடக்கட்டும். அவன் என்ன ரகசியத்தைச் சொன்னான்?"

"எதையும் சொல்லவில்லை."

"எதற்காக அழைத்தான்?"

"ரகசியம் சொல்லுவதற்குத்தான்."

"உங்கள் பேச்சு எனக்குப் பெரும் புதிராயிருக்கிறது ராணி."

"புகாருக்கு நாம் வந்த பிறகு எல்லாமே புதிராகத்தானிருக்கிறது டைபீரியஸ்" என்ற ராணி, "எதற்கும் நடந்ததைச் சொல்கிறேன் கேட்டுக்கொள். இந்த மரக்கலத் தலைவன் என் சகோதரனுக்கு அந்தரங்கமானவன் என்பதை அலீமா உனக்கும் சொல்லியிருக்கிறாள்; எனக்கும் சொல்லியிருக்கிறாள். ஆகவே அவனிடமிருந்து செய்தி வந்ததும் அதுவும் சகோதரன் சம்பந்தமான ரகசியமென்றதும் சென்றேன். ஆனால் அந்தமாளிகையைக் கண்டதும் வெகுண்டேன். அந்த மரக்கலத் தலைவன் நிலையைக் கண்டதும் மிக மிக வெகுண்டேன். அந்த மாளிகைக்கு என்னை அழைக்க அவனுக்கு அத்தனை துணிவு வந்தது

எப்படியென்று வினவினேன். என் கடற்படைத் தலைவருக்கு முன்னால் சொல்லக் கூடாத அத்தனை பெரிய ரகசியம் என்ன என்று சீறினேன். என் சீற்றத்தைக் கண்டு அவன் நடுங்கினான். அவன் குடித்திருந்த சமயத்திலும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். இந்திர விழா மாளிகையில் டைபீரியஸுக்கு முன்பாகவே பேசுவதில் தனக்கு ஆட்சேபணையில்லையென்று சொல்லி என்னுடன் இங்கு வந்தான். இங்கு வந்த பிறகு உன்னை அழைக்க வீரர்களை ஏவினான். நீ வரத் தாமதமானதால் மீண்டும் மது கொண்டு வரச் சொல்லித் தலைகால் புரியாமல் குடித்தான். என்மீது மதுவைக் கொட்டினான். குடிகாரச் சிரிப்புச் சிரித்தான். கதவைத் திறக்க ஓடிவந்தேன். அதற்குள் வெளித் தாழ்வாரக் கைப்பிடிச் சுவரை நோக்கிப் போனான். அவனைத் தடுக்க வீரர்களை அழைக்கவே கதவைத் திறந்தேன். அதற்குள் அவன் சுவர்மீது ஏறி ஆட ஆரம்பித்துவிட்டான்..." இதற்கு பிறகு ராணி ஏதும் சொல்ல முடியாமல் திணறிச் சற்று நிதானித்தாள்.

டைபீரியஸ் எந்த நிதானத்துக்கும் வரவில்லை. யவனர் இளவரசன் மரக்கலத் தலைவன் திறமையைப் பற்றிப் பெரிதும் சிலாகித்து எழுதியிருந்தானாகையால் அவன் இறந்தால் பெரும் நஷ்டமாயிற்றே என்று நினைத்து மனம் புழுங்கினான். தமிழகத்தில் பெரும் போர் மூள அதிக நாளில்லை என்பது டைபீரியஸுக்குத் தெரியும். அப்படிப் போர் மூண்டால் காவிரிப் பகுதியில் புகாரைக் காக்க அந்த யவனர் போர்க் கலங்கள் பெரிதும் பயன்படும் என்பதை அவன் சந்தேகமற உணர்ந்திருந்தான். போர்க் கலங்களை இயக்கும் மர்மங்களை நன்றாக உணர்ந்திருந்த யவனர் கடற்படைத் தலைவன் அத்தகைய திறமையுள்ள ஒரு மரக்கலத் தலைவனை இழந்து விட்டது பற்றிப் பெரிதும் வருந்தினான். இருப்பினும் தன் சீடப் பெண் அலீமாவைக் கொண்டு மரக்கலங்களை இயக்கலாமென்பதால் ஓரளவு சாந்தியும் அடைந்தான்.

ராணி மெல்ல நகைத்தாள். "இப்பொழுதுதானே முதற் பதவி கிடைத்திருக்கிறது" என்றும் கூறினாள்.

"முதற் பதவியா!" அல்லியின் கேள்வியில் ஆச்சரியம் மண்டிக் கிடந்தது.

"ஆம், காதலிப் பதவி கிடைத்திருக்கிறது. அடுத்தது மனையாட்டிப் பதவி. அதற்கும் அடுத்தது ராணிப் பதவி" என்று சொல்லிய ராணி அல்லியின் தோள்மீது கையை வைத்து, "அல்லி! இதெல்லாம் நானெப்படி அறிந்தேன் என்று ஆச்சரியப்படுகிறாயல்லவா? ஆச்சரியம் வேண்டாம். இதைச் சோழ நாட்டில் பெரும்பாலோர் அறிவார்கள். உறையூர் அரண்மனைக் காவலர் தலைவர் நாங்கூர்வேளானதும், பிறகு அவர் தமது மகளை மட்டுமின்றி இருங்கோவேள் சிறை வைத்த பூவழகியையும் அழைத்துக் கொண்டு மறைந்து விட்டதும் நாடெங்கும் பேசப்படுகிறது. ஆனால் அவர்கள் எங்கு போனார்கள், யாரிடம் சேர்ந்திருக்கிறார்கள் என்பது மட்டும் புகாரில் பலருக்குத் தெரியாது. ஆனால் இருவர் அறிவார்கள்" என்றும் விளக்கினாள்.

அல்லியின் இதயத்தில் ஆச்சரியத்துடன் ஓரளவு அச்சமும் கலக்கவே, "யார் அந்த இருவர்?" என்று கேட்டாள்.

"டைபீரியஸ் ஒருவன், நான் ஒருத்தி" என்றாள் ராணி.

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"டைபீரியஸ் சொன்னான்."

"டைபீரியஸுக்கு யார் சொன்னது?"

"மாரப்பவேள் சொன்னார்."

"யார், பூவழகியின் தந்தையா!"

"ஆம்!"

அல்லி சட்டென்று கட்டிலிலிருந்து எழுந்து கலவரம் நிரம்பிய கண்களுடன் ராணிக்கு எதிரில் நின்று கொண்டு சோழ நாட்டின் ராணிக்குரிய தோரணையில் தலையைச் சற்றுக் கம்பீரத்துடன் உயர்த்தி, "இப்பொழுது மாரப்பவேள் எங்கே?" என்று வினவினாள்.

"புகாரின் சிறையில்." ராணியின் பதில் திட்டவட்டமாக வந்தது.

"புகாரின் சிறையிலா? அவரைச் சிறையிலடைக்க டைபீரியஸுக்கு என்ன துணிச்சல்?" அல்லியின் கேள்வியும் உஷ்ணமாக எழுந்தது.

ராணியின் நீலமணிக் கண்கள் அல்லியின் கோபம் மண்டிக் கிடந்த முகத்தை ஒரு முறை துழாவின. அவள் இதழ்கள் புன்னகையை மறுபடியும் கொட்டின. "மாரப்பவேளைச் சிறையிலடைக்கத் துணிச்சல் எதற்கு" என்று ராணியின் உதடுகள் வார்த்தைகளையும் உதிர்ந்தன.

"மாரப்பவேள் இருங்கோவேளின் நண்பரல்லவா?" என்று கேட்டாள் அல்லி.

ராணியின் பதில் உறுதியுடன் வந்தது. "இல்லை அல்லி, இல்லை. மாரப்பவேள் அங்கு வருமுன்பே அவரைப் பற்றிச் செய்தி வந்தது. வந்தவுடன் அவரைச் சிறையில் தள்ளும்படி இருங்கோவேள் முன்னதாகவே ஓலை எழுதியிருந்தான். ஓலையை டைபீரியஸே என்னிடம் காட்டினான். அதன்படி அவர் சிறையில் தள்ளப்பட்டார்" என்றாள் ராணி.

அல்லிக்கு அப்போதுதான் நிலவரம் திட்டமாகப் புரிந்தது. பூவழகியைத் தான் அணுக இடைஞ்சலாயிருந்ததாலேயே மாரப்பவேளைப் புகாருக்கு அரசியல் காரியமாக அனுப்புவதுபோல் பாசாங்கு செய்து, இருங்கோவேள் அவரைச் சிறையிட ஏற்பாடு செய்துவிட்டானென்பதை அறிந்து கொண்ட அல்லி, "என்ன நம்பிக்கைத் துரோகம்? எத்தனை கேவலம்!" என்று அலுத்துக் கொண்டாள்.

"அப்படி நம்பிக்கைத் துரோகிகள் இல்லாவிட்டால், வேறு நாட்டார் உங்கள் நாட்டை உடைக்க முடியுமா? புகார் தான் எங்கள் கைவசமாகுமா?" என்று கேட்ட ராணி, ஒரு விநாடி மௌனம் சாதித்துவிட்டு, "ஆமாம்! நீ இங்கு எப்பொழுது வந்தாய் அல்லி?" என்று வினவினாள்.

அவளைப் பார்த்தவுடனேயே புரிந்து கொண்டான் டைபீரியஸ், 'வருவது சாதாரணப் பெண்ணல்ல, யவனர்களின் மாபெரும் ராணி! எந்த உணர்ச்சியும் வெளிப்படுத்தாது எந்தக் காட்சிகளையும் காணவல்ல அரசகுமாரி?' என்பதை.

அவள் கிரேக்க நாட்டு வெண்கலச் சிலை நடப்பது போல நடந்து அறைக்குள் நுழைந்து அந்தச் சடலத்தின் முன்பாக நின்றாள். அவளுக்கு ஒரு மஞ்சத்தை எடுத்துப் போட உத்தரவிட்டான் டைபீரியஸ். 'தேவையில்லை' என்பதற்கு அடையாளமாகக் கையமர்த்தினாள் ராணி.

"முகமூடியைக் கழற்றலாமா?" பணிவுடன் கேட்டான் டைபீரியஸ்.

"கழற்றலாம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையை மெள்ள அசைத்தாள் யவனர் நாட்டுச் செல்வி.

103. டைபீரியஸின் வியப்பும் பிரமிப்பும்

அப்பழுக்கில்லாத சுத்த வைரத்தைவிட ஒருபடி அதிகமாகவே நெஞ்சைக் கடினமாக்கிக் கண்ட யவன ராணி காவிரியின் பெரு மீன்கள் உடலை ஆங்காங்குக் கடித்துக் குதறியிருந்ததால் அரைப்பந்தங்களின் வெளிச்சத்தில் மிகக் கோரமாகத் தெரிந்த அந்தக் கவசமணிந்த சடலத்தின்மீது தன் நீலமணிக் கண்களை ஒரு கணம் ஓடவிட்டுப் பிறகு வெறித்துப் பார்த்தவண்ணம் நின்று கொண்டிருந்தாள். முகக் கவசத்தைச் கழற்ற டைபீரியஸ் உத்தரவு கேட்டு அவள் தலையை அசைத்தபோதும் அந்த வெறித்த பார்வையே இருந்ததைக் கவனித்த டைபீரியஸ், ராணியின் உணர்ச்சிகள் பெரிதும் மரத்துவிட்டதை அறிந்து கொண்டானானாலும் அதற்குக் காரணம் எதுவாயிருக்க முடியும் என்பதை மட்டும் அறிய முடியாமல் திணறினான், குடிகாரனும் கெட்ட நடத்தையுள்ளவனுமான யவன மரக்கலத் தலைவனிடம் எந்தவிதப் பாசமும் ராணிக்கு ஏற்பட நியாயமில்லையென்பதை அவன்

பூரணமாக நம்பினான். ஆனாலும், மரக்கலத் தலைவன் அழைப்புக் கிணங்கி அவள் அந்தக்குடிகாரர் மாளிகைக்குச் சென்றதும், பிறகு மதுவினால் மயங்கி உளறிய மரக்கலத் தலைவனை இந்திர விழா மாளிகைக்கே அழைத்து வந்ததும், விடை காணமுடியாத பெரும் புதிர்களாயிருந்தன யவனர் கடற்படைத் தலைவனுக்கு. இப்படி யவன நாட்டிலிருந்து புகார் சேர்ந்த சில நாட்களுக்குள்ளாக முகம் மூடித் திரிந்து இத்தனை குழப்பங்களை உண்டாக்கிய அந்த மனிதன் முகத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் டைபீரியஸுக்கு இருந்ததால், "உம் கவசத்தை அகற்றுங்கள்" என்று தனது வீரர்களுக்குப் பணித்தான்.

அவன் கட்டளை வேகமாத்தான் பிறந்தது. ஆனால் அந்தக் கவசத்தைக் கழற்றுவது வீரர்களுக்கு அத்தனை எளிதான அலுவலாயில்லை. சடலம் சில மணி நேரங்கள் தண்ணீருக்குள்ளிருந்ததால் ஓரளவு சற்றுப் பருத்துவிட்டதன் விளைவாகக் கவசம் நன்றாகக் கழுத்தை இறுக்கிப் பிடித்திருந்ததல்லாமல், அந்தக் கவசத்தில் ஆரம்பத்திலிருந்த இடைவெளியில் புகுந்து முகத்தைக் கடிக்க முயன்ற மீன்கள் இரண்டொன்று கவசத்துக்கும் கழுத்துக்கும் இடையே அகப்பட்டுக் கொண்டிருந்ததால், கவசத்தைக் கழற்ற முயன்ற வீரர்களின் விரல்கள் வழுக்கி வழுக்கி வெளியே வந்தன வாகையால் முகக்கவசம் நன்றாக எடுக்கப் படுவதற்குச் சில நிமிடங்கள் ஆகவே செய்தன. அத்தனை சிரமத்தில் முகக் கவசம் நீக்கப்பட்டும்கூட அந்தக் கவசத்தை எடுத்ததன் பலன் டைபீரியஸுக்குக் கிட்டாததால் அவன் முகத்தில் வெறுப்பும் கோபமும் கலந்து தாண்டவமாடின.

சடலத்தின் உடல் நிலையைவிடக் கேவலமாயிருந்தது. முகத்தின் நிலை இறந்த மனிதன் முகத்திலிருந்த பல கத்திக் குத்துகளின் விளைவாக மனித முகத்தின் அடையாளங்களை அது அறவே இழந்து கிடந்தது. கத்திக் காயங்களால் சின்னா பின்னப் படுத்தப்பட்டிருந்த அந்த முகத்தைச் சில வினாடிகள்

கூர்ந்து கவனித்த டைபீரியஸ், வீரர்கள் கையிலிருந்து முகக் கவசத்தைத் தன் கையில் வாங்கி, பக்கத்தில் இருந்த ஒரு வீரனைப் பந்தத்தை நன்றாகத் தாழ்த்தச் சொல்லி அந்த வெளிச்சத்தில் அதைப் பரிசோதித்தான். அதைப் பரிசோதிக்கப் பரிசோதிக்க அவன் கண்களில் மிதமிஞ்சிய கோபம் துளிர்த்ததன்றி, அந்தக் கோபத்தால் உதடுகளும் துடிக்கத் துவங்கி விட்டதைக் கவனித்த வீரர்கள் அதற்குக் காரணம் என்னவாயிருக்க முடியுமென்பதை அறிய முடியாமல் திகைத்தார்கள். ஆனால், ராணிக்கு மட்டும் காரணம் தெளிவாகத் தெரிந்துவிட்டது. சடலத்தைப் பார்த்த முதல் பார்வையிலிருந்தே, அந்த உடல் இளஞ்செழிய னுடையதாயிருக்க முடியாதென்ற முடிவுக்கு வந்தாளாகை யால், கவசத்தைக் கழற்றிய பின்பு டைபீரியஸுக்கு ஏற்பட்ட கோபத்தை சகஜமாகவே பாவித்தாள் ராணி. அந்த சகஜ பாவத்தை உடைக்கவும், ராணி மூலம் உண்மையை அறியவும் முயன்ற டைபீரியஸ் "ராணி! முகத்தைக் கவனித்தீர்களா?" என்று கேட்டான்.

உணர்ச்சிகள் உண்மையை உணர்ந்தபின் ஓரளவு தெளி வடையத் தொடங்கினாலும், அதை வெளிக்குக் காட்டாமல் பழைய வெறித்த பார்வையுடனேயே நின்றிருந்த ராணி தன் உதடுகளை மெல்ல அசைத்து, "கவனித்தேன்" என்று ரகசியம் பேசுவதுபோல் சொன்னாள்.

"முகம் சின்னாபின்னப் படுத்தப்பட்டிருக்கிறது ராணி!" என்றான் டைபீரியஸ் மீண்டும்.

"அப்படித்தான் தெரிகிறது" என்றாள் ராணி மிகவும் சாதாரணமாக.

"இது தற்கொலையல்ல" என்று டைபீரியஸ் மேலும் தொடர்ந்து வார்த்தைகளைச் சிறது அழுத்திச் சொன்னான்.

ராணி தன் நீலமணிக் கண்களை ஏதோ சந்தேகம் கேட்பவள் போல் அவனை நோக்கி உயர்த்தினாள். அந்தப் பார்வையில் தொக்கி நின்ற கேள்வியைப் புரிந்து கொண்ட

டைபீரியஸ், அதற்குப் பதில் சொல்லத் தொடங்கி, "ஆம் ராணி. இது தற்கொலையல்ல, தண்ணீரில் விழுந்து மாண்ட வனின் பிணமுமல்ல" என்றான்.

"அப்படியா!" வியப்புடன் வெளிவந்தது ராணியின் கேள்வி.

"ஆம் ராணி! தண்ணீரில் விழுந்தவன் தப்பிவிட்டான். தான் தப்பியதை மறைப்பதற்காக இந்தப் பிணத்தின் முகத்திற்குத் தன் முகமூடிக் கவசத்தை மாட்டியிருக்கிறான். இறந்தவன் யார் என்று தெரியாதிருப்பதற்காக முகத்தையும் சின்னாபின்னப் படுத்தியிருக்கிறான்."

"இதையெல்லாம் யார் சொன்னது உனக்கு?"

டைபீரியஸ் கண்கள் ராணியின் முகத்தை ஒரு விநாடி அவள் உள்ளத்தை ஊடுருவி விடுவதுபோல் பார்த்தன. "முகமே முதலில் சொல்லிவிட்டது ராணி! தற்கொலை செய்து கொள்பவனோ, அல்லது குடித்து மதிமயங்கி நீரில் விழுபவனோ, விழுந்தபின் கவசத்தைக் கழற்றி முகத்தைக் கத்தியால் ரண காயப்படுத்திக் கொள்வது மனித வரலாற்றில் காணாத விந்தை. தவிர வேறு அத்தாட்சி வேண்டுமென்றால், இதோ பாருங்கள்" என்று கையிலிருந்த முகக் கவசத்தை ராணியை நோக்கி நீட்டினான் டைபீரியஸ். கவசத்தைக் கையில் வாங்காமலே பார்த்தாள் ராணி. "இதில் என்ன அத்தாட்சி இருக்கிறது?" என்று ஏதும் புரியாததாலோ புரிந்து கொள்ள இஷ்டமில்லாததாலோ கேட்கவும் செய்தாள் ராணி.

டைபீரியஸ் பதிலுக்கு ராணிக்கு வெகு அருகில் வந்து பக்கத்திலிருந்த வீரனைப் பந்தத்தை நன்றாகச் சாய்க்கச் சொல்லி, கவசத்தின் அடிப்பாகத்தைக் காட்டி, "நன்றாக உற்றுப் பாருங்கள் ராணி! இந்தக் கவசம் சிறிது, இந்தச் சடலத்தின் தலை பெரிது. தலையில் இதை மாட்டப் பெரும் இருப்புச் சலாகையொன்றால் இந்தக் கவசத்தின் அடிவிளிம்பு தட்டப்பட்டிருக்கிறது. சலாகை பட்ட இடங்களில் கீறல்கள் இன்னுமிருக்கின்றன, பாருங்கள். இதற்கு என்ன அர்த்தம்

தெரியுமா?" என்று விளக்கியதன்றி உக்கிரத்துடன் கேள்வியும் கேட்டான்.

"என்ன அர்த்தம்?" ராணியின் கேள்வி வறண்ட குரலில் வெளிவந்தது.

"இந்த மரக்கலத் தலைவன் இந்த ஊரை நன்றாக அறிந்திருக்கிறான். ஆயுதங்களையும், கவசங்களையும் செய்யும் இரும்புக் கொல்லர்களையும் இவனுக்குத் தெரியும்."

"உம்?"

"ஆம்; இந்தப் புகார் இவனுக்குப் புதிதல்ல..."

"இருக்கலாம். வந்து பல நாட்கள் ஆகின்றனவே. அதற்குள் யாரையாவது சினேகம் பிடித்திருக்கலாம்."

"இருக்கலாம் இருக்கலாம். ஆனால் இன்னொரு சந்தேகம் ராணி" என்று டைபீரியஸ் கூறினான்.

அவன் குரலில் சந்தேகம் வலுத்துக் கிடப்பதைக் கண்ட ராணி கண்களை உயர்த்தி அவனைத் தைரியமாக நோக்கி, "என்ன சந்தேகம் டைபீரியஸ்?" என்று வினவினாள்.

"உங்கள் அறையில் மரக்கலத் தலைவன் அதிகமாகக் குடித்திருந்தான் அல்லவா?" என்று கேட்டான் டைபீரியஸ்.

"ஆம்" என்றாள் ராணி.

"நிச்சயமாகக் குடித்திருந்தானென்பது உங்களுக்குத் தெரியுமா?"

"எனக்கு மட்டுமென்ன, அறைக் காவலருக்குக்கூடத் தான் தெரியும்."

"காவலரைப்பற்றி எனக்கு அக்கறையில்லை, உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும். நான்தானே மதுவை ஊற்றிக் கொடுத்தேன்."

"எந்த மது?"

"நம் நாட்டு மதுவில் அதிக போதை உண்டாக்கக் கூடியது."

"எவ்வளவு கொடுத்தீர்கள்?"

"மதுவருந்திப் பழகியவனே இரண்டாவது கிண்ணத்தில் மயங்கி விழுவான். இவனுக்கு நான்கு கிண்ணங்கள் கொடுத்தேன்..."

இதைச் சொன்ன ராணி பேச்சை நிறுத்தினாள். டைபீரியஸ் சற்றுநேரம் சிந்தித்தான். பிறகு சரேலென ராணியை நோக்கித் திரும்பி, "ராணி! நான்கு கிண்ணங்கள் குடித்தும் ஒருவன் மயங்கித் தரையில் சாயாதது பெரும் விந்தை. அதைவிடப் பெரும் விந்தை அவன் ஆற்றில் விழுந்தும் சாகாதது. இந்த விந்தைக்குக் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்?" என்று வினவினான்.

"எனக்குப் புரியவில்லை" என்றாள் ராணி.

"புரியவில்லை?" சந்தேகத்துடன் எழுந்தது டைபீரியஸ் கேள்வி.

"இல்லை." திட்டமாக வந்தது ராணியின் பதில்.

"இதில் புரியாதது ஏதுமில்லை ராணி. அவன் மதுவை அருந்தவில்லை. அருந்துவதுபோல் பாசாங்கு செய்திருக் கிறான். ஆனால் மதுவைக் கொடுத்திருக்கும் தங்களுக்கு அது எப்படி தெரியாமல் போயிற்று?" என்று கேட்ட டைபீரியஸ், தன் விழிகளைச் சந்தேகத்துடன் ராணியின் முகத்தில் உலாவ விட்டான்.

ராணியின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் பிரதி பலிக்கவில்லை. "டைபீரியஸ்! உன் ஆராய்ச்சி அத்தனை சரியல்ல என்று தோன்றுகிறது எனக்கு. ஏனென்றால், கிண்ணத்தின் பின் கிண்ணமாக மதுவை அவன் உறிஞ்சுவதை நானே பார்த்தேன்" என்றாள் ராணி.

"ராணி! என்னைப் பூரணமாக நீங்கள் நம்புகிறீர்களா?"

"கண்டிப்பாய் நம்புகிறேன்."

"இந்த நாட்டில் யவன அரசை நிறுவுவதைத் தவிர வேறு எண்ணம் எனக்கில்லை."

"அது உன் ராஜபக்தியை விளக்குகிறது."

"ஊழியருக்கு ராஜபக்தியிருந்தால் மட்டும் போதாது ராணி. ராஜாக்களுக்கும் ஊழியர்களிடம் நம்பிக்கை

வேண்டும். ஊழியர்களின் பக்தியோ, அரசர்களின் நம்பிக்கையோ பாதிக்கப்படும்போது பெரும் அரசுகளை நிறுவ முடிவதில்லை. அந்த ஒற்றுமையின்றி எதிரிகளை வீழ்த்தப்படுவதுமில்லை" என்று கூறிய டைபீரியஸ் தனது வீரர்களைப் பார்த்து ராணியை அவள் அறைக்கு அழைத்துச் செல்லுமாறு பணித்தான். வீரர்கள் பின் தொடரத் தனது அறையை நோக்கிச் சென்ற ராணி, டைபீரியஸின் சொற்களை நினைத்துப் பார்த்துப் பெருமூச்சும் விட்டாள். யவன அரசை நிலைநிறுத்தப்படும் பணிக்கு இடையூறாகத் தான் இருப்பதையும், தான் எதிரி பக்கம் சாய்ந்துவிட்டதையும் வலியுறுத்தவே அந்த வார்த்தைகளை டைபீரியஸ் சொன்னானென்பது திட்டவட்டமாகத் தெரிந்தது யவன ராணிக்கு. ஆனால், பேதை அவள் என்ன செய்வாள்? அரசர்கள் கடமையை மீறிய உணர்ச்சிகளுக்கு அவள் ஆட்பட்டு, கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகப் போகிறதை உணர்ந்த ராணி, தான் செய்வது சரிதானா, இளஞ்செழியன் காதலுக்காகச் சொந்த நாட்டு நலனையும், சோதிடர் வார்த்தையையும் காற்றில் பறக்க விடுவது நியாயம்தானா என்று யோசித்தாள். சரியல்ல என்று ஒரு சமயம் தோன்றியது. சரிதான் என்று இன்னொருமுறை தோன்றியது. தமிழகத்து வீரன் ஒருவன் உதவியால்தான் தான் தமிழகத்தில் முடிசூட முடியும் என்று யவன குருமார்கள் சொன்ன வாக்கை மட்டும் இரும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு தன் நடத்தைக்கு நியாயம் கற்பித்துக் கொண்டாள் ராணி.

இந்த நினைப்புக்களுடன் அறையை அடைந்து மஞ்சத்தில் சாய்ந்துகொண்ட ராணியின் புத்தியில் ஏதேதோ கேள்விகள் எழுந்து சுழன்றன. 'சடலத்தைப் பார்த்த உடனேயே அது அவருடையதல்லவென்று தெரிந்து கொண்டேன். ஆகையால்தான் திடப்பட்டேன். அறைக்குப் போகும் வரையில் மனம் வறண்டு கிடந்தது. அங்கு சென்று உடலைப் பார்த்ததும் நம்பிக்கை சுரந்துவிட்டது. அவர் குடித்ததுபோல் நடித்ததற்கும் கூவியதற்கும் காரணம்

எனக்குப் புரிந்தது. புரிவானேன்? கதவை மூடிய பின்பு அவரே சொன்னாரே காவலரை ஏமாற்றவென்று. ஆனால் டைபீரியஸை ஏன் மாளிகைக்கு அழைத்தார்? எதற்காக அபாயமான காவிரி நீரில் விழுந்தார்? விழுந்தவர் எப்படித் தப்பினார்?' என்று ஏதேதோ, சொல்லிக் கொண்டாள் ராணி. பல சந்தேகங்கள் அவள் இதயத்தில் சுழன்றன.

அவள் இதயத்திலென்ன, டைபீரியஸின் இதயத்திலும் ஏராளமான சந்தேகங்கள் சுழன்றன. 'யார் இந்த மரக்கலத் தலைவன்? குடித்து நாடகமாடியிருக்கலாம். ஆனால் காவிரி நீரில் குதித்தது நாடகமல்ல. அந்தச் சுழல்களில் தப்பியவன் சாதாரண மனிதனல்ல. எந்த யவனனும் இந்த வேலையைச் செய்யமுடியாது. இத்தகைய அலுவலைச் செய்து பிழைத்த அசகாயசூரன் ஒன்று பரதவனாயிருக்க வேண்டும், அல்லது அவர்களைப்போல் நீந்திப் பழக்கமுள்ள தமிழனாயிருக்க வேண்டும். தமிழனாகவோ பரதவனாகவோ இருந்தால் யவன நாட்டுக்கு எப்படிப் போனான்? போனால் இளவரசர் நட்பை எப்படிப் பெற்றான்? அலீமா எப்படி அவனுக்கு நேசமானாள்...?' என்று யோசித்துக்கொண்டே போன டைபீரியஸின் முகம் திடீரென புதுச் சிந்தனையால் பளிச் சிட்டது. 'ஆமாம்! அலீமா இருக்கிறாளே! அவளைச் சித்ர வதை செய்தாவது உண்மையை வரவழைக்கிறேன். எப்படியும் என் கட்டளையின்றி மரக்கலங்கள் நகரமுடியாது. நகர்ந்தால் எரிபந்தங்களை மாளிகைமீதுள்ள பெரும் தூண்களிலிருந்து யந்திரங்களைக் கொண்டு விசிறி மரக்கலங்களை அழித்துவிட உத்தரவிட்டிருக்கிறேன். காலையில் அலீமாவை வரவழைக் கிறேன்' என்று சங்கற்பம் செய்துகொண்டே டைபீரியஸ், சடலத்தை எடுத்துக் கடலில் எறிய உத்தரவிட்டுத் தன் அறைக்குச் சென்று உணவருந்தி நிம்மதியுடன் உறங்கினான்.

பொழுதும் விடிந்தது. டைபீரியஸுக்கு நிம்மதியை அளிப்பதற்காக அல்ல, கொஞ்சநஞ்சமிருந்த நிம்மதியையும் குலைப்பதற்காக. மிகுந்த வேகத்துடன் உள்ளே ஓடி வந்து

பதைபதைத்து நின்ற வீரனொருவன் சில வினாடிகள் பேச முடியாமல் திணறினான்.

"என்ன விசேஷம்?" என்று இரைந்தான் டைபீரியஸ்.

"மரக்கலங்களைக் காணோம்!" என்று உதறலுடன் பதிலிறுத்தான் வீரன்.

"என்ன?" என்று கேட்ட வண்ணம் பஞ்சணையிலிருந்து துள்ளி எழுந்தான் டைபீரியஸ்.

"ஆம், மறைந்துவிட்டன."

"ஏன் சுழற்பந்தங்களை வீசி அவற்றை அழிக்க வில்லை?"

"அவை நகர்ந்ததே தூண்களைக் காத்து நின்றவர் களுக்குத் தெரியவில்லை."

"எப்படித் தெரியாமற்போகும்?"

"அவர்களே வந்திருக்கிறார்கள்."

"யார்?"

"இந்திர விழா மாளிகைமீதுள்ள தூண்களின் காவலர்."

"கூப்பிடு அவர்களை."

காவலர் நடுங்கிய வண்ணம் உள்ளே வந்தனர். அவர்களைக் கண்டதும் உக்கிராகாரமான கோபம் வந்தது டைபீரியஸுக்கு. அவர்கள் சொன்ன தகவல் அவன் கோபத்தை அகற்றியது. ஆனால் எதைக் கண்டும் பிரமிக்காத வனும் மிகுந்த அறிவாளியுமான டைபீரியஸ் அவர்கள் சொன்ன செய்தியைக் கேட்டு, அப்படியே ஸ்தம்பித்துப் பல வினாடிகள் நின்றுவிட்டான்.

104. நறுமணத் தமிழகம்

இந்திர விழா மாளிகைமீதுள்ள அசுரத் தூண்களை, அல்ல அல்ல போர்க்கலப் பொறிகளை, இரவும் பகலும் காத்து வந்தவர்களும், அந்தப் பொறிகளை மிகுந்த திறமை யுடன் இயக்கப் பயிற்சி பெற்றவர்களுமான யவன காவலர்

சொன்ன சமாதானத்தைக் கேட்டதும் டைபீரியஸ் மித மிஞ்சிய பிரமிப்பை அடைந்தானென்றால் அதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. காவலர் உள்ளே நுழைந்ததும் அவர்களை நோக்கி, "இந்தத் தகவல் உண்மைதானா?" என்று அவன் சீறியபோது, உள்ளத்தில் கிலி பிடித்து நின்ற காவலர் இருவரில் ஒருவன் மட்டும் சிறிது துணிவை வரவழைத்துக் கொண்டு, "ஆம் பிரபு? உண்மைதான்" என்று மிகுந்த பணி வுடன் பதிலிறுத்தான்.

டைபீரியஸின் கண்கள் அந்தக் காவலனை எரித்து விடுவனபோல் நோக்கின. "இதைச் சொல்ல உனக்கு வெட்கமாயில்லை?" என்று கட்டடமே அதிரும் வண்ணம் இரைந்தான் டைபீரியஸ், உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து.

"இதில் வெட்கப்படுவதற்கு ஏதுமில்லை பிரபு!" பயபக்தியுடன் ஆனால் சற்று தைரியத்துடனே வந்தது காவலன் பதில்.

"மரக்கலங்கள் நமது கையிலிருந்து நழுவிவிட்டது பெருமைப்படுவதற்குரிய விஷயமென்று நினைக்கிறாயா?" என்று இகழ்ச்சியும், கோபமும் கலந்த குரலில் வினவினான் டைபீரியஸ்.

"இல்லை பிரபு!"

"அப்படியானால் மரக்கலங்கலை ஏன் சரியாகக் கண் காணிக்கவில்லை?"

"முடிந்தவரையில் கண்காணித்தோம்."

"முடிந்தவரை என்பது ஒன்றுண்டா?"

"இப்பொழுது முன்னிருட்டுக் காலம் என்பது நீங்கள் அறியாததல்ல."

"அறிவேன்."

"மூன்றாவது ஜாமம் முடியும்வரை இருட்டு பலமா யிருக்கிறது.

"ஆமாம்."

"மாளிகைத் தளத்திலிருந்து கடலலைகளைப் பார்ப்பதே கஷ்டம்."

"ஆமாம்... ஆனால்?"

"வேறு வெளிச்சம் கிடையாதே பிரபு!"

"மரக்கலத்தின் விளக்குகள்?"

"அணைக்கப்பட்டிருக்க வேண்டும்."

மெள்ள மெள்ள டைபீரியஸுக்கு யவன மரக்கலத் தலைவன் தன்னை ஏமாற்ற எடுத்துக் கொண்ட திறமையான நடவடிக்கைகளின் மர்மம் புலனாகத் தொடங்கியது. 'இப்பொழுது முன்னிருட்டு என்பதை அறிந்த மரக்கலத் தலைவன் தனது மரக்கலங்களின் விளக்குகளை அணைத்து இருளில் பாய் விரித்து என் கண்காணிப்பிலிருந்து நகர்ந்து விட்டான். ஆனால்...' என்று ஏதோ யோசிக்க முற்பட்ட டைபீரியஸின் மனத்தில் திடீரென பேரதிர்ச்சி ஏற்படவே ஸ்தம்பித்து நின்றான். அவன் பிரமிப்பைப் பன்மடங்கு உச்சிக்குக் கொண்டு போகவும் அவன் எண்ணங்களை அடியோடு நிலைகுலையச் செய்யவும் தூண்களின் காவலரில் ஒருவன் விளக்கினான். "பிரபு! தமிழர்கள் வழக்கம்போல் கலங்கரை விளக்கத்தை எரியவிட்டிருந்தால் அது வீசும் வெளிச்சத்திலிருந்து மரக்கலங்கள் தப்பியிருக்க முடியாது. இந்த மரக்கலங்கள் வந்த சமயங்களில் கலங்கரை விளக்கத்தை அணைக்கச் சொல்லித் தாங்கள்தான் உத்தரவிட்டீர்கள்?" என்று.

டைபீரியஸ் அந்தக் காவலனுக்குப் பதில் சொல்ல முடியாமல், 'அவை நடுவே நீட்டோலை வாசிக்க முடியாத நன்மரம் போல்' நின்றான். 'அந்த உத்தரவை இட்டது நான்தான். ஆனால் அந்த உத்தரவுக்கு மூல காரணம் யவனர் மரக்கலங்களின் தலைவன், அந்த வேண்டுகோளை அலீமா மூலம் அனுப்பியதே அவன்தான். மரக்கலத் தலைவன் என்னை அடிமுட்டாளாக்கி விட்டான். என்றாவது என் கண்களில் படாமல் தப்பிச் செல்ல நேர்ந்தால் அதற்கு முன்னேற்பாடாக இருக்கட்டும் என்றே கலங்கரை விளக்கத்தைத் தான் வரும் நாட்களில் அணைக்கச் சொல்லியிருக்கிறான். என்றும் அணையாதது எனத் தமிழர்கள் பெருமை கொண்டாடும்

புகாரின் கலங்கரை விளக்கத்தை அவன் பேச்சைக் கேட்டு அணைத்தேன். நன்று நன்று. இத்தனை முன்யோசனையுள்ள இவன் யார்? அதை முதலில் கண்டு பிடிக்கவேண்டும். ஆனால் எப்படிக் கண்டு பிடிப்பது? மரக்கலங்கள்தான் போய் விட்டனவே' என்று தன்னைத்தானே நொந்து கொண்ட டைபீரியஸ், காவலருக்குப் போக விடை கொடுத்துவிட்டு நீண்ட நேரம் மஞ்சத்தில் அமர்ந்து சிந்தனையிலாழ்ந்து விட்டான்.

சிந்திக்கச் சிந்திக்க டைபீரியஸின் சீரிய மூளை அதிகமாகக் குழம்பவே செய்தது. எவ்வகையிலும் தெளிவு ஏற்படாமல் திணறினான் அவன். அந்தத் திணறலின் விளைவாக அடுத்த மூன்று நாட்களில் அந்த மரக்கலங்களின் இருப்பிடத்தை அறியப் பரதவர் படகுகளை ஏவினான். அவற்றின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பொற்காசுகளை ஆயிரக்கணக்கில் வழங்குவதாகவும் அறிவித்தான். அடுத்த இரண்டு நாட்களில் புகாரின் துறைமுகத்துக்கு வந்த வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தகக் கப்பல்கள் பலவற்றையும் தீவிரமாகச் சோதனையிட்டு யவன மரக்கலங்களைப் பற்றி விசாரித்தான். யாருக்கும் எதுவும் தெரியவில்லை. யவன மரக்கலங்கள் எந்தத் திசையில் சென்று கொண்டிருக்கும், அல்லது எங்கு தங்கியிருக்கும் என்பதை அறியத் தரை மார்க்கத்திலும் ஒற்றர்களை அனுப்பி அடுத்திருந்த கடற்கரையோரத்தைச் சல்லடை போட்டுச் சலித்தான். பயனேதும் ஏற்படவில்லை. மரக்கலங்கள் சுவடு தெரியாமல் மறைந்துவிட்டன. நான்கு நாட்கள் ஓடின. அந்த நான்கு நாட்களிலும் டைபீரியஸ் சித்தத்தில் மரக்கலங்களைப் பற்றிய சிந்தனையே மிகுந்து நின்றது.

அந்தச் சிந்தனை டைபீரியஸுக்கு மட்டுமல்ல, நடுக்கடலில் கீழ்த் திசை நோக்கி ஓடிக்கொண்டிருந்த இளஞ்செழியனின் மரக்கலக் கூட்டத்திலிருந்த கப்பலோட்டிகளுக்கும் இருந்தது. அனாவசியமாக மரக்கலங்களைத் தமிழகத்தின்

கரையைவிட்டு வெகுதூரம் எதற்காக நான்கு நாட்களாகப் படைத்தலைவன் செலுத்தி வருகிறான் என்பதை அறியாத தாலும், அதைப்பற்றி அவனைக் கேட்கத் துணிவில்லாத தாலும் மாலுமிகள் பெரிதும் கலங்கினர். கப்பலின் நடுத்தளத்தில் உட்கார்ந்திருந்த ஹிப்பலாஸ்கூட அதைப் பற்றி யோசித்தான். உள்ளத்தே எழுந்த சந்தேகத்தைக் கடைசியாக வாய்விட்டே கேட்டான், அந்தப் பக்கமாக வந்த மரக் கலத்தின் உபதலைவி அலீமாவிடம். கப்பலின் முகப்பில் நின்று கடலை ஆராய்ந்துகொண்டிருந்த இளஞ்செழியனை நோக்கி அவசர அவசரமாகப் போய்க் கொண்டிருந்த அலீமாவைத் தடுத்து, "அலீமா! ஒரு சந்தேகம்?" என்றான் ஹிப்பலாஸ்.

அலீமா சட்டென்று நின்று அவனை நோக்கி, "என்ன ஹிப்பலாஸ்? என்ன சந்தேகம்?" என்று வினவினாள்.

"மரக்கலங்கள் நான்கு நாட்களாக ஏன் கிழக்கே செல்கின்றன?" என்று கேட்டான் ஹிப்பலாஸ்.

"அதைக் கேட்கத்தான் நான் போகிறேன்" என்றாள் அலீமா.

"ஏன்? காரணம் உனக்கு விளங்கவில்லையா?" என்று மீண்டும் வினவினான்.

"இல்லை. விளங்கவில்லை."

"உன்னிடம் ஏதும் படைத் தலைவர் சொல்ல வில்லையா?"

"இல்லை."

"மரக்கலங்கள் நகர்ந்து நான்கு நாட்களுக்குப் பிறகுமா சொல்லவில்லை."

"ஆம். இந்த நான்கு நாட்களும் அவர் அதிகமாக எதுவும் பேசவில்லை. மரக்கலத்துக்கு வந்ததும் அல்லியை வாணகரை சேர்த்து விட்டாயா என்று கேட்டார். சேர்த்து விட்டேன் என்றேன். அவ்வளவுதான் விசாரித்தார். வேறெதுவும் கேட்கவு மில்லை, சொல்லவுமில்லை."

ஹிப்பலாஸ் சிறிது நேரம் யோசித்தான். பிறகு சொன்னான்: "அலீமா! படைத்தலைவரின் செயல்கள் பலவற்றுக்குக் காரணம் எனக்குப் புரிவதில்லை" என்று.

"எது புரியவில்லை?" என்று கேட்டாள் அலீமா.

"உதாரணமாக இதோ பார். டைபீரியஸ் மரக்கலத்துக்கு வந்திருக்கிறானென்றதும் இவர் ராணியுடன் இந்திர விழா மாளிகைக்குச் சென்றார். அங்கு குடிகாரன் போல் நடித்தார். என்னையும் வெளியே விரட்டினார். இதெல்லாம் டைபீரியஸை ஏமாற்றுவதற்காக இருக்கலாம். ஆனால் டைபீரியஸை எதற்காக மாளிகைக்கு வரவழைத்தார். இங்கேயே வைத்திருந்தால் நம்மிடம் டைபீரியஸ் சிக்கி யிருப்பானே" என்றான் ஹிப்பலாஸ்.

"இதைப்பற்றியெல்லாம் நானே கேட்டுவிட்டேன் ஹிப்பலாஸ். டைபீரியஸ் தனியாக மரக்கலத்துக்கு வந்தாலும் தகுந்த எச்சரிக்கையுடன்தான் வந்திருப்பான் என்று படைத் தலைவர் சொன்னார். மரக்கலங்கள் சிறிது நகர்ந்தாலும் எரிபந்தங்களை வீசுமாறு இந்திர விழா மாளிகையின் உப்பரிகைத் தூண் பொறியாளருக்கு உத்தரவிட்டிருப்பா னென்று கூறினார். எதிரியைச் சரியான எடைபோடுவது ராஜ தந்திரத்தில் முக்கியம் என்று விளக்கினார். ஆகையால் தான் டைபீரியஸைத் திரும்ப நிலத்துக்கு இழுத்துத் தான் நீரில் இறங்கினாராம்" என்றாள் அலீமா.

இளஞ்செழியன் டைபீரியஸை எத்தனை முன் யோசனையுடன் திரும்ப அழைத்திருக்கிறானென்பதை நினைத்த ஹிப்பலாஸின் முகத்தில் வியப்புக்குறி பெரிதாகப் படர்ந்தது. அதை மேலும் விரிவுபடுத்த அலீமா சொன்னாள்: "தவிர, உடனே பாய் விரித்து ஓடாததற்கும் அதுதான் காரணம். மரக்கலங்கள் கண்ணுக்கெதிரில் தெரியுமட்டும் டைபீரியஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டான் என்று படைத்தலைவர் தீர்மானித்தார். ஆகையால்தான் மறு

நாளிரவு மூன்றாம் ஜாமத்துக்குச் சற்று முன்பாகப் புகாரை விட்டுக் கிளம்பினோம்" என்று. ஹிப்பலாஸ் அதற்குமேல் அலீமாவைச் சந்தேகம் ஏதும் கேட்காமல் எழுந்தான். எழுந்ததன்றி அவனைத் தொடர்ந்து இளஞ்செழியன் நின்றிருந்த இடத்தை அணுகினான்.

அப்பொழுது மாலை நேரம். மஞ்சள் வெய்யில் கடல் நீரைப் பொன்னாக அடித்துக் கொண்டிருந்தது. காற்றும் இதமாக வீசிக்கொண்டிருந்ததால் சிற்றலைகளே மரக்கலப் பக்கப் பகுதிகளைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தன. கடல்நீரில் தவழ்ந்து விளையாடிய கதிரவன் பொன்னிறக் கிரணங்களையும் அந்த உப்பு நீரில் மிதந்து வந்த மெல்லிய காற்றையும் பருகிய இளஞ்செழியன் மெய்மறந்து நின்றிருந்தான். மனித வாடையில்லாத இயற்கை அந்த மரக்கலத்தைக் கூடச் சூழ்ந்து நின்றதைக் கவனித்த இளஞ்செழியன், 'இங்குள்ள அமைதி தரையில் இல்லை. காரணம் மனிதன் தான்' என்று மனித வர்க்கத்தை உள்ளூர இகழ்ந்தான். ஆனால், தானும் மனிதர்களுக்காகவே ஆழ்கடலில் ஓடுவதை நினைத்துப் புன்முறுவலும் கொண்டான். "இந்த நிலையில் கப்பலின் இந்த முகப்பில் என்னுடன் பூவழகியும் இருந்தால் எத்தனை இன்பமாக இருக்கும்..'' என்று எண்ண முற்பட்டவன், நான் இனி யவன ராணிக்குச் சொந்தம் என்ற நினைப்பால், 'சே! சே! இனி அவளை நினைக்கக் கூடாது' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டதன்றி, சட்டென்று பூவழகியைப் பற்றிய எண்ணங்களை அறுத்துக் கொண்டு திரும்பியவன், தன் பின்னால் அலீமாவும், ஹிப்பலாஸும் நிற்பதைக் கண்டான்.

அதுவரை மனதை ஆட்கொண்ட எண்ணங்களால் ஒரு வினாடி குழம்பிய படைத்தலைவன் சட்டென்று தன்னை நிதானப்படுத்திக் கொண்டு, "என்ன அலீமா! என்ன ஹிப்பலாஸ்?" என்று திடீரென்று உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவன் போல் வினவினான்.

ஏதோ சொப்பன உலகிலிருந்து படைத்தலைவன் இகலோகத்துக்கு மீண்டிருப்பதை உணர்ந்ததும் அலீமாவின் முகத்தில் முறுவல் விகசிக்கவில்லை, கவலையே படர்ந்து கிடந்தது. அந்தக் கவலை குரலிலும் தொனிக்கக் கேட்டாள் அலீமா, "நாம் எங்கே போகிறோம் படைத்தலைவரே?" என்று.

"ஏன் கேட்கிறாய் அலீமா?" என்று படைத்தலைவன் வினவினான்.

"நான்கு நாட்களாக மரக்கலங்கள் கிழக்கு நோக்கி ஓடுகின்றன" என்றாள் அலீமா.

"ஆமாம்".

"சாவகத் தீவுக்கும் புட்பகத் தீவுக்கும்தான் இந்தத் திசையில் போவது வழக்கமென்று ஹிப்பலாஸ் சொல்கிறார்."

படைத்தலைவன் ஹிப்பலாஸை நோக்கிப் புன்முறுவல் செய்தான். பிறகு அலீமாவை நோக்கி, "ஹிப்பலாஸ் சொன்னதில் தவறேதுமில்லை அலீமா" என்றான்.

"அப்படியானால் தமிழகத்தில் நமக்கு வேலையில்லையா?"

"நிரம்ப இருக்கிறது."

"பின் ஏன் தமிழகத்தைவிட்டு நேர் எதிர்த் திசையில் ஓடுகிறோம்?"

"இனித் திரும்பிவிடுவோம். கப்பலோட்டிகளுக்கு உத்தரவிடு. மரக்கலங்களைக் கரையை நோக்கித் திருப்பச் சொல்லு."

"இந்த நான்கு நாட்கள் எதற்காக நடுக்கடலில் திரிந்தோம்?"

இளஞ்செழியன் தன் கூரிய விழிகளை அலீமாவின்மீது நாட்டினான். பிறகு குழந்தையை அணைப்பதுபோல் அவள் தோள்களை மெள்ள அணைத்துக் கொண்டு, "அலீமா! நம்மைத் தேட டைபீரியஸுக்கு நான்கு நாட்களாவது அவகாசம் வேண்டாமா?" என்று வினவினான்.

அப்பொழுதுதான் அலீமாவுக்குக் காரணம் புரிந்தது. தொடர்ந்து சொன்னான் படைத்தலைவன்: "அலீமா!

டைபீரியஸ் மிகவும் கூர்மையான அறிவு படைத்த படைத் தலைவன். புகாரிலிருந்து காயல் வரை இந்த மரக்கலங்களைப் பற்றித் தகவல் அறிய முயல்வான். இந்த நான்கு நாட்களுக்குப் பின்பும் நாம் டைபீரியஸின் கண்களிலிருந்து தப்பிவிட்டதாக நினைப்பது தவறு. இருப்பினும், பாதகமில்லை. இந்த மரக் கலங்களை நங்கூரம் பாய்ச்ச நான் புது இடமொன்றை யோசித்திருக்கிறேன்; அங்கு கூடியவரையில் நாம் மறைந்து உறையலாம். மரக்கலங்களை நாளை பகல் மட்டும் தென் திசையை விட்டு நாளை இரவில் மேற்கரையை நோக்கித் திருப்பச் சொல்."

மரக்கலங்களைத் தமிழகத்தின் ஏதோ ஒரு பகுதியில் பதுக்கி வைக்கவும், அங்கிருந்து மேற்கொண்டு திட்டங்களை வகுக்கவும் படைத்தலைவன் ஏற்பாடு செய்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாலும், நான்கு நாட்கள் மேற்றிசையில் கப்பலைச் செலுத்திய காரணத்தையும் உணர்ந்து கொண்ட தாலும் மேற்கொண்டு எந்தக் கேள்வியையும் கேட்காத அலீமாவும் ஹிப்பலாஸும் படைத்தவைன் உத்தரவை மற்ற மரக்கலங்களுக்கு விளக்கச் சென்றுவிட்டார்கள்.

அவர்கள் திரும்பி வந்தபோது இரவு ஏறிவிட்டது. மரக் கலங்களில் விளக்குகளையோ பந்தங்களையோ அதிகமாக ஏற்ற வேண்டாமென்று படைத்தலைவன் உத்தரவிட்டிருந்த தால், இரண்டொரு பந்தங்களே ஒவ்வொரு மரக்கலத்திலும் எரிந்து கொண்டிருந்தன. அன்றிரவு முழுவதும் மரக்கலத்தின் தளத்தில் நின்று ஆகாயத்தையே கவனித்துக் கொண்டிருந்து விண்மீன்கள் இருந்த நிலையிலிருந்து எப்படிச் செல்வதென்று உத்தரவிட்டுக் கொண்டிருந்தான் இளஞ்செழியன். மரக் கலங்கள் அன்றிரவும், மறுநாள் பகலும் தெற்கு நோக்கி ஓடின. மறுநாள் இரவு நெருங்கி முதல் ஜாமம் ஆரம்பித்ததும் படைத் தலைவன் தளத்துக்கு வரும்படி அலீமாவுக்கு உத்தரவனுப்பி, அவள் வந்ததும், "அலீமா! பாய்களை இறக்கச் சொல். காற்று அனுகூலமான இல்லை. மரக்கலங்களை மேற்குத் திக்கில் திருப்பிக் கரையை நோக்கிச் செலுத்தச் சொல். துடுப்புகளைத்

துழாவி மரக்கலங்களை இயக்கச் சொல்" என்று உத்தர விட்டான்.

அடுத்த சில நாழிகைகளில் பாய்கள் இறக்கப்பட்டன துடுப்புகளால் துழாவப்பட்ட மரக்கலங்கள் கரையை நோக்கி ஓடின. சுமார் ஒரு ஜாமம் கப்பல்கள் ஓடியிருக்கும். இளஞ் செழியன் அந்த ஜாமம் பூராவும் தனது கப்பலின் தளத்தி லேயே நின்றிருந்தான். பிறகு எதையோ நாசிகளால் சுவாசித் தான். படைத்தலைவன் பெருமூச்சு கொண்டு சுவாசிப்பதைப் பக்கத்திலிருந்து பார்த்த அலீமா, "என்ன முகர்ந்து பார்க் கிறீர்கள் படைத் தலைவரே?" என்று வினவினாள்.

"நீயும் முகர்ந்து பார் அலீமா! ஏதாவது நறுமணம் வரும்" என்றான் இளஞ்செழியன்.

கரையிலிருந்து மெல்ல வந்து கொண்டிருந்த காற்றை இருவரும் முகர்ந்து கொண்டு நின்றார்கள். கப்பல்கள் கரையை நோக்கி விரைந்தனவேயொழிய வெகுநேரம் மட்டும் நறுமணமேதும் அந்த இருவர் நாசியிலும் நுழைய வில்லை. இப்படி இரண்டு நாழிகைகள் சென்றதும் எங்கிருந்தோ மனத்தை மயக்கும் நறுமணம் காற்றில் மிதந்து வந்தது. அதைச் சுவாசித்துச் சுவாசித்து ஆச்சரியப்பட்டாள் அலீமா. இளஞ் செழியன் ஆச்சரியப்படவில்லை, ஆகாயத்தை நோக்கினான். "சரியாகத்தான் வந்திருக்கிறோம். இன்னும் அரை ஜாமத்தில் கரையை அடையலாம்" என்று கூறினான்.

"இதென்ன நறுமணம் படைத்தலைவரே!" என்று கேட்டாள் அலீமா அந்த சுகத்தில் மெய்மறந்து.

"நாகலிங்கப் பூவின் நறுமணம்" என்றான் இளஞ் செழியன்.

"அப்படி ஒரு பூ உண்டா?" என்று கேட்டாள் அலீமா.

"கொள்ளை கொள்ளையாய் உண்டு. நாளை நீ கூந்தலில் சூட்டிக் கொள்ளலாம்" என்ற இளஞ்செழியன் கரையை எதிர்பார்த்து நின்றான்.

கரையும் மெள்ள மெள்ளக் கண்ணுக்குப் புலனாகியது. எதிரே பெரும் மணல் மேடு ஒன்று தெரிந்தது. அதன்மீது

பெரும் தோப்பு ஒன்றும் பலப்பல குடிசைகளும் தெரிந்தன. கரை வளைந்து கிடந்தது. இரு புறத்திலும், தென்னஞ் சோலைகளும், வேறு பல மரக்கூட்டங்களுமிருந்தன. அந்த இடத்தின் அழகைக் கண்டு பிரமித்த அலீமா, "இந்த இடம் அழகானது மட்டுமல்ல. மரக்கலங்கள் மறைந்திருக்கவும் வழி இருக்கிறது" என்று நினைத்தாள்.

ஆனால் கரையைக் கண்டதும் இளஞ்செழியன் எந்த நினைப்பிலும் இறங்காமல், "மரக்கலங்களை நங்கூரம் பாய்ச்சுங்கள். கரை அருகே செல்ல வேண்டாம்" என்று உத்தரவிட்டான்.

"ஏன்?" என்று கேட்டாள் அலீமா.

"இங்கு கடல் ஆழம் அதிகமில்லை. எங்கு மரக்கலங்களை நிற்க வைக்கலாம் என்று நாளை தீர்மானிப்போம். படகுகளை இறக்கச் சொல். கரைக்குச் செல்வோம்" என்று அலீமாவுக்கு இரண்டாம் முறையாக உத்தரவிட்டான் படைத்தலைவன்.

அடுத்து அரை நாழிகைக்குள் படகுகள் நீரில் இறக்கப்பட்டன. படைத்தலைவனும் அலீமாவும், ஹிப்பலாஸும் ஒரு படகிலும், மற்ற மாலுமிகள் கூட்டம் கூட்டமாக மற்றப் படகுகளிலும் ஏறிக் கொள்ளவே, படகுக் கூட்டம் கரையை நோக்கி நகர்ந்தது. கரை அணுக அணுக நாகலிங்க மலர்களின் நறுமணம் வலுத்து அந்தக் கடற் பிராந்தியத்தையே வளைத்துக் கொண்டது. அந்த நறுமணக் கடலில் மூழ்கிச் சித்தத்தைப் பறிகொடுத்துக் கொண்டிருந்த அலீமா, 'அப்பா! தமிழகத்தில் எத்தனை வித நறுமலர்கள்! தமிழகமே நறுமணம் வாய்ந்தது போலிருக்கிறதே! அதில் பிறப்பவர்கள் எத்தனை பாக்கிய சாலிகள்!' என்று எண்ணி எண்ணிப் பூரித்தாள். கரையும் மெள்ள மெள்ள நெருங்கியது. படகுகள் கரையை நெருங்கியதும் திடீரெனப் பல பந்தங்கள் கரையிலிருந்த தோப்பில் பளிச்சிட்டன. அந்தப் பந்தங்கள் அலைகள் மோதிய இடத்துக்குத் துரிதமாக வரவும் தொடங்கின.

105. காத்தாயி

கரையருகில் திடீரெனப் பந்தங்கள் பளிச்சிட்டதும் கரையை நெருங்குவதா வேண்டாமா என்ற சந்தேகத்தால், படகைச் செலுத்திய மாலுமிகள் நீரில் துழாவிய துடுப்புகளின் செயலைச் சட்டென நிறுத்தியதன்றி, அலீமாவும் இளஞ்செழியனை ஏறெடுத்துப் பார்த்தாள். அவர்களுக்கிருந்த சந்தேகம் இளஞ்செழியனுக்கும் ஓரளவு ஏற்படவே அவன் சில வினாடிகள் கரையை ஊன்றிக் கவனித்து விட்டு, "வருகிறவர்கள் அந்த மணல் மேட்டுக் குப்பத்தைச் சேர்ந்தவர்களாகத் தான் இருக்க வேண்டும். எதற்கும் பார்த்துவிட்டுப் பிறகு மற்ற படகுகளைக் கரைக்கு வரவழைப்போம். நீ அடுத்த படகில் ஏறிக்கொள் அலீமா!" என்று தனது படகை அடுத்த படகுடன் சேர்க்கும்படி படகோட்டிகளுக்கு உத்தரவிட்டான். படகோடு படகு நெருங்கியதும் அதில் ஏற நிதானித்த அலீமாவை நோக்கி, "ஏன் யோசிக்கிறாய் அலீமா?" என்று வினவினான் படைத் தலைவன்.

"கரையில் ஏதாவது ஆபத்து காத்திருந்தால்?" என்று அலீமா சந்தேகத்துடனும் குழப்பத்துடனும் கேட்டாள்.

"தற்சமயம் தமிழகத்தில் புகாரிலும், உறையூரிலும்தான் எனக்கு எதிரிகள் இருக்கிறார்கள். வேறெங்கும் கிடையாது" என்று பதில் சொன்னான் படைத்தலைவன்.

அப்பொழுதும் சமாதானம் அடையாத அலீமா, "இந்த இடம் எது? இங்கு வசிப்பவர்கள் யார்? இதெல்லாம் நிச்சயமாகத் தெரியுமா உங்களுக்கு?" என்று மீண்டும் கேள்வியை வீசினாள்.

பெருமிதச் சிரிப்பு ஒன்று படைத் தலைவனிடமிருந்து உதிர்ந்ததன்றி, அதைத் தொடர்ந்து பெருமையும் அன்பும் நிரம்பிய சொற்களும் அவன் இதழ்களிலிருந்து உதிர்ந்தன. "அலீமா! இந்தத் தமிழகத்தில் நானறியாத குடிகள் இருக்கிறார்களா! இல்லை அலீமா, இல்லை. அதோ இருக்கும்

இடம் எதுவென்று எனக்குத் திட்டமாகத் தெரியும். இந்த இடமென்ன, தமிழகத்தின் வங்கக் கடற்கரையோரத்தின் ஒவ்வொரு பகுதியையும் நான் திட்டமாக அறிவேன். ஒவ்வொரு இடத்திலும் எந்த வகுப்பினர் வசிக்கிறார்கள்? அவர்கள் அலுவல் என்ன? அவர்கள் குணதோஷங்கள் என்ன? அனைத்தையும் அறிவேன்...'' என்று சொல்லிக் கொண்டே போன இளஞ்செழியனை இடைமறித்த அலீமா கேட்டாள், "அப்படியானால் இந்த இடத்தின் பெயர் என்ன? அதோ பந்தங்களைப் பிடித்துக் கொண்டு கரை நோக்கி வரும் வகுப்பினர் யாவர்?" என்று.

லவலேசமும் யோசிக்காமல் பதில் சொல்லத் துவங்கிய படைத்தலைவன், "அலீமா! நாகலிங்க மலர்களின் நறுமணத்தை நீ சுவாசித்தாய் அல்லவா?" என்று வினவினான்.

"ஆமாம்" என்றாள் அலீமா.

"நாகலிங்க மரங்கள் நிறைந்திருப்பதால் இதற்கு நாகை என்று பெயர். ஆனால் அந்தப் பெயர் வந்ததற்கு நாகலிங்க மரங்கள் மட்டும் காரணமல்ல. வடநாட்டு நாகர்கள் சிலர் இந்த மணல் மேட்டுக் குப்பம் வந்து நீண்ட நாட்களாகக் குடியேறியிருக்கிறார்கள். அவர்களும் இதற்குத் தங்கள் வகுப்புப் பெயரையொட்டி நாகர்கள் இருக்குமிடம், அதாவது நாகை என்று அழைத்தார்கள். ஆகையால் அந்தப் பெயர் நிலைத்துவிட்டது. அநேகமாக அதோ பந்தங்களைத் தாங்கி ஓடி வருகிறவர்களில் பாதிப் பேர் நாகர்கள்...?" என்றான் படைத்தலைவன்.

"மீதிப் பாதிப் பேர்?"

"தமிழகத்தின் கடற்கரையோரம் பூராவும் வசித்து வரும் பரதவர்."

"பரதவராயிருந்தால் உங்களுக்குத் தெரிந்திருக்கும்?"

"ஏன் நாகர்களுக்குக்கூட என்னைத் தெரியும்."

"அப்படியானால் உங்களை அடையாளம் கண்டு பிடித்துக் கொள்வார்களே?"

"கண்டுபிடிக்கலாம்."

"கண்டுபிடித்தால் டைபீரியஸுக்குத் தெரியாதா?"

"தெரியலாம். ஆனால் தெரியாதபடி செய்ய வழியுண்டு. அதைப் பின்னர் பார்ப்போம். இப்பொழுது ஆபத்து எனக்கு ஏதுமில்லையென்று புரிந்துவிட்டதல்லவா?"

"ஆம்."

"சரி, அந்தப் படகில் ஏறிக்கொண்டு என்னைப் போகவிடு."

படைத் தலைவன் கூறியபடி அடுத்த படகில் ஏறிக் கொண்டான் அலீமா. பிறகு தன் படகை விலக்கிக் கரைக்குச் செலுத்தச் சொன்ன படைத்தலைவன், படகு நகரு முன்பாக அலீமாவை நோக்கி, "அலீமா! நான் கரைக்குச் சென்று நாகர்களுடன் பேசிய பின்பு அடையாளத்துக்குப் பந்தங்களை அசைக்கச் செய்கிறேன். மற்றப் படகுகளுடன் நீ வந்து சேர்" என்று கூறிவிட்டு மாலுமிகளை நோக்கி, "ஊம், சீக்கிரம்! படகு கரைக்குச் செல்லட்டும்" என்றான்.

படைத் தலைவனையும், ஹிப்பலாஸையும் தாங்கிய படகு அலைகளால் உந்தப்பட்டுத் துடுப்புகளால் துழாவப் பட்டுத் துரிதமாகக் கரையை அடைந்தது. முழங்காலளவு ஜலத்துக்கு வந்தவுடனேயே தொப் தொப்பென்று கீழே குதித்த படகோட்டிகள் படகின் முகப்பைப் பற்றி இழுத்து மணலில் படகின் அடிப்பாகத்தை உராயவிட்டனர். அதற்குப் பிறகு ஹிப்பலாஸ் பின்தொடர கரையை நெருங்கிய இளஞ் செழியன். பத்தடி தள்ளி எதிரே பந்தங்களைப் பிடித்துக் கொண்டு கும்பலாக நின்றவர்களை நோக்கி நாலடி நடந்து நின்று அவர்களை ஏற இறங்கப் பார்த்தான். அவர்களும் அவனைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டே மௌனமாக நின்றார்கள். அந்த மௌனத்தை முதன் முதலில் கலைத்த

படைத்தலைவன் அதிகாரம் நிரம்பிய குரலில் கேட்டான். "பரதவ செங்கோடன் எங்கே?" என்று.

அந்தப் பெயரைக் கேட்டதும் அந்தக் கூடத்திலிருந்த வர்கள் சில வினாடிகள் பிரமித்து நின்றார்கள். படைத் தலைவனின் அதிகாரக் குரல் அந்தப் பிரமிப்பை ஓரளவு அதிகப்படுத்தவும் செய்ததால் பதிலேதும் அவர்களிடமிருந்து வரவில்லை. அதனால் சற்றே சினத்தைக் காட்டிய படைத் தலைவன், "பதில் சொல்ல இஷ்டமில்லாவிட்டால் அவர் குடிசையைக் காட்டுங்கள். அவருடன் பேசவேண்டும்" என்று அவர்கள் முகங்களை மீண்டும் ஆராய்ந்தான். அதில் எதுவும் தெரிந்த முகமாக இல்லாததால் சற்று யோசிக்கவும் செய்தான்.

ஆனால், அந்த யோசனையைக் கூட்டத்தில் தலை வனைப் போல் காணப்பட்ட ஒருவனின் பதில் அறுத்தது. "செங்கோடனுடன் நீங்கள் பேச முடியாது" என்றான் அவன்.

"ஏன்?" என்று வினவினான் படைத்தலைவன்.

பதில் படைத் தலைவனை அசரவைத்தது. "செங் கோடன் இறந்து ஆறு மாதங்கள் ஆகின்றன" என்றான் கூட்டத்தின் தலைவன்.

"அவர் மனைவி காத்தாயி இருக்கிறார்களா?" என்று மீண்டும் கேட்டான் படைத் தலைவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு.

இந்தச் சமயத்தில் கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. காத்தாயியின் பெயரை இளஞ்செழியன் சொன்னதும் கூட்டத்திலிருந்த பரதவர் மட்டுமின்றி முரட்டுத் தனமாகவும் நாகரீக மற்றும் தோன்றிய நாகர்களும்கூட அவனை நெருங்கி வந்தார்கள். அந்தப் பெயர் பெரும் மந்திரங் களைப் போல் வேலை செய்தது. "பெரியம்மாவையா சொல் கிறீர்கள்?" என்று கேட்டான் நெருங்கிய பரதவரில் ஒருவன்.

"ஆமாம்."

"அவர்கள் குடிசையில் இருக்கிறார்கள்."

"எழுப்புங்கள்."

"இந்த வேளையிலா?"

"ஆமாம்."

"முடியாது. வயதானவர்கள். எங்களுக்கு இப்பொழு திருக்கும் ஆதரவு அவர்கள் ஒருவர்தான்."

பரதவன் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டான். இதற்குமேல் எதுவும் நடக்காது என்பதை நாகர்கள், பரதவர்கள் முகங்களிலிருந்து தெரிந்து கொண்ட ஹிப்பலாஸ் ஏமாந்தே போனான்.

"நான் அவர்களை உடனே பார்க்க வேண்டும். யாராவது ஒருவன் போய் அவர்களிடம் அவர்கள் வளர்ப்பு மகன் வந்திருப்பதாகத் தெரிவிக்கட்டும்" என்றான் இளஞ் செழியன் அதிகாரத்துடன்.

"யார்! மகனா! நீங்களா?" இப்படிப் பல குரல்கள் கூட்டத்திலிருந்து எழுந்தன.

அடுத்த வினாடி இரண்டு பரதவர்கள் மணல் மேட்டுக் குப்பத்தை நோக்கிச் சிட்டாகப் பறந்தார்கள். அரை நாழிகை ஆகுமுன்பே நரைத்த தலையுடனும் கோலூன்றினாலும் கம்பீரம் தளராத நடையுடனும் கடற்கரைக்கு வந்த காத்தாயி, இளஞ்செழியனை அப்படியே தன் மார்புற அணைத்துக் கொண்டாள். சில வினாடிகள் சற்று விலகி அவன் முகத்தைப் பார்த்துக் கண்ணீரைப் பொல பொலவென உதிர்த்தாள். மீண்டும் அவனை இறுக அணைத்துக் கொண்டு, "அவர் போய்விட்டாரப்பா?" என்று கதறினாள். இளஞ்செழியன் கண்களிலும் நீர் திரண்டது. மிகுந்த ஆதரவுடன் அவள் முகத்தைத் தடவிக் கொடுத்தான். பிறகு, "அம்மா! அந்த மரக் கலங்கள் என்னுடையது. அந்தப் படகுகளில் என் மாலுமிகள் இருக்கிறார்கள். எங்களுக்கு உன் நாகையில் அடைக்கலம் தேவை" என்று கெஞ்சினான்.

கிழவியின் கம்பீர விழிகள் சுற்றுமுற்றுமிருந்த நாகர் களையும், பரதவர்களையும் வட்டமிட்டன. அடுத்தபடி அவள் அதிகாரக் குரல் கடலோசையை விடக் கம்பீரமாக எழுந்தது. "இவர் இங்கிருக்குமட்டும் இவர்தான் உங்கள்

தலைவர். நீங்கள் இவர் அடிமைகள், புரிகிறதா?" என்று கூறினாள் அந்தக் கிழவி.

சரியான தலைவியின் ஆணை எப்படிச் சிங்கங்களை நரிகளாக்க முடியும் என்பதை அடுத்த வினாடி உணர்ந்தான் ஹிப்பலாஸ். நாகர்களும் பரதவர்களும் இளஞ்செழியனைச் சூழ்ந்து கொண்டார்கள். கரையை அணுகும்படி படகுகளுக்குப் பந்தங்களால் சைகை செய்தார்கள். படகுகளும் விரைந்து கரையை அடைந்ததும் தரைக்கு வந்து பல நாட்டவர் கலந்து கிடந்ததால் விபரீதமாகத் தோன்றிய மாலுமிகளைக் கண்ட காத்தாயி அவர்களை வியப்புடன் பார்த்து, "யாரப்பா இவர்கள்?" என்று கேட்டாள்.

"என் மாலுமிகள்."

"பல நாட்டவர்களைச் சேர்ந்தவர்களா?"

"ஆமாம்."

"ஆனால் புகாரில் இதெல்லாம் இயற்கைதானே. அங்கு வராத நாட்டார், சேவகம் செய்யாத நாட்டார் யார்? ஆனால் நீ எப்பொழுது கடல் வீரனாக மாறினாய்? எனக்குத் தெரிந்த மட்டும் சோழர் படை...." என்று சொன்ன காத்தாயியின் பேச்சை ஒரே பார்வையில் அடக்கிய இளஞ்செழியன், "சமீப காலத்தில்தான் மரக்கலத் தலைவனானேன். ஆனதும் உன்னிடம் அடைக்கலம் புக ஓடி வந்தேன். இதில் தவறில்லையே?" என்று மழுப்பினான்.

எக்காரணத்தாலோ இளஞ்செழியன் உண்மையை மறைக்கிறானென்பதை நொடிப் பொழுதில் உணர்ந்து கொண்ட காத்தாயி, மேலே எதுவும் பேசாமல் தன்னுடன் வரும்படி இளஞ்செழியனையும் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு, சில பரதவரைப் படகுகளைக் காவல் புரியக் கட்டளையிட்டு மணல் மேட்டுக் குப்பத்தை நோக்கிச் சென்றாள். நாகையின் மணல்மேட்டுக் குப்பம் தூர இருந்து தெரிந்ததைவிட மிக விசாலமாகவும் பெரும் தோப்பினால் சூழப்பட்டுமிருப்பதைக் கவனித்த அலீமாவும் ஹிப்பலாஸும் ஒரு சிறு படை மறைந்துறைய அதைவிடச் சிறந்த இடம்

இருக்க முடியாது என்பதைத் தீர்மானித்துக் கொண்டார்கள். தவிர, கிழவி காத்தாயியின் சொல்லைப் பரதவரும் நாகரும் சிரமேல் தாங்கி நடப்பதைக் கண்டும் வியந்தார்கள். காத்தாயியும் சில விஷயங்களை நினைத்து வியக்கவே செய்தாள். இளஞ்செழியன் போருடை அணிந்த அலீமாவை அழைத்து வந்ததில் சந்தேகமும் கொண்டாளாகையால், தன் குடிசைக்குச் சென்றதும் அலீமா முன்பாகவே அதைப்பற்றிக் கேட்டாள்.

"படைத்தலைவரே!..." என்று துவங்கினாள் காத்தாயி.

"அந்தப் பெயர் வேண்டாம் தாயே!" என்றான் இளஞ்செழியன்.

"இங்கு நீயும் இந்தப் பெண்ணையும் தவிர யாருமில்லையே?" என்றாள் கிழவி.

"உண்மைதான் தாயே! ஆனால் நா தவறி, பழைய பெயரை நீ பத்துப்பேர் முன்பாச் சொல்லிவிடலாம். ஆகவே மகனே என்றே அழை" என்றான்.

"என் மீன்குட்டியை அப்படி அழைக்கத் தடையில்லை..." என்ற காத்தாயியின் பேச்சை இடைமறித்த அலீமா, "மீன்குட்டியா! இவரா?" என்றாள்.

"ஆம் பெண்ணே, என் கணவர்தான் இவருக்கு அந்தப் பெயரை இட்டார். பரதவரைவிட வேகமாக நீந்த வல்லவராகையால் மீன்குட்டி என்று நாங்கள் அழைத்து வந்தோம். இவர் பதவி பெரிதானாலும் நாங்கள் புகாரிலிருந்தவரை பாதி நாழி இவர் எங்கள் குடிசையில் தானிருப்பார். எங்கள் சொந்த மகனாக இவரைப் பாவித்தோம். பலமுறை என் கணவருடன் கடலோடியிருக்கிறார்..."

இம்முறை இளஞ்செழியன் அவள் பேச்சில் குறுக்கிட்டான். "தாயே! என்னை நீங்கள் அவர் இவர் என்று அழைப்பது வெறுப்பாயிருக்கிறது. பழையபடி அழையுங்கள்."

"சரிபயப்பா" என்று ஆனந்தக் கண்ணீர் உதிரச் சொன்ன காத்தாயி, "அப்பா! இவள் யார்?" என்று வினவினாள்.

"அலீமா! என் மரக்கலங்களின் உபதலைவி!" என்றான் படைத்தலைவன்.

"அவ்வளவுதானா?" கிழவியின் குரலில் ஏமாற்றமிருந்தது.

"அவ்வளவேதான்" என்று சொல்லிப் புன்முறுவல் கூட்டிய படைத் தலைவன், "தாயே! பெண்களைப் பற்றி நினைக்கவும் நேரமில்லை எனக்கு. நம் தாய் பேராபத்தில் சிக்கியிருக்கிறாள்" என்றான்.

"நம் தாயா?"

"ஆம்."

"யாரப்பா அது?"

"நம் தாய் நாடு. குழந்தைகளுக்குச் சோறு கொடுத்து வளர்க்கும் சோணாடு. அதில் போர் மூளப் போகிறது தாயே."

"அப்படியா!"

"ஆம். இன்னும் ஒரே மாதத்தில் போர்."

"அப்படியானால் நீ இருக்க வேண்டியது மன்னருக்கு அருகில் இல்லையா?" மிகுந்த உஷ்ணத்துடன் இந்தக் கேள்வியைக் கேட்டாள் காத்தாயி.

"இல்லை."

"அட துரோகி!"

காத்தாயியின் சொற்கள் மிகுந்த வேகத்துடன் வந்தன. அவளை அப்படியே அணைத்துக் கொண்ட இளஞ்செழியன், "பார்த்தாயா அலீமா, இந்தத் தள்ளாத வயதில் என் தாய்க்கு இருக்கும் நாட்டுப் பற்றை? இத்தகையவர்களால்தான் என் நாடு பொன்னாடாக இருக்கிறது" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறியதன்றி, "தாயே! உன் மகனை என்ன, அத்தனை அற்பமாக நினைத்துவிட்டாய்? அந்தப் போருக்கு ஆயத்தம் செய்யவே இங்கு வந்திருக்கிறேன். உன் திருவடிகள் நடந்த இந்த மணல்மேட்டுக் குப்பத்தில் சோணாட்டின் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையை அமைக்கவே வந்திருக்கிறேன்" என்று உணர்ச்சி பொங்கக் கூறினான்.

காத்தாயியின் உணர்ச்சிகள் அவன் உணர்ச்சிகளைவிட அதிகம் பொங்கி நின்றன. "நாகைக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா? காவிரிப் பூம்பட்டினத்திற்குக் கிடைக்காத ஒரு அதிர்ஷ்டம் இதற்கா!" என்று நா தழுதழுக்கக் கூறிய காத்தாயி ஆனந்தக் கண்ணீரை நிலத்தில் கொட்டினாள்.

அவை தரையில் நனைந்து ஊறி, மறைவதைக் கண்ட இளஞ்செழியன், "அம்மா! அஸ்திவாரத்தை நீயே போட்டு விட்டாய். இனி வெற்றிதான். தடையில்லை" என்றான்.

"அப்படியா அப்பா!" என்றாள் காத்தாயி.

"ஆம். இன்னும் சில தினங்களில் பார். இந்த இடத்தில் தமிழர் பெரும் படையொன்று குவியும். இங்கிருந்து விடுதலைப் போர் எதிர்பாராத திருப்பத்தை அடையும்" என்றான் படைத்தலைவன்.

106. இளஞ்செழியன் பாசறை

சோணாட்டு விடுதலைக்குப் படைதிரட்ட நாகையைத் தேர்ந்தெடுத்தது பற்றிச் சொல்லவொண்ணாப் பெருமை கொண்ட காத்தாயி சுமார் இருபது வருடங்கள் பின்னோக்கி ஓடியவள் போல் மிகுந்த பலத்தையடைந்ததன்றி, அடுத்த நாலைந்து நாட்களில் தனக்குத் தெரிந்த யோசனைகளையெல்லாம் விடாமற் சொல்லி, மணல் மேட்டுக் குப்பத்துக்கும் கடற்கரைக்குமாக இடைவிடாது நடந்து கொண்டிருந்ததைக் கண்ட அலீமா, முதலில் உள்ளூர நகைத்துக் கொண்டாலும் பிறகு மெள்ள மெள்ள உண்மை உதயமாகியதும், கிழவியிடமிருந்த போர் நுணுக்க அறிவைப் பெரிதும் வியக்கவே செய்தாள். காத்தாயியிடம் முதல் நாளிரவு அடைக்கலம் புகுந்த இளஞ்செழியன் மறுநாளில் பொழுது விடியு முன்பாகவே எழுந்து கடற்கரைக்குச் சென்றானென்றாலும், அவனுக்கு முன்பாகக் காத்தாயி தலைநிமிர்ந்து மிகுந்த கம்பீரத்துடன் கடலலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். தூரத்திலிருந்தே அவளைக் கண்ட இளஞ்

செழியன் அவளிருக்குமிடத்தைத் துரிதமாக அணுகி அவள் முகத்தை உற்று நோக்கி அதில் கவலை படர்ந்திருப்பதைக் கண்டு, "அம்மா! உன் முகம் ஏன் இப்படி வாடியிருக்கிறது?" என்று கேட்டான்.

"கவலையப்பா கவலை!" என்று பதில் கூறிய காத்தாயி பெருமூச்செறிந்தாள். அதற்குமேல் சில விநாடிகள் இருவருமே பேசாமல் கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டு மௌன மாகவே நின்றார்கள். அந்தச் சமயத்தில் அவர்களுக்குப் பின்னால் வந்த அலீமா அவர்கள் மௌனத்தைக் கலைக்க, "படைத் தலைவரே!" என்று அழைக்கவே அதனால் சுய நிலைக்கு வந்த படைத் தலைவன் திரும்பி, அலீமாவைப் பார்த்தானேயொழியக் காத்தாயி மட்டும் கடற் பிராந்தி யத்தை விட்டுக் கண்களை அகற்றவேயில்லை.

அப்படிச் சற்றும் திரும்பிக்கூடக் காத்தாயி பார்க்கா ததைக் கண்டு சற்றுக் கோபமும் ஆச்சரியமும் அடைந்த அலீமா, "அம்மா அப்படி ஏன் கடலைப் பார்த்துக் கொண் டிருக்கிறார்கள்?" என்று படைத் தலைவனை நோக்கிக் கேட்டாள்.

"ஏதோ கவலை" என்றான் இளஞ்செழியன்.

"என்ன கவலை?" என்று மீண்டும் கேள்வி கேட்டாள் அலீமா.

"அதைக் கேட்க முடியுமென்றால் நானே கேட்டிருப் பேனே, என் தாய் யோசிக்கும் போது யாரும் பேசக்கூடாது. அவள் குணம் உனக்குத் தெரியாது" என்று இளஞ்செழியன் விளக்கினான்.

இளஞ்செழியன் பதிலால் அதி வியப்பை எய்திய அலீமா, 'என்ன! இந்தப் பரதவக் குலக் கிழவிக்கா இத்தனை மதிப்பைக் கொடுக்கிறார் படைத்தலைவர்! ஏன், இவர் கேட்டு அவள் பதில் சொன்னாள் முத்து உதிர்ந்து விடுமோ?' என்று எண்ணியதன்றி, தானே அவளைக் காரணம் கேட்டு விடுவதென்று தீர்மானித்து, "அம்மா! அம்மா! உங்களைத் தான்!" என்று குரலும் கொடுத்தாள்.

காத்தாயி அலீமாவைத் திரும்பிப் பார்க்காமலே, "என்ன! குழந்தாய்?" என்று வினவினாள்.

"ஏதோ கவலையுடன் நின்றிருக்கிறீர்களே?" என்று மீண்டும் கேட்டாள் அலீமா.

"கவலை எப்படி இல்லாமற் போகும்?" என்று கிழவி திரும்பிப் பார்க்காமலே பதில் சொன்னாள்.

"எதைப்பற்றிக் கவலை?"

"எதைப்பற்றி நான் கவலைப்பட வேண்டும்? என் புருஷர் இல்லை. எனக்கு வயதாகிவிட்டது. நான் போனால் எனது வளர்ப்பு மகன் எடுத்துப் போட்டு விடுவான்..."

"அப்படியானால் கவலைக்குக் காரணமில்லையே?"

"இல்லை. நேற்றுவரை இல்லை."

"நேற்று...?"

"ஆம்! நீங்கள் வந்தபின் துளிர்த்தது. இரவில் மரமாக வளர்ந்துவிட்டது. சோணாட்டில் விடுதலைப் போர் துவங்குகிறது மகளே! அஸ்திவாரத்தை இந்த நாகையில் மணல்மேட்டுக் குப்பமும், வளைந்த கடற்கரையும் சில தோப்புகளும் உள்ள இந்தக் குக்கிராமத்தில் அமைத்து விட்டான் என் மகன். ஆகவே போரை வெற்றிகரமாக முடிப்பது என் கடமையில்லையா?" என்றாள் கிழவி உணர்ச்சி யால் குரல் நடுங்க.

அலீமா வியப்புப் பொங்கி வழிந்த விழிகளை இளஞ் செழியன் மீது திருப்பினாள். படைகளைத் திறமையுடன் நடத்திச் செல்லக்கூடியவரும், பெரும் போர்களைக் கண்டிருப்பவரும், இலி-ஆஸுவையே ஏமாற்றியவருமான இளஞ்செழியன் இருக்கையில், ஏதுமறியாத ஒரு பரதவக் கிழவி போரில் வெற்றியை வாங்கிக் கொடுப்பது தன்னால்தான் முடியும்போல் பேசுவதை எண்ணி ஆச்சரியத்தின் எல்லையை எய்தினாள். அந்த ஆச்சரிய வெள்ளம் அவள் கண்களில் ஓடுவதைக் கண்ட இளஞ்செழியன், "அவளையே கேள்" என்று கிழவியைச் சுட்டிக் காட்டிக் கண்களால் அலீமாவுக்கு ஜாடை செய்தான்.

அலீமா கிழவியுடன் மறுபடியும் பேச்சுக் கொடுத்தாள், "கடமையிருக்கிறது உண்மைதான் அம்மா, ஆனால் இந்தத் தள்ளாத வயதில் நீங்கள் என்ன செய்ய முடியும்?" என்று வினவினாள்.

இதைக் கேட்டதும் காத்தாயி கடற் பிராந்தியத்திலிருந்த கண்களை மெள்ள அலீமா மீது திருப்பியதன்றி, உறுதி நிரம்பிய தன் இதழ்களில் புன்னகையொன்றையும் வெளி விட்டாள். பிறகு, "உண்மைதான் அலீமா. எனக்கு வயது ஆகித்தான் விட்டது. ஆனால் நீ இளவயதினள். ஒரு யோசனை சொல்" என்று கூறிய காத்தாயி, தன் கைகளால் எதிரேயிருந்த மரக்கலங்களைச் சுட்டிக் காட்டி, "அதோ ஆறு மரக்கலங்கள் இருக்கின்றன. அவற்றை இந்த நாகையில் மறைத்து வைப்பதாகத்தானே உச்தேசம்?" என வினவினாள்.

"ஆமாம்" என்று சட்டென்று பதிலிறுத்தாள் அலீமா.

"எப்படி மறைப்பதாக உச்தேசம்?" என்று கிழவி கேட்டாள், அலீமாவின் முகத்தில் தன் கூரிய விழிகளை நாட்டி.

அலீமா கடற்பிராந்தியத்தை ஒரு முறை கண்களால் துழாவினாள். சில வினாடிகள் அலைகளையும் ஊடுருவி விடுவதுபோல் பார்த்தாள். பிறகு குரலில் சந்தேகம் தொனிக்கக் கூறினாள், "அதோ அங்கு அலைகள் செந்நிறத் தில் தோன்றுகின்றன" என்று.

"ஆமாம்" என்றாள் கிழவி.

"கடல் ஆழம் அதிகமாயிருந்தால் கடல் நீரின் நிறம் நல்ல கறுப்பு நீலத்திலிருக்கும்" என்று மேலும் விளக்கினாள் அலீமா.

"உண்மைதான்."

"ஆழமில்லாத இடத்தில் மரக்கலங்களை எப்படிக் கொண்டு வருவது?"

"யோசனையை என்னைக் கேட்கிறாயே. உன்னை யல்லவா நான் கேட்டேன்?" என்று பதில் சொன்ன காத்தாயி கலகலவென்று நகைத்தாள்.

"என்ன நகைக்கிறீர்கள்?" என்று சீறினாள் அலீமா.

கிழவி நகைப்பை நிறுத்திக் கொண்டு தன் கையொன்றை அலீமாவின் தோள்மேல் போட்டு ஆதரவாக அணைத்துக் கொண்டு, "அலீமா! இந்தக் கடல் வேறு, நான் வேறு என்று எண்ணாதே. அதன் மீதே பாதி வாழ்க்கையை நான் கடத்தியிருக்கிறேன். எத்தனையோ இரவு, எத்தனையோ பகல், நானும் என் கணவரும் படகுகளிலேயே இந்த வங்கக் கடற் பிராந்தியத்தில் சஞ்சரித்திருக்கிறோம். அவர் இருந்த வரை எங்கள் ஆயுளில் முக்கால் பாகம் கடலில் கழிந்திருக் கிறது. ஆகவே வங்கக் கடலின் துர்க்குணங்கள், நற்குணங்கள், சீறல்கள், பள்ளங்கள், மேடுகள் அனைத்தையும் நானறிவேன். பரதவ குலத்தவருக்கும் இந்தக் கடலுக்கும் பெரும் உறவு உண்டு. ஆகவே இந்தக் கடலை நீ வெற்றி கொள்ள முடியாது. இதன் உடல் வாகுகளை நீ நிர்ணயிக்க முடியாது. நிர்ணயிக்க முடியாவிட்டால் அதோ அந்த உன் ஆறு மரக்கலங்களை இங்கு கொண்டு வர முடியாது" என்று பேசிக் கொண்டு போனவளை இடைமறித்த இளஞ்செழியன், "இன்னுமிரண்டு மரக்கலங்களுமிருக்கின்றன: அவையும் இங்கு வரும்" என்றான்.

"ரொம்ப நல்லது. அப்படியானால் எட்டு மரக்கலங் களுக்கு இடம் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடிக்க முடியுமா அலீமா!" எனறு கேட்டாள் காத்தாயி.

கிழவி பேசப் பேச பிரமிப்பை அடைந்த அலீமா, 'மணல் அடித்துக் கிடக்கும் இந்த நாகையின் கடலில் எப்படிக் கரையருகே மரக்கலங்களைக் கொண்டுவர முடியும்?' என்று எண்ணியதன்றி, "ஊஹூம். முடியாது. மரக்கலங்களை மறைக்க இங்கே இடமில்லை" என்றாள்.

"தவறு அலீமா! இந்த இடத்தில் நான்கு மரக்கலங்களை மறைக்க வழி கண்டுபிடித்துவிட்டேன். மீதி நான்கைத்தான் என்ன செய்வதென்று புரியவில்லை" என்றாள் காத்தாயி.

அலீமாவின் பிரமிப்பு உச்ச நிலையை அடைந்தது. "என்ன! நான்கு மரக்கலங்களைக் கரையருகே கொண்டு வர

முடியுமா?" என்று வினவினாள் அலீமா குரலில் வியப்பு மிதமிஞ்சி ஒலிக்க.

"முடியும். இதோ பார்" என்ற காத்தாயி, கடல் வளைந்து கிடந்த இடத்தில் நடுவே ஓடிய நீலநிற அலைகளைக் காட்டினாள். "அர்த்த சந்திரனைப் போல் வளைந்து கிடக்கும் இந்தக் கரையில் சமுத்திரத்துக்குள்ளோடியிருக்கும் இரு முனைகளுக்கு நேராகக் கோடுகளை இழுத்தால் நடுவே மண்ணிற அலைகள் இல்லை. நீலநிற அலைகள் இருக்கின்றன. நாங்கள் வாணிபத்துக்கு மரக்கலங்களை ஓட்டியபோது இந்த நடுப்பாதையின் வழியாக மரக்கலங்களைக் கரைக்கருகே கொண்டு வந்து கிண்ணம் போல் வளைந்து கிடக்கும் இந்த இடத்தில் நிறுத்துவோம். அப்படி இப்பொழுதும் நிறுத்தலாம். எதற்கும் பரதவரைக் கொண்டு கோல்போட்டு ஆழம் பார்க்கச் சொல்கிறேன். எப்படியும் நான்கு மரககலங்களுக்கு இடமிருக்கும்" என்று சொன்ன காத்தாயி, அங்கிருந்து கையை ஆட்டிக் குப்பத்திலிருந்த பரதவரை அழைத்தாள். அந்த அழைப்பைக் கண்டதும் ஓடிவந்த பரதவர் இருவரை நோக்கி, எதிரே கடலில் கையைக் கொண்டு, "இங்கு எதுவரை ஆழமிருக்கிறது பாருங்கள்" என்றாள்.

பரதவர்கள் மீண்டும் குப்பத்துக்குச் சிட்டாய்ப் பறந்து, நீளமாக ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்ட மூங்கிற் கழிகளைக் கொண்டு வந்து கரையிலிருந்த படகுகளில் தாவி, கிழவி காட்டிய மார்க்கத்தில் கோல்களை நீரில் செலுத்தி ஆழம் காட்டிக் கொண்டு சென்றார்கள். கிழவியின் ஆராய்ச்சிக் கண்கள் மட்டுமின்றி, அலீமாவின் அழகிய விழி களும் அந்தக் கோல்கள் காட்டிய ஆழத்தை அளந்து நின்றன. பரதவர்கள் கோல் போட்ட இடங்களில் நான்கு ஆள் ஆழத் துக்கு மேலிருப்பதைக் கண்ட அலீமா, கடலின் உடற்கூற்றில் கிழவிக்கிருந்த ஆழ்ந்த அறிவைக் கண்டு, 'படைத்தலைவர் காரணமில்லாமல் இங்கு வரவில்லை' என்று தன் மனத் திற்குள் சொல்லிக் கொண்டாள்.

கிழவி மட்டும் அலீமாவை அதற்கு மேல் திரும்பிப் பார்க்காமல் படகுகளையே பார்த்துக் கொண்டு நின்று மரக் கலங்கள் வரவேண்டிய பாதையை மனத்துக்குள் வகுத்துக் கொண்டாள். இப்படி ஆழமான கடற்பாதையை நிர்ணயம் செய்து கொண்டதும் மற்றும் சில பரதவரை அழைத்த காத்தாயி இளஞ்செழியனை நோக்கித் திரும்பி, "அப்பா! இதோ படகுகள் சென்ற பாதைக்கு இப்புறம் பத்தடி அப்புறம் பத்தடி போகலாம். அதற்குமேல் போனால் மணல் திட்டுகள் இருக்கின்றன. இதே பாதையில் ஒன்றன்பின் ஒன்றாக உன் மரக்கலங்களை வரைவழைத்துக் கொள். நான்கு மரக்கலங்கள் இங்கு நிற்கட்டும். மீதி இரண்டை என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை" என்றாள் வருத்தம் தோய்ந்த குரலில்.

"அதற்காகக் கவலைப்படாதே தாயே! மீதி இரண்டை யும் வேவு பார்க்க அனுப்பிவிடுகிறேன். கடலில் ஏற்கெனவே சஞ்சாரம் செய்யும் இரண்டு மரக்கலங்களை இந்த மரக் கலங்கள் கண்டு பிடித்துக் கொண்டு திரும்பட்டும். பிறகு இந்த நான்கும் வேவுத் தொழிலுக்குச் செல்லட்டும். இந்த நான்கும் இங்கு இருக்கட்டும்" என்று கூறிய இளஞ்செழியன் தனது மாலுமிகளைக் கூப்பிட்டு அவ்விதமே இசைவுகளைப் பிறப் பித்தான்.

அன்று மாலைக்குள் கப்பல்கள் நான்கும் தங்கள் மறை விடத்தை அடைந்தன. இருபுறமிருந்த மணல் திட்டுகளின் முனைகள் கடலுக்குள் நீண்ட தூரம் ஓடியதாலும், மரங்களும் இருபுறமும் அடர்த்தியாக இருந்ததாலும் உள்ளே புகுந்து கிடந்த கடலில் வந்த மரக்கலங்கள் மறைந்து கிடந்தன. இருப்பினும் அவற்றை இன்னும் மறைக்கத் தோப்புகளிலிருந்த மரக்கிளைகளை இலைகளுடன் வெட்டி அந்த மரக்கலங்கள் மீது போட்டு அவை இருக்குமிடம் தெரியாமல் செய்துவிட்ட இளஞ்செழியன் அடுத்தபடி தனது மாலுமிகளுக்கும், தான் திரட்ட இருக்கும் படைகளுக்கும் இருப்பிடங்களை மணல் மேட்டுக் குப்பத்திலும், இதர தோப்புகளிலும் அமைக்க ஏற்பாடுகளைச் செய்தான்.

சுமார் நாலைந்து நாட்கள் இந்த அலுவல்கள் துரிதமாக நடந்தன. கடற்கரையோரத் தோப்புகளில் தாழ்மையான குடிசைகள் எழுந்து மறைந்து கிடந்தன. காத்தாயி பரதவர்களையும், நாகர்களையும் இரவு பகல் பிசாசுகளைப் போல் வேலை செய்யத் தூண்டி இளஞ்செழியன் குறிப்பிட்ட அத்தனை அலுவல்களையும் செய்து முடித்தாள். அந்த நாலைந்து நாட்களில் கிழவியிடம் அலீமா பெருமதிப்பு கொண்டாள். அவளை முதலில் குறைத்து மதிப்பிட்டதற்காக மன்னிப்பும் ஒருமுறை கேட்டாள். "அட, அசடே! நீ என் குழந்தை. எதைச் சொன்னால் என்ன?" என்று பதில் சொன்ன காத்தாயியின் பெருந்தன்மை அலீமாவை, அடியோடு ஆட்கொண்டது. அலீமாவிடம் அன்பு கொண்ட கிழவி போர்த் திட்டத்தோடு திட்டமாக அலீமாவைச் சிங்காரிக்கும் திட்டத்தையும் மேற்கொண்டு தினசரி நாகலிங்கப் பூக்களை ஏராளமாகக் கட்டி அவள் தலையில் சூட்டினாள். அலீமாவும் மாலுமி உடைகளைக் களைந்து, தன் இயற்கை உடைகளை உடுத்து கடற்கரை மோகினியென நாகைத் தோப்புகளிலும் கடற்கரையிலும் மகிழ்ச்சியுடன் உலாவினாள். போர் ஏற்பாடுகள் மும்முரமாக நடந்ததால் காத்தாயியும் மகிழ்ச்சியால் பூரித்தாள்.

இளஞ்செழியன் மனத்தில் மட்டும் மகிழ்ச்சி எள்ளளவுமில்லை. தான் ராணியை மணக்க உறுதி கூறிவிட்டதை அந்த நாலைந்து நாட்களில் அடிக்கடி நினைத்துக் கொண்டான். 'அப்படி மணந்து கொண்டால் என்னையே புருஷனாக வரித்திருக்கும் பூவழகியின் கதி என்னவாகும்?' என்று ஏங்கி அடிக்கடி கடற்கரையை நோக்கிப் பெருமூச்சு விட்டான். எதற்கும் முன்னதாகப் பூவழகிக்கு உண்மையைக் கூறிவிடுவது தன் கடமை என்று தீர்மானித்தான். அந்தத் தீர்மானத்தை முன்னிட்டு, குணவாயிற் கோட்டத்துக்குச் செல்வதென்றும் முடிவு செய்தான். ஆனால் அவன் திட்டம் நிறைவேறுவது அத்தனை எளிதாயில்லை. படை திரட்டும் வேலை மும்முரமாக நடந்தது. அவன் ஓலைகொடுத்தனுப்பிய இடங்களி

லிருந்து வீரர்கள் பலர் ரகசியமாக இரவுகளில் வந்தார்கள். கத்திகளையும், ஈட்டிகளையும் தீட்டும் கொல்லர் பட்டறைகள் நாகையின் கடற்கரைத் தோப்புகளில் சப்திக்க ஆரம்பித்தன.

சுமார் ஒரு வாரத்திற்குள் இப்படியாக ஒரு ரகசியப் பாசறையையே நாகையின் கடற்கரையில் அமைத்த இளஞ்செழியன், ஒருநாள் காத்தாயியும் அலீமாவும் இருந்த குடிசைக்குள் பூரண கவசமணிந்து புகுந்தான். காத்தாயியும் அலீமாவும் அவன் கோலத்தைப் பார்த்து ஒரு கணம் திகைத்தார்கள். பிறகு காத்தாயி கேட்டாள், "ஏதற்கப்பா இந்தப் போர்க்கோலம்?" என்று.

"தலைக்கு மட்டும் கவசம் தரித்தால் என்னைத் தேடிக் கொண்டிருக்கும் டைபீரியஸிடம் நானே என்னை ஒப்படைப்பதாகும். தலை முதல் கால் வரை கவசமணிந்தால் இப்பொழுது நாட்டில் நடமாடும் பல யவன வீரர்களில் நானும் ஒருவனாவேன்" என்று பதில் கூறிய இளஞ்செழியன், "அம்மா! நான் மன்னரைச் சந்திக்கச் செல்கிறேன், அதுவரை இங்கு ஏற்பாடுகளை நீ கவனித்துக் கொள். இந்தா, இந்த ஓலையை வாணகரையில் பிரும்மானந்தரிடம் சேர்த்து விடு" என்று சொல்லி மடியிலிருந்து ஒரு ஓலையையும் எடுத்துக் காத்தாயியிடம் கொடுத்தான்.

ஓலையைக் கையில் வாங்கிய காத்தாயி அதில் முத்திரை பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து, "ஓலை மிகுந்த ரகசியமானதோ?" என்று கேட்டாள்.

"ஆமாம். இந்திர விழாவன்று பிரும்மானந்தர் என்ன செய்யவேண்டும் என்பதை அது குறிக்கிறது" என்ற இளஞ்செழியன் அவ்விருவரிடமும் விடை பெற்றுக் கொண்டு குணவாயிற் கோட்டத்தை நோக்கிக் கிளம்பினான். அவன் கிளம்பிய இரண்டாவது நாளே அந்த முத்திரை ஓலை பிரும்மானந்தரிடம் சேர்க்கப்பட்டது. அந்த ஓலையைப் பிரித்துப் படித்த பிரும்மானந்தரின் கோபம் எல்லையை மீறியது. "அழகு அழகு! வெகு அழகு! இதெல்லாம் உன்

வேலைதானா? அட பாவி!" என்று பைத்தியம் பிடித்தவர் போல் கூறினார்.

107. அடிகளின் துயரம்

இளஞ்செழியன் ஓலையைப் படித்ததும் பிரும்மானந்த அடிகள் கோபத்தின் வசப்பட்டுக் கூவியதைப் பக்கத்திலிருந்து கண்ட குமரன் சென்னியும் பரதவ வல்லாளனும் மிகுந்த ஆச்சரியத்தை அடைந்ததன்றி, அப்படிப் பிரும்மானந்தரே நிலைகுலைந்து போகும்படியான அப்பேர்ப்பட்ட என்ன செய்தி ஓலையில் அடங்கியிருக்கக் கூடும் என்பதை அறிய ஆவலும் கொண்டார்களானாலும், பிரும்மானந்தரின் முகத்தில் தாண்டவமாடிய கோபச் சுடரைக் கண்டு எந்தக் கேள்வியையும் தொடுக்காமல் மௌனமாகவே அவரைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

கீழ்க் கடலில் முளைத்த கதிரவன் வானத்தில் ஏறி விட்டதால், வாணகரை உச்சிமாளிகையின் கீழ்க்கூடத்தில் சாளரத்தின் மூலம் புகுந்துவிட்ட ஒளியில் அந்த ஓலையைத் திரும்பத் திரும்பப் படித்த பிரும்மானந்தரின் உடல் இரண்டு மூன்று முறை சினத்தினால் ஏற்பட்ட உணர்ச்சிக் கொதிப்பால் ஆடியதன்றி, அவர் கன்னச் சதைகளும் ஓரளவு மேலெழுந்து ஏற்கெனவே சிறியதாயிருந்த யானைக் கண்களையும் மூடிவிட்டதால் ஜபம் செய்பவரைப் போல் காட்சியளித்தார். அவர் உள்ளத்தே சென்ற ஒரு மாத கால நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் வலம் வந்து அவர் புத்தியில் அக்கினிப் பொறிகளை வாரி இறைத்துக் கொண்டிருந்தன. 'என்னை விடத் திறம் படைத்தவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறானா படைத் தலைவன்?' என்று தமது பல்லையும் சற்று முரட்டுத்தனமாகக் கடித்துக் கொண்டார் அந்த முற்றுந் துறந்த முனிவர். பல நாட்களாகத் தாம் விடை காணாது தவித்துக் கொண்டிருந்த பல கேள்விகளுக்கு அந்த ஓலையிலிருந்த சில வரிகள் விடையளித்து விட்டதால்,

'எத்தனை இரவுகளை நான் தூக்கமின்றிக் கழித்தேன்! எத்தனை பேரைக் கஷ்டங்களுக்கு உள்ளாக்கினேன்! இத்தனையும் இவன் செய்த ஏமாற்றத்தாலல்லவா!' என்று மீண்டும் மீண்டும் தன் மனத்துக்குள் கடிந்து கொண்டார்.

பிரும்மானந்தர் கண்களை மூடிக் கொண்டு இப்படி யோசனைகளில் இறங்கிவிட்டிருந்த போதிலும் அவர் தேகம் சற்று சிணுங்கியதையும், ஓலையை விரல்கள் நெருடியதையும் கண்ட குமரன் சென்னி, அவர் இதயம் குமுறிக் கொண்டிருப்பதை உணர்ந்தானேயொழிய அதன் காரணத்தை அறியாததால் கேட்டான், "அடிகளிடம் யாரோ அபசாரப் பட்டுவிட்டார்கள் போலிருக்கிறது?" என்று.

அந்தக் கேள்வியின் விளைவாகப் பிரும்மானந்தர் கன்னக் கதுப்புச் சதைகளைச் சற்றுக் கீழே இறக்கிக் கண்களைத் திறந்தாரானாலும், அவர் சீற்றம் மட்டும் குறையாததால், "அபசாரப்படவில்லை சென்னி! முட்டாள் பட்டம் கட்டிவிட்டார்கள்!" என்று உக்கிரம் பரிபூரணமாகத் தொனித்த குரலில் கூறினார்.

இதைக் கேட்ட குமரன் சென்னி பதில் கூறுமுன்பாகப் பரதவ வல்லாளன், "அப்படித் தங்களை அழைப்பவர்கள் இந்தத் தமிழகத்தில் யாரிருக்க முடியும்?" என்று வினவினான்.

"முட்டாள் என ஒருவனை அழைக்க வேண்டிய அவசியமில்லை வல்லாளா!'' என்று வெறுப்புடன் சொன்னார் பிரும்மானந்தர்.

"அப்படியானால்..." என்று ஏதும் புரியாமல் விழித்த பரதவ வல்லாளனை ஒரு விநாடி நோக்கிய பிரும்மானந்தர், "ஒருவன் சாமர்த்தியமான செயல்களில் ஈடுபடும்போது, அதை நாமறியாமல் வேறு செயல்களில் இறங்கும்போது, முட்டாள் பட்டம் நமக்குத்தானே வந்து விடும்!" என்று வலியுறுத்தினார்.

இதற்குப் பதில் குமரன் சென்னியே சொன்னான். "தங்களை விடச் சாமர்த்தியமாகச் செயல்படக் கூடியவர்கள் தமிழகத்தில் யாருமில்லை என்பது பிரசித்தமாயிற்றே" என்று.

"அந்தப் பிரசித்தி போய் ஒரு மாதமாகிறது சென்னி!" என்று அலுத்துக் கொண்டார்.

"எனக்கு விளங்கவில்லை அடிகளே" என்றான் குமரன் சென்னி.

பிரும்மானந்தர் உடனே பதிலேதும் சொல்லவில்லை. கையிலிருந்த ஓலையைச் சிறிது நேரம் நெருடிக் கொண்டேயிருந்தார். பிறகு அந்த ஓலையைக் குமரன் சென்னியிடம் நீட்டி, "இதைப் படித்துப் பார்" என்றார். ஓலையைப் பிரித்துப் படித்த குமரன் சென்னி முகத்தில் விவரிக்க முடியாத எத்தனை எத்தனையோ உணர்ச்சிகள் எழுந்து தாண்டவமாடின. அந்த உணர்ச்சிகளின் வேகத்தின் விளைவாக வாய் மட்டும் பேசும் சக்தியை அறவே இழந்து விட்டதால், அதற்கு ஈடு செய்யவோ என்னவோ ஆஜானுபாகுவான அவன் உடல் நன்றாக நிமிர்ந்து, தலை கூரையைத் தொட்டுவிடும் ஸ்திதிக்கு வந்தது. அப்படி நிமிர்ந்து நின்ற குமரன் சென்னி, பலமுறை அந்த ஓலையைத் திரும்பத் திரும்பப் படித்தான். ஏதோ பெரும் காவியத்தைத் தடவிக் கொடுப்பது போல் அதைத் தடவியும் கொடுத்தான். பக்கத்தில் நின்று கொண்டிருந்த பரதவ வல்லாளன், குமரன் சென்னியிடம் ஏற்பட்ட அந்தத் திடீர் மாறுதலைக் கண்டதும் வியப்பில் மூழ்கித் தன் மார்பில் தொங்கிய சிறு வெண்சங்கைத் தடவி விட்டுக் கொண்டான். உணர்ச்சிகள் விளைவித்த அதிர்ச்சியால், சிறிது நேரம் மௌனமாக இருந்த குமரன் சென்னி, பரதவ வல்லாளனை நோக்கி, "வல்லாளா, படைத்தலைவர் வந்துவிட்டார்" என்றான் குரல் தழுதழுக்க.

எந்தச் சமயத்திலும் உணர்ச்சி கலங்காத குமரன் சென்னியே உணர்ச்சி கலங்கிக் குழம்பிவிட்டதைக் கண்டதாலும், கருத்து முழுவதும் சென்னியின் கையிலிருந்த ஓலையில் புதைந்து கிடந்ததாலும், சென்னி சொன்னதன் முழு அர்த்தத்தையும் கிரகிக்கச் சக்தியில்லாத பரதவ வல்லாளன், "எந்தப் படைத் தலைவர்?" என்று வினவினான்.

சென்னியின் முகத்தில் குழப்பம் மறைந்து கோபம் மிகுந்தது. "ஏந்தப் படைத் தலைவரா! என்ன உளறுகிறாய் வல்லாளா! படைத் தலைவர் என்று நீயும் நானும் அழைக்கக் கூடியவர்கள் பல பேருண்டா தமிழகத்தில்?'' என்று வினவினான்.

"இல்லை" என்றான் வல்லாளன். அப்பொழுதுதான் அவனுக்கு மெள்ள மெள்ள உண்மை புலனாகத் தொடங்கியது. அப்படிப் புத்தியில் உண்மை உதயமானதால், அதை நம்பமுடியாமல் திணறிய வல்லாளன், "என்ன! என்ன சொல்கிறாய் சென்னி! நமது படைத் தலைவர்..." என்று ஏதோ பேசப் புகுந்த வார்த்தைகளை முடிக்க முடியாமல் திணறினான்.

பிரும்மானந்தரின் கோபக் குரல் இடையே எழுந்தது. "ஆமாம். எந்தப் படைத் தலைவர் வருகைக்காக நாம் தவம் கிடந்தோமோ அவர்தான் வந்துவிட்டார்'' என்றார் பிரும்மானந்தர்.

"நமது..." என்று குழறினான் வல்லாளன்.

"ஆமாம். நமது படைத்தலைவர்தான்."

"அவரையா நீங்கள் சற்று முன் அடப்பாவி, நீதானா என்றெல்லாம் அழைத்தீர்கள்?"

"அவரையேதான்."

"படைத் தலைவரை எங்கள் முன்னால் அப்படி அழைக்க மிகுந்த துணிவு வேண்டும் உங்களுக்கு." இந்தப் பதிலைக் கடுமையாகச் சென்னான் வல்லாளன். அவன் முகத்தைவிட்டுத் தன் கண்களைச் சென்னியின் முகத்துக்குத் திருப்பிய பிரும்மானந்தர், அந்த முகத்திலும் சினம் மண்டிக் கிடப்பதைக் கண்டு, 'அப்பா! படைத் தலைவன் இவர்களை எப்படி வசீகரித்திருக்கிறான்!' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாலும், அதை வெளிக்குக் காட்டாமல், "சோழர் படை உபதலைவரை மரியாதையின்றி அழைத்தது பிசகுதான் வல்லாளா! ஆனால், என் நிலையில் வேறு யாராவது இருந்தால் என்னைவிட அதிகமாகச் சபித்திருப்பார்கள்" என்றார்.

"சபிக்கும்படி அவர் என்ன செய்தார்?'' என்று கேட்டான் குமரன் சென்னி ஆத்திரத்துடன்.

நேரடியாகப் பதில் சொல்லாத பிரும்மானந்தர் சுற்றி வளைத்துப் பேசினார். "நான் துறவியென்பது உனக்குத் தெரியுமா சென்னி?" என்று கேட்டார்.

"அது அனைவருக்கும் தெரிந்தது" என்றான் சென்னி.

"என் வேலை கோட்டை கொத்தளங்களைக் காப்பதல்ல" என்று சுட்டிக் காட்டினார் பிரும்மானந்தர்.

"இல்லை," சென்னியின் பதில் சுருக்கமாகப் பளிச் சென்று வந்தது.

"ஆண்டவனுக்கும் அவனடியாருக்கும் பணி புரிவது என் கடன்."

"ஆம்."

"அதைச் செய்கிறேனா?"

"இல்லை."

"உண்மை. அதற்குப் பதில் இந்த வாணகரைக் கோட்டையைக் காத்துக் கொண்டிருக்கிறேன். சாந்தி சமாதியிலிருக்க வேண்டியவன் போர்த் தொழிலில் மும்முரமாக இறங்கி இந்தக் கோட்டைக்குள் ஆயுதங்களைத் தயார் செய்கிறேன்."

"ஆம். இங்கு ஆயிரம் கொல்லர்கள் வேலை செய்கிறார்கள். தினத்துக்கு சுமார் நானூறு வாட்கள், ஐந்நூறு வேல்கள், இருநூறு கேடயங்கள் தயாராகின்றன."

"உண்மைதான். இதெல்லாம் ஒரு துறவி செய்ய வேண்டிய வேலையா?"

"இல்லை."

"இல்லைதான். இருப்பினும் அத்தகைய தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன். ஹரிசிவ நாமாக்களை ஜபம் செய்வதை விட்டுத் தினசரி எதிரே புகாரிலிருக்கும் டைபீரியஸைப் பற்றி ஜபம் செய்கிறேன். ஏன்?"

"நாட்டுப் பற்றினால்."

இதைக் கேட்ட பிரும்மானந்தர் சென்னியை நன்றாக ஏறெடுத்துப் பார்த்து, "எனக்கு நாட்டுப் பற்று உண்டென்பதில் சந்தேகமில்லையே உனக்கு!" என்றார்.

எதற்காக அந்தக் கேள்வியைப் பிரும்மானந்தர் கேட்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத குமரன் சென்னி, "அதை யார் மறுக்க முடியும் அடிகளே?" என்று கேட்டான்.

"உங்கள் படைத் தலைவர் மறுக்கிறார்" என்றார் பிரும்மானந்தர் வருத்தம் தோய்ந்த குரலில்.

அதுவரை சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு மௌனமாக நின்ற பரதவ வல்லாளன் குறுக்கிட்டு, "ஒருகாலுமிருக்காது, படைத் தலைவர் உங்கள் விஷயத்தில் அப்படி நினைக்க மாட்டார்" என்று திட்டவட்டமாக அறிவித்தான்.

"உங்கள் படைத் தலைவர் புகாருக்கு வந்து ஒரு மாத காலமாகிறது. உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார் பிரும்மானந்தர் சென்னியையும், வல்லாளனையும் ஏக காலத்தில் நோக்கி.

"தெரியாது!" இருவரும் ஏக காலத்தில் கூறினார்கள், ஆச்சரியம் ஆழமாகத் தோய்ந்த குரலில்.

"அடிக்கடி மரக்கலங்கள் நான்கு, ஆறு, எட்டு என்று இராக்காலத்தில் கடலில் தோன்றினவே, அவை உங்கள் படைத் தலைவருக்குச் சொந்தம் என்பது தெரியுமா?" இரண்டாவது வெடியை வீசினார் பிரும்மானந்தர்.

"என்ன!" இருவர் பதிலும் பிரமிப்புடன் பெரிதாக ஒரே காலத்தில் எழுந்தன. அந்த பிரமிப்புக் கூச்சலைத் தொடர்ந்து சென்னி கேட்டான்: "இதெல்லாம் எப்படித் தெரிந்தது உங்களுக்கு?" என்று.

"இப்பொழுதுதான்" என்றார் பிரும்மானந்தர்.

"இப்பொழுதா?" என்றான் பரதவ வல்லாளன். அவனுக்கு ஏதுமே புரியவில்லை.

"ஆம். அந்த ஓலை சொல்கிறது" என்றார் பிரும்மானந்தர் மீண்டும்.

"ஓலையில் அப்படி எதுவும் காணோமே. இந்திர விழா வன்று இரவில் இரண்டாம் ஜாம ஆரம்பத்தில் இந்தப் பகுதியிலிருந்து புகாரைத் தாக்கும்படி ஓலையில் கண்டிருக்கிறது" என்றான் குமரன் சென்னி.

"ஓலையில் கண்டிருப்பது அவ்வளவுதான் சென்னி. ஆனால் ஓலை மறைப்பது பல விஷயங்கள். உதாரணமாக இந்த ஓலையை எங்கிருந்து எழுதியிருக்கிறார் என்று தெரியவில்லை..." என்று சுட்டிக் காட்டினார் பிரும்மானந்தனர்.

"வந்த தூதுவனை விசாரித்தால் சொல்கிறான்" என்றான் சென்னி.

"சொல்லமாட்டான், கேட்பதும் பிசகு" என்றார் பிரும்மானந்தர்.

"ஏன்?"

"தற்சமயம் இருப்பிடத்தை மர்மமாக வைத்திருக்க இஷ்டப்படுகிறார் படைத்தலைவர்."

"காரணம்?"

"பல இருக்கலாம். உதாரணமாக ஓலை வேறு யார் கையிலாவது சிக்கினால் அபாயம் என்று அவர் கருதியிருக்கிலாம். அது சரிதான், ஆனால், சரியில்லாதது பல இருக்கின்றன.'

"என்ன?"

"புகார் வந்து ஒரு மாதமாகியும் படைத் தலைவர் நம்மை ஏன் வந்து காணவில்லை? நம்முடன் போர் ஏற்பாடுகளைப் பற்றி ஏன் கலக்கவில்லை?"

"அவர் வந்து ஒரு மாதமாகிறது என்று யார் உங்களுக்குச் சொன்னது?"

பிரும்மானந்தர் முகத்தில் கோபத்துடன் இகழ்ச்சி நகை பரவியது. "யாரும் சொல்லத் தேவையில்லை. நிகழ்ச்சிகள் கூறுகின்றன. அப்பொழுது அவற்றுக்குக் காரணம் புரியாமல் தவித்தேன். இப்பொழுது தெரிகிறது காரணம்" என்றார் பிரும்மானந்தர்.

இம்முறை வல்லாளன் கேட்டான்: "என்ன நிகழ்ச்சிகள் அடிகளே?"

"டைபீரியஸ் வந்து பல மாதங்களாக நம்மிடமிருந்து பிரியாத நமது படையைச் சேர்ந்த யவன வீரர்கள் திடீரெனப் பிரிந்து புகார் சென்றது ஒரு நிகழ்ச்சி..." என்று மேலும் சொல்லப் போன பிரும்மானந்தரைத் தடுத்த வல்லாளன், "அதற்கும் படைத் தலைவருக்கும் என்ன சம்பந்தம்?" என்று வினவினான்.

"படைத் தலைவர்தான் அவர்களை இங்கிருந்து அழைத்துச் சென்றவர். வேறு யார் சொல்லைக் கேட்டும் அவர்கள் போயிருக்க மாட்டார்கள். அப்பொழுது அந்த நிகழ்ச்சி பேராச்சரியமாயிருந்தது எனக்கு. நமது யவன வீரர்களாவது புகாருக்குச் சென்று டைபீரியஸிடம் சேருவதாவது என்று வியந்தேன். இப்பொழுது வியப்பாயில்லை வல்லாளா! இது படைத்தலைவர் ஏற்பாடு. காரணமாகவே தனது வீரர்களைப் புகாரின் யவனர் படையில் புகவிட்டிருக்கிறார். தவிர அவருடைய மரக்கலங்கள் வந்த போதெல்லாம் புகாரின் கலங்கரை விளக்கம் அணைக்கப்பட்டது. அதையும் காரணமாகவே அவர் செய்யச் சொல்லியிருக்க வேண்டும். அவர் டைபீரியஸுக்குத் தெரியாமல் எப்படியோ புகாரில் திரிந்திருக்கிறார் என்பது தெரிகிறது. ஆனால் எப்படித் திரிந்தார்? யவன நாட்டிலிருந்து வந்த மரக்கலங்களின் தலைவனை டைபீரியஸ் எப்படிச் சந்திக்காமலிருந்தான்? சந்தித்திருந்தால் படைத் தலைவர் எப்படித் தப்பினார் என்பது புரியவில்லை சென்னி! மற்றுமொன்று. நான் வேவு பார்க்க அனுப்பிய அல்லி எப்படி உயிருடன் திரும்பி வந்தாள் என்பது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அவள் தப்பி வந்ததற்குச் சொல்லிய காரணங்களும் திருப்தியாயில்லை. இருப்பினும் அதையெல்லாம் நான் பொருட்படுத்தவில்லை. இப்பொழுது யோசிக்கும் போது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது

எல்லாம். புகாரில் ஏற்பாடுகளை முடித்துக் கொண்டு விட்டார் படைத் தலைவர். நம்மை நம்பாமலும், நம்மைக் கலக்காமலும் ஏற்பாடுகளை முடித்துக் கொண்டு இறுதிக் கட்டளையை மட்டும் இந்த ஓலையில் பொறித்தனுப்பியிருக்கிறார். ஆனால் இது போதாது. இந்திர விழாவன்று நாம் ஏன் புகாரைத் தாக்க வேண்டும்? தாக்கினால், நம்மைச் சுழற் பந்தங்களை வீசி அந்தத் தூண் பொறிகள் அழித்து விடுமே. அதிலிருந்து நமது வீரர்களுக்கு எப்படிப் பாதுகாப்பு? இதையெல்லாம் நான் அறிய வேண்டும். தவிர இன்னும் நாலைந்து வாரங்களில் தமிழகத்தில் துவங்கப்படும் போர் நிலையென்னவென்பதையும் அறிய ஆசைப்படுகிறேன். ஆகவே, நான் குணவாயிற் கோட்டம் போக வேண்டும். அதற்கு உடனே புரவி தயாராகட்டும்?" என்றார் பிரும்மானந்தர் உணர்ச்சியால் பெருமூச்சு வாங்க.

"நானும் வரட்டுமா?" என்றான் சென்னி.

"வேண்டாம் சென்னி. நீயும் வல்லாளனும் புகாரைத் தாக்குவதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். கொல்லர்களை அதிக வேல்களையும் கத்திகளையும் வடிக்கச் சொல்லுங்கள். மன்னர் படை ஆயுதமின்மையால் அவதிப் படக்கூடாது" என்று உத்தரவிட்ட அடிகள், விடு விடுவென்று உள்ளே சென்று அரை நாழிகைக்குள் நீராட்டத்தை முடித்துக் கொண்டு, இரண்டு டம்ளர் பாலையும், ஐந்தாறு பழங்களையும் உண்டு அற்பாகாரம் செய்து குணவாயிற் கோட்டத்தை நோக்கிக் கிளம்பினார்.

மிகுந்த எச்சரிக்கையுடன் துரிதமாகப் பயணம் செய்து அன்றிரவே குணவாயிற் கோட்டத்தை அடைந்த அடிகள் கட்டுக் காவல்களைத் தாண்டி, கரிகாலன் பாசறையை எய்தினார். பாசறை முகப்பில் பலமான காவல் இருந்தது. காடு முழுவதும் ஆயுதங்களின் ஒலி கேட்டது. சின்னஞ்சிறு வண்டிகள் போகும் சத்தமும் கேடயங்கள் எங்கிருந்தோ குவிக்கப்பட்ட ஒலியும் கலந்து கோரச் சூழ்நிலையைச் சிருஷ்டித்துக் கொண்டிருந்தது. இவற்றையெல்லாம் கிரகித்துக் கொண்டு பாசறைக்குள் நுழைந்த பிரும்மானந்தர் அங்கு படைத் தலைவர்கள் பலருக்கு மத்தியில் கரிகாலனும் அல்லியும் அமர்ந்திருப்பதையும், போர்த் திட்டங்களைப் பற்றி உஷ்ணமான விவாதம் நடந்து கொண்டிருப்பதையும் கண்டார். அவர் ஆராய்ச்சிக் கண்கள் அங்கிருந்த அனைவரையும் ஒருமுறை வலம் வந்தன. அந்தக் கூட்டத்தில் அவர் எதிர் பார்த்த இளஞ்செழியனை மட்டும் காணோம்.

108. மந்திராலோசனை

போர் ஆயத்தங்கள் மிகப் பலமாக நடந்து கொண்டிருந்ததால் எங்கும் ஆயுதங்களின் ஒலியும், சின்னஞ் சிறு ஆயுத வண்டிகளின் சக்கரங்கள் புரளும் சப்தமும், குதிரைகளின் குளம்பு ஓசையும் நிரம்பிக் கிடந்த குணவாயிற் கோட்டத்தின் அந்தக் காட்டின் நடு மத்தியிலிருந்த கரிகாலன் பாசறையில் படைத் தலைவர் பலரிருந்தும் போரின் வெற்றிக்கு மிக அவசியமான சோழர் படை உபதலைவன் இளஞ்செழியன் மட்டும் இல்லாததைக் கண்ட பிரும்மானந்தர் பெரும் ஏமாற்றத்திற்குள்ளானார். தான் கொண்டிருந்த பல சந்தேகங்களை நிவர்த்திக்கக் கூடியவன் இளஞ்செழியன் ஒருவனேயாகையால் அவனில்லாதபோது தான் அந்தப் போர்த் திட்டச் சபையில் கலந்து கொண்டாலும் திட்டமாகச் சொல்லக் கூடியது எதுவுமிருக்காது என்பதை உணர்ந்த பிரும்மானந்தர், மன்னர் மந்திராலோசனையில் தனக்கு என்ன வேலையிருக்க முடியும் என்று கூட எண்ணினார். கரிகாலன் தொடுக்கும் போர் வெற்றி பெற வேண்டுமானால், புகாரிலிருந்தோ, கடற்கரையோரமாக உள்ள வேறெந்தப் பிராந்தியத்திலிருந்தோ உதவி கிடைப்பது மிகவும் அவசியமென்பதையும், புகாரில் யவனர் கை வலுத்திருக்கும் போது எந்த இடத்தில் போர் மூண்டாலும் டைபீரியஸின் யவனர்கள் சோழர் படையைப் பின்புறத்தில் தாக்குவது மிக எளிதென்பதையும் அறிந்திருந்த பிரும்மானந்தர், அப்படி யவனர்கள்

செயல்படாது தவிர்க்கக் கூடிய ஒரே ஒருவன் இளஞ்செழியன் என்பதைச் சந்தேகமற உணர்ந்திருந்தார். ஆகவே, அவனில்லாத மந்திராலோசனையில் தாம் நுழைய வேண்டாம் என்று எண்ணி திரும்ப முயன்ற சமயத்தில் அவரைக் கவனித்து விட்ட அல்லி, "அடிகளே! வரவேண்டும் வரவேண்டும். நல்ல சமயத்தில் வந்தீர்கள்" என்று அழைத்தாள். அதுவரை எதிரே மஞ்சத்தில் விரிந்து கிடந்த பட்டுச் சீலையை ஆராய்ந்து கொண்டிருந்த கரிகாலனும், மற்றப் படைத்தலைவர்களும் பிரும்மானந்தர் பெயரை அல்லி சொல்லியதும் சட்டென்று தலை தூக்கி அவரைப் பார்த்ததன்றி எழுந்து வணக்கமும் செலுத்தினார்கள்.

சோழர் அரியணையில் சீக்கிரமே அமரப் போகிறவனும், படைத்தலைவர்களால் சூழப்பட்டவனுமான கரிகால்வளவன் எழுந்து நின்று தமக்கு அஞ்சலி செய்ததைக் கண்ட பிரும்மானந்தரின் உள்ளம் பெரிதும் நெகிழ்ந்து கண்களில் ஆனந்தக் கண்ணீரும் திரண்டு நின்றது. அவர் உள்ளம் மேலும் நெகிழும்படியான வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கிய கரிகாலன், "அடிகளே! அந்தரங்கமானவர்கள் அவசியமான சமயங்களில் அழையாமலே வருவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதற்கு அத்தாட்சி இன்றுதான் கிடைத்தது" என்றான்.

இதைக் கேட்ட பிரும்மானந்தர் ஆனந்தப் பெருமூச்செறிந்தார். தான் கண் கலங்கியிருப்பதைக் காரிகாலன் பார்க்காதிருப்பதற்காக, இன்பப் புன்முறுவல் ஒன்றையும் இதழ்களில் படரவிட்டார். இருப்பினும் சிறிது சந்தேகத்துடன், "மன்னர் மந்திராலோசனையில் இருப்பதாகத் தெரிகிறது" என்று இழுத்தார்.

'ஆம்' என்பதைக் குறிக்கத் தலையைச் சற்றே தாழ்த்திய கரிகாலன், "அடிகள் அறியாத மந்திரமோ ஆலோசனையோ ஏதும் இங்கில்லை" என்று பணிவுடன் கூறியதன்றி, "இப்படி வந்து அமரவேண்டும்" என்றும் சொல்லித் தனக்குப் பக்கத்திலிருந்த ஆசனமொன்றையும் காட்டினான்.

பிரும்மானந்தர் அதற்கு மேல் மறுக்க முடியாமல், படைத்தலைவர்களைத் தாண்டி மன்னனுக்குப் பக்கத்து ஆசனத்தில் அமர்ந்ததும், ஒரு முறை அங்கிருந்த படைத்தலைவர்களைத் தமது கண்களால் துழாவினார். அந்த மந்திராலோசனை சபையில் வெற்றிக் களை தாண்டவமாடிக் கொண்டிருந்தது. குதிரைப் படைகளையும், காலாட்படைகளையும், யானைப் படைகளையும், ஆயுதம் விசிறும் யந்திரப் படைகளையும், நடத்திச் செல்லும் படைத்தலைவர் நால்வர் மன்னனுக்கு எதிரே அர்த்தசந்திர வட்டமாக அமர்ந்தனர். கரிகாலன் பக்கத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்த அல்லியைத் தாண்டிச் சற்றுத் தூரத்தில் அவள் தந்தை நாங்கூர்வேள் அமர்ந்திருந்தார். இந்தக் கூட்டத்தில் அடியோடு ஒட்டாமல் தூரத்தில் இரும்பிடர்த்தலையார் இரும்பு வளையல்கள் போன்ற தமது சுருட்டை மயிர்களைத் தடவிய வண்ணம் ஆலோசனையிலிருந்தார். அங்கிருந்த ஒவ்வொருவர் முகத்திலும் போர் ஆவேசமிருந்ததோடு ஓரளவு அவநம்பிக்கையுமிருந்ததையும் பிரும்மானந்தர் கவனிக்கத் தவறாததால், அந்த அவநம்பிக்கைக்குக் காரணம் யாதென்று தெரியாது, "இனி ஆலோசனையைத் தொடரலாம்" என்று கூறி மன்னனுக்கு அப்புறத்திலிருந்த அல்லிமீது தமது கண்களை ஓட்டினார்.

பிரும்மானந்தரின் சிறு கண்களைச் சந்தித்த அல்லியின் பெரு விழிகள் சற்றே அப்புறம் திரும்பின. அவருடைய பார்வையிலிருந்த குற்றச்சாட்டை அல்லி நன்றாக அறிந்தாள். 'இளஞ்செழியன் புகாருக்கு வந்ததை என்னிடமா மறைத்தாய்?' என்ற கேள்வி திட்டமாக அவர் பார்வையிலிருப்பதை உணர்ந்த அல்லி பெரும் சங்கடத்துக்குள்ளானாளாகையால், அந்தச் சங்கடத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளக் கரிகாலனை நோக்கி, "இந்தப் பட்டுச் சீலையைப் பற்றி அடிகளையும் விளக்கம் கேட்பது நல்லதல்லவா?" என்றாள்.

"ஆம். அல்லி" என்று ஒப்புக் கொண்ட கரிகாலன் எதிரே மஞ்சத்தில் கிடந்த பட்டுச் சீலையைத் தன் கையி

லிருந்த குறுவாள் நுனியால் சுட்டிக்காட்டி, "அடிகள் இதைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும்" என்று பணிவுடன் கேட்டுக் கொண்டான்.

பாதி கிழிக்கப்பட்ட அந்தப் பட்டுச் சீலையை நீண்ட நேரம் தமது சின்னஞ் சிறு கண்களால் உற்று நோக்கிய பிரும்மானந்தர், அதன் ஒரு பகுதியிலிருந்த பெரும் சிவப்புப் புள்ளியைப் பார்த்ததும் மெள்ளப் புன்முறுவல் செய்து, "மன்னவா! இன்னொரு சிவப்புப் புள்ளி இருக்க வேண்டுமே இதில்? எங்கே?" என்று வினவினார்.

இதற்குக் கரிகாலன் பதில் சொல்லவில்லை. அல்லி இடைமறித்துக் கூறினாள்: "இது இன்னொரு பாதிச் சீலையில் இருக்கிறது அடிகளே" என்று.

"அப்படியா?" என்று அவளைப் பார்த்துக் கேட்ட பிரும்மானந்தர் மீண்டும் சீலையைக் கவனித்து, "மன்னவா! உங்களுக்குத் திட்டம் புரிகிறதல்லவா?" என்று வினவினார்.

"புரிகிறது. அதைப் படைத் தலைவர்களுக்கு விளக்கினேன். ஆனால் திட்டத்தில் குறைபாடுகள் ஏராளமாக இருக்கின்றன. இத்தகைய ஒரு திட்டத்தை நமது படைத் தலைவரா தயாரித்திருப்பார் என்று இவர்கள் ஆச்சரியப்படு கிறார்கள்" என்றான் கரிகாலன்.

"இதில் குறைபாடுகள் அதிகமில்லை மன்னவா!" என்றார் பிரும்மானந்தர் திட்டமாக.

"என்ன, குறைபாடுகள் அதிகமில்லையா?" இதைப் பெருங் குரலில் கேட்ட இரும்பிடர்த்தலையார் தனது ராட்சஸ சரீரத்துடன் மூலையிலிருந்து எழுந்து வந்து மஞ்சத்தருகில் நின்று கொண்டதன்றி, தமக்கு ஆசனம் கொடுக்க எழுந்த ஒரு படைத் தலைவனின் தோளைப் பிடித்து அமுக்கி உட்காரச் செய்து, "என்ன குறைபாடுகள் இல்லை இதில்?" என்று இடியென இரைந்தார்.

"என்ன இருக்கிறது என்று நான் அறியலாமா?" என்று சற்று விஷமத்துடன் வினவினார் அடிகள்.

"இந்தச் சிவப்புப் புள்ளி இருக்குமிடம் தெரியுமா அடி களுக்கு?" என்று சீற்றத்துடன் எழுந்தது மீண்டுமொரு கேள்வி இரும்பிடர்த்தலையாரிடமிருந்து.

"தமிழகத்தில் அடியவனுக்குத் தெரியாத இடமோ, மனிதரோ இல்லையென்பது அடியவன் துணிபு" என்றார் பிரும்மானந்தர் மேலுக்குப் பணிவாகவும், உள்ளே நகைத்துக் கொண்டும்.

"இந்த இடம் வெறும் பொட்டல்" என்று மேலும் சொன்னார் இரும்பிடர்த்தலையார்.

"ஆம்" என்றார் பிரும்மானந்தர்.

"இதனருகே வெண்ணியென்ற சிறு நகரம் இருக்கிறது."

"ஆமாம். அதனால்தான் இந்தச் சமவெளியை மக்கள் வெண்ணிப் பரந்தலை என்றழைக்கிறார்கள்."

"இங்கே நாம் எதிரிகளுடன் மோத வேண்டும் என்பது இளஞ்செழியன் திட்டம்."

"ஆமாம். சிவப்புப் புள்ளியிலிருந்தே அது தெரிகிறது. புள்ளி பெரிதாயிருப்பதிலிருந்து முக்கியமான பெரும் போர் இங்குதான் நிகழ வேண்டுமென்று படைத் தலைவர் நினைக் கிறார்."

இந்தச் சமயத்தில் இரும்பிடர்த்தலையார் பேச முற்படு முன்பு கரிகாலன் இடைமறித்து, "வெண்ணிப் பரந்தலையில் நாம் எதிரிகளுடன் மோதினால் வெற்றி சந்தேகம் அடிகளே!" என்றான்.

"ஏன் மன்னவா?" என்ற பிரும்மானந்தர் தமது கண்களை மன்னனை நோக்கித் திருப்பினார்.

"எதிரிகள் படை பலம் மிக அதிகம். நமது படை பலம் குறைவு" என்றான் கரிகாலன்.

"அதனால்?"

"எதிரியின் கண்களில் படும்படியாகப் பொட்டல் வெளியில் நமது படைகளை நிறுத்துவது விவேகமல்ல. இருங்கோவேளுடன் பதினைந்து வேளிர்களின் படைகள் இருக்கின்றன..." என்று ஏதோ சொல்லப் போன கரிகாலனை

இடைமறித்த நாங்கூர்வேள், "தவறு மன்னவா! இரு வேளிர்கள் விலகி நிற்கின்றனர். நான் தங்கள் பக்கமிருக்கிறேன். புகாரின் சிறையில் வாடும் மாரப்பவேளும் தங்கள் பக்கமிருக்கிறார்?" என்று சுட்டிக் காட்டினார்.

"உண்மை. இருப்பினும் உங்கள் சிற்றரசர்களும், படைகளும் இருங்கோவேளின் வசமிருக்கின்றன. ஆகவே பதினைந்து சிற்றரசுகளையும் சேர்த்துத்தான் கணக்கிட வேண்டும்" என்று நாங்கூர்வேளை நோக்கிக் கூறிய கரிகாலன் மீண்டும் அடிகளை நோக்கித் திரும்பி, "அடிகளே! பதினைந்து வேளிர்களின் படைகள், சோழர் படையின் ஒரு பகுதி, சேரபாண்டியன் பெரும் படைகள் இவையனைத்தும் திரண்டு வெண்ணிப் பரந்தலையில் சமுத்திரம் போல் நிற்கும். அந்தச் சமுத்திரத்திலிருந்து புரண்டுவரும் படை அலைகளைத் தேக்க நம்மிடமுள்ள ஐயாயிரம் யானைப்படையும், பத்தாயிரம் குதிரைப் படையும், இருபதினாயிரம் காலாட்படையும் போதுமா?" என்று வினவினான்.

"இவை மட்டுமிருந்தால் போதாது. நாம் படையெடுத்து விட்டோம் என்பதை அறிந்ததும் மக்கள் எழுந்து மன்னர் பக்கம் சேரும் கூட்டத்தையும் கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டாமா?" என்று பதிலுக்குக் கேட்டார் பிரும்மானந்தர்.

"போர்ப் பயிற்சியில்லாத மக்கள் கூட்டத்தை எதிரிப் படைகளுக்குப் பலிகொடுக்க நான் விரும்பவில்லை" என்றான் மன்னன்.

"உண்மைதான். எதிரிகளின் படைகளில் பாதிப்படை வைத்துக் கொண்டு அவர்களைப் பொட்டல் வெளியில் எதிர்ப்பது விவேகமல்லதான். ஆனால் படைத் தலைவர் இப்படி ஒரு பைத்தியக்காரத் திட்டத்தை வகுக்க மாட்டாரே. ஏன் வகுத்தார்? எதற்காக வெண்ணிப் பரந்தலையில் இந்தத் தமிழகத்தின் குருக்ஷேத்திரத்தை அமைக்கக் கருதுகிறார்?" என்று வெளிப்படையாகவே சொன்னார் அடிகள்.

"குருக்ஷேத்திரமா அடிகளே!" என்றாள் அல்லி வியப்புடன்.

"ஆம், அல்லி! மகாபாரதம் நடந்த இடம். அந்தப் போரைப் போலத்தான் இருக்கிறது இதுவும். இதுவும் பொட்டல் வெளி; அதுவும் பொட்டல் வெளி. அங்கும் அதர்மத்தின் சின்னமான கௌரவர்களின் படைபலம் அறத்தின் உருவமான தருமனுடைய படைகளைவிடப் பல அக்ரோணிகள் அதிகம். இங்கு மகாபாரதம் நடத்த விரும்புகின்றாரா படைத் தலைவர்? அப்படியானால் அங்கு போல் இங்கும் சேதம் அதிகமாகும். மிஞ்சுபவர் கொஞ்சமாயிருக்கும். அங்கு பாண்டவர்களைக் காக்கக் கண்ணன் இருந்தான். இங்கு யாரிருக்கிறார்கள்?" என்று அலுத்துக் கொண்ட பிரும்மானந்தர், "இருக்காது, இருக்காது. படைத் தலைவர் காரணமில்லாமல் போருக்கு இத்தகைய திட்டத்தை வகுத்திருக்கமாட்டார். இந்தச் சீலை பாதிதானே இருக்கிறது. மீதிப் பாதியில் விளக்கம் இருக்கும். அது எங்கே?" என்றார் கரிகாலனை நோக்கி.

இதற்கு அல்லியே பதில் சொன்னாள், "மீதிப் பாதியைப் படைத் தலைவரே வைத்துக் கொண்டிருக்கிறார்" என்று.

"நன்று நன்று! நினைத்தேன், நினைத்தேன்" என்று உற்சாகப்பட்டார் பிரும்மானந்தர்.

சமய சந்தர்ப்பம் தெரியாமல், எல்லோரும் கவலையுடனிருந்த நிலையில் அவர் அப்படி உற்சாகத்தைக் காட்டியது அனைவருக்கும் வேப்பங்காயாயிருந்தது. எப்பொழுதும் மலர்ந்த முகத்துடனிருக்கும் கரிகாலனின் அழகிய முகம் கூட சற்றுச் சுளித்தது. ஆனால் இரும்பிடர்த்தலையார் அப்படி எந்த அரைகுறையான ஆத்திரத்தையும் காட்டாமல் முழுப் பதட்டத்துடன் பேசினார்: 'எதற்காக இத்தனை சந்தோஷப் படுகிறீர்?" எனறு எரிந்து விழுந்தார்.

"காரணமில்லாமல் மகிழ்ச்சி கொள்வேனா?" என்று கேட்டார் பிரும்மானந்தர் குதூகலத்துடன்.

அவர் குதூகலம் இரும்பிடர்த்தலையாரின் கோபத்தை உச்ச நிலைக்குக் கொண்டு போயிற்று. "அந்தக் காரணத்தை நானறிய விரும்புகிறேன்" என்று கூவினார் அவர்.

"பாதிப் பட்டுச் சீலையைக் காரணமாகவே படைத் தலைவர் அனுப்பியிருக்கிறார்" என்றார் பிரும்மானந்தர்.

"ஏன்?"

"முழுச் சீலையை அனுப்பி எதிரிகள் கையில் சிக்கினால் திட்டத்தின் விவரம் அவர்களுக்குத் தெரிந்து விடும். அதை மறைக்கத்தான் சீலை கிழிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் அல்லியிடம் அவர் முழுத் திட்டத்தை விளக்கியிருக்க வேண்டுமே."

"அல்லி விளக்கம் தந்தாள்; அந்த விளக்கம் போதாது" என்றார் இரும்பிடர்த்தலையார்.

"அப்படியானால் காத்திருப்போம்" என்றார் பிரும்மானந்தர்.

"எதுவரை?"

"படைத்தலைவர் வரும்வரை!"

"வருவாரென்பது என்ன நிச்சயம்?"

"பாதிப் பட்டுச் சீலையை அனுப்பியிருக்கிறார். ஆகவே வரத் தவறமாட்டார்."

"போரில் தாமதம் தாக்குபவர்க்குப் பலவீனம் என்பதை அறிவீரல்லவா?" என்று மீண்டும் இரைந்தார் இரும்பிடர்த் தலையார்.

"அறிவேன்" என்று சாந்தமாகச் சொன்னார் பிரும்மானந்தர்.

"நானும் அறிவேன்" என்ற சொற்கள் பாசறை வாயிலி லிருந்து கிளம்பின. அனைவர் கண்களும் வாயிலை நோக்கித் திரும்பின. இத்தனை விவாதத்துக்கும் காரணமான இளஞ் செழியன் பூரண போர்க் கவசமணிந்தபடி வெகு கம்பீரமாக அந்த மந்திராலோசனை சபைக்குள் நுழைந்தான்.

109. இங்கே ஒரு குருக்ஷேத்திரம்!

தலைதவச் சென்று தண்பனை யெடுப்பி
வெண்பூக் கரும்பொடு செந்நெல் நீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராஅங் கலித்த கண்ணகன் பொய்கை
கொழுங்காற் புதவமொடு செருநதி நீடிச்
செருவும் வாவியும் மயங்கி நீரற்று...

(பட்டினப்பாலை 239–244)

வடவர் வாட, குடவர் கூம்ப,
தென்னவன் திறல்கெட, சீறி, மன்னர்
மன் எயில் கதுவும் மதனுடை நோன் தாள்,
மாத் தானை மற மொய்ம்பின்,
செங் கண்ணால் செயிர்த்து நோக்கி,
புன் பொதுவர் வழி பொன்ற
இருங்கோ வேள் மருங்கு சாய...

(பட்டினப்பாலை 276–282)

தமிழகத்தின் மாபெரும் புலவர்களால் வியந்து பாடப் பெற்றதும் சோணாட்டகத்தே விளைந்ததுமான வரலாற்று முதற்போரான வெண்ணிப் போரைப் பற்றி, பொருநராற்றுப் படையில் குறிப்பிடும் புலவர் முடத்தாமக் கண்ணியார், "ஓங்கிடுஞ் சென்னி மேம்மட மிலைந்த இருபெரு வேந்தரு மொருகளத்தவிய, வெண்ணித் தாக்கிய வெருவெரு நோன்றாள் கண்ணர் கண்ணிக் கரிகால் வளவன்" என்று ஓங்கிய தங்கள் தலைகளிலே தங்கள் தங்கள் மரபுக்கான பூக்களைச் சூடிய இருபெரு வேந்தரான பாண்டியனும் சேரனும் வெண்ணியாகிய ஒரே போர்க்களத்தில் அவிந்து போகக் கரிகாலன் பொருதான் என்று, பொதுப்படையாகப் பாண்டிய சேர மன்னர்கள் முறியடிக்கப்பட்ட கதையைச் சொல்லுகிறாரானாலும், பட்டினப் பாலையை இயற்றிய உருத்திரங் கண்ணனார் மட்டும் அந்தப் போர் நிகழ்ந்த

முறைகளையும் மற்ற விவரங்களையும் சற்று விரிவாகவே மேற்கண்ட வரிகளில் தெரிவிக்கின்றார்.

"தலைதவச் சென்று தண்பனையெடுப்பி' என்பதாலே, எதிரிகள் அரண்களை நோக்கிச் சென்று மருத நிலத்திலுள்ள குடிகளைக் கரிகாலன் முதலில் ஓட்டினானென்றும், 'வெண்பூக் கரும்பொடு செந்நெல் நீடி' என்பதாலே கரும்புத் தோட்டங்களையும், பயிர் பச்சைகளையும் அழித்தானென்றும், 'செருவும் வாவியும் மயங்கி நீரற்று' என்பதாலே, ஏரி குளம் குட்டை முதலிய நீர் நிலைகளை அழித்தானென்றும் உருத்திரங்கண்ணனார் விவரிக்கிறார். போருக்குப் பூர்வாங்கமான இந்த அழிவுத் தொழில்களைச் செய்த பின்பு, இருங்கோவேளுடன் இணைந்த வடநாட்டு வீரர்களை முறியடித்தன்றி, குடதிசைக் கோமானான சேரனும், தென்னவனான பாண்டியனும் திறன்கெடச் சமர் புரிந்து, இருங்கோவேள் 'மருங்கு சாய' அழிந்து போகவும் போரை முடித்தான் கரிகாலன் என்று தெளிவாகச் சொல்லுகிறார் பட்டினப் பாலையின் ஆசிரியர்.

கரிகாலன் பாசறையில் நடந்த மந்திராலோசனையின் போது நுழைந்த சோழர் படை உபதலைவனான இளஞ்செழியன் கூறிய போர் முறைதான் இது. ஆனால் அந்தப் போர் முறையை ஆரம்பத்தில் இரும்பிடர்த்தலையார் மட்டுமல்ல, மன்னனேகூட ஒப்புக் கொள்வது மிகக் கடினமாயிருந்தது. இளஞ்செழியனிடமிருக்கும் பாதிப்பட்டுச் சீலையில் மீதித் திட்டமிருக்கும் என்று நம்பிய கரிகாலனும், படைத்தலைவர்களும் அந்தத் திட்டம் மருத நிலத்துக் குடிகளை விரட்டவும், மக்கள் பயிர் பச்சைகளையும், நீர்நிலைகளையும் அழிக்கவும் வழிகாட்டும் என யாரும் நம்பாததால் அதற்கு முதலில் எதிர்ப்பு மிகக் கடினமாயிருந்தது. அப்படி ஏற்பட்ட எதிர்ப்பை எதிர் பார்த்தே வந்த இளஞ்செழியன், சந்தேகமும் சஞ்சலமும் நிரம்பிய உள்ளத்துடனும், வெளிக்கு மட்டும் புன்னகை பூத்த வதனத்துடனும் அன்று கரிகாலனின் பாசறைக்குள் நுழைந்

தான். அவன் நுழைந்தபோது கரிகாலனுக்கெதிரே மஞ்சத்தில் விரிந்து கிடந்த பட்டுச் சீலையைப் பற்றிய விவாதம் பலமாக நடந்து கொண்டிருந்ததால், அவர்கள் அபிப்பிராயங்கள் எந்தத் திக்கில் ஓடுகின்றன என்பதைக் கவனிக்கச் சில விநாடிகள் பாசறை வாயிலிலேயே நின்றான். 'வெண்ணிப் பரந்தலைப் பொட்டல் வெளியில் எதிரிகளின் பலமான படைகளை நமது சொற்பப் படைகளைக் கொண்டு எப்படி எதிர்க்க முடியும்?' என்று கரிகாலன் எழுப்பிய கேள்வியையும், 'படைத் தலைவர் வரும்வரை தாமதிப்போம்' என்று பிரும்மானந்தர் சொன்ன யோசனையையும், 'தாமதத்தால் தாக்குபவருக்குப் பலவீனம்' என்பதை இரும்பிடர்த்தலையார் சுட்டிக் காட்டியதையும் கேட்டுக் கொண்டு நின்ற இளஞ்செழியன், அதற்குமேல் தான் தாமதிப்பது சரியல்லவென்று தீர்மானித்து, 'அதை நானும் அறிவேன்' என்று சொல்லிக் கொண்டு அந்த மந்திராலோசனை சபையில் நுழைந்ததும், மன்னன், பிரும்மானந்தர் நீங்கலாக மற்றப் படைத் தலைவர்கள் அனைவரும் ஏன் அல்லியும் இரும்பிடர்த் தலையாரும் கூடத் தங்கள் ஆசனங்களிலிருந்து எழுந்து நின்றார்கள்.

அப்படிச் சோழ நாட்டுப் பெரும்படைத் தலைவர்களெல்லாம் தன்னை வணங்க எழுந்ததால், உள்ளம் பூரிக்கப் பெருமிதமடைந்த சோழர்படை உபதலைவனான இளஞ்செழியன், தன் தலைக் கவசத்தைக் கழற்றிக் கையில் பிடித்துக் கொண்டு மன்னனுக்கும் மற்றவர்களுக்கும் தலை தாழ்த்தி வணங்கிவிட்டு, "தமிழகம் திரும்பியதும் மன்னரைச் சந்தியாதது என் குற்றம். மன்னிக்க வேண்டும்" என்று மன்னனை நோக்கிச் சம்பிரதாயமான வார்த்தைகளையும் சொன்னான்.

கரிகாலன் சில வினாடிகள் அதற்குப் பதிலேதும் சொல்லாமல் படைத்தலைவன் முகத்தைத் தன் விழிகளால் கூர்ந்து கவனித்தான். பல நாடுகளில் சஞ்சரித்ததாலும், அங்கு பட்ட அவதிகளாலும் இளஞ்செழியன் முகம் சற்றே நிறம் மாறி

யிருந்தாலும், அவன் விழிகளின் கூர்மை பன்மடங்கு அதிகரித்திருந்ததையும், முகத்தில் முன்னைவிட ஒரு நிதானமும், திடமும் இருந்ததையும் கவனித்த மன்னன் எந்நாட்டவரையும் சமாளிக்கவல்ல ஒரு படைத் தலைவன் தனக்குக் கிடைத்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டானாகையால், "அரச காரியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் அரசனைக் காணாதது குற்றமல்ல படைத்தலைவரே. இதில் மன்னிப்புக்கு ஏதும் இடமில்லை" என்று பதில் சொன்னான்.

சின்ன மரியாதைகளிலும், அற்ப கௌரவத்திலும் நாட்டம் கொள்ளாமல் பெரிய விஷயங்களில் மட்டுமே கரிகாலன் புத்திசெல்வதைக் கண்ட இளஞ்செழியன், 'சோழ நாட்டின் பெருமையைப் பெரிதும் விஸ்தரிக்கக் கூடிய மன்னன் அதற்குக் கிடைத்து விட்டான்' என்று உள்ளூர உவகை கொண்டதன்றி, "மன்னிப்பதற்கு இடமில்லையென்று சொல்வது மன்னரின் தாராளத்தைக் காட்டுகிறது" என்று மீண்டும் சம்பிரதாயமாகப் பேசினான்.

மன்னனுக்கும் படைத்தலைவனுக்கும் நிகழ்ந்த இந்தச் சம்பிரதாயப் பேச்சு ஒரு மந்திராலோசனை சபைக்கு ஏற்றதேயென்றாலும், முன்னின்ற போரின் காரணமாக அதை ரசிக்கும் மனப்பான்மை மற்றப் படைத் தலைவர்களுக்கோ பிரும்மானந்தருக்கோ இல்லாததால், அவர்கள் பெரிதும் சங்கடப்பட்டு இருந்த இடத்தில் சிறிது அசைந்தார்கள். இரும்பிடர்த்தலையார் மட்டும் அத்தகைய சங்கடமேதுமில்லாமல், "மன்னர் முடிசூடியதும் உறையூர் கொலு மண்டபத்தில் சம்பிரதாயங்களை வைத்துக் கொள்வோம். இப்பொழுது போர்த் திட்டத்தைக் கவனிப்போம்" என்று இடியென முழங்கினார்.

இரும்பிடர்த்தலையார் கவலையால் அப்படி இரைந்ததைக் கேட்ட கரிகாலன், மற்றப் படைத்தலைவர்களையும் பிரும்மானந்தர், அல்லி இவர்களையும் உட்காரப் பணித்ததன்றி, காவலரை விளித்து இளஞ்செழியனுக்கும் ஓர் ஆசனம் கொண்டுவர உத்தரவிட்டான். காவலர் ஆசனம் கொண்டு

வந்ததும், பிரும்மானந்தருக்கும், மன்னனுக்கும் இடையே அமர்ந்த இளஞ்செழியன், இரும்பிடர்த்தலையார் மட்டும் உட்காராமல் பட்டுச்சீலை விரித்துக் கிடந்த மஞ்சத்துக்கெதிரே இடுப்பில் கைகொடுத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து,' "ஏன் தாங்களும் உட்காரலாமே?" என்று மரியாதையுடன் கூறினான்.

இரும்பிடர்த்தலையாரின் மனம் அப்பொழுது அந்த மரியாதையை ஏற்கும் நிலையில் இல்லாததால், "அவசியமில்லை. நின்றுகொண்டே பட்டுச் சீலையைக் கவனிக்கிறேன். இந்த நிலையில் சீலையிலுள்ள கோடுகள் நன்றாகத் தெரிகின்றன" என்று பதிலிறுத்தார்.

அதற்குமேல் ஏதும் பேசாத இளஞ்செழியன், தன் இடைக் கச்சையிலிருந்த மீதிப் பாதிப் பட்டுச் சீலையை எடுத்து எதிரே மஞ்சத்திலிருந்த பாதியுடன் அதை இணைத்தான். பிறகு யாருக்காவது சந்தேகம் வந்தால் இடங்களைச் சுட்டிக் காட்டி விளக்கத் தன் கச்சையிலிருந்த குறுவாளையும் எடுத்துத் தனக்கெதிரே மஞ்சத்தின் முகப்பில் வைத்துக் கொண்டான். ஆனால், கேள்விகள் கிளம்பச் சற்று நேரம் பிடித்திருந்ததால் தன் மஞ்சத்தில் நன்றாகச் சாய்ந்து கொண்டான் இளஞ்செழியன்.

ஒன்றாக இணைக்கப்பட்டதால், சச்சதுரமாகப் பூர்த்தியாகி மஞ்சத்தில் கிடந்த பட்டுச் சீலையின் மீது முப்பது கண்கள் நீண்ட நேரம் நிலைத்து நிற்கின்றன. சீலையை நோக்க நோக்க அந்தக் கண்களில் மட்டுமின்றி, கண்களைத் தாங்கி நின்ற முகங்களிலும், ஆச்சரியமும் கவலையும் சந்தேகமும் மாறிமாறித் தாண்டவமாடின. அதில் கண்ட திட்டம் முன்னைவிட நன்றாகப் புரிந்தது மன்னனுக்கும் மற்றவர்களுக்கும். திட்டம் புரிந்தது மட்டுமல்ல, துணிகரமான அந்தத் திட்டத்தில் அபாய நிலைகளும், நிரம்பிக் கிடப்பதைப் படைத்தலைவர்கள் கண்டார்கள். எல்லோரையும்விட இரும்பிடர்த்தலையாரே அபாய நிலைகளை நிரம்பக் கண்டாராகையால் முதல் கேள்வியை அவரே எழுப்பினார். "வெண்ணிப்

பரந்தலையில் எதிரிகளைச் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிறீர் படைத்தலைவரே! அந்தப் பெரும் சிவப்புப் புள்ளி அதைத்தானே குறிக்கிறது?" என்று வினவினார் கடுமையாக.

இளஞ்செழியன் சலனமற்ற தன் கண்களை அவரை நோக்கி உயர்த்தி, "ஆம், பிடர்த்தலையாரே! அதைத்தான் குறிக்கிறது" என்றான்.

பிடர்த்தலையார் ஆத்திரத்தால் சற்றே தொண்டையைக் கனைத்தார். "உறையூரிலிருந்து இது கிழக்கே எத்தனை காதம் தெரியுமா?" என்று வினவினார்.

"தெரியும். சுமார் நான்கு காத தூரம்" என்றான் இளஞ்செழியன்.

"இன்னும் ஒன்றரைக் காதம் கிழக்கே வந்தால் கடற்கரை இருக்கிறது" என்று சுட்டிக் காட்டினார் பிடர்த்தலையார்.

"ஆம், நாகையின் கடற்கரை."

"நிம்மதியாக உறையூரிலும் அதற்கு எதிரிலும் படைகளை அணிவகுத்து நிறுத்தி நம்மை எதிர்பார்த்து நிற்பான் இருங்கோவேள்."

"ஆம்."

"அவனுக்கு எட்டே காதத்தில் மேற்கே கருவூர் வஞ்சியில் பெருஞ்சேரலாதன் இருக்கிறான்."

"உண்மை."

"தெற்கே இருக்கிறான் தென்னவன் பாண்டியன்."

"அதனாலென்ன?"

"அந்த இருவரும் நமது படைகளைக் கடக்காமலே உறையூரை அடைய முடியும்."

"இதெல்லாம் தெரிந்த விஷயம்!"

"இது மட்டுமல்ல தெரிந்த விஷயம் படைத்தலைவரே, நாம் படையெடுக்கப் போகும் செய்தி இருங்கோவேளுக்கு எப்படியோ எட்டியிருக்கிறது. பெருஞ்சேரலாதனும், பாண்டியனும் பெரும்படைகளுடன் உறையூரை நோக்கிக் கிளம்பி

விட்டார்கள். இன்னும் நான்கு நாட்களில் உறையூர் பலமாகப் பாதுகாக்கப்படும். முன்னோடிப் படைகள் கிழக்கே இரண்டு காதம் வரை சோழர் தலைநகரைப் பாதுகாத்து நிற்கும்."

"பாதுகாத்து நிற்கட்டும்."

இதுவரை பொறுமையாயிருந்த மற்றப் படைத் தலைவர்கள் பொறுமையிழந்து முணுமுணுத்தார்கள். இரும்பிடர்த்தலையார் அறவே பொறுமையிழந்து, "இத்தனை பாதுகாப்பில், படைபலத்தில் இருக்கும் இருங்கோவேள் சகல படைகளுடன் எதற்காக வெண்ணிப் பொட்டலுக்கு வரவேண்டும்? அவன் அரண்களுக்குள்ளே இருந்தால் அவனை எப்படி அணுகுவதாக உத்தேசம்? இந்தச் சீலையில் என்ன வழி இருக்கிறது?" என்று இரைந்தார்.

மன்னன் இரும்பிடர்த்தலையாரைப் போல் பொறுமையை இழக்கவில்லையென்றாலும், சற்றுக் கவலையைக் காட்டினான். "ஆம் படைத் தலைவரே! நல்ல அரண்களுக்குப் பின்னால் பெரும் துணைவர்களுடன் இருப்பவன் எதற்காக அந்த அரண்களைவிட்டு இந்தப் பொட்டல் வெளிக்கு வரவேண்டும்?" என்று வினவினான் கரிகாலன்.

"அதற்குச் சீலையில் பதிலிருக்கிறது மன்னவா" என்று சாவதானமாகப் பதில் சொன்னான் இளஞ்செழியன்.

இதைக் கேட்டதும் மற்றப் படைத் தலைவர்கள் அனைவரும் சீலையை உற்றுக் கவனித்தும் ஏதும் விளங்காதால், இளஞ்செழியனை நோக்கவே, அவன் எதிரேயிருந்த குறுவாளைக் கையில் எடுத்துக் கொண்டு, "மன்னவா! பொன்னி நதிக்கரையிலுள்ள உறையூரிலும் அதற்கு முன்பாக இரண்டு காதத்திலும் அரண்களில் உள்ளவர்கள் தாங்களாக இந்தப் பொட்டல் வெளிக்கு வரமாட்டார்கள். வராவிட்டால் அவர்களை நாம் நமது படைபலத்தைக் கொண்டு அழிக்கவும் முடியாது. உறையூர்க் கோட்டையும், சேரமான் கருவூர் வஞ்சிக் கோட்டையும் மிகப் பலம் வாய்ந்தவை. தவிர, ஒன்று பொன்னி நதியாலும், இன்னொன்று ஆம்பிராவதியாலும்

பாதுகாக்கப்பட்டிருக்கிறன. நமது படை பலத்தைக் கொண்டு இந்தப் பெரு நதிகளைக் கடப்பதும் கோட்டைகளை வெற்றி கொள்வதும் முடியாத காரியம். ஆகவே, இந்த அரண்களி லிருந்து வெளியே எதிரிகளை இழுக்க வேண்டும்" என்று கூறிய இளஞ்செழியன் தனது குறுவாளைக் கொண்டு பட்டுச் சீலையில் இருந்த சிவப்புப் புள்ளியின் மேலேயிருந்த சில கரும்புள்ளிகளையும் கோடுகளையும் சுட்டிக் காட்டி, "இந்தப் பகுதி உறையூருக்கும் வெண்ணிக்கும் இடையேயுள்ள மருத நிலம்" என்றான்.

அதுவரைக் குழம்பிக் கிடந்த பிரும்மானந்தரின் கண்கள் திடீரெனப் பளிச்சிடுவதை மன்னருக்கு மறுபுறத்தில் அமர்ந்திருந்த அல்லி கண்டு, 'சரி சரி, பிரும்மானந்தருக்கும் திட்டம் விளங்கிவிட்டது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். "படைத்தலைவரே! நன்று, நன்று, மிக நன்று" என்று குதூகலப்பட்டார்.

அவர் குதூகலத்துக்குக் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாத இரும்பிடர்த்தலையார், "எது நன்று பிரும்மா னந்தரே?" என்று சீறினார்.

"படைத்தலைவரின் திட்டம்" என்றார் பிரும்மானந்தர் மந்தகாசத்துடன்.

"ஏன், திட்டம் புரிந்துவிட்டதோ?" என்று இகழ்ச்சி யுடன் கிளம்பியது இரும்பிடர்த்தலையார் கேள்வி.

"இந்த அடியவனுக்கு ஆண்டவன் சிறிது அறிவைக் கொடுத்திருக்கிறான்" என்று பிரும்மானந்தர் அடக்கமாகவும், விஷமமாகவும் பதில் சொன்னார்.

கரிகாலன் அவர்கள் இருவர்மீதும் திருப்பிய கூரிய விழிகள் அவர்கள் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. "படைத் தலைவரே திட்டத்தை விளக்கட்டும்" என்ற அவன் அதிகாரக் குரல் மற்றவர்களை மௌனத்தில் ஆழ்ந்திடச் செய்தது.

இளஞ்செழியன் தன் குறுவாளைக் கொண்டு பட்டுச் சீலைப் படத்திலுள்ள குறிகளுக்கு விளக்கம் கூறினான்:

"இதோ உறையூரிலிருந்து நான்கு காத துரத்திலிருக்கும் வெண்ணிக்குச் சற்று முன்பாகவே மருதநிலம் துவங்குகிறது. உறையூருக்கு அருகிலிருக்கும் காவிரியைத் தாண்டி ஒரு காதம் வந்துவிட்டால், மருத நிலத்திலுள்ள ஏரி, குளம், குட்டை ஆகிய நீர்நிலைகளைத் தவிரப் படகுகளுக்கும், மக்களுக்கும் நீர் கிடைக்கும் நதிகளோ, வாய்க்காலோ இல்லை."

"ஆம். உண்மை" என்று ஒப்புக் கொண்டான் மன்னன்.

"இதோ, இந்தக் கறுப்புக் புள்ளிகளும் கோடுகளும் எரிகளையும், குளங்களையும் குறிக்கின்றன. இதோ இந்தக் கோடுகள் கரும்புத் தோட்டங்கள், இவை நன்செய்ப் பயிர்கள். இந்த ஏரிகளின் கரைகளை உடைத்து நீரை வெளியிட்டு யானைகளின் உதவியால், பெரும் மரங்களையும், தழை களையும் குளங்களில் போட்டு நிரப்பினால் நீர்நிலைகளை அழிக்கலாம். கரும்புத் தோட்டங்களையும், இதர பயிர் பச்சைகளையும் யானைகளை விட்டு அழிக்கலாம். இதனால் மருத நிலத்துக் குடிகள் ஓடிவிடுவார்கள்" என்று சொல்லிக் கொண்டே போன இளஞ்செழியனை நோக்கி, "அதர்மம், இது அறப்போரல்ல" என்று பல குரல்கள் கிளம்பின.

"நான் அப்பொழுதே சொன்னேன்" என்றார் பிரும்மானந்தர்.

"என்ன சொன்னீர்கள் அடிகளே?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

"இது தமிழகத்துக் குருக்ஷேத்திரம் என்று."

"ஏன்?"

"முதலில் எதிரிகள் சைன்னியம் அதிகமாகவும் நமது சைன்னியம் குறைவாகவும் இருந்ததால் சொன்னேன். இப்பொழுது நீர் சொல்லும் முறைகளுக்கும் பாண்டவர்கள் தரப்பில் கையாளப்பட்ட முறைகளுக்கும் அதிக வித்தியா சத்தைக் காணோம்" என்றார் பிரும்மானந்தர்.

"பாண்டவர்கள் நீர் நிலைகளை அழிக்கவில்லை. பயிர் பச்சைகளையும் நாசம் செய்யவில்லை" என்றாள் அல்லி உணர்ச்சி பொங்க இளஞ்செழியனை வெறுப்புடன் நோக்கி.

"ஆனால் அல்லி, அங்கு பாண்டவர்கள் சிகண்டியை முன்னிருத்தி பீஷ்மரை வீழ்த்தினார்கள். அசுவத்தாமா இறந்தான் என்று பொய் சொல்லித் துரோணரைக் கொன்றார்கள். துரியோதனனை யுத்த தர்ம விரோதமாகத் தொடையில் அடித்துச் சாகச் செய்தார்கள். அந்த மாதிரி நாம் செய்ய வில்லை. அவர்களெல்லாம் போர்வீரர்கள். இங்கு நாம் தாக்கப்போவது முதலில் மருத நிலத்துக் குடிகளை" என்றார் பிரும்மானந்தர் இகழ்ச்சியுடன்.

இளஞ்செழியன் திட்டத்தை மன்னனும் ஆட்சேபித்தான். "படைத் தலைவரே! இந்த மாதிரி மறப்போர் புரிந்து நாம் முடிசூட இஷ்டப்படவில்லை" என்றான்.

இளஞ்செழியன் ஆசனத்திலிருந்து எழுந்து அந்த மந்திராலோசனை சபையிலிருந்த அனைவரையும் ஒருமுறை சுற்றி நோக்கினான். பிறகு உணர்ச்சி நிரம்பிய குரலில் சொன்னான்: "மன்னவா! படைத்தலைவர்களே! இந்த யுத்தத்தைக் குருக்ஷேத்திர யுத்தத்துக்கு ஒப்பிடுகிறார் பிரும்மானந்தர், அதைப் பற்றி நான் வெட்கப்படவில்லை. மகாபாரத யுத்தத்தை மறப்போர் என்று இதுவரை யாரும் கூறியதாகத் தெரியவில்லை. யுத்த தந்திரங்களையெல்லாம் அதர்மம் என்று வைத்துக் கொண்டால், உலகத்தில் யாரும் போரிட முடியாது. போர்ச் சாத்திரத்தில் சொல்லாத எதையும் நான் கூறவில்லை. நீர்நிலைகளையும், பயிர் பச்சைகளையும் அழிக்க நான் ஏன் கூறுகிறேன்? அழிவில் உள்ள ஆசையா? அல்ல அல்ல. நீர்நிலைகளை அழித்துப் பயிர் பச்சைகளை நாசம் செய்தால் தான் மருத நிலத்துக் குடிகளைப் போர் மூளும் இடத்திலிருந்து கிளப்ப முடியும். அவர்கள் உறையூர் சென்று இடும் கூக்குரலும் நீர்நிலைகள் அழிந்ததால் மருத நிலத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் யானை, குதிரைப் படைகள் நீரின்மையால் தவிப்பதைப் பற்றிப் படைத்தலைவர்கள் அனுப்பும் செய்திகளுமே, நம்மைத் தாக்க இருங்கோவேளைத் தூண்டும். அவன் அங்கு புறப்பட்டதும் வெண்ணிக்கு அருகிலுள்ள அவன் அரண்

களையும் நாம் தகர்ப்போம். இது எதிரிகளின் வருகையைத் துரிதப்படுத்தும். நாட்டு எல்லையில் விளையும் இந்த நாசத்தைத் தவிர்க்க வெண்ணிக்கு வரும் இருங்கோவேளை நமது படைகள் வெண்ணிப் பரந்தலையில் சந்திக்கும். வேறு வழியில்லை. வழியிருந்தால் சொல்லுங்கள். பெருஞ்சேரலாதனும், பாண்டியனும், பதினைந்து வேளிர் படையும் இணைந்து நிற்கும் பெருங் கூட்டத்தைக் கடந்து எப்படி உறையூரைத் தகர்ப்பதாக உத்தேசம்?"

இந்தக் கேள்வியைக் கேட்ட இளஞ்செழியன் சற்று நிதானித்தான். யாரும் பதில் சொல்லாதிருக்கவே அவனே பேசினான். "இருங்கோவேள் போன்ற நெறியற்றவனோடு நாம் போராடுகிறோமென்பதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். தவிர நமது படையைவிட நான்கு மடங்கு அதிகமான படைகளுடன் நாம் போராட வேண்டும் என்பதையும் மனத்தில் கொள்ளுங்கள். ஆகையால் அதில் போர்த் தந்திரம் மிகவும் அவசியம். நான் குடிகளைக் கொல்லச் சொல்ல வில்லை. மருத நிலத்தைவிட்டு ஓட்டவே சொல்லுகிறேன். மீண்டும் அவர்களுக்கு நாம் நிலத்தைக் கொடுக்கலாம். எதிரிப் படைகளுக்கு நீர் கிடைக்காதிருந்தால்தான் இருங்கோவேள் வெளிவருவான் என்பதற்காகவே அவற்றை உடைக்கச் சொல்கிறேன். மன்னர் முடிசூடிய பின்பு இந்த நீர்நிலைகளைக் கட்டலாம். காவிரிக்கும் அணை கட்டி நீர்க் கால்களை மக்களுக்கு நிரம்ப அளிக்கலாம். போர் நாசத்துக்காக ஏற்பட்டது. அதைச் செய்யத் தயங்க வேண்டாம். பிறகு அந்த நாசத்துக்குப் பரிகாரம் செய்வோம். இது பிரும்மானந்தர் சொன்னது போல் குருக்ஷேத்திரமாகவே இருக்கட்டும். ஆனால் அதற்குப்பின் ஏற்பட்ட நிலை இங்கு ஏற்படாது. கண்டிப்பாய் நாட்டின் வளம் சுரக்கும்."

இதைச் சொல்லி உட்கார்ந்த இளஞ்செழியனைச் சில வினாடிகள் யாரும் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. முடிவில் மன்னனே கேட்டான்: "வெண்ணிப் பரந்தலைக்கு எதிரிகளை இழுத்து விட்டால் வெற்றி நிச்சயமா?" என்று.

"நிச்சயம்" என்று உறுதி நிரம்பிய குரலில் கூறிய இளஞ்செழியன், அந்தப் போரின் விவரங்களையும் மிகத் தெளிவாக மெள்ள மெள்ள விளக்கலானான்.

110. கருட வியூகம்

வெண்ணிப் பரந்தலைக்கு இருங்கோவேளை இழுத்து விட்டால் வெற்றி நிச்சயம் என்று அத்தனை திட்டமாக இளஞ்செழியன் சொன்னது அந்தப் பாசறையிலிருந்த அனைவருக்குமே விசித்திரமாயிருந்ததானாலும், அதைப் பற்றி முதன் முதலாகப் பிரும்மானந்தரே சந்தேகம் கேட்க முற்பட்டு, "வெண்ணிப் பரந்தலைக்கு வரும் நமது படைகளை விட எதிரிகள் படை நான்கு மடங்கு பெரிது என்று நீங்களே ஒப்புக் கொள்ளும் போது நமது சிறு படையைக் கொண்டு அதை எப்படி முறியடிக்க முடியும்? போரிடும் இடமோ பொட்டல் வெளி. ஆகையால் மறைந்து நின்று போரிடுவதற்கும் வழியில்லை. நேர் எதிரில் நாம் மோதும் போது சேதம் நமக்குத்தானே அதிகமாகும்?" என்று வினவினார்.

"நேராக மோதினால் நமக்குத்தான் சேதம் அதிகமாகும்" என்று ஒப்புக் கொண்டான் படைத்தலைவன்.

"அப்படியானால் எப்படி மோதுவதாக உத்தேசம்?" என்று கேட்டார் பிரும்மானந்தர்.

"இந்தப் பட்டு சீலையைக் கொஞ்சம் சரியாகக் கவனியுங்கள் அடிகளே" என்று கூறிய இளஞ்செழியன், தன் குறுவாளால் அதில் கூட்டம் கூட்டமாயிருந்த புள்ளிகளைச் சுட்டிக்காட்டி "இந்தப் புள்ளிக் கூட்டங்கள் இருக்குமிடங்களைக் கவனியுங்கள். இந்த ஒவ்வொரு கூட்டமும் பெரும் தோப்புகளைக் குறிக்கின்றன" என்று சொல்லிவிட்டுச் சிறிது நேரம் பிரும்மானந்தரைக் கூர்ந்து நோக்கினான்.

பிரும்மானந்தர் தனது யானைக் கண்களைப் பட்டுச் சீலையின் மீது நீண்ட நேரம் நாட்டினார். இளஞ்செழியன் கூறிய புள்ளிக் கூட்டங்களை நன்றாக ஆராய்ந்த பின், "ஆம்

ஆம். இங்கு தோப்புகள் உண்டு. தோப்புகளெல்லாம் கடற்கரையோரமாகத்தான் இருக்கின்றன." "அடிகளே ஆனால், தொடர்ச்சியாக இல்லை. விட்டு விட்டு மரக் கூட்டங்கள் இருக்கின்றன. புகாரிலிருந்து கடற்கரையோரமாகத் தெற்கு நோக்கிக் கோடு இழுத்துப் பாருங்கள். முதலில் புகாரில் பெரும் தோப்புகள். அதை விட்டால் அடுத்த தோப்புகள் நாகையில், அதிலிருந்து கீழே வந்தால் இதோ வெண்ணிப் பரந்தலையிலிருந்து கிழக்கே அரைக்காதத்திலிருக்கும் கடற்கரையில் மற்றும் சில தோப்புகள், புகாரின் மரக்கூட்டம் நமக்குப் பயனில்லை. அதன் தோட்டங்களும், கோட்டையும் டைபீரியஸின் கைகளிலிருக்கின்றன..." என்று விவரித்துக் கொண்டும் போன இளஞ்செழியனை இடையே மடக்கிய பிரும்மானந்தர், "வெண்ணியில் இருங்கோவேளுடன் நாம் போரிடும்போது டைபீரியஸ் புகாரிலிருந்து பின்புறமாக வந்து தாக்கினால் என்ன செய்வதாக உத்தேசம்?" என்று வினவினார்.

"புகாரிலிருந்து டைபீரியஸ் கிளம்ப மாட்டான்" என்று சிறிதும் தயங்காமலே பதில் சொன்னான் படைத்தலைவன்.

"ஏன் டைபீரியஸ் நமது நண்பனா?" என்று ஏளனமாக விசாரித்தார் இரும்பிடர்த்தலையார்.

"இல்லை. நமது நண்பனில்லை அவன். ஆனால், இருங்கோவேளின் நண்பனுமில்லை" என்று படைத்தலைவன் பதில் சொன்னான்.

இதைக் கேட்ட அல்லி, ஆச்சரியம் ததும்பிய தன் விழிகளை அவனை நோக்கி உயர்த்தினாள். "உங்கள் கருத்தில் புதுமையிருக்கத்தான் செய்கிறது படைத்தலைவரே!" என்று இகழ்ச்சியொலி குரலில் தொனிக்கக் கூறினாள்.

இரும்பிடர்த்தலையாரையும் அல்லியையும் சில வினாடிகள் மாறி மாறி நோக்கிய இளஞ்செழியன் இறுதியில் கூறினான்: "உங்களனைவரையும் விட டைபீரியஸை நான் சற்று அதிகமாகவே அறிவேனென்று நினைக்கிறேன் மகாராணி! இந்த நாட்டிலுள்ள யாருக்கும் டைபீரியஸ் நண்ப

னல்ல. யவனர்களுக்கு ஒரு அரசை இங்கு நிறுவும் நோக்கத்துடன் ராணியுடன் இந்த நாட்டுக்கு வந்தவன். ஆகவே அது ஒன்றில் மட்டுமே கருத்துடையவன். யார் யார் இந்த இலட்சியம் நிறைவேற உதவுகிறார்களோ எந்தெந்தச் சந்தர்ப்பங்கள் உதவுகின்றனவோ, அந்த மனிதர்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமே அவன் உற்ற நண்பன். இப்பொழுது புகார் அவன் கைவசமிருக்கிறது. தமிழகத்தில் போர் நேர்ந்தால் புகாரை வலுப்படுத்தவும், அங்குள்ள யவனர்களை ஒன்று திரட்டித் திறமையான படையாக அமைத்துக் கொள்ளவுமே அவன் முயல்வான். போரின் ஆரம்பத்தில் அவன் தலைகாட்ட மாட்டான். இறுதியில் இருங்கோவேளுக்கு வெற்றி கிட்டும் போலிருந்தால் அவனுக்கு உதவுவதற்காக வருவதுபோல் யவனர்களுடன் வருவான். வெற்றி நமக்கென்று தோன்றினால் நம்மைப் புகாருக்குள் அனுமதிக்காதிருக்கச் சகல ஏற்பாடுகளையும் செய்வான்..."

இந்தச் சமயத்தில் மீண்டும் இடைமறித்த பிரும்மானந்தர், "ஒருவேளை அவன் இருங்கோவேளுக்கு உதவத் தீர்மானித்துப் பின்புறம் தாக்க வந்தால்?" என்று ஒரு கேள்வியை வீசினார்.

இதைக் கேட்ட விநாடி நேரத்தில் ஆசனத்தை விட்டெழுந்த இளஞ்செழியன் தன் குறுவாளை நாகைக்கு எதிரே பாய்ச்சி, "இங்கு இடையே நானிருக்கிறேன் பிரும்மானந்தரே! டைபீரியஸ் பின்புறம் தாக்குவதனால் என்னை முறியடித்த பிறகுதான் தாக்க வேண்டும்" என்று திட்டமாகவும் வேகமாகவும் பதில் கூறினான்.

அவன் ஆவேசத்தைக் கண்ட வேந்தன் ஒரு கணம் பிரமித்தான். அவன் உள்ளத்தே ஓடிய உணர்ச்சிகளைப் புரிந்து கொண்ட இரும்பிடர்த்தலையார், "நீர் அங்கே என்ன செய்கிறீர்?" என்று கேட்டார்.

ஆவேசத்தை அடக்கிக்கொண்ட படைத் தலைவன் அத்தனை பேருக்கும் பிரமிப்பை அளிக்கவல்ல பதிலைச் சொன்னான்: "படைத் தளம் அமைக்கிறேன். என் பாசறை

நாகையிலிருக்கிறது. நிலப் போரிலும், கடற் போரிலும் வல்ல பரதவர் ஆயிரம் பேரைத் தவிர, சுற்றுப்புற ஊர்களிலிருந்து சுமார் இரண்டாயிரம் வீரர்களும் அங்கு வந்து குவிந்திருக்கிறார்கள். தவிர அம்பு விசிறும் யவன யந்திரங்கள் அங்கு தயாராகிக் கொண்டிருக்கின்றன. வெகு வேகமாகச் சத்தமின்றிக் கடற்கரையோரமாக உருளக்கூடிய ஆயுத வண்டிகளும் தயாராகின்றன. இந்த ஏற்பாடுகளைக் கவனிக்க மரக்கலமோட்டும் கலையை எனக்குப் பயிலுவித்த குருவை நியமித்திருக்கிறேன்" என்று கூறினான் படைத்தலைவன்.

இத்தனை வல்லமையுள்ள படையொன்று நாகையில் உருவாவதை அறியாத மன்னனும் மற்றவர்களும் பிரமிப்படைந்து உட்கார்ந்திருந்தார்களென்றாலும், பிரும்மானந்தர் மட்டும் சற்றுச் சிரக் கம்பம் செய்து ஒரு சந்தேகம் கேட்டார்: "ஆமாம். அந்தக் குருநாதர் யாரென்று நானறியலாமா?" என்று.

"அலீமா" என்றான் படைத்தலைவன்.

"என்ன! அலீமாவா! பெண்ணா!" என்று வியப்புடன் வினவினார் அடிகள்.

"ஆம்."

"ஒரு பெண்ணிடமா இத்தனை பெரிய காரியத்தை ஒப்படைத்திருக்கிறீர்?"

"அதில் தவறென்ன?"

"தவறென்னவா?"

"ஆம் அடிகளே! போர்த் தொழிலைவிடக் கடுமையான உளவுத் தொழிலுக்கு இந்த நாட்டு மகாராணியையே நீங்கள் ஏவியிருக்க, கேவலம் படையை நிறுவும் ஒரு தொழிலுக்கு நான் ஒரு பெண்ணை நியமித்ததில் தவறென்ன?" என்று கேட்டுப் புன்முறுவல் கோட்டிய இளஞ்செழியன் கரிகாலனை நோக்கி, "மன்னவா! இந்தப் பெண் சாதாரணப் பெண்ணல்ல. மரக்கலப் போரிலும், படைகளையும் யந்திர வாகனங்களையும் அமைப்பதிலும் நிகரற்றவள். டைபீரியஸின் சீடப் பெண்" என்றும் சொன்னான்.

இரும்பிடர் தலையார் பிரமிப்புடன் கோபமும் கலந்து கொள்ளவே, "நன்று படைத் தலைவரே! எதிரியின் சீடப் பெண் உமக்குப் படை திரட்டுகிறாளா! அவள் நாளைக்கே உம்மை டைபீரியஸிடம் காட்டிக் கொடுக்க மாட்டாளென்று உமக்கு எப்படித் தெரியும்?" என்று சீறினார்.

"பிடர்த்தலையாரே! உங்கள் படைத்தலைவன் சிறு குழந்தையல்ல. போர்களைப் பாராதவனல்ல. மனிதர்களை எடை போடும் திறனற்றவனல்ல. பல விஷயங்களை யோசித்துத்தான் அலீமாவை அந்தப் பணிக்கு நியமித்திருக் கிறேன். இப்பொழுது அலீமா டைபீரியஸின் பரம விரோதி. அவன் ராணியைக் கட்டுக் காவலுடன் வைத்திருப்பதால் சீற்றமடைந்திருக்கிறாள். தவிர அவளை விட திறமையுடன் படையமைப்பவர் யாருமில்லை. வெண்ணிப் போரில் நீங்களே புரிந்து கொள்வீர்கள்" என்று சற்று உறுதியுடன் கூறிய இளஞ்செழியன் நின்றபடியே குனிந்து பட்டுச் சீலையில் இடங்களைத் தொட்டுக் காட்டி, "நாம் கவனிக்க வேண்டிய இடங்கள் மூன்று; வெண்ணி, நாகை, புகார். வெண்ணியில் எதிரிகளை முறியடிக்க வேண்டும். முறியடிக்கப்பட்டவர் களில் மீதியிருப்போரை வடமேற்காக வாகைப் பரந் தலைக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும்..." என்று விளக்க முற்பட்டவனை இடைமறித்த இரும்பிடர்த் தலையார், "ஏன் அனுமதிக்க வேண்டும்..." என்று கேட்டார்.

"நாம் வடமேற்கில் போய்விட்டோம் என்ற நினைப்பில் டைபீரியஸ் புகாரில் அசிரத்தையாயிருப்பான். நீங்கள் வாகை யில் மீதிப் படைகளை அழிக்கும் போது பிரும்மானந்தர் வாணகரையிலிருந்து புகாரைத் தாக்குவார். நான் மேற்குப் புறமிருந்து புகாருக்குள் நுழைவேன்'' என்று சுட்டிக் காட்டினான்.

"நீர்தான் வாணகரை யவனர்களை டைபீரியஸுடன் சேர்த்துவிட்டீரே'' என்று அலுத்துக் கொண்டார் பிரும்மானந்தர்.

"அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். குமரன் சென்னியும் பரதவ வல்லாளனும் மீதியுள்ள வீரர்களும் போதும் புகாரைத் தாக்க" என்று அவரை அடக்கிய இளஞ் செழியன், "புகாரை விடுங்கள். அதைக் கண்ணிமைக்கும் நேரத்தில் கைப்பற்றுகிறேன். இப்பொழுது நாட்டின் பெரும் போரைக் கவனிப்போம்" என்று கூறி மன்னனை நோக்கி, "மன்னவா! வெண்ணிப் பரந்தலை பொட்டல் வெளியா னாலும் அதன் இரு புறத்திலும் அரை காத தூரத்தில் தோப்புகள் இருக்கின்றன. அந்த இரு தோப்புகளையும் நினைவில் வைத்துக் கொண்டு இப்பொழுது வெண்ணியைக் கவனியுங்கள். இருங்கோவேள் உறையூரிலிருந்து வெண்ணிக்கு வந்தால், அங்குள்ள பொட்டல் வெளியையும் தன் படை பலத்தையும் பார்த்து சர்ப்ப வியூகமாகத்தான் படைகளை வகுப்பான். அவன் படைகள் வெண்ணிப் பரந்தலை முகப்பில் பெரிய சர்ப்பம் போல் வளைந்து கிடக்கும். அதன் தலை மேற்கேயுள்ள தோப்பு முனை வரைக்கும் போகலாம். வால் கிழக்கேயுள்ள தோப்பை எட்டலாம். இப்படி நீண்டு கிடக்கும் பெரும்படையில் நமது படை நுழைந்தால் பாம்பின் தலையும், வாலும் அசைந்து இணைந்து வளையமாகிவிடும். அந்தப் பாம்பு வளையத்துள் நமது படைகளை அழித்துவிட யோசிப்பான் இருங்கோவேள். அந்த சர்ப்ப வளையத்தில் நாம் அகப்பட்டால்..." என்று சொல்லிக் கொண்டே போனவனை இடையே மறித்த படைத்தலைவரொருவர் சொன்னார், "அழிவு நிச்சயம்" என்று.

"ஆம். சிக்கினால் அழிவு நிச்சயம்தான். ஆனால் போர் வியூகங்களில் சர்ப்ப வியூகம் ஒன்று மட்டுமேயிருந்தால் நாம் அழிவதும் திண்ணந்தான்! வேறு வியூகங்கள் உண்டு படைத் தலைவரே! கருட வியூகம் என ஒன்று உண்டு. சர்ப்பம் எத்தனை நீண்டதாயிருந்தாலும் அதைக் கருடன் அழிக்க முடியும். ஆகவே சர்ப்ப வியூகத்தை அழிக்க நாம் கருட வியூகத்தை அமைப்போம். கருடனின் இரண்டு இறகுகளும் வெண்ணிப் பரந்தலைக்கு அரையரை காத தூரத்திலிருக்கும்

பக்கத் தோப்புகளில் மறைந்து கிடக்கும். அதன் உடல் மட்டுமே எதிரிகளின் கண்ணுக்குத் தெரியும்படியாக நகரும். அதன் தலைப்பக்கத்தில் மூக்கிருக்கும். முதல் முனையில் இரும்பிடர்த்தலையார் இருந்து படைகளை நடத்துவார். சற்றுப் பின்னால் அதன் கழுத்திருக்குமிடத்தில் மன்னர் இருப்பார். மற்றப் படைகள் பின்புறமிருக்கும். இந்தப் படைகள் எதிரிப் படைகளை நோக்கி நேராகச் சென்றதும், சர்ப்ப வியூகத்தின் தலையும் வாலும் நமது படைகளை வளைக்க பக்கங்களில் நீண்டு இறங்கும். ஆனால் அவை நமது படைகளை வளைக்க முடியாது. தலையும் வாலும் இறங்கியதும் கிழக்குப்புற மேற்குப்புறத் தோப்புகளிலிருந்து முன்பே விரைந்து சரியான சமயத்தில் போர்க்களத்தை அடையும் புரவிப் படைகள் புயனெலப் பாம்பின் கழுத்தையும் வாலையும் பின்புறத்தில் வெட்டி விடும். இதனால் மூன்றாகப் பிரியும் எதிரிப் படைகள் தனித்தனியே அழிக்கப்படும். இப்படித் திடீர்த் தாக்குதலாலும், வியூகம் கலைந்ததாலும், குழம்பிப் போகும் படைகளில் யானைப் படைகள் மீது நமது யந்திர வண்டிகள் அம்புகளை வீசினால் எதிரிப்படைகளில் ஏற்படும் குழப்பமும் சேதமும் சொல்லி முடியாது. அந்தக் குழப்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதுதான் என் திட்டம். பட்டுச் சீலையில் மற்ற விவரங்கள் தெளிவாயிருக்கின்றன" என்று கூறிய இளஞ்செழியன் தன் மஞ்சத்தில் நன்றாகச் சாய்ந்து கொண்டான்.

இளஞ்செழியன் எத்தனை தூரம் திட்டத்தை அணு அணுவாக யோசித்து முடிவு செய்திருக்கிறானென்பதை அறிந்ததால் வியப்பில் மூழ்கிய மன்னனும் இரும்பிடர்த் தலையாரும் மற்றப் படைத்தலைவர்களும் சற்று நேரம் பேசாமலே இருந்தார்கள். அதைவிடச் சிறந்த திட்டத்தைத் தயாரிக்க முடியாதென்ற முடிவுக்கு வந்த இரும்பிடர்த் தலையார் அதை வாய் விட்டுப் பகிரங்கமாகவே சொல்லி தாம் முதலில் எழுப்பிய சந்தேகங்களுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். மன்னன் தன் பார்வையொன்றின் மூல

மாகவே நன்றியறிதலைத் தெரிவித்ததன்றி இளஞ்செழியன் தோளின் மேல் கையை வைத்துக் கொண்டு அவனையும் அல்லியையும் வெளியே அழைத்துக் கொண்டு சென்றான். வெளியே வந்ததும் இளஞ்செழியனைச் சிறிது நேரம் நோக்கிய மன்னன், "படைத் தலைவரே! மன்னனுக்கு ஒரு கடமையை முடித்துவிட்டீர்கள். ஆனால் முடிக்க வேண்டிய மற்றொரு கடமையிருக்கிறது" என்றான்.

கரிகாலன் சொல்வது என்னவென்று அறியாத படைத் தலைவன், "மன்னர் ஆணை எதுவானாலும் அதற்குப் பணியத் தயார்" என்று கூறினான்.

ஆனால் ஆணைக்குப் பணிவது அத்தனை எளிதாயில்லை. மன்னன் கட்டளை இடியென இறங்கியது படைத் தலைவன் தலையில். மன்னன் ஆணையை மீறவும் முடியாது. அதற்குப் பணிவதும் முடியாது. அந்த அசந்தர்ப்ப நிலையில் என்ன செய்வது என்று அறியாமல் கலங்கினான் சோழர் படை உபதலைவனான இளஞ்செழியன்.

111. பரிசுகள் இரண்டு

மன்னனிட்ட கட்டளையால் மதிமயங்கி நின்ற இளஞ்செழியன் என்ன பதில் சொல்வதென்று அறியாமல், தானும் மன்னனும் அல்லியும் நின்றிருந்த பாசறைப் பிரதேசத்தைச் சில வினாடிகள் சுற்றுமுற்றும் நோக்கினான். மன்னர் சபை மந்திராலோசனை, மத்தியானப் பொழுது முழுவதையும் ஆட்கொண்டு விட்டதால் கதிரவன் குடக்கடலில் சாய்ந்த வேளை அது. அந்த அந்திப் பொழுதில் குணவாயிற் கோட்டத்தின் அந்தக் காட்டுப் பகுதியில் மூலைக்கொரு பந்தம் எரியத் தொடங்கியதால் ஏற்பட்ட சொற்ப வெளிச்சத்தினாலும், மன்னர் கட்டளை விளைவித்த மனத் திகிலாலும் ரம்மியமாயிருந்த அந்தக் காட்டின் அழகைக்கூட ரசிக்கும் சக்தியை இழந்தான் படைத்தலைவன். அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தே

கும்பல் கும்பலாக மரங்களில் கட்டப்பட்டிருந்த குதிரைகளின் கனைப்புச் சத்தமும், யானைகள் மரக்கிளைகளை ஒடித்துத் தின்றதால் ஏற்பட்ட ஒலியும் கூடக் கர்ண கடூரமாயிருந்தது படைத் தலைவனுக்கு. மனமிருந்த நிலையில் ரசனைத் தன்மையை அடியோடு இழந்து கிடந்தான் படைத்தலைவன்.

அரசன் இட்ட கட்டளையும் போர்க் கவசம் அணிந்த பெரும் வீரன்போல் காட்சியளித்த அந்தக் காட்டுப் பகுதியும் சாதாரணக் காலமாயிருந்தால் பெரும் திருப்தியை அளித்திருக்கும் படைத் தலைவனுக்கு. ஆனால் சந்தர்ப்பங்களால் வகுக்கப்பட்ட அவன் வாழ்க்கைச் சிக்கல்கள் அரசன் ஆணையை வரவேற்கும் சக்தியையும், இயற்கையும் செயற்கை கலந்தளித்த காட்டுப் பகுதியின் ரம்மியக் காட்சியை அனுபவிக்கும் திறனையும் அறவே இழக்கவே செய்திருந்தன. ஆகவே மன்னன் முதன் முதலில் தன் கட்டளையைப் பிரஸ்தாபிக்கத் தொடங்கியதும் உற்சாகத்துடன் பதில் சொன்ன படைத் தலைவன் அந்தக் கட்டளையின் விவரத்தை அறிய அறியப் பெரும் சோகத்தையே அடைந்தான்.

"மன்னனுக்கு நீர் நிறைவேற்ற வேண்டிய கடமை இன்னொன்றிருக்கிறது" என்று கரிகாலன் கூறியதும், "மன்னர் கட்டளை எதுவானாலும் பணியத் தயார்" என்று பதில் சொன்ன இளஞ்செழியனை நோக்கி மன்னன் புன்முறுவல் செய்தான்.

அந்தப் புன்முறுவலைத் தவறாக அர்த்தம் செய்து கொண்ட படைத்தலைவன், "கட்டளையை நிறைவேற்று வேனா அல்லவா என்பதில் மன்னருக்குச் சந்தேகம் போலிருக்கிறது" என்று சற்று மனக்கஷ்டம் சொற்களில் பிரதிபலிக்கவும் கூறினான்.

மன்னன் புன்முறுவல் அவன் உதடுகளில் நன்றாக விகசித்தது. அப்படி விகசித்த புன்முறுவலைத் தொடர்ந்து வந்தன சொற்கள். "மன்னனை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறீர் படைத் தலைவரே!" என்று விஷமமாகப் பேசினான் மன்னன்.

"மன்னர் சொல்வது விளங்கவில்லை" என்றான் படைத் தலைவன்.

"ஏன் விளங்கவில்லை? உமக்கு இஷ்ட விரோதமான, கஷ்டமான பணியை மன்னன் இடமாட்டான் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறீர்."

"கஷ்டமான பணியை இட்டாலும் அதை நிறைவேற்றப் பின் வாங்கமாட்டேன்."

"இஷ்டமான பணியை இட்டால்?"

மன்னனின் இந்தக் கேள்வியைக் கேட்டதும் சற்றுச் சங்கடத்துக்குள்ளான படைத்தலைவன், "இதிலும் வியப்பில்லை. மக்களின் இஷ்டத்தை அறிந்து நடப்பது மன்னர் பரம்பரையின் வழக்கம். தங்கள் தந்தையும், அவர் தந்தையும், ஏன், சோழர்குலப் பரம்பரையே அப்படி நடந்ததாகத்தான் வரலாறு கூறுகிறது" என்றான்.

"நன்றாகப் புகழ்ந்து பேசக் கற்றுக் கொண்டு விட்டீர்கள், படைத்தலைவரே!" என்று கூறிச் சற்றே நகைத்தான் கரிகாலன்.

"சில சமயங்களில் உண்மை புகழ்ச்சியாகத் தோன்றலாம் மன்னவா, ஆனால் அதற்கு நான் பொறுப்பல்ல" என்று படைத்தலைவன் மேலும் தனது சொல்வன்மையைக் காட்டினான்.

இதைக் கேட்ட கரிகாலன் அம்பு விழிகளைச் சற்றே திருப்ப, பக்கத்தில் நின்ற அல்லியைப் பார்த்தான். "நமது முன்னோர்கள் அவர்களைப் பற்றிப் புகழ் பாடிய புலவர்களுக்குப் பெரும் பொருள்களை வெகுமதியாகக் கொடுத்திருக்கிறார்களல்லவா அல்லி!" என்று கேட்டான் மன்னன்.

மன்னன் எதற்காக அந்தக் கேள்வியைக் கேட்கிறான் என்பதை அறியாத அல்லி, "ஆம் மன்னவா!" என்று கூறி அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"சாதாரண புகழ்ச்சிக்கே நமது முன்னோர்கள் பரிசுப் பொருள்களைக் கொடுத்தார்கள். இப்பொழுது நாம் படைத் தலைவருக்கு இருவிதத்தில் கடமைப்பட்டிருக்கிறோம். ஒன்று அவர் இப்பொழுது நம்மைப்பற்றிப் புகழ் பாடியது. இன்னொன்று சற்று முன்பாகப் பாசறையில் இணையற்ற, நமக்கு வெற்றி தரக்கூடிய சிறந்த போர்த் திட்டத்தை வகுத்துத் தந்தது" என்று சுட்டிக் காட்டினான் மன்னன்.

"ஆம் ஆம்" என்றாள் அல்லி.

"ஆகவே அவருக்கு இரண்டுக்கும் நாம் பரிசுப் பொருள் வழங்க வேண்டும்."

"அதுதான் முறை."

"என்ன பொருள் இந்தப் பணிகளுக்கு ஈடாகும் சொல்."

"நன்றி ஒன்றுதான்."

"சே, சே! நன்றியா! வெறும் வார்த்தை, லாபமற்றது!"

"அதற்கு ஈடாக நாம் வேறெதைக் கொடுக்க முடியும்?"

"அதற்கு ஈடா! அந்த ஈட்டைவிடப் பெரும் பரிசு வைத்திருக்கிறேன்."

"எங்கே வைத்திருக்கிறீர்கள் அந்தப் பரிசை?"

"அதோ அங்கே" என்று சற்று எட்ட இருந்த குகையைக் காட்டி நகைத்தான் மன்னன்.

மன்னன் புத்தியைக் கண்டு அல்லி எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தாள். அந்த மகிழ்ச்சி வெள்ளத்தில், "பூவழகியா?" என்றும் கூறினாள்.

"ஆம் அல்லி!" என்றான் மன்னன் சிரித்துக் கொண்டே.

"அவளை நீங்களென்ன படைத்தலைவருக்கு அளிப்பது? அவள்தான் அவருக்கு ஏற்கெனவே சொந்த மாயிற்றே!" என்றாள் அல்லி புன்முறுவல் செய்து.

"நான் அனுமதிக்கும்வரை அவளிடம் படைத்தலைவர் அணுக முடியாது."

"ஏனாம்?"

"ஒரு பெண்ணை அணுக அவள் தந்தை அனுமதிக்க வேண்டும்."

"மாரப்பவேள்தான் புகாரில் சிறையிலிருக்கிறாரே!"

"ஆகையால் அவள் சகோதரனின் அனுமதி வேண்டும்."

அப்பொழுதுதான் மன்னன் மனப் போக்கைப் புரிந்து கொண்ட அல்லி, பகிரங்கமாக நகைத்தாள். மன்னன் கண்டிப்புடன் அவளை நோக்கி, "இதில் நகைப்பிற்கு ஏது மில்லை அல்லி! நீ யாரை நினைத்து நகைக்கிறாயோ அவள் சோழ நாட்டு மன்னன் சகோதரி. நான் உறையூர் அரியணை யில் உட்காரும் போது அரியணைக்கு அருகேயுள்ள முதல் ஸ்தானத்தில் என் சகோதரி உட்காருவாள். படைத்தலை வர்கள் அவள் காலில் வணங்குவதைக் காணப்போகிறாய்" என்றான்.

"இந்த உபதலைவர் கூடவா?" என்று கேட்ட அல்லி நகைத்தாள், படைத்தலைவனை நோக்கி.

படைத்தலைவன் அவ்விருவர் சம்பாஷணையில் கலந்து கொள்ளாமல் திக்பிரமை பிடித்து நின்றான். கருவூர் வஞ்சியில் பாழடைந்த மாளிகையில் தீயால் வெந்த திருமா வளவன் காலுக்குப் பூவழகி செம்பருத்திச் சாறு பிழிந்து பச்சிலை வைத்துக் கட்டிச் சிகிச்சை செய்ததும் அன்றே கரிகாலன் அவளை சகோதரியாக வரித்ததும் அவன் கண் முன்பு எழுந்தன. பழைய கால அந்தச் சம்பவங்கள் எத்தனை விசித்திரமாக, எத்தனை வேகமாக தன் வாழ்க்கையில் மோதுகின்றன என்பதை நினைத்துத் திகிலுடன் வியப்பும் அடைந்தான். பூவழகிக்கு மன்னன் சகோதரி ஸ்தானத்தை அளித்துவிட்டதால், அரசகுலப் பெண்மணிகளின் இடத்தை அவள் அடைகிறானென்பதையும் அவளைத் தனக்குப் பரிசாகத் தரக் கரிகாலன் ஒப்புவதால், அதற்காக ஒரு சிற்றரசும் தனக்குக் கிடைக்கும் என்பதையும் உணர்ந்த இளஞ் செழியன், தான் ராணிக்குக் கொடுத்த வாக்கையும்

நினைத்துப் பார்த்துத் தானிருக்கும் தர்மசங்கடமான நிலைமையை எண்ணி ஏங்கினான்.

அவன் ஏக்கத்தில் பெரும் அம்புகள் போல் நுழைந்தன மன்னனின் அடுத்த சொற்கள், "படைத் தலைவரே! ஆம், நீர் நமது படைகளில் ஒரு உபதலைவரானாலும் உம்மைப் படைத் தலைவர் என்றே நீண்ட நாட்களாக அழைத்து வருகிறோம். இன்று நமது மந்திராலோசனையில் பங்கு கொண்ட படைத் தலைவர்கள் உம்மைவிட வயதில் பெரிதும் மூத்தவர்கள். என் தந்தையிடம் நீண்ட நாள் பணி செய்தவர்கள், இருப்பினும் நீர் அவர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவரல்ல, ஏன், மேம்பட்டவர் என்று கூடக் கூறலாம். வயதில் இளைஞரா யிருப்பதால்தான் நீர் இன்னும் உபதலைவராகக் கருதப்படு கிறீர். ஆனால் நீர் மன்னனுக்கு மைத்துனனாகும்போது வயதின் சிரமம் உடைந்து போகிறது. குலத்தின் சிரமம், அதன் அந்தஸ்து அனைத்தும் உம்மைக் கவ்விக் கொள்கின்றன. ஆகவே இதோ ஆணையிடுகிறேன் உபதலைவரே! இன்று முதல் நீர் என் சகோதரியின் மணாளனாகக் கருதப்படுவீர். இந்தப் போர் முடிந்த சில நாட்களில் உமது திருமணம் உறையூரில் நடக்கும். இன்றுவரை நீர் பெயரில் உபதலைவர். உண்மையில் பிரதான படைத் தலைவர். உமது திருமணம் முடிந்ததும் நீர் பெயரிலும் அந்தஸ்திலும் சோழர் படை களின் பிரதம சேனாதிபதி. ஆகவே, செல்லும் அந்தக் குகைக்கு உம்மை நினைத்து நினைத்து வாடிக் கொண்டிருக்கும் என் சகோதரிக்குத் தைரியம் சொல்லி வாரும். போர் முடிந்ததும் உன்னை மணப்பேன் என்று உறுதி கூறிவிட்டு வாரும். ஏன் தயங்குகிறீர்? செல்லும். என் சகோதரியை நீர் மணக்க வேண்டுமென்பது என் கட்டளை. இது நான் உமக்களிக்கும் பரிசு. நீர் ஆயிரம் போர்களில் எனக்கு வெற்றியைச் சம்பாதித்துக் கொடுத்தாலும் இந்தப் பரிசுக்கு இணையாகாது படைத் தலைவரே" என்று ஆவேசத்துடனும், பூவழகியின் நிலையை எண்ணியதால் உணர்ச்சி ஊசிமுனையில் நிற்கக் கொதித்துப் பேசினான் மன்னன்.

உணர்ச்சிப் பெருக்கால் மன்னன் உதடுகளிலிருந்து உதிர்ந்த சொற்களைக் கேட்டுக்கொண்டு பிரமை பிடித்து நின்ற படைத் தலைவனைக் கரிகாலன் விழிகள் ஆச்சரியத் துடன் சில வினாடிகள் நோக்கின. "படைத் தலைவர் ஏன் மலைக்கிறார் அல்லி? கரும்பு தின்ன அவருக்குக் கூலி வேண்டும் போலிருக்கிறது" என்று நகைக்கவும் செய்தான் பிறகு, "அல்லி, வா, நாம் போவோம், படைத் தலைவருக்கும் அந்தக் குகைக்கும் இடையே நாம் நிற்பது சரியல்ல" என்று கூறிவிட்டு, "படைத் தலைவரே! என் சகோதரியின் துயரத்தைத் துடையும். அவள் கண்களில் நீர் சிந்தினால் என் ரத்தத்தைச் சிந்துவது போலாகும். பதில் ரத்தம் சிந்த என் வாள் தயங்காது. அவளுக்குத் துரோகம் செய்வது எனக்குத் துரோகம் செய்வது போலாகும்" என்று பரிகாசமாக மிரட்டிய மன்னன், அல்லியை அழைத்துக் கொண்டு மற்றொரு குகையை நோக்கிச் சென்றான்.

படைத் தலைவன் மட்டும் நீண்ட நேரம் இருந்த இடத்தைவிட்டு அசையவே இல்லை. அவனுக்கு உலகமே சுழல்வது போலிருந்தது. 'பூவழகியின் வாழ்க்கையை வளப் படுத்த மன்னன் உறுதி கொண்டிருக்கிறான். ஆனால், ராணிக்கு நான் கொடுத்த வாக்கு குறுக்கே நிற்கிறது. ராணி யின் உதவியில்லாவிட்டால் இந்தப் போர் வெற்றி யடையாது. டைபீரியஸ் புகாரைவிட்டு வெளியேறாமலும், சோழர் படை களைப் பின்புறம் தாக்காமலும் டைபீரியஸைப் புகாரிலேயே இருத்திக் கொள்ளக் கூடியவள் ராணி ஒருத்திதான். தவிர, வீனஸ் விழாவின்போது தந்திரத்தால் புகாரை யவனர் கைகளிலிருந்து மீட்கக் கூடியவளும் அவள்தான். அந்த முயற்சி எத்தனை அபாயமானது! எத்தனை பயங்கரமானது! அதற்கும் ஒப்புக் கொண்டாளே ராணி! எதற்காக? என்னை மணக்க. நாட்டு நன்மையை முன்னிட்டு அவள் செய்யும் தியாகத்துக்கு என்னைப் பரிசாகக் கொடுக்க நான் ஒப்புக் கொண்டேன். ஆனால் அதே நாட்டுப் பணிக்காக மன்னர் இங்கு வலுக்கட்டாயமாக மற்றொரு பரிசை அளிக்கிறார்.

என்ன தர்ம சங்கடம்! ராணிக்கு வாக்குக் கொடுத்து விட்டேன், அதை மீற முடியாது. இங்கு மன்னர் ஆணையிட்டிருக்கிறார்; இதையும் மீற முடியாது. எதைச் செய்வேன்?' என்று தனக்குள்ளேயே நினைந்து நினைந்து நீண்ட நேரம் குழம்பினான். எத்தனை குழம்பியும் எத்தனை கேள்வியையும் விடைகளையும் மனத்திற்குள் எழுப்பியும் முடிவு காணாமல் தத்தளித்தான் இளஞ்செழியன். இந்த இரு பெண்களுக்கிடையில் தான் அகப்பட்டுத் தத்தளிக்கும் தத்தளிப்பு, தனக்குக் கொள்ளைக்காரர்களிடமோ அடிமை வர்த்தகர்களிடமோ அந்த ராட்சசன் இலி-ஆஸுவிடமோ ஏற்படவில்லையென்பதை நினைத்து, 'அவற்றை எல்லாம்விட எத்தனை பயங்கரமான நிலை இது!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு பெருமூச்செறிந்தான். வாழ்க்கையின் வெள்ளச் சுழல்கள் தன்னை எங்கெங்கோ கொண்டு செருக முற்படுவதை உணர்ந்ததால் அவன் உள்ளம் சொல்லவொண்ணா உணர்ச்சி அலைகளுக்கு இடம் கொடுத்தது. அந்த உணர்ச்சி அலைகளில் புரண்டுகொண்டே ஏதோ உயிரற்ற சடலம் போல் அடிகளை மெல்ல மெல்ல எடுத்து வைத்து, பூவழகியிருந்த குகையை நோக்கி நகர்ந்தான்.

'நிலைமையைப் பூவழகிக்கு எடுத்துச் சொன்னால் அவள் உணர்ந்து கொள்வாள். அவள் காதல் வலிமை எதையும் தாங்கும் சக்தி வாய்ந்தது' என்று தன்னை மெள்ள மெள்ளத் தைரியப்படுத்திக் கொண்டாலும் அந்தத் தைரியம் அடுத்த வினாடி தளர்ந்து போவதை எண்ணி அஞ்சினான். அந்த அச்சத்துடன் பூவழகியின் குகையை அடைந்த இளஞ்செழியன் குகைக்குள் நுழைந்தான். குகையின் ஒரு மூலையில் நின்றிருந்த பூவழகி காலடி ஓசை கேட்டுச் சரேலெனத் திரும்பினாள். அங்கிருந்த தூண்டா விளக்கின் வெளிச்சம் அவள் முகத்திலும் உடலிலும் பூரணமாக விழுந்தது. அவள் நிலையைக் கண்ட படைத் தலைவனின் கொஞ்சநஞ்ச தைரியமும் காற்றில் பறந்தது. உள்ளத்தே திகில் மூண்டது.

அவனை ஏறெடுத்து நோக்கிய பூவழகியின் கண்கள் ஒரு வருஷ காலத்தின் கதையை அப்படியே அவிழ்த்துக் கொட்டின.

112. வாழ்வின் சந்தர்ப்பங்கள்

குகையின் ஒரு கோடியிலிருந்த விளக்கின் பக்கத்தில் நின்று வாயிற்புறம் காலடி ஓசை கேட்டதால் சற்றே திரும்பித் தன் பூவிழிகளை உயர்த்திய பூவழகி, வாயிலுக்கருகே நின்ற படைத் தலைவனைக் கண்டதும் சில வினாடிகள் அவன் இதயத்தையே ஊடுருவி விடுபவள்போல் பார்த்துவிட்டு மீண்டும் தன் மலர்க் கண்களை மண்ணிலே தாழ்த்தினாள். அந்த ஒரு பார்வையே படைத் தலைவன் உடலை ஓர் உலுக்கு உலுக்கியதென்றால், அவள் உடலிருந்த நிலை அவன் உயிரையே உருக்கிவிடும்போல் மனத்தைச் சுட்டெரிக்கத் தொடங்கியது.

தீப ஒளியின் பக்கத்தில் தனக்கென்றே உருவெடுத்த வானத்தின் மின்னல் கொடியென நின்ற பூவழகியின் உடல் மிகவும் இளைத்திருப்பதையும், விளக்கின் ஒளி விழுந்த இடங்கள் சற்றே வெளுத்து அவள் பலவீன நிலையை நன்றாக எடுத்துக் காட்டுவதையும் கண்ட இளஞ்செழியன், அப்படியே திகைத்துச் சில வினாடிகள் நின்றுவிட்டான். சுமார் ஓராண்டுக்கு முன்பு பிரும்மானந்தர் மடத்தில் யவன ராணியுடன் சென்று தான் பார்த்த பூவழகிக்கும் அன்று அந்தக் குகையில் நின்ற பூவழகிக்கும் இருந்த வித்தியாசத்தை எண்ணிப் பார்த்த படைத்தலைவன் கல்லாய்ச் சமைந்தான். கடைசல் பிடித்த பழம் தந்தம்போல் செழுமையுடனிருந்த அவள் கைகளும், கபோலங்களும், அந்தச் செழுமையும் செழுமையின் விளைவாகத் தெரிந்த அந்தப் பொன்னவிர் நிறத்தையும் இழந்து கிடந்தன. முன்னறிவிப்பின்றிப் படைத் தலைவர் குகைக்குள் நுழைந்ததால் அவள் அழகிய கன்னங்களில் அன்றும் சிவப்பு

தட்டத்தான் செய்தது. ஆனால் அந்தப் பழைய குங்குமச் சிவப்பல்ல. பலவீனத்திலும் உள்ளத்தின் உணர்ச்சிகள் உந்தியதால் திடீரெனப் பாய்ந்த ரத்தத்தின் அற்பச் சிவப்பு. சில வினாடிகளே அவனை நோக்கிய கண்களில் தெரிந்த கவலை ஓரளவு வெளுத்துக் கிடந்த அவள் வதனத்திலும் படர்ந்து கிடந்தது.

அத்தனை கவலையிலும் இளைப்பிலும், அவள் முகத்தில் தெரிந்த கற்பின் தெய்வீக ஒளி அவளை வானத்திலிருந்து இறங்கிய தேவதைபோல் விளங்கச் செய்வதைக் கண்ட படைத் தலைவன் பலவீனம் வினாடிக்கு வினாடி அதிகமாகத் தொடங்கியது. தனக்காகவே அவள் தன் உயிரைப் பிடித்துக் கொண்டு ஜீவித்திருக்கிறாளென்பதை அவளைப் பார்த்த மாத்திரத்தில் அறிந்துகொண்ட இளஞ்செழியன் அவளிடம் எப்படிப் பேசுவது, என்ன பேசுவது, என்பதை அறியாமல் திணறினான். அவன் திணறலை அறிந்ததுபோல் அந்தக் குகை அறைக்குள்ளே பாறையை உடைத்துக் கொண்டு ஓடிய மரக்கிளையில் உட்கார்ந்திருந்த பச்சைக்கிளி இருமுறை பரிகாசமாகக் கூவியது. அந்தக் கூவலைக் கேட்ட பிறகே அப்படியொரு பட்சி அந்தக் குகையிலிருப்பதை உணர்ந்த இளஞ்செழியன், அந்தப் பச்சைக் கிளியையும் நோக்கி, அதிலிருந்து சற்றுத் தூரத்தே நின்ற வேளிர்குலப் பைங்கிளியையும் நோக்கினான்.

எதை நோக்கியும், குகையைப் பல முறை சுற்றிப் பார்த்தும் சாந்தியில்லா மனதுடன் நின்றான் படைத் தலைவன். பூவழகியும் ஏதும் பேசாமலே நின்றாள். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்பது தான் பழமொழி. பேச வேண்டியதில்லைதான். ஆனால் பேச வேண்டாத அந்த நிலை வேறு. காதலர்கள் நீண்ட நாள் பிரிந்து மகிழ்ச்சியுடன் கூடும்போது பேச்சு அர்த்தமற்றதாகிறது. செயல் அர்த்தமுள்ளதாகிறது. விபரீத மனோ நிலையுடன் வந்திருக்கும் படைத் தலைவனும், அவனை எதிர்பார்த்து உருகி நின்ற பூவழகியும்

பேசாதிருந்த நிலை அந்தப் பழமொழி கூறும் இன்ப நிலை அல்ல. இதில் பேச்சுக்கும், செயலுக்கும் இடமில்லாத உணர்ச்சிகள் வறண்டு கிடந்த விபரீத நிலை.

ஆகவே, அந்த இருவர் மௌனமும் இருவருக்கும் பெரு நரகமாயிருந்தது. இருவரும் இருந்த இடத்தைவிட்டு நகராமல் நீண்ட நேரம் நின்றிருந்தார்கள். அந்த மௌன நிலையைச் சகிக்க மாட்டாத படைத்தலைவனே மெள்ளத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "பூவழகி!" என்று மெள்ளக்குரல் கொடுத்தான்.

அமுதத்தாலேயே அபிஷேகம் செய்தால்கூடக் கிடைக்காத மகிழ்ச்சியை அந்த ஓர் அழைப்பிலே பெற்றாள் பூவழகி. தான் விரும்பும் ஆடவன் வாயிலிருந்து அன்புடன் புறப்படும் தன் பெயரைவிட உயர்ந்த ஒரு சொல் உலகத்தில் இருக்கமுடியாதென்று உணர்ந்த பூவழகி, வெட்கத்தாலும் மகிழ்ச்சியாலும் பதில் சொல்லத் திராணியற்றவளாகி ஒரு 'உம்' மாத்திரம் கொட்டினாள்,

அந்த 'உம்' இன்பமான இசை நாதம் போல அந்தக் குகையை ஊடுருவியது. பல நாட்களுக்கு முன்பு கேட்ட அந்த ஒலி காதில் விழுந்ததும் புளங்காங்கிதமும், தான் சொல்ல வந்திருக்கும் சேதியின் தன்மையை நினைத்தால் துக்கமும் ஒருங்கே அடைந்த இளஞ்செழியன் பதிலுக்குப் பெருமூச் செறிந்தான். பிறகு மெள்ளச் சமாளித்துக் கொண்டு, "நீ இங்கிருப்பதாக மன்னர் சொன்னார்" என்றான் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக.

மீண்டும் பதில் சப்தமாகத்தான் வந்தது, "ஊஹூம்" என்றாள் பூவழகி.

"தமிழகத்தில் போர் மூளப் போகிறது" என்று வேறு எதையோ ஆரம்பித்தான் இளஞ்செழியன். திடீரென்று சம்பாஷணை வேறு மார்க்கத்தில் திரும்பியதால் உணர்ச்சிகளைத் திரும்பப் பெற்ற பூவழகி படைத் தலைவனை நன்றாக

ஏறெடுத்துப் பார்த்தாள். தன்னுடன் அவன் என்ன பேசுவான் என்று எதிர்பார்த்தாளோ அந்தப் பேச்சு ஏதுமில்லாமல், தன் உடல் நிலையைப் பற்றிக்கூட ஒரு வார்த்தை கேட்காமல் இளஞ்செழியன் போரைப் பற்றிப் பேசுவதால் ஏமாற்ற மடைந்த பூவழகி, அந்த ஏமாற்றத்தைக் கண்களிலும் காட்டினாள். இருப்பினும் பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக, "ஆம், மூளப்போகிறது" என்றாள்.

"அது சம்பந்தமாகத்தான் மன்னரைக் காண வந்தேன்" என்று படைத் தலைவன் மீண்டும் சொன்னான்.

இந்த வார்த்தைகள் சுரீலெனத் தைத்தன பூவழகியின் இதயத்தில், 'அப்படியானால் இவர் என்னைப் பார்க்க வரவில்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு துன்பப் பெருமூச்சு விட்டாள். பிறகு ஏதோ வேண்டா வெறுப்பாக, "அப்படியா!" என்று பதிலும் சொல்லி வைத்தாள்.

"ஆம் பூவழகி! பெரும் போர் மூளப் போகிறது. எதிரிகள் படை பலம் அதிகம். நம் படை பலத்தைவிட நான்கு மடங்கு அதிகம்" என்றான் படைத் தலைவன்.

"அப்படித்தான் கேள்விப்பட்டேன்" என்று பூவழகி முணுமுணுத்தாள்.

"சிறு படையை வைத்துக்கொண்டு பெரும் படையை முறியடிப்பது சுலபமா?"

"இல்லை."

"அதை உத்தேசித்துத்தான் ஒரு போர்த் திட்டம் தயாரித்தேன்."

"ஓகோ!"

"அதற்கு மன்னர் அனுமதி பெற வந்தேன்."

"உம்."

"மன்னர் ஒப்புக் கொண்டு விட்டார்."

"மகிழ்ச்சி."

அந்த மகிழ்ச்சி என்ற சொல்லில் மகிழ்ச்சி மருந்துக்குக் கூட இல்லாதிருந்ததையும் ஏளனம் சிறிது துளிர்த்ததையும் கண்ட இளஞ்செழியன் அதைக் கவனிக்காதவன் போலவே பேச்சைத் தொடர்ந்து, "திட்டம் எங்கும் முறியாமல் நமது படைப் பகுதிகள் பணியைச் சரியாகச் செய்து முடித்தால் வெற்றி நிச்சயம்" என்றான்.

"அப்படியா!" என்றாள் பூவழகி சிரத்தையேது மில்லாமல்.

"ஆம். வெற்றி நிச்சயம். மன்னர் அரியணையில் அமருவதும் நிச்சயம். அதற்கு அடுத்த ஆசனத்தில் மன்னர் சகோதரியிருப்பாள்" என்றான் இளஞ்செழியன்.

"மன்னர் சகோதரியா?"

"ஆமாம் பூவழகி, நீதான்?"

"மன்னர் சொன்னாரா?"

"இப்பொழுதுதான் சொன்னார்."

"வேறெதுவும் சொல்லவில்லையா?"

"சொன்னார்."

"என்ன சொன்னார்?" மிகுந்த ஆவலுடன் இந்தக் கேள்வியைக் கேட்டாள் பூவழகி. இளஞ்செழியன் பதில் அந்த ஆவலைப் பட்டென்று அவித்தது. "குறுநில மன்னரும் படைத் தலைவர்களும் உன் காலிலும் வணங்குவார்கள் என்றும் சொன்னார்."

பூவழகியின் கண்கள் அவனைச் சுட்டெரித்து விடுவதைப் போல் பார்த்தன. எரியும் அவள் நெஞ்சத்தில் எண்ணெய் விடுவதுபோல் சொன்னான் படைத்தலைவன். "கிடைத்தற்கரிய பதவி அது பூவழகி. அந்தக் காட்சியை இப்பொழுது மனக் கண்ணில் பார்க்கிறேன். ஆகா! எப்பேர்ப் பட்ட சபை! எத்தனை விருதுகள்! மகாராணிக்கு அடுத்த படியாக சோழ மண்டலத்தில் நீயே பெரியவள். மன்னர் மனம் எத்தனை விசாலமானது!" என்று.

பூவழகியின் கூனியிருந்த உடல் இந்தப் பேச்சைக் கேட்டதும் திடீரென நிமிர்ந்தது. அகன்ற கண்கள் அக்கினியைக் கக்கின. பெரும் ராணியைப் போல் நாலடி நடந்து குகையின் மத்திக்கு வந்தாள் பூவழகி. பிறகு படைத் தலைவனை வெகு அலட்சியமாக நோக்கி, "மன்னர் கொடுக்கும் படாடோபத்துக்கும் மண்டலாதிபதிகள் தலை வணங்குவதற்கும் இத்தனை நாள் காத்திருக்கவில்லை படைத்தலைவரே" என்றாள் மிகுந்த சீற்றத்துடன்.

"என்ன சொல்கிறாய் பூவழகி, இந்தப் பதவி, கௌரவம்....." என்று இழுத்தான் படைத் தலைவன்.

"எனக்குத் தேவையில்லை." சட்டென்று வந்தது பூவழகியின் பதில்.

"உனக்குத் தேவை...?"

"உங்கள் உளளத்துக்குத் தெரியும். மன்னருக்கும் தெரியும். எல்லோருக்கும் தெரியும்" என்று கூறிய பூவழகி, திடீரென முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள். அதுவரை அவள் பிடிவாதத்தால் கடைப்பிடித்த துணிவு முறிந்தது. பெண்ணின் பலவீனம் மேலோங்கியது.

அந்தத் துன்பக் கோலத்தைக் காணச் சகிக்காத இளஞ் செழியன் இரண்டே அடிகளில் அவளை எட்டி அணைத்துக் கொண்டான். அணைத்த அந்தநிலையும் நியாயமல்ல என்று உணரத்தான் செய்தான் அவன். அவளை மணக்கமுடியாத் வன் அணைப்பதால் என்ன பயன் என்று எண்ணியதால் அவள் பூவுடலை அணைத்த அவன் கைகள் கூசவே செய்தன. இருப்பினும் தன்னையே நம்பி வாழ்ந்த அந்த அபலையின் பலவீன நிலை அவன் உறுதியையும் சில வினாடிகளுக்கு உடைத்துவிட்டது. அவன் அணைப்பிலும் அழுகை நிற்க வில்லை. நீண்ட நாள் சோக வெள்ளம் கரையை உடைத்துப் பிரவாகித்துக் கொண்டிருந்தது.

"பூவழகி! அழாதே! என்னைப் பலவீனப்படுத்தாதே!" என்று அணைத்த வண்ணமே கூறினான் படைத் தலைவன்.

அந்த ஸ்பரிசத்தால் மெள்ள மெள்ள அவள் துக்கத்தை அடக்கிக் கொண்டாலும், "என்னைச் சோதிக்கத்தான் இங்கு வந்தீர்களா?" என்று விக்கி விக்கிக் கேட்டாள்.

"சோதனை உனக்கல்ல பூவழகி, எனக்குத்தான்" என்றான் படைத் தலைவன்.

"உங்களுக்கென்ன ஆண்பிள்ளை" என்று மீண்டும் விக்கினாள் அவள்.

"சோதனை இனத்தைப் பார்ப்பதில்லை பூவழகி?"

"தண்டனை?"

"தண்டனையா! யாருக்கு?"

"எனக்குத்தான்."

"உன்னைத் தண்டித்தது யார்?"

"நீங்கள்தான்."

"எப்பொழுது தண்டித்தேன்?"

"சற்று முன்பு."

"நானா?"

"நீங்கள் பேசிய பேச்சைவிட வேறு என்ன தண்டனை வேண்டும் எனக்கு?"

"அதைவிட அதிகத் தண்டனை கிடையாதா?"

"கிடையாது!"

"இருக்கிறது பூவழகி, ஆண்டவன் ஆட்சியில் எத்தனை எத்தனையோ சோதனைகள், எத்தனை எத்தனையோ தண்டனைகள்! அந்தத் தண்டனைகள் பாவிகளைப் பீடிக்கின்றன."

"இருக்கலாம். அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?"

"நமக்கும் என்று சொல்லாதே பூவழகி. நீ ஏதும் அறியாதவள்; ஆனால் நான் செய்திருக்கும் பாவம் மகத்தானது."

"அப்படி என்ன பாவம் செய்தீர்கள்?"

"எனக்குத் தெரியாது."

"தெரியாதென்றால் பாவியென்று ஏன் சொல்லிக் கொள்கிறீர்கள்?"

"கிடைக்கும் தண்டனையிலிருந்து ஊகிக்கிறேன்."

"அப்படியென்ன தண்டனை கிடைத்து விட்டது உங்களுக்கு?"

இளஞ்செழியன் உடனே பதில் சொல்லவில்லை. நேரடியாகப் பதில் சொல்லவும் துணிவில்லை. ஆகவே, சுற்று வட்டமாகப் பேசத் தொடங்கி, "பூவழகி!" என்று அழைத்தான்.

"சொல்லுங்கள்" என்றாள் அவள், அந்த ஒரு சொல்லில் தன் இதயத்தின் அன்பையெல்லாம் கொட்டி.

"தண்டனைகள் உலகில் பலவுண்டு."

"ஆமாம்."

"அதில் எதிர்பார்ப்பது கிடைக்காதிருப்பது பெரும் தண்டனை."

"ஆமாம்."

"நான் ஒரு பெண்ணிடம் என் உள்ளத்தைக் கொடுத்து விடுகிறேன். அவள் கிடைக்காவிட்டால்? அவளை நான் அடைய முடியாவிட்டால்?"

பூவழகி இன்பமாக நகைத்தாள். "ஏன் முடியாது? அவள் தான் கிடைத்து விட்டாளே" என்றாள்.

"கைக்கொட்டியது வாய்க்கெட்டாத நிலைமை உண்டு."

"அந்த நிலைமை உங்களுக்கு ஏற்படாது."

"ஏற்பட்டிருக்கிறது!" என்று சற்று அழுத்திச் சொன்னான் படைத் தலைவன்.

சரேலென்று அவன் பிடியிலிருந்து அவள் விலகினாள். "என்ன சொல்கிறீர்கள்?" என்று பயத்துடன் கேட்டாள் பூவழகி.

அவள் முகத்தில் துளிர்த்த அந்தப் பயம் அவனை மீண்டும் அச்சத்தில் ஆழ்த்தியது. 'ராணியை மணக்க வாக்குக் கொடுத்துவிட்டேன். உன்னை மணக்க முடியாது' என்று சொல்லும் திறனை அறவே இழந்தான். ஆகவே, பேச்சை மாற்றி "போர் ஏற்பட்டிருக்கிறதல்லவா?" என்றான்.

பூவழகியின் முகத்தில் பயம் மறைந்தது. தைரியப் புன்முறுவல் படர்ந்தது. "போரைப் பற்றிச் சொல்கிறீர்களா? போரின் முடிவில் நீங்கள் வெற்றி வாகையுடன் வந்தால் இங்கு என் கரங்களில் மணமாலை இருக்கும். நீங்கள் ஒரு வேளை மடிந்தால் பூவழகி மட்டும் இருப்பாளா என்ன? அடுத்த கணம் நானும் மறைந்துவிடுவேன். சந்தேகம் வேண்டாம். இந்த உயிர் இத்தனை நாட்கள் இந்த உடலில் இருந்ததற்குக் காரணம் நீங்கள் ஒருநாள் திரும்பி வருவீர்கள் என்ற நினைப்புதான்" என்றாள் பூவழகி தைரியத்துடன்.

அந்தத் தமிழ்ப் பெண்ணின் துணிவையும், கற்பையும் எண்ணிப் பார்த்த இளஞ்செழியன் என்ன சொல்வதென்று அறியாமல் பிரமித்தான். பிறகு யோசித்துவிட்டுச் சொன்னான்: "பூவழகி! போரின் முடிவில் யாரிருப்போம் யாரிருக்க மாட்டோம் என்று சொல்ல முடியாது. போரின் கொடுமை அது. ஆனால் போரைவிடக் கொடுமையான வாழ்க்கைச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. நம்மையும் மீறிய சக்திகள் நம் எண்ணங்களைச் சிதற அடிக்கலாம், உன்னையும் என்னையும் பிரிக்கலாம். உயிரிருந்தும் பிணங்களாக நம்மை நடமாடவும் வைக்கலாம். அப்படி ஏதாவது நிலைமை ஏற்பட்டால் அதற்கும் தயாராக இரு. எந்தச் சந்தர்ப்பத்திலும் சோர்வுக்கு இடம் கொடாதே. உன் இஷ்டத்தை மீறிய செய்கைகளில் நான் ஈடுபட்டால் நான் முழு மனத்துடன் அவற்றில் ஈடுபட்டு விட்டதாக நினைக்காதே. என்னையும் மீறிய சக்திகள் அந்தச் சந்தர்ப்பங்களில் என்னைச் சிக்க வைத்துவிட்டதென அறிந்து கொள்" என்று கூறிய இளஞ்செழியன், அவள் கைகளை இறுக்கி ஒருமுறை பிடித்துவிட்டு மேற்கொண்டு எதுவும் பேசத்

துணிவில்லாததால் சரேலெனக் குகையைவிட்டு வெளியே சென்றான்.

பூவழகி நின்ற இடத்திலேயே அசைவற்று நின்றாள். அவள் நின்ற நிலை அந்தக் குகைக்குள் யாரோ சிறந்த சிற்பியொருவன் சிலையைச் சிருஷ்டித்து விட்டதுபோலிருந்தது. நீண்ட நேரம் நின்றாள் அவள். முகம் குழம்பிக் கிடந்தது. படைத் தலைவன் சொன்ன விஷயங்களைப் புரிந்து கொள்வது மிகக் கடினமாயிருந்தது அவளுக்கு. காதலால் கட்டுண்ட தங்களைப் பிரிக்கக்கூடிய அந்தச் சக்தி என்னவாயிருக்கக்கூடும் என்று பலமுறை நினைத்துப் பதில் கிடைக்காமல் அவள் ஏங்கினாள். மீண்டும் அவனைச் சந்திக்கும் போது நேராகக் கேட்டுவிடுவதென்ற முடிவுக்கு வந்தாள். ஆனால், அந்தச் சந்தர்ப்பம் அவளுக்குக் கிடைக்க வில்லை. படைத் தலைவன் அங்கு தங்கிய நான்கு நாட்களிலும் அவள் கண்களில் படவில்லை. கரிகாலன் திரட்டியிருந்த படைகளைப் பார்வையிடுவதிலும், அவற்றை நடத்த வேண்டிய முறைகளை மன்னனுடனும், இரும்பிடர்த்தலையாருடனும் மற்றப் படைத் தலைவர்களுடனும் விவாதிப்பதிலும் காலத்தைச் செலவிட்டான். பிரும்மானந்தர் வாணகரையிலிருந்து என்ன செய்ய வேண்டுமென்பதையும் விளக்கி அவரை வாணகரைக்கு அனுப்பி வைத்தான். குணவாயிற் கோட்டத்தில் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை அந்த நான்கு நாட்களில் முடித்துக்கொண்ட படைத் தலைவன் மன்னனிடம் விடை பெற்றுக் கொண்டபோது மன்னன் கேட்டான்: "ஏன் மீண்டும் சகோதரியைப் பார்க்கவில்லையா?" என்று.

"பார்க்க அவகாசமில்லை. போர் முடியட்டும்" என்ற படைத் தலைவன், "மன்னவா! இன்னும் ஒரு வாரத்தில் படைகள் புறப்படட்டும். இன்றிலிருந்து பதினைந்தாவது நாள் மருத நிலத்துக் குடிகள் விரட்டப்பட வேண்டும். அதிலிருந்து ஒரு வாரத்தில் நாம் இருங்கோவேளுடன் மோத வேண்டும். நாம் குறிப்பிட்ட தினங்கள் தவறவேண்டாம்" என்று கூறி நாகையை நோக்கிப் பயணமானான். அடுத்த வாரத்தில்

கரிகாலன் படைகள் வெண்ணியை நோக்கிப் புறப்பட்டன. சோழ மண்டலமெங்கும் போர்ப் பறைகளின் ஒலிகளும் ஆயுத வண்டிகளின் உருளை ஒலிகளும், புரவிகளின் காலடி ஓசையும் யானைகளின் திமுதிமுவென்ற நடையும், வீரர்களின் கோஷமும் மிகப் பயங்கரமாகச் சப்தித்தன!

113. நாகலிங்கப் பூ

யவனர்களுக்கும் எகிப்தியருக்கும் எதியோப்பியருக்கும் சதா போர்கள் இருந்துவந்த நாட்டில் பிறந்து, அடிமை வாழ்வு முதல் பலவகைத் துன்பங்களையும் அனுபவித்ததன்றி பலவகைப் போர்களையும் கண்டிருந்த அழகி அலீமாவுக்குப் போர் என்பது ஒரு புதுமையல்லவென்றாலும், வெண்ணிப் போரும் அதற்காக நடந்த ஆயத்தங்களும் அவள் மனத்திலே பிடிபடாத புதுமையாகவும் விசித்திரமாகவுமே இருந்தன. குணவாயிற்கோட்டம் சென்று திரும்பி வந்ததும் இளஞ்செழியன் போருக்கான ஆயத்தங்களைப் பரபரப்புடன் செய்வானென்றும், வெகு சீக்கிரம் பெரும்படை நாகையில் திரட்டப்படும் என்றும் எதிர்பார்த்த அலீமாவுக்கு, படைத் தலைவன் போர் ஏற்பாடுகளின் விஷயத்தில் அதிகசிரத்தை காட்டாமலிருந்ததன்றி, பூம்புகாரின் அமைப்பைப் பற்றியும் அதன் சுற்றுப்புறங்களைப் பற்றியும் சதா படங்களை வரைந்து பொழுது போக்கிக்கொண்டும், மாலை வேளைகளில் ஏதோ தீவிர சிந்தனையுடன் கடற்கரையில் உலாவிக் காலம் கழித்துக் கொண்டுமிருந்தது பெரும் புதிராகத்தான் தெரிந்தது. ஒவ்வொரு நாளும் நாகைத் தோப்புகளில் மறைந்து கிடந்த இளஞ்செழியன் படைக்கு மேற்கொண்டு வீரர்களைத் திரட்டவும், அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களைத் தயாரிக்கவும், பரதவகுலக் கிழவி காத்தாயி மிகுந்த அக்கறை காட்டிக்கொண்டிருந்ததாலும், அந்த அக்கறையின் விளைவாக வீரர்கள் தொகையும் ஆயுத பலமும் நாளுக்குநாள்

பெருகிக் கொண்டிருந்ததென்றாலும், அந்தச் சக்திகளைத் திரட்டி வகைப்படுத்தி ஒரு படையாக அமைக்கும் முக்கியத் தொழிலைப் படைத் தலைவன் ஒருவனே செய்யமுடியும் என்பதை உணர்ந்திருந்த அலீமா, அவன் அந்த வழியில் அக்கறையேதும் காட்டாதிருந்ததைக் கண்டு கலங்கினாள். தனது இந்த மனக்கலவரத்தைக் காத்தாயியிடமும் அலீமா தெரிவித்தாள். ஆனால் காத்தாயி அதைப் பொருட்படுத்தாமல், "பெண்ணே! அவன் வழி அப்படித்தான். அவன் போரைப் பற்றி யோசிக்கவில்லையென்று மட்டும் எண்ணாதே. ஏக காலத்தில் பல வழிகளில் அவன் புத்தி வேலை செய்யும். பொறுத்திருந்து பார்" என்று சொல்லி விட்டுத் தன் வேலையைக் கவனித்தாள். ஆனால் அலீமாவின் மனம் கிழவியின் சொற்களால் சாந்தி பெறுவதற்குப் பதில் அச்சத்தையும் குழப்பத்தையுமே அடைந்தது.

விநாடிகள் நிமிஷங்களாகி, நிமிஷங்கள் ஜாமங்களாகி, ஜாமங்கள் நாட்களாகிக் காலம் வெகு துரிதமாக ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் இளஞ்செழியன் எந்தவிதப் போர் ஏற்பாட்டிலும் இறங்காமல் தானிருந்த குடிசையிலேயே படங்களை வரைந்து காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தான். ஒரு வாரத்திற்குள்ளாகவே பெரும் போர் மூளப் போவதைப் பற்றிய பேச்சு தமிழகமெங்கும் அடிபட்டது. மன்னன் கரிகாலனுடைய பெரும்படை உறையூரை நோக்கிப் புறப்பட்டு விட்டதாக இளஞ்செழியன் ஒற்றர்கள் செய்திகளைக் கொண்டு வந்தார்கள். அந்த வாரத்தின் முடிவில் இருங்கோ வேளின் தலைமையில் வேளிர் படைகளும் சேர பாண்டிய மன்னர்களின் படைகளும் இணைந்து போருக்கு ஆயத்தமாக நிற்பதாகவும் செய்தி வந்தது. அந்தச் செய்திகள் வந்துங்கூட இளஞ்செழியன் எத்தகைய துரிதமான செயலிலும் ஈடுபடாதால், அவன் தயக்கத்தைப் பொறுக்க முடியாத அலீமா இளஞ்செழியனிருந்த குடிசைக்குள் ஒரு நாள் மாலை வெகு வேகமாக நுழைந்தாள். அவள் நுழைந்த சமயத்தில்

இளஞ்செழியன் ஒரு நாகலிங்கப் பூவைக் கையில் வைத்துக் கொண்டு அழகு பார்த்துக் கொண்டிருந்தான். அவன் நிதானத்தைப் பார்த்த அலீமா வெகுண்டு, "படைத் தலைவர் புஷ்பத்தின் அழகில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது" என்று கோபம் குரலில் பரிபூரணமாகத் தொனிக்கக் கேட்டாள்.

இளஞ்செழியன் கண்கள் மெல்லப் புஷ்பத்திலிருந்து திரும்பி அலீமாவின் முகத்தைச் சற்றே ஏறெடுத்து நோக்கின. "ஆம், அலீமா! புஷ்பங்களென்றால் எனக்கு மிகவும் பிரியம். இயற்கையின் சிருஷ்டியில் சிறந்தது இரண்டு. ஒன்று பெண், இன்னொன்று புஷ்பம். இரண்டிலும் புதைந்து கிடக்கும் மர்மங்கள் கணக்கற்றவை. ஆராய்ந்து கவனிப்பவனுக்கு இரண்டிலும் படிப்பினைகள் பல உண்டு" என்று பதில் சொன்னான் படைத் தலைவன்.

அவன் பதிலில் தோய்ந்து கிடந்த சொற்கள் சிருங்காரமாகத் தெரிந்தன. ஓரளவு வேதாந்தமிருப்பதாகவும் தோன்றியது அலீமாவுக்கு. ஆனால் இளஞ்செழியன் அவளைப் பார்த்த பார்வையிலும் அவன் சொற்களைத் தாங்கி வந்த தொனியிலும் சிருங்காரமுமில்லை, வேதாந்தமுமில்லை. ஏதோ சிக்கலான பிரச்னையை அவிழ்க்க முயலும் சிரமம்தான் தெரிந்தது அவற்றில். அலீமா சந்தேகமறப் புரிந்து கொண்டாள், படைத் தலைவன் எதற்கோ விடை காண முயலுகிறானென்பதை. அவளால் தீர்மானிக்க முடியாததால் அவள் பொதுவாக கேள்விகளை வீசத் தொடங்கி, "படைத் தலைவரே! மன்னர் கரிகாலன் உறையூரை நோக்கிப் படைகளுடன் புறப்பட்டு ஒரு வாரத்துக்கு மேலாகிவிட்டது" என்று குறிப்பிட்டாள்.

"அப்படியா?" என்றான் படைத் தலைவன், சர்வ சாதாரணமாக.

"நமது ஒற்றர்கள் கொண்டு வந்த செய்திதான் அது. ஏற்கெனவே உங்களிடம் சொன்னேன்" என்று மீண்டும் கூறினாள் அலீமா.

"ஆம். சொன்னாய் அலீமா!" என்று படைத் தலைவன் ஒப்புக் கொண்டான்.

"இருங்கோவேளும் சன்னத்தமாகி விட்டான்" என்றாள் அலீமா.

"மன்னன் படையெடுக்கும்போது அவன் மட்டும் வாளாவிருக்க முடியுமா?" என்று கேட்டான் இளஞ்செழியன்.

படைத் தலைவன் மிகச் சாவதானமாகச் சொன்ன பதில் அந்தப் பைங்கிளியின் கோபத்தைப் பன்மடங்கு அதிகமாக்கவே, "விளையாடுகிறீர்களா படைத் தலைவரே" என்று சீறினாள் அவள். அவள் சீற்றத்தைக் கண்ட இளஞ்செழியன் இதழ்களில் இளநகை அரும்பியது. தனது இருப்பிடத்தை விட்டு மெள்ள எழுந்து அலீமாவை நோக்கி வந்து அவள் தோள்மீது தன் கையை வைத்து, "ஏன் அலீமா! உன்னிடம் விளையாட எனக்கு உரிமையில்லையா?'' என்று வினவினான்.

அவன் கர ஸ்பரிசத்தால் அவள் லேசாக நடுங்கினாள். அவை எத்தனை எத்தனையோ இன்ப அலைகளை அவள் உடலில் பாய்ச்சின. தன் உள்ள உணர்ச்சிகள் எத்தனைதான் படைத் தலைவன் பக்கம் சாய்ந்தாலும் படைத் தலைவன் இதயம் வேறு இடத்தில் நிலைத்திருக்கிறதென்பதை அவள் அறிந்தாளாகையால், "அந்த உரிமையை நான் அளித்து நாட்கள் பல ஆகின்றன. ஆனால் ஏற்கத்தான்..." என்று தட்டித் தடுமாறி அவள் முடிக்காமல் விட்ட சொற்களைப் படைத் தலைவனே முடித்தான். "நான் இஷ்டப்படவில்லை என்று சொல்கிறாய். உண்மைதான் அலீமா! அந்தப் பாக்கியத்தை ஏற்க என்னால் முடியவில்லை. ஆனால் அலீமா! ஆண் பெண் உறவில் காதலைத் தவிர எத்தனையோ சிறந்த உறவுகள் இருக்கின்றன. உதாரணமாக, பூவழகியை நினைத்துப் பார். மன்னர் அவளைத் தன் சகோதரியாக நினைக்கிறார். அதனால் மாநிலமே அவளை மதிக்கிறது. இந்தப் படைத் தலைவனுக்கும் தான் ஒரு சகோதரி இருக்கட்டுமே. நான் மட்டும் உலகில் உடன் பிறப்பற்றவனாக ஏன் இருக்கவேண்டும்?" என்று.

அலீமா அவனுக்குப் பதிலேதும் சொல்லவில்லை. சகோதர பாவத்தை அவள் மனம் ஏற்க மறுத்தது. வேறு பாவத்தை இலி-ஆஸுவின் அரண்மனையிலேயே அது ஏற்றுக் கொண்டு விட்டது. ஆகையால் அவள் மீண்டும் பேச்சை வேறு திக்கில் மாற்றி, "படைத் தலைவரே! என்னிடம் விளையாட உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் விளையாட இது நேரமல்லவென்பதை நான் உங்களுக்குக் கூறத் தேவையில்லை. போர் முரசு நாடெங்கும் ஒலிக்கிறது. நீங்களே இந்த நாட்டை எண்ணி எண்ணிப் பிற நாடுகளில் இருக்கும்போதே ஏங்கியவர். ஆகவே இப்பொழுது உங்கள் சிந்தனை இருக்க வேண்டியது போர்த்துறையில்" என்று சற்று உஷ்ணமாகவே சொன்னாள் அலீமா.

படைத் தலைவன் வலது கரம் அவள் தோளில் சற்றுப் பலமாகவே அழுந்தியது. "அந்தத் துறையில் இல்லையென்று யார் சொன்னது அலீமா?" என்று கேட்டான் இளஞ்செழியன் அன்பு சொட்டி வழியும் குரலில்.

அலீமா தன் கூர் விழிகளை அவன் விழிகளுடன் தைரியமாக உறவாடவிட்டாள். அவள் உதடுகளும் திடமாகச் சொற்களை உதிர்த்தன. "இந்தப் புஷ்பத்தை நீங்கள் ரசிப்பதும் உங்கள் சிந்தனை போர்த் துறையில் இருப்பதற்கு அறிகுறிதானா?" என்று கேட்டாள் அவள்.

இளஞ்செழியன் உதடுகளில் புன்முறுவல் நன்றாக விகசித்தது. "ஏன் இருக்கக் கூடாது?" என்று அவன் பதிலுக்கு வினவினான்.

அலீமாவின் உதடுகள் கோபத்தையும் இகழ்ச்சியையும் கலந்து தெளிக்கும் வகையில் ஒருபுறம் மடிந்தன. "அடுத்தபடி இந்தப் புஷ்பத்தை வைத்துக்கொண்டு போர்த் திட்டம் வகுப்பதாகக் கூடக் கூறுவீர்கள்" என்றாள் மெல்ல நகைத்து.

அந்த நகைப்பிலிருந்த இகழ்ச்சியையும் கோபத்தையும் படைத் தலைவன் கவனித்தானோ இல்லையோ சொல்ல முடியாது. அவன் முகம் திடீரென சகல உணர்ச்சிகளையும் மறைத்துக் கொண்டு கல்லாகிவிட்டது. அவன் சிந்தனை

துரிதமாக வேலை செய்யும் சமயங்களில் மங்கும் கண்கள் அப்பொழுதும் மங்கி மயக்கமடைந்தவைபோல் காணப் பட்டன. அவன் சொற்கள் கம்பீரத்துடனும் தெளிவாகவும் வெளிவந்தன. "அலீமா! புஷ்பம் இயற்கையின் சிறந்த சிருஷ்டிகளில் ஒன்று என நான் கூறவில்லையா?" என்று ஆரம்பித்தான் படைத்தலைவன்.

"ஆம், கூறினீர்கள்?" என்றாள் அலீமா, படைத் தலைவன் எதற்காக மீண்டும் ஆரம்ப சம்பாஷணையைக் கிளறுகிறானென்பதை அறியாமல்.

"அதில் மர்மங்கள் பல புதைந்திருப்பதாகக் கூறினேன்."

"ஆம் கூறினீர்கள்."

"போர் மர்மம் மட்டும் அதில் ஏன் புதைந்து கிடக்கக் கூடாது?"

இந்தக் கேள்வியைத் திட்டமாகக் கேட்ட இளஞ் செழியன் அவள் தோள்மீதிருந்த தன் கையை நீக்கினான். அவன் கேள்வியைக் காதில் வாங்கிக் கொண்ட அலீமா அவன் புத்தி ஏதாவது குழம்பிவிட்டதோ என்றுகூட நினைத் தாள். அவள் நினைப்பை அவள் முகத்திலிருந்து ஊகித்துக் கொண்ட இளஞ்செழியன் மீண்டும் திடம் தணியாத குரலில் கூறினான். "அலீமா! இயற்கை சொல்லும் பாடங்கள் பல. காட்டும் வழிகள் எண்ணற்றவை. ஆனால் மனிதன் கண்கள் அவற்றைக் கவனிப்பதில்லை. குணவாயிற் கோட்டத்துக்குச் சென்று வந்தது முதல் பிரதி தினம் குழம்பிக் கிடந்தேன். சேர பாண்டியர்களின் பெரும் படையையும், இருங்கோவேளின் பெரும் படையையும் முறியடிப்பதற்கு மன்னருக்கு வழி சொன்னேன். ஆனால் புகாரில் டைபீரியஸை முறியடிப்ப தற்குச் சரியான திட்டமொன்றை மட்டும் காணாமல் தவித்தேன். தினம் தினம் மண்ணில் படங்களைத் தீட்டி, புகாரின் நிலைமையைக் கவனித்தேன். வண்ண மைகளைக் கொண்டு துணியிலும் சித்திரங்களைத் தீட்டி, புகாரின் தெய்வக் கோட்டங்கள், கோட்டை கொத்தளங்கள் அனைத்தையும் கவனித்து எப்படிப் புகாரைத் தாக்குவது,

எந்த இடத்தில் தாக்குவது என்று பார்த்தேன். விடை கிடைக்க வில்லை. குழம்பினேன். இன்று காலைதான் இந்த மலரைப் பறித்தேன். விடை இத்தனை அருகிலிருக்குமென்று எனக்குத் தெரியாமற் போய்விட்டது!"

"இந்த மலர் வழி காட்டிவிட்டதாக்கும்?" என்று வினவினாள் அலீமா.

"ஆம் அலீமா. இந்த மலர் புகாரின் வெற்றிக்கு மட்டுந் தான் வழி காட்டும் என்று நினைத்தேன். ஆனால், வெண்ணிப் போரின் வெற்றிக்கும் வழிகாட்டும் என்று நான் எண்ண வில்லை முதலில்" என்றான் படைத் தலைவன்.

"வெண்ணியா?"

"ஆம். இங்கிருந்து ஒன்றரைக் காதத்தில் இருக்கிறது ஒரு சிறு நகர்."

"அங்கா இந்தப் பெரும்போர் நடக்கப் போகிறது?"

"ஆம். அந்த நகருக்கு எதிரில் பெருவெளியிருக்கிறது. அதை வெண்ணிப்பரந்தலை என்று அழைக்கிறோம்."

"மன்னர் படை அத்தனை பெரிதா?"

"இல்லை. எதிரிகள் படையில் நான்கிலொரு பங்கு."

"இந்தச் சிறுபடை! அந்தப் பெரும் படையுடன் பொட்டல் வெளியிலா மோதப் போகிறது?"

"ஆம்."

அலீமா வாயடைத்து நின்றாள். படைத் தலைவன் மெள்ள நகைத்தான். "என்ன நகைக்கிறீர்கள்? மன்னர் படை இந்தப் போரில் தவிடுபொடியாகி விடுமென்று தெரியாதா உங்களுக்கு? அல்லது இந்த நாகலிங்கப் பூ வழி ஏதாவது சொல்லி விட்டதா?" என்று சீறினாள் அலீமா.

"அலீமா! இந்தப் பூவின் பெயர் என்ன சொன்னாய்?" என்று கேட்டான் படைத் தலைவன், ஏதோ புது விஷயத்தைக் கேட்பவன்போல்.

"நாகலிங்கப் பூ" என்றாள் அலீமா.

"இதற்கு ஏன் நாகலிங்கப் பூ என்று பெயர் தெரியுமா?" என்று படைத் தலைவன் வினவினான்.

"தெரியாது."

"இதோ பார் இந்தப் பூவின்மீது குடை பிடிப்பது போலிருக்கும் பகுதி ஐந்து தலைப் பாம்பு போல் தெரிகிறது."

அலீமா அத்தனை நாட்களுக்குப் பிறகு அன்றுதான் அந்தப் பூவைப் புதுக் கண்களுடன் பார்த்தாள். "ஆம் ஆம். முன்பே பார்த்திருக்கிறேன்" என்றாள்.

"இது பாம்பைப் போலிருப்பதாலும், இதன் உள்ளிருக்கும் அந்தச் சிறு முளை லிங்கம் போலிருப்பதாலும், இதை நாகலிங்கப் பூ என்றழைக்கிறோம். எங்கள் நாட்டில் பூஜைக்கு மிகவும் உத்தமம் என்று இது கருதப்படுகிறது" என்றான் படைத் தலைவன்.

அலீமாவின் விழிகள் பூவை நன்றாக ஆராய்ந்தன. மெள்ள மெள்ள அவளுக்குப் படைத் தலைவன் யோசனையும் ஓரளவு புரியலாயிற்று. வியப்பு நிரம்பிய விழிகளை அவன்மீது திருப்பினாள். "நாகம் கீழ்ப்பக்கம் படுக்கையாகி வளைந்து மேற்புறம் வந்திருக்கிறது" என்று இழுத்தாள்.

அவள் தன் எண்ணங்களைப் புரிந்து கொள்வதைக் கண்டு இளஞ்செழியன் முறுவல் பூத்தான். "ஆம் அலீமா! அதைத்தான் நாம் கவனிக்க வேண்டும். பெரும் படைகளுடன் வரும் இருங்கோவேளும் இப்படித்தான் பாம்புபோல் மன்னரின் படைகளை வளைப்பான். இதை நாங்கள் சர்ப்பவியூகம் எனறு சொல்கிறோம். இடையிலுள்ள லிங்கத்தின் இடத்தில் மன்னர் படைகள் சிக்கிவிடும். அந்த இடத்தில் கருடவியூகத்தை வகுக்குமாறு மன்னருக்கு யோசனை கூறினேன். தலையையும் வாலையும் வெட்டிவிட கருடனின் இரண்டு இறகுகள் மறைவிடத்திலிருந்து தாக்கவேண்டுமென்றும் சொன்னேன். ஆனால் அந்தத் திட்டத்தில் ஒரு குறை இருந்தது" என்றான் படைத் தலைவன்.

"என்ன அது?"

"ஒரு இறகுக்கு மன்னர் தமது படையைப் பிரித்து நிறுத்த முடியும். மன்னரிடம் புரவிகள் நிரம்ப இருக்கின்றன. இன்னொரு இறகு நமது படை. நம்மிடம் புரவிகள் ஏது?"

"இரு நூறுக்கு மேல் இல்லை."

"படைவீரர்?"

"இதுவரை மூவாயிரம் பேர்."

"அப்படியானால் துரிதமாக நமது படைகள் எப்படி எதிரிகளைத் தாக்கமுடியும்?"

"முடியாது."

"இப்பொழுது பார் அலீமா, இந்த நாகலிங்கப் பூவை, அதன் அடிப் பாகத்திலும், மேல் பாகத்திலும் பட்டு முட்கள் போல் நிரம்ப சின்னஞ்சிறு எழுச்சிகள் இருக்கின்றன. அவை நாகத்தின் உடல் பூராவும் தெரிகின்றன" என்று கூறிய படைத் தலைவன், புஷ்பத்தின் அந்தப் பகுதிகளை அலீமாவிடம் சுட்டிக் காட்டினான்.

புஷ்பத்தை நன்றாக உற்றுப் பார்த்த அலீமா, "ஆம், இருக்கின்றன" என்றாள்.

"அந்த முட் கூட்டங்களைப்போல் நமது படை இயங்க வேண்டும். புரவிகள் கிடைப்பது சேரன் துறைமுகமான முசிறியில், அங்கு நாம் செல்ல முடியாது. ஆகவே நமது படையைப் புரவிப் படையாக அமைக்க முடியாது. அதற்குப் பதில் நிரம்ப வேல்கள் தயாராகட்டும்; அம்புகளும் விற்களும் அவற்றை எறியும் ஆயுத வண்டிகளும் தயாராகட்டும், அத்தனையும் ரகசியத்தில் நடக்கட்டும்" என்றான் படைத் தலைவன்.

"இது எப்படி ரகசியத்தில் நடக்க முடியும்? இருங்கோவேளிடம் ஒற்றர்கள் இல்லையா?" என்று வினவினாள் அலீமா.

படைத் தலைவன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிது நேரம் அவளை உற்றுப் பார்த்தான். பிறகு அவன் பதில் சொன்னபோது அவள் அடியோடு திகைத்துப் போனாள். "உண்மைதான் அலீமா. இருங்கோவேளிடம்

ஒற்றர்கள் இருக்கிறார்கள். ஆகையால் நமது படையைக் கலைத்துவிடு" என்றான் படைத் தலைவன்.

அலீமா ஸ்தம்பித்து நின்றாள். பிறகு மெள்ளச் சமாளித்துக் கொண்டு, "என்ன? இத்தனை நாளாகக் கஷ்டப் பட்டுத் திரட்டிய படையைக் கலைத்துவிடுவதா?" என்றாள்.

"ஆம் அலீமா. படை இங்கிருந்தால் இருங்கோவேள் அறியலாம். பாம்பு வெளியில் வேலிப் புறங்களில் உள்ள முட்களை அறியும். சட்டை உரிக்க அதன்மீது பாயவும் செய்யும். ஆனால் இந்த நாகலிங்கப் பூவில் நாகத்தின் உடலிலேயே முட்கள் இருக்கின்றன. ஆகவே வெண்ணிக்குச் சற்று அப்பாலுள்ள இருங்கோவேளின் தோப்புகளில் நமது படைகளைப் பரவச் செய்துவிடு. இங்கிருந்து ஆயுதங்களைச் செய்து அனுப்புவோம். பாம்பின் உடம்பிலேயே முட்களிருக்கட்டும். எதிரிகளின் இடையிலேயே நமது வீரர்கள் மறைந்துறையட்டும். வீரர்களாக அல்ல. சாதாரண மக்களாக, கரிகாலனால் விரட்டப்பட்ட மருதநிலத்துக் குடிகளுடன் குடிகளாக அவர்கள் கலந்து வாழட்டும். அவர்களைத் திடீரென்று ஒன்று சேர்க்க நான் வழி வகுக்கிறேன்" என்று உத்தரவிட்ட படைத் தலைவன், "அலீமா! வெண்ணிப் போருக்கு நான் என்று புறப்படுகின்றேனோ அன்றே நீ மரக்கலங்களுடன் புகார் போய்விடு. இந்திர விழாவன்று அங்கு வீனஸ் விழா நடக்கும். அன்று அங்கு உன்னையும் ராணியையும் சந்திக்கிறேன். அங்கும் நினைப்பு வைத்துக்கொள். பாம்பின் உடலில் முட்கள் இருக்கின்றன. அதுவும் லிங்கத்தைச் சுற்றி" என்றான்.

அலீமா ஏதும் புரியாமல் விழித்தாள். அந்தத் திட்டத்தையும் விளக்க லிங்கத்தைச் சுட்டிக் காட்டி, "புகாரில் இந்த இடத்தில் லிங்கமில்லை. ஆனால் சிவகணமான நாளங்காடி பூதமிருக்கிறது. ராணிக்குச் சொல் அலீமா! அவள் புரிந்து கொள்வாள். சித்திரா பௌர்ணமியன்று வீனஸ் விழா நடக்கட்டும். ராணிக்கு அன்று என் வாக்கை நிறைவேற்றுவதாகச் சொல்" என்றான்.

"என்ன வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள் படைத் தலைவரே?" என்று வினவினாள் அலீமா.

"அவளை மணப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன்" என்றான் படைத் தலைவன்.

அலீமா திகைத்து நின்றாள். படைத் தலைவன் மனம் ராணியிடம் லயிக்கவில்லையென்பதைப் புகார் வந்ததும் ராணியிடமிருந்தே அவள் அறிந்திருந்தாள். ஆகவே அவன் சொன்னது பெரும் திகைப்பாயிருந்தது அவளுக்கு. அதை வெளிக்குக் காட்டாமலும், மேற்கொண்டு எதுவும் பேசாமலும் குடிசையைவிட்டு வெளியே சென்றாள் அலீமா.

அன்றுவரை வாளாவிருந்த இளஞ்செழியன் மறுநாள் முதல் சுறுசுறுப்பைக் காட்டினான். அடுத்த பத்து நாட்களில் கரிகாலன் படைகள் பயிர்பச்சைகளையும் நீர் நிலைகளையும் அழித்துவிட்டதாகவும் மருத நிலத்துக் குடிகளை ஓட்டிவிட்டதாகவும் ஒற்றர்கள் செய்தி கொண்டு வந்தார்கள். நாகை வழியாகவும் பல குடிகள் பாய்களையும் பொருள்களையும், சுருட்டிக்கொண்டு உறையூரை நோக்கி வண்டிகளிலும், பாதசாரிகளாகவும் ஓடினார்கள். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு நாகைப் பாசறையிலிருந்து வீரர்களும் சென்றார்கள். அவர்கள் சுருட்டிச் சென்ற நீண்ட பாய்களில் வேல்களும், விற்களும் சென்றன. மாடுகள் இழுத்துச் சென்ற கால்நடைத் தீனி வண்டிகளில் தீ அம்புகளை எறியும் யந்திர வண்டிப் பகுதிகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுப் புதைந்து கிடந்தன. விரட்டப்பட்ட மருத நிலத்துக் குடிகள் வெண்ணியைத் தாண்டி ஓடினார்கள். வெண்ணியைத் தாண்டியதுமிருந்த தோப்புகளில் இளஞ்செழியன் வீரர்கள் பெரும்பாலார் மறைந்தார்கள். மீதிப்பேர் வெண்ணியில் தங்கினார்கள்.

அன்றிலிருந்து பதினைந்தாவது நாள் நாகைப் பாசறை அடியோடு கலைந்தது. நாகையிலிருந்த மரக்கலங்களும் கடலில் பாய் விரித்து மறைந்தன. பல நாட்களாகப் போர்

ஏற்பாடுகளுக்கு இருப்பிடமாக இருந்து வந்த நாகைத் துறைமுகத் தோப்பு வெறிச்சென்று கிடந்தது. கொல்லர் பட்டறைகள் மறைந்தன. மல்லர் அரங்குகள் மறைந்தன. நாகைப் பரதவரின் படகுகளும் வலைகளும் மறைந்தன. குப்பத்தின் குடிசைகள் மட்டுமே பழையபடி காட்சியளித்தன. அப்படிப் பழைய நிலையடைந்த மணல் மேட்டுக் குப்பத்தின் குடிசை வாயிலில் நின்ற கிழவி காத்தாயியின் திருவடிகளில் பணிந்தெழுந்த படைத்தலைவன், தனது இருநூறு புரவி வீரர்களுடன் வெண்ணியை நோக்கிச் சென்றான்.

வெண்ணியை அடையும் வரையில் மிகுந்த வேகத்துடன் புரவியைத் தூண்டி ஏதும் பேசாமலும் தீவிர சிந்தனையுடனும் சென்ற இளஞ்செழியன், வெண்ணிக்கு அரைகாத தூரம் முதலே கரிகாலன் படைக் காவல் மிகுந்து, பலமாயிருப்பதைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்தான். அரைக்கால் காதத்துக்கு ஒருமுறை காவல் வீரர்கள் தடுத்துத் தடுத்து விசாரித்த பின்பே தன்னையும் தன் வீரர்களையும் மேலே போகவிட்டதைக் கவனித்த இளஞ்செழியன், அணிவகுப்பு சரியாகவே அமைந்திருக்கிறதென்பதை அறிந்து மனத்திருப்தியுடன் தலையசைத்தான். தனது சிறு புரவிப் படை தடுக்கப்பட்ட ஒவ்வொரு இடத்திலும், படைகள் அணிவகுத்து எந்த நிமிஷத்திலும் கிளம்பத் தயாராக இருக்கும் முறையிலேயே தங்கியிருப்பதையும் பார்த்த படைத்தலைவன், மன்னன் போர்த் திறமையும் சாஸ்திர ரீதியாக அவன் கருட வியூகத்தை அமைந்திருக்கும் முறையையும் எண்ணிப் பெரிதும் வியந்து. 'பெரும் சாம்ராஜ்யத்தை நிறுவக்கூடிய திறமை இருக்கிறது மன்னருக்கு' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். கருடன் உடல்போல் வகுக்கப்பட்டுக் கிடந்த அந்த வியூகத்தினூடே சென்று அதன் முகப்புக்கு வந்ததும், தான் கூறியபடி கழுத்துப் பகுதியில் கரிகாலன் பாசறை அமைந்து கிடப்பதைக் கண்ட இளஞ்செழியன், புரவிமீது சற்று எழும்பி நின்று படைகள் இருந்த நிலையைக் கவனித்தான். அவன் எதிரே படைப் பிரிவு ஒன்று கருடன் மூக்குப்போல் நீண்டு கிடந்தது.

அந்த மூக்குக்குச் சற்று பின்னடைந்து எரிந்த இருபெரும் பந்தங்கள் கருடன் கண்களுக்கு அத்தாட்சியாக நின்றன.

பக்கத்துப் பகுதிகளில் கண்ணைச் செலுத்திய படைத் தலைவன், கருடனின் உடலில் ஒட்டிக் கிடக்கும் மடிந்த இறகுகளைப்போல் சற்று முன்னோக்கியும் பின்னடைந்தும் படைகள் முக்கோண வடிவத்தில் நிற்பதைக் கவனித்தான். இருபுறமும் கண்ணுக்கெட்டிய தூரம்வரையில் படைகளிருந்தன. படைகளைத் திடீரென இயக்க ஒலி கொடுக்கும் முரசுக்காரர் படை முகப்புகளிலெல்லாம் முரசும் கையுமாக நிற்பதையும் கொம்புகளை ஊதுவோரும் கொம்புகளைக் கயிற்றில் கட்டிக் கழுத்தில் தொங்கவிட்டுக்கொண்டு தங்கள் புரவிகளின் பக்கத்தில் நிற்பதையும் பார்த்தான் படைத் தலைவன்.

இரண்டிரண்டு குதிரைப் படைகளின் சதுக்கத்துக்கு இடையே காலாட்படைகள் நிறுத்தப்பட்டிருந்தன. வில்லவர் கூட்டங்களும் வேலெறிவோர் பிரிவுகளும் தனித் தனியே பிரிந்து நின்றன. அப்பொழுது முன்னிலவுக் காலமாதலால், ஏதோ பெரும் போர்ப் பிசாசு அந்த வெண்ணிப் பரந்தலையில் படுத்திருப்பதுபோல் தோன்றியது படைத் தலைவனுக்கு.

கரிகாலன் படைகளுக்கு நேர் எதிரே கூப்பிடு தூரத்தில் வெண்ணி நகரம் காட்சியளித்தது. அந்த நகரத்தைச் சூழ, கண்ணுக்கெட்டும் அளவுக்கு இருங்கோவேளின் பெரும் படை கிடந்ததற்கறிகுறியாக நெடுந்தூரத்திற்கொரு முறை பந்தங்கள் தெரிந்தன. தூரத்திலிருந்து அந்த நள்ளிரவிலும் இருங்கோவேளின் பெரும் யானைப்படைகள் எழுப்பிய பிளிறு சப்தங்கள் மிகப் பயங்கரமாக அந்த இரவை ஊடுருவிச் சென்றன. இதனால் இருங்கோவேள் யானைப் படையை முன்னணியில் நிறுத்தியிருப்பதை அறிந்த படைத்தலைவன் திருப்தி கொண்டானானாலும், எதிரிகளின் படைகள் வளைந்து கிடந்த மாதிரியிலிருந்தும், பந்தங்கள் எரிந்த தூரத்தை அளவெடுத்ததால் சுமார் நாற்பதினாயிரம் பேர்களுக்குக் குறையாமல் அந்த மூவர் படைகள் இருப்பதைக்

கண்டு, அத்தனை பெரிய படையை முறியடிக்க வேண்டுமானால் மன்னன் படையை எதிரிகள் சற்று அசிரத்தையாயிருக்கும்போதே இயக்கவேண்டுமென்று தீர்மானித்தான். அந்தத் தீர்மானத்துடனேயே அவன் கரிகாலன் பாசறைக்குள் நுழைந்தாள்.

அங்கு இரும்பிடர்த் தலையாருடனும் மற்றப் படைத் தலைவர்களுடனும் போர் முறையை நிர்ணயித்துக் கொண்டிருந்த கரிகாலன், இளஞ்செழியன் திடீரெனப் பாசறைக்குள் நுழைந்ததைக் கண்டு வியப்பு மட்டுமின்றிச் சினமும் கொண்டு, "படைத் தலைவரே! நாளைக் காலையில் போர் மூளப் போகிறது. நீங்கள் இருக்கவேண்டிய இடம் இது வல்லவே. கருடன் இறகின் ஆரம்பம் உங்கள் திட்டப்படி வெண்ணிக்கு அப்பாலிருக்க வேண்டுமே" என்றான்.

சீற்றத்துடன் மன்னன் உதிர்த்த சொற்களையோ, அதே சீற்றத்துடன் தன்னை நோக்கிய இதர படைத் தலைவர்களின் விழிகளையோ சிறிதும் சட்டை செய்யாத படைத் தலைவன், "மன்னவா! போரை நாளைக் காலை துவங்கமுடியாது. இன்றிரவே துவங்கவேண்டும். அதைச் சொல்லவே நான் வந்தேன். என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். நானிருக்குமிடத்திற்கு இன்னும் ஒரே ஜாமத்தில் போய்விடுவேன். இந்த இரவு இரண்டாம் ஜாமத்தில் நமது படைகள் எதிரிகளைத் தாக்கட்டும்" என்றான்.

"அதெப்படி முடியும்?" என்று மன்னன் உட்பட மற்ற எல்லோரும் ஒரே சமயத்தில் வினவினார்கள். சமீபத்தில் நாகலிங்கப் பூவின் விளைவாக மாற்றப்பட்ட தன் போர்த் திட்டத்தை அணுஅணுவாக விளக்கினான் படைத் தலைவன்.

திட்டத்தைக் கேட்ட இரும்பிடத்தலையார், "இது முடிகிற காரியமா?" என்று பெருங் குரலில் எரிந்து விழுந்தார்.

"ஏன் முடியாது?" என்று பதிலுக்கு உஷ்ணத்துடன் வினவிய படைத்தலைவன் மன்னனை நோக்கி, "மன்னவா! புரவி வீரர்களைத் துரிதமாக அனுப்பி இந்த முதல் ஜாமத்தில் படைப் பிரிவினைக்கு எச்சரித்து விடுங்கள். நடு நிசியில்

திடீரெனக் கருடவியூகத்தின் மூக்கு, அதுதான் இரும்பிடர்த் தலையாரின் முன்னோடிப் படை எதிரி அரண்கள்மீது எரி அம்புகளை வீசட்டும். உடனே எதிரிகள் வெளிவருவார்கள். நமது பந்தங்கள் ஆயிரக்கணக்கில் யானைப் படைமீது வீசப்படட்டும். அதில் உண்டாகும் குழப்பத்தில் பாம்பின் வாலும் தலையும் அரைகுறையாக வளையும். நான் வாலைத் துண்டித்து விடுகிறேன். தலையைத் தங்கள் வடப்புறப் படை துண்டிக்கட்டும். தாங்கள் மட்டும் இடையே எதிரிப் படைகளை நேராக ஊடுருவிச் சென்று வெண்ணி நகரைக் கடந்துவிடுங்கள். மீதி அலுவலை எதிரி தோப்புகளிலும், வெண்ணியிலுமிருக்கும் என் படை கவனித்துக் கொள்ளும்."

படைத் தலைவன் திட்டம் படைத் தலைவன் உயிரையே உறிஞ்சக்கூடியதென்பதை அறிந்த கரிகாலன் அதற்கு முதலில் ஒப்பவில்லை. "தனி மனிதன், தனிப்படைப் பிரிவுகள் இவர்கள் கஷ்டம் நாட்டுக்கு லாபமானால் அந்தத் தியாகத்தைச் செய்வது அவசியம்'' என்றான் படைத் தலைவன் உறுதியும் உணர்ச்சியும் நிறைந்த குரலில்.

வெண்ணிப் போர் படைத்தலைவன் திட்டப்படி அன்றிரவே மூண்டது. சரித்திரத்தில் நிகரற்ற அற்புதப் போர் அது. கரிகால் வளவனை வரலாற்றில் இணையற்ற வீரனாக வரைந்த அதிசயப் போர் அது. பெரும் படைகளைப் பெரும் தந்திரத்தால் சொற்ப உயிர்ச் சேதத்தில் பணிய வைக்க முடியும் என்ற உண்மையை முதன்முதலாக உலகுக்குப் பறை சாற்றிய போர் அது.

அந்தப் போர் அன்றைய இரண்டாம் ஜாமத்தில் துவங்கியது. ஜாமம் இரண்டு துவங்கிவிட்டதைக் குறிக்க ஆகாயத்தில் பூங்கொத்து போன்ற புஷ்பநக்ஷத்திரம் இடம் மாறியது. பறையறைவிப்போ, கொம்பூதலோ இல்லாமல் கருட வியூகத்தில் வகுக்கப்பட்ட பெரும்படை வெண்ணியை நோக்கி நகர்ந்தது. முன்னிலவு மங்கிக்கொண்டிருந்த சமயம் அது. இருள் மெள்ள மெள்ளக் கவியத் துவங்கியவிட்ட வேளை அது. காலதேவனே கருடனுருக்கொண்டு நகருவதுபோல்

கரிகாலன் பெரும்படை வெண்ணிப்பரந்தலையில் முன்னோக்கி நகர்ந்தது.

114. வெண்ணிப் போர்

தஞ்சையிலிருந்து பதினான்காவது மைலில் நாகைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் சாலைக்குப் பக்கத்தேயுள்ள கோவில் வெண்ணி என்ற சிறு கிராமத்தை இன்று பார்த்தால், அதற்கும் தமிழக வரலாற்றுக்கும் ஏதாவதொரு சம்பந்தம் இருந்திருக்க முடியும் என்று யாரும் நம்ப முடியாது. சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பாக, சோழர்களின் முக்கியப் படைத் தளங்களில் அது ஒன்றாயிருந்திருக்கலாம். அங்கு இன்றுள்ள ஒற்றை அக்கிரகாரமும், மற்றும் சில வீடுகளும், காலக் கூத்தால் மறைந்துபோன ஒரு சிறு நகரத்தின் மீது எழும்பியிருக்கலாம் என்று ஒப்புக் கொள்வது மிகவும் கஷ்டமாகவே இருக்கும். ஊரின் கிழக்குப் பகுதியில் கிழக்கு நோக்கி நிற்கும் ஸ்ரீ அழகியநாயகி அம்பாள் சமேத வெண்ணி நாத ஸ்வாமியின் சிறு ஆலயத்தையும், அந்த ஆலயச் சுவர்களில் பொறிக்கப்பட்டிருக்கும் 'சடையானை' முதலிய திருஞானசம்பந்தர் பதிகங்களையும், 'முத்தினைப் பவளத்தினை' என்ற திருநாவுக்கரசர் பதிகங்களையும் பார்வையிடுபவர்களில், வெண்ணியூர் என்னும் கோவில் வெண்ணி, சிறிய ஊராயிருந்திருந்தாலும் பெரிய ஸ்தலம் என்று மட்டும் ஒப்புக் கொள்வார்களே தவிர, அது சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம் என்று ஒப்புக்கொள்வது பிரும்மப் பிரயத்தனம். ஆனால் இன்றைய கண்கொண்டு நோக்காமல் வெண்ணிநாத ஸ்வாமியின் ஆலயத்துக்கெதிரே வெண்ணிப்போர் நடந்ததாகக் கூறப்படும் பெரும் பொட்டல் வெளியை ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்கினால், பெரும் போர் நிகழ்வதற்கு அந்த இடம் எத்தனை தகுதி என்பது புலப்படும். சுமார் பத்து சதுர மைல்களுக்கு மேற்பட்ட பெரும் பொட்டல் வெளி அது. எங்கோ தூரத்தில் சில மரங்களே தெரியும். படைகள்

அணிவகுத்து அங்கு தாராளமாக இன்று தங்கலாம். ஆனால் போரிடும் எந்தத் தரப்பினரும் எதிரி அறியாமல் தாக்குவது மட்டும் முடியாது. அதற்கு வசதியான மறைவிடங்கள் இல்லை. பக்கத் தோப்புகள் தூரத்தே இருக்கலாம். அவற்றின் மறைவு திடீர்த் தாக்குதலுக்கு இடம் கொடாது. அன்று வரலாறு கண்ட அந்தப் பொட்டல் வெளி, அந்த வெண்ணிப் பரந்தலை, இன்னும் பெரும் பொட்டல் வெளியாகவே காட்சியளிக்கின்றது.

சோழர் படை உபதலைவனான இளஞ்செழியன் திட்டப்படி கரிகாலன் பெரும்படை நிலவுமங்க முற்பட்ட அந்த இரண்டாம் ஜாமத்தில் மெள்ள மெள்ள அந்த வெண்ணிப் பொட்டல் வெளியில் வெண்ணி நகரை நோக்கி ஊர்ந்தது. பக்கங்களில் அரைக் காதமும், உள்ளளவில் அரைக் காதமும் அடர்த்தியாக நின்ற படைப்பகுதிகளை இயக்க மன்னவன் பறையறைக்கவில்லை, கொம்புகளைக் கொண்டு ஊதச் செய்யவுமில்லை, படைகள் இயங்கி எதிரிகளின் முற்பகுதி அணிவகுப்பை அணுகும் வரையில் அதிகம் ஆர்வம் கூடாதென இளஞ்செழியன் கூறியிருந்ததால், புரவி வீரர்களைப் பக்கப் பகுதிகளுக்கும் பிற்பகுதிப் படைகளுக்கும் வேகமாக அனுப்பி, அந்தப் படை பிரிவுத் தலைவர்கள் நடந்து கொள்ள வேண்டிய போர் முறையை அறிவித்தான். ஆகவே குறித்த நேரத்தில் கருட மூக்குப் பகுதியில் போரின் முன்னணியிலிருந்த இரும்பிடர்த்தலையார் தமது பெரும் புரவிமீது ஆரோகணித்து கையுயர்த்தித் தமது படைப் பகுதியை முன்னேறச் சைகை செய்தார். அந்த முன்படை ஊரத் துவங்கியதும் பின்படைகள் ஊர்ந்தன. அதே சமயத்தில் நீண்டு கிடந்த பக்கப் பகுதிகளும் அசைந்தன.

கரிகாலன் தன் இடையில் நீண்ட வாளைக் கட்டிக் கொண்டு கையில் பெரும் வேலேந்தி புரவிமீதமர்ந்து இரும்பிடர்த்தலையாரின் படைப் பிரிவுக்குச் சற்றுப் பின்னாலிருந்த தன் புரவிப் படைப் பிரிவின் முகப்பில் சென்றான். கையி

லேந்திய வேல் மட்டுமின்றி, புரவியின் கட்டுக் கயிறுகளிலும் இரண்டு மூன்று வேல்களைச் செருகியிருந்த மன்னவன் புரவியை மிக நிதானமாக நடக்கவிட்டான். மன்னவன் வழியைப் பின்பற்றிப் படைகளும் மெள்ள மெள்ளவே அசைந்தன. மன்னனைத் தொடர்ந்த புரவிப்படை மட்டு மின்றி, கருடனின் இரண்டு இறக்கைகளில், இடையிடையே யிருந்த புரவிப் படைகளும் காலாட்படைகளும் நகர்ந்து சென்றன. ஓரங்களில் ஆயிரம் ரதங்கள் மெல்ல உருண்டன. புரவியில் அமர்ந்து சென்ற வண்ணம் கரிகாலன் எதிரிகளின் அணிவகுப்பைப் பார்த்தான்.

பெரும் அர்த்த சந்திரன் போலும், வாலும் தலையும் கொண்ட கார்க்கோடகன் போலும், பிரும்மாண்டமாகக் கண்ணுக்கெட்டிய தூரம்வரையில் படர்ந்து கிடந்த எதிரிகளின் மாபெரும் படையின் இடையே வேளிர் குலத்தின் பெருங்கொடி பறந்தது. அதன் வலப்பக்கத்தில் சிறிது தூரம் தள்ளியிருந்த படைப் பிரிவின் நடுவில் சேரன் கொடியும், இடப்பக்கத்தில் அதே தூர நிர்ணயத்தில் பாண்டியன் மீன் கொடியும் மெல்ல அடித்துக் கொண்டிருந்த காற்றில் பட படத்தன. எதிரியின் படைகள் எந்தெந்த நாட்டுப்படை என்பதைக் குறிக்கத் தனித் தனியாகப் பிரித்து நிறுத்தப்பட்டி ருப்பதைக் கண்ட கரிகால்வளவன், அந்தப் பிரிவுகள் தெரிவித்த பிளவுகளில் புகாமல் நேர் எதிரில் சுவர்போல் நின்ற உறையூர் படைக்குள் தன்னை இளஞ்செழியன் ஏன் ஊடுருவச் சொன்னான் என்பதை நினைத்துப்பார்த்தான். ஒருவேளை வெளிப் பார்வைக்குச் சிறிது தூரம் மட்டும் படை களைப் பிரித்துக்காட்டி உள்ளே படைகளை இணைத்திருந் தால், திடீரெனப் பெரும்படை சுவரில்தான் மோதிக் கொள்ள வேண்டியிருக்கும் என்று நினைத்த மன்னவன் படைத் தலைவன் திட்டப்படி சரியாக நேர் எதிரில் வேளிர்களையே தாக்க உறுதி கொண்டான்.

படைகள் மெல்ல மெல்ல அரை ஜாமத்திற்குமேல் நகர வேண்டியதாயிற்று. படையை எதிரிகள்மீது மோதவிடு முன்பு

வெண்ணி நகரத்தின் பின்பகுதியில் பெரும் தீயை எதிர் பார்க்கும்படி இளஞ்செழியன் கூறியிருந்தபடியால், அதை எதிர்பார்த்தவண்ணம் கரிகாலன் மெதுவாகவே படைகளை ஊர்ந்து செல்லும்படி திட்டமாகப் பணித்திருந்தான். எதிரிப் படைகள் முன்னணியும் மெள்ள மெள்ள நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த முன்னணியை நெருங்குவதற்குச் சிறிது தூரமிருக்கையிலேயே இரண்டாம் ஜாமத்தின் இறுதிப் பகுதி வந்து மங்கிய நிலவும் அடியோடு மறைந்து இருள் நன்றாகக் கவிந்துகொண்டு விட்டதால் கரிகாலன் படை ஊர்ந்து வந்ததை எதிரிகளால் அறிய முடியவில்லை. தவிர இரவில் கொளுத்தப்பட்ட பந்தங்களை முதலில் படைத்தளமிருந்த இடத்திலேயே விட்டு விடும்படி கரிகாலன் உத்தரவிட்டிருந்த தால், தூரத்திலிருந்த எதிரிப் படையின் முன்னோடிகளின் கண்களுக்குக் கரிகாலன் படைகள் இருந்த இடத்திலேயே இருப்பதாகவே தெரிந்தன.

அதனால் முதலில் சற்று அயர்ந்துவிட்ட எதிரிப் படை முன்னோடிகள், இரும்பிடர்த் தலையாரின் முன்படை சற்று அணுகியதும் விஷயத்தைப் புரிந்துகொள்ளவே திடீரெனக் கொம்புகளை ஊதினார்கள். முரசுகளும் துரிதமாக டமடம வென அலறின. அவர்கள் கொம்புகளை ஊதியும், முரசுகளை ஒலித்தும் தங்கள் படைகளை எச்சரிப்பதற்கும், வெண்ணி நகரின் பின்பகுதியில் திடீரெனப் பெரும் தீ ஏற்படுவதற்கும் சரியாக இருக்கவே புரவியில் அமர்ந்திருந்த கரிகாலன் திடீரெனத் தன் கையிலிருந்த பெருவேலை உயர்த்தினான். அதுவரை கொளுத்தப்படாமலிருந்த கைகளில் வீரர்கள் கொண்டுவந்த புதுப் பந்தங்கள் திடீரெனக் கொளுத்தப்பட்டு எரிந்தன. ஊதப்படாதிருந்த கொம்புகள் பெரு வேகத்துடன் அலறின. முரசுகள் நூற்றுக்கணக்கில் பயங்கரமாகச் சப்தித்தன. காலாட்படைகளின் கைகளிலிருந்த பெருவேல்கள் திடீரென ஆகாயத்தில் பறந்து எதிரிகள் படைகளை நோக்கிச் சிவ்வென்று இறங்கின. ரதவீரர்களின் அம்புகள் பறந்தன. யந்திர வண்டிகளிலிருந்த பெரும் விற்கள் எரிபந்தங்களை

ஆகாய வாணம்போல் ஆயிரக்கணக்கில் வீசின. ரதங்கள் வேகமாக ஓடின. புரவிகளின் குளம்படிகள் எங்கும் ஒலித்தன. போர்த் தாரைகள் படைகளைப் பலவிதங்களில் இயக்க ஆங்காங்கு பல முறை சப்தித்தன. ரதங்களும், புரவிகளும், காலாட்படைகளும் மின்னல் வேகத்தில் மோதியதால் ஆகாயத்தை நானாவித பயங்கரச் சப்தங்கள் ஆக்கிரமித்தன.

திடீரென இப்படித் தாக்கப்பட்டதால் எதிரிகளின் முன்னணிப் படைகள் ஓரளவு சேதமடைந்தாலும், வெகு சீக்கிரம் ஊதப்பட்ட தாரைகளால் திடீரென விழித்தெழுந்து போருக்கு அணிவகுத்தன. அந்த அணிவகுப்பைக் குலைக்கக் கரிகாலன் தன் காலாட்களைக் கொண்டு முன்னிருந்த யானைப் படைகள் மீது வேல்களை வீசினான். சுழற் பந்தங்கள் யானைப் படைக்குள் ஆயிரக்கணக்கில் விழுந்தன. யானைகள் பிளறின. சில பாகர்களையும், தன் மீதிருந்த வீரர்களையும் துதிக்கைகளால் பிடித்து இழுத்துக் கீழே தள்ளித் துவைத்தன. மற்றும் சில நாலா பக்கங்களிலும் சிதறி ஓடிப் பக்கத்தேயிருந்த காலாட்படைகளையும் நாசம் செய்யத் தொடங்கின. அந்த நாசத்தால் கதறிய ஆட்களின் ஓலக் குரல்கள் வானைப் பிளந்தன.

அப்படி அவை நாசம் செய்யும்வரை படைகளை நேராக அணுக வேண்டாமென எச்சரித்த கரிகாலன், பக்கப் பகுதிகளிலிருந்த ரத வீரர்களையும், குதிரைப் படைகளையும் எதிரிகள்மீது ஏவினான். ஆரம்பத்தில் வெகு நஷ்டமும், குழப்பமும் அடைந்த எதிரிப் படைகளும் வெகு சீக்கிரம் குழப்பத்தை அடக்கிக்கொண்டு அணிவகுத்துக் கரிகாலன் படைகள்மீது மோதின. இரவுத் தாக்குதலை எதிர்பார்க்காத தாலும், அப்படித் தாக்குதலிருந்தாலும் முன்னோடிக் காவல் வீரர்கள் எச்சரிக்கை செய்யத் தவறமாட்டார்கள் என்ற நினைப்பாலும், பாசறையில் வெண்ணி நகரில் நிம்மதியாக இருந்த இருங்கோவேளும், பெருஞ்சேரலாதனும், பாண்டி யனும் இந்தத் திடீர்த் தாக்குதலைக் கேட்ட மாத்திரத்தில் தங்கள் தங்கள் படைகளின் முன்னணிக்கு விரைந்தனர்.

அங்குள்ள குழப்பத்தையும், நட்ட நடுவில் முன்னணியிலிருந்த இருங்கோவேளின் இரண்டாயிரம் யானைப் படைகள் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட ஆள், பொருள் சேதத்தையும் கண்ட அம்மூவரும் யானைகள் திமிர் பிடித்து ஓடிய மத்தியப் பகுதியை விட்டு, பக்கப் பகுதிகளின் படைகளை இயக்க சர்ப்ப வியூகத்தின் வாலையும், தலையையும் மெள்ள எதிரி களை நோக்கி இறக்கலானார்கள்.

சர்ப்பத்தின் வாலும் தலையும் மெள்ள இறங்கித் தன் படையைச் சூழ வருவதைக் கவனித்த கரிகாலன், அதைப் பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யாமல் யானைப் படைகள் மீது மேலும் மேலும் அம்புகளையும் வேல்களையும் எறிய உத்தர விட்டு, அந்த யானைப் படை மிரண்டு திரும்பி ஓடியதால் கிடைத்த பாதையிலேயே இரும்பிடர்த் தலையாரை முன்னேறச் சொல்லி, வெண்ணிக்குள் தன் படையின் மத்தியப் பகுதியுடன் நுழைந்தான்.

சேரனும், பாண்டியனும் பாம்பின் வால் பக்கத்திலும், தலைப் பக்கத்திலும் இருந்ததாலும், யானைகள் பெருஞ் சேதத்தை விளைவித்ததாலும், இருங்கோவேளும் வேளிர்களும் மட்டும் நேராகக் கரிகாலனுடனும் இரும்பிடர்த் தலையாருடனும் மோத வேண்டிய நிலை ஏற்பட்டது. இருங் கோவேளின் வஞ்சகக் கண்கள் பாண்டியன் படையும் சேரன் படையும் பக்கவாட்டில் எதிரிகளிடமிருந்து சற்றுத் தூரத்துக் கப்பால் அவர்களை வளைக்க இறங்குவதைக் கண்டன. அவற்றால் வெகு சீக்கிரம் எதிரிகள் வளைத்துக்கொள்ளப் படுவார்களென்ற எண்ணத்தில் இரும்பிடர்த் தலையாரை எதிர்க்கும் திட சித்தத்துடன் இதர வேளிர்களுடன் வெகு வேகமாக முன்னேறி வந்தான்.

எதிரே வேளிர் படை புடைசூழ வந்த இருங்கோ வேளைக் கண்டதும் இரும்பிடர்த்தலையாரின் பெருமீசை பயங்கரமாக ஒரு முறை அசைந்தது. கண்கள் தீயைக் கக்கின. தமது பெரும் வாளைப் பலமுறை சுழற்றி கசாப்புக் கடைக்

காரன் ஆடுகளை வெட்டுவதுபோல் எதிரிவீரர்களை வெட்டிக்கொண்டு அவனிருந்த இடத்தைக் குறி வைத்துக் கொண்டு புரவியை நகர்த்தினார் பிடர்த்தலையார். சற்றுப் பின்னாலிருந்த கரிகாலனும் இருங்கோவேளைப் பார்த்தான். தன் தந்தை இளஞ்சேட்சென்னியும், தன் தாயும் தூக்கத்திலிருந்த சமயத்தில் அவர்கள் மாளிகைக்குத் தீ வைத்து மாள வைத்த அந்தப் பாதகனைத் தன் கையால் கொல்லவேண்டுமென்ற ஆவேசத்தில் திடீரெனப் புரவியை வேகமாகச் செலுத்தி, சுழற்றிய வாளுடன் எதிரிகளிடையே பாய்ந்து சென்றான். கரிகாலன் தன்னை நெருங்குவதற்கு முன்பாகவே படைகளைத் திடப்படுத்திக் கொண்ட இருங்கோவேளும் அவனைச் சந்திக்கத் தயாரானான். இந்தச் சமயத்தில் அவன் எதிர்பாராத வேறொரு குழப்பமும் ஏற்படவே, தன் பழைய குற்றங்களுக்குப் பலன் கிடைக்கும் நேரம் நெருங்கிவிட்டதென்ற எண்ணமும் அந்தப் பாதகன் நெஞ்சில் முளைத்ததால் அவன் முகம் பயத்தால் பெரிதும் விகாரப்பட்டது. வெண்ணி நகரத்தின் பின் பகுதியில் திடீரெனப் பேரரவம் கேட்டது. திரும்பி நோக்கினான் இருங்கோவேள். வெண்ணி நகரத்தின் பின் பகுதிகள் தீக்கிரை யாக்கிக் கொண்டிருந்தன. அங்கு கிளம்பிய தீ ஜ்வாலைகள் பல இடங்களில் செங்குத்தாக எழுந்தன.

அதே சமயத்தில் பாண்டியன் வடபுறத்தில் நடத்தி கரிகாலனைச் சூழவிட்ட படையைத் தூரத்தேயிருந்து பின் புறத்தில் நுழைந்த புரவி வீரர்களின் பெரும் படையொன்று வெட்டி விட்டதால், அங்கும் போர்க் கோஷம் கிளம்பி ஆகாயத்தில் நானாவித ஒலிகளைப் பரப்பியது. அதற்காகவே காத்திருந்தனபோல் பெரும் வேல்கள் சில பந்தங்களுடன் எங்கிருந்தோ ஆகாயத்திலிருந்து பறந்து வந்து தென் புறத்தில் இறங்கிய சேரன் படையில் வீழ்ந்தன. மறு வினாடி சேரன் படைக்குள் பொறி வண்டிகள் பல புகுந்து பெரும் சேதத்தை விளைவிக்கத் தொடங்கியதால் பிரமை பிடித்த

பெருஞ்சேரலாதன் நடப்பது யுத்தமா, ஜால வித்தையா என்று தீர்மானிக்க முடியாமல் கலங்கினான். தன் படைகள் வெகு துரிதமாகப் பலமான காலாட்படையால் பின்புறம் தாக்கப் படுவதை உணர்ந்தான் சேர மன்னன்.

இப்படித் திடீரென நாக வியூகத்தின் தலைப் பகுதியும், வால் பகுதியும் தாக்கப்பட்டதாலும், வெண்ணிக்குப் பின் புறம் தீ ஜ்வாலைகள் கிளம்பியதாலும் ஏதோ தந்திரம் நடந்திருக்கிறதென்பதை உணர்ந்து கொண்ட இருங்கோவேள் அவற்றுக்குக் காரணம் புரியாமல் கலங்கினான். அப்பொழுது படைகளை விலக்கிக் கொண்டு வெகு வேகமாக வந்த புரவித் தூதன் ஒருவன் இருங்கோவேளை அணுகி, "மன்னவா! நாம் ஊருக்குள் பின்புறம் தாக்கப்படுகிறோம். அங்கு உதவி தேவை என்று நகரப் படைத்தலைவர் கூறுகிறார்" என்றான் இரைக்க இரைக்க.

"என்ன உளறுகிறாய்?" என்று சீறினான் இருங்கோவேள்.

"எதிரிப் படையினர் பலர் மருத நிலத்துக் குடிகள் போல் நமது படையில் பரவிவிட்டனர். திடீரென்று சற்று முன்பு உக்கிராணங்களுக்குத் தீ வைத்து விட்டார்கள். ஆயுதங் களுடன் தாக்கவும் கிளம்பிவிட்டார்கள். எங்கிருந்தோ கொம்புகளை ஊதிக் கொண்டு குதிரை வீரர்கள் வந்தார்கள். அந்த வீரர்களைக் கண்டதும், 'இளஞ்செழியன்! இளஞ் செழியன்!' என்ற கூக்குரல் எங்கும் கேட்கிறது. ஒன்றும் விவரம் புரியவில்லை" என்றான் தூதன்.

இருங்கோவேளுக்கு விவரம் மெள்ள மெள்ளப் புரிந்தது. இளஞ்செழியனின் போர்த் தந்திரம் தன் பெரும் படையை ஆபத்துக்குள் சிக்க வைத்து விட்டதை உணர்ந்தான். "இப்பொழுது நான் ஊர் மத்திக்கு வரமுடியாது. முடிந்த வரையில் நகரத் தலைவனையே சமாளிக்கச் சொல்" என்று தூதனுக்கு உத்தரவிட்ட இருங்கோவேள், அதற்குமேல்

அலட்சியம் செய்யாமலும், ஏற்பட்ட இடையூறுகளால் சிறிதும் சளைக்காமலும் வீராவேசத்துடன் எதிரிப் படைகளுக் கிடையே பாய்ந்தான்.

சர்ப்ப வியூகத்தின் தலையும் வாளும் துண்டிக்கப் பட்டும் இருங்கோவேளிருந்த மத்தியப் பகுதியும் உடைக்கப் பட்டும் எதிரிகளின் எண்ணிக்கை அதிகத்தின் காரணமாகப் போர் இரண்டு ஜாமங்கள் தொடர்ச்சியாக நடந்தது. பொழுது விடிந்து கதிரவன் கிளம்பிய போதுதான் போர் முடியும் அறிகுறிகள் தென்பட்டன.

எந்த மண்மீது ஆசை வைத்துப் பெரும் தீச் செயல்களை ஆயுளில் புரிந்தானோ அந்த மண்மீது கரிகாலன் வேல் மார்பில் ஊடுருவி நிற்க, மண்ணைக் குருதி நனைக்க, மாண்டு கிடந்தான் இருங்கோவேள். குருதியை விடச் சிவப்பான தன் கிரணங்களை அந்தப் போர்க் களத்தின்மீது பாய்ச்சிக் கொண்டு கிளம்பிய கதிரவன், பாண்டியனும், சேரனும் படைகளுடன் பின்வாங்குவதைக் கண்டு தீ விழி விழித்தான்.

அந்தப் போர்க்களத்தே வீழ்ந்து கிடந்த இருங்கோ வேளுக்கருகே மற்ற வேளிர்களும் மாண்டு கிடந்தார்கள். அந்தச் சடலங்களுக்கிடையே, உடம்பில் கணக்கில்லாக் காயங்களுடனும், குருதியால் நனைந்த உடையுடனும் ஜெயஸ்ரீயுடனும் நின்றிருந்தான் கரிகாலன். வெண்ணிப் போர் ஒரு வழியாக முடிந்தது. மீதிப் படைகளைத் திரட்டிக் கொண்டு சேரனும், பாண்டியனும் வெகு வேகமாகப் பின்வாங்கிக் கொண்டிருந்தார்கள். எங்கும் ஜயகோஷம் வானைப் பிளந்தது. தமிழகம் வியந்தது. தமிழகமென்ன வெளிநாட்டிலிருந்து வந்தவனும் பெரும் போர்களை நடத்தி யிருப்பவனுமான டைபீரியஸே வியந்தான். அந்த வியப்புடன் ராணிக்கு வெண்ணிப் போரின் விந்தைகளைச் சொல்ல அவள் அறையையும் நாடிச் சென்றான். அவன் அந்தப் போரை விவரிக்க விவரிக்க ராணியின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. அந்தப் போரை நேரில் பார்ப்பது போல் அவள் நீலமணிக் கண்களில் கனவுச் சாயை படர்ந்தது.

115. பட்டு முள்

வெண்ணிப் போரைப் பற்றிய விந்தைச் செய்திகளைச் சொல்ல இந்திர விழா விடுதியின் மாடியிலிருந்த ராணியின் அறைக்குள் வெகு வேகமாக டைபீரியஸ் நுழைந்தபொழுது ராணி அந்த அறையின் தென்புறச் சாளரத்தின் வழியாகக் கீழே ஓடிக்கொண்டிருந்த பொன்னியின் பெரும் நீர்ப் பரப்பையும், தூரத்தே தெரிந்த அதன் சங்கமத் துறையையும், சங்கமத் துறையைத் தாண்டிச் சிறிது தூரத்தில் கடலில் ஆடிக் கொண்டிருந்த மரக்கலங்களையும் பார்வையிட்ட வண்ணம் ஆழ்ந்த யோசனையிலிருந்தாள். அறையில் நுழைந்த வேகத் தின் காரணமாக இரும்புப் பட்டயங்களால் இணைக்கப்பட்ட டைபீரியஸின் பாத அணிகள் டக் டக்கென ஒலி எழுப்பியுங்கூட அதைச் சிறிதும் காதில் வாங்கிக்கொள்ளாம லும், காவிரியையும் கடலையும் விட்டுக் கண்களை அகற்றா மலும் நின்ற இடத்திலேயே நின்றிருந்தாள் ராணி. அப்படி முதுகுப்புறத்தை வாயிலுக்குக் காட்டி நின்ற நேரத்திலும் அவளுக்கு இருந்த அரச தோரணையைக் கண்ட டைபீரியஸ், அத்தகைய ஒரு ராணியைத் தனது நாடு பெற்றெடுத்ததை நினைத்துப் பெருமை கொண்டானானாலும் அந்தப் பெருமையை பூர்த்தி செய்யும் முறையில் ராணி நடந்து கொள்ளாமல் தமிழன் ஒருவனிடம் இதயத்தைப் பறி கொடுத்து, அவனுக்காகத் தான் தமிழகம் வந்த பணியையும் புறக்கணித்திருப்பதை நினைத்து ஓரளவு கோபமும் கொண்டான். ராணியே அவள் உரிமைக்கும், யவனர் ஜோதிடர் வாக்குக்கும் முரணாக நடந்து கொண்டாலும், அவளையும் மீறி அவளைத் தமிழகத்தின் ஒரு பகுதிக்கு ராணி யாக முடி சூட்டிவிடுவது தனது கடமையெனத் தீர்மானித் திருந்த யவனர் கடற்படைத் தலைவன், அப்படி ராணியாக முடி சூடப்போகும் அவள், தமிழகத்தில் புதிதாக ஏற்பட்டுள்ள அரசியல் நிலையை உணர்ந்து கொள்வது அவசியமென்று கருதியே அவளுக்கு அதை எடுத்துச் சொல்லவும், தன்

வல்லமையை ஓரளவு காட்டவும் அவள் இருப்பிடத்தை அடைந்தான். தான் வந்த நேரத்தில் தீர்க்கலோசனையில் இருந்த ராணி கவனத்தைத் தனக்காக இழுக்க இருமுறை தனது தொண்டையையும் கனைத்துக் கொண்டான்.

அப்படி அவன் கனைத்தும் ராணி சாளரத்திலிருந்து உட்புறம் திரும்பவில்லை. மாலை நேரத்தில் பொன்னியின் புனல் பொன்னாகவே விளங்கியதைக் கண்டு அதன் எழிலில் உள்ளத்தைப் பறி கொடுத்ததன்றி, பொன்னியிலிருந்து கடலுக்குத் தாவிய தன் நீலமணிக் கண்களைப் பொன்னியின் அக்கரையில் தெரிந்த வாணகரைக் கோட்டைமீதும் செலுத்தினாள். கண்கள் அந்தக்கோட்டை மீது நிலைத்த சில வினாடிகளில் அவை அவள் இதயத்தை அந்தக் கோட்டைக் கும் கோட்டையில் நிகழ்ந்த பழைய கால சம்பவங்களுக்கும் இழுத்துச் சென்றன. புகாரின் கடற்கரையில் தான் புரண்ட நாளாகத் தனக்கும் இளஞ்செழியனுக்கும் ஏற்பட்ட இணைப்புக் கட்டங்கள் பலவும் அவள், கண் முன்னெழுந்து தாண்டவமாடவே, 'அவருக்குச் சொந்தமல்லவா இந்த வாண கரை?' என்று ஏதோ புதிதாகக் கண்டுபிடித்து விட்டவள் போல் தனக்குத் தானே சொல்லிக் கொண்டு அதிலும் ஒரு மனக் கிளர்ச்சியையும் மகிழ்ச்சி வெள்ளத்தையும் அடைந் தாள் யவன நாட்டுப் பேரழகி. வாணகரைக் குன்று என்ன, கோட்டை என்ன, அவற்றையும், தான் இருந்த இந்திர விழா மாளிகையையும் இணைத்தோடிய பொன்னியின் புனல் கூடத் தனக்கும் இளஞ்செழியனுக்கும் எத்தனையோ உறவு முறைகளை ஏற்படுத்தி விட்டதை அவள் எண்ணிப் பார்த்தாள். 'உறையூரிலிருந்து டைபீரியஸுடன் தாங்கள் வந்த சமயத்தில் இந்தப் புனல் எங்கள் படகைத் தாங்கி வந்தது உண்மைதான். ஆனால் என் மடிதானே அவரைத் தாங்கி வந்தது?' என்று கேட்டு அந்தக் கேள்வியில் ஒரு இன்பத்தையும் அடைந்தாள் ராணி. அப்படி அவள் இன்பப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அவள் கையிலிருந்தது ஒரு

நாகலிங்கப் பூ. அதைத் தன் அழகிய நாசியில் வைத்து முகர்ந்து சில வினாடிகள் கண்களையும் மூடினாள்.

அவளுடைய இத்தனை சிந்தனைக்கும் இடம் கொடுத்துப் பலவினாடிகள் தாமதித்த டைபீரியஸ் அதற்கு மேலும் பொறுக்க முடியாமல், "ராணி! அடிமை வணங்கு கிறேன்" என்று மேலுக்கு வெகு மரியாதையாகவும் குரலில் சிறிது கடுமையைக் காட்டியும் அவள் கவனத்தைத் தன்னிடம் திருப்ப முயன்றான். இடது கையில் நாகலிங்க மலரைப் பிடித்து நாசியில் முகர்ந்த வண்ணம் மெள்ளத் திரும்பினாள் ராணி. அப்பொழுதும் அவள் கண்கள் அந்தப் பழைய கனவுலகத்திலேயே இருந்ததால் அவள் பதிலேதும் சொல்லாமல் சிறிது நேரம் டைபீரியஸை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவள் கண்களிலும் முகத்திலும் சிந்தனை ரேகை அதிக மாகப் படர்ந்து கிடந்ததைக் கவனித்த டைபீரியஸ், மீண்டு மொருமுறை அவளை நோக்கித் தலைவணங்கி, "ராணி பெரும் சிந்தனையிலிருப்பதாகத் தெரிகிறது" என்று பேச்சைத் துவக்கினான்.

"சிந்தனைக்குச் சிறை கிடையாது டைபீரியஸ். அது உனக்கும் தெரிந்திருக்க வேண்டுமே?" என்றாள் ராணி பதிலுக்கு, தனது குரலில் சிறிது அலட்சியத்தையும் வெறுப்பையும் காட்டி.

ராணி சொன்ன பதிலில் சூட்சுமத்தைப் புரிந்து கொண்டான் டைபீரியஸ். தான் அவள் நடவடிக்கைகளை ஓரளவு கட்டுப்படுத்தி வைத்திருப்பதையே ராணி குறிப்பிடு கிறாளென்பதை அறிந்துகொண்ட யவனர் கடற் படைத் தலைவன் அதை அறியாதவன்போல, "ராணிக்கு எதிலும் சிறையிருக்க முடியாது. குடிகளுக்குச் சிறையுண்டு, தடை யுண்டு. அவற்றை விதிப்பதே முடிசூடும் வர்க்கம். அப்படி யிருக்க முடிசூடும் ராணிக்குச் சிந்தனைச் சிறையென்ன எந்தச் சிறைதான் இருக்கமுடியும்!" என்றான்.

ராணி மெள்ள நகைத்தாள். அவள் நீலமணிக் கண்களில் அதுவரையிருந்த கனவு மறைந்தது. இகழ்ச்சிக் குடி கொண்டது. "இப்பொழுது உன் ராணியிருப்பது சிறை யல்லவா?" என்று கேட்டாள் இகழ்ச்சி தன் குரலிலும் தொனிக்க.

டைபீரியஸின் கூர்விழிகள் அவள் கண்களைச் சிறிதும் சலனமின்றி நோக்கின. அவன் பதிலும் உறுதியுடன் வெளி வந்தது. "சிறை வேறு, கட்டுப்பாடு வேறு ராணி" என்றான் டைபீரியஸ்.

"இப்பொழுது நான் கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கிறேன். சிறைக்குள் அல்ல, அப்படித்தானே?" என்றாள் ராணி.

"ஆம் ராணி! கட்டுப்பாட்டுக்குள் தானிருக்கிறீர்கள், சிறையல்ல." திட்டமாக வந்தது டைபீரியஸின் பதில்.

"இரண்டுக்கும் என்ன வேறுபாடு?"

"குற்றத்தை முன்னிட்டு அளிக்கப்படுவது சிறை. கடமையை முன்னிட்டு விதிக்கப்படுவது கட்டுப்பாடு."

"விதித்தது நீதானே?"

"இல்லை."

"வேறு யார்?"

"யார் விதித்தது என்று கேட்காதீர்கள். எது விதித்தது என்று கேளுங்கள்."

"சரி, எது விதித்தது?"

"சம்பிரதாயம்."

"சம்பிரதாயமா?" ராணி குரலில் சிறிது ஆச்சரியத்தைக் காட்டினாள்.

ஆனால் அவளுக்குப் பதிலிறுத்த டைபீரியஸின் குரலில் ஆச்சரியம் ஏதுமில்லை. உணர்ச்சி மிகுந்த குரலில் பேசினான் யவனர் கடற்படைத் தலைவன். "ஆம் ராணி! சம்பிரதாயம் பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. கடமைக்கும் சம்பிரதாயத்தின் கட்டுப்பாட்டுக்கும் முடிசூடும் பேரரசர் களாயிருந்தாலும் வணங்கித்தானாக வேண்டும். ஏனென்றால்

அந்தக் கடமைகளும் கட்டுப்பாடுகளும் அவர்கள் நன்மையை யும் மக்கள் நன்மையையும் முன்னிட்டு மூதாதையர்களால் வகுக்கப்பட்டவை. அரசர்களின் இருப்பிடங்களுக்குக் காவல். அவர்கள் வெளியே செல்லும்போது காவல். விழாக்களில் கலக்கும்போதும் காவல். இத்தகைய காவல்கள், காரணமாகத் தான் வைக்கப்பட்டிருக்கின்றன. முதலாவதாக இத்தகைய கட்டுக்காவல் அவர்களுக்குப் பாதுகாப்பை அளிக்கின்றன. இரண்டாவதாக மக்களுக்கு அவர்களிடம் மதிப்பை ஏற்படுத்துகின்றன. மூன்றாவதா..." என்று சொல்லிக் கொண்டு போன டைபீரியஸ் மூன்றாவதாக என்ற இடம் வந்ததும் சற்றுப் பேச்சை நிறுத்தினான்.

ராணி அவனைச் சரேலென ஒருமுறை நிமிர்ந்து நோக்கினாள். அந்த வேகத்துடன் வந்தது அவள் சொற்களும், "மூன்றாவதாக? சொல் டைபீரியஸ்?" என்று சீறினாள் அவள்.

"மூன்றாவதாக அவர்களிடமிருந்தே அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன" என்றான் டைபீரியஸ் தலையைச் சிறிது தாழ்த்தி.

"விளங்கச் சொல் டைபீரியஸ்" என்றாள் ராணி கோபத்துடன்.

"ஒருவேளை அரசர்கள் மனம் கடமையிலிருந்து வழுவ யத்தனிக்குமானால் இந்தக் கட்டுக்காவல் அதற்குப் பெரும் இடையூறாயிருக்கும்" என்றான் டைபீரியஸ் மிக மெதுவான குரலில்.

அத்துடன் அந்தப் பேச்சை முடித்துவிட நினைத்தான் டைபீரியஸ். ஆனால் ராணி விடவில்லை. "இத்தனை கட்டுக் காவலையும் மீறி அரசர்கள் தங்கள் இஷ்டப்படி நடக்க விரும்பினால்" என்று வினவினாள்.

"அதற்கும் அரச நீதியில் வழி இருக்கிறது" என்றான் டைபீரியஸ்.

"என்ன வழி?"

"அரசர்கள் நடத்தை அவர்கள் நாட்டு நலனுக்கு முரண்பாடாக அமையுமானால் அதைக் கட்டுப்படுத்துவது அமைச்சர்கள் கடமை."

"ஏன், படைத் தலைவர்கள் கடமையல்லவா?"

"அவர்களுக்கும் அந்தக் கடமை உண்டு."

"அந்தக் கடமையை முன்னிட்டுத்தான் என்னைச் சிறை வைத்திருக்கிறாயா?" என்று கடுங்கோபத்துடன் கேட்டாள் ராணி.

டைபீரியஸின் ஆஜானுபாகுவான சரீரம் இதைக் கேட்டதும் அறையின் கூரையையே தொட்டுவிடுவதுபோல நன்றாக உயர்ந்தது. அவன் கண்கள் வாளின் நுனியை விடக் கூர்மை பெற்றுப் பளிச்சிட்டன. அவன் வலிய உதடுகள் ஒரு முறை மடிந்து திறந்தன. சொற்கள் அம்புகளென உதிர்ந்தன. "சிறை என்று சொல்வதைவிடக் கட்டுப்பாடு என்று சொல்வது அரச நீதிக்கு மிகவும் பொருந்தும் ராணி. நீங்கள் மட்டும் இந்த நாட்டுக்கு வந்த காரணத்தை எண்ணிப் பார்த்து அதன்படி நடந்திருந்தால் இத்தனை நாள் யவன அரசு இங்கு நிறுவப்பட்டிருக்கும். நீங்களும் பெயருக்கு மட்டும் ராணியாயி ராமல் உண்மை ராணியாக இன்று இங்கு அரசு புரிந்து கொண்டிருப்பீர்கள். ஆனால் தமிழன் ஒருவனிடம் சிந்தையைப் பறிகொடுத்துக் கடமையை மறந்தீர்கள். கடமையை மறந்தது மட்டுமல்ல. கடமையை நிறைவேற்ற முனைந்த எனக்கும் பெரும் இடைஞ்சலாகச் செயல் புரிந்தீர்கள். உங்களைப் போல் நானும் கடமையைக் காற்றில் விட்டிருந்தால் இந்தப் புகார்கூட இன்று நம் வசமிருக்காது. யவனர்கள் தமிழர்களிடம் நிரந்தரமாக அடிமை வாழ்வு வாழ வேண்டியதாயிருந்திருக்கும். அந்த அடிமைத் தளையை உடைக்க உறுதி கொண்டுள்ளேன் ராணி. அதற்கு இடை யூறுகள் பல இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் அவற்றைக் கண்டு நான் அஞ்சவில்லை. யார் எதிர்த்தாலும் யவன சோதிடர்கள் சொல் பலித்தே தீரும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. சந்தேகமிருந்தால் இன்று

இங்கிருக்கமாட்டேன். தமிழகம் இன்றுள்ள நிலைமையில் புகாரிலிருந்து பயணப்பட்டிருப்பேன்" என்றான் டைபீரியஸ்.

"இன்றுள்ள நிலைமையா?" என்று ஏதும் புரியாமல் விளவினாள் ராணி.

டைபீரியஸ் உடனே பதிலிறுக்காமல் ஒரு வினாடி நிதானித்தான். பிறகு நிதானமாகச் சொன்னான்: "வெண்ணிப் போர் முடிந்துவிட்டது ராணி" என்று.

மெள்ள உதிர்ந்த அந்த நான்கே சொற்கள், அவற்றில் லேசாகத் தொனித்த டைபீரியஸின் கவலை, இவற்றின் உள்ளர்த்தத்தை நன்றாகப் புரிந்து கொண்டாள் ராணி. வெண்ணிப் போர் முடிந்து விட்டது என்று டைபீரியஸ் சொன்னாலும், அவன் முகபாவம் அது எப்படி முடிந்து விட்டதென்பதைத் தெளிவாகத்தான் தெரிவித்தது. இருந்தாலும் அவன் வாய்ப்பட விஷயத்தை அறிந்து கொள்ள எண்ணிய ராணி, "அப்படியா!" என்றாள் இயற்கையாக வெளிப்படாத வியப்பைச் செயற்கையாகக் குரலில் காட்டி.

"ஆம்" என்றான் டைபீரியஸ், ராணியே முடிவு பற்றிக் கேட்கட்டுமென்று. 'அவள் கேட்கட்டும். அவள் முகத்தைக் கவனிக்கிறேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் டைபீரியஸ்.

ஆனால் கேள்வி கேட்ட ராணியின் குரலில் எந்தவித உணர்ச்சியும் ஏற்பட்டதாகவே தெரியவில்லை. "எப்படி முடிந்தது டைபீரியஸ்?" என்று சாதாரணமாகவே கேட்டாள் அவள்.

"நமது எதிரிகள் வெற்றியடைந்தார்கள்" என்றான் டைபீரியஸ்.

"யார் நமது எதிரிகள்!" என்று குரலில் சலனம் ஏதுமின்றி ராணி வினவினாள்.

"நமது விரோதிகளானாலும் நமது நண்பர்களின் விரோதிகளானாலும் ஒன்றுதானே?"

"ஆம்."

"நம்முடன் நட்புரிமை கொண்டு நமக்குப் புகாரைச் சாஸனம் செய்தது இருங்கோவேள்."

"ஆமாம்."

"அவனுக்கு உற்ற நண்பர்களாய் நின்றவர்கள் பாண்டியனும் சேரனும்."

"உண்மை."

"அந்த மூவருமே முறியடிக்கப்பட்டார்கள்" என்று சொற்களை நன்றாக அழுத்திச் சொன்னான் டைபீரியஸ்.

ராணியின் கண்கள் வியப்பினால் மலர்ந்தன. அவள் விற்புருவங்கள் ஏதோ கேள்வி அம்புகளைத் தொடுப்பன போல் மேலும் வளைந்து முகத்தில் எழுந்தன. "அத்தனை பெரிய படையையா மன்னர் கரிகாலர் திரட்டியிருந்தார்?" என்று கேட்கவும் செய்தாள் ராணி.

கரிகாலனைப்பற்றி மிகுந்த மரியாதையுடன் ராணியின் வாயிலிருந்து உதிர்ந்த சொற்களைக் கவனித்தும் கவனிக்காதவன் போலச் சொன்னான் டைபீரியஸ்: "இல்லை ராணி! கரிகாலன் படை இருங்கோவேளின் படையில் நான்கிலொரு பங்குதான்" என்று.

"அப்படியும் கரிகாலரா வென்றார்! விசித்திரமாயிருக்கிறதே டைபீரியஸ்!" என்று ராணி தனது ஆச்சரியத்தின் எல்லையைக் குரலிலும் காட்டினாள்.

"இதில் விசித்திரம் ஏதுமில்லை ராணி" என்ற டைபீரியஸின் குரலில் உறுதியும் வியப்பும் கலந்து உதிர்ந்தன.

"விசித்திரமில்லையா?" என்று வினவினாள் ராணி.

"இல்லை."

"நான்கு மடங்கு பெரிய படையைச் சிறுபடை முறியடித்தது விசித்திரம் இல்லையா?"

"இல்லை. ஏனென்றால் படைபலம் வெற்றியடையவில்லை."

"வேறெது வெற்றியடைந்தது?"

"புத்திபலம். போர்த் தந்திரம்."

"புரியவில்லை டைபீரியஸ்."

"புரியும்படி சொல்கிறேன், கேளுங்கள் ராணி" என்று கூறிய டைபீரியஸ் வெண்ணிப் போர் விவரங்களை விளக்கலானான். "இந்தப் போரில் கரிகாலன் வீரத்துக்கும் பங்கு உண்டு. ஆனால் அதைவிடப் பெரிய பங்கு இந்தப் போர்த் திட்டத்தை வகுத்தவனுக்கு உண்டு. போர் நுட்பங்களை அணு அணுவாக அறிந்த சிறந்த படைத் தலைவன் ஒருவனின் மதியே இந்த வெற்றியைச் சம்பாதித்து அளித்திருக்கிறது. இந்த வெற்றியை அளித்தவன் முதலில் நாகையின் கடற்கரையில் சிறிய படைத் தளத்தை அமைத்தான் எனது கண்களில் மண்ணைத் தூவ. வெண்ணிக்கும் நாகைக்குமிடையே படையிருந்ததால் நான் புகாரிலிருந்து இருங்கோவேளின் உதவிக்கு விரையமாட்டேனென்பதை அவன் அறிந்திருக்க வேண்டும். அதில் நமக்கு ஆபத்து இருக்கிறது. நான் நாகைக்குச் சென்றால் கடல் மார்க்கத்தில் அவன் மரக்கலங்களை அனுப்பிப் புகாரைத் தாக்கலாம்..." என்று சொல்லிக் கொண்டு போன டைபீரியஸை இடைமறித்த ராணி, "புகாரை எப்படிப் பிடிக்க முடியும்? இங்குள்ள கோட்டைக் காவலர் வாளா விருப்பார்களா? அல்லது இந்த மாளிகை மீதிருக்கும் இரு பெரும் யந்திரத்தூண்கள் இயங்காதிருக்குமா?" என்று கேட்டாள்.

"இவற்றின் பாதுகாப்பு சாதாரண எதிரியைச் சமாளிக்க முடியும். ஆனால் இளஞ்செழியனைப் போன்ற திறமை சாலியைச் சமாளிக்க முடியாது. அதற்கு யந்திரத் தூண்கள் போதாது, சிந்தனைத் தூண்கள் தேவை" என்ற டைபீரியஸ் விஷமமாகப் புன்முறுவல் செய்தான்.

"என்ன! சோழர் படை உபதலைவரா! அவர் இன்னும் உயிருடனிருக்கிறாரா?" என்றாள் ராணி.

"ராணி! பசப்பு வார்த்தைகள், ஏமாற்று வித்தைகள் நமக்குள் இன்றுடன் நிற்கட்டும்" என்று சுடு சொற்களை உதிர்த்த டைபீரியஸ், அவளை நோக்கி இரண்டடி எடுத்து வைத்து, "நன்றாகக் கேளுங்கள் ராணி! முதலில் எனக்குப்

புரியவில்லை, இப்பொழுது புரிந்து கொண்டேன். முகக் கவசமணிந்து புகாரில் உலவிய யவனர் மரக்கலத் தலைவன் நாகையில் பாசறை அமைத்தவன், பிறகு பாசறையைத் திடீரெனக் கலைத்துப் படைகளை மருதநிலத்துக் குடிகளுடன் கலக்கவிட்டு எதிரி உடலிலேயே வெண்ணியிலும் அதற்கப்பாலும் படரவிட்டவன், போரை இரவில் இருளில் துவக்கியவன், சமயத்தில் வெண்ணியில் கால் நடைத் தீவனங்களில் தீயெழுப்பி இருங்கோவேள் படையைத் திடீரெனத் தாக்கியவன் இத்தனையும் ஒருவன்-நீங்கள் யாரிடம் இதயத்தைப் பறிகொடுத்து நிற்கிறீர்களோ அந்த இளஞ்செழியன். இப்பொழுது கிடைக்கிறது ராணி நான் விடை காணாத பல புதிர்களுக்கு விடை" என்று சொல்லிக் கொண்டு போன டைபீரியஸ் ராணியின் கையிலிருந்த புதுவகைப் புஷ்பத்தைப் பார்த்து, "அது என்ன பூ ராணி?" என்று கேட்டான்.

ராணியின் நீலமணிக் கண்கள் மீண்டும் கனவுலகத்தில் சஞ்சரித்தன. வெண்ணிப் போரை மனக் கண்ணால் கண்டாள் அவள். அப்படிக் கனாக் கண்டுகொண்டே மஞ்சத்தை நோக்கிச் சென்று அதில் அமர்ந்து நாகலிங்க மலரை நாசியில் நன்றாக முகர்ந்து மூச்சை இழுத்தாள்.

அந்த மலரை இமைகொட்டாமல் பார்த்த டைபீரியஸ், "ராணி! அந்த மலரை இப்படிக் கொடுங்கள்" என்று கேட்டான்.

ராணி மலரை நீட்டினாள். அதைக் கையில் வாங்கிய டைபீரியஸ் அதன் அமைப்பைப் பார்த்து, "இந்த மலரைப் புகாரில் நான் கண்டதில்லையே?" என்றான்.

"இது புகாரில் கிடையாது."

"இதன் பெயர்?"

"நாகலிங்கப் பூ"

"நாகையில் கிடைக்குமா?"

டைபீரியஸ் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. ராணியிடமிருந்து அந்த மலரை வாங்கி அதை நீண்ட நேரம் ஆராயந்தான். பிறகு முறுவல் கொண்டான். "இந்த மலர் பல விஷயங்களை விளக்குகிறது ராணி" என்றான்.

"என்ன விஷயங்கள் அவை?" என்று ராணி வினவினாள்.

"இந்த நாகத்தின் உடலிலேயே பட்டு முட்கள் இருக்கின்றன" என்று டைபீரியஸ் பதில் சொன்னான்.

"ஆமாம்" என்றாள் ராணி.

"உடம்பில் முட்களை வைத்துக்கொள்வது ஆபத்து. பட்டு முள்ளாயிருந்தாலும் எடுத்துவிட வேண்டும்" என்றான் டைபீரியஸ்.

"அத்தனை ஆபத்தா பட்டு முள்?" என்று ராணி வினவினாள்.

"ஆமாம். வேண்டுமானால் நீங்களே பாருங்கள்" என்ற டைபீரியஸ் கைகளை இருமுறை தட்டினான். ராணியின் அறைக் கதவு திடீரெனத் திறக்கப்பட்டது. வாயிற்படிக்கு அப்புறத்தில் அலீமா இரு யவன வீரர்களுக்கிடையில் சிறைப் பட்டு நின்றாள்.

"என்ன இது?" என்று சீறிக்கொண்டு எழுந்தாள் ராணி.

"பட்டு முள்" என்று பெரிதாக நகைத்தான் டைபீரியஸ், நகைத்தது மட்டுமல்ல, புஷ்பத்திற்குள்ளிருந்த பட்டு முள்ளொன்றைக் கிள்ளியும் எறிந்தான்.

116. சிலந்தி வலை

அரபு நாட்டு அழகியும், தன் ஆருயிர்த் தோழியுமான அலீமா யவன வீரர் இருவருக்கிடையே சிறைப்பட்டு நின்றதையும், அப்படி அவள் சிறைப்பட்டு நின்றதைத் தனக்குச் சுட்டிக் காட்டிப் பெருநகை நகைத்த டைபீரியஸ், நாகலிங்கப் பூவிலுள்ள பட்டு முள்ளொன்றை அலட்சியமாகக் கிள்ளியெறிந்ததையும் கண்ட யவனராணி, யவன கடற் படைத் தலைவன் உள்ளத்திலோடிய எண்ணங்களைச் சந்தேகத்துக்கிடமின்றிப் புரிந்து கொண்டாளாகையால்,

யவன நாட்டு வெண்கற்சிலை போலிருந்த அவள் முகம் கோபத்தால் குப்பென அந்திவானம்போல் சிவந்ததன்றி, நீலமணிக் கண்களும் ஈட்டிகளெனக் கூர்மை பெற்று டைபீரியஸை எரித்து விடுவனபோல் பார்த்தன! டைபீரியஸின் சொற்களின் விளைவாக திடீரென அவள் தன் அறை வாயிற்படியை நோக்கித் தலையைத் திருப்பியதால் கொண்டையிலிருந்து சற்றே பிரிந்து, கோபத்தால் விநாடி நேரம் சிவந்த முகத்தில் தொங்கிய நாலைந்து மயிரிழைகள் செவ்வொளிக்கு முன்பு ஊழ்சலாடிய தங்கக் கம்பிகளெனத் திகழ்ந்ததன்றி, அவள் அழகிய புருவங்களும் திடீரெனச் சுளித்து நாசிக்கு மேலே நெருங்கி நின்றன. அவள் ஆசனத்திலிருந்து திடீரென எழுந்து வேகத்துடன் தன் மேலாடையைத் தோளுக்கு இழுத்ததால், அவள் அழகிய இடக்கையின் மேல்பாகத்தில் இணைந்து கிடந்த அன்னப்பறவை ஆபரணமும் வெளிப்பட்டு, அவள் உள்ளத்தே அலை மோதிய உணர்ச்சிகளை அறிந்துகொண்டதுபோல் மிகவும் சிவப்பான தன் கண்களால் டைபீரியஸை உற்று நோக்கியது. பளிங்குக் கல்லில் கைதேர்ந்த சைத்ரிப்னொருவன் தீட்டிவிட்ட செம்பருத்தியின் இதழ்களைப்போல் செக்கச் செவேலென்றிருந்த ராணியின் அதரங்கள் லேசாக நடுங்கவும் செய்தன. ராணியின் ஒவ்வொரு பார்வையையும் அங்க அசைவையும் கவனிக்கத் தவறாத டைபீரியஸ், எந்தச் சந்தர்ப்பத்திலும் உணர்ச்சிகளுக்கு அதிகமாக இடம் கொடாத ராணியின் உணர்ச்சிகள் அலீமாவின் நிலையைக் கண்டதும் இயற்கையான அவள் உறுதி கரையையும் உடைத்துக்கொண்டு வெளிக் கிளம்பிவிட்டதை நினைத்து, 'உணர்ச்சிகளை வெளிக்குக் காட்டாத ராணியைச் சமாளிப்பதைவிட உணர்ச்சி வசப்பட்ட ராணியைச் சமாளிப்பது வெகு சுலபம்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாலும், தன் நினைப்பைச் சிறிதும் வெளிக்குக் காட்டாமல் லேசாகப் புன்முறுவல் செய்துகொண்டு நின்ற இடத்தைவிட்டு அசையாமலும், தானாக வேறெதுவும் பேசாமலும் நாகலிங்கப்பூவில் பாதிப் பார்வையையும், மீதிப்

பாதிப் பார்வையை ராணிமீதும் நிலைக்க வைத்துக் கொண்டே நின்றான். அப்படிச் சில விநாடிகள் நின்ற டைபீரியஸின் இதழ்களில் மலர்ந்திருந்த புன்சிரிப்பு விநாடிகள் கழியக் கழிய மெல்ல மெல்ல அகன்றது. அவன் இதழ்கள் கவலைக்கறிகுறியாகப் பழையபடி படியவும் தொடங்கின. ராணியின் முகத்தில் பிரவாகித்த உணர்வு வெள்ளம் சில விநாடிகளுக்குள் மறைந்துவிட்டதையும், லேசாகத் துடிப்பைக் காட்டிய அவள் செவ்விய இதழ்களும் உறுதியுடன் நிலைத்துவிட்டதையும் கண்ட டைபீரியஸ், அவள் இதயத்தின் கடினத்தை நினைத்துப் பெரும் வியப்பும் கவலையும் ஒருங்கே கொண்டான். ராணியின் வாயிலிருந்து அடுத்த சில விநாடிகளில் உதிர்ந்த சொற்கள் அந்தக் கவலையை இன்னும் அதிகமாக்கின.

அநாதையாக அடிமைபோல் யவன வீரருக்கிடையில் சிறைப்பட்டு நின்ற அலீமாவைப் பார்த்ததும் ஏற்பட்ட உணர்ச்சிப் பிரவாகத்தால் சிவந்த அவள் வதனத்திலிருந்து சிவப்பு மறைய ஆரம்பித்ததும், நீலமணிக் கண்கள் சர்வ சாதாரணமாக அலீமாவையும் பார்த்து டைபீரியஸையும் திரும்பி ஒருமுறை நோக்கின. அவள் உதடுகள் டைபீரியஸை நோக்கிக் கேள்வியை வீசியபோது சிறைப்பட்ட ராணி பயத்துடன் கேட்கும் கேள்வியாக அது வெளிவரவில்லை. மகுடம் புனைந்த மகாராணி தனது படைத் தலைவனை விசாரிக்கும் ஒலி அதில் மண்டிக் கிடந்தது.

"என்ன குற்றத்திற்காக அலீமாவைச் சிறை செய்திருக்கிறாய் டைபீரியஸ்?" என்று வினவினாள் ராணி, தனது பொற் கொண்டையிலிருந்து பிரிந்து தொங்கிய தங்கக் கம்பிகளை இடதுகை விரல்களால் அகற்றி மீண்டும் கொண்டைக்குத் திருப்பிக் கொண்டே.

டைபீரியஸும் சாதாரணமாகவே பதில் சொன்னான். "ராணிக்கு எதிராகச் சதி செய்த குற்றம்."

சிறைப்பட்டு நின்ற அந்தச் சமயத்திலும் அலீமாவின் அழகிய விழிகள் ஆச்சரியத்தைக் கக்கின. மன உறுதியில்

இணையற்ற அந்த இருபெரும் எதிரிகள் திடீரென உணர்ச்சிகளை உண்டாக்கிக் கொண்டதையும், சர்வசாதாரணமாக அரசியல் விவகாரங்களைப் பேசுவதுபோல் பேசத் தொடங்கிவிட்டதையும் கண்ட அலீமா, உண்மையில் அவர்கள் இருவர் போராட்டமும் அப்பொழுதுதான் துவங்கியிருக்கிறதென்பதை உணர்ந்தாளாதலால், அவர்கள் பேச்சு எத்தகைய உருவெடுக்கிறதென்பதைக் கவனிப்பதிலே தன் கருத்தைச் செலுத்தினாள்.

டைபீரியஸின் பதிலைக் கேட்ட ராணி ஆச்சரியம் ததும்பிய விழிகளை அவன்மீது நாட்டி, "என்ன! அலீமா எனக்கெதிராகச் சதி செய்தாளா?" என்று வினவினாள்.

"ஆம் ராணி!"

"நம்ப முடியவில்லையே டைபீரியஸ். என் அந்தரங்கத் தோழியாவது, எனக்கெதிராகச் சதி செய்வதாவது?"

"அலீமா தங்களுக்கு அந்தரங்கத் தோழி, எனக்கு அவள் அந்தரங்க சீடப் பெண்."

"ஆம் டைபீரியஸ்."

"அவளுக்கு மரக்கலமோட்டுவதிலும் மரக்கலப் போரிலும் பயிற்சியளித்ததே நான்தான்."

"உண்மைதான்."

"அவளை நான் என் மகளுக்கு மேலாக மதித்தது, பாராட்டி வந்தது யவன நாட்டில் எல்லோருக்குமே தெரியும்."

டைபீரியஸ் ஒரு நிமிடம் பேச்சை நிறுத்தி அலீமாவைக் கூர்ந்து நோக்கிவிட்டுத் தன் கண்களைத் தரையில் தாழ்த்திக் கொண்டான். யாரையும் எதிர்த்துத் திட்டமாக நோக்கும் டைபீரியஸின் கண்களே தரையை நோக்கித் தாழ்ந்ததைக் கண்ட ராணி, அவன் உள்ளம் பெரிதும் நெகிழ்ந்துவிட்டதை உணர்ந்தாள். டைபீரியஸ் தரையைப் பார்த்துக்கொண்டே பேசினான். அவன் குரல் உறுதியாயிருந்தாலும் அதில் ஒரு

பலவீனம் ஏற்பட்டுவிட்டதை ராணி மட்டுமல்ல அலீமாவும் கண்டாள். "ராணி" என்று ஆரம்பித்து ஒரு விநாடி பேச முடியாமல் திணறிய டைபீரியஸ் மிகுந்த சிரமத்துடன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு சொன்னான்: "ராணி! மகளுக்குத் தந்தையே தீமை புரியும் நிலை ஏற்படும்போது அவன் மனநிலை என்ன பாடுபடும் என்று எண்ணிப் பாருங்கள். அந்த மன நிலையில் நானிருக்கிறேன். உங்கள் தந்தையின் உத்திரவுப்படி அலீமாவை அடிமைச் சந்தையில் விலை பேசி வாங்கியவனும் நான். பிறகு அவளுக்கு மரக்கலப் போர் முறைகளைக் கற்பித்தவனும் நான். சிறு வயது முதல் உங்கள் தந்தையைப் போல் நானும் அவளுக்கு ஒரு தந்தையாகவே இருந்திருக்கிறேன். என் மனைவி இறந்ததும் நான் மறுமணம் புரியவில்லையென்பது உங்களுக்குத் தெரியும். 'அவனுக்கு மரக்கலம்தான் மனைவி, போர்க்கலம்தான் துணைவி' என்று உங்கள் தந்தை பல நாட்கள் என்னைப் பார்த்து நகைத்திருக்கிறார். வாழ்வில் நான் மறுமண இன்பத்தை விரும்பவில்லை. வேறு சுகங்களை நாடவில்லை, என்நாட்டுக்குப்பணி புரிவதையே இன்பமாகவும், சுகமாகவும் கொண்டேன். அத்தகைய வாழ்க்கையில், பந்தபாசமற்ற துறவி வாழ்க்கையில் என் உள்ளத்தே ஒரு மகள் புகுந்தாள். அவள்தான் இந்த அலீமா. என் மகள்மீது எனக்குள்ள பிரியம் யவன நாடு அறியும். இலி-ஆஸு மட்டும் அவளுக்குச் சுதந்திரமளிக்க நம்மிடமிருந்து அழைத்துச் செல்லாதிருந்தால், யவன நாட்டில் என் மாளிகையில் என் பெரும் சொத்துக்களின் உரிமைப் பெண்ணாக அலீமா வாழ்ந்திருப்பாள். ஆனால் இலி-ஆஸு அவளை அழைத்துச் சென்றான். அவள் சாம்பிராணி நாடு சென்றபின் பல நாட்கள் அலீமாவை நினைத்து ஏங்கினேன். வாழ்க்கையில் ஏதோ ஒரு ஒளி மறைந்துவிட்டது போலிருந்தது எனக்கு. ஆனால் உங்கள் தந்தை அந்தத் துயரத்தைத் தீர்த்தார். உங்களை என் கையில் ஒப்படைத்து, 'இவளைத் தமிழகத்தில் ராணியாக்கு' என்று உத்தரவிட்டார். அலீமாவின் உறவு

ஒளியை இந்தக் கடமை ஒளி மெல்ல மறைத்தது. என் இதயத்தில் யவன சாம்ராஜ்யம் விரிந்தது. தமிழருக்கு அடிமையாகத் தமிழகத்தில் யவனர் சேவை செய்ய அவசியமில்லை என்ற எண்ணம் விரிந்தது. அந்தச் சுதந்திர ஒளி பெரும் ஜோதியாக மலர்ந்தது. அந்த ஜோதியில் மூழ்கி உங்களை அழைத்துக் கொண்டு இங்கு வந்தேன். வந்தும் என்ன? பெண்கள் பெண்களே என்பதைக் கண்டேன். எந்த ராணிக்கு முடிசூட்ட வந்தேனோ அந்த ராணி யவனர்களுக்கு விரோதியானார்கள். எந்த மகளுக்கு மனத்தில் இடங் கொடுத்தேனோ அந்த மகளும் என் நாட்டு மக்களின் விரோதியாக மாறினாள். இருவரும் அந்தப் படைத் தலைவன் அழகு வலையில் சிக்கிக் கொண்டீர்கள்."

இப்படிப் பேசிக்கொண்டு போன டைபீரியஸுக்குக் குறுக்கே ஒரு வார்த்தைக் கூடச் சொல்லாத அலீமா, கடைசியாகப் பேசியதைக் கேட்டதும் குறுக்கே புகுந்து ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அவள் பேச முற்பட்டு, சற்று உதடுகளை அசைத்த சமயத்தில் தரையிலிருந்து கண்களை நிமிர்த்திய டைபீரியஸ் தனது வலது கையை உயர்த்தி, "நில் அலீமா! எதுவும் பேச வேண்டாம். பிறர் உணர்ச்சிகளை அறிய முடியாத அத்தனை முட்டாளல்ல நான். பெண்கள் உணர்ச்சி வசப்பட்டவர்கள் என்று உலகத்தில் பெரும் நூல்கள் அனைத்தும் கூறுகின்றன. காதலுக்காகக் கடமையையும் நாட்டையும் பெற்றோர்களையும் துறந்த பெண்மணிகளின் கதைகள் எல்லா நாடுகளிலும் மலிந்து கிடக்கின்றன. இளவரசன் பாரிஸுக்காகக் கட்டிய கணவனையும் சொந்த நாட்டையும் துறந்த ஹெலனின் பெருங்கதை இன்னும் நமது நாட்டில் வழங்கி வருகிறது. பெண் சிருஷ்டி பலஹீனமான சிருஷ்டி. ஆண் மகனாயிருப்பவன் அந்த பலஹீனத்தையும் மீறி, அவசியமானால் பெண்களை அடக்கித் தன் பணிகளை நிறைவேற்ற வேண்டும். உலக சாம்ராஜ்யங்கள் பெண்களால் அழிந்த கதைகள் உண்டு. பெண்களால் சாம்ராஜ்யத்தை நிறுவியதாகக் கதைகள் கிடையாது. ஆகவே சாம்ராஜ்யங்களை

நிறுவும்போது பெண்களின் மனக்கிடக்கையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அது வீரர்கள் கடமை. அந்தக் கடமையைத்தான் இன்று நான் செய்கிறேன். அன்னப் பறவை ஆபரணத்தைக் கண்டதும் வணங்க வேண்டியவை என் தலையும் உள்ளமும். வணங்கத்தான் செய்கின்றன. ஆனால் நீண்ட காலம் அதை வணங்க வழி வகுக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, அந்த ஆபரணத்தை அணிந்துள்ள என் ராணியைக் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டியிருக்கிறது! என் அருமை மகளைச் சிறைசெய்ய வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு பணிகளையும் நான் விரும்பிச் செய்கிறேனென்று நினைக்கிறீர்களா? இல்லை, இல்லை. விருப்பமின்றியே செய்கிறேன். யவனர் நலன், யவனர்பேரரசின் விஸ்தரிப்பு, இவை சம்பந்தப்படும்போது என் விருப்பு வெறுப்புக்களை நான் கவனிப்பதில்லை..." என்ற டைபீரியஸ் மீண்டும் அவ்விரு பெண்களையும் கவனித்தான்.

இருவர் முகங்களிலும் ஈயாடாதிருப்பதைக் கண்டு அவர்களிருவரும் விவரிக்க இயலாத உணர்ச்சிகளில் சிக்கியிருப்பதை உணர்ந்து கொண்டானாகையால், அவர்களிடமிருந்து பதிலெதையும் எதிர்பார்க்காமல் அறையில் உலாவிக் கொண்டு மேலும் பேசிக்கொண்டு போனான். "இந்தப் புகாரில் நான் காலெடுத்து வைத்த நாள் முதல் நடந்ததையெல்லாம் அடிக்கடி எண்ணிப் பார்க்கிறேன் ராணி. எண்ணி எண்ணிப் பார்க்கிறேன், வியப்படைகிறேன். எதை நாடி இந்தத் தமிழகம் வந்தோம்! 'என்னென்ன நடந்து விட்டது! சுமார் ஒரு வருஷம் முடிவதற்குச் சில மாதங்கள் இருக்கும் போதே என்ன விந்தைகள நிகழ்ந்து விட்டன' என்று நினைத்து வியக்கிறேன். நீங்கள் இந்த மண்ணில் புரண்ட நாளன்றே சோழமண்டல மன்னன் மாண்டான். இளவல் மறைந்தான். இருங்கோவேள் கைக்கொண்டான் சோழப் பேரரசை. சில நாட்களில் புகாரும் நம் வசப்பட்டது. இத்தனை துரிதத்தில் கிடைத்த பலன் நிரந்தரமாக நிலைத்திருக்கும். ஒரு மனிதன் குறுக்கிடாவிட்டால். அவன் குறுக்கிட்டான். பல

யவன வீரர்களையும் என்னையும் மீறி, முடிசூட வேண்டிய ராணியைக் கருவூருக்குத் தூக்கிச் சென்றான். மகுடாபிஷேகத்தைத் தடை செய்தான். மயக்கத் துளிகளையளித்து அவனைக் கப்பலேற்றினேன். தப்ப முடியாத அந்தக் கப்பலிலிருந்து தப்பினான். அலீமா அவனுடன் வந்திருப்பதிலிருந்து இலி-ஆஸுவையும் ஏமாற்றி அவன் திரும்பிவந்திருக்கிறான் என்பது தெரிகிறது. எப்படித் தப்பினான்! பெரும்விந்தை ராணி, பெரும்விந்தை! ஆனால் விந்தை நடந்திருக்கிறது, விந்தையா, விதியா! எனக்கே புரியவில்லை.....

"திரும்பி வந்தான். திரும்பி வரும்வரையில் எனக்குக் கவலையில்லை. சில சில விஷமங்கள் இடையே நடந்தன. பிரும்மானந்தர் அந்தச் சமணத் துறவியை வேவு பார்க்க அனுப்பினார், பொற்கொல்லனாக. கரிகாலனும் இரும்பிடர்த் தலையாரும் புகாரிலேயே ரகசியப் படை அமைத்தார்கள். இவற்றையெல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் அறிந்தேன். கவலைப்படவில்லை. அந்த ரகசியப்படையை எந்த விநாடியிலும் நசுக்கியிருப்பேன். வீணாகப் புகாரில் சண்டையைக் கிளறவேண்டாம், அவசியமான போது நசுக்கலாம் என்றிருந்தேன். இவையல்ல தொந்தரவுகள். நான் ஒரு கண்ணை அந்தத் திக்குகளில் வைத்தேயிருந்தேன் ராணி. கருத்துடனிருந்தேனே யொழியக் கவலைப்படவில்லை. ஆனால், மீண்டும் வந்தான் படைத் தலைவன். மரக்கலத் தலைவன் தலை மூடியுடன் திரிந்தபோதே சந்தேகப்பட்டேன். உங்களை அவன் அந்தப் பழைய மாளிகைக்கு வரவழைத்துப் பேசிய வரையில் இடங் கொடுத்தேன். அதற்குமேல் அவன் இன்னானென்று அறியத் தீர்மானித்தேன். என் ஏற்பாடுகளிலிருந்து தப்பினான். மீண்டும் என் மனத்தில் கவலை முளைத்தது. இடையே வெண்ணிப் போர் விளைந்தது. நமது நண்பர்கள் முறியடிக்கப் பட்டார்கள்." இப்படிப் பேசிக் கொண்டு போன டைபீரியஸ் பேச்சைச் சற்று நிறுத்தினான்.

அலீமா ராணியையும், ராணி அலீமாவையும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டார்கள். இருவர் முகங்களும்

பெரிதும் இளகிக் கிடந்தன. டைபீரியஸின் அசைக்க முடியாத உறுதியும் கடமையில் அவனுக்குள்ள கருத்தும் அவ்விருவர் இதயங்களையும் பெரிதும் நெகிழச் செய்திருந்தன. அவர்கள் இருவரும் மௌனமாகவே நின்றார்கள். டைபீரியஸே மேலும் சொன்னான்: "நான் மட்டும் முன்னேற்பாடுகளைச் சரிவரச் செய்திருக்காவிட்டால் நாம் இத்தனை நேரம் யவன நாட்டுக்கும் பயணப்பட்டிருக்க வேண்டும். கரிகால் வளவன் மன்னனானதும் முதன் முதலாக புகாரைத் திரும்பப் பிடிக்கத் தான் யத்தனிப்பான். அப்படி ஏதாவதொரு நிலைமை ஏற்பட்டால் புகாரைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் பல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். ராணி! எதிரிகள் புகாரை எளிதாகப் பிடித்துவிடலாம் என்று நினைத்தால் அது பகற்கனவாகும். இந்த இந்திர விழாவிடுதியின் மேலிருக்கும் பொறித் தூண்கள் கால் காதத்திற்கு மேல் ஆயுதங்களை விசிறும் வல்லமை வாய்ந்தவை. யவன ஆயுத நிபுணர்களும் சிற்பிகளும் சென்ற ஆறுமாதங்களாக அவற்றின் பொறி இயங்கும் வகைகளைப் பலப்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் தூண்கள் இயங்க முற்பட்டால் புகாரைச்சுற்றி கால் காதத்துக் குள் மரக்கலங்களோ தரைப் படைகளோ வரமுடியாது. இதுதவிர காவிரியை அணைந்து நிற்கும் விடுதிகளின் மாடி களிலெல்லாம் யவன வீரர்கள் இரவும் பகலுமாகப் புகாரின் நீர்ப்பாதைகளையும் தரைப் பாதைகளையும் கவனித்து வருகிறார்கள். புகாரை குண வாயிற்கோட்டத்திலிருந்தும், உறையூரிலிருந்தும், அணுகும் நெடுஞ்சாலைகளைப் புகாரின் முகப்பில் நெடுஞ்சுவரெடுத்துத் தடுத்திருக்கிறேன். இப்பொழுது அலீமாவிடமிருந்து கைப்பற்றிய எட்டு மரக் கலங்களும் இனி கடல் மார்க்கத்தையும், காவிரியின் சங்கமத் துறையிலிருந்து புகாரின் மேற்கெல்லை வரையிலுள்ள கரையையும் கவனித்து நிற்கும். கடற்கரையோரமுள்ள புகாரின் பெரும் கோட்டைச் சுவர்களிலும், காவிரிக் கரையோரமுள்ள விடுதிகளின் சுவர்களிலுமுள்ள இருப்புத் தளைகளை அகற்றிவிட்டேன். இத்தளைகளில் வலைகளை

வீசி ஏறிவரும் பரதவரும் புகாருக்குள் நாமறியாமல் புகமுடியாது. புகார் முழுவதும் யவனர் காவலிருக்கிறது. இந்த எட்டு மாதங்களில் ஆயுதங்களைப் பெரிதும் திரட்டியிருக்கிறேன். இளஞ்செழியனை அனுப்பிய அதே மரக்கலத்தில் இந்நாடு வந்த இரு யவன ஆயுதச்சிற்பிகளை இங்கேயே தங்கவைத்து, தமிழர் இதுவரை காணாத புதுப்புது ஆயுதப் பொறி வண்டிகளைத் திரட்டியிருக்கிறேன். நமது வீரர்கள் எதிரிகளை எதிர்க்கத் தயாராயிருக்கிறார்கள். புகாரை இப்பொழுது வெல்வது அவ்வளவு எளிதல்ல. தவிர உடனே இதைத் தாக்கவும் கரிகாலனுக்கு வசதியில்லை" என்றான் டைபீரியஸ்.

இதுவரை பேசாதிருந்த ராணி கேட்டாள், "ஏன் வசதியில்லை?" என்று.

"சேரர் பாண்டியர் படைகள் வாகைக்குப் பின்வாங்கியிருக்கின்றன. அங்கு அவற்றை முறியடித்த பிறகுதான் கரிகாலன் புகாரை நோக்கி வர முடியும். ஆனால் அது சாத்தியமல்ல. இரு போர்முனைகளுக்குப் பிறகு சற்றும் இளைப்பாறாமல் சைன்னியங்கள் மூன்றாவது போர் முனைக்குத் திரும்புவதும் சாத்தியமில்லை. ஒருவேளை வாகையிலும் கரிகாலனுக்கு வெற்றி ஏற்பட்டாலும் அவன் இங்கு வரமாட்டான். உறையூர் சென்று முடிசூடுவான். படைகளுக்கு இளைப்பாற அவகாசம் கொடுப்பான். தவிர அடைந்த அரசை திடப்படுத்திக் கொள்ளவும் முயலுவான். இந்த இடைக்காலம் ஒரு மாதமிருக்கும். அந்த ஒரு மாதத்தில் இங்கு யவனர் அரசு நிறுவப்பட வேண்டும். புகார் இன்னும் பலப்படுத்தப்படவேண்டும். இந்த இடைக் காலத்தில் இந்தப் புகாரின் உடலில் முளைக்கும் முட்களைக் கிள்ள வேண்டும். வெண்ணியின் நிலைமை இங்கு ஏற்பட நான் அனுமதிக்கப் போவதில்லை. என்னையறியாமல் இளஞ்செழியனோ அவனது படைகளோ புகாருக்குள் நுழைய முடியாது. நுழைந்தாலும் நுழைந்த இரண்டொரு நாட்களில் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்படுவார்கள்" என்ற டைபீரியஸ், மீண்டும்

ராணியை நோக்கி, "ராணி! இன்றிலிருந்து பதினைந்தாவது நாள் தமிழர் கொண்டாடும் சித்திரா பௌர்ணமி தினம். இந்திர விழா கோலாகலமாக நடக்கும் பொன்னாள் அது. அந்த நாளில் இம்முறை இந்திரவிழா நடக்காது. கிரேக்க நாட்டுக் காதல் தெய்வம் வீனஸின் திருவிழா நடக்கும். இந்த இந்திர விழா மாளிகையே இப்பொழுது வீனஸின் திருமாளிகை. வீனஸின் அழகிய உருவத்தை யவன சிற்பிகள் இருவர் செய்து முடித்தாகிவிட்டது. அந்தத் திருவுருவம் இந்திரனுருவத்திற்குப் பதில் கடலாடக் கொண்டு போகப்படும். அந்த விழாவன்று நீங்கள் முடிசூடுவீர்கள்" என்றான் உணர்ச்சி பொங்க.

அவன் செய்துள்ள ஏற்பாடுகளைக் கேட்ட ராணி திகைத்துப் போனாள். 'இத்தனை ஏற்பாடுகளை உடைத்துக் கொண்டு எப்படிப் படைத் தலைவர் புகாரில் நுழைவார்?' என்று நினைத்து ஏதும் புரியாமல் கலங்கினாள்.

அவள் கலக்கத்தைக் கண்ட டைபீரியஸ், "கலக்கத்துக்கு இது சமயமல்ல ராணி! மகிழ்ச்சிக்கு வேளை வந்துவிட்டது. இந்தப் புகாரில் யவன அரசு சித்திரா பௌர்ணமியன்று ஏற்படப் போகிறது. அதற்குள் புகாருக்குள் எதிரிகளில் யார் நுழைய முற்பட்டாலும் அவர்களைப் பிடிக்கச் சிலந்தி வலையிருக்கிறது" என்றான்.

"சிலந்தி வலையா!" ராணி பிரமிப்புடன் கேட்டாள்.

"ஆம், எதிரிப் பூச்சிகள், உதாரணமாக நமது அலீமாவைப்போல், தானாக வந்து நுழைந்து அகப்பட்டுக் கொள்ளும் காவல் வலை அது" என்றான் டைபீரியஸ்.

"இத்தனை ஏற்பாடுகளைச் செய்த பின்பு அலீமாவைச் சிறைக்கு அனுப்புவானேன்?" என்று கேட்டாள் ராணி.

"எச்சரிக்கையை முன்னிட்டு, இளஞ்செழியன் கரம் எந்த இடத்தில், எந்த சமயத்தில், எந்த உருவத்தில் தோன்றும் என்று சொல்லமுடியாது. முட்கள் இந்தப் புகாரில் எங்கு எப்படிப் பரவும் என்றும் சொல்ல முடியாது" என்று

அறிவித்தான் டைபீரியஸ். அத்துடன் கூறினான், "தாங்கள் கிரீடமும் தயாராகிறது ராணி!" என்று.

"எங்கு தயாராகிறது?"

"சிறையில்."

"சிறையிலா!"

"ஆம். புகாரின் பொற்கொல்லர் சமண அடிகள் இரண்டு நாட்களுக்கு முன்பு புகாரில் தலைகாட்டினார். அவரைக் காவலில் வைத்து மகுடத்தை ஜாக்கிரதையாகச் செய்து முடிக்கும்படி கருவிகளையும் அளித்திருக்கிறேன்."

ராணியின் கண்களில் அச்சம் தெரிந்தது. டைபீரியஸின் காவற் சிறப்பை உணர்ந்தாள். அதனால் இளஞ்செழியனுக்கு என்ன ஆபத்து வருமோ என அஞ்சித் திகைத்தாள். டைபீரியஸின் இதழ்கள் மீண்டும் உறுதியுடன் மடிந்தன. "அலீமாவை அனுப்பிவிட உத்தரவா மகாராணி! சிறையில் அவள் தனித்திருக்க மாட்டாள். அவள் நண்பர்களும் இருக்கிறார்கள். மகுடம் செய்யும் சமண அடிகள் இருக்கிறார்..." என்று சொல்லிச் சிறிது தயங்கினான்.

அவன் தயக்கத்தில் அர்த்தமிருப்பதை உணர்ந்த ராணியின் கண்கள் இரண்டு நீலோற்பலங்களைப்போல் மறுமுறை எழுந்தன. எழுந்த கண்கள் டைபீரியஸின் கண்களை தைரியமாகச் சந்தித்தன. "துணை அவ்வளவுதானா டைபீரியஸ்?" என்றும் கேட்டாள் சந்தேகத்துடன்.

"இல்லை. வேறு துணையுமிருக்கிறது."

"யாரது?"

"ஹிப்பலாஸ்! இளஞ்செழியனின் உறுதுணைவன். யவன குலக் கோடரிக் காம்பு. அந்தப் பூச்சியும் தப்பவில்லை, சிலந்தி விரித்த வலையிலிருந்து" என்று கூறிய டைபீரியஸ், அலீமாவைச் சிறைக்கு அழைத்துச் செல்லும்படி வீரர்களுக்குப் பணித்தான்.

அவர்கள் சென்றதும் ராணிக்கு மிகுந்த பணிவுடன் தலை வணங்கினான் டைபீரியஸ். "ராணி! எப்படியும் சித்திரா

பௌர்ணமியில் முடிசூடுவீர்கள். அந்த விழாவைத் தடுக்க இளஞ்செழியன் முயலாதிருக்கமாட்டான். ஆனால் புகாரில் நிலைக்கப் போவது இளஞ்செழியனா, டைபீரியஸா, தமிழரா, யவனரா, என்பது விளங்கிவிடும். அன்று யவன அரசு அழிந்தால், டைபீரியஸும் அழிவான். அது சோதனை நாள் ராணி. அந்தச் சோதனை வரும்போது நீங்கள் யவன நாட்டு ராணியாக உங்கள் பணியைச் செய்வீர்களென்று நம்புகிறேன்" என்று உணர்ச்சி வேகத்துடன் சொல்லிவிட்டு அறையிலிருந்து வெளியேறினான். அவன் போகும் திக்கைப் பார்த்துக் கொண்டே நின்றாள் ராணி. அவள் உள்ளத்தில் உணர்ச்சிப் புயல் பெரிதாக, வீசி அடித்தது. எண்ண அலைகள் பெரிது பெரிதாகக் கிளம்பி அவள் இதயத்தில் திரும்பத் திரும்ப மோதின. அத்தனை உணர்ச்சிப் புரட்சியிலும் ஒரு விஷயம் நன்றாக விளங்கிவிட்டது ராணிக்கு. வீனஸ் விழாவன்று தன் வாழ்வுக்கும் நல்லதோ கெடுதலோ ஏதாவது ஒரு முடிவு ஏற்பட்டுவிடும் என்று தீர்மானித்தாள்.

117. ராணியின் மகுடாபிஷேகம்

கால தேவன் தனது கரங்களால் நாட்களைக் கன வேகமாகத் தள்ளவே வீனஸ் திருவிழா நடக்க வேண்டிய திருநாளும் வெகு துரிதமாக அணுகிக் கொண்டிருந்ததைக் கண்ட டைபீரியஸின் இரும்பு இதயம் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்வதற்குப் பதில் கவலைக் கடலில் அமிழ்ந்து, அது எழுப்பிய பெரும் அலைகளில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அவன் சொன்னபடி ஏற்பாடுகள் புகார் எங்கணும் திறம்பட நடந்து கொண்டிருந்தும், இந்திரவிழா விடுதியின் கீழ்ப் பெருமண்டபத்தில் வீனஸ் தெய்வத்தின் பெரும் பளிங்குச் சிலையின் வேலை முடிந்து மற்ற அலங்காரங்கள் துவக்கப் பட்டிருந்தும், பட்டினப்பாக்கமும் மருவூர்ப்பாக்கமும் இடையேயிருந்த நாளங்காடிச் சாலையும் யவன வீரர்களால்

இரவும் பகலும் காவல் செய்யப்பட்டிருந்தும், புகாரின் மேற்குக் கோடிச் சுவர்களையும் கடற்கரைக் கோட்டையின் புலி இலச்சினை பொறித்த பெரும் வாயிற் கதவுகளையும் வாளும் கையுமாக இராக்காலங்களிலும் படைகள் கண்ணை இமை காப்பது போல் காத்து வந்ததும், காவிரியின் சங்கமத் துறையிலிருந்து புகார் எல்லைவரையுமுள்ள நதிக்கரையில் காவலர் கோஷம் சதா கேட்டுக் கொண்டிருந்தும், புகாருக்குள் நுழைவோர், வெளிச் செல்பவர்மீதெல்லாம் யவன கண்காணிப்புப் பலமாயிருந்தும், டைபீரியஸின் மனத்தில் மட்டும் சதா ஏதோ ஒரு வேதனை இருந்து கொண்டே யிருந்தது. அலீமா சிறைப்பட்டாள் என்பதைக் கேட்டதும் பெண் புலிபோல் சீறியெழுந்த ராணி, பிறகு அடங்கி விட்டதையும், சமண அடிகளும், ஹிப்பலாஸும் சிறைப் பட்டார்கள் என்பதைக் கேட்டும் அவள் எவ்விதக் கலக்கத்தையும் காட்டாததையும் எண்ணிப் பார்த்த டைபீரியஸ் ராணியின் போக்கைப்பற்றி எந்தவித முடிவுக்கும் வர இயலாதவனாய்த் தவித்தான். வீனஸ் விழா நாள் நெருங்க நெருங்க ராணியின் போக்கு தனக்கு அடியோடு சாதகமாக மாறிவிட்டதையும், அவள் விழாவின் ஏற்பாடுகளைத் தவிர வேறெதிலும் சிரத்தை காட்டாததையும் கவனிக்கக் கவனிக்க டைபீரியஸ் சிந்தனை உலகத்தில் சஞ்சரித்தான். வீனஸ் திருவிழா இந்திர விழாவுக்கு எந்த விதத்திலும் குறைந்ததா யிருக்கக் கூடாதென்றும், இந்திர விழாவில் இளஞ்சேட் சென்னி நடத்தி வந்ததைவிடச் சிறப்பான ரதப் போட்டியும் மற்றக் கேளிக்கைகளும் நடை பெற வேண்டுமென்றும் ராணி வற்புறுத்தியது விந்தையாயிருந்தது டைபீரியஸுக்கு. "ரதப் போட்டி எதற்கு ராணி?" என்று டைபீரியஸ் ஆட்சேபித்துப் பார்த்தான். "தமிழ் மன்னன் இளஞ்சேட்சென்னியின் ஆட்சிக்கு யவன ராணியின் ஆட்சி குறைந்ததல்ல என்பதை நிரூபிக்க, தமிழர் ஆட்சியைவிட யவனர் ஆட்சியில் கோலாகலம் அதிகம் என்பதை இந்த நாட்டாருக்கு எடுத்துக்

காட்ட எதையும் குறைக்கவேண்டாம் டைபீரியஸ். விழா கோலாகலமாக நடக்கட்டும். யவன நாட்டுப் பெருங் கொடியின் கீழ் என் குடிகளின் உல்லாசம் உச்ச நிலையை எட்டட்டும்!" என்று உணர்ச்சியுடனும், உவகை பொங்கி வழிந்த முகத்துடனும் பதில் கூறினாள் ராணி.

ராணி காட்டிய உற்சாகத்தைக் கண்டு திகைத்த டைபீரியஸ், 'ராணி இதற்குள் எப்படி மாறமுடியும்? எப்படித் தன் காதலனை மறக்கமுடியும்? இதிலும் ஏதாவது சூதிருக்கிறதா?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு, அன்று முதல் ராணியின் ஒவ்வொரு நடத்தையையும் உன்னிப் பாகக் கவனிக்கலானான். ஆனால், ராணியின் நடத்தையில் சந்தேகத்துக்கான அறிகுறிகள் எதையும் காணோம். முடிசூடும் நாள் அன்று அணிய வேண்டிய உடைகளைப் பற்றித் தனது யவனத் தோழிகளுடன் விவாதிப்பதிலும், எந்தெந்த ஆபரணங்கள் அன்று உபயோகப்பட வேண்டும் என்பதை நிர்ணயிப்பதிலுமே காலம் கழித்தாள் ராணி. இப்படி ஏற்பட்ட ராணியின் திடீர்த் திருப்பம் மட்டுமல்ல, சிறையில் அடை பட்டுக் கிடந்த சமண அடிகளும், ஹிப்பலாஸும் சிறை வாழ்க்கையில் காட்டிய அலட்சியமும் அவனுக்கு விவரிக்க இயலாத கவலையை அளித்தது. சமண அடிகள் கொல்லர் பட்டறையைச் சிறைக்குள் அமைத்துக்கொண்டு, ஹிப்ப லாஸின் உதவியால் ராணியின் தலைச்சுற்றளவு, மகுடத்தின் முகப்பிடம், பக்கத்துத் திருகுப் பூக்கள் பதிக்க வேண்டிய இடங்கள், இவற்றை நூல் பிடித்துப் பார்த்து ராணியின் மகுடத்தை இரவு பகலாக மும்முரமாகச் செய்து கொண் டிருந்ததையும், அவர் 'டக் டக்'கென்று தட்டிய சுத்தியின் ஒலி இரவு நீண்ட நேரம் வரையில் கேட்டுக் கொண்டிருந்ததையும் கவனித்த டைபீரியஸ் ஓரளவு குழம்பவே செய்தான். தவிர சிறையில் ஹிப்பலாஸ் கவலையற்று நாட்களை ஓட்டிக் கொண்டிருந்ததும், வாணகரைப் பகுதிகளில் எந்தவித அரவமும் கேட்காமல், வாணகரைக் கோட்டை பல மாதங்

களில் காணாத மௌனத்தைக் காட்டியதும் டைபீரியஸின் கூரிய மூளையைக் கூடப் பெரிதும் குழப்பியிருந்தது. புகாரைப் பாதுகாக்க ஒரு படைத்தலைவன் செய்யக்கூடிய அளவுக்குத் தான் பரம திருப்தியாகச் செய்திருந்தும், தன்னையும் மீறி, தனக்கும் தெரியாமல் ஏதோ கலவரம் நடப்பது போன்ற பிரமை டைபீரியஸுக்கு ஏற்படவே செய்தது. இருந்த போதிலும் காவலை எங்கும் பலப்படுத்தி வீனஸ் திருவிழா வுக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்வதில் முனைந்தான் யவனர் கடற் படைத் தலைவன்.

வீனஸ் திருவிழாவும் மெள்ள மெள்ள நெருங்கியது. அத்தனை கோலாகலமாகத் தமிழர்கள் ஒரு திருவிழாவை நடத்துவார்கள் என்பதை எதிர்பாராத டைபீரியஸே தமிழ் மக்களின் குதூகலத்தை எண்ணி மகிழ்ந்தான். இந்திர விழாவுக்குப் பதில் வீனஸ் திருவிழா நடக்கும் என்பதை முரசு கொண்டு முதலில் அறிவித்தபோது புகார் மக்கள் முனகினர். மருவூர்ப்பாக்கத்திலும் பட்டினப்பாக்கத்திலும் உள்ள தன வணிகரும், ஐம்பெரும் குழுவினரும் எண் பேர் ஆயத்தினரும் டைபீரியஸை நேரில் கண்டு, "இந்திர விழாவை நிறுத்துவது முறையல்ல, நாட்டில் மழை பொழியாது, கடற்கோள் ஏற்பட்டுப் புகாரும் மூழ்கிவிடும்" என்று தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். டைபீரியஸ் நீண்ட நேரம் யோசித்தான். எப்படியும் ராணி முடி சூடும்வரை புகார் மக்களின் எதிர்ப்பைப் பெறுவதில் அர்த்தமில்லையென்பதை உணர்ந்து, "இரண்டு விழாக்களும் நடக்கட்டும். இந்திரன் சிலையும் வீனஸ் சிலையும் இரண்டுமே வைகறையில் கடலாடட்டும். ஆனால் முழுமதி தோன்றியதும் நடக்கும் ரதப் போட்டிக்கு முன்பாக இந்திரன் சிலை கோயிலுக்குள் அடைபட வேண்டும்" என்றான். இந்தப் பதில் பூரண திருப்தியை அளிக்காவிட்டாலும், ஓரளவு திருப்தியை அளிக்கவே புகார்ப் பெருமக்கள் டைபீரியஸுக்கு நன்றி தெரிவித்துச் சென்றார்கள்.

இந்திர விழாவும், வீனஸ் திருவிழாவும் நடக்க இரண்டு நாட்களுக்கு முன்பாக, சுற்றுப்புறங்களிலிருந்து ஆண்களும் பெண்களுமாக வரத்தொடங்கிய கூட்டத்தைக் கண்டதுமே பிரமித்துப் போனான் டைபீரியஸ். இப்படி ஆயிரக்கணக்கில் ஊசி போட்டால் கீழே விழ முடியாத அளவுக்கு ஜனக் கூட்டம் சாரிசாரியாகப் பெரும் நதிகளைப் போல் புகார் வந்து குவியும் என்பதைக் கனவிலும் எண்ணாத டைபீரிய ஸின் கலக்கம் அதிகமாகியது. இந்தப் பெருங் கூட்டத்தில் எதிரிகள் கலந்து வந்தால் அறிவது முடியாத காரியம் என்பதை உணர்ந்த டைபீரியஸ், இந்திர விழா மாளிகையைச் சுற்றிக் காவலைப் பெரிதும் பலப்படுத்தினான். இந்திர விழா மாளிகைமீதிருந்த பெரும் தூண்களை இயக்கும் யவன வீரர்களை எந்த வினாடியிலும் யந்திரங்களை இயக்கத் தயாராயிருக்குமாறு உத்தரவிட்டான். சிறைச்சாலைப் பகுதி யிலும் காவலை இரட்டித்தான். அலீமாவிடமிருந்து தான் கைப்பற்றிய எட்டு மரக்கலங்களிலும் யவன வீரர்களை அமர்த்தி அவசியமானால் மரக்கலங்களை காவிரி முகப்பில் விட்டுக் கலகம் விளைவிப்பவர்கள் மீது பொறி யந்திரங்களி லிருந்து எரி அம்புகளைத் தயை தாட்சண்யம் பாராமல் விசிறுமாறு பணித்திருந்தான்.

இந்திர விழா முதல் நாளிரவு புகாருக்குக் கிழக்கே வங்கக் கடல் விரிந்து கிடந்ததென்றால் புகாருக்குள்ளோ மனிதக் கடல் விரிந்து கிடந்தது. புகார் பூராவும் ஏற்பட்ட மக்கள் கோஷம் கடல் அலைக் கோஷத்தை மூழ்கடித்து விட்டதால் கடல் ஒன்று உள்ளதா அல்லவா என்ற பிரமையே ஏற்பட்டது. இரவு பூராவும் மக்கள் களிவெறி கொண்டார்கள். எங்கும் மகிழ்ச்சி அரவம் மண்டிக்கிடந்தது. ஊரெங்கும் விளக்குகளும் பந்தங்களும் ஜாஜ்வல்யமாக எரிந்தன. மருவூர்ப் பாக்கத்துக்குள் யவனர் கேளிக்கைச் சாலைகளில் மது கரை புரண்டு பிரவாகிக்கவே யவன மகளிர் ஆட்டத்தால் ஏற்பட்ட 'கலீர் கலீர்' என்ற பாதணி ஓசையும், அந்த ஓசைக்கு யவனரும்

தமிழரும் கையடித்த தாளச் சத்தமும் வானைப் பிளந்தன. புகாரின் கடற்கரையில் பரதவ மங்கையர் பெருங்கூத்திட்டனர். அவர்களைப் பிடிக்கக் கள்ளுண்டு ஓடிய பரதவ ஆடவரின் வெறிச் சிரிப்பு கடலலைகளில் சென்று சென்று கலந்தது. அப்படிக் கலந்ததால் கோபித்த கடலரசன் தன் அலைகளைச் சீறச் செய்து தரையில் கோபத்துடன் மோதினான். அவன் சீற்றத்தைச் சிறிதும் லட்சியம் செய்யாத பரதவரின் வெறிக் கூத்தும், சிரிப்பும் இரவு ஏற ஏற அதிகமாகிக் கொண்டிருந்தன.

புகாரில் எங்குமிருந்த கேளிக்கைக் கூச்சலும், பண்டம் விற்போர் அரவமும், காவலர் எச்சரிக்கை யொலிகளும் வைகறைப் பொழுது வரவர அதிகமாகிக் கொண்டிருந்தது. சித்ரா பௌர்ணமி பிறந்த தினத்தின் வைகறைப் பொழுதில் புகார் மணக்கோலம் பூண்டது. அதன் திருமணத்துக்காக மேளம் கொட்டுவனபோல் வச்சிரக் கோட்டத்தேயிருந்த இந்திரன் கோயிலிலும், சோழ மன்னர் தங்குவதும் தற்சமயம் யவன ராணியின் இருப்பிடமும் வீனஸ் கோயிலுமான இந்திர விழா விடுதியிலும் வைகறையை அறிவிக்கும் முரசுகள் பலமாக முழங்கின. கொம்புகள் பலமாக ஊதின. இசைக் கருவிகளின் ஒலியும் அவற்றுடன் கலந்து கொண்டது.

புகாரில் இந்திரவிழா எத்தனை கண்கொள்ளாக் காட்சியென்பதை அன்று காலைதான் டைபீரியஸ் உணர்ந்தான். கலைகளிலும் விழாக்களை அனுபவிப்பதிலும் யவனரை விடத் தமிழர் எத்தனை சிறந்தவர் என்பதை உணர்ந்த யவனர் கடற்படைத் தலைவன் ஆச்சரியத்தின் எல்லையை எய்தினான். இத்தனை நாகரிகம் இங்கு பரவியிருப்பதால் தான் யவன குருமார்கள் ராணி முடிசூட இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும் என்று நினைத்ததுமன்றி, வியக்கவும் செய்தான் யவனர் கடற்படைத் தலைவன். இந்திரன் திருவிழாவைப் போலவே வீனஸின் திருவிழாவையும் நடத்த அவன் உத்தரவிட்டிருந்ததால், இரட்டிப்புத்

திருவிழா இரட்டிப்பு மகிழ்ச்சியை மக்களுக்கு அளித்திருக்கவே, இந்திர விழா விடுதியில் நிர்மாணிக்கப் பட்டிருந்த வீனஸ் உருவத்தையும் மக்கள் பெருவாரியாகக் கண்டுகளித்தார்கள். எந்த மதத்தையும் எந்த நாகரிகத்தையும் வெறுக்காத தமிழரின் பரந்த உள்ளத்தைக் கண்ட டைபீரியஸ், அந்த நாட்டில் யவனர் அரசைத் தான் நிறுவ வந்தது பெரும் பாக்கியம் என்றே நினைத்தான். டைபீரியஸின் கணக்கையும் மீறிய பெருங் கும்பலும் கோலாகலமும் புகாரை அந்த வைகறையில் ஆட்கொண்டது.

பிற்காலத்தில் சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகளே மெய்மறந்து இந்திர விழாவின் சிறப்பில் ஆழ்ந்து போனார் என்றால், யவனனான டைபீரியஸ் அந்த விழாவின் விமரிசையைக் கண்டு மெய்சிலிர்த்ததில் வியப்பென்ன இருக்க முடியும்?

‘உதய மால்வரை உச்சித் தோன்றி
உலகு விளங்கு அவிர் ஒளி மலர் கதிர் பரப்பி–’

‘உதய மலையின் உச்சியிலிருந்து கிளம்பி உலகத்தை விளங்க வைப்பதற்கென்றே தன் கதிர்களைப் பரப்பினான் கதிரவன்’ என்று இந்திர விழா ஊர் எடுத்த காதையைச் சிலம்பில் துவக்கும் இளங்கோவடிகள், ‘கூரை வேயாத நிலா முற்றங்களையும் மான் கண் போன்ற சாளரங்களை’யும் உடைய மாடமாளிகைகளைக் கொண்ட மருவூர்ப் பாக்கத்தையும், ‘கோவிலின் வீதியும் கொடித் தேர் வீதியும்’ உள்ள பட்டினப்பாக்கத்தினையும், ‘இருபால் பகுதியின் இடைநிலம்’ ஆகிய நாளங்காடி முதலியவற்றையும் சிறப்பித்துச் சொல்லி நாளங்காடி பூதத்தின் முன்பு நடந்த பலி முதலியவற்றையும் இந்திர விழாச் சிறப்பினையும் கூறுகின்றார்.

‘மரகதமணியொடு வயிரம் குயிற்றிய
பவளத்திரள்கால் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைமுத்து யாங்கணும்

கிம்புரி பகுவாய்க்கிளர் முத்து ஒழுக்கத்து,
மங்கலம் பொறித்த மகரவாசிகைத் தோரணம்
நிலைஇய...'

மரகத மணிகளில் வைரக் கற்களைப் பதித்து, பவளத்தினால் செய்யப்பட்ட அழகிய கால்களையுடைய ரதத்திலே, வழியிலே கிம்புரி செறிந்த கொம்புகளையும் முத்துச் சிப்பியையும் பிளந்து செய்த மகர தோரணங்களிடையே வீதிகளிலே இந்திரன் உருவம் ஊர்வலம் வருமாம். அந்த ஊர்வலத்தைத் தொடர்ந்து,

'ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்
அரசகுமரரும், பரதகுமரரும்'

கூடிய பெருங்கூட்டம் வருமாம். விரையும் ரதங்கள் வருமாம். களிற்றின் தொகுதி வருமாம். இப்படி இன்னும் பலப்பல வரும் என்று கனவு போலக் கதை சொல்கிறார் இளங்கோவடிகள். கடல் ஆடு காதையில் அவர் கண்ட வைகறை எழிலும் பிரமிக்கத்தக்கது. பணியார வகைகள், வண்ணச் சாந்துகள் முதலிய விற்பவர் விலைகூறும் கூச்சலும், அவர்கள் கடை விளக்குகளும், அப்ப வாணிகரின் குடத் தண்டு விளக்குகளும், மீனவர் படகுகளின் விடி விளக்குகளும் எங்கும் கண் கொள்ளாக் காட்சியாயிருக்கும் எனச் சிலம்பாசிரியர் சிறப்பிக்கிறார். இத்தகைய சிறப்புகளையெல்லாம் கண்ட டைபீரியஸ் மகிழ்ச்சியும் கவலையும் கலந்தே அடைந்தான்.

இந்திரா விழாவும், வீனஸ் விழாவும் கலந்தே நடந்தன. இந்திரனின் பொன் சிலையையும் பவளத் தேரையும், வீனஸின் பளிங்குச் சிலையையும் முத்துத் தேரையும் சூழ்ந்து பெரும் மனித சமுத்திரம் கடலாடச் சென்றது. வீனஸுக் கருகே முளைத்த இன்னொரு வீனஸ்போல் யவன ராணி வெண்புரவிகள் பூட்டிய ரதத்திலே தோழியர் இருவர் பக்கலில் நிற்க, தானே சேணங்களைக் கைப் பிடித்துச் சென்றாள். அந்த ரதத்துக்குப் பின்னும் முன்னும் யவன வீரர்கள் உருவிய வாட்களுடன் சென்றனர். சங்கமத் துறை சற்றுத் தூரமிருக்கை

யிலேயே மணலின் காரணமாக ராணி கீழே இறங்கினாள். தோழியருடன் துறை நோக்கிச் சென்றாள். காவலர் தொடர்ந்தனர். களிவெறி கொண்ட மக்களும் இந்திரனுக்கும், வீனஸுக்கும் வாழ்த்துக் கூறி வானைப் பிளந்த கூச்சலுடன் சங்கமத் துறையிலும் நீராட ஓடினர்.

கதிரவன் எங்கணும் காலைநேர மங்கல ஒளி பரப்பினான். கடலும் காவிரியும் கலந்த இடம் அந்த ஒளியில் பொன் நிறம் பெற்றது. இந்திரன் பொன்னுருவும் நீராட வீனஸின் பெண்ணுருவம் காவிரியில் மூழ்கியெழ கணக்கற்ற மக்களும் நீரில் மூழ்கினர். மூழ்கிய தமிழ் மங்கையர், மூழ்குமுன் நெற்றியில் தீட்டிய மஞ்சள் பொடி காவிரியின் நீரை மஞ்சளாக அடித்தது, தமிழ்ப் பெண்கள் தங்கள் அன்னைக்கு மஞ்சள் பூசுவது போலிருந்தது. அவர்கள் மீண்டும் மஞ்சள் பொடி பூச இரு கைகளிலும் பொடியைக் கரைத்த போது கலகலத்த கையாபரணங்கள் காவிரி அன்னைக்கு மங்கள கீதம் பாடின.

இந்திர விழாவும், வீனஸ் திருவிழாவும் சங்கமத் துறையில் நீராடும் நிறைநாளும் மங்களமாக நிறைவேறியும், டைபீரியஸின் மனத்தில் ஏதோ விவரிக்க இயலாத கவலை இருந்தது. அன்றிரவு நெருங்கி பூரண சந்திரன் பொலிவுடன் எழுந்து, நகரமெங்கணும் மங்கள தீபங்கள் ஜொலித்த சமயத்தில் யவன குருமார்கள் யவனர் மந்திரங்களைச் சொல்லி ராணிக்கு முடி சூட்டிய பின்னரும் அவன் மனத்தில் நிம்மதியேற்படவில்லை.

யவனராணி புகாரின் ராணியாக மகுடம் புனைந்தாள். அவள் ராணியாகிவிட்டதைக் குறிக்க யவன முரசங்கள் ஆர்த்தன. கொம்புகள் திடீரெனப் பேரொலியைக் கிளப்பின. தமிழர் பழக்கப்பட்ட வெண் சங்குகள் பலவும் 'பம் பம்' என்று சப்தித்தன. யவனர்கள் பெருங் கோஷமிட்டனர். ராணி முடிசூடிவிட்டதை அறிவிக்க ஆகாயத்தில் எரி அம்புகள் வாணங்கள்போல் வீசப்பட்டன. ராணி மகுடம் புனைந்தாள். பூம்புகாரின் இணையற்ற பொற்கொல்லர் சமண அடிகள்

வைரத்தையும், முத்தையும் மரகதத்தையும் கொண்டு நிறுவிப் பட்டையாகப் பெரு முகப்புகளுடன் கண்களைப் பறித்த மகுடத்தை நெற்றியைச் சுற்றிப் புனைந்தாள். புனைந்து வெளி வந்தாள். பூரண மதியின் நிலவிலே, இந்திர விழா விடுதியின் கீழ் மண்டபத்தின் முன்னிருந்த படிகளிலே மக்கள் பெரிதாக ஆரவாரம் செய்தனர். யவன மகளிர் ராணி வாழ, ராணியின் ஆட்சி வாழ வாழ்த்தொலி எழுப்பினார்கள். யவன முரசும் பலமுறை ஒலித்தது. டைபீரியஸ் கடற்படைத் தலைவனின் உடைகளையும், கவசத்தையும் பூரணமாக அணிந்து ராணியின் பக்கலில் நின்றான். ஏதோ இரு பெரும் தேவதைகள் அந்த மாளிகைப் படிகளின் உச்சியிலே நிற்பது போன்ற பிரமையே மக்களுக்கு ஏற்பட்டது. படிகளின் கீழே யிருந்த சமவெளியின் நடுவில் நின்ற வீனஸ் சிலை அழகா, அல்லது ராணி அழகா என்பதை மக்களால் நிர்ணயிக்க முடியவில்லை. ராணியின் குலச் சின்னமான அன்னப் பறவை தன் உடலிலிருந்த வெண்மை வைரக் கற்களைக் காட்டி எங்கும் வெண்மை நிலவப்போகும் உண்மையை விளக்கியது. ஆனால், ரத்தச் சிவப்பாக ஜொலித்த அதன் கண்கள் எதை விளக்கின?

ராணி அன்று அந்தப் படிகளின் உச்சியில் வெகு கம்பீரமாக நின்று மக்களின் வாழ்த்தொலிக்குத் தலை வணங்கினாள். அவளுக்குப் பின்னால் யவன நாட்டுப் பெண் களும் பரதவப் பெண்களும், வணிகப் பெருங்குடிப் பெண் களும் தோழியராய் நின்றார்கள். பூரண சந்திரன் முளைத்து ஒரு ஜாமம் ஓடிக் கொண்டிருந்தது. ரதப் போட்டிக்கு நேரமாகி விட்டதைக் குறிக்க முரசுகள் முழங்கின. ராணி உட்கார அலங்கார மஞ்சம் வந்தது. அந்த அலங்கார மஞ்சத்தில் ராணி அமர்ந்தாள். டைபீரியஸ் மட்டும் அவள் பக்கத்திலே அசையாமல் நின்றான். படிகளுக்குக் கீழேயிருந்த பெரும் நிலப் பரப்பில் ரதங்கள் வரிசையாக வந்து அணிவகுத்தன. ரதங்கள் பலவகைப்பட்டிருந்ததை ராணி கவனித்தாள். அத்துடன் டைபீரியஸ் அந்த ரதங்களை

உன்னிப்பாய்க் கவனிப்பதையும் பார்த்தாள். முரசு முழங்கியது. கொம்புகள் ஊதப்பட்டன. ரதமோட்டிகள் தங்கள் புரவிகளின் சேணங்களை இழுத்துப் பிடித்தார்கள். திடீரென ஆகாயத்தில் எரி அம்பு ஒன்று பறந்தது; அடுத்த வினாடி ரதங்கள் பறந்தன. ரதப் போட்டி யைப் பார்க்க வந்த மக்கள் தங்களுக்கு வேண்டிய ரதமோட்டிகளுக்கு உற்சாக மூட்ட, போட்ட வெறிக் கூச்சல்கள் ராணி உட்கார்ந்திருந்த இடத்தையும் எட்டின.

ராணி புன்சிரிப்புடன் உட்கார்ந்திருந்தாள். அவள் மகிழ்சிக்குக் காரணம் புரியாமல் டைபீரியஸ் தன் கூரிய விழி களை நாற்புறமும் செலுத்தினான். எதுவும் அவன் கண் களுக்குப் புலப்படாததால், தன் கோழைத்தனம் பற்றித் தன்னையே வெறுத்துக் கொண்டான்.

ரதங்கள் பந்தய நெடுஞ்சாலையை இருமுறை சுற்றி வந்துவிட்டன. கடைசிமுறை வந்துவிட்டதும் டைபீரியஸ் உள்ளம் ஓரளவு நிம்மதியை அடைந்தது. ஆனால் அந்த நிம்மதி திடீரெனக் கலைந்தது. கடைசி முறையில் ரதங்கள் அதிகமாக வந்தன போட்டியில் ஓடிய ரதங்களைவிட மும்மடங்கு அதிக ரதங்கள் கடைசிச் சுற்றில் வருவதை அவன் கண்டான். போட்டியில் வெற்றி கொண்டுவந்த முதல் ரதம் காற்றைவிட வேகமாகத் தூரத்தில் வந்து கொண்டிருந்ததையும், அதற்குப் பின்னால் நூறு ரதங்கள் வருவதையும் பார்த்ததும் சட்டென்று எழுந்தான். அவன் எழுவதற்கும், அந்த முதல் ரதம் மக்கள் வெற்றிக் கோஷத்துடன் படிகளின் அடியை அடைவதற்கும் சரியாயிருந்தது. முழுத் தந்தத்தினால் செய்யப்பட்ட அந்த ரதம் பார்ப்பதற்குக் கண்களைப் பறித்தது. அதன் மரச் சக்கரங்களிலிருந்த வேலைப்பாடு பிரமாதமாய் இருந்தது. மன்னன் இளஞ்சேட்சென்னியின் ரதத்தைப் பார்த்த மக்கள், காற்றைப்போல் கடுகி அதை இழுத்து வந்த இரு வெண் புரவிகளைக் கண்ட புகார் வாசிகள், "இளஞ்சேட்சென்னி! இளஞ்சேட்சென்னி!" என்று கூவினார்கள்.

'மக்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா? இளஞ்சேட் சென்னிதான் இறந்துவிட்டானே' என்று கொதித்தெழுந்தான் டைபீரியஸ். அதே சமயத்தில் ரதத்திலிருந்து குதித்த பூரண கவசமணிந்த ரதமோட்டி, அந்தக் கவசத்துடன் படிகளில் ஏறி பரிசு பெற ராணியின் முன்பாக வந்து நின்றான். அப்படி வந்தவன் முகக் கவசத்தைக் கழற்றாமலும், ராணிக்கு முன்பு மண்டியிடாமலும் நிற்பதைக் கண்ட டைபீரியஸ், "கழற்று கவசத்தை!'' என்று கடுங் குரலில் உத்தரவிட்டான். கவசத்தைக் கழற்றினான் அவன். டைபீரியஸ் திக்பிரமை யடைந்து திடீரென வாளை உருவினான். வந்தவனும் சிரித்துக் கொண்டே தன் வாளைக் கணநேரத்தில் உறையிலிருந்து எடுத்து எதிரியின் வாளுடன் மோதவிட்டான். அடுத்த வினாடி பந்தய வெளி போர் வெளியாயிற்று. கவசம் கழற்றப் பெற்றதும் வந்தவன் யாரென்பதை அறிந்த ராணி பிரமை பிடித்து நின்றாள்.

118. விடுதலைப் போர்

வெள்ளைப் புரவிகளால் இழுக்கப்பட்டு, வெள்ளைத் தந்த வேலைப்பாடு காரணமாக நிலவொளியில் வெளேரென்று தெரிந்தாலும், அந்த நிலவொளியுடன் சுற்று முற்றிலும் எரிந்த விளக்குகள் பந்தங்களின் தங்கச் சுடரும் தந்தங்களில் பிரதிபலித்ததன் விளைவாகத் தங்கமும் வெள்ளியும் கலந்த இந்திர ரதமே வானிலிருந்து இறங்கிப் புகாருக்குள் காற்றுக் கடவுளால் செலுத்தப்பட்டதுபோல் அதிவேகமாக வந்து, இந்திர விழா முகப்புப் படிகளின் அடியில் நின்றபோதும், அதைச் செலுத்தி வந்த கவசமணிந்த தேரோட்டி வெகு அலட்சியமாகப் படிகளில் தாவி ஓடிவந்து ராணி முன்பாகப் பரிசுபெற நின்றபோதும், அந்த ரதத்தைச் செலுத்தி வந்தவன் இளஞ்செழியனாகத்தானிருக்க வேண்டும் என்று முடிவு கட்டிய டைபீரியஸ் தேரோட்டி முகக் கவசத்தைக் கழற்றியதும் பெரும் திகைப்புக்குள்ளானானென்றால், அவன்

யாரென்பதை அறிந்த ராணி திகைப்பும் வியப்பும் கலந்த உணர்ச்சிகளின் வசப்பட்டதன்றி, விரிந்த நீலமணிக் கண்கள் விரிந்தபடியே சில வினாடிகள் நின்றுவிட்டாள். வாகைப் பரந்தலைக்கு எதிரிகளைத் துரத்திச் சென்ற கரிகாலன், அந்த வாகைப் போரைப் பதினைந்து நாட்களில் முடித்துவிட முடியுமென்றோ எதிரிகளை முறியடித்து உறையூரில் முடி சூடாமலே பூம்புகாரை நோக்கித் திரும்புவானென்றோ, அப்படித் திரும்பினாலும் இத்தகைய ஒரு ரதப் போட்டியில் பங்கெடுத்துக் கொண்டு தன்னைப் போன்ற ஒரு எதிரியின் வாயில் நுழைவானென்றோ சொப்பனத்திலும் நினைக்காத டைபீரியஸ், மன்னனின் சிரித்த முகத்தைக் கண்டதும் சொல்லவொண்ணாக் கோபம் கொண்டதன்றி, அவன் மனத் துணிவை மனத்திற்குள் பாராட்டவும் செய்தானென்றாலும், அத்தகைய நினைப்புக்கெல்லாம் சமயம் அதுவல்லவாகை யாலும், எதிரியை அழிக்க வேண்டியது தனது கடமையாகை யாலும், நன்றாக அகன்று பட்டையாகவும் பலமாகவும் இருந்த தனது யவன நாட்டு வாளைச் சரேலேன உருவினான். அதே சமயத்தில் கரிகாலனும் தனது வாளை மின்னல் வேகத்தில் உறையிலிருந்து உருவி டைபீரியஸின் வாளைத் தடுத்து, "ராணி! உள்ளே சென்றுவிடுங்கள். மாதர்களுக்கு அபாயமேற்படப் போரிடுவது தமிழக மன்னர் மரபின் பழக்க மல்ல'' என்று கூறிவிட்டு, அந்தச் சில வினாடிகளில் வந்துவிட்ட மற்ற ரதங்களை நோக்கித் தனது இடது கையை உயர்த்தினான்.

பின் ரதங்களில் வந்த தமிழ் ரதமோட்டிகள் மட்டு மின்றி, யவன ரதமோட்டிகளும் மன்னன் கையுயர்ந்ததும் திடீரென ரதங்களிலிருந்து குதித்து அருகிலிருந்த யவன காவலரை வெட்டத் தொடங்கியதாலும், ரதங்கள் நிற்கும் அந்த வெளிப்புறத்திலிருந்து மக்கள் கூட்டத்திலும் பலர் வெளியே வந்து விற்களைத் தரையில் நாட்டிக் கொண்டு அம்பு மழை பொழிய ஆரம்பித்ததாலும், இந்திர விழா மாளிகையின் முன்புறம் முழுவதும் கண்ணிமைக்கும்

நேரத்தில் போர்க்களமாயிற்று. பந்தயத்தின் ஆரம்பத்தில் சென்ற ரதங்களைவிட முடிவில் வந்த ரதங்களின் எண்ணிக்கை அதிகமென்பதைக் கண்டதுமே ஏதோ சூது நடந்துவிட்டது என்பதை உணர்ந்துகொண்ட டைபீரியஸ், அந்த ரதங்களிலிருந்த தமிழர் மட்டுமின்றி யவனரும் தனக்கெதிராகத் திரும்பிவிட்டதையும், அப்படித் திரும்பிய யவனர், 'ராணி வாழ்க! ராணி வாழ்க!' என்றும், தமிழர், 'மன்னர் வாழ்க! மன்னர் வாழ்க!' என்றும் பிரித்து வெறிக் கூச்சலிட்டாலும் அந்த இரு பிரிவினரும் சேர்ந்தே தனது யவன வீரர்களைத் தாக்குவதையும் கண்ட டைபீரியஸ், அந்த விந்தைக்குக் காரணம் புரியாமல் சில கணங்கள்தான் திகைத்தான். அடுத்த வினாடி அதுவரையில் புரியாத சில புதிர்களுக்கு அவனுக்கு விடை கிடைத்துவிட்டது.

தலைக்கவசமணிந்த யவனர் மரக்கலத் தலைவனாகத் திரிந்த இளஞ்செழியன், திடீரென வாணகரையிலிருந்த யவன வீரர்களை ராணிக்குப் பணி புரியத் தூண்டி அழைத்து வந்து புகாரில் விட்டதையும், அவர்கள் அன்னப் பறவை ஆபரணத்துக்கு உயிரைக் கொடுப்பதாகப் பிரமாணம் செய்ததையும் நினைத்துப் பார்த்த டைபீரியஸ் இளஞ்செழியன் புகாரில் யவன அரசைத் தீர்த்துக் கட்டத் திட்டம் வகுத்து வெகு நாட்களாகிவிட்டன என்பதை உணர்ந்தான். 'ராணியை நான் சிறை செய்திருப்பதைத் தனது யவன வீரர்களுக்குச் சுட்டிக் காட்டி ராணி வேறு நான் வேறு என்று பிரித்துச் சொல்லி இங்கு என்னுடன் இணைந்து கொள்ளவும், சமயம் வரும் போது எனக்கெதிராகத் திரும்பவும் ஏற்பாடு செய்திருக்கிறான் அந்தப் பாதகன்' என்று தனக்குள் இளஞ்செழியனை வெறுத்துக் கொண்டான் டைபீரியஸ். அத்துடன் வீனஸ் திருவிழாவுடன் இந்திர விழாவையும் கலந்து கொண்டாட வேண்டி வந்த புகார்ப் பெருமக்கள் இளஞ்செழியன் தூண்டுதலின்மேல்தான் வந்திருக்க வேண்டுமென்றும், அப்படி இந்திர விழாவையும் கொண்டாடியதால்தான் அளவுக்குமீறிய கூட்டம் புரியாமல் நுழைந்துவிட்டதென்றும்

அந்தக் கூட்டத்தில் கலந்து சோழர் படைவீரர் பல மாறு வேடங்களில் புகாருக்குள் நுழைந்திருக்க வேண்டுமென்றும் புரிந்துகொண்டான் டைபீரியஸ்.

இத்தனை யோசனைகள் மனத்துக்குள் ஓடிக்கொண்டிருந்தாலும், அந்த முதல் ஜாம முடிவில் ஆரம்பித்த புகாரின் போர் சீக்கிரம் முடியாதென்பதையும் உணர்ந்து கொண்ட டைபீரியஸ், கரிகாலன் வாளுடன் தன் வாளை உராயவிட்டுப் பொருதுகொண்டே பின்னாலிருந்த தன் வீரர்களுக்கு உத்தரவுகளையும் பிறப்பித்தான். "ராணியை உள்ளே அழைத்துச் சென்று காவல் செய்யுங்கள். கொம்புகள் மும்முறை பலமாக ஊதட்டும். மற்றும் சிலர் புகாரின் கிழக்கு வாயிற் பெரும் கதவுகளை அடையுங்கள்" என்ற சொற்களை கனல் தெறிக்கும் குரலில் உதிர்த்துக் கொண்டே மன்னன் வாளின்மீது தன் பலம் கொண்ட மட்டும் திரும்ப திரும்பத் தாக்கினான். அவன் உத்தரவுகள் கண்ணிமைக்கும் நேரத்தில் நிறைவேற்றப்பட்டன. ராணியை உள்ளே அழைத்துச் செல்ல வாட்களை உருவிய இரு வீரர் துரிதமாக அணுகினார்கள். ராணி போர் நடந்து கொண்டிருந்த வெளிப்புறத்தையும், டைபீரியஸையும் பார்த்துப் புன்முறுவல் செய்துவிட்டு, தன்னைத் தொடவேண்டாமென்று வீரர்களைக் கண்ணாலேயே எச்சரித்துவிட்டு, மகுடம் சூட்டி வந்ததால் இடையிலிருந்த பொற்கொண்டை முன்னைவிடப் பன்மடங்குப் பொலிவுடன் விளங்க, மிகக் கம்பீரமாகத் தலையை உயர்த்தி உறுதியுடன் நடந்து மாளிகைக்குச் சென்றாள்.

டைபீரியஸின் உத்தரவுப்படி கொம்புகள் மும்முறை ஊதின. ஊதியதும் இந்திர விழா விடுதிமேலிருந்த தூண் களிரண்டும் ஒரு விநாடி பயங்கரமாக நாலா புறங்களிலும் சுழன்று, தங்கள் வாய்ப்புறங்களை இரண்டாகப் பிளந்து எரி அம்புகளைக் காவிரியையும் கடலையும் போர் நடந்து கொண்டிருந்த இந்திர விழா விடுதியின் வெளிப்புறத்தையும் நோக்கி விசிறியதால், ராணியின் மகுடாபிஷேகத்திற்குப் புகார் ஏதோ வானவேடிக்கையை நடத்துவது போன்ற

பிரமையே ஏற்பட்டது. இந்திர விழா விடுதியின் மாளிகைக்கு வெளியே படிகளின் இறக்கத்திற்குச் சற்று அப்பால், கட்டடத்தின் நேர் எதிரில் உயர்ந்த பீடத்தில் நிறுத்தப்பட்ட வீனஸின் பளிங்குச் சிலையைச் சுற்றிலுங் கூட எரி அம்புகள் விழுந்ததால் அந்தத் தேவதைக்கு யுத்த அர்ச்சனை நடப்பது போலத் தெரிந்தது. வீனஸ் சிலையைச் சுற்றிலும் பெரும் போர் நடந்து கொண்டிருந்ததல்லாமல், இந்திர விழா மாளிகையின் உச்சியை நோக்கி ஓடிய படிகளிலும் யவனரோடு யவனரும், யவனரோடு தமிழரும் வாட்களைக்கொண்டும் விற்களைக் கொண்டும் போரிட்டதால் மடிந்தவர் அலறினர். படிகளில் உருண்டவரின் ரத்தக்கறை அந்த இந்திர விழா விடுதியின் புனிதத் தன்மையை அழித்துவிடுவதுபோல் நிலவொளியில் தெரிந்தது.

எங்கும் ஒரே கூச்சல்! எங்கும் குழப்பம்! போரிடும் வீரர்களின் வீர நாதங்கள்! போரில் அகப்பட்டுக் கொள்ளாது தப்பி இல்லங்களை நோக்கி ஓடிய பாமர மக்களின் கூக்குரல்கள். போர் துவங்கியதை உடனே அறியாததால் தூரத்தேயிருந்த மணிவண்ணன் கோட்டத்திலும் குமரன் கோட்டத்திலும் திடீரெனக் கிளம்பிய இரண்டாம் ஜாம மணியோசை! இத்தனையும் கலந்த புகார் பிரளயத்துக்குட் பட்டது போன்ற பயங்கரச் சூழ்நிலையை எங்கணும் ஏற்படுத்தியது.

டைபீரியஸின் உத்தரவுப்படி கொம்புகள் மும்முறை ஊதப்பட்டன. அவ்விடங்களிலிருந்து ரதங்களிலும் புரவி களிலும் விரைந்து கோட்டைக் காவலன் தலைமையில் வந்து ஏராளமான யவன வீரர்கள் போரில் சாரிசாரியாகப் பாய்ந்து மன்னனையும் மன்னன் வீரர்களையும் சூழ்ந்து கொண்டனர். அந்தப் படைகள் வரும்வரை மும்முரமாகச் சண்டையிட்ட டைபீரியஸ் சட்டென்று பின்வாங்கி, தனது வீரர்களையே மன்னன்மீது ஏவினான். பின்வாங்கிய சிறிது நேரத்தில் குழப்பமாக நடந்த போரை ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவர, படைகளை அணிவகுக்கவும் உத்தரவுகளை மடமடவெனப்

பிறப்பித்துக் கொண்டு சண்டை மும்முரமாக நடந்து கொண்டிருந்த இடங்களிலும் பாய்ந்து சென்று அணி வகுப்பை ஓரளவு நிறுவவும் செய்தான்.

வாளை மின்னல்போல் சுழற்றிக்கொண்டு பல யவன வீரர்களை ஏக காலத்தில் சமாளித்துக் கொண்டிருந்ததன்றி, பலரை வெட்டியும் வீழ்த்திவிட்ட கரிகாலன் டைபீரியஸின் ஏற்பாடுகளையும் கடைக்கண்ணால் கவனித்துக் கொண் டிருந்தானாகையால், டைபீரியஸ் அந்த நிலையிலும் காட்டிய அபாரத் துணிவையும், நெஞ்சுறுதியையும் நிதானத்தையும் பார்த்த அவனிடம் பெரிதும் மதிப்புக் கொண்டதன்றி, 'இத்தகைய சிறந்த வீரனை நாம் அழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதே' என்று ஓரளவு வருத்தமும் கொண்டான். அத்துடன் டைபீரியஸ் யத்தனிக்கும் அணிவகுப்பு மட்டும் முடிந்துவிட்டால் விழா விடுதிக்கெதிரிலுள்ள தன் சிறு படை யின் ஆபத்தும் அதிகரிக்கும் என்பதைப் புரிந்து கொண்டா னாகையால், போரிட்டபடியே மீண்டும் ஒருமுறை தன் கையைத் தூக்கினான்.

அந்தச் சைகையை அடுத்து, திடீரென வீனஸ் சிலைக்கு அப்பாலிருந்து இரண்டு ரதங்களிலிருந்து முரசுகள் பலமாக அலறின. அடுத்த வினாடி பட்டினப்பாக்கத்தின் பகுதியி லிருந்து பெருங் கூச்சல் ஏற்பட்டது. அந்தக் கூச்சலைக் கேட்டதும் ஒரு விநாடி திகைத்த டைபீரியஸ், மீண்டும் அணி வகுப்பைத் துவங்குமுன் ஏற்கெனவே நிறுவிய அணிவகுப்பும் குலையவே சில கணங்கள் ஏதுமறியாமல் நின்று விட்டான். பட்டினப்பாக்கத்தின் வாயில்கள் பலமாகக் காக்கப் பட்டிருக்க அங்கிருந்து ஏன் கூச்சல் வருகிறதென்பதை நினைத்துப் பார்த்து விடை காணாமல் தவித்த நேரத்தில், எதிரிப் படையிடையே இடம் செய்துகொண்டு ஊடுருவி அவனை நோக்கி வந்த கரிகாலன், "பட்டினப் பாக்கத்தில் கேட்கும் கூச்சல் மக்களின் எழுச்சி டைபீரியஸ். நான் இங்கு நிறுவிய ரகசியப் படையைக் கலைக்கவில்லை. அவர்களைச் சாதாரண மக்களாக இங்கே விட்டுப் போனேன்.

பட்டினப்பாக்கத்தின் மேற்கிலுள்ள கோட்டைக் கதவைத் திறக்க அவசியமில்லை. உள்ளிருந்தே நீண்ட நாளாக எழுப்பப் பட்ட மக்கள் திரண்டு வருகிறார்கள். இனி யவன நாடே ஆயுதம் பூண்டு வந்தாலும் உன்னையும் உன் வீரரையும் காக்க முடியாது" என்று இடையிடையே சொல்லம்புகளை வீசிக் கொண்டே வாளைச் சுழற்றிச் சுழற்றி டைபீரியஸ்மீது தாக்கினான்.

டைபீரியஸ் கனமான தன் வாளைச் சுழற்றிக் கரிகாலனை தாக்கிய வண்ணம் பேய்ச் சிரிப்பு சிரித்து, "அதோ அந்தத் தூண்கள் மும்முறைதான் சுழன்றிருக்கின்றன. அடுத்த முறை சுழலும்போது சோழ மன்னன் வீரர்களின் கதியும், இந்தப் பூம்புகாரின் கதியும் தெரியும். அதிலிருந்து கிளம்பும் பெரும் தீப் பந்தங்கள், விஷம் தீட்டப் பட்ட அம்புகள், புகாரெனும் பூவைப் பொசுக்கிவிடும். பொறுத்துப் பாருங்கள்" என்று வார்த்தைகளை அசுர வேகத்தில் உதிர்த்தான். அதற்குப் பதில் சொல்லாமலே போரிட்ட கரிகாலன் தன் வீரர்களை மீண்டும் உக்கிரமாகத் தாக்கும்படி சைகை செய்தான். சில நிமிடங்கள் தாக்குதல் மும்முரமாக நடப்பதற்குள் தூண்கள் சுழன்று தீப்பந்தங்களை எறியுமென்று எதிர்பார்த்த டைபீரியஸின் மனத்தில் பெரும் திகில் குடி கொண்டது. தீப்பந்தங்கள் வந்து விழுந்தன. தூண்களிலிருந்தல்ல, பட்டினப்பாக்கத்திலிருந்து திரண்டுவந்த மக்கள் சமுத்திரத்திலிருந்து. தூண்கள் சுழலத்தான் செய்தன. ஆனால் அவை பந்தங்களையோ விஷ அம்புகளையோ வீசவில்லை. டைபீரியஸ போரிட்ட சமயத்திலும் தூண்களைத் தலை நிமிர்ந்து பார்த்தான். இந்திர விழாவையே இடித்துவிடுவதுபோல் கரகரவென்ற பெரும் சத்தம் தூண்களிலிருந்து கேட்டது. சுழன்ற தூண்கள் நின்றன. ஆனால் அதைக் கண்ட டைபீரியஸின் தலை சுழன்றது.

பூம்புகாரையே அழிக்கவல்ல அந்த யந்திரத் தூண்களிரண்டும் திடீரென நின்றதால் அவற்றை யாரோ தடை செய்கிறார்கள் என்று முதலில் நினைத்த டைபீரியஸ் அவற்றின் பெரும் கரகரப்புச் சத்தத்தைக் கேட்டதும், தூண்களின்

உள்ளுள்ள பெரும் இருப்பு உருளைகள் கெடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் புரிந்துகொகண்டானாதலால், ஒரு வேளை அந்தத் தூண் காவலரும் வாணகரை யவனர்களாயிருப்பார்களோ என்ற எண்ணம் உள்ளத்தில் உதயமாகவே, 'யவனர் உள்ளத்தையும் இத்தனை தூரம் கொள்ளை கொள்ள அந்த இளஞ்செழியனிடத்தில் என்ன அத்தனை அபூர்வ சக்தி இருக்கிறது?' என்று நினைத்துப் பார்த்தான். தன் திட்டங்களையெல்லாம் நீண்ட கால ரகசிய ஏற்பாட்டால் சோழர் படை உபதலைவன் குலைத்துவிட்டதை எண்ணி, கோபம் கலந்த பெருமூச்சொன்றையும் விட்டான்.

பூம்புகார் எங்கணும் போர் ஒலி பலமாயிருந்தது. இரண்டாம் ஜாமம் ஆரம்பித்துவிட்டபடியால் வாணகரைப் பகுதியிலிருந்து பெரும் வேல்கள் இந்திர விழாவின் தளத்தை நோக்கிப் பறந்தன. ஆயிரக்கணக்கான வாணகரை வீரர்கள் குமரன் சென்னியின் தலைமையில் படகுகளில் ஊர்ந்து சுங்கச் சாவடியை நோக்கி வந்ததால் காவிரியில் துழாவிய துடுப்புகளின் சத்தங்கூட பயங்கரமாக ஒலித்தது. சில வினாடிகளில் சுங்கச் சாவடியைக் கைப்பற்றி, தன் வீரர்களுடன் புகாருக்குள் புகுந்த குமரன் சென்னி, கையில் கட்டாக வைத்திருந்த வேல்களைத் தூக்கித் தூக்கி எங்கும் விசிறத் தொடங்கவே அந்தப் பகுதியிலும் சண்டை மும்முரமாயிற்று. அமைதியாயிருந்த ஒரே இடம் குணக்கடலை நோக்கி நின்ற பூம்புகாரின் குணவாயில். அங்கும் திடீரெனப் பரதவரின் கூச்சல் கிளம்பியது.

இப்படி நாலா பக்கங்களிலிருந்தும் எழுப்பிய கூச்சலாலும், இந்திர விழா விடுதிக்கு முன்பாகப் படைக் கூட்டமும் மக்கள் கூட்டமும் மண்டிவிட்டதாலும், தோல்வியின் அறிகுறியை எங்கும் கண்ட டைபீரியஸ் நாற்புறமும் கண்களைச் சுழல விட்டான். பட்டினப்பாக்கத்திலிருந்து பந்தங்களுடனும் பெரும் வண்டிகளுடனும் வந்த மக்கள் கூட்டத்தின் வண்டியொன்று வீனஸின் சிலைமீது மோதவே வீனஸின் அழகிய உருவம் மண்ணில் சாய்ந்தது. யவன சாம்ராஜ்யக் கனவும்

அத்துடன் சாய்ந்தது என்பதை உணர்ந்த டைபீரியஸின் உள்ளம் எரிமலையாயிற்று. அந்த எரிமலையில் ராணியின் உருவமே பெரிதாக எழுந்தது. எரிமலைப் பிழம்பின் நடுவே பொற்கொண்டையை ஆட்டி ஆட்டி, "டைபீரியஸ்! என்னைச் சிறை செய்யவா துணிந்தாய்!" என்று முத்துப் பற்களைக் காட்டி ராணியின் உருவம் பெரும் சிரிப்புச் சிரித்தது. அந்தச் சிரிப்பினால் தானோ என்னமோ, இந்திர விழாவின் அந்தப் பிரதான வாயிலை உயிர் கொடுத்தாவது காக்கும்படி தன் வீரர்களுக்குக் கட்டளையிட்ட டைபீரியஸ் திடீரென இந்திர விழா விடுதிக்குள் ஓடினான்.

ரத்தம் தோய்ந்த கத்தியுடனும், கோபாவேசத்துடனும் நுழைந்த டைபீரியஸ், முற்கூடத்திலேயே இரு வீரர்களின் காவலுக்கிடையில் சந்தித்த ராணியின் கடை இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று.

"ராணி! யவன நாட்டுத் துரோகி! கிளம்பு என்னுடன்!" என்றான்.

"எங்கு?" என்று கேட்டாள் ராணி.

"புகாரில் நாம் வெற்றியடைய முடியாது" என்று அவசர அவசரமாக வார்த்தைகளை உதிர்த்தான் டைபீரியஸ்.

"அது எனக்கு முன்பே தெரியும்" என்று சிரித்தாள் ராணி.

"எனக்கு இப்பொழுதுதான் தெரியும்."

"என்ன தெரியும் உனக்கு?"

"நமது நாட்டின் முதல் துரோகி நீ என்பது" என்று கூறிய டைபீரியஸ், "கதை இத்துடன் முடியவில்லை ராணி. வா இப்படி" என்று கூறி, அவளைக் கையைப் பற்றித் தரதர வென்று இழுத்துக் கொண்டு, போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்த இந்திர விழா மாளிகையின் வடக்கு வாயிலை நோக்கிச் செல்லாமல் கிழக்கிலிருந்த சிறு வாயில் வழியாக ஓடினான். அந்த வாயிலைக் காத்து, சிறிது தூரத்தில் வந்து கொண்டிருந்த பரதவரைச் சமாளிக்க விற்களை வளைத்து நின்ற யவன வீரர்களைத் தன்னைத் தொடர்ந்து வரும்படி

சைகை செய்த டைபீரியஸ், எதிரேயிருந்த ரதமொன்றில் ராணியை ஏற்றிக்கொண்டு புகாரின் கிழக்கு வாயிலை நோக்கிப் புரவிகளை வெகு துரிதமாகத் தூண்டினான். தூள் பறக்கச் சென்ற டைபீரியஸின் ரதத்தை நிறுத்த முடியாத பரதவர் திடீர் திடீரென விலகி ஓடினாலும், மறுபடியும் மறுபடியும் கும்பலாகக் குவிந்து பின்னிருந்து வேல்களை வீசியும், ஏதோ மந்திரத்தால் பாதுகாக்கப்பட்டவனைப்போல் டைபீரியஸ் அவற்றால் பாதிக்கப்படாமல் புகாரின் கிழக்குப் பெரு வாயிலையும் கடந்து சங்கமத் துறை செல்லும் பாதையில் ரத்தைச் செலுத்தினான். அத்தனை வேகத்தில் வந்ததும் புகாரின் கடற்கரைப் பகுதியிலும் போர் மும்முரமாக நடப்பதைக் கண்டு, ராணியை இழுத்துக் கொண்டு தரையில் குதித்து எதிரே கடற்கரையோரத்தில் சங்கமத் துறைக் கருகேயிருந்த படகுகளை நோக்கி உருவிய வாளும் கையுமாக ஓடினான். படகுகள் சில கரையில் இழுத்துவிடப்பட்டிருந்தன. சில கடலோரத்தில் அலைமோதும் இடத்தில் ஆழ இறக்கப்பட்டிருந்த இரும்புத் தூண்களில் இணைக்கப்பட்டிருந்தன. அவற்றைக் கண்டதும் சற்றுத் தைரியமடைந்த டைபீரியஸ், "ராணி! அதோ மரக்கலங்களில் நமது யவனர் தானிருக்கிறார்கள். அவற்றை அடைந்துவிட்டால் உன்னை என்னிடமிருந்து யாரும் மீட்க முடியாது. இன்னும் சில நிமிடங்களில் யவன நாட்டை நோக்கி நமது மரக்கலங்கள் ஓடும். அங்கு உன் தந்தைக்கும் யவன சோதிடருக்கும் மக்களுக்கும் உன் குற்றத்துக்கு நீயே பதில் சொல்" என்று கூறிக் கொண்டே படகுகளை அணுகினான். தளையிலிருந்த படகுகளை அவன் அணுகு முன்பாக, மணலில் இழுக்கப்பட்டுக் கிடந்த படகுகளில் மறைந்து கிடந்த வீரர்கள் பலர் உருவிய வாட்களுடன் தரையில் குதித்து டைபீரியஸுக்கும் கடலுக்கும் இடையே சுவர்போல் நின்றனர். அவர்கள் நடுவில் வாளும் கையுமாக இதழ்களில் புன்முறுவல் அரும்ப இளஞ்செழியன் நின்றிருந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. நிகழ்ச்சிகளின் முடிவு வெற்றிதான்.

வெற்றி யாருக்கு என்பது மட்டும் விளங்கவில்லை படைத் தலைவனுக்கு. தாங்க முடியாத உணர்ச்சிகள் அவன் இதயத்தைத் திடீர் திடீரெனத் தாக்கி, சுக்கு நூறாக உடைக்கத் துவங்கின.

119. ராணியின் வெகுமதி!

தலைகளில் பிணையுண்டு அலைகளில் ஆடி நின்ற படகுகளை அணுகவொட்டாமல் தன்னைத் தடுத்துச் சுவர் போல் நின்றுவிட்ட வீரர்கள் வரிசையையும், அவர்களுக்கு நடுவே உருவிய வாளுடனும் உறுதிமிக்க பார்வையுடனும் கால்களைச் சற்று அகலமாக ஊன்றி போருக்கு ஆயுத்தமாக நின்ற இளஞ்செழியனையும் பார்த்த டைபீரியஸ், தான் படகுகளை அணுகுவதோ, தப்பிச் சொந்த நாடு செல்வதோ நடவாத காரியமென்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டானாகையால், தடைப்பட்ட இடத்திலிருந்து நகராமல் ஒரு முறை பூம்புகாரின் கடற்கரைப் பக்கம் முழுவதும் கண்களைச் செலுத்திவிட்டு, இளஞ்செழியனையும் தன் ஈட்டிக்கண்களால் சில வினாடிகள் ஊன்றிப் பார்த்தான். அவன் கண்கள் கடற்கரைப் பிராந்தியத்தைத் துழாவியதையும் பிறகு தன்மீது நிலைத்ததையும் கண்ட படைத் தலைவன், "எங்கும் தப்ப வழியில்லை டைபீரியஸ்!" என்று உறுதியும் சாந்தியும் கலந்து உறவாடிய குரலில் சுட்டிக் காட்டினான்.

சிறைப்படுவது திண்ணம் என்று தெரிந்த அந்தச் சமயத்திலும் டைபீரியஸின் இதழ்களில் ஓர் இகழ்ச்சிப் புன்முறுவல் படர்ந்ததன்றி, "தப்ப வழியில்லையென்பது சந்தேகமறத் தெரிகிறது படைத் தலைவரே" என்று உதிர்ந்த சொற்களில் ஓர் ஏளனமும் ஒலித்தது.

இட்ட திட்டமெல்லாம் தவிடுபொடியாகி இறுதிக் கட்டத்தில் நின்ற அந்த வேளையிலும், டைபீரியஸ் காட்டிய நிதானமும் உறுதியும் அவன் சொற்களில் தொனித்த அலட்சியமும் ஏளனமும் இளஞ்செழியனுக்கு அவனிட

மிருந்த மதிப்பைப் பன்மடங்கு அதிகப்படுத்தவே ஏக வசனத்தில் பேசுவதைக் கைவிட்டு, "யவனர் கடற்படைத் தலைவர் இனியும் எதிர்த்து அர்த்தமில்லை. வாளைக் கீழே எறிந்துவிடுங்கள்" என்று உத்தரவிட்டான், குரலில் சிறிதும் சலனத்தைக் காட்டாமல்.

"வாளைக் கீழே எறிவது வீரர்களுக்குப் பழக்கமில்லை படைத் தலைவரே! அதற்கு வேறு உபயோகமிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே, மின்னல் வேகத்தில் வாளைத் திருப்பிய டைபீரியஸ், வாளின் முனையை ராணியின் கழுத்தில் சரேலென ஊன்றினான். அவளை ஏற்கெனவே பிடித்திருந்த வலது கை, புஷ்பத்திலும் மென்மையான இவள் இடக் கரம் கன்னிப் போகும்படியாக முன்னிலும் அதிக முரட்டுத்தனத் துடன் பிடித்துக் கொண்டதன்றி, அவன் வார்த்தைகளும் திடமாகவும் ஏளனத்துடனும் வெளிவந்தன. "படைத் தலைவரே! நீங்களோ அல்லது உங்கள் வீரர்களோ யாராவது ஒருவர் அசைந்தாலும் உங்கள் காதல் ராணியின் அழகிய கழுத்தில் இந்த வாள் புதைந்துவிடும். விலகி நின்று படகுக்கு வழிவிடுங்கள். சுமார் ஓராண்டுக்கு முன்பு இங்கு இருவரும் வந்தோம். இருவருமே திரும்பிச் செல்கிறோம். தடை செய்ய முயல வேண்டாம். யவன ராஜ குடும்பத்துக்கும் மக்களுக்கும் உள்ள கடமையை உங்கள் காதலுக்காக உதறிவிட்டதற்கு ராணி தண்டனை அடையவேண்டும். அந்தத் தண்டனையை இங்கு இந்தக் கடற்கரையில் இந்த வாளினால் அளிக்க விரும்பவில்லை. நீங்கள் விரும்பிய இந்த எழில் உடலுக்காக யவன நாட்டுச் சிங்கங்கள் பசியுடன் காத்திருக்கின்றன. ராஜத் துரோகக் குற்றத்துக்கு அங்கு கிடைக்கும் தண்டனை அது. எனக்கு உங்கள் மீது கோபமில்லை. இந்தப் பொன்னாடு மீதும் கோபமில்லை. ஆனால், எங்கள் நாட்டுக்குத் துரோகம் செய்து எதிரிகளுடன் உறவாடிய இந்த ராணியை நான் மன்னிக்க முடியாது. ஆகவே விடுங்கள் வழியை. எந்த நாட்டுப் பற்றை முன்னிட்டுப் புகாருக்குள் அடிக்கடி நுழைந்து உங்கள் உயிரையும் பணயம் வைத்து இறுதியில் வெற்றியடைந்

தீர்களோ, அத்தகைய நாட்டுப் பற்று எனக்கும் உண்டு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்" என்று பதம் பதமாக அழுத்தி உச்சரித்துப் பேசிக் கொண்டு, கண்களின் எதிரேயிருந்த வீரர்களின் ஒவ்வொரு அசைவையும் கவனித்த வண்ணம் ராணியின் நெஞ்சில் அழுத்திய கத்தியைத் திட்பமாகப் பிடித்துக் கொண்டு, ராணியையும் இழுத்துக் கொண்டு மெள்ள மெள்ளப் பின்னடையத் தொடங்கினாலும் இளஞ்செழியன் கண்கள் மட்டும் டைபீரியஸின் கால்களையும் ராணியின் கழுத்தில் ஊன்றியிருந்த வாள் பிடித்த கரத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தனவாகையால் ராணியின் முகத்தையோ அவள் உணர்ச்சிகளையோ கவனிக்க அவற்றுக்கு அவகாசமில்லாதிருந்தது.

கழுத்தில் கத்தியின் நுனி ஊன்றிக்கிடந்த அந்த நேரத்திலும் ராணியின் கடையிதழ்களில் புன்முறுவல் நிரம்பிக் கிடந்தது. அவள் தலை கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. நீலமணிக் கண்கள் எதிரேயிருந்த இளஞ்செழியனைப் பரிதாபத்துடன் பார்த்தன. அவள் இதயத்தில் எத்தனை எத்தனையோ உணர்ச்சிகள் அலைமோதியும் அவள் மிகவும் அலட்சியமாகவும் உறுதியாகவும் நடந்தாள்.

டைபீரியஸின் கால்களையே பெரிதும் கவனித்து நின்ற படைத் தலைவனின் கண்கள், அந்தக் கால்களுக்குப் பக்கத்தில் வெளேரென்று திடமாக மணலில் புதைந்து புதைந்து எழுந்த ராணியின் கால்களையும் கண்டதால், அவன் இதயத்தில் வேதனை கரைகடந்து புரண்டது. 'எத்தனை அழகிய கால்கள்!' என்று அபாயமான அந்தச் சமயத்திலும் நினைத்தது படைத் தலைவனின் இதயம். அந்த மாயாதேவியின் நடையழகிலே வினாடி நேரமே லயித்த இதயத்தை, திடீரென இரும்பாக்கிக் கொண்ட இளஞ்செழியன், தன்னைப் பெரிதும் அணுகிவிட்ட டைபீரியஸ், "படைத் தலைவரே! விலகி நில்லுங்கள். என் யாத்திரைக்கு இடைஞ்சலாயிருக்கிறீர்கள்" என்று கூறியதைக் கேட்டதும் சரேலென்று இடம்விட்டு விலகினான்.

அடுத்த வினாடி யவனர் கடற்படைத் தலைவன் கடற்கரையில் அலைமோதிய இடத்தில் புரண்டான். மிகவும் எச்சரிக்கையுடன் வாளை உருவி நின்ற இளஞ்செழியன் கரத்திலும் மற்றவர்களின் ஆயுதங்களிலுமே கண்களைச் செலுத்திய டைபீரியஸ், தான் அருகில் சென்றதும் படைத் தலைவன் திடீரென இடம்விட்டு விலகுவானென்றோ தனது கால்களை அவன் காலால் இடறி விடுவானென்றோ எதிர்பார்க்காததால், வாள் பிடித்த கையும், தலையும், அலையில் நனைய, கடல் நீரின் முகப்பிலே விழுந்தான். திடீரெனத் தவறி விழுந்த அந்த நேரத்திலும் ராணியின் கையை மட்டும் விடாததால் ராணியும் கடல் நீரில் புரண்டாள்.

அடுத்த நிகழ்ச்சிகள் நேர்ந்த விதத்தைப் பிற்காலத்தில் எண்ணிப் பார்த்த சமயங்களிலெல்லாம் டைபீரியஸைப் பற்றித் தன் உள்ளத்தே பெரிதும் பாராட்டியிருக்கிறான் இளஞ்செழியன். கால் இடறப்பட்டு விழுபவன் மின்னல் வேகத்தில் எழுந்து வாளைப் பிடித்துப் போர் செய்ய முடியுமென்பதும், தன் வீரர்கள் பலரை வெட்டி வீழ்த்த முடியுமென்பதும் எண்ணத் தகாத விந்தையாயிருந்தது படைத் தலைவனுக்கு, நீரில் விழுந்தவன் கண்ணிமைக்கும் நேரத்தில் தலையில் நீர் சொட்ட, நனைந்த வாள் மதியொளியில் மின்ன, கிரேக்க நாட்டுப் போர்த் தெய்வம் போல் எழுந்து நின்றான். படைத் தலைவன் காலை இடறியதும் அவனைப் பிடிக்க வாளும் கையுமாகப் பாய்ந்த நாலைந்து வீரர்களின் மார்புகளில் அவன் வாள் புகுந்து புறப்படவே வீரர்கள் பெருங் கூச்சலிட்டு விழுந்தார்கள். நீரின் முகப்பில் நின்றபடியே போரிட்ட டைபீரியஸ், தன்னைவிடத் துரிதமாக எழுந்து நீரிலேயே எட்ட நின்ற ராணியை வெறுப்பு நிரம்பிய கண்களால் ஒருமுறை பார்த்தான். அந்த வெறுப்பு, உள்ளத்தில் எழுந்த ஆத்திரம் அவன் நிதானத்தைக் குலைத்ததோ, கடமையை வலியுறுத்தியதோ தெரியவில்லை. சுற்றி நின்ற எதிரிகள் மீது மோதிய வாளைத் திடீரென்று ராணியை நோக்கி விட்டெறிந்

தான். என்றும் குறி தவறாத டைபீரியஸின் அந்த வாள் அன்றும் குறி தவறவில்லை! "உனக்கு உரிய தண்டனையை இங்கேயே அளித்துவிட்டேன் ராணி!" என்று கூறிப் பேய்ச் சிரிப்புச் சிரித்தான் டைபீரியஸ். அதே வினாடியில் தொலை தூரத்திலிருந்து வந்த ஈட்டியொன்று அவன் மார்பில் பாய்ந்தது. மார்பில் பாய்ந்த ஈட்டியைப் பிடிக்கக்கூட முயல வில்லை டைபீரியஸ். நின்ற இடத்தைவிட்டு அசையக்கூட . அவன் முயலவில்லை. தூரத்தே ராணி தள்ளாடி விழுவதைக் கண்களால் பார்த்தான். அவன் முகத்தில் பெரும் திருப்தி குடி கொண்டது. கடமையைச் செய்து முடித்துவிட்டதுபோல் அவன் கைகள் விரிந்தன; உடலும் அலைகடலை நோக்கிச் சாய்ந்தது.

இளஞ்செழியனும் அவன் வீரர்களும், ஏன், தூரத்தே யிருந்து உள்ள நிலையை அறிந்ததால் வேலெறிந்து டைபீரியஸை மாய்த்துவிட்டு ஓடிவந்த குமரன் சென்னியும், அதுவரை போராடியதால் குருதி கொட்டும் பெரும் கத்தி யுடன் பிரும்மாண்டமான சரீரம் குலுங்கச் சென்னியுடன் வந்த பிரும்மானந்தரும்கூட, கடலின் கரையருகே நிலைத்த அந்தக் கோரக் காட்சியைக் கண்டு ஸ்தம்பித்து நின்றனர். ராணிமீது வாள் வீசப்பட்டதுமே அவளை நோக்கி நகர்ந்த இளஞ்செழியன், அவள் தள்ளாடிக் கரையருகே விழுந்ததும் பைத்தியம் பிடித்தவன்போல் கத்தியை எறிந்துவிட்டு அவளை நோக்கிக் குனிந்தான்.

ராணி உணர்விழந்து கிடந்தாள். இளஞ்செழியன் சிந்தனை மிகவும் குழம்பிக் கிடந்தது. அப்பொழுதுதான் அவள் கப்பலுடைந்து கரையோரத்தில் ஒதுக்கப்பட்டது போலும், தன் காலில் அவள் மோகன உருவம் தடைப்பட்டது போலுமிருந்தது படைத் தலைவனுக்கு. பல நாட்களுக்குப் பிறகு வெற்றி கண்ட சோழப் படையினர் அப்பொழுதே எரிய விட்ட பூம்புகாரின் கலங்கரை விளக்கத்தின் ஒளியும், தூரத்தே ஓடி வந்த வீரர்களின் தீப்பந்தங்களும் கடலலைகளைத் தங்க நிறமாக அடித்ததாலும், அந்த அலைகள் மெல்ல மெல்ல

அவள்மீது தவழ்ந்து சென்ற அலைகள் மெல்ல மெல்ல அவள்மீது தவழ்ந்து சென்றதாலும், கடலரசன் அந்த எழிலரசியின் உடலுக்குப் பொன்னிறப் போர்வையைப் போர்த்திப் போர்த்தி எடுக்கும் பிரமை அளித்ததால் அந்தப் பழைய ஆவணித் திங்களுக்கே படைத் தலைவன் மனம் சென்றது. அவன் சிந்தை புகாரை மறந்தது. கடற்கரையை மறந்தது. எந்த மங்கை புறக்கணித்ததால் வேதனை இதயத் துடன் அந்த நாளன்று கடற்கரையோரமாக நடந்து வந்தானோ அந்தப் பூவழகியையும் மறந்தது. அத்தனையும் மறந்தது. மறக்காதது ராணியை, அவள் பொன்னிறக் கொண்டையை, நீலமணி விழிகளை. அந்த நேரத்திலும் வெண்கலச் சிலை போலிருந்த வழவழத்த உடலை. அதைப் பார்த்துப் பார்த்துப் பிரமை பிடித்து நின்ற படைத் தலைவனின் தோளைப் பிரும்மானந்தரின் அன்புக் கரம் தொட்டது. "படைத் தலைவரே! அவளை எடுத்து வாருங்கள்! ஒருவேளை உயிர் இருக்கலாம். சிகிச்சை செய்து பார்ப்போம்" என்ற அமுத மொழிகள் அவர் உதடுகளிலிருந்து உதிர்ந்தன. ஏதோ கனவில் நடமாடுபவன் போல் இளஞ்செழியன் மணலில் பாதியும், நீரில் பாதியுமாகக் கிடந்த யவன ராணியைத் தன் கரங்களில் தூக்கிக் கொண்டு எழுந்தான். கரைக்கு வந்து உட்கார்ந்து அவளை மடியில் கிடத்திய வண்ணம் மார்பில் ஊன்றிப் பதிந்து கிடந்த வாளை மெள்ளப் பிடுங்கித் தூரத்தே எறிந்தான். அதிலிருந்து குபுகுபுவென்று கிளம்பிய குருதி அவள்மார்பில் வழிந்து தாங்கி நின்ற அவன் மடியையும் நனைத்தது. பக்கத்தில் அவளருகில் உட்கார்ந்து காயத்தை ஆராய்ந்த பிரும்மானந்தர் தன் காஷாயத்தில் ஒரு பகுதியைப் பந்துபோல் சுருட்டி அந்தக் காயத்தில் அழுத்தி ரத்தத்தை நிறுத்தியதன்றி, அந்தப் பத்து நன்றாக நிலைக்க மார்பையும் முதுகையும் வளைத்து இறுக ஒரு கட்டும் போட்டதல்லாமல், "ராணியை இந்திர விழா விடுதிக்கு எடுத்து வாருங்கள், பச்சிலை வைத்துக் கட்டிப் பார்க்கிறேன்" என்றும் கூறினார்.

மீண்டும் அவளைக் கரங்களில் தாங்கிய வண்ணம் படைத் தலைவன் எழுந்தான். ஏதோ பித்துப் பிடித்தவன் போல் பிரும்மானந்தரை ஒருமுறை பார்த்தான். பிறகு கடலோரமாகக் கனவில் நடப்பவன்போல் வடதிசை நோக்கி நடந்தான். அவன் போவதைப் பல வினாடிகள் பார்த்துக் கொண்டு நின்ற பிரும்மானந்தர், "சென்னி! அவர் தன் மாளிகைக்கு ராணியை எடுத்துச் செல்கிறார். நாம் போய் மன்னருக்கும், மற்றவர்களுக்கும், விஷயத்தைச் சொல்லி விட்டுப் பச்சிலை எடுத்து வருவோம்" என்று கூறி, வெகு வேகமாக மணலில் சென்னியும் இதர வீரர்களும் பின்தொடர நடந்து சென்றார்.

கடலோரத்தே நடந்து சென்ற படைத் தலைவன் மனத்தில் அன்றுபோல் இன்றும் வேதனை நிறைந்து நின்றது. அன்று ஒருத்தி காதலை மறுத்ததால் ஏற்பட்ட வேதனை உள்ளத்தை ஒடுக்கியது. இன்று காதலை அர்ப்பணித்த ஒருத்தி, கையில் மரணமூச்சுடன் படுத்திருப்பதால் ஏற்பட்ட வேதனை இதயத்தை இறுக்கியது. 'காதல் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் வேதனை வேதனைதான். இன்பமும் துன்பமும் இரண்டுமே வேதனையைத் தான் அளிக்கும்' என்று வேதாந்தமும் அவன் சிந்தையிலே சுற்றிவந்தது. கரங்களிலே கிடந்த ராணியை அவன் கண்கள் உற்றுப் பார்த்துக் கொண்டே கால்கள் தாமாக அவனை இழுத்துச் சென்றன. ராணியின் கொண்டை, அவள் தரித்திருந்த கிரீடத்தின் காரணமாக அவிழாமலே இருந்தாலும் சில மயிரிழைகள் மட்டும் மார்பில் சாய்ந்திருந்த அவள் மலர்க் கன்னத்துக்கும் அவன் இதயத்துக்கும் இடையே ஒட்டிக் கிடந்தது. அந்த இதயத்திலிருந்து அவள் பிரியவேண்டிய வேளை வந்து விட்டதை வலியுறுத்துவன போலிருந்தது.

அத்தனை மரண காயம் பட்டும் அவள் மூச்சு மெள்ளவே வந்துகொண்டிருந்ததன் விளைவாக அவள் உடல் மெள்ள மெள்ளவே எழுந்து தாழ்ந்து கொண்டிருந்ததால், மரணம் கூட ராணியின் உறுதியைக் குலைக்க முடியா

தென்பதை உணர்ந்த இளஞ்செழியன் கண்களில் வேதனையும் பெருமையும் கலந்தே படர்ந்தது. வழவழத்த அவள் ரமணீய உடல் இன்பச் சுமைதான். ஆனால் அந்த இன்பச் சுமைதான் அன்று எத்தனை துன்பச் சுமையாயிற்று இளஞ்செழியனுக்கு! அவளைத் தூக்கிக்கொண்டு புகாரின் வடக்குவாசலை அடைந்த சமயத்தில், தான் வாழ வேண்டியது அத்தனை அவசியமா என்று நினைத்தான் இளஞ்செழியன்.

இப்படி வேதனை நிறைந்த இதயத்துடனும் கனவில் சஞ்சரித்த சிந்தையுடனும், ஏதோ பொறியால் இயக்கப் பட்டவன்போல் தனித் தோப்பிலிருந்த தன் மாளிகையை அடைந்த இளஞ்செழியன், கதவு தாழிடப்பட்டிருப்பதை அறிந்து கதவைக் காலால் இருமுறை உதைத்தான். மது வருந்தும் கேளிக்கை ஸ்தலமாக இருந்த அந்த மாளிகை அன்று, 'ராணி வருவாள்! அவளை ஒலியாலும் சங்கடப் படுத்தக் கூடாது' என்பதை உணர்ந்ததுபோல் அரவம் ஏதுமின்றிப் பயங்கர அமைதியதை மேற்கொண்டிருந்தது.

மாளிகையின் பெரும் மரக்கதவுகள் திறக்கப்பட்டன. அந்தப் பழைய ஆவணித் திங்களில் திறக்கப்பட்டதுபோல் இருப்புச் சலாகைகளின் பெரும் சத்தத்தோடு அல்ல, மிக மெதுவாகக் கொஞ்சம் சத்தத்துடன், அதி ஜாக்கிரதையாகத் திறக்கப்பட்டன. கதவுகளை அன்றும் யவன வீரனான ஹிப்பலாஸே திறந்தான். இளஞ்செழியன் கண்களும், ஹிப்பலாஸின் கண்களும் ஒருமுறை சந்தித்தன. "உனக்கு யார் சொன்னது ஹிப்பலாஸ்!" என்று கேட்ட இளஞ்செழியன் சொற்களில் உறைந்து கிடந்த வேதனையை உணர்ந்த ஹிப்பலாஸ் வரட்டுக் குரலில் பதில் சொன்னான். "நீங்கள் மிகவும் மெதுவாக நடந்து வந்திருக்க வேண்டும். பிரும்மா னந்தர் அப்பொழுதே வந்து என்னை அனுப்பி வைத்தார்" என்று சற்று நிதானித்து விட்டு மேலும் சொன்னான்: "மாடியறையில் மஞ்சத்தை விரித்திருக்கிறேன் படைத் தலைவரே! இனி ராணியை நாம் கவசத்திலடைத்து மறைக்க வேண்டியதில்லை. நம்மைத் தொந்தரவு செய்ய யாரும்

இல்லை." இதைச் சொன்ன ஹிப்பலாஸின் குரல் தழுதழுத்துக் கிடந்தது. என்றும் கண்ணீரை அறியாத அவன் கண்களி லிருந்தும், இரண்டு பொட்டு நீர் உருண்டு ஓடிக் கன்னத்தை நனைத்தது.

மேற்கொண்டு ஏதும் பேசச் சக்தியற்ற படைத் தலைவன், ராணியைத் தூக்கிக்கொண்டு மாடியறைக்குச் சென்று அவளை மஞ்சத்தில் கிடத்திப் பக்கத்தில் தானும் உட்கார்ந்து அவள் மலர்க் கரமொன்றைத் தன் கையால் பற்றிக் கொண்டான். இன்னொரு கையின் விரல்கள் அவள் கிரீடத்துக்கு இடையே தெரிந்த குழலை கோதிவிட்டது. நீண்டநேரம் சிலைபோல அப்படியே உட்கார்ந்திருந்தான் படைத்தலைவன். பிரும்மானந்தர் காஷாயத்தை வைத்துக் கட்டியிருந்ததன் விளைவாக ரத்தப் போக்கு நின்றிருந்த தாலும், ஹிப்பலாஸ் கொண்டுவந்த யவன நாட்டு மதுவை மெள்ள மெள்ள உதடுகளை நீக்கி இளஞ்செழியன் செலுத்திய தாலும் மெள்ளக் கண்களை விழித்த ராணி மஞ்சத்தில் தான் கிடப்பதையும் அருகே இளஞ்செழியன் அமர்ந்திருப்பதையும், தன் கை அவன் கையில் சிறைப்பட்டுக் கிடப்பதையும் பார்த்து மெள்ளப் புன்முறுவல் செய்தாள்.

அவள் புன்முறுவலைக் கண்ட இளஞ்செழியன் இதயத்தில் சிறிது நம்பிக்கை பிறக்கவே, குழலைக் கோதிவிட்ட அவன் கரம் மெள்ள அவள் பளிங்குக் கன்னங்களைத் தடவிக் கொடுத்ததும் அவள் இன்பப் பெருமூச்சொன்றை விட்டாள். அந்த இன்பப் பெருமூச்சைக் கண்டதும் சிறிது சாந்தியை அடைந்த இளஞ்செழியன், "பயமில்லை ராணி, பிரும்மா னந்தர் பச்சிலையுடன் சீக்கிரம் வந்துவிடுவார்" என்று நாக்குழறப் பேசினான்.

அவன் நாக்கு குழறியதே அவளுக்கு இன்பமாயிருந்தது. காதலால் ஆட்கொள்ள முடியாத இதயத்தைத் தியாகத்தால் தான் ஆட்கொண்டுவிட்டதை உணர்ந்த ராணியின் முகத்தில் மகிழ்ச்சி ரேகை நன்றாகப் படர்ந்தது! அந்த மகிழ்ச்சியுடன்

அவள் சொன்னாள்: "பயம் என்றுமே இல்லை எனக்கு. பச்சிலையை எனக்குப் பிரும்மானந்தர் கொண்டுவரத் தேவை யில்லை. என் பச்சிலை என் அருகிலேயே இருக்கிறது" என்று கூறி, அவன் கையைச் சற்று இறுகப் பிடித்துக் கொண்டாள். அவள் மூச்சு சற்றுப் பலமாக வரத் தொடங்கியது. அவள் சிரமப்படுவதை உணர்ந்தான் படைத்தலைவன். "ஹிப்பலாஸ்! சீக்கிரம் பிரும்மானந்தரைப் பச்சிலையுடன் அழைத்து வா" என்றான்.

ஹிப்பலாஸ் வெகு வேகமாக வெளியே சென்றதைப் படுத்தபடி பார்த்த யவனராணி, "என் தலையைத் தூக்கி மார்பில் சாத்திக் கொள்ளுங்கள். கொஞ்சம் உயரமாயிருந் தால் மூச்சு விடச் சௌகரியமாயிருக்கும்" என்று திணறித் திணறி மெதுவாகச் சொன்னாள். அவள் கூறியபடியே மஞ்சத்திலிருந்து எழுந்து அவள் தலைப்பக்கமாக வந்து அவள் உடலை மெல்லத் தூக்கிக் கட்டிலில் மீண்டும் அமர்ந்து, அவள் தலையைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டு, இடது கையால் அவள் உடலையும் அணைத்துப் பிடித்துக் கொண்டான் இளஞ்செழியன்.

காதல் பொங்கி வந்த நீலமணிக் கண்களால் படைத் தலைவனை நோக்கிய ராணி, "நீங்கள் சொன்னபடி சகலத்தையும் செய்துவிட்டேன். வாணகரை யவனர்களைக் கொண்டு யந்திரத் தூண்களை அழித்தேன். நாகலிங்கப் பூவைக் கொடுக்கும்படி அலீமாவிடம் சொன்னீர்களாம். அந்தப் பூவைப் பார்த்தேன். புரிந்து கொண்டேன்" என்றாள்.

இளஞ்செழியன் உள்ளம் வெடித்து விடும்போல் இருந்தது.

"ராணி! ராணி!" என்று உதடுகள் சொற்களை உதிர்த்தன.

ராணியின் அழகியவனத்தில் புன்முறுவல் அதிகமாகப் படர்ந்தது. சிறிது சிரமப்பட்டு மூச்சு விட்டுக்கொண்டு சொன்னாள்: "வருந்தாதீர்கள். விதி விதித்தவழி இது."

"விதியா! மீண்டும் விதியா! அந்தச் சொல் வேண்டாம் ராணி" என்று இளஞ்செழியன் அவள் காதில் முணுமுணுத்தான், துன்பம் குரலில் தோய்ந்து பாய.

ராணி ஒரு முறை நீண்ட பெருமூச்செறிந்தாள். அவள் இதயம் முன்னைவிட அதிகமாகப் படபடத்தது. "வேண்டினாலும், வேண்டாவிட்டாலும் விதி நம்மை விடுவதில்லை. யவன சோதிடர்கள் முன்னமே சொன்னார்கள். 'நீ கிழக்கு நாட்டில் முடி சூடுவாய், உனக்குத் தமிழனொருவன் துணையாயிருப்பான்' என்று. அப்படித்தானே நடந்தது. நான் முடி புனைந்துவிட்டேன் புகாரின் ராணியாக. நீங்களும் என்னை முடிசூடத்தானே கூறினீர்கள்?" என்றாள் சிரமப்பட்டுச் சொற்களைக்கூட்டி.

"கூறினேன் ராணி! கூறினேன். அத்துடன் புகாரையும் தமிழகத்தையும் காத்தால் உன்னை மணப்பதாகவும் உறுதி கூறினேன். அந்த வார்த்தையை நிலைநிறுத்துகிறேன்" என்றான் இளஞ்செழியன் துடிக்கும் உதடுகளுடன். வார்த்தையை நிலைநிறுத்துவேன் என்பதற்கு அறிகுறியாக அவள் பூவுடலைச் சுற்றியிருந்த கையை ஆசையுடன் அழுத்தவும் செய்தான்.

"வாக்கை நிலைநிறுத்த அவசியமில்லை படைத் தலைவரே! உங்களால் என்னைக் காதலிக்க முடியாது. இதுதான் சரியான முடிவு" என்ற ராணி வேதனையால் ஒருமுறை அவன் கையில் நெளிந்தாள்.

ஏதோ புஷ்பக்கொடி நெளிவதுபோல் கையில் அசைந்த ராணியை அணைத்த வண்ணம், "முடியும் ராணி! காதலிக்க முடியும். பிரும்மானந்தர் சிகிச்சையில் பிழைக்காதவர்கள் கிடையாது. முடிவு இது அல்ல, அல்லவே அல்ல" என்று உணர்ச்சி பொங்கி வழியச் சொன்னான் படைத் தலைவன்.

"உங்கள் இதயத்தில் இந்த நேரத்தில் பிரவாகிப்பது காதலல்ல படைத் தலைவரே! பரிதாபத்தைக் காதலென்று நினைக்கிறீர்கள். உங்கள் இதயம்... இப்படிக் குனியுங்கள்" என்ற

ராணி, அத்தனை வேதனையிலும் அவனை ஆசையுடன் பார்த்தாள்.

அவள் ஆணைப்படி குனிந்த படைத் தலைவன் தலையை மார்பில் அணைத்த யவன ராணி, "உங்கள் இதயம்... பூவழகியுடையது ... அவள் பாக்கியசாலி ... நான் பொறாமைப் படவில்லை. அவளிடம் சொல்லுங்கள்" என்றாள் அவன் காதுகளில். அந்தச் சமயத்தில் ராணியின் மூச்சு பெரிதாக அடிக்கடி வருவதைக் கண்ட இளஞ்செழியன் தலையை நிமிர்த்தி, "ராணி! உனக்கு என்ன செய்கிறது?" என்று கவலையும், பயமும் முகத்தில் கலந்து பாயக் கேட்டான்.

அவன் அப்படி அவதிப்பட்டது, அவளுக்குப் பெரும் இன்பமாயிருந்தது. தனக்கும் அவன் உள்ளத்தில் இடமிருப்பதைத் தெரிந்து கொண்டாள். ஆகவே, "கவலைப்படாதீர்கள். ஒன்றும் செய்யவில்லை. இந்த இறுதிக் கட்டமாவது உங்கள் மார்பில் அணைய முடிகிறதே என்கிற ஆனந்தம் தான் எனக்கு. உங்களைக் கண்ட அன்றே கணவனாக வரித்தேன். கருவூர் சமண மடத்தில் அதைப் பிரும்மானந்தரிடமும் சொன்னேனே நினைவிருக்கிறதா? ஆம் படைத் தலைவரே, வதுவை நடக்காவிட்டாலும் நான் உங்கள் மனைவி. இதயம் அந்தப் பதவி ஏற்று நாளாகிறது. புரிகிறதா படைத் தலைவரே! டைபீரியஸ் நான் கடமை தவறியவள் என்று நினைத்தான். அது உண்மையல்ல. கணவன் நாட்டுக்கு என் கடமையைச் செலுத்தினேன். பெண்கள் புகுந்த இடத்துக்குத்தான் பெருமை தேட வேண்டும். அதைச் செய்தேன். அது எப்படிக் கடமை தவறுவதாகும்? ஆண் மகனான டைபீரியஸுக்கு அது எப்படிப் புரியும்? ஏன், உங்களுக்கும் புரிகிறதோ என்னவோ?" என்று ராணி தட்டுத் தடுமாறி இடையிடையே கண்களை மூடி அவஸ்தைப்பட்டுப் பேசினாள். அவள் மூச்சு, விட்டு விட்டு வரத் தொடங்கியது. மேலும் ஏதும் பேச முடியாமல் அவன் மார்பில் சாய்ந்தாள். அவள் இதழ்களில் நிரம்பிய புன்னகை பிரும்மானந்தரும், அலீமாவும், பூவழகியும், அல்லியும், கரிகாலனும் வந்த பிறகும் கலையவில்லை.

பிரும்மானந்தர் பச்சிலைகளை வைத்துக் கட்டினார். இரண்டொரு ஒளடதத் துளிகளையும் இதழ்களில் தடவினார். சிறிது நேரம் கழித்து மீண்டுமொரு முறை கண் திறந்த ராணி தூரத்தே நின்ற அல்லியை நோக்கிப் புன்முறுவல் செய்தாள். பிறகு அவள் பக்கத்தில் நின்ற பூவழகியை நோக்கிக் கிட்டே வரும்படி சைகை செய்தாள். அகன்ற விழிகள் கலங்க, சிறுத்த இடை அசைய, சிறுகச் சிறுக ராணியை அணுகிய பூவழகி, அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"நீ எப்பொழுது வந்தாய் பூவழகி?" ராணி தட்டுத் தடுமாறிக் கேட்டாள்.

"வாணகரைக்கு நானும் அல்லியும் வந்து இரண்டு நாளாகிறது. இப்பொழுதுதான் மன்னர் சொன்னார். காண வந்தேன் ராணி" என்று நாத்தழுதழுக்கச் சொன்ன பூவழகியின் கண்களில் நீர் சுரந்தது. தூர நின்ற அல்லியின் கண்களில் நீர் திரையிட்டுப் படர்ந்ததால் அவள் எதையுமே பார்க்க முடியவில்லை.

"அழாதே பூவழகி! ஒன்று சொல்வேன், கேட்கிறாயா?" என்றாள் ராணி.

"கேட்கிறேன், எதைச் சொன்னாலும் கேட்கிறேன்" என்றாள் பூவழகி குரல் துக்கத்தால் அடைபட.

"பொறாமையை விட்டுவிடு. இவர் உனக்குத்தான் சொந்தம். அதை வெகு தூரத்திலிருந்து வந்த நான் என்றோ புரிந்துகொண்டேன். அருகிலிருந்த உனக்குத் தான் புரியவில்லை" என்ற ராணி அவள் கையைச் சற்றே அழுத்தினாள். அடுத்த வினாடி ராணியின் கண்கள் மூடின. கை துவண்டது. அலீமா அலறினாள். அல்லியின் தேம்பல் அறைச் சுவர்களில் தாக்கி தாக்கி எதிரொலி செய்தது.

* * *

மனிதரின் இறப்போ பிறப்போ காலகதியதை நிறுத்துவதில்லை. நாட்கள் ஓடத்தான் செய்கின்றன. எந்தத் துயரத்தையும் குறைக்கும் காலகதியின் சக்தியும், துன்பத்திலிருந்து இன்பத்தையும், இன்பத்திலிருந்து துன்பத்தையும் பிறப்பிக்கும் அதன் வன்மையும் உலகத்தில் உலவாவிட்டால் வாழ்க்கை பெரும் சுமையாகவே ஆகிவிடும். தன் புண்ணை விளைவிக்கும் துரிதத்தில் அதை ஆற்றவும் காலத்தால் முடியும். முடியாவிட்டால் சித்திரை நகர்ந்த மூன்று மாதங்களுக்குப் பின்பு முளைத்த அந்த ஆவணித் திங்களில் பூம்புகார் தன் உடலில் போர் விளைத்த புண்களை ஆற்றிக் கொண்டு அத்தனை மனோகரமாக விளங்க முடியுமா?

அந்த ஆவணித் திங்களன்றும் பூம்புகாரின் கடற்கரையெங்கும் பரதவர் பெரும் கூத்து ஆடினர். கள்வெறியும் காதல் வெறியும் கலந்தளித்த மகிழ்ச்சிக் கூச்சல் கடலலைகளின் சத்தத்தைவிட அதிகமாகக் கிளம்பின. அந்த ஆவணித் திங்களின் வெண்ணிலவும் விரிந்து கிடந்ததால், புகார் கடற்கரையின் கரிமணலில் காவிரியின் ஓரத்தே சிறிது விட்டு விட்டுத் திட்டுதிட்டாக இருந்த தாழைமரக் கூட்டங்களில் சீலைத் திரைகள் கட்டிக் காதலர் களித்துக் கொண்டிருந்த காட்சியும் கண்ணைக் கவர்ந்தது.

அன்றும் கடலலைகள் காலில் பாயக் கரையோரத்தே நடந்து சென்றான் இளஞ்செழியன். அந்தப் பழைய ஆவணித் திங்களைப்போல் தனியாக அல்ல, வேதனை நிறைந்த இதயத்துடன் அல்ல, புறக்கணிக்கப்பட்ட காதலனாக அல்ல, மனையாள் பூவழகி பக்கத்தில் மலரடியிட்டு வர, அவள் இடை அசைந்து அசைந்து தன் இடையுடன் மோத, அடிக்கடி அவள் காதல் கண்கள் தன் கண்களுடன் போராடி உறவாட, தன் கரத்தோடு இணைந்த அவள் கரம் அடிக்கடி விரல்களால் காதல் சேதி சொல்ல மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து நடந்து சென்றான் இளஞ்செழியன். இருவர் கரங்கள் மட்டுமல்ல, இதயங்களும் காமப் புது வெள்ளத்தில் இணைந்து கிடந்தன.

அப்படி இதயங்கள் இணைந்து கிடந்த நேரத்திலும் பழைய கதைகள் இளஞ்செழியன் சித்தத்திலே வருவதை அவனால் தடுக்க முடியவில்லை. 'ராணி கண்களை மூடியதும் அவள் மகுடத்தைக் கழற்றக்கூடாதென எத்தனை பெருந் தன்மையுடன் மன்னர் உத்தரவிட்டார்! அரச மரியாதை களுடன் அவளை எப்படி மன்னரே முன்னின்று அடக்கம் செய்தார்!' என்பதை எண்ணிப் பார்த்தான். எத்தனை சொல்லியும் கேளாமல் அலீமா தனி மரக்கலத்தில் யவன நாடு சென்றது, மன்னர் உறையூரில் அல்லியுடன் முடிசூடிய அன்றே, அந்த முடிசூடு மண்டபத்தில் படைத் தலைவர் பலர் வாழ்த்துக் கூற, வேதியர் வேதமோத, மங்கையர் மங்கள கீதங்கள் பாட, பூவழகியைத் தனக்கு மனைவியாகக் கைப் பிடித்துக் கொடுத்தது, அந்தச் சமயத்தில் நீண்ட நாள் சிறைப் பட்டு அவதிப்பட்ட மாரப்பவேள் சிறையிலிருந்து மட்டு மல்லாமல் துன்பத்திலிருந்தும் விடுபட்டுப் பெண்ணின் மணக் கோலத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்தது... ஆகிய பல விஷயங்களும் மனத்திலே சுழல, நடந்த இளஞ்செழியன் சங்கமத் துறைக்குச் சற்று அருகில் வந்ததும் சட்டென நின்றான். "ஏன் நிற்கிறீர்கள்?" என்று வினவினாள் பூவழகி.

"இதுதான், ராணி என் காலில் இடறிய இடம் பூவழகி. அவளால் நாட்டுக்குக் கேடு விளையும் என்று ஹிப்பலாஸ் அன்று சொன்னான். ஆனால் அவளால்தான் புகார் பிழைத்தது. புகார் பிழைத்ததால் தமிழகம் பிழைத்தது. அவள் உதவியில்லாவிட்டால் நான் எதையும் சாதித்திருக்க முடியாது'' என்று கடலலைகளில் கண்களை ஓட்டிய வண்ணம் சொன்னான் இளஞ்செழியன். ஒரு வினாடி பூவழகி யின் மனத்தில் பொறாமை எழுந்தது. ஆனால் அடுத்த வினாடி அதை உதறினாள் அவள். 'சே சே! எத்தனை பெருந்தன்மை யுடன் இவரை என்னிடம் ஒப்படைத்தாள். பொறாமையை விடு என்று அவளே சொன்னாள். புகாரின் விடுதலையை அவள் தமிழகத்துக்குப் பரிசாக அளித்தாள். ஆனால் புகாரை

விட, ஏன் உலகத்தைவிட முக்கியமான இவரையே எனக்கு வெகுமதியாக அளித்தாளே! இவரை மீண்டும் பொறாமைக் காகக் கைவிடலாமா?' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே பூவழகியும் அலைகளில் கண்களைச் செலுத்தி, "ஆம்! ராணி ஒரு அபூர்வப் பிறவி" என்று முணுமுணுக்கவும் செய்தாள். அந்த முணுமுணுப்பில் எள்ளளவு பொறாமையும் இல்லை. ராணியின் இணையற்ற தியாகம் அதைத் துடைத்திருந்தது.

"உண்மை பூவழகி! அபூர்வத்திலும் அபூர்வமானவள் ராணி. சொந்த நாட்டுக்குத் தியாகம் செய்யும் பெண்களைப் பற்றி மனித வரலாற்றில் சான்றுகள் உண்டு. ஆனால் வெளிநாட்டுப் பெண் இன்னொரு நாட்டுக்காகத் தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்வதை யவன ராணி யின் வாழ்க்கையில்தான் பார்க்கிறோம். வரலாறு காணா விந்தை இது!" என்று இளஞ்செழியன் பெருமூச்செறிந்தான்.

அவன் இதயத் துயரத்தை அறிந்த பூவழகி அவன் கையுடன் தன் கையை இணைத்து, "வாருங்கள் போவோம்" என்றாள்.

இளஞ்செழியன் கண்கள் அவள் கண்களை நோக்கி உயர்ந்தன. "எங்கே?" என்றான் அவன். அவள் பதில் சொல்ல வில்லை. தூரத்தே இருந்த தாழை மரக் கூட்டத்தைச் சுட்டிக் காட்டினாள். அதைச் சுற்றிப் பட்டுச் சீலை கட்டியிருந்தது. இளஞ்செழியன் கண்கள் அவள் கண்களைச் சந்தித்தன. "என்ன அது, மறைவிடமா?" என்று வினவினான் மெள்ள.

பூவழகியின் கண்கள் கடலலைகளில் தாழ்ந்தன. "பூம்புகாரில் இது பழக்கம். நான் சொல்ல வேண்டுமா?" என்று நாணத்தால் குரல் குழையக் கேட்ட பூவழகி, தன் கண் களால் கடற்கரையில் பல இடங்களிலிருந்த மறைவிடங் களைப் பார்த்தாள். இளஞ்செழியனும் அந்த இடங்களைப் பார்த்தான். அவன் நெஞ்சத்தே இருந்த துன்பம் அகன்றது. பூவழகியின் கன்னங்களை இருகைகளாலும் அழுத்திப்

பிடித்து முகத்தை உயர்த்திக் கண்களுடன் கண்களை உறவாட விட்டான். பூவழகியின் கண்களில் அலைகள் சரேல் சரேலென்று பாய்ந்து, 'சீக்கிரம் அழைத்துச் செல். மறுபடியும் ராணி இந்த மண்ணில் புரளப் போகிறாள்' என்று கேலி செய்தது. பிறகு நான்கு கால்கள் அந்தப் பட்டுச் சீலை மறைவிடத்தை நோக்கி நகர்ந்தன. மரக்கூட்டம் வந்தது. மறைந்தன உருவங்கள். எழுந்த திரையும் விழுந்தது.

அந்தப் புதுமணத் தம்பதிகளுக்கு ஆசி கூறுவதுபோல் மணிவண்ணன் கோட்டத்தின் இரண்டாம் ஜாம மணி 'கணீர் கணீர்' என்ற பேரொலியை, 'விலங்கு பகையல்லாது கலங்கு பகை'யற்றதும், மாற்றார் புகமுடியாததுமான பூம்புகார் முழுதும் பரப்பிக் கொண்டிருந்தது.

முற்றும்

www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com
www.thamizhthenee.blogspot.com